


ஆதிசங்கரரின் பாமாலை

ஆதி சங்கரர்

ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்

நம்முடைய சமய மரபு குறைந்தபட்சம் மூவாயிரம் அல்லது நாலாயிரம் ஆண்டுச் சரிதம் கொண்டது. இந்தச் சரித்திர காலத்தில் எவ்வெப்போது நெருக்கடிகள் தோன்றினாலும், அவ்வப்போது நம் மரபை விளக்கி வைக்க மகான்கள் தோன்றி, மதத்துக்குப் புது வாழ்வளித்திருக்கிறார்கள்.

இந்த மகான்களில் ஒருவர் ஸ்ரீமத் ஆதி சங்கராசாரியரவர்கள். இந்தியாவின் பண்பாட்டு வரலாறு பெற்றெடுத்த அமரப் புதல்வர்களில் ஒருவர் அவர். பிரத்தியட்சமான அனுபவத்தை ஆதாரமாகக் கொண்ட அவரது உபதேசம் உலகம் முழுவதையும் தழுவுவதாகும். ஆனால் இந்நாட்டின் மற்ற பல சமயாசாரியர் போலவே அவரும் தமது உபதேசங்களுக்கெல்லாம் தாமே மூலகர்த்தா என்று கூறிக் கொள்ளவில்லை. முன்னமே உள்ள நம் நாட்டின் மகத்தான ஆத்மிக சம்பிரதாயத்தைக் காலத்தின் நிலைக்கேற்ப மீண்டும் விளக்கிவைத்தவர் என்ற முறையில், வியாக்கியான கர்த்தராகவே அவர் தனிச் சிறப்புப் பெறுகிறார். உபநிஷதங்களும், பகவத் கீதையும், மற்ற பல புராதன சமய நூல்களும் உபதேசித்த போதனையை அவர் தம் காலத்திலிருந்த பண்பட்ட மனத்தினருக்கு ஏற்கும் விதத்தில் புதிதாக விளக்கி வைத்தார். அவருடைய புது வியாக்கியானங்களே புதிய மூல சிருஷ்டிகள்போல் வடிவெடுத்துப் பொலிந்தன. இன்றும் அவை நம்மை ஆகர்ஷிக்கின்றன.

சங்கரருடைய கிரந்தங்களில் மகோன்னதமான அறிவுத் திறனையும், அப்பழுக்கற்ற வாத சாதுரியத்தையும், பொங்கும் உணர்ச்சியையும் காண்கிறோம். மனித வாழ்வின் சகல அம்சங்களும் தம்மிடம் திகழ்ந்த ஒரு பூரண மனிதர் ஆதி சங்கரர். அவரிடம் திகழ்ந்த மரபோ அவருக்கும் எத்துணையோ காலம் முந்தியது.

மதம் என்பது அனுபவித்துப் பார்த்து நிரூபணமாகவேண்டிய விஷயம்.

ஸதா பச்யந்தி ஸூரய: தத் விஷ்ணோ: பரமம் பதம் திவீவ சக்ஷுராத்தம் ।

என்று ரிக் வேதம் மொழிகிறது. 'பச்யந்தி' ('பார்க்கிறார்கள்') - என்கிற பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பௌதிகக் கண் எவ்வாறு வானத்தில் தோன்றும் வண்ணக் கலவைகளைக் காண்கிறதோ அப்படியே ஆத்மாவின் கண் தெய்வத்தின் இருப்பிடத்தைக் காண்கிறது. பகவத் கீதையிலும் இது சுட்டப்படுகிறது. 'பிரம்ம ஸம்ஸ்பர்சம்' - பிரம்மத்தைத் தீண்டுவது பற்றி கீதை கூறுகிறது. சத்தியப் பொருளை நாம் நேரில் அநுபவிக்க வேண்டும்.

அநுபவ அவஸானமேவ வித்யா பலம்

- 'கல்வியின் நிறைவான பலன் அநுபவம் பெறுவதே' என்கிறார் ஸ்ரீ சங்கரர்.

கோட்பாடுகளை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்வது மதமாகாது. சடங்குகளில்
அநுஷ்டிக்கும் ஆசாரங்கள் மதமாகாது. நமக்காக விதிக்கப்பட்டுள்ள சடங்குகளைச் செய்வது மட்டும் மதமாகாது. நம்முடைய உள் தன்மையையே புதிதாகச் சிருஷ்டித்துக் கொள்வதுதான் மதம். நம் இயல்பையே உன்னதமாக உருமாற்றிக் கொள்வது தான் மதம். அவ்விதமான அநுபவம் ஏற்படும் வரையில், ஒருவரைப் பூரணமான மத உணர்வு உள்ளவர் என்று சொல்வதற்கில்லை, உண்மையான மத உணர்வால் ஆத்மாநுபவம் பெற்ற மனிதர் பயத்திலிருந்து விடுபட்டிருப்பார். பகையிலிருந்து விடுபட்டிருப்பார்.

அபயம்; அஹிம்ஸா

அச்சமின்மை, வெறுப்பின்மை இவையே ஓர் உண்மையான சமயவாதியின் ஆன்ம லட்சணங்கள். நம்மில் பலர் மதாபிமான முள்ளவர்களாக நம்மைச் சொல்லிக் கொள்ளுகிறோம். மதத்தின் வெளி அங்கங்களான சிலவற்றைப் பின்பற்றுகிறோம். எனினும் மற்றவர்களிடமிருந்து உண்மையான மதாசாரமுள்ள உள்ளங்களைப் பிரித்துக்
காட்டும் முறையில் உள்ளூற நடைபெறும் பரிணாமத்தை நம்மில் பலரிடையே காண
முடியவில்லை.

ஆத்மாவைக் குறித்த அந்த வேறு உலகில் பதத்தின் மூலம் பிரவேசிப்பதற்கே நாம் முயல வேண்டும். இப்போது மக்கள் அறிவின் மூலம் ஆத்மீகத்தை அறிய முயலும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். இது விஞ்ஞான நிலை எனலாம். இதனினும் உயர்ந்த ஒரு தன்னும் உயாந்த ஒரு நிலையை அவர்கள் அடைந்தாக வேண்டும். விஞ்ஞானத்தைக் கடந்து 'ஆனந்தம்' என்ற உயர் நிலையை எய்தவேண்டும். இதுவே ஆத்மிகத்தின் நிறைவு. விஞ்ஞானத்திலிருந்து ஆனந்தத்துக்குக் கடத்துவிக்கும் சாதனமே சமய ஒழுக்கம். குறைபாடு கொண்டதும், பூரணச் செம்மை பெறாததும், புதுப் பிறவி மலர்ச்சி பெறாததுமான இயல்பிலிருந்து எழும்பி ஓங்கி வளர்ந்து முழுமையைப் பெறவே சமய உணர்வுள்ள எவரும் முயல வேண்டும். நன்னெறி ஒழுக்கங்களை வாழ்வில் கடைப் பிடித்து, ஆத்மிக சாதனங்களை அநுஷ்டித்து 'நான் கடவுளைக் கண்டிருக்கிறேன்' என்று சொல்லக் கூடியவர்களால் தான் இந்த முழுமையை அனுபவிக்க முடியும்.

வேதாஹம் ஏதம் புருஷம் மஹாந்தம்
ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்

‘இருளுக்கு அப்பால் சூரியப் பிரகாசத்துடன் திகழும் மகாபுருஷனை நான் அறிவேன்' என்று ரிஷி கோஷித்தது போல் சொல்லக்கூடியவனே சமயத்தை உணர்பவன் அவன் 'கடவுள் இருக்கிறார்' என்று சொல்வதோடு மட்டுமில்லை; கடவுளைத் தன்னுடைய ஒவ்வொரு நாடியிலும் நுகர்பவன் அவன். தன்னுடைய சொந்த அனுபவத்தின் மீதே, ' நான் கடவுளைக் கண்டிருக்கிறேன்' என்று அவனால் சொல்ல முடியும். இந்த அனுபவத்தைத்தான் மதாபிமானிகள் யாவரும் இலக்காகக் கொள்ளவேண்டும். இத்தகைய அநுபவபூர்வமான ஆத்ம ஜீவனத்தை விளக்கி வைத்தவரே ஆதிசங்கரர்.

அநுபவத்தின் முலம் பரம்பொருளை நுகர்ந்த பின் அந்த அனுபவத்தை வார்த்தைகளில், அறிவுக்கு ஏற்ற கோட்பாடுகளில் விளக்க வேண்டுமென முயற்சி தோன்றும். ஆனால் நமது ரிஷிகளோ இந்த அநுபவத்தை வார்த்தைகள் என்ற சங்கேதங்களாலோ, தர்க்க ரீதியான வியாக்கியானத்தாலோ வருணிக்க முடியாது என்கின்றனர்.

யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மந ஸா ஸஹ

வெற்று வார்த்தைகளால் மட்டும் அதை எட்டிப் பிடிக்க முடியாது. அப்படிப் பிடிக்க முயன்றால் பரம்பொருளின் அனந்த கல்யாண குணச் செல்வங்களையும், அளவற்ற மகிமைகளையும் விவரிக்க முடியாமல் குழம்ப வேண்டியதுதான். புத்தரும் இதைச் சொன்னார் :

அநக்ஷரஸ்ய தர்மஸ்ய க்ரு திகா தேச நாசகா?

‘எழுத்தால் விளக்க வொண்ணாத விஷயத்தைச் சொல்லும் வேதம் ஏது? உபதேசம் ஏது?' என்றார். வார்த்தையில் வடிக்க வொண்ணாத சத்தியத்துக்குப் பிரமாண
நாலுமில்லை; உபதேசமுமில்லை. ஒவ்வொரு மனிதனும் தானாகவே அதைக் கண்டு
பிடித்துக் கொள்ள வேண்டியது தான். தன்னந் தனியாகத் தேடும் அவன் பரம் பொருளை அடையும்போது புத்தம்புதிய திரு முகத்துடன் தேஜோ மயமாய்த் திகழ்கிறான். அவன் ஆண்டவனைத் தன்னில் ஆவிர்ப் பாவம் செய்து கொண்டவனாகிறான்.

ஈசுவர லக்ஷணம் என்ற இந்த விந்தைப் பெரும்பொருளை விளக்குவது கடினம்,

அத்ருஷ்டம் அவ்யவஹார்யம் அக்ராஹ்யம்
அலக்ஷணம் அசிந்த்யம் அவ்யதேச்யம்
ஏகாத்ம ப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபசமம்
சாந்தம் சிவம் அத்வைதம்

மாண்டுக்ய உபநிஷதம் உரைக்கும் இவ்விதத்தில் தான் நாம் அதனைப் பற்றிப்
பேசமுடியும்'. சாந்தம், சிவம், அத்வைதம்.

ப்ரஹ்மேதி பரமாத்மேதி பகவானிதி சப்த்யதே |

என்கிறது பாகவதம் (1-2-11). காலத்துக்கும் தேசத்துக்கும் அப்பாற்பட்ட உத்தம சத்தியமாய், தர்க்கத்தினால் வெளியிடவொண்ணாத வஸ்துவாய், தெய்வத்துக் கெல்லாம் மேலான தெய்வமாய் விளங்குவதே பிரம்மம் என்கிறது. இவ்வாறு எல்லாம் கடந்துள்ள அதனை யாரும் கிரகிக்க முடியாது என எண்ணிவிடலாகாது. அதுவே நமது உள்ளுக்குள் உள்ளே அடி ஆழத்தில் இருக்கிறது. நாம் ஆத்மா எனில் அது பரமாத்மாவாக நமக்கு அடி ஆழத்தில், நம்மின் அடி ஆழமாக இருக்கிறது. நம் அகவாழ்வின் இயல்பையும் உணர்வையும் ஆய்ந்து கொண்டே போகும் போது அதன் இறுதியில் பரம் பொருளின் சத்தியமான இருப்பை உணர்வோம். அதனாலேயே அவனைப் பரமாத்மா என்கிறோம். வெளிப் பிரபஞ்சத்தை நோக்கி, அந்த விசுவ வெளியில் நாம் ஒரு பாகம் என்ற பாவனையைக் கொள்ளும் போது, அதே பரம் பொருளை பகவான் - லோக நாயகன் என்கிறோம். அவனிடம் உறவு கொள்ள விழைகிறோம். கிருஷ்ணனை அர்ஜுனன் கண்டாற்போல் ஈசுவரனை நேருக்குநேர் கண்டு சம்பாஷித்து உறவு கொள்வது இந்நிலையின் இலட்சியம். யாவும் கடந்த பிரம்மம், நமக்குள்ளேயே உரையும் பரமாத்மா, உலக நாதனாகிய பகவான் என்ற மூன்றும் வர்ணிக்கவொண்ணாத ஒரே அற்புதமும் விந்தையுமான அந்தரங்க சுகாநுபூதிப் பொருளின் வேறு வேறு பெயர்கள் தாம். ஒரே வஸ்துவின் பல நிலைகள்தாம் அவை. நம் அகத்தை வைத்துப் பேசும்போது பரமாத்மன்; பிரபஞ்சத்தை வைத்து அதன் பிரபுவாகப் பார்க்கும் போது பகவான்; பரம தத்துவமாகப் பார்க்கும் போது பிரம்மம்.

கீதா பாஷ்யத்தில் ஆசாரியர் கூறுவது போல பரம்பொருள் என்னும் பெரும் ஒளி
யின் தூதர்களாக உலகுக்குப் பல மகான்கள் வந்து ஞான ஒளி தந்திருக்கிறார்கள். எல்லா மதாசாரியர்களும், முனிவர்களும், அடியார்களும், பரஞ்சோதியின் தூதுவர் தாம்
அவர்கள் இவ்வுலகில் பிறந்து தங்களுக்கென ஒரு காத்திரத்தைத் தரித்துக் கொள்வது நமக்கு ஞான ஒளி தருவதற்காகத்தான்; நாம் பரமனை நாடிச் செல்லுமாறு ஊக்கத் தான். நம் கண்ணால் தாங்கவொண்ணாத பரஞ்சோதியின் சின்னமாகவே ஆசாரிய புருஷர்களும், அடியார்களும் நாம் கண்ணால் காணக் கூடியவர்களாக வருகிறார்கள் என லாம். அவர்கள் பற்பல வழிகளைக் காட்டிக் கொண்டு நம்மை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு இட்டுச் செல்வதற்காக வருகிறார்கள். பிரம்மம், பகவான், பரமாத்மா என்றெல்லாம் பல படித்ததாகத் தோன்றும் மெய்ப்பொருளே, பரஞ்சோதியைக் கொண்டு வந்து பரப்பும் ஆசாரியர்களாகவும் அவதாரங்களாகவும் தோன்றுகிறது.

ஸ்ரீ சங்கரர் போதித்த தத்துவத்தை எண்ணும் போது, நாம் காண்கிற உலகைப் பற்றிய அவரது கருத்தையே முக்கியமாக நினைக்கத் தோன்றுகிறது. உலகத்தை அவர்
இறுதி சத்தியமாக எண்ணவில்லை; இரண்டாம் பட்சமான ஒன்றாகவே - வேறு ஏதோ
ஒன்றுக்கு உட்பட்டதாகவே - கருதினார். அப்படியெனில் முதல் பட்சமாக அவர் கருதியது எதனை? பரம்பொருளே உத்தம சத்தியம் என அவர் கூறுகிறார். அதற்கு உட்பட்ட இரண்டாம் பட்ச உண்மை நிலையே உலகத்துடையது என்கிறார். உலகும் ஒரு நிலையில் உண்மையாயிருக்கிறது. ஆனால் இது உயர் நிலை அல்ல; தாழ்நிலையில் மட்டுமே உலகம் உண்மை. 'வியாவஹாரிக சத்தியமே உலகம்; பாரமார்த்திக சத்தியமல்ல' என்று இதனைச் சங்கரர் சொல்லுகிறார். ஆனால் உலகம் என்பது எந்த ஒரு தனி மனிதனுடைய கனவும் அல்ல.

அவரது பிரம்ம ஸூத்திர பாஷ்யத்தில் இந்த மகத்தான வாசகங்கள் உள்ளன:

ஏவமேவமய மநாதிரனந் தோநைஸர்கிகோ(அ)த்யாஸோ
மித்யா ப்ரத்யய ரூப: கர்த்ருத்வி ।
போக்த்ருத்வ ப்ரவர்த்தக: ஸர்வலோக ப்ரத்யக்ஷ: ॥

உலகம் என்பது சகலருக்கும் கண்ணுக்கு மெய்யாய் இருப்பது; **ஸர்வலோக ப்ரத்யக்ஷ:** என்கிறார். எல்லோரும் அதை ஒரே போல் பார்ப்பதால் அது நமது மனம் புனைந்த கனவல்ல. இதோ அது விரிந்து பரந்து காண்கிறது. அது இப்போது தோன்றி உடனே அழிகின்ற தோற்றங்களின் தொகுப்பல்ல. ஒரே ஒருவர் மட்டுமின்றிப் பலர் தொடர்ந்து கண்டுவருகிற ஒன்றல்லவா உலகம்? எனவேதான் சூத்திரங்களில் பல இடங்களில், உலகம் என்பதை உண்மையில் இல்லாத ஒன்றாகக் கருதலாகாது என்று
கூறப்படுகிறது. எப்போது உலகம் என்று ஒன்றைப் பலர் ஒரே போல் கிரகிக்க முடிகிறதோ அப்போது அது உண்மையாகவே உள்ள வஸ்து என்பது நிச்சயமாகிறது. விழிப்பு நிலைக்கும், கனவு காணும் நிலைக்குமுள்ள அடிப்படையான மாறுபாடுகள் நமக்குத் தெரியுமாதலால் உலகைக் கனவோடு ஒப்பிட முடியாது. இந்த உலகம் எப்போது தோன்றிற்று என்றும் தெரியவில்லை. எனவேதான் இதை அனாதி என்கிறோம். உலகில் பிறக்கும் ஒவ்வொரு ஜீவனும் பிரபஞ்ச வியாபாரத்தில் பங்கு கொள்பவன். ஆனாலும் இந்த உலகை ஆதார சத்தியமாகவோ, இறுதி சத்தியமாகவோ எண்ண முடியவில்லை. (உலக வாழ்வைவிட உயர்ந்த ஒன்றுதான் ஆதார காரணம், அதுதான் முடிவான சத்தியமும் என்று அறிகிறோம்.) அதே சமயத்தில் உலகை முழுப் பொய் என்றும் கூற முடியவில்லை. இதனால் தான் விவகார நிலையில் உள்ளவரையில் உலகம் சத்தியம் என்று கூறும் சங்கரர், இந்த உலகத்தின் மூலம் ஆதாரமும் இறுதியுமான 'நிரந்தர சத்திய' நிலையை அடையலாம் என்கிறார்; மோட்சம் பெறுவதற்குச் சாதனமாகவே சம்சார வாழ்வு உள்ளது -

மோக்ஷாயதே ஸம்ஸார: என்கிறார்.

உலகம் தரும் வாய்ப்புக்களைப் பற்றிக் கொண்டு உலகத்துக்கு மேலாக எழும்பி
ஞான நிலையை எய்துவதற்காகத்தான் நாம் உலகில் பிறக்கிறோம்.

'சங்கரர் ஜாதி முறையை ஆதரித்து வாதம் செய்தவரா? பிரிவினைகளை அவர்
ஆதரித்தாரா?' என்றெல்லாம் பலர் கேட்கிறார்கள். விவகார உலக வாழ்க்கையைப் பொறுத்த வரையில் அவர் எவ்வகை அமைப்புக்களை ஆதரித்தார் என்பது ஒருபுறம் இருக்கட்டும். மோக்ஷ நிலையைப் பற்றி அவர் கூறுவதைப் பார்ப்போம். தமது பாஷ்யத்தில் அவர் மோக்ஷத்துக்குத் தகுதி பெற்றவர்கள் யார் என்று வினவி, விளக்கு
கிறார்.

புருஷ மாத்ர ஸம்பந்திபி:

என்று விடை கூறுகிறார். அதாவது மானிட இயல்பு உள்ள எவனுமே ஞானத்துக்கும், முக்தி நிலைக்கும் உரிமை பெற்றவன் என்கிறார். அவனது ஜாதியைப் பற்றிக் கவலை
இல்லை. இந்தச் சமூகப் பகுப்புக்கள் ஞானாநுபவத்தில் எந்த உண்மையான மாறுபாடு
களையும் குறிக்க வில்லை. உண்மையான மனிதத் தன்மை யாரிடம் இருந்தாலும், அவன் ஞானமும் வீடும் பெறத் தகுதி பொருந்தியவனாகிறான். உயர் குலத்தில் பிறக்காமல் முக்தி அடைந்த பலர் பூர்வத்திலேயே உண்டு.

ஞானம் பெற்ற ஒருவன் என்னவாகிறான்? அவன் மறைந்துவிடுகிறானா? அல்ல.
பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகவே ஆகிறான். எவ்வாறு? இவ்வுலகை விட்டுப் பிரிந்ததா? அல்ல என்பதை பிரம்ம சூத்திரம் (3-3- 2) சொல்கிறது. அபாந்தரமஸ், வஸிஷ்டர், பிருகு, நாரதர், ஸநத்குமாரர் முதலிய பரமஞானிகள் உலகத்தில் வாழ்ந்தே
பணி புரிந்தவர்கள். பிரபஞ்சமே ஒரு முடிவுக்கு வரும்போது தீமையெல்லாம் அகன்று,
பேதங்கள் யாவும் விலகி, மனித குலம் முழுவதும் மாறுதலற்ற நிலை எய்தி, சூரியனும் ஒளிக் குன்றிக் குளிர்ந்து போகிறான். அப்போதுதான் பரமஞானிகளும் பரம்பொருளில் நிரந்தரமாக லயிக்கின்றனர். அதுவரை உலகை நிர்வகிக்கும் சர்வேசுகரனுடன் தங்களை அபேதமாகக் கருதி அவர்கள் லோக உத்தாரணம் செய்வார்களேயன்றி, உலகம் கடந்த பரப்பிரம்ம நிலையில் ஓன்றியிருக்க மாட்டார்கள். பரப்பிரம்மத்துடன் அத்வைதமாக ஒன்றி அநுபவிக்கும் நிலை ஒருவருடைய உள்ளத்தில் எப்போதும் உள்ளது. எனினும் உலகைப்

பொறுத்தமட்டில் பிரபஞ்ச நாயகனான பகவானுடன் தொடர்பு கொண்டவர்களாகவே ஞானிகளும் காணப்படுவார்கள்.

அப்பய தீக்ஷிதர் கூறுவார்:

பாஷ்யகாரோபி அதிஸ்பஷ்டம் முக்தஸ்ய
ஸகுணேச்வர பாவாபத்திம் ஆஹ!

ஜீவன் முக்தன் அல்லது முக்தனுடைய நிலைபற்றி ஆதிசங்கரர் என்ன கூறுகிறார் என்பதை அப்பய்ய தீக்ஷிதர் விளக்குகிறார். பிரம்மமே பிரபஞ்சத்தை ஸர்வேசுவரனாக இயக்குவது போலத்தான் ஜீவன் முக்தர்களும் செயல்படுகிறார்கள்; பிரபஞ்சம் பிரளயமுறும் போதுதான் அவர்கள் பிரம்மமாகிய பாரமார்த்திக சத்தியத்துடன் ஒன்றி விடுகிறார்கள் என்கிறார்.

சுருங்கச் சொன்னால் சமயம் என்பது அநுபவத்திலேயே உள்ளது என்பதுதான் சங்கரரின் போதனை. அதனைத் தர்க்க ரீதியில் நிலைநாட்ட முடியாது. ஆகவே மெய்ப்
பொருளை நெருங்கும் முறையில் உருவான எல்லாக் கருத்துக்களையும் நேசமாகவே வரவேற்போம். மெய்ப்பொருளை அறிய உதவும் எந்த விளக்கத்தையும், வர்ணனையையும் வரவேற்போம். 'நான் கடவுளைக் கண்டுவிட்டேன். நான் கண்ட அந்த ஒரே விதத்தில் தான் மற்றவர்களும் கடவுளைக் காணவேண்டும்' என்று அகம்பாவமாக எண்ணாதிருப்போமாக மனித இதயத்தில் எத்தனை விதமான இயல்புகள் உண்டோ அத்தனை விதத்திலும் ஆண்டவனை அடைய முடியும். ஒவ்வொருவனிடமும் ஒரு தெய்விகப் பொறி உள்ளது. ஒவ்வொருவனுக்கும் அவனது
இதயத்தின் இரத்தத்திலேயே தோய்ந்ததாக அவனுக்கென்று ஒரு மார்க்கமும் உண்டு. அதனைப் பின்பற்றி முக்தி நிலை பெறுமளவும் மனிதன் உலகில் கர்மம் புரிய வேண்டும். ஞான மயமான கண்ணனும், ஜனகரும் கூட உலகத்தின் வழியை அனுசரித்து, மக்களை யெல்லாம் உயர்த்தப்பாடுபட்டார்கள். இவ்வுலகிலேயே விடுதலை பெற்ற ஜீவன் முக்தர்களும் உலகுக்குப் புரிய வேண்டிய கடமை உண்டு,

சங்கரரின் மதம் எதையும் புறச் சான்றுகள் மீதும் பிற பிரமாணங்களின் மீதும் ஒப்புக் கொள்ளத் தேவையில்லை என்கிறது. 'ஆண்டவன் இப்படித்தான் விதித்திருக்கிறான்' என்று அம் மதம் பேசவில்லை. ஒவ்வொருவனும் தானே முயன்று, தான் யார், தான் இங்கு வந்திருப்பது எதற்காக என்று கண்டறிய வேண்டும் என்கிறது அது. பிரபஞ்ச வாழ்நிலை ஐந்தடுக்குக் கொண்ட ஒரு படி வரிசை; அன்னம், பிராணன், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் - என்பதாக. இப்போது நாம் விஞ்ஞான நிலையில் இருக்கிறோம். மனிதன் இன்னும் அறிவாராய்ச்சி வாத நிலையில் தான் இருக்கிறான். வார்த்தைகள் மூலமும், குணப் பகுப்புகளின் மூலமும் தன்னை வெளியிட்டுக் கொள்ளத்தான் அவன் விரும்புகிறான்.

இனி ஆனந்த நிலைக்கு உயர வேண்டும். அகமறுமலர்ச்சி இன்றி, பூரணத்துவமின்றி வாழும் நாம் நம்மை நிறைவித்துக்கொண்டு, பேதங்களையும், துவேஷங்களையும் கடந்து, பரம ஞானத்தை அடைய வேண்டும். இந்தத் துதிப்பு நம் ஒவ்வொருவருடைய இதயத்திலும் அந்தரங்கத்தில் உள்ளது. அந்த ஆர்வத் துடிப்பே நமது ஆத்மிக முயற்சி சத்தியமானது என்பதற்கு நற்சான்றேயன்றி, முக்தி நிலைக்கான முயற்சியை யாரும் சோதித்துப் பார்த்து நிரூபிக்க முடியாது. பசித்த எந்த இதயமும், ஆர்வமுற்ற எந்த மனமும் விவகார உலக நிலையில் திருப்தி கொள்ள முடியாது. எனவே மேலே எழும்பும் முயற்சி தோன்றியே தீரும். இம்முயற்சியில் ஈடுபடு படுபவர்கள் மாற்றுக் கருத்துள்ளவர்களிடம் அன்புடன் இருத்தல் வேண்டும். இவ்வுலகம் நிரந்தர சத்தியமல்ல என்பதை உணர்ந்து, இது ஆண்டவனால் படைக்கப்பட்டு ஆண்டவனைச் சார்ந்திருக்கும் ஒன்று என்று உணர்ந்து, இதில் உள்ள மன மாறுபாடுகளையும் அவற்றுக்கேற்ற பல மார்க்கங்களையும் மதிக்க வேண்டும். உலகம் சர்வ சுதந்திரமானது என்று ஒரு போதும் மயங்காமல் நன்னடத்தையுடன் ஒழுகி, ஆத்ம சாதனைகளைப் புரிவோமாக! உயர்நிலை உற்று, அதன் பின்னும் உலகம் உய்யப் பணி புரிவோமாக!!

மக்கள் யாவருக்கும் இதமானதைச் செய்வோம் !
மக்கள் யாவருக்கும் இன்பமானதைச் செய்வோம் !

பஹுஜன ஹிதாய
பஹுஜன ஸுகாய

சங்கரர் பெருமை

காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஆதிசங்கராசாரியருக்குத்தான் 'ஆசாரியர்கள்' என்று பெயர். இப்போது பீஷ்மாசாரியர், துரோணாசாரியர் என்று பலரை ஆசாரியர் என்று சொல்லுகிறோம். அதே மாதிரி ஆசாரியரவர்களுக்குப் பின்னாலே வந்த மத்வாசாரியர், தர்க்க சாஸ்திரம் பண்ணின உதயணாசாரியார், கணித சாஸ்திரம் பண்ணின பாஸ்கராசாரியார் என்று இப்படி ஆசாரியார் என்ற பெயரோடு அநேக மகான்கள் இருக்கிறார்கள். எந்த மகான் ஆசாரியார் ஆவார்?

ஆசினோதி ஹி சாஸ்த்ரார்த்தம் ஆசாரே ஸ்தாபயத்யபி
ஸ்வயம் ஆசரதே யஸ் மாத்தஸ்மாத் ஆசார்ய உச்யதே.

சாஸ்திரங்களுடைய சித்தாந்தங்களைத் தாம் தெளிவாகத் தெரிந்துகொண்டு, உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் க்ஷேமத்தை அடையும்படியாக அவர்களையும் அந்தச் சாஸ்திர வழியில் நிறுத்தி, தாமும் சாஸ்திரத்தில் கண்டமுறையில் காரியங்களைச் செய்து அநுபவத்தில் தன்மயமாகவே இருப்பவர் ஆசாரியர். இந்த மூன்று காரியஙக்ளையும் செய்கிறவர்கள் யாரோ அவருக்குத் தான் ஆசாரியர் என்ற பெயர் உண்டாகும்.

சாஸ்திரம், மந்திரம தெரிந்துகொண்டிருந்தால் வித்துவான்தான். அப்படியே அநுபவியாக இருந்தால் ஞானியாகி விடிகிறார். இதெல்லாம் இல்லாமல் லோகத்திற்கு உபதேசம் மாத்திரம் செய்து கொண்டிருப்பவர் பிரசாரகர் ஆகிவிடுகிறார். ஆகவே, தாமும் தெளிவாக சந்தேகமின்றி சாஸ்திரங்களைத் தெரிந்துகொண்டு, பிறருக்கு அந்த வழியில் செல்வதற்கு உபதேசம் பண்ணிக்கொண்டு, தம் அளவிலும் அநுபவியாக இருந்தால் தான் அவருக்கு ஆசாரியர் எனப் பெயர் பொருந்தும்.

ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் ஒவ்வோர் ஆசாரியர் இருக்கிறார். கணித சாஸ்திரம் என்றால் பாஸ்கராச்சாரியர்! தர்க்க சாஸ்திரம் என்றால் உதயணாசாரியர்; சைவ சித்தாந்தம் என்றால் ஸ்ரீகண்டாசிரியர்; வைஷ்ணவத்திற்கு ஸ்ரீ ராமானுஜாசாரியர். இப்படி ஆசாரியரவர்களுக்கு முந்தியும் சரி, பிந்தியும் சரி அநேக ஆசாரியர்கள் இருந்திருக்கிறார்கள். வில்வித்தை கற்றுக் கொடுத்துக் கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் நல்வழியை உபதேசம் பண்ணிக் கொண்டு துரோணாசாரியர், கிருபாசாரியார் இருந்திருக்கிறார்கள். ஆசாரியர்களுடைய அபிப்ராயத்திற்கு

வேறுபட்டதாக ஒரு மத ஸ்தாபனம் பண்ணியிருப்பவர்கள் வல்லபாசாரியர், ஸ்ரீகண்டாசாரியர், ராமானுஜாச்சாரியார் இவர்கள்.

ஆனால் வேறு யாரையாவது சொல்ல வேண்டுமானால் “பாஸ்கராசாரியர், ராமானுஜாசாரியர், ஸ்ரீ கண்டாசாரியர்” என்று சொல்ல வேண்டும். பெயரைச் சொல்லி 'ஆசாரியர்' என்பதையும் சேர்த்துச் சொன்னால் தான் அவர்களின் நினைப்பு வரும். ஆனால் “ஆசாரியர்கள்" என்று மாத்திரம் சொல்லி விட்டால் போதும் சங்கரர் என்று சொல்லவேண்டியதில்லை. இந்தச் சொல் அவர் ஒருவரைத்தான் போய்ச் சேரும். ஆசாரியரவர்கள் என்று சொன்ன மாத்திரத்திலே யாரை அது குறிக்குமோ அவர் தாம் சங்கராசாரியார்; சங்கராசாரியர் என்று சொல்லவேண்டியதில்லை. ஆசாரியர்கள் என்றால் போதும்.

நமது பாரத கண்டத்தில் 56 தேசம் உண்டு என்பார்கள். பரம்பரையாக வேதாத்யயனம் பண்ணி, குருமுகமாக அத்யயனம் பண்ணி, தர்ம சாஸ்திரங்களின் படி இருந்த தேசங்கள் 56 தேசங்கள். இவைதாம் ஆசாரியர்கள் காலத்தில் இருந்தவை.

பாரதப் பிரகாரம் ஸப்த த்வீபம், ஸப்த சமுத்திரம், என்று இருந்தன. ஒரு மோதிரம் பூமி, ஒரு மோதிரம் சமுத்திரம், இப்படி இருந்ததாகத் தெரிகிறது. பூமியின் அசைவினால் காலப்போக்கில் அந்த ஸப்த த்வீபம், ஸப்த சமுத்திரம் என்பது மாறிப் போயிற்று. கன்னியாகுமரிக்கு அடுத்துக் கூடத் தேசங்கள் இருந்தன. அவற்றை யெல்லாம் கடல் கொண்டு விட்டதாக இப்போது சொல்கிறார்கள். அப்படி ஒரு காலத்தில் ஒருவிதமாக மாறிப் போயிற்று.

அந்தக் காலத்தில் ஸப்த த்வீபம், ஸப்த சமுத்திரம் என்று வரிசை வரிசையா இருந்திருக்கின்றன. அங்கெல்லாம் ஈசுவர உபாசனையும், விஷ்ணு உபாசனையும் இருந்திருக்கின்றன. இப்போதுகூட மெஸபோடோமியோ, ஸ்காண்டிநேவியா முதலிய இடங்களில் அகப்பட்டுள்ள ஆதாரங்களி மித்ரா வருணன் என்ற தெய்வ உபாசனை அங்கே இருந்திருப்பதாகத் தெரிகிறது. இவர், வேதத்தில் வரும்படியான கடவுளே. இப்படியே பல சொல்லலாம்.

ஆசாரியர்கள் காலத்தில் வேதங்களை குரு முகமாக அத்யயனம் பண்ணிவந்த தேசங்கள் பாரத கண்டத்தில் 56 இருந்திருக்கின்றன. உபநிஷத்து என்பது வேதத்தின் சிகரம். மரத்தின் மேலே வாசனையோடு மகரந்தத்தோடு இருக்கும் புஷ்பம் மாதிரி, வேதத்தின் சிகரத்தில் இருப்பது உபநிஷத்து. இந்த உபநிஷத்து, வேதம் இவற்றை எல்லாம் இந்த 56 தேசங்களிலும் ஆசாரியர்கள் சஞ்சாரம் பண்ணி உபதேசம் செய்திருப்பதோடு, 'அத்வைதமான பரமாத்மா ஒருவரே சத்தியம், அவர் ஒருவர் தாம் பார்க்கிற பொருள், பார்க்கப்படுகிற பொருள், பார்க்கும் பார்வை ஆக இப்படி எல்லாமாக இருக்கிறார். எல்லாமாக இருக்கிறது ஒன்றுதான்' என்கிற அத்வைதத் தத்துவத்தை

ஸ்தாபித்தார். அநேக ரூபமாக, கோடி கோடி ரூபமாக இருப்பவை எல்லாம் ஒன்றுதான். அந்த ஈசுவரன் ஒருவன் தான் சத்தியமானவன்.' என்கிற தத்துவத்தைப் பாரத கண்டத்தில் உள்ள ஐம்பத்தாறு தேசங்களிலும் ஸ்தாபித்தார். இதற்குத்தான் அத்வைதம் என்று பெயர்; இரண்டு இல்லாதது. அதற்கு முந்தி அத்வைதம் என்கிற முறையில் இல்லாமல் வேறு அநேக விதமான மதங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமாகச் சாங்கிய மதம், மீமாம்ஸ மதம் என இரண்டு. இவற்றுக்கு வேதந்தான் பிரமாணம். ஆனால் சாங்கிய மதத்தில் ஒரே ஆத்மா என்கிறது இல்லை; பரமாத்மா என்கிறதும் இல்லை; எல்லாம் ஜீவாத்மாக்கள் தாம்.

மீமாம்சையில், ஈசுவரன் என்றோ, செய்வது என அவனைத் தியானம் செய்வது, உபாசனை செய்வது என்றோ ஒன்றுமே கிடையாது. வேதத்தில் சொல்லியிருக்கும் கர்மானுஷ்டானங்களைச் செய்ய வேண்டும். இந்தக் கர்மானுஷ்டானங்களே மோட்சத்தைக் கொடுத்துவிடும். அப்புறம் தியானம், ஈசுவர ஆராதனை என்று ஒன்றும் வேண்டியதில்லை என்று சொல்வது அதனுடைய கொள்கை.

இந்த இரண்டு மதங்களைற் தவிர, புத்த இந்த இரண்டு மதங்கறை மதம், ஜைன மதம் என்று வேதததுக்கு அப்பாற்பட்ட மதங்கள் இரண்டு. "உலகத்தில் ஒரு பொருளும் இல்லை. சத்தியமான பொருள், சாசுவதமான பொருள் என்று ஒன்றுமே கிடையாது. எல்லாம் சூன்யந் தான்" என்று சொல்வது புத்த மதம்.

"உலகத்தில் எல்லாக் காலத்திலும் இருக்கும்படியான ஒரு பொருள் இருக்கிறதா? இல்லை. இல்லையா? இருக்கிறது. இருக்கிறதா, இல்லையா? இருக்கிறது, இல்லை." என்று இப்படிச் சொல்கிறது ஜைன மதம். சப்த சங்கி என்று ஏழு விதமான சந்தேகத்துடன், 'இல்லை, இருக்கிறது, இருக்கிறது இல்லை, இல்லையா இருக்கிறதா? இருக்கிறது. இல்லை இருக்கிறது என்பதாகச் சொல்வது ஜைன மதம். ஒன்றுக்கொன்று மாறுதலாக இருக்கும். ஜைன மதமும், புத்த மதமும் வேதத்துக்குச் சம்பந்தம் இல்லாதவை. இந்த மாதிரி 72 மதங்கள் நம் தேசத்தில் இருந்ததாகச் சொல்வார்கள். இவற்றில் பிரதானமாக நான் நான்கு தான் சொன்னேன்.

ஆசாரியர்கள் எட்டாவது வயசில் ஆசிரமம் வாங்கிக்கொண்டு, பதினாறாவது வயசிற்குள் உபநிஷத்துக்களுக்குப் பாஷ்யம் எழுதி, வேதாந்த சூத்திரத்துக்கும் பாஷ்யத்தை எழுதி, பகவத் கீதைக்கும் பாஷ்யம் எழுதினார். குழந்தைகளுக்குப் புரியும்படியான லேசான ஸ்தோத்திரங்களை எல்லாம் எழுதினார். மிக நுட்பமான கருத்துக்களை எல்லாம் நினைக்கும்படியாகச் சிறு சிறு சூத்திரங்களை எல்லாம் எழுதிப் பூர்த்தி பண்ணிவிட்டார்.

அதற்கப்புறம் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறபொழுது, வேத

வியாசர் ஒரு வயோதிகப் பிராம்மணனைப் போல் வந்து, ஆசார்யர்களோடு வாதம் செய்தாராம். வேதவியாசருடைய பிரம்ம சூத்திரத்துக்கு ஆசாரியர் பாஷ்யம் எழுதியிருக்கிறார். ஆசாரியர்களுடைய பெருமையை உலகத்துக்கு எடுத்துக்காட்ட வேண்டுமென்று வியாசர் அப்படி வயோதிகப் பிராம்மண ரூபத்தோடு வாதம் செய்வதற்கு வந்தாராம். இவர்கள் இரண்டு பேருக்கும் பலமாக வாதம் நடந்த போது சிஷ்யர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "யாரடா, இந்தக் கிழவர், இவ்வளவு வாதம் பண்ணுகிறார்?" என்று ஒரு சமயம் நினைப்பார்கள். அவருடைய வாதத்தைக் கேட்கும் போது "ஆசாரியர்கள் கூடத் தோற்றுப் போய் விடுவார் போலிருக்கிறதே!" என்று பயப்படுவார்கள். அப்புறம் ஆசாரியர்கள் வாதம் ஓங்குகிறபோது " ஆசாரியர்கள் இந்தக் கிழத்தை தோற்கடித்து விட மாட்டாரா?" என்று திரும்பவும் சந்தோஷப்படுவார்கள். இப்படி ஆசார்யர்களோடு இருந்த சிஷ்யர்கள் பலவித உணர்ச்சிக்கு உள்ளாகிக் கொண்டிருந்தார்களாம்.

இரண்டு பேரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் வாதம் செய்வதைப் பார்த்த போதுதான், பத்மபாதாசாரியர் கொஞ்சம் ஞான திருஷ்டியினாலே பார்த்தார். "அடடா! வேதவியாசரே அல்லவா இந்தக் கிழ ஸ்வரூபத்தோடு வந்திருக்கிறார்? என்று அவருக்குத் தெரிந்து போய்விட்டது. வேத வியாசர் நாராயண ஸ்வரூபம். சங்கரரோ ஈசுவர ஸ்வரூபம். 'இவர்கள் இரண்டு பேருமே இப்படி வாதம் செய்தால் நாம் எல்லாம் எந்த மூலைக்கு? என்று நினைத்து உடனே,

சங்கர: சங்கர : ஸாட்சாத்: வ்யாஸோ நாராயண: ஸ்வயம்

(சங்கரர் ஸாட்சாத் சங்கரர்தாம். வியாசரோ ஸாட்சாத் நாராயணன் தான்.)

தயோர் விவாதே ஸம்ப்ராப்தே கிங்கர: கிம் கரோம்யஹம்.

(அவர்கள் இரண்டு பேருக்குமே இப்படி விவாதம் ஏற்பட்டால், கிங்கரராகிய நாம் என்ன பண்ணுவது? யாருக்கு மத்யஸ்தம் பண்ணுவது?)

என்று உடனே சொன்னாராம்.

அதைக் கேட்டவுடனே வியாசாசார்யர் தம்முடைய நிஜ ஸ்வரூபத்தை எடுத்துக் கொண்டு சங்கரருக்கு அநுக்கிரஹம் பண்ணி "லோகத்தில் இருக்கும் மகாவித்துவான்கள் கொண்டி (விதண்டை) வழியில் கண்டனங்கள் பண்ணி மறுப்பார்கள். அவர்களுக்கு தெரியாத கொண்டி வழியில் எல்லாம் நான் தர்க்கம்பண்ணி, முடிவில் ஈசுவர அவதாரம் நீ என்பதை உலகுக்கு நிரூபித்துக்காட்டவே இப்படி வந்தேன்" என்று சொன்னவுடன், ஆசாரியர்கள் எல்லாவற்றையும் அவர் பாதத்திலேயே வைத்து விட்டு, தாம் வந்த காரியம்

பூர்த்தியாகி விட்டது என்று புறப்படக் கிளம்பினாராம். "இல்லை, இல்லை; இன்னும் 16 வருஷங்கள் இருந்து லோகம் முழுக்க ஸஞ்சாரம்பண்ணி, இந்தத் தத்துவங்களினால் மகாசந்தோஷம் அடைந்திருக்கிற ஜனங்களுக்கு ஸ்வரூப தரிசனத்தையும் அளித்துச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று அவர் அனுக்கிரஹம் பண்ண, அந்த க்ஷணமே பிரம்மாவும் தோன்றிப் பாதுகா சித்தி அளித்தார் என்றெல்லாம் கதை போகிறது. அப்புறம் ஆசாரியர்கள் ஆஸேது ஹிமாசல பர்யந்தம் ஸஞ்சாரம்பண்ணி அத்வைத மதத்தை ஸ்தாபனம் பண்ணியிருக்கிறார். அதற்கு முன்னாடி என்ன என்ன மதங்கள் இருந்தனவோ, அவ்வளவும் ஆசாரியர்கள் காலத்தில் இல்லாமலே போய்விட்டன.

அதற்கு முந்திச் சாங்கிய மதமும் இருந்தது, புத்த மதமும் இருந்தது. எல்லோரும் புத்த மதத்தில் இல்லை. எல்லாரும் சாங்கிய மதத்தில் இல்லை. இப்படி ஒவ்வோர் ஆசார்யர் ஒவ்வொரு மதத்தை ஸ்தாபித்தாலும், அந்த அந்த மதத்தைச் சேர்ந்தவர்களே அனுஷ்டித்திருக்கிறார்கள். ஆனால் சங்கரர் அவதாரம் செய்தவுடனே எல்லா மதங்களும் இல்லாமல் போய்விட்டன. இவர் உபதேசம் பண்ணின ஒன்றுதான் 56 தேசங்களிலும் பரவிற்று. அதனாலே ஆசார்யர்கள் என்றால் இவர் ஒருவரைக் குறிக்குமே தவிர வேறு யாரையாவது சொல்ல வேண்டு மானால் பெயரையும் சேர்த்துச் சொன்னால் தான் புரியும்.

அப்படிப்பட்ட ஆசாரியரவர்களுடைய பக்தி நமக்கு இருந்துவிட்டால் போதும். சாட்சாத் ஈசுவரனையே, அத்வைத சாஸ்திரத்தையும் இவரே நமக்குக் காட்டிவிடுவார். ஆகவே ஜன்மம் வேண்டாம் என்று சொல்ல வில்லை. எந்த ஜன்மமாக இருந்தாலும் சரி, பிரதானமாக ஆசாரியர்களுடைய பக்தி இருக்கும்படியான, ஆசாரியர்களே குருவாக குருவாக இருக்கும்படியான, பரமேசுவரனே தெய்வமாக, வேதாந்த சாஸ்திரமே சாஸ்திரமாக இருக்கும்படியான ஜன்மமாகக் கிடைத்தால் போதும். ஜன்மம் எவ்வளவு நிஷித்தமானதாக இருந்தாலும் சரி; எடுக்கும் பிறவியில் எல்லாம் இந்த மூன்று தன்மையும் இருக்கும்படியாக அநுக்கிரஹம் பண்ண வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும்.

குர்வஷ்டகம்

(குருவைப்பற்றிய எட்டுப் பதிகங்கள்)

சரீரம் ஸுரூப1ம் ஸதா3 ரோக3முக்த1ம்
யசஸ்சா1ரு சி1த்ரம் த4னம் மேருது1ல்யம் ।
மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் ॥ 1

மிக அழகிய உடலும், ஒருபொழுதும் நோயின்மையும், பலவகையிலும் இனிய புகழும், மேருமலைக்கு இணையான செல்வமும் இருந்தாலும், குருவின் திருவடித்தாமரைகளில் மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

க1லத்1ரம் த4னம் பு1த்1ர பௌ1த்1ராதி3 ஸர்வம்
க்3ருஹம் பா3ந்த4வா: ஸர்வம் ஏத1த்தி4 ஜா1த1ம் ।
மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் ॥ 2

மனைவியும், செல்வமும், பிள்ளையும், பேரன் முதலிய எல்லாமும், வீடும், சுற்றமுமென்ற இத்தனையும் கூடியிருந்தும் குருவின் திருவடித்தாமரைகளில் மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

ஷட3ங்கா3தி வேதோ3முகே2 சாஸ்1த்ர வித்3யா*
க1வித்1வாதி3 க3த்3யம் ஸுபத்1யம் க1ரோதி1 ।
மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் ॥ 3

ஆறு அங்கங்களோடு கூடிய வேதம், சாஸ்திரம், வித்யை* முதலியவை வாக்கிலிருந்தாலும், பாட்டும், உரைநடையும் படைக்கும் கவித்திறன் இருந்தாலும், குருவின் திருவடித்தாமரைகளில் மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

[* ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்று வேதங்கள் நான்கு. சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பவை அவற்றின் அங்கங்கள். மீமாம்ஸா, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் என்பவை உபாங்கங்கள். இவை பதினான்கும் 'வித்யா ஸ்தானம்' எனறு சொல்லப்படும்.]

விதே3சேஷு மான்ய: ஸ்வதே3சேஷு த4ன்ய:
ஸதா3சா1ரவ்ரு1த்தே1ஷு மத்1தோ1 ந சா1ன்ய: ।

மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் || 4

தன் நாட்டில் புகழப்பெற்றாலும், பிற நாடுகளில் மதிக்கப்பெற்றாலும், நற்பணி நன்னடத்தைகளில் பற்றுக்கொண்டு பிறவற்றை ஒதுக்கினாலும், குருவினது திருவடித்தாமரைகளில் மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

க்ஷமாமண்ட3லே பூ4ப1பூ4பா1ல வ்ருந்தை3:
ஸதா3ஸேவித1ம் யஸ்ய பா1தா3ரவிந்த3ம் |
மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் || 5

ஒருவனுடிய பாதத்தாமரைகள் பூமண்டலத்தில் உள்ள மன்னர்களாலும், பேரசர்களாலும் எப்பொழுதும் வணங்கப்பட்டாலும், குருவினுடைய திருவடித் தாமரைகளில் (அவனது) மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

யசஸ்சே1த் க3த1ம் தி3க்ஷு தா3னப்ரதா1பாத்
ஜ3க3த்3வஸ்து1 ஸர்வம் க1ரே யத்1 ப்ரஸாதா3த் |
மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் || 6

கொடையின் சிறப்பால் திக்கெட்டும் புகழ் பரவியிருந்தாலும், எவருடைய அருளினால் உலகத்துப் பொருள் அனைத்தும் கைவருமோ, அந்தக் குருவினுடைய திருவடித்தாமரையில் மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

ந போ4கே3 ந யோகே3 ந வா வாஜி3மேதே4
ந கா1ந்தா1ஸுகே2நைவ வித்1தே1 ஷுசித்1த1ம் |
மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் || 7

போகத்தில், யோகத்தில், அச்வமேத யாகத்தில், காதலியின் இன்பத்தில், செல்வத்தில் கருத்தைச் செலுத்தாவிட்டாலும், குருவின் திருவடித்தாமரைகளில் மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

அரண்யே ந வா ஸ்வஸ்ய கே3ஹே ந கா1ர்யே
ந தே3ஹே மனோ வர்த்1த1தே1 மே த்1வனர்க்4யே |
மனஸ்சே1ந்ந லக்3னம் கு2ரோரங்க்4ரி ப1த்3மே
த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் த1த1: கி1ம் || 8

காட்டிலோ, சொந்த வீட்டிலோ, செய்ய வேண்டிய கடமையிலோ, உடலிலோ, உயர்ந்த வேறு எதிலுமோ என் மனம் ஈடுபடவில்லை. எனினும், குருவின் திருவடித்தாமரைகளில் மனம் குவியவில்லையென்றால் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

கு3ரோ ரஷ்ட1க1ம் ய: ப4டே2த் புண்யதே3ஹீ
யதி1ர் பூ4ப1தி1ர் ப்3ரஹ்மசா1ரீ ச1 கே3ஹீ ।
ல்பே4த் வாஞ்சி2தா1ர்த்த2ம் ப1த3ம் ப்3ரஹ்மஸம்ஜ்ஞும்
கு3ரோருக்1த2வாக்1யே மனோ யஸ்ய லக்3னம் ॥ 9

பிரம்மசாரியோ, இல்லறத்தானோ, துறவியோ, அரசனோ, புண்ணியசாலியான எவன் ஒருவன் குர்வஷ்டகத்தைப் படிக்கிறானோ, குருவினால் கூறப்பட்ட வாக்கில் எவனுடைய மனம் குவிகிறதோ, அவன் விரும்பப்படும் பெரும்பேறாகிய பிரம்மம் என்று பெயர் பெற்ற பதவியை அடைகிறான்.





ஸ்ரீ மஹாகணேச பஞ்சரத்னம்

முதா3 கராத்தமோத3க1ம், ஸதா3 விமுக்தி ஸாத4கம்
கலாத4ராவதம் ஸகம், விலாஸி லோக ரக்ஷகம் |
அநாயகைக நாயகம், விநாசி தேப4 தை3த்யகம்
நதாசுபா4சு நாஸகம், நமாமி தம் விநாயகம் || 1 ||

சந்தோஷத்துடன் கையில் மோதகத்தை (கொழுக்கட்டையை) வைத்துக் கொண்டிருப்பவரும், தம்மைப் பஜிப்பவர்களுக்கு எப்பொழுதும் மோக்ஷத்தைக் கொடுப்பவரும், சந்திர கலையைத் தலையில் தரிப்பவரும், (தம்முடைய சரித்திரத்தைப் பாடிக்கொண்டு) ஆனந்தமாக இருக்கும் பக்தர்களை ரக்ஷிப்பவரும், நாதனில்லாதா ஜனங்களுக்கு ஆபத்துக் காலத்தில் தாமே நாதராக இருந்து காப்பாற்றுபவரும் கஜாஸுரனைக் கொன்றவரும், தம்மை வணங்கும் ஜனங்களுடைய பாவங்களை உடனே நாசம் செய்பவருமான மகாகணபதியை வணங்குகிறேன்.

நதேதராதி பீ4கரம், நவோதி3தார்க்க பா4ஸ்வரம்
நமத்ஸுராரி நிர்ஜரம், நதாதி4காபது3த்3த4ரம் |
ஸுரேச்வரம் நிதீ4ச்வரம் க3ஜேச்வரம் க3ணேச்வரம்
மஹேஸ்வரம் தமாஸ்ரயே பராத்பரம் நிரந்தரம் || 2 ||

தம்மை வணங்காதவர்களுக்கு பயத்தைக் கொடுத்துச் சிக்ஷிப்பவராயும், உதயகாலத்திய சூரியனைப்போல் விளங்குபவராயும், தம்மை வணங்குகிற தேவர்களின் சத்துருக்களான அஸுரர்களை ஒழிக்கிறவராயும், தம்மை நமஸ்கரிப் பவர்களைப் பெரிய ஆபத்திலிருந்து கைதூக்கி விடுபவராயும், தேவர்களைன் அதிபதியாயும், புதையல் சொத்துக்களுக்கு அதிதேவதையாயும் (பக்தர்களுக்குப் புதையல்களைப் கொடுப்பவராயும்), யானைகளுக்கு அதிபதியாயும், சண்டிகேச்வரர் முதலிய பிரதம கணங்களுக்கு நாதராயும், ஈச்வரனுக்கும் மேலானவராயும், உலகுக்கு மூலகாரணமானதால் மேலானது (பரம்) என்று சொல்லப்படும் மாயையைக் காட்டிலும் மேலானவராயும் (மாயா ஸம்பந்தமற்றவராயும்) விளங்கும் மகாகணபதியை இடைவிடாமல் வணங்குகிறேன்.

ஸமஸ்த லோக சங்கரம், நிரஸ்த தைத்ய குஞ்ஜரம்
த3ரே தரோ த3ரம் வரம், வரேப4 வக்த்ரமக்ஷரம் |
க்ருபாகரம் க்ஷமாகரம், முதா3கரம் யசஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதாம், நமஸ்கரோமி பா4ஸ்வரம் || 3 ||

பதினான்கு உலகங்களிலுமுள்ள ஜனங்களுக்குச் சுகத்தைக் கொடுப்பவரும், கஜாஸுரனை ஸம்ஹாரம் செய்தவரும், (ஸகல உலகங்களையும் வயிற்றுக்குள் வைத்துக் கொண்டு ரக்ஷிக்கிறவராதலால்) பெருத்த வயிற்றுடன் கூடியவரும்,

சிரேஷ்டரும், உயர்ந்த யானையான ஐராவதத்தின் முகத்தைப் போன்ற முகத்துடன் கூடியவரும், அழிவற்றவரும், தம்மை வணங்குபவர்கள் என்ன அபசாரம் செய்திருந்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டு அவர்களிடம் கிருபை கொண்டு அவர்களின் மனத்தை நல்வழியில் திருப்பி அவர்களுக்குச் சந்தோஷத்தையும், நல்ல கீர்த்தியையும் உண்டு பண்ணுகிறவருமான ஒளி மிகுந்த மகாகணபதியை வணங்குகிறேன்.

அகிஞ்சநார்தி மார்ஜநம், சிரந்த நோக்தி பா[4]ஜநம்
புராரி பூர்வ நந்த[3]னம், ஸுராரி க[3]ர்வ சர்வணம் |
ப்ரபஞ்சநாச பீ[4]ஷணம், த[4]நஞ்சயாதி[3] பூ[4]ஷணம்
கபோலதா[3]ந வாரணம், ப[4]ஜே புராண வாரணம் || 4 ||

தம்மைப் பூஜிப்பவர்களின் தாரித்திரியப் பீடையை நாசம் செய்கிறவரும், அநாதியான வேத வாக்கியங்களால் துதிக்கப்பெறும் மகிமையுள்ளவரும், சத்துருக்களான அஸுரர்களின் கர்வத்தை அடக்குபவரும், லோகங்களை நாசம் செய்கிற யமனுக்கும் பயத்தைக் கொடுப்பவரும் (தம் பக்தர்களிடம் யமனை அண்டவிடாமல் தடுப்பவரும்), அர்ஜுனன் முதலிய வில்லாளராலும் (காரியாரம்பத்தில்) பூஜிக்கப் பெற்றவரும், கன்னப் பிரதேசத்தில் ஏற்படும் மத ஜலத்தைப் பெருக விடுபவரும், புராதன கஜஸ்வரூபியான மகாகணபதியை வணங்குகிறேன்.

நிதாந்த காந்தி த[3]ந்தகாந்தம், அந்தகாந்த காத்மஜம்
அசிந்த்யரூப மந்தஹீநம், அந்தராய க்ருந்தநம் |
ஹ்ருத[3]ந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகிநாம்
தமேக த[3]ந்தமேவ தம், விசிந்தயாமி ஸந்ததம் || 5 ||

மிகவும் அழகான தந்தத்தின் சோபையுடன் கூடியவரும், யமனுக்கும் யமனான பரமேச்வரனுடைய புத்திரரும், மனத்தாலும் சிந்திக்க முடியாத ஸ்வரூபத்தை யுடையவரும், நாசமற்றவரும், விக்கினங்களை நாசம் செய்கிறவரும், யோகிகளின் ஹ்ருதயத்தில் எப்பொழுதும் வசிப்பவரும், ஒரே தந்தத்துடன் கூடியவருமான மகாகணபதி ஒருவரையே எப்போதும் தியானிக்கிறேன். (வியாஸாசார்யா சொன்ன மகாபாரதத்தை எழுதுவதற்காக விநாயகர் ஒரு தந்தத்தை ஒடித்து எழுது கோலாக உபயோகித்தார் என்பது புராண வரலாறு.)

பல ஸ்ருதி:


மஹா க[3]ணேச பஞ்சரத்நம் ஆத[3]ரேண யோநவஹம்
ப்ரஜல்பதி ப்ரபா[4]தகே ஹ்ரிதி[3] ஸ்மரந் க[3]ணேச்வரம் |
அரோக[3]தாம் அதோ[3]ஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுர்ஷ்ட பூ[4]திம்ப்[4]யுபைதி ஸோசிராத் ||

ஸ்ரீ மஹாகணேச பஞ்சரத்னம்

"மகாகணபதி பஞ்சரத்னம்" என்னும் இந்த ஸ்தோத்திரத்தை எவர் ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் மகாகணபதியை இதயத்தில் தியானித்துக் கொண்டு பாராயணம் செய்கிறார்களோ அவர்கள் சீக்கிரமாகவே எல்லா ரோகங்களிலிருந்தும், எல்லா தோஷங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். அவர்கள் நல்ல கவிதா சக்தியையும், உத்தம புத்திரர்களையும், நீண்ட ஆயுளையும், அஷ்டைசுவரியங்களையும் அடைவார்கள்.

(ஜெய கணேச, ஜெய கணேச, ஜெய கணேச பாஹிமாம்!
ஜெய கணேச, ஜெய கணேச, ஜெய கணேச ரக்ஷமாம்!)

|| இதி ஸ்ரீ சங்கராசார்ய விரசிதம் ஸ்ரீ மஹாகணேச பஞ்சரத்னம் சம்பூர்ணம் ||



கணேச புஜங்கம்

ரணத் க்ஷத்3ர க4ண்டா நிநாதா3பி4ராமம்
சலத்தாண்ட3 வோத்3 த்3ண்ட பத்பத்3ம தாளம் |
லஸத் துந்தி3 லாங்கோ3 பரிவ்யாளஹாரம்
க3ணாதீ4 சமீசான ஸூநும் தமீடே3 || 1

இனிமையாக சப்திக்கும் சிறிய மணிகளின் சப்தத்தால் மகிழ்ச்சியடைபவரும், தாண்டவமாடும் போது நிமிர்ந்ததும் அசைவதுமான திருவடித் தாமரையினால் தாளம் போடுபவரும், உதரத்தின் மீது பிரகாசிக்கும் ஸர்ப்ப ஹாரத்தையுடையவரும், பரமேச்வரனின் புதல்வருமான ஸ்ரீ கணேசரைத் துதிக்கிறேன்.

த்4வனி த்4வம்ஸ வீணா லயோல்லாஸிவக்த்ரம்
ஸ்புரச் சுண்ட3 த்3ண்டோ3ல்லஸத்3 பீ3ஜபூரம் |
கலத்3 த3ர்ப்ப ஸௌக3ந்த்ய லோலாலி மாலம்
க3ணாதீ4ச மீசான ஸூநும் தமீடே3 || 2

வீணாகானம் முடிந்த பிறகு மனத்துள் அந்த ரஸத்தை அனுபவித்து லயித் திருப்பதால் பிரகாசிக்கும் முகத்தை உடையவரும், துதிக்கையில் விளங்கும் கொய்யாப்பழத்தை (அல்லது மாதுளம்பழத்தை) யுடையவரும், பெருகும் மத ஜலத்தில் ஆசையினால் சுற்றும் வண்டுகளின் வரிசையையுடையவரும், பரமேச்வரனின் புதல்வருமான ஸ்ரீ கணேசரைத் துதிக்கிறேன்.

ப்ரகாசஜ் - ஜபாரக்த ரத்னப்ரஸூன
ப்ரவாள ப்ரபா4 தாருண ஜ்யோதிரேகம் |
ப்ரலம்போ3த3ரம் வக்ர துண்டை3 கத3ந்தம்
க3ணாதீ4 ச மீசான ஸூநும் தமீடே3 || 3

நன்கு பிரகாசிக்கும் செம்பருத்தி மலர், சிவந்த ரத்னம், சிவந்த புஷ்பம், பவழம், இளம் சூர்யன் இவைகளினது போன்ற காந்தியை யுடையவரும், பருத்த வயிற்றையுடையவரும், வளைந்த துதிக்கை, ஒற்றைத் தந்தம் இவற்றை யுடையவரும், பரமேச்வரனின் புதல்வருமான ஸ்ரீ கணேசரைத் துதிக்கிறேன்.

விசித்ரஸ்புரத்3 ரத்ன மாலாகிரீடம்
கிரீடோல்லஸச் - சந்த்3ர ரேகா2 விபூ4ஷம் |
விபூ4 ஷைகபூ4ஷம் - ப4வத்4வம்ஸ ஹேதும்
க3ணாதீ4 சமீசான ஸூநும் தமீடே3 || 4

பல நிறமுள்ளவைகளும் ப்ரகாசிப்பவைகளுமான ரத்னங்கள் பதித்த ஹாரம், கிரீடம் இவற்றையுடையவரும், கிரீடத்தின் மீது விளங்கும் சந்திரகலை யாகிய ஆபரணத்தையுடையவரும், ஆபரணங்களுக்கெல்லாம் முக்கியமான ஆபரணமாக

விளங்குபவரும், ஸம்ஸார பந்தம் நீங்குவதற்குக் காரணமாக இருப்பவரும், பரமேச்வரனின் புத்ரருமான ஸ்ரீ கணேசரைத் துதிக்கிறேன்.

உத3ஞ்சத்3 - பு4ஜாவல்லரீ த்3ருச்ய மூலோல்
லஸத்3 ப்4ரூலதாவிப்4ரமப்4ராஜ த3க்ஷம் ।
மருத்ஸுந்த3ரீ சாமரை: ஸேவ்யமானம்
க3ணாதீ4ச மீசானஸூனும் தமீடே3 ॥ 5

உயிரே நிமிர்த்தப்பட்ட கொடி போன்ற அழகிய கைகளையும், ஓரங்களில் அழகாக விளங்கும் புருவங்களின் விலாஸங்களால் சோபிக்கும் கண்களையும் உடையவரும், தேவ ஸ்திரீகளால் வெண்சாமங்களைக் கொண்டு ஸேவிக்கப்படுப்வரும், பரமேச்வரனின் புதல்வருமான ஸ்ரீ கணேசரைத் துதிக்கிறேன்.

ஸ்புரந்நிஷ்டு2ராலோல பிங்கா3க்ஷிதாரம்
க்ருபா கோமளோதா3ர லீலாவதாரம் ।
கலா பி3ந்து3க2ம் கீ3யதே யோகி3வர்யை:
க3ணாதீ4ச மீசானஸூனும் தமீடே3 ॥ 6

ப்ரகாசிப்பதாயும் கம்பீரமாயும் சஞ்சலமாயும் சிவந்ததாயுமுள்ள கண் பார்வையை யுடையவரும், கருணையினால் அழகியதும் கபடமற்றதுமான லீலைகளோடு கூடிய அவதாரத்தையுடையவரும், சிறந்த யோகிகளால் கலா, பிந்து என்ற ஸ்தானங்களை அடைந்தவராகக் கூறப்படுபவரும், பரமேச்வரனின் புதல்வருமான ஸ்ரீ கணேசரைத் துதிக்கிறேன்.

யமேகாக்ஷரம் நிர்மலம் நிர்விகல்பம்
கு3ணாதீதம் ஆனந்த3ம் ஆகார சூன்யம் ।
பரம் பாரம் ஓங்காரம் ஆம்னாய க2ர்ப4ம்
வத3ந்தி ப்ரக3ல்ப4ம் புராணம் தமீடே3 ॥ 7


எவரை மஹான்கள் ஒன்றான அழிவற்றதாயும், நிர்மலமான தாயும், பேத மற்றதாயும், குணங்களுக்கு அப்பாற்பட்டதாயும் (நிர்க்குண மாயும்), ஆனந்த ஸ்வரூபமாயும், உருவமற்றதாயும், எல்லாவற்றிற்கும் மேலானதாயும், ஓங்கார (ப்ரணவ) ஸ்வரூபமாயும், வேதங்களின் உட்பொருளாயும், சுலபமாக அறிய முடியாததாயும், அனாதியாயும் கூறுகின்றனரோ அத்தகைய கணேசரைத் துதிக்கிறேன்.

சிதா3னந்த ஸாந்த்3ராய சாந்தாய துப்4யம்
நமோ விச்வகர்த்ரே ச ஹர்த்ரே ச துப்4யம் ।
நமோ (அ)னந்த லீலாய கைவல்ய பா4ஸே
நமோ விச்வபீ3ஜ ப்ரஸீதே2 சஸூனோ ॥ 8

பரிபூரண ஞான ஆனந்த ஸ்வரூபியும், சாந்தன்வாபியம், உலகைப் படைப்பவரும் அழிப்பவருமான தங்களுக்கு நமஸ்காரம். உலகிற்குக் காரணமாக விளங்கும் ஹே ஈச புதரா ! எல்லையற்ற லீலைகளைப் புரிகின்ற ஒளி வடிவமான கைவல்ய நிலையிலுள்ள தங்களுக்கு நமஸ்காரம். தாங்கள் அருள்புரிய வேண்டும்.

இமம் ஸுஸ்தவம் ப்ராதருத்தா2ய ப4க்த்யா
படே2த்3யஸ்து மர்த்யோ லபே4த்ஸர்வகாமான் ।
க3ணேசப்ரஸாதே3ன ஸித்4யந்தி வாசோ
க2ணேசே விபௌ3 துர்லப4ம் கிம் ப்ரஸன்னே ॥ 9

எந்த மனிதன் அழகிய இந்த ஸ்தோத்ரத்தைக் காலையில் எழுந்து பக்தியுடன் படிக்கிறானோ, அவன் எல்லா விருப்பங்களையும் அடைவான். ஸ்ரீ கணேசரின் அருளால் அவனது சொல் பயனளிக்கக் கூடியதாகும். ஸர்வ வ்யாபியான ஸ்ரீ மஹாகணபதி ஸந்தோஷமடைந்தால் எதைத்தான் அடைய முடியாது! (எல்லாவற்றையும் பெறலாம்.)



ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்

ஸதா3 பா3லரூபாபி விக்4 நாத்3ரிஹந்த்ரீ
மஹாத3ந்திவக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா |
விதீ4ந்த்3ராதி2 ம்ருக்3யா க3ணேசாபி4தா மே
வித4த்தாம் ச்ரியம் காபி கல்யாணமூர்த்தி: || 1

எப்பொழுதும் குழந்தை உருவமாயிருந்தாலும் விக்ன மலைகளை நாசம் செய்பவரும், யானை முகத்தோனாயினும் ஐம்முகத்தோனால் பூஜிக்கப்படுகிறவரும், நான்முகன், இந்திரன் முதலியவர்களால் தேடப்படுகிறவரும், கணேசன் என்னும் பெயருடையவருமான ஒரு கல்யாண உருவமானது செல்வத்தைக் கொடுக்கட்டும்.

ந ஜாநாமி பத்3யம் ந ஜாநாமி க3த்3யம்
ந ஜாநாமி சப்த3ம் ந ஜாநாமி சார்த்த2ம் |
சிதே3 கா ஷடா3ஸ்யா ஹ்ருதி2 த்3யோததே மே
முகா2ந்நிஸ்ஸரந்தே கி3ரஸ்சாபி சித்ரம் || 2

சுலோகம், வசன நடை, சப்தம், அர்த்தம் ஒன்றும் எனக்குத் தெரியாது, எனினும், ஆறுமுகமுள்ள ஓர் அறிவானது என் ஹிருதயத்தில் ஒளிவிட்டு முகத்திலிருந்து விதவிதமான சொல்லாகவும் வெளிவருகிறது.

மயூராதி4ரூட4ம் மஹாவாக்ய கூ3ட4ம்
மனோஹாரிதே3ஹம் மஹச்சித்தகே3 ஹம் |
மஹீதே3வதே2வம் மஹாவேத3 பா4வம்
மஹாதே3வபா2லம் ப4ஜே லோகபாலம் || 3

மயில்வாகனனும், வேதங்களிலுள்ள மஹாவாக்யங்களில் மறைந்தவனும், மனத்திற்கு இன்பமளிக்கக்கூடிய சரீரத்தை உடையவனும், பெரியோர்களின் மனத்தை இருப்பிடமாய்க் கொண்டவனும், அந்தணர்கள் தெய்வமும், பெருமை வாய்ந்த வேதப்பொருளும், மஹாதேவன் குழந்தையுமாகி உலகத்தைக் காக்கிற முருகனை வணங்குகிறேன்.

யதா3 ஸந்நிதா4னம் க3தாமானவா மே
ப4வாம்போ4தி4 பாரம் க3தாஸ்தே ததை3வ |
இதி வ்யஞ்ஜயன் ஸிந்து4 தீரே ய ஆஸ்தே
தமீடே3 பவித்ரம் பராசக்தி புத்ரம் || 4

[* 'பஞ்சாஸ்ய' என்பது 'சிங்கம்', 'ஐந்து முகத்தோன்' என இரு பொருள்படும். ஐம்முகச் சிவனால் வழிபடப்படும் கணேசரை, சிம்மமும் வழிபடும் யானை எனச் சிலேடையாக ஆசார்யாள் குறிப்பிடுகிறார்.]

'என் ஸன்னிதியை எப்பொழுது மனிதர்கள் அடைகிறார்களோ அப்பொழுதே பிறவிக் கடலைத் தாண்டிவிடுகிறார்கள்' என்று காண்பித்துக்கொண்டு * கடற் கரையில் கோயில் கொண்டுள்ள பராசக்தியின் புதல்வனான அந்தப் பவித்ரமான முருகனைத் துதிக்கின்றேன். [* திருச்செந்தூர் கடற்கரையில்]

யதா²ப்தே⁴ ஸ்தரங்கா³ லயம் யாந்தி துங்கா²:
ததை² வாபத³ஸ்ஸன்னிதி⁴ம் ஸேவதாம் மே ।
இதீவோர்மிபங்க்தீர் ந்ருணாம் த³ர்சயந்தம்
ஸதா² பா⁴வயே ஹ்ருத்ஸரோஜே கு³ஹம் தம் ॥ 5

எப்படிக் கடல் அலைகள் மிக உயரமாக வந்தாலும் (கடலுள்) மறைந்து விடுகின்றனவோ, அவ்வாறே என் ஸன்னிதியில் ஸேவிக்கிறவர்களுக்கு ஆபத்துகளும் மறையும் என்று அலைகளின் வரிசையை மனிதர்களுக்குக் காட்டிக்கொண்டிருக்கும் குகனை என் இருதயத் தாமரையில் எப்பொழுதும் வைத்துத் தொழுகிறேன்.

கி³ரௌ மந்நிவாஸே நரா யேsதி⁴ ரூடா⁴
ததா² பர்வதே ராஜதே தேsதி⁴ ரூடா⁴: ।
இதீவ ப்³ருவன் க³ந்த⁴ சைலாதி⁴ ரூட⁴
ஸ தே³வோ முதே³ மே ஸதா³ ஷண்முகோ²ஸ்து ॥ 6

'எந்த மனிதர்கள் நான் வசிக்கும் மலையில் ஏறினார்களோ, அப்பொழுதே அவர்கள் கயிலையங்கிரியை அடைந்தவர்களாய் ஆகிறார்கள்' என்று சொல்லுகிறவர் போல, கந்த மலையிலிருக்கும் அந்த தேவனான ஆறுமுகன் எப்பொழுதும் எனக்கு மகிழ்ச்சியளிக்கட்டும்.

மஹாம்போ⁴தி⁴ தீரே மஹாபாபசோரே
முநீந்த்³ராநுகூலே ஸுக³ந்தா⁴க்²யசைலே ।
கு²ஹாயாம் வஸந்தம் ஸ்வபா⁴ஸா லஸந்தம்
ஜநார்த்திம் ஹரந்தம் ச்ரயாமோ குஹம் தம் ॥ 7

பெரிய பாபங்களைப் போக்கடிப்பதும், கடற்கரையில் உள்ளதும், முனிவர்களுக்கு உகந்ததுமான 'ஸுகந்தம்' என்னும் மலையின் குகையில் வசிப்பவனும், தன் ஸ்வயம்பிரகாசத்தால் ஜ்வலிப்பவனும், ஜனங்களின் துயரங்களைப் போக்குகிறவனுமான குகனை ஆச்ரயிக்கிறேன்.

லஸத்ஸ்வர்ணகே³ஹே ந்ருணாம் காமதோ³ஹே
ஸுமஸ்தோம ஸஞ்ச²ன்ன மாணிக்யமஞ்சே ।
ஸமுத்³யத் ஸஹஸ்ரார்க்க துல்ய ப்ரகாசம்
ஸதா³ பா⁴வயே கார்த்திகேயம் ஸுரேசம் ॥ 8

மனிதர்களின் இஷ்டங்களைக் கொடுக்கிற ஒளிவிடும் பொன்மயமான வீட்டில், பூக்களால் மறைக்கப்பட்ட மாணிக்கக் கட்டிலில் விளங்குபவரும், உதிக்கும் ஆயிரம் சூரியர்களுக்கு ஒப்பான ஒளியோடு கூடியவரும், கார்த்திகை நக்ஷத்திரங்களின் புதல்வரும், தேவர்களின் தலைவருமான முருகனை எப்பொழுதும் தொழுகிறேன்.

ரணத்3த4ம்ஸகே மஞ்ஜுளேத்யந்த சோணே
மனோஹாரி லாவண்ய பீயூஷபூர்ணே ।
மன: ஷட்பதோ3 மே ப4வக்லேசதப்த:
ஸதா3 மோத2 தாம் ஸ்கந்த3 தே பாத3பத்3மே ॥ 9

சப்திக்கின்ற அழகான பாத ஸரங்களையுடையதும், அழகானதும், மிகவும் சிவந்ததும், மனத்திற்கு இன்பத்தை அளிக்கும் அழகான அம்ரு தத்தால் நிறைந்த துமான உன் திருவடித் தாமரைகளில் ஸம்ஸாரத் துயரால் வேகும் என் மனமாகிற வண்டு எப்பொழுதும் களிக்கட்டும்.

ஸுவர்ணாப4 தி3வ்யாம்ப3ரைர்பா4ஸமாநாம்
க்வணத்கிங்கிணீமேக2லா சோப4மாநாம் ।
லஸத்3 தே4 மபட்டேந வித்3யோதமாநாம்
கடிம் பா4வயே ஸ்கந்த3 தே தீப்2யமாநாம் ॥ 10

பொன் போல் ஒளிவிடுகிற உயர்ந்த பட்டாடையினால் விளங்குவதும், ஒலிக்கிற சலங்கைகளுடன் கூடிய ஒட்டியாணத்தால் அழகாயிருப்பதும், பொன்னா லான அரைஞாணுடன் மிகவும் ஒளிவிடுவதுமான உன் இடுப்புப் பிரதேசத்தை, ஹே ஸ்கந்தனே! எப்பொழுதும் சிந்தனை செய்கிறேன்.

புளிந்தே5ச கன்யா க4னாபோக3 துங்க3
ஸ்தநாலிங்க2 நாஸக்த காச்மீரராக3ம் ।
நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர:
ஸ்வப4க்தாவநே ஸர்வதா2 ஸாநுராக2ம் ॥ 11

வேடராஜன் குமாரியான வள்ளிதேவியின் உயர்ந்த தனபாரத்தை ஆலிங்கனம் செய்வதால் உண்டான செஞ்சந்தனக் குழம்பின் அடையாளத்தையுடையதும், தன் அடியார்களைக் காப்பதில் எப்பொழுதும் அன்புடனிருப்பதுமான*, தாரகனைக் கொன்ற முருகனான உன் மார்பை நான் வணங்குகிறேன்.

[* அநுராகம்'என்பது சிவப்பு, அன்பு. இரண்டையும் குறிக்கும் சிலேடையாக அமைந்துள்ளது.]

விதௌ4க்லுப்த த3ண்டா2ன் ஸ்வலீலா த்4ருதாண்டா3ன்
நிரஸ்தேப4 சுண்டா2ன் த்3விஷத் காலதண்டா3ன் ।
ஹதேந்த்2ராரிஷண்டா3ன் ஜக3த் த்ராண சௌண்டா3ன்
ஸதா3தே ப்ரசண்டா3ன் ச்ரயே பா3ஹுத3ண்டா3ன் ॥ 12

நான்முகனைத் தண்டித்தவைகளும், தன் விளையாட்டால் ஆட்டிவைத்த அண்டங்களையுடையதும், யானைத் துதிக்கைகளைப் பழிப்பனவும், சத்ருக்களுக்கு யமதண்டம் போன்றவைகளும், இந்திரனின் சத்ருக்களைக் கொன்றவைகளும், உலகத்தைக் காப்பவைகளும், எப்பொழுதும் பலத்தோடு கூடியவைகளுமான உன் கைகளைச் சரணமடைகிறேன்.

ஸதா3 சாரதா3 ஷண்ம்ருகா3ங்கா3 யதி3 ஸ்யு :
ஸமுத்3யந்த ஏவ ஸ்தி2தாஸ்சேத் ஸமந்தாத் ।
ஸதா3 பூர்ணபி3ம்பா3: களங்கைஸ்ஸஹீநா :
ததா3 த்வந் முகா2நாம் ப்ருவே ஸ்கந்த3 ஸாம்யம் ॥ 13

சரத்காலத்துப் பூர்ணிமையில் களங்கமில்லாமல் ஒரே சமயத்தில் எல்லாப் பக்கங்களிலும் ஆறு சந்திரர்கள் எப்பொழுதும் பூரண உருவில் உதயமாகும் பக்ஷத்தில் அப்பொழுது உன் முகத்திற்கு உவமை சொல்வேன். (உன் முகத்திற்கு உவமை கிடையாதென்றே பொருள்.)

ஸ்பு2ரன் மந்த3 ஹாஸை: ஸஹம்ஸாநிசஞ்சத்
கடாக்ஷாவளீ ப்4ருங்க3 ஸங்கோ4 ஜ்வலாநி ।
ஸுதா4ஸ்யந்தி3 பி3ம்பா3த4ராணீசஸூனோ
தவாலோகயே ஷண்முகா2ம்போ4ருஹாணி ॥ 14

ஈச குமாரனே! புன்சிரிப்பாகிற அன்னங்களோடு விளங்குவனவும், சஞ்சரிக்கும் கடைக்கண் வரிசையான வண்டுகளோடு பிரகாசிப்பனவும், அம்ருதத்தைக் கொட்டுகிற உதடுகளோடு கூடியனவுமான தாமரை மலர்களாகிய உன் ஆறு முகங்களைக் காண்கிறேன்.

விசாலேஷு கர்ணாந்த தீ3ர்கே4ஷ்வஜஸ்ரம்
தயாஸ்யந்தி3ஷு த்3வாத3 சஸ்வீக்ஷணேஷு ।
மயீஷத்கடாக்ஷ: ஸக்ருத்பாதிதஸ்சேத்
ப4வேத்தே த3யாசீல கா நாம ஹானி: ॥ 15

விசாலமானவையும், காதுகள் வரை நீண்டவைகளும், எப்பொழுதும் தயையைப் பெருகவிட்டுக்கொண்டிருப்பவைகளுமான உன் பன்னிரண்டு கண்களில், ஒரு தடவை கொஞ்சம் பார்வை என்னிடத்தில் விழுந்தால், ஹே, தயை நிறைந்தவனே ! உன் பெயருக்கு என்ன குறைவு வந்துவிடும்?

ஸுதாங்கோ3த்3ப4வோமேஸி ஜீவேதி ஷட்3தா4
ஜபன்மந்த்ரமீசோ முதா3 ஜிக்4ரதேயான் ।
ஜக3த்3பா4ரப்4ருத3்4யோ ஜகன்னாத2தேப்4ய:
கிரீடோஜ்வலேப்4யோ நமோ மஸ்தகேப்4ய: ॥ 16

'குழந்தையே, என்னிடத்தில் உண்டானவனே, ஆயுளுடனிரு' என்னும் மந்திரத்தைப் பரமேசுவரரால் ஆறு தடவை ஜபம் செய்து மகிழ்ச்சியுடன் முகர்ந்து பார்க்கப்படுபவைகளும், உலகத்தின் சுமைகளைத் தாங்குபவைகளும், கிரீடங்களால் ஒளிர்பவைகளுமான, ஹே, ஜகந்நாதனே! உன் ஆறு தலைகளுக்கு வணக்கம்.

ஸ்புரத்3ரத்ன கேயூர ஹாராபி4ராம் :
சலத்குண்ட3ல ஸ்ரீலஸத்3 க3ண்ட3பா4க3: ।
கடௌ பீதவாஸா: கரே சாருசக்தி:
புரஸ்தாத்மமாஸ்தாம் புராரேஸ்தநூஜ: ॥ 17

ஒளியுடன் கூடிய ரத்தினத் தோள்வளைகள், மாலைகளால் எழிலுற்றவனும், ஆடுகிற குண்டலங்களின் ஒளியால் விளங்கும் கன்னப் பிரதேசமும், இடுப்பில் மஞ்சள் பட்டு வஸ்திரமும், கையில் அழகான வேலும் உடையவனுமான மெரித்த சிவனுடைய குமாரன் என் முன்னால் இருக்கட்டும்.

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தான்ப்ரஸார்ய
ஆஹ்வயத்யாத3ராச்சங்கரே மாதுரங்காத் ।
ஸமுத்பத்ய தாதம் ச்ரயந்தம் குமாரம்
ஹராச்லிஷ்டகா3த்ரம் ப4ஜே பா3லமூர்த்திம் ॥ 18

"இங்கு வா, குழந்தாய்!" என்று சங்கரர் கையை நீட்டி ஆசையுடன் கூப்பிட்ட உடன் தாயின் மடியிலிருந்து எழுந்திருந்து தகப்பனாரையடைந்து அந்த ஹரரால் தழுவிக் கொள்ளப்பட்ட சரீரத்தை உருவினருமான முருகனை வணங்குகிறேன்.

குமாரேசஸூநோ கு3ஹ ஸ்கந்த3 ஸேநா-
பதே சக்திபாணே மயூராதி4ரூட4 ।
புளிந்தா3த்மஜாகாந்த ப4க்தார்த்திஹாரின்
ப்ரபோ4தாரகாரே ஸதா3 ரக்ஷ மாம் த்வம் ॥ 19

குமரா, ஈச புத்திரா, குஹா, ஸ்கந்தா, ஸேநாபதியே, வேலை கையில் உடையோனே, மயில் வாகனனே, வேடராஜன் மகளான வள்ளி மணாளனே, அடியார்களின் துயரைப் போக்கடிப்பவனே, தாரகனைக் கொன்ற பிரபுவே, எப்பொழுதும் நீ என்னைக் காப்பாயாக.

ப்ரசாந்தேந்த்2ரியே நஷ்டஸம்ஞே விசேஷ்டே
கபோ2த்கா3ரிவக்த்ரே ப4யோத்கம்பிகா3த்ரே ।
ப்ரயாணோன்முகே2 மய்யநாதே2 ததா3நீம்
த்3ருதம் மே த3யாளோ ப4வாக்3ரே கு3ஹ த்வம் ॥ 20

புலன்கள் அடங்கி, நினைவிழந்து, செய்கையற்று, வாயில் சளி அடைக்க, பயத்தினால் உடல் நடுங்க, இறப்பதற்கு முற்பட்ட சமயத்தில், துணையற்ற எனக்கு தயை நிறைந்தவனான குகனே, நீ விரைவோடு என் முன் நிற்க வேண்டும்.

க்ருதாந்தஸ்ய தூ3தேஷு சண்டே3ஷுகோபாத்
த3ஹச்சி3ந்தி பி4ந்தீ4திமாம் தர்ஜயத்ஸு ।
மயூரம் ஸமாருஹ்ய மா பை4ரிதி த்வம்
புர: சக்திபாணி: மமாயாஹி சீக்4ரம் ॥ 21

மிகவும் கடுமையான யமதூதர்கள் கோபத்துடன் "பொசுக்கு! வெட்டு! பிள!" என்று என்னை மிரட்டும் சமயம், மயிலில் ஏறி "பயப்படாதே" என்று என்முன் சக்தி வேலும் கையுமாக வர வேண்டும்.

ப்ரணம்யாஸக்ருத் பாத3யோஸ்தே பதித்வா
ப்ரஸாத்3ய ப்ரபோ4 ப்ரார்த2யே (அ)நேகவாரம் ।
ந வக்தும் க்ஷமோஹம் ததா3நீம் க்ருபாப்தே4
ந கார்யாந்தகாலே மநாக3ப்யுபேக்ஷா ॥ 22

உன் திருவடிகளில் விழுந்து பலமுறை வணங்கி, பிரபுவே, உன்னைப் பன்முறை (இப்பொழுதே). ப்ரார்த்திக்கிறேன். ஏ, கருணைக் கடலே ! (மரணம் நேரும்) அப்பொழுது நான் பேசும் சக்தியுடையவனாய் இருக்க மாட்டேன். (எனவே) இறக்கும் சமயத்தில் (நான் வேண்டாததால்) ஒருபொழுதும் என்னை நிராகரிக்கக் கூடாது என்று இப்பொழுதே வேண்டிக்கொள்கிறேன்.

ஸஹஸ்ராண்ட3 போ4க்தா த்வயா சூரநாமா
ஹதஸ்தாரக: ஸிம்ஹவக்த்ரச்ச தை3த்ய: ।
மமாந்தர்ஹ்ருதி3 ஸ்த2ம் மந: க்லேசமேகம்
ந ஹம்ஸி ப்ரபோ4 கிம் கரோமி க்வ யாமி ॥ 23

பிரபுவே ! ஆயிரம் அண்டங்களை ஆண்டநுபவித்த சூரபத்மன், தாரகன், சிங்கமுகன் என்னும் அரக்கர்கள் உன்னால் கொல்லப்பட்டனர். என் இருதயத்தில் உள்ள ஒரே ஒரு மனத்துயரை நீ போக்காவிட்டால் என்ன செய்வேன்? எங்கு போவேன்?

அஹம் ஸர்வதா3 து:க2 - பா4ராவஸன்னோ
ப4வாந் தீ3னப3ந்து3ஸ் த்வத3ன்யம் ந யாசே ।
ப4வத்ப4க்திரோத4ம் ஸதா3 க்லுப்தபா3த4ம்
மமாதி4ம் த்3ருதம் நாசயோமாஸுத த்வம் ॥ 24

உமையாள் மகனே! நான் எப்பொழுதும் துக்கச் சுமையினால் தளர்ந்தவன். நீர் ஏழைகளுக்கிரங்குகிறவர். உம்மைத் தவிர வேறொருவரையும் நான் நாடவே மாட்டேன். உன்னிடத்து பக்தியைத் தடுப்பதும், ஓயாமல் உபத்திரவம் கொடுப்பதுமான என் மன நோயைப் போக்கடிப்பாயாக!

அபஸ்மார குஷ்ட2 க்ஷயார்ச: ப்ரமேஹ
ஜ்வரோன்மாத3 கு3ல்மாதி3 ரோகா3 மஹாந்த: ।
பிசாசாச்ச ஸர்வே ப4வத்பத்ர்பூ4திம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்3ரவந்தே ॥ 25

தாரகனைக் கொன்றவரே! அபஸ்மாரம் என்னும் காக்கை வலிப்பு, குஷ்டம், க்ஷயம், மூலநோய், நீரிழிவு, ஜுரம், பைத்தியம், குல்மம் முதலிய பெரிய நோய்கள், பிசாசுகள் எல்லாமும் இலையில் கொடுக்கப்படும் உன்னுடைய திருநீற்றைப் பார்த்த உடனேயே ஓடிவிடுகின்றன. (செந்திலாண்டவன் விபூதியைப் பன்னீர் இலையில் வைத்து வழங்குவது வழக்கம்.)

த்3ருசி ஸ்கந்த3 மூர்த்தி: ச்ருதௌ ஸகந்த3 கீர்த்திர் -
முகே2 மே பவித்ரம் ஸதா3 தச்சரித்ரம் ।
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்4ருத்யம்
கு3ஹே ஸந்து லீநா மமாசேஷபா4வா: ॥ 26

கண்ணில் ஸ்கந்தன் உருவம், காதில் முருகன் புகழ், எப்போதும் என் வாக்கில் பரிசுத்தமான அவன் சரித்திரம், கையில் அவன் காரியங்கள், என்றும் உடல் அவன் சேவைக்கு, என்னுடைய ஸகல எண்ணங்களும் குகனிடத்தே லயமடைந்தவைகளாய் ஆகட்டும்.

முநீநாமுதாஹோ ந்ருணாம் ப4க்திபா4ஜாம்
அபீ4ஷ்டப்ரதா3 ஸ்ஸந்தி ஸர்வத்ர தே3வா: ।
ந்ருணாமந்த்ய ஜாநாமபி ஸ்வார்த்2தா3நே
கு3ஹாத்தே3வமந்யம் ந ஜாநே ந ஜாநே ॥ 27

பக்தி செய்கின்ற மனிதர்களுக்கும், முனிவர்களுக்கும் இஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய தெய்வங்கள் எங்கும் இருக்கின்றன. ஈனப் பிறப்பெடுத்த மனிதர்களுக்கும், இஷ்டத்தைக் கொடுக்கக்கூடியவர் முருகக்கடவுளைத் தவிர வேறொருவரையும் நான் அறியேன், அறியேன்.

களத்ரம் ஸுதா ப3ந்து4வர்க3: பசுர்வா
நரோ வாத2 நாரீ க்3ருஹே யே மதீ3யா: ।
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ ப4வந்தம்
ஸ்மரந்தஸ்ச தே ஸந்து ஸர்வே குமார ॥ 28

குமரக் கடவுளே! என்னைச் சேர்ந்த மனைவி மக்கள், பந்துக்கள், ஆண், பெண் எல்லோரும் உம்மைக் குறித்தே யாகம் செய்தல், வணங்குதல், துதித்தல், நினைத்தல் இவைகளைச் செய்கிறவர்களாய் இருக்கட்டும்.

ம்ருகா2: பக்ஷிணோ த3ம்சகா யே ச து3ஷ்டாஸ் -
ததா2 வ்யாத4யோ பா3த4கா யே மத3ங்கே3 ।
ப4வச்சக்தி - தீக்ஷ்ணாக்3ரபி4ந்நா: ஸுதூ3ரே
விநச்யந்து தே சூர்ணிதக்ரௌஞ்சசைல ॥ 29

கிரௌஞ்சம் என்னும் மலையைப் பொடி செய்தவரே! மிருகங்கள், பக்ஷிகள், தீய கிருமிகள், அவ்வாறே என் உடலில் துன்புறுத்தும் நோய்கள் எல்லாம் உம்முடைய வேலின் கூரிய முனையால் பிளக்கப்பட்டவைகளாய் வெகுதூரம் சென்று நாசமடையட்டும்.

ஜநித்ரீ பிதா ச ஸ்வபுத்ராபராத4ம்
ஸஹேதே ந கிம் தே3வஸேநாதி4நாத2 ।
அஹம் சாதிபா3லோ பவாந் லோகதாத:
க்ஷமஸ்வாபராத4ம் ஸமஸ்தம் மஹேச ॥ 30

தேவஸேனையின் கணவரே! தாயும் தந்தையும் தன் மகனின் குற்றங்களைப் பொறுக்கமாட்டார்களா என்ன? மஹேசா! நான் மிகச் சிறியவன். தாங்கள் உலகின் தந்தை. ஆகவே, என் குற்றம் அனைத்தையும் பொறுத்தருள்வீராக.

நம: கேகிநே சக்தயே சாபி துப்4யம்
நம: ச்சா2க3 துப்4யம் நம: குக்குடாய ।
நம: ஸிந்த4வே ஸிந்து4தே3சாய துப்4யம்
புந: ஸ்கந்த3 மூர்த்தே நமஸ்தே நமோஸ்து ॥ 31

ஸ்கந்தமூர்த்தியே ! உம்முடைய மயிலுக்கும், வேலுக்கும், ஆட்டுக்கும், கோழிக் கொடிக்கும் வணக்கம்; கடலுக்கும் கடற்கரையிலிருக்கும் உமக்கும் வணக்கம். மறுபடியும் உமக்கு வணக்கம்; வணக்கம்.

ஜயாநந்த3பூ4மந் ஜயாபாரதா4 மந்
ஜயாமோக4 கீர்த்தே ஜயாநந்த3 மூர்த்தே ।
ஜயாநந்த3ஸிந்தோ4 ஜயாசேஷப3ந்தோ4
ஜய த்வம் ஸதா3 முக்திதாநேசஸூநோ ॥ 32

ஈச புத்திரனே; ஆனந்தத்தின் இருப்பிடமானவனே! வெல்க! மேலான ஸ்தானத்தில் உள்ளவனே! வெல்க! வீணாகாத புகழுடையவனே! வெல்க! ஆனந்த மூர்த்தியே! ஆனந்தக் கடலே! வெல்க! எல்லோருக்கும் உற்றவனே! வெல்க! மோக்ஷத்தைக் கொடுக்கிற நீ எந்நாளும் வெல்க!

பு4ஜங்கா3க்2ய வ்ருத்தேந க்லுப்தம் ஸ்தவம் ய :
படே2த் ப4க்தியுக்தம் கு3ஹம் ஸம்ப்ரணம்ய ।
ஸுபுத்ராந் களத்ரம் த4நம் தீ3ர்க4மாயு:
லபே4த் ஸ்கந்த3ஸாயுஜ்யமந்தே நர: ஸ : ॥ 33

புஜங்கம் என்னும் விருத்தத்தினால் செய்யப்பட்ட இந்தத் துதியை எவன் குஹனை நன்கு வணங்கி, பக்தியுடன் படிக்கிறானோ அவன் நல்ல பிள்ளைகள், மனைவி, செல்வம், நீண்ட ஆயுள் இவைகளுடன் முடிவில் ஸ்கந்தனின் ஸாயுஜ்யத்தை அடைவான்.



சிவானந்த லஹரீ

கலாப்4யாம் சூடா3லங்க்ருத - சசிகலாப்4யாம் நிஜதப -
ப2லாப்4யாம் பக்தேஷு ப்ரகடித - ப2லாப்4யாம் ப4வது மே ।
சிவாப்4யா - மஸ்தோக - த்ரிபு4வனசிவாப்4 யாஹ்ருதி3 புனர் -
ப4வாப்4யா - மானந்த3 - ஸ்புர2- த்3னுப4வா ப்4யாம் நதிரியம் ॥ 1

கலை வடிவாகியவர்களும், சந்திரக்கலையை சிரஸிலணிந்தவர்களும், ஒருவருக்கொருவர் தவத்தின் பயன்வடிவாகியவர்களும், அடியார்களிடம் அருள் பயனை விளங்கச் செய்பவர்களும், மூவுலகிற்கும் குறைவற்ற மங்களங்களை அருள்பவர்களும், இருதயத்தில் நினைக்குந்தோறும் புதிது புதிதாய்த் தோன்றுபவர்களும், பிரம்மானந்தா நுபவத்தை வெளிப்படுத்துகிறவர்களுமாகிய சிவசக்தி ஐக்கிய வடிவினர்க்கு எனது இந்த நமஸ்காரம் உரித்தாகுக.

க3லந்தீ சம்போ4 த்வச்சரிதஸரித: கில்பி3ஷரஜோ
த3லந்தீ தீ4குல்யா - ஸரணிஷு பதந்தீ விஜயதாம் ।
தி3சந்தீ ஸம்ஸார - ப்4ரமண - பரிதாபோபசமனம்
வஸந்தீ மச்சேதோ - ஹ்ரத3 பு4வி சிவானந்த3 - லஹரீ ॥ 2

சம்புவே! உனது சரித்திரமாகிய நதியினின்று, பெருகுவதாயும், பாவமாகிய புழுதியைப் போக்குவதாயும், புத்தியெனும் வாய்க்கால் வழிகளில் பாய்ந்து செல்வதாயும், பிறவிச் சுழலுண்டாக்கும் பெருந்துன்பத்திற்கு அமைதியை அளிப்பதாயும், எனது சித்தமாகிய மடுப்பிரதேசத்தில் வந்து தேங்குவதாயும் உள்ள சிவானந்தம் என்னும் வெள்ளம் (சிவானந்த லஹரீ) வெற்றியுடன் விளங்கட்டும்.

த்ரயீவேத்3யம் ஹ்ருத்3யம் த்ரிபுரஹர - மாத்3யம் த்ரிநயனம்
ஜடாபா4ரோதா3ரம் சலது3ரக3 ஹாரம் ம்ருக3த4ரம்
மஹாதே3வம் தே3வம் மயி ஸத3ய - பா4வம் பசுபதிம்
சிதா3லம்ப3ம் ஸாம்ப3ம் சிவமதிவிட3ம்பம் ஹ்ருதி3 ப4ஜே ॥ 3

வேதங்களாலறியத் தக்க வரும், மனதிற்கினியவரும், முப்புரங்களையழிப்பவரும், அனைத்திற்கும் முதல்வரும், முக்கண் படைத்தவரும், சடைகளையணிவதால் கம்பீரத்தோற்றமுடையவரும், அசையும் பாம்பை மாலையாயணிந்தவரும், மானைக் கையிலேந்தியவரும், தேவர்களில் சிறந்தவரும், ஸ்வயம் ப்ரகாசமானவரும், என்னிடம் கருணையுள்ள நோக்கமுடையவரும், ஜீவர்களுக்கு நாயகரும், அறிவிற்கு உறைவிடமானவரும், அம்பிகையுடன் கூடியவரும், நடிப்புத்திறமை மிகுந்தவருமான பரமசிவனை உள்ளத்தில் தியானிக்கின்றேன்

ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜக3தி விபு3தா4: க்ஷுத்3ர - ப2லதா3:
ந மன்யே ஸ்வப்னே வா தத3னுஸரணம் தத்க்ருதப2லம் ।
ஹரி - ப்3ரஹ்மாதீ3னாம்பி நிகடபா4ஜா - மஸுலப4ம்
சிரம் யாசே சம்போ4 சிவ தவ பதா3ம்போ4ஜ - ப4ஜனம் ॥ 4

உலகில் அல்ப பயனைக் கொடுக்கும் தேவர்கள் ஆயிரக் கணக்காக இருகின்றனர். கனவிலும் அவர்களை வழிபடுவதையும், அதனால் ஏற்படும் பயனையும் நான் கருதமாட்டேன். சம்போ! அருகிலிருந்த போதிலும் விஷ்ணு, ப்ரும்மா முதலானவர்களுக்கும் அடைதற்கரிதான உன் திருவடித் தாமரையைத் தொழுவதையே என்றும் வேண்டுகிறேன்.

ஸ்ம்ருதௌ சாஸ்த்ரே வைத்3யே சகுன-கவிதா-கா3ன பணிதௌ
புராணே மந்த்ரே வா ஸ்துதி - நடன ஹாஸ்யேஷ்-வசதுர: ।
கதம் ராஜ்ஞாம் ப்ரீதிர் ப4வதி மயி கோऽஹம் பசுபதே
பசும் மாம் ஸர்வஜ்ஞ ப்ரதி2த க்ருபயா பாலய விபோ4 ॥ 5

அறநூல்களிலும், சாஸ்திரங்களிலும், வைத்யத்திலும், சகுணம், கவித்வம், ஸங்கீதம் முதலியனவற்றால் பிறரைக் களிக்கச் செய்வதிலும், புராணத்திலும், மந்த்ர ப்ரயோகத்திலும், புகழ்தல், நடித்தல், வேடிக்கையாகப் பேசுதல் போன்ற வற்றில் யான் திறமையற்றவன். ஆகையால் அரசர்களுக்கு என்னிடம் ப்ரீதி எங்ஙனமுண்டாகும்? எல்லாம் அறிந்த பசுபதியே! நான் எதைச் சேர்ந்தவன்! ஒன்றும் அறியாத என்னை கருணைகொண்டு காப்பாற்றும், எங்கும் நிறைந்த விடிவே !

க4டோ வா ம்ருத் - பிண்டோ3ப்யணுரபி ச தூ4மோऽக்னி-ரசல:
படோ வா தந்துர்வா பரிஹரதி கிம் கோ4ர சமனம் ।
வ்ருதா கண்டக்ஷோப4ம் வஹஸி தரஸா தர்க்கவசஸா
பதா3ம்போ4ஜம் சம்போ4ர் - ப4ஜ பரம-ஸௌக்2கியம் வ்ரஜஸுதீ4 ॥ 6

அறிஞர் உலகே! குடம் - மண்கட்டி. அணு, புகை-நெருப்பு-மலை, துணி, நூல் என்று காரணகாரிய நியாயங்களை விவாதிக்கும் வீணான தர்க்க சாஸ்திரச் சொற்களால் தொண்டை வரட்சியை ஏற்கிறாய். இவை கொடிய யமனை விலகச் செய்யுமா? ஆகவே, பரமசிவனது திருவடியைத் தியானம் செய்து பேரின்பத்தைப் பெறுவாயாக.

மனஸ்தே பாதா3ப்3ஜே நிவஸது வச: ஸ்தோத்ர-ப2ணிதௌ
கரௌ சாப்4யர்ச்சாயாம் ச்ருதிரபி கதா2-கர்ணன-விதௌ4 ।
த்வ த்4யானே பு3த்3திர் - நயனயுக3ளம் மூர்த்தி-விபவே
பரக்3ரந்தா2ன் கைர்வா பரமசிவ ஜானே பரமத: ॥ 7

பரமேச்வரா ! எனது மனம் நினது திருவடியிலும் வாக்கு உன் புகழைப் பாடுவதிலும், இருகைகளும் உன் பூஜையிலும், செவி உன் சரிதத்தைக் கேட்பதிலும், புத்தியானது உன் தியானத்திலும், இரு கண்களும் உன் திருமேனியின் அழகிலும் நிலைபெறட்டும். அதன் பிறகு எவைகளால் வேறு நூல்களை யான் அறியக்கூடும்? (எல்லா இந்திரியங்களையும் உன் பாற்படுத்திய பின் எப்படி வீணாக நூல்களைப் படிக்க முடியும்?)

யதா² பு³த்³தி⁴: சுக்தௌ ரஜத - மிதி காசாச்மனி மணிர் -
ஜலே பைஷ்டே க்ஷீரம் ப⁴வதி ம்ருக³த்ருஷ்ணாஸு ஸலிலம் ।
ததா² தே³வ - ப்ராந்த்யா ப⁴ஜதி ப⁴வத²ன்யம் ஜடஜனோ
மஹா - தே³வேசம் த்வாம் மனஸி ச ந மத்வா பசுபதே ॥ 8

பசுபதியே ! எப்படி சிப்பியில் வெள்ளியும், காசக் கல்லில் இரத்தினமும், மாவு கரைத்த நீரில் பாலும், கானலில் நீரும் (பிரமையான) எண்ணத்தில் உண்டாகிறதோ, அப்படியே அறிவற்ற மனிதன் பிரமையால் (மற்ற தேவர்களைப் பரமேச்வரன் என்று எண்ணி) தேவர்களுக்கும் ஈசனான உன்னை நினையாது மற்ற தெய்வத்தை சேவிக்கிறான்.

கபீ⁴ரே காஸாரே விசதி விஜனே கோ⁴ரவிபினே
விசாலே சைலே ச ப்⁴ரமதி குஸுமார்த்த²ம் ஜட³மதி: ।
ஸமர்ப்யைகம் சேதஸ்ஸரஸிஜ - முமாநாத² ப⁴வதே
ஸுகே²னாவஸ்துதா²தும் ஜன இஹ ந ஜானாதி கிமஹோ ॥ 9

உன் பூஜைக்காக புஷ்பத்தை நாடும் அறிவிலி, ஆழமான மடுவிலும், ஜன நடமாட்டமில்லாத காட்டிலும், பரந்த மலையிலும் புகுந்து அலைகிறான். உமா தேவியின் நாதனே! தனது மனமாகிய ஒரு தாமரைப்பூவை அன்புடன் உனக்கு அளித்து இனிது நிலையாக இருக்க இவ்வுலகில் மனிதன் ஏனோ அறியாமலிருக்கிறான்! அந்தோ!

நரத்வம் தே³வத்வம் நக³ - வன - ம்ருக³த்வம் மசகதா
பசுத்வம் கீடத்வம் ப⁴வது விஹக³த்வாதி - ஜனனம் ।
ஸதா² த்வத்பாதா³ப்ஜ - ஸ்மரண - பரமானந்த³ லஹரீ
விஹாராஸக்தம் சேத்³ த்⁴ருத³ய - மிஹ கிம் தேன வபுஷா ॥ 10

மானிடத்தன்மை, தேவத்தன்மை, மலை, காடுதனில் வாழும் மிருகத்தன்மை, கொசுத்தன்மை, பசுத்தன்மை, புழுத்தன்மை, பறவைத்தன்மை, இவைகளில் எதுவானாலும் (அது எனக்கு) ஏற்படட்டும். (எப்படிப்பட்ட பிறப்பாகிலும்) இடைவிடாது உனது திருவடித் தாமரையின் நினைவாகிய சிறத ஆனந்தப்பெருக்கில் விளையாடுவதில் (என்) உள்ளம் ஈடுபடுமானால், எவ்வுடலையடைந்தாலும் என்ன குறை?

வடுர்வா கே3ஹீ வா யதிரபி ஜடீவா ததி3தரோ
நரோ வா ய : கச்சித் ப4வது ப4வ கிம் தேந ப4வதி ।
யதீ3யம் ஹ்ருத்பத்3மம் யதி3 ப4வத3தீ4னம் பசுபதே
ததீ3யஸ் - த்தம் சம்போ4 ப4வஸி ப4வபா4ரம் ச வஹஸி ॥ 11

ப்ரும்மசாரியாகவோ, க்ருஹஸ்தனாகவோ, வானப்ரஸ்தனாகவோ, அதிவர்ணாச்சிரமியாகவோ, ஸந்நியாஸியாகவோ, இவையற்றவராகவோ மனிதனிருக்கட்டும். அதனால் என்ன நேரிடும்? மங்களமான பசுபதியே! (எந்த ஆச்ரமத்திலிருப்பவனாயினும்) எவனது உள்ளமாகிய கமலம் உமக்கு வயப்படுமோ, அவனுக்கு வசமாக நீ ஆகி விடுகிறாய். நன்மை பயக்கும் நீயே அவனது பிறவிச் சுமையைத் தாங்குகிறாய்.

கு3ஹாயாம் கே3ஹே வா ப3ஹிரபி வனே வா(அ)த்3ரிசிக2ரே
ஜலே வா வஹ்நௌ வா வஸ்து வஸதே: கிம் வத3 பலம்2 ।
ஸ்தா2 யஸ்யைவாந்த: கரண - மபி சம்போ4 தவ பதே3
ஸ்திதஞ்சேத்3 யோகோ3 (அ) ஸௌ ஸ ச பரமயோகி3 ஸ ச ஸுகீ2 ॥ 12

ஒருவன் குகையிலோ, வீட்டிலோ, வெளியிலோ, காட்டிலோ, மலை உச்சியிலோ, நீரிலோ, தீயிலோ வசிக்கட்டும். ஆங்காங்கே வசித்ததால் யாது பயன்? சொல், சம்புவே! எவனது உள்ளம் எப்பொழுதும் உனது சரணங்களில் நிலை பெறுமோ அவனே மேலான யோகி; அவனே பேரின்பம் காண்பவன்.

அஸாரே ஸம்ஸாரே நிஜப4ஜன - தூ3ரே ஜட3 தி4யா
ப்ர4மந்தம் மாமந்த4ம் பரமக்ருபயா பாது - முசிதம் ।
மத3ன்ய : கோ தீ3னஸ் - தவ க்ருபண - ரக்ஷாதிநிபுணஸ் -
த்வத3ன்ய: கோ வா மே த்ரிஜக3தி சரண்ய: பசுபதே ॥ 13

பசுபதியே! பயனற்றதும், ஆத்ம தியானத்திற்குப் புறம்பானதுமான பிறவிச் சுழலில் அறிவிழந்து அலைந்துவரும் குருடனாகிய என்னை, மிகுந்த கருணை கொண்டு காப்பது உனக்கு ஏற்றது! உனது கருணையைக் காட்ட என்னைவிட எளியவன் யாருள்ளான்? எளியோர்களைக் காப்பதில் நிபுணனான உன்னைக்காட்டிலும் அடைக்கலத்திடமாக (த்தான்) வேறு யார் எனக்கு மூவுலகிலும் உளர்?

ப்ரபு4 ஸ்த்வம் தீ3னானாம் க2லு பரமப3ந்து4: பசுபதே
ப்ரமுக்2யோ (அ)ஹம் தேஷாமபி கிமுத ப3ந்து4த்வமனயோ: ।
த்வயைவ க்ஷந்தவ்யா: சிவ மத3பராதா4ச்ச ஸகலா:
ப்ரயத்னாத் கர்த்தவ்யம் மத3வன - மியம் ப3ந்து4ஸரணி: ॥ 14

பசுபதியே ! எல்லாம் வல்லவனான நீ ஏழைப்பங்காளன். அவ்வேழைகளுள் யான் முதல்வன். நம்மிருவருக்கும் உள்ள உறவைப்பற்றிக் கூறத்தேவையில்லை.

எனது குற்றங்கள் அனைத்தையும் மன்னித்து எவ்விதத்திலும் என்னைக் காப்பதே சாலச் சிறந்தது. இது தான் உறவினர்களின் மரபு.

உபேக்ஷா நோ சேத் கிந் ந ஹரஸி ப4வத்3த்4யான விமுகா2ம்
து3ராசாபூ4யிஷ்டா2ம் விதி4லிபி - மசக்தோ யதி3 ப4வான் ।
சிரஸ்தத்3வைதா4த்ரம் ந நக2லு ஸுவ்ருத்தம் பசுபதே
கத2ம் வா நிர்யத்னம் கர - நக2 - முகே2னைவ லுலிதம் ॥ 15

பசுபதியே ! உனக்கு என்னிடத்தே வெறுப்புணர்ச்சி இல்லையானால், பேராசை நிரம்பி, உனது நினைவில் ஈடுபடாத எனது தலை எழுத்தை ஏன் மாற்றவில்லை? அப்படி நீ (பிரம்மா எழுதியதை மாற்றும்) திறமையற்றவனாயின் கை நகத்தைக்கொண்டே சிரமமின்றி பிரும்மாவினுடைய அந்தக் கெட்டியான தலை உன்னால் எங்ஙனம் கிள்ளி அகற்றப்பட்டது? (பிரம்மாவின் ஐந்து முகங்களில் ஒன்றைக் கொய்தவர் பரமேசுவரனே.)

விரிஞ்சிர் - தீ3ர்கா4யுர் - ப4வது ப4வதா தத்பரசிரச்-
சதுஷ்கம் ஸம்ரக்ஷ்யம் ஸ க2லு பு4வி தை3ன்யம் லிகி2தவான் ।
விசார: கோ வா மாம் விசத க்ருபயா பாதி சிவ தே
கடாக்ஷ - வ்யாபார: ஸ்வயமபி ச தீ3னாவனபர: ॥ 16

பிரும்மா நீண்ட ஆயுள் உள்ளவராயிருக்கட்டும்! அவரது மிஞ்சியுள்ள நான்கு தலைகளையும் நீங்கள் ரக்ஷியுங்கள். இப்புவியில் அவரல்லவா இந்த தீனத்தன்மையை என் தலையில் எழுதினார். இதற்காக என்ன கவலை? மாசற்ற மங்களவடிவினனான உனது கடைக்கண் பார்வை இயற்கையான எளியோர்களை காக்க வல்லது. என்னையும் காப்பாற்றுகிறது. (பிரம்மா எனக்கு தீனத்தன்மையை விதித்ததால் தான், உனது தீனரக்ஷக ஆற்றலை அநுபவிக்க முடிகிறது. எனவே, அவரை எஞ்சிய நான்கு தலைகளோடு சிரஞ்ஜீவியாக விடுவாயாக!)

ப2லாத்3வா புண்யானாம் மயி கருணயா வா த்வயி விபோ4
ப்ரஸன்னேடபி ஸ்வாமின் ப4வத3 மல - பாதா3ப்3ஜ-யுக3ளம் ।
கத2ம் பச்யேயம் மாம் ஸ்த2க3யதி நமஸ்ஸம்ப்ர4ம-ஜுஷாம்
நிலிம்பானாம் ச்ரேணிர் - நிஜ - கனக - மாணிக்ய-மகுடை: ॥ 17

எங்கும் நிறைந்த இறைவனே! யான் செய்த நற் கர்மப்பயனாலோ, நினது கருணையாலோ என் முன்னே நீ தோன்றினாலும், நிர்மலமான உன் இணையடி கமலத்தை எப்படிக் காண்பேன்? உன்னை வணங்க ஆவல்கொண்ட தேவர்கள் முண்டியடித்து அவர்களது மாணிக்கமிழைத்த கிரீடங்கள் என்னை (என் பார்வையை)த் தடுக்கின்றனவே!

த்வமே கோ லோகானாம் பரமப2லதோ3 திவ்ய - பத3வீம்
வஹந்தஸ் - த்வன்மூலாம் புனரபி ப4ஜந்தே ஹரிமுகா2: |
கியத்4வா தா3க்ஷிண்யம் தவ சிவ மதா3சா2 ச கியதீ
கதா2 வா மத்3ரக்ஷாம் வஹஸி கருணா - பூரித-த்3ருசா || 18

சிவனே! நீர் ஒருவர்தான் மாந்தர்களுக்கு நற்பயனை யளிக்கவல்லவர். அங்ஙனம் நின் மூலம் உயர்பதவிகளைப் பெற்ற விஷ்ணு முதலானோரும் மேன் மேலும் உன்னையே சேவிக்கின்றனர். உனது கருணை எத்தகையது? எனது ஆசையும் எத்தகையது என்று உன் கருணை நிறைந்த பார்வையினால் என்னைக் காத்தருள்வாய்?

து3ராசா - பூ4யிஷ்டே து3ரதி4ய - க்3ருஹத்3 வார - க4டகே
து3ரந்தே ஸம்ஸாரே து3ரித - நிலயே து3: க2ஜனகே |
மதா3யாஸம் கிம் ந வ்யபநயஸி கஸ்யோபக்ருதயே
வதே3யம் ப்ரீதிச்சேத் தவ சிவ க்ருதார்த்தா2: க2லு வயம் || 19

என் தலையில் எழுதிய பிரம்மாவுக்கு உபகாரம் செய்யும் பொருட்டே கெட்ட ஆசைக்கிடமானதும், கெட்ட அதிகாரிகளின் வாயிலில் நிற்கச் செய்வதும், பாபத்திற்கிடமாகி கெட்ட முடிவையே அளிப்பதுமான இப்பிறவிச் சுழலில் நான் அலுப்புறுவதை அகற்றாதிருக்கிறாயா? இப்படி செய்வதால் உனக்குப் ப்ரீதி ஏற்படுமானால் அந்தப் ப்ரீதிக்கு காரணமாகி கடைத்தேறியவர்களாகிறோம்! இதில் ஐயமில்லை.

ஸதா3 மோஹாடவ்யாம் சரதி யுவதீனாம் குசகி3ரௌ
நடத்யாசா - சாகா2ஸ்வடதி ஜடி2தி ஸ்வைரமபி4த: |
கபாலின் பி4க்ஷோ மே ஹ்ருத3யகபி - மத்யந்த - சபலம்
த3ருட4ம் பக்4த்வா ப3த்3த்4யா சிவ ப4வத3தீ4னம் குரு விபோ4 || 20

சிவனே! எங்கும் நிறைந்தவனே! எனது மனமெனும் குரங்கு மயக்கமெனும் பெருங்காட்டில் இடைவிடாது அலைகிறது. பருவ நங்கைகளது நகில்களாகிய மலையில் நடனமாடுகிறது. துராசைகளாகிய கிளைகளில் வேகமாக தாவித் திரிகிறது. நீர் கபாலத்தை கையிலேந்தி பிச்சை எடுப்பவர். ஆகவே அங்கு மிங்கும் ஓடும் எனது மனதாகிய குரங்கை, உன்னிடம் உள்ள பக்தி என்னும் கயிற்றைக் கொண்டு உறுதியாகக்கட்டி உனக்குட்பட்டதாக செய்து கொள்வாயாக. (வெறுமே மண்டையோட்டை நீட்டி பிச்சைக் கேளாமல் என் மனக் குரங்கை ஆட்டும் குரங்காட்டியாக இருப்பாயாக!)

த்4ருதி - ஸ்தம்பா4தா4ராம் த்3ருட4கு3ண - நிப3த்3தா4ம் ஸக3மனாம்
விசித்ராம் பத்3மாட்4யாம் ப்ரதிதி3வஸ - ஸன்மார்க3 கடி4தாம் |
ஸ்மராரே மச்சேத : ஸ்பு2ட - பட - குடீம் ப்ராப்ய விசதா3ம்
ஜய ஸ்வாமின் சக்த்யா ஸஹ சிவகணை: ஸேவிதவிபோ || 21

காமனது பகைவனே! சிவகணங்களால் ஸேவிக்கப்பட்ட ஆண்டவனே! விச்வவியாபகனான விபுவே! எனது மனமாகிய கூடாரம், தைரியம் எனும் நடுத் தூணை ஆதாரமாகக் கொண்டது. அழுத்தமான முக்குணங்கள் என்னும் கயிற்றால், கட்டப்பட்டது. (குணம் என்றால் கயிறு என்றும் பொருள்படும்) இக்கூடாரம் விரும்பிய இடத்திற்கு எடுத்துச் செல்லக்கூடியது. இது பலவண்ணமானது. (பல வண்ணத் துணிகளால் கூடாரம் அமைப்பது போல் மனக் கூடாரத்தில் பல எண்ணங்கள் உள்ளன). தாமரை போன்ற வடிவம் கொண்டது. (இதயகமலம் குறிப்படிப்பெற்றுள்ளது) தினமும் நல்வழியில் சேர்க்கப்படுவது. நல்வழி என்பது கூடாரம் நல்ல சாலையில் இருப்பதையும், மனம் நல்ல நெறியில் இருப்பதையும் குறிப்பிடும். அழுக்கற்ற தன்மையால் அமைந்தது. இக் கூடாரத்தில் பராசக்தியுடன் வந்தமர்ந்து வெற்றியுடன் விளங்குவாயாக!

ப்ரலோபா4த்யை - ரர்த்தா2ஹரண - பரதந்த்ரோ த4னி-க்ருஹே
ப்ரவேசோத்3யுக்தஸ்ஸன் ப்ர4மதி ப3ஹுதா தஸ்கரபதே ।
இமம் சேதச்சோரம் கத2 - மிஹ ஸஹே சங்கர விபோ
தவாதீ4னம் க்ருத்வா மல நிரபராதே4 குரு க்ருபாம் ॥ 22

எங்கும் நிறைந்த விபுவும் மங்களத்தையளிக்கும் சங்கரனுமாகிய கள்வர் தலைவரே! பேராசை முதலான தீய குணங்களால் பிறர் பொருளை அபஹரிப்பதில் நோக்கங் கொண்டு பணக்காரர் வீட்டில் நுழைவதில் ஊக்கங்கொண்டு பலவகையில் திரிகின்றது. இந்த (என்) மனமாகிய திருடனை நான் எங்ஙனம் சகிப்பேன். (உள்ளங்கவர் மகா திருடன் உனக்குள்பட்டவனாக என்னை ஆக்கிக்கொண்டு குற்றமற்றவனான என் விஷயத்தில் அருள் கொள்வாயாக!)

கரோமி த்வத் - பூஜாம் ஸபதி3 ஸுக2தோ3 மே ப4வ விபோ4
விதி4த்வம் விஷ்ணுத்வம் தி3சஸி க2லு தஸயா: ப2லமிதி
புனச்ச த்வாம் த்3ரஷ்டும் தி3வி பு4வி வஹன் பக்ஷிம்ருகதா -
மத்3ருஷ்ட்வா தத்கே2 த3ம் கதமிஹ ஸஹே சங்கர விபோ4 ॥ 23

எங்குமிருந்து மங்களமளிப்பவனே! உனது பூஜையை நான் செய்ததும் எனக்கு பேரின்பத்தையே யளிக்காது ப்ரும்மப் பதவியையோ, விஷ்ணு பதவியையோ கொடுப்பாயானால் மீண்டும் உன்னைப் பார்ப்பதற்கு (பிரம்மாவைப்போல் அன்ன உருவமெடுத்து ஆகாயத்திலும் (விஷ்ணுவைப்போல்) வராஹ உருவத்தில் பூமியிலும் அலைந்து இறுதியில் உன்னைக் காணாது ஏற்படும் வருத்தத்தையே அடைவேன். இதனை எங்ஙனம் சகிப்பேன்.

கதா3 வா கைலாஸே கனகமணிஸௌதே4 ஸஹகணைர் -
வஸன் சம்போ4ரக்3 ரே ஸ்பு2ட - க4டித - மூர்தா4ஞ்ஜலிபுட : ।
விபோ4 ஸாம்ப3 ஸ்வாமின் பரமசிவ பாஹீதி நிக3த3ன்
விதா4த்ருணாம் கல்பான் க்ஷணமிவ விநேஷ்யாமி ஸுக2த: ॥ 24

எப்போது சிவகணங்களோடு சேர்ந்து யான் சிரமேல் கைகூப்பி, பொன்னும் இரத்தினமும் நிறைந்த வெள்ளி மலை தனில் இன்பத்திற்கு காரணமான கல்லானை முன்னே நின்று, ஜகன்மாதாவுடன் கூடி எங்கும் நிறைந்து விளங்கும் இறைவா! என்னைக் காத்தருள்வீராக எனச் சொல்லியவாறு ப்ரும்ம கல்பமான நீண்டகாலத்தையும் நொடிப்பொழுது போல கடத்துவேனோ!

ஸ்தவைர் - ப்3ரஹ்மாதீ3னாம் ஜயஜய - வசோபி4ர் - நியமினாம்
க3ணானாம் கேலீபி4ர் மத்3கல - மஹோக்ஷஸ்ய ககுதி3 ।
ஸ்தி2தம் நீலக்3ரீ வம் த்ரிணயன: முமாச்லிஷ்ட - வபுஷம்
கதா3 த்வாம் பச்யேயம் கரத்4ருத - ம்ருக2ம் க2ண்ட3பரசும் ॥ 25

ப்ரும்மா முதலானோர் துதிக்க, ரிஷிகள் ஜய சப்தம் கொண்டு முழங்க, ப்ரமதகணங்கள் விளையாட, கொழுத்து விளங்கும் பெரிய ரிஷபத்தின் திமில்மேல் உமையால் தழுவப்பட்ட உடலை உடையவனாக வீற்று, நீலகண்டனாய், முக்கண் படைத்து, கைகளில் மானையும், வெட்டுக் கோடரியையும் ஏந்தியவனாக விளங்கும் உன்னை காண்பேனோ!

கதா3 வா த்வாம் த்3ருஷ்ட்வா கி3ரிச தவ ப4வ்யாங்க்ரி4யுக3ளம்
க்3ருஹீத்வா ஹஸ்தாப்4யாம் சிரஸி நயனே வக்ஷஸி வஹன் ।
ஸமாச்லிஷ்யாக்4ராய ஸ்பு2ட - ஜலஜ - க3ந்தா4ன் பரிமலா -
னலப்4யாம் ப்3ரஹ்மாத்யைர் - முத2மனுப4விஷ்யாமி ஹ்ருத2யே ॥ 26

மலையிலறைபவனே! உன்னைக்கண்டு உனது திருவடிகளை இருகைகளாலும் பற்றி. சிரத்திலும், கண்ணிலும், மார்பிலும் அழுத்தி இறுகத் தழுவிக்கொண்டு, மலர்ந்த தாமரையினது போன்ற (அப்பாத) நறுமணத்தை முகர்ந்து ப்ரம்மா முதலான தேவர்களாலுமடையவியலாத மகிழ்ச்சியை (நான்) அடைவது எக் காலமோ!

கரஸ்தே2 ஹேமாத்3ரௌ கி3ரிச நிகடஸ்தே2 த4னபதௌ
க்3ருஹஸ்தே2 ஸ்வர்பூ4 ஜாமர - ஸுரபி - சிந்தாமணி க3ணே!
சிரஸ்தே2 சீதாம்சௌ சரணயுக3லஸ்தே2 (அ) கி2லசுபே4
கமர்த2ம் தா3ஸ்யே (அ)ஹம்ப4வது ப4வதர்த2ம் மம மன: ॥ 27

மலையிலுறைபவனே! உனது கையிலோ பொன்மலை; அருகிலிருப்பவனோ செல்வபதியான குபேரன்; (உன்) வீட்டிலோ கற்பக விருக்ஷம், காமதேனு சிந்தாமணிகள் உள்ளன. சிரத்திலே குளிர்ந்தவனான சந்திரன்; திருவடித்தாமரை களிலோ மங்களமனைத்துமுள்ளன. இப்படியிருக்க உன்னிடமில்லாத எப்பொருளை யளிப்பேன்? ஆகவே, என் மனத்தையே உனக்கு அர்ப்பணம் செய்ததாகட்டும்!

ஸாரூப்யம் தவ பூஜனே சிவ - மஹாதே3வேதி ஸங்கீர்தனே
ஸாமீப்யம் சிவ-ப4க்தி-து4ர்ய-ஜனதா-ஸாங்க3த்ய-ஸம்பா4ஷணே ।
ஸாலோக்யம் ச சராசராத்மக தனுத்4யானே ப4வானீபதே
ஸாயுஜ்யம் மம ஸித்3த4-மத்ரப4வதி ஸ்வாமின் க்ருதார்தோ2 (அ) ஸ்ம்ய ஹம் ॥ 28

பவானீபதியே! உனது பூஜையின் பயனாக ஸாரூப்யமெனும் (உன் உருவைப் பெறும்) முக்தியையும், "சிவ, மஹாதேவ" என்ற நாமங்களை ஸங்கீர்த்தனம் செய்வதன் பயனாக ஸாமீப்யம் (என்ற உன் அண்மையான முக்தி) என்பதையும், சிவபக்தியில் சிறந்து விளங்கும் பக்தர்களுடன் இணைந்து பேசுவதின் பயனாக ஸாலோக்யம் (என்ற உன் உலகில் வாழும் முக்தி) என்பதையும், சராசரப் பஞ்ச வடிவான உனது திருமேனியின் த்யானத்தின் பயனாக (உன் மயமாகவே ஆகும் முக்தியான) ஸாயுஜ்யத்தையும் இப்புவியிலே பெற்று அடைய வேண்டிய அனைத்தையும் அடைந்தவனாகிறேன்.

த்வத் பாதா3ம்பு3ஜ - மர்சயாமி பரமம் த்வாம் சிந்தயாம்யன்வஹம்
த்வாமீசம் சரணம் வ்ரஜாமி வசஸா த்வாமேவ யாசே விபோ4 ।
வீக்ஷாம் மே தி3ச சாக்ஷுஹீம் ஸகருணாம் தி3வ்யைஸ்சிரம் ப்ரார்தி2தாம்
சம்போ4லோககு3ரோ மதீ3ய-மனஸஸ்-ஸௌக்2யோபதேச3ம் குரு ॥ 29

எங்கும் நிறைந்தவனே! சம்புவே! உனது திருவடிக் கமலத்தைப் பூஜிக்கிறேன். சிறந்து விளங்கும் உன்னையே இடைவிடாது தியானிக்கிறேன். ஈசனை உன்னை அடைக்கலம் புகுகின்றேன். உன்னையே வாக்கினால் வேண்டுகிறேன். விண்ணுலகவாசிகளாலும் வேண்டப்படுகிற கருணாகடாக்ஷத்தை (சாக்ஷுஷீ தீக்ஷையை) எனக்கு அளித்து, என் மனத்திற்கும் பூரண உபதேசத்தை அருள்வாய், ஹே ஜகத்குருவே!

வஸ்த்ரோத்3 தூ4த-விதௌ4 ஸஹஸ்ரகரதா புஷ்பார்சனே விஷ்ணுதா
க3ந்தே க3ந்த4 வஹாத்மதா (அ)ன்னபசனே ப3ர்ஹிர்முகா2த்4ய க்ஷதா।
பாத்ரே காஞ்சன-க3ர்ப4தாஸ்தி மயி சேத்3 பா3லேந்து3-சூடா3மணே
சுச்ரூஷாம் கரவாணி தே பசுபதே ஸ்வாமின் த்ரிலோகீ-கு3ரோ ॥ 30

இளம்பிறை சிரத்திலணிந்து, பசுவாம் உயிரனைத்துக்கும் அதிபதியாக இருந்து கொண்டு, மூவுலகங்களுக்கும் குருவாக உள்ள இறைவ! உனக்கு ஆடையுடுத்தி உபசரிக்க ஆயிரங்கரங் கொண்ட கதிரவன் தன்மையும், பூக்களைக் கொண்டு பூஜிக்க விஷ்ணுத்தன்மையும், கந்தம் பூசுவதற்கு வாஸனையை ஏற்றிச் செல்லும் வாயுத்தன்மையும், அன்னத்தை நிவேதனம் செய்ய அக்னிமுகங் கொண்ட தேவத்தன்மையும். பூஜைக்குரிய பாத்திரங்களமைக்க ஸ்ருஷ்டிகர்த்தா வான ஹிரண்யகர்ப்பரின் தன்மையும் என்னிடமிருக்குமானால் (அப்போதுதான்) உன்னுடைய வழிபாட்டை செவ்வனே செய்யக்கூடியவனாவேன்!

நாலம் வா பரமோபகாரக - மித3ம் த்வேகம் பசூனாம் பதே
பச்யன் குக்ஷிக3தான் சராசரக3ணான் பா3ஹ்ய ஸ்தி2தான் ரக்ஷிதும்।
ஸர்வாமர்த்ய - பலாயநௌஷத4 - மதிஜ்வாலாகரம் பீ4க4ரம்
நிக்ஷிப்தம் க3ரலம் க3லே ந கி3லிதம் நோத்3கீ3ர்ண-மேவ த்வயா ॥ 31

உயிரினத்தின் தலைவனே! உனது வயிற்றினுள் அடக்கமடைந்துள்ள அசையும் பொருள், அசையாப் பொருள்களையும், அங்ஙனமே வெளியிலுள்ளவை களையும் காப்பாற்றும் பொருட்டு, தீயைக் கக்குவதும், அச்சமளிப்பதும், தேவர்கள னைவரையும் ஓடச்செய்யும் மூலிகை போன்றதுமான விஷத்தை தனது கழுத்திலேயே (உள்ளே விழுங்காமலும், வெளியிலுமிழாமலும் வைத்துக்கொண்டு) உள்ளாயே ! இந்த ஒன்றே உனது பேருபகாரத்திற்கு (அத்தாக்ஷியாய்) போதாதா?

ஜ்வாலோக்3ர: ஸகலாமராதிப4யத: க்ஷவேல: கத2ம்வா த்வயா
த்3ருஷ்ட: கிம் ச4 கரே த்4ருத: கரதலே கிம் பக்வ - ஜம்பூ3 - ப2லம் ।
ஜிஹ்வாயாம் நிஹிதஸ்ச ஸித்3த4 கு4டிகா வா கண்ட2 தே3சே ப்4ருத :
கிம் தே நீலமணிர் - விபூ4ஷண - மயம் சம்போ4 மஹாத்மன்வத ॥ 32

கடும் ஜ்வாலையுடையதும், எல்லா தேவர்களுக்கும் மிகுந்த அச்சத்தைக் கொடுத்ததுமான விஷத்தை எப்படிக் கண்ணுற்றாய்? உள்ளங்கையில் எங்ஙனம் அதை வைத்துக்கொண்டாய்? அதென்ன பழுத்த நாவல் கனியா? நாக்கில் வைத்துக்கொண்டாயே, அதென்ன ஸித்த குளிகை மருந்தா? கழுத்தில் தரித் தாயே! அதென்ன நீலமணியாலான அணியா? மஹாத்மாவே, சம்புவே! விடை கூறுவாயாக!

நாலம் வா ஸக்ருதே3வ தே3வ ப4வதஸ் - ஸேவா நதிர் வா நுதி :
பூஜா வா ஸ்மரணம் கதா2 ச்ரவண - மப்யாலோகனம் மாத்3ருசாம்।
ஸ்வாமின்னஸ்தி2ர - தே3வதானு - ஸரணாயாஸேன கிம் லப்4யதே
கா வா முக்தி - ரித: குதோ ப4வதி சேத் கிம் ப்ரார்த்த2னீயம் ததா3 ॥ 33

தேவதேவா! ஸ்வாமியே! என் போன்றவர்கள் - கடைத்தேற உனது ஸேவையோ, நமஸ்காரமோ, துதியோ, பூசனையோ, தியானமோ, சரித்திரம் கேட்பதோ தரிசனமோ ஒரு தடவை செய்தாலும் போதாதா? நிலையற்ற தேவதை களை சிரமத்துடன் வழிபடும் பிரயாசை ஏன்? இதைவிட்டு முக்தி என்பது அவர்க ளிடம் வேண்டத்தக்கது யாதுள்ளது?

கிம் ப்3ரூமஸ் - தவ ஸாஹஸம் பசுபதே கஸ்யாஸ்தி சம்போ4 - ப4வத்3-
தை4ர்யஞ் சேத்3ருச - மாத்மன: ஸ்திதி - ரியம் சான்யை: கத2ம் லப்யதே ।
ப்ர4சயத் தே3வக3ணம் த்ரஸன் - முனிகணம் நச்யத் ப்ரபஞ்சம் லயம்
பச்யந் - நிர்ப4ய ஏக ஏவ விஹரத்யானந்த3 - ஸாந்த்3ரோ - ப4வான் ॥ 34

சம்போ! பசுபதியே! எக்காலத்தே தேவக்கூட்டம் தன் ஸ்தானத்தில் வந்து விழுமோ, முனிவர்கூட்டம் அச்சமுறுமோ, உலகமே அழியுமோ, அந்த (பிரளய)

காலத்தையும் நோக்குவதன்றி பயப்படாமல் தனித்திருந்து நீ ஆனந்த தாண்டவம் புரிகின்றாயே, உனது துணிவை என்னென்போம்? இத்தகைய தைர்யம் யாருக்கு இருக்கும்? இவ்வித ஆத்மநிலை மற்றவர்களால் எங்ஙனம் அடையக்கூடும்?

யோக3 க்ஷேம-து4ரந்த4ரஸ்ய ஸகல:ச்ரேய: ப்ரதோ3த்3 யோகி3னோ
த்3ருஷ்டாத்3ருஷ்ட-மதோபதே3சக்ருதினோ பா3ஹ்யாந்தர வ்யாபின: |
ஸர்வஜ்ஞஸ்ய த3யாகரஸ்ய ப4வத: கிம் வேதி3தவ்யம் மயா
சம்போ4 த்வம் பரமாந்த3ரங்க3 இதி மே சித்தே ஸ்மராம்-யன்வஹம் || 35

சம்போ! நீ அனைவரின் க்ஷேமலாபங்களைத் தாங்குபவன், சிறந்த நன்மைகளை அளிப்பதில் உறுதி கொண்டவன், இஹபரவிருப்பங்களையடையும் வழியை உபதேசிக்கும் குருவானவன், உள்ளும் புறமும் எங்கும் பரவி நிற்பவன், அனைத்தையுமறிகிறவன், கருணைகொண்டவன். அப்படியிருக்க நான் தெரிவிக்க வேண்டியது யாது? நீ என் மனத்துக்குள்ளேயே மிக அந்தரங்கமாக இருப்பவன் என தினமும் உள்ளத்தே நினைத்திருக்கிறேன்.

ப4க்தோ ப4க்திகு3ணாவ்ருதே முத3ம்ருதா பூர்ணே ப்ரஸன்னே மன:
கும்பே4 ஸாம்ப3 தவாங்கரி4-பல்லவயுக4ம் ஸம்ஸ்தா2ப்4ய ஸம்வித்ப2லம் |
ஸத்வம் மந்த்ர - முதீ3ரயந் - நிஜசரீராகா4ர - சுத்3தி4ம் வஹன்
புண்யாஹம் ப்ரகடீ - கரோமி ருசிரம் கல்யாண - மாபாத3யன் || 36

தேவியுடன் விளங்குபவனே! உயர்ந்த மங்களத்தைப் பெறுவதற்காக, எனது உடலாகிய வீட்டிற்குத் தூய்மையை விரும்பிச் செய்யப்படும் புண்யாஹ வாசனத்தை பக்தனான யான் வெளியிடுகிறேன். இதற்கு தெளிந்த மனமே குடம், (அது ஸூத்ரம் அணிவிக்கப்பெற்ற புண்யாஹவாசன பாத்திரம்போல்) பக்தியாகிய நூல் சுற்றப்பட்டது, சந்தோஷம் என்னும் நீர் நிரம்பியது. ஒளி பொருந்திய அக்குடத்தில் உனது திருவடிகளாகிய துளிர் இலைகளை (மாவிலை) வைத்து, ஞானம் என்ற தேங்காயை (அதன் மீது இட்டு) ஸத்வகுணத்தை வளரச் செய்யும் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபிக்கிறேன். (வேதமந்திரத்தாலேயே புண்யாஹவாசன தீர்த்தம் புனிதமாக்கப்படும்.)

ஆம்னாயாம்பு3 தி4-மாத3ரேண ஸுமனஸ் - ஸங்கா4ஸ் - ஸமுத்3ய3ன்மனோ -
மந்தா2னம் த்3ருட4 ப3க்தி - ரஜ்ஜு ஸஹிதம் க்ருத்வா மதி2த்வா தத: |
ஸோமம் கல்பதரும் ஸுபர்வ - ஸுரபி4ம் சிந்தாமணிம் தீ4மதாம்
நித்யானந்த3 - ஸுதா2ம் நிரந்தரரமா - ஸௌபா4க்3ய - மாதன்வதே || 37

பேருள்ளம் படைத்த பக்தர்கள், திடபக்தியென்ற கயிறுகொண்டு, நன்முயற்சி உள்ள மனமாகிய மத்தினால், வேதங்களென்னும் (பாற்) கடலை திட நம்பிக்கை வைத்துக் கடைந்து, அதினின்றும் உமையுடன் கூடியதால் ஸோமன் என்ற சந்திரன் பெயருடையவரும், வேண்டுவதையளிக்கும் கற்பகமாம் காமதேனு போன்றவரும், சிந்தாமணி என்னும் இரத்தினம் போன்றவரும், ஞானிகளுக்கு பேரானந்தமென்னும்

அமிருதமளிப்பவரும், நித்யமான மோக்ஷ லக்ஷ்மி என்னும் செல்வமாகிய பரமசிவத்தைப் பெறுகின்றனர். (சோமனான சந்திரன், கல்பக மரம், காமதேனு, சிந்தாமணி, அமிருதம், லக்ஷ்மி முதலியவை பாற்கடலினின்றே பிறந்தவை.)

ப்ராக் - புண்யாசல - மார்க3 த3ர்சித - ஸுதா4 மூர்த்தி: ப்ரஸன்ன: சிவ:
ஸோமஸ்ஸத்3 கு3ண - ஸேவிதோ ம்ருக3 தர4: பூர்ணஸ்தமோ- மோசக: |
சேத: புஷ்கர - லக்ஷிதோ ப4வதி சேதா3னந்த பாதோ2 - நிதி4:
ப்ராக3ல்ப்4யேன விஜ்ரும்ப4தே ஸுமனஸாம் வ்ருத்திஸ்-ததா3-ஜாயதே || 38

சிலேடை அணியில் - அமைந்த இப்பாடல் இருபொருள் கொண்டதாகும். ஒரு பொருள் சந்திரனை மையமாக வைத்ததாகும். மற்றது சிவனை மையமாகக் கொண்டது.

முதற் பொருள்:

கீழைத்திசையிலுள்ள புண்யபர்வதத்தின் வழியே காணப்படும் வெள்ளிமலை, மங்களமான அமுதம் நிறைந்த (களங்க உருவில் உள்ள) மானைத் தாங்குகிற சந்திரன் நக்ஷத்திரங்களோடு உதித்து இருளிலிருந்து முற்றிலும் விடுவித்து, ஒரு தெளிந்த தடாகத்தில் பிரதிபிம்பமிடும்போது ஆழமுற்ற கடலானது பொங்கி எழும்புகிறது. அப்போது தேவர்களுக்குத் தொழில் ஏற்படுகிறது. (சந்திரன் இல்லாத இருளில் அரக்கரே தொழிற்படுவர். நல்ல நிலவிருந்தால்தான் தேவர்கள் உலகில் வெளிவந்து செயலாற்ற முடியும்.)

இரண்டாவது பொருள்:

முன் புண்ணியத்தின் வழியாக தரிசிப்பிக்கப்பெறும் அமிருதமூர்த்தியான பிரஸன்ன பரமேச்வரன் உமையோடு கூடி, சந்திரன் கூட்டத்தால் ஸேவிக்கப் பட்டவனாக, மானேந்தித் (சிவனது ஒரு கரத்தில் மான் தரிக்கப்படுகிறது) தோன்றி தமோகுணத்தை முற்றிலும் நீக்கி (பக்தர்) மனத்துள்ளே லக்ஷ்யமாக உணரப்படுகையில் பிரம்மானந்தம் வெளிப்பொங்குகிறது. உயர் மனத்தோரின் இதயத்தில் அப்போது ஒரு (சிறிது) நிலையான பாவனை உண்டாகிறது.

த4ர்மோ மே சதுரங்க்4ரிகஸ்-ஸுசரித: பாபம் விநாசம் கத3ம்
காமக்ரோத4-மதா3த3யோ விக3லிதா: காலா: ஸுகா2-விஷ்க்ருதா: |
ஜ்ஞானானந்த3-மஹௌஷதி4: ஸுப2லிதா கைவல்யநாதே2 ஸதா3
மான்யே மானஸ புண்ட3ரீக-நக3ரே ராஜாவதம்ஸே ஸ்தி2தே || 39

மதியை முடியில் கொண்டு, எல்லோருடைய மரியாதைக்கு ஏற்றவனாகவும் மோக்ஷ நாயகனாகவும் உள்ளவன் (சிவன்) ஹ்ருதய புண்டரீகமெனும் இதயத் தாமரையாம் நகரத்தில் நிலையாக வீற்றிருப்பானாகில் அறம் நான்கு கால்களுள்ளதாக இருக்கும்*, பாபங்கள் அறவே நீங்கும், காமம், கோபம்

முதலானவை அழிந்துவிடும், எக்காலத்தும் இன்பம் செழிக்கும், ஞானானந்தமெனும் பயிர் நல்ல விளைச்சலையளிக்கும்.

[* கலியுகத்தில் அறம் எனும் பசு ஒரே காலில் நிற்பதாகப் புராணங்கள் கூறும்.]

தீ^{4}-யந்த்ரேண வசோக^{4}டேன கவிதா-குல்யோப-குல்யாக்ரமை-
ரானீதைச்ச ஸதா^{3} சிவஸ்ய சரிதாம்போ^{4}ராசி-தி^{3}வ்யாம்ருதை: |
ஹ்ருத்கேதா^{3}ரயுதாச்ச பக்தி-கலமா: ஸாப^{2}ல்ய-மாதன்வதே
துர்பி^{4}க்ஷான்-மம ஸேவகஸ்ய ப^{4}க^{3}வன் விச்வேச பீதி^{4}: குத: || 40

உலக நாதனான பரமேசா! எனது புத்தியாகிய இயந்திரத்தில் (கிணற்று நாட்டினத்தில்) வாக்காகிய ஏற்றச்சாலைச் சேர்த்து கவிதையாகிய வாய்க்கால், கிளைக்கால் வழியாக எடுத்து வரப்பட்ட ஸதாசிவனின் சரித்திரமாகிய தேவாமிருதத் தண்ணீரைக்கொண்டு ஹ்ருதயமாகிய கழனியில் உதிக்கும் பக்தியாகிய பயிரைப் பயனுள்ளதாகச் (நல்ல விளைச்சலுள்ளதாக) செய்வேனானால், (உனது) அடிமையான எனக்கு (ஆத்மீக) பஞ்சத்தாலுண்டாகும் பயம் எங்ஙனம் ஏற்படும்?

பாபோத்பாத - விமோசனாய ருசிரைச்வர்யாய ம்ருத்யுஞ்ஜய
ஸ்தோத்ர - த்^{4}யான-நதி ப்ரத^{3}க்ஷிண-ஸபர்யாலோகனாகர்ணனே |
ஜிஹ்வா - சித்த - சிரோங்க^{4}ரி-ஹஸ்த-நயன-ச்ரோத்ரை-ரஹம் ப்ரார்த்தி^{2}தோ
மாமாஜ்ஞாபய தந்நிருபய முஹுர்-மாமேவ மாமே(அ)வச: || 41

யமனையும் வென்றவனே! பாபத் துன்பத்தினின்று விடுபடுவதற்காகவும், பூரண சுதந்திரத்தைப் பெறவும் எனது நாக்கும், மனம், தலை, கால், கை, கண், காது என்னும் உறுப்புகளைக் கொண்டு, முறையே உமது துதி, நினைவு, வணங்குதல், வலம் வருதல், அர்ச்சிதல், தரிசனம், சிரவணம் (சிவபெருமானின் மகிமைகளைக் கேட்டல்) என்பவைகளைச் செய்யுமாறு மீண்டும் தினம் எனை அக்காரியங்களில் ஈடுபடச்செய்து, கட்டளை புரிவாயாக! வழி காட்டுவாயாக! என்னிடம் மௌனம் சாதிக்க வேண்டாம்.

கா^{3}ம்^{3}பீ^{3}ர்யம் பரிகா^{2}பத^{3}ம் க^{4}னத்^{4}ருதி: ப்ராகார உத்^{3}யத்^{3}-கு^{3}ண-
ஸ்தோமச்சாப்தப^{3}லம் க^{4}னேந்த்^{3}ரியசயோ த்^{3}வாராணி தே^{3}ஹே ஸ்தி^{2}த: |
வித்யா^{3}-வஸ்து-ஸம்ருத்^{3}தி^{4}ரித்-யகி^{2}ல-ஸாமக்^{3}ரீ ஸமேதே ஸதா^{3}
துர்கா^{3}தி ப்ரிய-தே^{3}வ மாமக-மனோ-து^{3}ர்க்கே^{3} நிவாஸம் குரு|| 42

கோட்டையினுள் வசிப்பதில் (அல்லது துர்க்காதேவியிடம்) பிரியமுள்ள கடவுளே; எனது மனமாகிய கோட்டை ஆழ்மையை அகழியாயுடையது. நல்ல உறுதியை மதிலாக உடையது. மேலான குணங்களை நட்புள்ள சேனையாயுடையது. ஞானமென்னும் பொருள் (செல்வம்) நிரம்பியது. இத்தகைய எல்லா அங்கங்களுடன் கூடிய இக்கோட்டையில் இடைவிடாது நீ தங்கி வசித்திடுவாய்!

மா க³ச்ச தவமிதஸ்ததோ கி³ரிச போ⁴ மய்யேவ வாஸம் குரு
ஸ்வாமின்-னாதி-கிராத-மாமகமன: காந்தார-ஸீமாந்தரே |
வர்த⁴ந்தே ப³ஹுசோ ம்ருகா³ மத³ ஜுஷோ மாத்ஸர்ய-மோஹாதயஸ்-
தான் ஹத்வா ம்ருக³ யா-விநோத³-ருசிதாலாப4ம்ச ஸம்ப்ராப் - ஸ்யஸி|| 43

மலையிலமர்ந்துள்ள ஆதிவேடனான தலைவனே! நீ இங்குமங்கும் வேட்டைக் காக அலைய வேண்டாம். எனது மனமாகிய அடர்ந்த காட்டிற்குள், பொறாமை, மதி மயக்கம் முதலான மதங்கொண்ட பற்பல வனவிலங்குகள் இருக்கின்றன. அவைகளை வேட்டையாடி விளையாட்டின் லாபத்தைப் பெறும் பொருட்டு என்னிடமே வசிப்பாயாக!

கரலக்³னம்ருக³: கரீந்த்ர³ - ப⁴ங்கோ³
க⁴னசார்தூ3ல-விக²ண்ட³னோ(அ)ஸ்த-ஜந்து: |
கி³ரிசோ விசதா³க்ருதிச்ச சேத: குஹரே
பஞ்சமுகோ²ஸ்தி மே குதோ பீ⁴: || 44

மானைப் பிடித்துக்கொண்டும், கஜா ஸுரனை வென்றும், கொடிய வ்யாக்ரா ஸுரனை பிளந்தும், பிராணிகளனைத்தையும் தன்னிடம் இறப்படையச் செய்தும், மலையிலுறைவதான, பளபளப்பான உருக்கொண்டு பரந்தமுகத்துடன் அல்லது ஐந்து முகத்துடன் கூடிய பரமேச்வரன் என்னும் சிங்கம் எனது மனமாகிய குஹையில் இருக்கிறான். எனக்கு பயமேது? (இது மான், யானை, புலி, மற்ற பிராணி வர்க்கங்களை அழிப்பதும், பரந்த முகம் கொண்டதுமான சிங்கத்திற்கும், மானைக் கையிலேந்தி, கஜாஸுரனையும், தாருகாவன ரிஷிகள் ஏவிய புலியையும் கொன்று, எல்லா உயிர்களையும் ஸம்ஹாரத்தில் தன்னிடம் ஒடுக்கிக்கொள்ளும் சிவனுக்கும் பொருந்துமாறு சிலேடையாயமைந்த சுலோகம். சிங்கமாகக் கொள்கையில் "பஞ்சாஸ்யம்" என்றால் 'பரந்தமுகமுடையது' என்று பொருள்; அதுவே சிவனாகக் கொள்கையில்'ஐந்து முகம்'கொண்டவன் எனப் பொருள்படும்).

ச²ந்த³: சாகி²- சிகா²ன்விதைர் - த்³விஜவரை: ஸம்ஸேவிதே சாச்வதே
ஸௌக்²யாபாதி³னி கே²த³ - பே²தி³னி ஸுதா⁴ஸாரை: ப³லைர் - தீ³பிதே |
சேத: புக்ஷிசிகா²மணே த்யஜ வ்ருதா² - ஸஞ்சார - மன்யை - ரலம்
நித்யம் சங்கர - பாத³ - பத்³ம - யுக³ளீ - நீடே³ விஹாரம் குரு || 45

மனமாகிய சிறந்த பறவையே! நீ வீணாக இங்குமங்கும் அலைவதைவிட்டு உனக்காக உள்ள கூட்டில் சுகமாக நிரந்தரமாக விளையாடு. அக்கூடு வேதங்க ளாகிய மரக்கிளையின் உச்சியில் (உபநிஷத்தில்) உள்ளது. இருபிறப்பாளர்களாகிய பறவைகளால் நாடப்பெற்றது. துன்பத்தைப் போக்கி இன்பத்தையளிக்க வல்லது. அமிருதத்திற்கு நிகரான பழங்களால் நிரம்பியது. (அதாவது அமர நிலையைப் பயனாக அளிப்பது.) அதுதான் பரமசிவனது திருவடித்தாமரைகளாகிய கூடு. (சாகை என்பது மரக்கிளை, வேதசாகை இரண்டுக்கும்; த்விஜ என்பது பக்ஷி, இருபிறப்பாளர் இரண்டுக்கும் சிலேடையாகக் கூறப்பட்டுள்ளது.)

ஆகீர்ணே நக2ராஜி - காந்தி - விப4வை - ருத்3யத்ஸுதா4 - வைபவை -
ராதௌ4தேபி ச பத்3மராக3 - லலிதே ஹம்ஸ - வ்ரஜை - ராச்ரிதே ।
நித்யம் ப4க்தி - வதூ4க3ணைச்ச ரஹஸி ஸ்வேச்சா2 - விஹாரம் குரு
ஸ்தி2த்வா மானஸ-ராஜஹம்ஸ கி3ரிஜா - நாதாங்க்4ரி - ஸௌதா4ந்தரே॥ 46

மனமாகிய ராஜஹம்ஸமே! நீ நகங்களினின்று வீசும் ஒளியால் தீபம் உள்ளதும், சந்திரகலையினால் வெள்ளையடிக்கப்பட்ட தான பத்மராகக்கற்கள் இழைத்தாற் போன்று சிவந்து காணப்படுவதும், பரமஹம்ஸர்கள் என்னும் சிறந்த அன்னப்பறவைகள் நிரம்பியதுமான மலை மகளின் நாதரது திருவடிகளாகிய மாளிகையில் பக்தி எனும் மனைவியாருடன் சாச்வதமாக தன்னிச்சைப்படி கூடிக் குலாவுவாயாக.

சம்பு4த்4யான - வஸந்த - ஸங்கி3னி ஹ்ருதா3ராமே (அ)க4 ஜீர்ணச்ச2தா:
ஸ்ரஸ்தா ப4க்திலதாச்ச2டா - விலஸிதா: புண்யப்ரவால - ச்ரிதா: ।
தீ3ப்யந்தே கு3ணகோரகா ஜபவச: - புஷ்பாணி ஸத்3வாஸனா
ஜ்ஞானானந்த3- ஸுதா4- மரந்த3 - லஹரீ ஸம்வித்ப2லா(அ)ப்-யுந்நதி: ॥ 47

நமது மனமாகிய பூந்தோட்டத்தில் சிவனது தியானமெனும் வஸந்த பருவம் நேரிடுகையில் பாபமெனும் பழுத்த இலைகள் உதிர்ந்துவிடும். பக்தியெனும் கொடிக்கூட்டங்கள் சிறந்து பிரகாசிக்கும். புண்ணியமென்னும் தளிர்கள் தோன்றும். நற்குணமென்னும் அரும்புகள் கட்டும். ஜப மந்திரங்களாகிய பூக்களும் மலரும், நறுமணம் வீசும். (நற்கர்ம புண்ய வாஸனை கூடும்.) ஞானானந்தமென்னும் அமுதம் போன்ற தேன் பெருகும். ஞானானுபவமாகிய சிறந்த பழங்கள் விருத்தியாகும்.

நித்யானந்த3-ரஸாலயம் ஸுரமுனிஸ்வாந்தாம்பு3-ஜாதாச்ரயம்
ஸ்வச்ச2ம்-ஸத்3-த்3விஜஸேவிதம் கலுஷ-ஹ்ருத்-ஸத்3 வாஸனா-விஷ்க்ருதம் ।
சம்பு4த்4யான-ஸரோவரம் வ்ரஜ மனோ-ஹம்ஸாவதம்ஸ ஸ்தி2ரம்
கிம் க்ஷத்3ராச்ரய-பல்வல-ப்4ரமண-ஸஞ்ஜாத-ச்ரமம் ப்ராப்ஸ்யஸி ॥ 48

மனமென்னும் சிறந்த அன்னமே! ஏன் சிறியோரை அடுத்து நின்று, சேற்றுக் குட்டையில் உழன்று வீணாகக் கஷ்டப்படுகிறாய்? அழிவற்றதான ஆனந்தமென்னும் நீர் நிரம்பியதும், தேவ ரிஷிகளின் இதயமாகிய தாமரையுள்ளதும், தெளிந்த ஸாதுக்களாகிய பக்ஷிகளினால் நாடப்படுவதும், பாபமென்ற மாசையகற்றி புண்ணியமெனும் நறுமணத்தை வெளிப்படுத்துவதுமான சிவத்யானம் என்ற மேலான நீர்நிலயத்தை நிலையான இடமாக அடைவாயாக.

ஆனந்தா3ம்ருத-பூரிதா ஹரபதா3ம்போ4ஜாலவாலோத்3யதா
ஸ்தை2ர்யோபக்4ன-முபேத்ய ப4க்திலதிகா சாகோ2பசாகான் விதா ।
உச்சை2ர்-மானஸ-காயமானபடலீ-மாக்ரம்ய நிஷ்கல்மஷா
நித்யாபீ4ஷ்ட-ப2லப்ரதா3ப4வது மே ஸத்கர்ம-ஸம்வர்தி4தா ॥ 49

சிவனது ஆனந்தமாகிய அமுத நீரால் வளர்க்கப்பட்டு. பாதபத்மமாகிய பாத்தியில் முளைத்து, திடச்சித்தமெனும் கொழுகொம்பைப் பற்றிக்கொண்டு, பெருங்கிளை, சிறுகிளைகளோடு கூடி, சிறந்தவர்களின் மனமெனும் பந்தலில் படர்ந்து, பூச்சியென்ற குற்றமற்று, நற்செய்கைகளால் நன்கு வளர்க்கப்பட்ட பக்தியெனும் கொடி எனக்கு நிலையான முக்தியென்ற விரும்பத்தக்க பழத்தை யளிப்பதாக ஆகட்டும்.

ஸந்த்4யாரம்ப4-விஜ்ரும்பி4தம் ச்ருதிசிரஸ்தா2னாந்த-ராதி4ஷ்டிதம்
ஸப்ரேம-ப்4ரமராபி4ராம-மஸக்ருத் ஸத்3வாஸனா-சோபி4தம் ।
போ4கீ3ந்த்5ராப4ரணம் ஸமஸ்த-ஸுமன: பூஜ்யம் கு3ணாவிஷ்க்ருதம்
ஸேவே ஶ்ரீகி3ரி-மல்லிகார்ஜுன-மஹாலிங்க3ம் சிவாலிங்கி3தம் ॥ 50

(இங்கே மல்லிகார்ஜுன மஹாலிங்கேச்வரருக்கும், மல்லிகைக் கொடி படர்ந்த (மருத) மரத்திற்கும் சிலேடை உள்ளது. கொடி போன்ற தேவியால் தழுவப்படும் ஸ்தாணுவான (படடகட்டை போன்ற) ஈச்வரன் மல்லிகைக்கொடி போன்ற மருதமரத்துக்கு ஒப்பாகிறான்.)

மருதமரம் கொள்கையில் இதன் பொருள் வருமாறு:

ஶ்ரீசைலத்தில் பெரியதும், அடையாளமாக உள்ளதும், மங்களமான (கொடியால்) தழுவப்பட்டதும், மாலைத் தொடக்கத்தே மலர்வதும், காதின் மேலும் தலையிலும் அணியக்கூடிய பூவை உடையதும், தேன் வண்டுகள் அன்போடு சூழ அழகுற்று விளங்குவதும், நல்ல வா ஸனையினால் சோபிப்பதும், போகத்தை விரும்பு வோருக்கு அலங்காரப் பொருள்களைத் தருவதும், எல்லாப் புட்ப மரங்களிலும் மேன்மை பெற்றதும், உயர்ந்த தரமுள்ளதுமான மல்லிகையோடு கூடிய மருதத்தைப் பெற்றிருக்கிறது.

சிவபெருமானுக்குரிய கொள்கையில் இதன் பொருள்:

மாலையின் தொடக்கத்தில் நடனத்தால் களிப்புற்றவரும், வேதமுடியாகிய உபநிடதங்களில் நிலையாகத் தோன்றுபவரும், அன்புகொண்ட ப்ரமராம்பிகையுடன் விளங்குகிறவரும், எப்பொழுதும் சாதுக்களது பக்தி மணம் கமழ்பவரும், சிறந்த பாம்புகளை அணியாக அணிந்தவரும், தேவர்களனைவராலும் பூஜிக்கப்பட்டவரும், நற்குணங்களை வெளியிடுபவரும், பராசக்தியால் தழுவப்பட்டவரு மான ஶ்ரீ சைலத்தின்மேல் விளங்கும் மல்லிகார்ஜுனர் என்ற மஹாலிங்க மூர்த்தியை இடைவிடாது ஸேவிக்கிறேன்.

ப்4ருங்கீ3ச்சா-நடனோத்கட: கரிமத3க்3ராஹீ ஸ்பு2ரன் மாத4வா-
ஹ்லாதோ3 நாத3யுதோ மஹாஹிதவபு: பஞ்சேஷுணா சாத்3ருத: ।
ஸத்பக்ஷஸ்-ஸுமனோவனேஷு ஸ புன: ஸாக்ஷான்மதீ3யே மனோ
ராஜீவே ப்ர4மராதிபோ4 விஹரதாம் ஶ்ரீசைலவாஸீ விபு4: ॥ 51

ப்ருங்கி எனும் ரிஷியினது விருப்பத்தை நிறைவேற்ற நடனத்தை மேற்கொண்டவரும், கஜாஸுரனது மதத்தை ஒடுக்கியவரும், மோஹினி உருவெடுத்த விஷ்ணுவின் வடிவத்தில் மகிழ்ச்சியடைந்தவரும், ப்ரணவ ரூபியும், மிகவும் வெளுத்து விளங்கும் சரீரமுடையவரும், மன்மதனது பாணங்களுக்கு இலக்கானவரும், விண்ணோர்களைக் காக்க ஆவலுள்ளவரும், எங்கும் நிறைந்தவரும், ஸ்ரீசைலத்தில் ப்ரமராம்பிகையைத் துணைவியாகக் கொண்டு கோயில் கொண்டிருப்பவருமான மல்லிகார்ஜுனர் பிரத்யக்ஷமாக எனது மனதாகிய தாமரையில் விளையாடட்டும்.

இதற்குச் சிலேடையாக இன்னொரு பொருள்:

பெண்வண்டின் இச்சைக்கேற்பச் சுற்றுவதில் விருப்பமுள்ளது, யானையின் மதநீரைப் பருகுவதும், பிரகாசிக்கும் வஸந்த ரிதுவில் மகிழ்வதும், ரீங்காரத்துடன் கூடியது, மிகக் கரிய உடலுடையதும், மன்மதனால் (அவனது க்ரும்பு வில்லுக்கு நானாக ஆதரிக்கப்பட்டதும், பூந்தோட்டங்களில் மிக்க ஆசைகொண்டதும், அழகு நிறைந்த மலையில் வசிப்பதும், எங்கு செல்கிறதுமாகிய இந்த அரச வண்டு மீளமீள நேரக என் மனத்தாமையின் விளையாடுமாக!

காருண்யாம்ருத-வர்ஷிணம் க4ன விபத்2-க்3ரீஷ்மச்சி2தா3-கர்மட2ம்
வித்3யா-ஸஸ்ய-ப2லோத3யாய ஸுமனஸ்ஸம்ஸேவ்ய-மிச்சா2-க்ருதிம் ।
ந்ருத்யத்ப4க்த-மயூர-மத்3ரி-நிலயம் சஞ்சஜ்ஜடா-மண்ட3லம்
சம்போ4 வாஞ்ச2தி நீலகந்த4ர ஸதா3 தவாம் மே மனச்சாதக: ॥ 52

நீலகண்டரே! நீங்கள் கருணை யென்ற அமுதத்தைப் பொழிபவர்; தாபங்களாகிய கோடையில் பக்தர்களைக் குளிர வைப்பவர்; வித்தையென்னும் பயிர்களின் விளைச்சலையளிக்கும் பொருட்டுத் தூய்மையுள்ளத்தவர்களால் போற்றப் படுபவர்; விரும்பிய உருவமெடுப்பவர்; ஆனந்தநடனம் புரியும் பக்தர்களாகிய மயில்களை உடையவர்; மலையில் வசிப்பவர்; அசைந்தாடும் சடைகளாகிற மின்னலை உடையவர். உங்களை எனது மனதாகிய சாதகப்பறவை இடைவிடாது காண ஆவலுடன் விரும்பி நிற்கிறது. (இங்கே சிவபெருமான் மேகக்தோடு உவமிக்கப்படுகிறார்.)

ஆகாசேன சிகீ2 ஸமஸ்த-ப2ணினாம் நேத்ரா கலாபீ நதா
(அ)னுக்2ராஹி-ப்ரணவோபதே3ச-நினதை3-கேகீதி யோ கீ3யதே ।
ச்யாமாம் சைலஸமுத்2ப4வாம் க4னருசிம் த்3ருஷ்ட்வா நடந்தம் முதா3
வேதா3ந்தோபவனே விஹார-ரஸிகம் தம் நீலகண்டம் ப4ஜே ॥ 53

கருத்த கழுத்தையுடைய மயில்போன்ற நீலகண்டனை சரணமடைகிறேன். (நீலகண்ட என்பது மயிலுக்கும் பெயராகும்; ஆதலால் நெஞ்சரான சிவனுக்கும் பெயராகும்.) இம்மயிலுக்கு ஆகாயமே கொண்டை; பாம்புத்தலைவனான ஆதிஷேன் கண்ணுள்ல தோகை; தன்னை அடைக்கலம் புகுந்தவர்களுக்குச் செய்யும் ப்ரணவ உபதேசமே “கேகா” என்னும் மயிலின் குரல் ஒலி. மலைமகள் என்னும்

மேகத்தைக்கண்டு மகிழ்ச்சிக்கொண்டு நடனம்புரிந்து, வேதாந்தமென்ற தோட்டத்தில் ரசித்து விளையாடுவது இம்மயில்.

ஸந்த்4யா-க4ர்ம-தி3னாத்யயோ ஹரிகராகா4த-ப்ரபூ4 தானக
த்4வானோ வாரித3 க3ர்ஜிதம் தி3விஷதாம்3 த்3ருஷ்டிச் ச3டா சஞ்சலா ।
ப4க்தானாம் பரிதோஷ-பா3ஷ்ப3-விததிர்-வ்ருஷ்டிர்-மயூரீ சிவா
யஸ்மின்னுஜ்வல-தாண்ட3வம் விஜயதே தம் நீலகண்ட2ம் பஜே ॥ 54

இந்த சிவன் என்ற மயில், மாலை நேரத்தை மாரிக்காலமாகவும், மஹாவிஷ்ணுவின் மிருதங்க ஒலியை மேகத்தின் கர்ஜனையாகவும், தேவர்களது கண்ணோக்குகளை மின்னலாகவும், அடியார்களது ஆனந்தக்கண்ணீரை மழையாகவும், பார்வதியை பெண்மயிலாகவும் கொண்டு பிரகாசமாகத் தாண்டவமாடி மகிழ்கிறது. இப்படிப்பட்ட நீலகண்டமயிலை நான் ஸேவிக்கிறேன்.

ஆத்3யாயாமித-தேஜஸே ச்ருதிபதை3ர்-வேத்3யாய ஸாத்3யாய தே
வித்3யானந்த3-மயாத்மனே த்ரிஜகதஸ்ஸம்ரக்ஷணோத்3 யோகி3னே ।
த்4யேயாயாகி2ல-யோகி3 பி4ஸ்ஸுரக3ணைர்-கே3யாய மாயாவினே
ஸம்யக் தாண்ட3வஸம்ப்ர4மாய ஜடினே ஸேயம் நதி: சம்ப4வே ॥ 55

அனைத்திற்கும் ஆதியும், அளவுகடந்த ஜோதியும், மறைகளால் அறியப் படுபவரும், ஸாத்யமெனும் லக்ஷ்ய வஸ்துவும், பேரறிவு - பேரானந்த உருவினரும், மூவுலகத்தைக் காப்பதில் உறுதிகொண்டவரும், ஸதா யோகிகளால் தியானிக்கப் படுபவரும், தேவர்களால் பாடப்படுபவரும், மாயையை வயப்படுத்தியவரும், விரித்த சடையுடன் தாண்டவமாடி மங்களத்தையளிப்பவருமான சம்புவான உமக்கு இந்த வணக்க முரித்தாகுக.

நித்யாய தரிகு3ணாத்மனே புரஜிதே காத்யாயனீச்ரேயஸே
ஸத்யாயாதி3-குடும்பி3னே முனிமன: - ப்ரத்யக்ஷ-சின்மூர்த்தயே ।
மாயாஸ்ருஷ்ட-ஜக3த்-த்ரயாய ஸகலாம்-னாயாந்த-ஸஞ்சாரிணே
ஸாயம் தாண்ட2வஸம்ப்4ரமாய ஜடினே ஸேயம் நதி: சம்பவே ॥56

நித்ய வஸ்துவாயும், முக்குணவடிவம் கொண்டவராயும், முப்புரத்தை வென்றவராயும், பார்வதியின து பெரும் பேறானவராகவும், ஸத்தியராயும், முனிவர்களுள்ளத்தே பிரத்யக்ஷமாக விளங்கும் ஞானமூர்த்தியும், மாயையைக கொண்டு மூவுலத்தையும் தோன்றச்செய்பவராயும், வேதங்களின் உட்கருத்தென விளங்கிக்கொண்டிருப்பவராகவும், மாலை நேரத்தே விரித்த சடையுடன் தாண்ட வத்தை மேற்கொள்பவராகவுமுள்ள சம்புவுக்கு இந்த வணக்கம் உரித்தாகுக.

நித்யம் ஸ்வோதா3- போஷணாய ஸகலானுத்3தி3ச்ய வித்தாசயா
வ்யர்த்த2ம் பர்யடனம் கரோமி ப4வத: ஸேவாம் ந ஜானே விபோ4 |
மஜ்ஜன்மாந்தர-புண்யபாக-ப3லதஸ்-த்வம் சர்வ ஸர்வாந்தரஸ் -
திஷ்ட2ஸ்யேவ ஹி தேன வா பசுபதே தே ரக்ஷணீயோஸ்-ம்யஹம் || 57

அடியார்களது பாவத்தைப்போக்குவதால் "சர்வர்" எனப்படுபவரே! எங்கும் நிறைந்த விபுவே! எனது வயிற்றை வளர்க்கவே செல்வத்திலாசை கொண்டு பலரையும் நாடி வீணாக அலைகின்றேன், (இதுவரை) உன் சேவையை அறிந்தேனில்லை. (இப்பொழுதுதான்) எனது முற்பிறவிகளில் செய்த புண்ணியம் பழுத்துப் பலன் தந்த அனைத்துள்ளும் உறைபவராக உம்மையறிந்தேன். ஆகவே உம்மால் காப்பாற்றப்பட வேண்டியவனாகிறேன்.

ஏகோ வாரிஜ-பா3ந்த4வ: க்ஷிதிநபோ4-வ்யாப்தம் தமோ - மண்ட3லம்
பித்4வா லோசன-கோ3 சரோபி ப4வதி தவம் கோடிஸூர்ய-ப்ரப4: |
வேத்3ய: கிந்ந ப4வஸ்யஹோ கனதரம் கீத்3ருக்3ப4வேன்-மத்தமஸ்-
தத்ஸர்வம் வ்யபனீய மே பசுபதே ஸாக்ஷாத் ப்ரஸன்னோ ப4வ || 58

பசுபதியே! தினமும் புறத்தே உள்ள இருளை விலக்கும் தாமரைத் தோழனான ஒரு கதிரவன் கண்ணுக்குப் புலப்படுகிறான். நீங்கள் கோடி சூரிய ஒளி படைத்தவர். ஆயினும், என் கண்களுக்கு ஏன் புலப்படாமலிருக்கிறீர்கள்? அந்தோ என் அஞ்ஞான இருள் எவ்வளவு கனமானதாயிருக்கவேண்டும்? அதனை அறவே நீக்கி என் கண்ணெதிரே பிரசன்ன மாவீர்!

ஹம்ஸ: பத்3மவனம் ஸமிச்ச2தி யதா2 நீலாம்பு3த3ம் சாதக:
கோக: கோகநத3 ப்ரியம் ப்ரதிதி3னம் சந்த்ர2ம் சகோரஸ்ததா2 |
சேதோ வாஞ்ச2தி மாமகம் பசுபதே சின்மார்க3-ம்ருக்3யம் விபோ4
கௌ3ரீநாத2 ப4வத் பதாப்ஜ-யுக3ளம் கைவல்ய-ஸௌக்ய2-ப்ரத3ம் || 59

பசுபதியான பார்வதி மணாளனே! விபுவே! எவ்வாறு அன்னம் தாமரைத் தடாகத்தையும், சாதக பக்ஷி கார்மேகத்தையும், சக்ரவாகப் பறவை கதிரவனையும் சகோரப் புள் சந்திரனையும் விரும்பி நிற்கின்றனவோ, அங்ஙனமே என் மனம் ஞான மார்க்கத்தால் நாடக்கூடியதும், மோக்ஷத்தையளிக்கவல்லதுமான உமது திருவடித் தாமரைகளை நாடோறும் விரும்பி நிற்கிறது.

ரோத4ஸ்-தோயஹ்ருத: ச்ரமேணபதிகச்-சாயாம்தரோர்-வ்ருஷ்டித:
பீ4த: ஸ்வஸ்த2-க்2ருஹம் க்2ருஹஸ்த-மதிதி2ர்-தீ2ன: ப்ரபு4ம் தா4ர்மிகம் |
தீ3பம் ஸந்தமஸாகுலச்ச சிகி2னம் சீதாவ்ருதஸ்-த்வம் ததா2
சேதஸ்-ஸர்வ ப4யாபஹம் வ்ரஜ ஸுகம் சம்போ4: பதாம்-போருஹம் || 60

மனமே! வெள்ளத்தில் சிக்குண்டவன் கரையையும், வழிப்போக்கன் மர நிழலையும், மழைக்கு அஞ்சியவன் சொஸ்தமான வீட்டையும், விருந்தாளி

இல்லறத்தானையும், ஏழையானவன் தருமச்சித்தங்கொண்ட செல்வந்தனையும், இருளில் துன்புற்றவன் விளக்கையும், குளிரால் வாடுபவன் நெருப்பையும் எப்படி அடைய விரும்புவானோ, அம்மாதிரியே நீ (மனம்) அச்சத்தையகற்றி இன்பத்தை யளிக்கும் சம்புவின் திருவடித்தாமரையை விரும்பி நிற்பாயாக!

அங்கோலம் நிஜபீ[3]ஜஸந்த்தி-ரயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்[4]வீ நைஜவிபு[4]ம் லதா க்ஷிதிருஹம் ஸிந்து[3]ஸ்-ஸரித்[2]-வல்லப[4]ம் ।
ப்ராப்னோதீஹ யதா[2] ததா[2] பசுபதே: பாதா[3]ரவிந்த[3]-த்[3]வயம்
சேதோவ்ருத்தி-ருபேத்ய திஷ்ட[2]தி ஸதா[3] ஸா ப[4]க்திரித்-யுச்யதே ॥ 61

ஏறழிஞ்சல் என்னும் மரத்தை அதன் விதைகள் போலும், காந்தக்கல்லை ஊசி போலவும், தனது மணவாளனைப் பதிவ்ரதை போன்றும், மரத்தைக் கொடி போலவும், கடலை நதி போலவும். ஒருவனது உள்ளத்தின் ஓட்டம் பரமசிவனது திருவடித்தாமரையை நாடி எப்போதும் நிலைபெற்றிருந்தால் அதுவே பக்தி எனப்படும். (ஏறழிஞ்சில் மரத்தின் விதைகள் பூமியில் விழுந்த பின், ஊர்ந்து சென்று மீண்டும் அம்மரத்திலேயே ஒட்டிக் கொள்ளும்.)

ஆனந்தா[3]ச்ருபி[4]-ராதனோதி புலகம் நைர்மல்யதச்-சா[2]தனம்
வாசா சங்க[1]முகே[2] ஸ்திதைச்ச ஜட[2]ராபூர்த்திம் சரித்ராம்ருதை: ।
ருத்[3]ராக்ஷைர்-ப[4]ஸிதேன தே[3]வ வபுஷோ ரக்ஷாம் ப[4]வத்-பா[4]வனா-
ப[4]ர்யங்கே விநிவேச்ய ப[4]க்தி-ஜனனீ ப[4]க்தார்ப[4]கம் ரக்ஷதி ॥ 62

மஹா தேவா! நினது பக்தியாகிய தாய், பக்தனான குழந்தையை ஆனந்தக்கண்ணீரைக் கொண்டு மயிர்க்கூச்சல் ஏற்படும்படி குளிப்பாட்டி, மாசற்ற மனமென்னும் ஆடையுடுத்தி, வாக்கு என்னும் சங்கத்தின் (பாலாடையினை) வாயிலாக நினது சரித்திர மெனும் அமிருதத்தை நிறைய அருந்தச் செய்து, ருத்ராக்ஷ மாலை, விபூதிகளைக்கொண்டு உடல் ரக்ஷை செய்து, தியானமாகிய தொட்டிலில் படுக்கவைத்துக் காக்கிறாள்.

மார்கா[3]வர்தித-பாது[3]கா பசுபதே-ரங்கஸ்ய கூர்சாயதே
க[3]ண்டூ[3]ஷாம்பு[3]-நிஷேசனம் புர-ரிபோர்-திவ்யாபி[4]ஷேகாயதே ।
கிஞ்சித்[3]ப[4]க்ஷித-மாம்ஸசேஷகப[3]லம் நவ்யோபஹாராயதே
ப[4]க்தி: கிம் ந கரோத்யஹோ வநசரோ ப[4]க்தாவதம்ஸாயதே ॥ 63

வழிநடந்து தேய்ந்த (கண்ணப்பனின்) பாதரக்ஷை பசுபதியான உனக்கு சிரசில் வைக்கப்படும் கூர்ச்சமாகிறது. (அந்தக் கண்ணப்பன்) வாயிலிருந்து உமிழ்ந்த நீர் முப்புரமெரித்த உனக்கு திவ்விய அபிஷேகமாகிறது. (அவன்) சிறிது உண்டு மிச்சமான மாமிசக் கவளம் புதிதாக உண்டாக்கிய நைவேத்ய மாகிறது. (இவற்றையளித்த) வேடனும் சிறந்த அடியானாகிறான், ஆச்சர்யம்! பக்தி எதைத்தான் செய்யாது?

வக்ஷஸ்தாடன-மந்தகஸ்ய கடி2னாபஸ்மார-ஸம்மர்த2னம்
பூ4ப்4ருத்-பர்யடனம் நமத்ஸுரசிர:-கோடீர-ஸங்க4ர்ஷணம் ।
கர்மேத3ம் மருது3லஸ்ய தாவகபத3த்வந்த்3 வஸ்ய கௌரீபதே
மச்சேதோ-மணி-பாது3 காவிஹரணம் சம்போ4 ஸதா2ங்கீ குரு ॥ 64

உமாபதியே! மென்மையான உனது இணையடிகளுக்கு யமனது மார்பில் உதைப்பது; அஞ்ஞானமென்ற கடினமான அபஸ்மாரத்தை மிதிப்பது; (கைலாய) கிரியில் அலைவது, வணங்கும் தேவர்களது கிரீடங்களில் உறைவது ஆகிய இவை தொழிலாயுள்ளது. (அவற்றால் ஏற்படும் வேதனையை விலக்க) எனது மனமாகிய இரத்தினப் பாதுகையை அங்கீகரித்து, அதனையணிந்துகொண்டு சஞ்சரிப்பீராக.

வக்ஷஸ்தாட3ன-சங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ் ஜ்வல-ரத்னதீ3 பகலிகா-நீராஜனம் குர்வதே ।
த்3ருஷ்ட்வா முக்திவதூ4ஸ்-தனோதி நிப்4ருதாச்லேஷம் ப4வானீபதே
யச்சேதஸ்-தவ பாத3 பத்2ம-ப4ஜனம் தஸ்யேஹ கிம் து3ர்லப3ம் ॥ 65

பவானிபதியே! (உனது திருவடித் தாமரையைக் கண்டு) மார்பில் உதை விழுமோ என ஐயுற்று யமன் ஓடுகிறான். (வணங்குங்கால்) தேவர்கள் கிரீடங்களில் பதிக்கப்பட்ட மொட்டு போன்ற ரத்னங்களாகிய தீபங்களால் ஆரத்தி எடுக்கிறார்கள். எவனது உள்ளம் உன் திருவடிகளின் சேவையைப் புரிகிறதோ அவனுக்கு இங்கு அடையவொண்ணாதது எதுவுண்டு? அவனைக் கண்டதும் முக்தியென்னும் பெண் இறுகத் தழுவிக்கொள்கிறாள்.

க்ரீடா3ர்த்த2ம் ஸ்ருஜஸி ப்ரபஞ்ச-மகி2லம் க்ரீடா3ம்ருகா3ஸ்தே ஜனா:
யத்கர்மாசரிதம் மயா ச ப4வத: ப்ரீத்யை பவத்யேவ தத் ।
சம்போ4 ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம் மச்சேஷ்டிதம் நிச்சிதம்
தஸ்மான்-மாமக-ரக்ஷணம் பசுபதே கர்த்தவ்ய-மேவ த்வயா ॥ 66

சம்பவே! இவ்வுலகனைத்தையும் உமது விளையாட்டுக்காகப் படைக்கிறீர். ஸகல பிராணிகளும் உம் விளையாட்டிற்காக உள்ள பொம்மைகள். (அவர்களில் ஒருவனான) நான் செய்வதனைத்தும் கூட உமது ப்ரீதிக்காகவே ஆகிறது. உமது அடியார்களின் சந்தோஷத்திற்காகவே என்னை ஆட்டுவிப்பதும் காரணமாகிறது. ஆகவே, (வளர்ப்புப் பிராணிபோன்ற) என்னைக் காத்தல் உமது கடமையாகிறது.

ப3ஹுவித4-பரிதோஷ-பா3ஷ்பபூர்-
ஸ்பு2ட-புலகாங்கித-சாரு-போக-பூ4மிம் ।
சிரபத2-ப1லகாங்க்ஷி-ஸேவ்யமானாம்
பரமஸதா3 சிவ-பா4வனாம் ப்ரபத்3யே ॥ 67

நிலையான பதவியென்ற மோக்ஷத்தையடைய விரும்புகிறவர்களால் போற்றப்படும் மேலான சதா சிவத்தியானத்தை அடைக்கலம் புகுகிறேன். (ஏனெனில் அந்த தியானம்) பற்பலவிதமான இன்பத்தால் ஆனந்தக்கண்ணீர் பெருக்குவதற்கும், வெளிப்படையாக மயிர்க்கூச்சுண்டாவதற்கும் நல்ல விளை நிலமாக உள்ளது.

அமித-மு3தம்ருதம் முஹுர்-து3ஹந்தீம்
விமல-ப4வத்பத3-கோ3ஷ்ட2-மாவஸந்தீம் ।
ஸத3ய பசுபதே ஸுபுண்ய பாகாம்
மம பரிபாலய ப4க்திதே4னு-மேகாம் ॥ 68

உயிர்களின் தலைவரே! தயை நிறைந்தவரே! எனது பக்தியென்ற பசுவை மாத்திரம் காத்தருளுங்கள். அப்பசு பேரின்பம் என்ற அளவற்ற அமுதத்தை மேன்மேலும் பெருக்கும். உமது திருவடிகள் என்ற பரிசுத்தமான கொட்டிலில் வசிக்கும்; சிறந்த புண்யத்தின் பயனாகத் தோன்றும்.

ஜட3தா பசுதா கலங்கிதா
குடிலசரத்வம் ச நாஸ்தி மயி தே3வ ।
அஸ்தி யதி3 ராஜமௌலே
ப4வதா3ப4ரணஸ்ய நாஸ்மி கிம் பாத்ரம் ॥ 69

மதியை சிரத்தில் அணிந்தவனே! என்னிடம் ஜடத்தன்மை, மிருகத் தன்மை, களங்கமுள்ள தன்மை, கோணலான தன்மை இவை ஒன்றும் இல்லையே. இவை ஏதாவது என்னிடம் இருக்குமாயின் உனது சித்தத்தில் அணியாக இருக்க நானும் பாத்திரனாயிருக்க மாட்டேனா? (ஸம்ஸ்கிருதத்தில் ‘ஜலம்' என்பது 'ஜடம்' என்றும் மாறும். எனவே, ஜடத்தன்மை என்பது பனியைப் பெருக்குவதாகக் கருதப்படும் சந்திரனின் ஜலத்தன்மையைக் குறிப்பதுமாகும். 'மிருகம்' எனப்படும் மானின் அடையாளம் சந்திரனுள் இருப்பதால் சந்திரனுக்கு மிருகத்தன்மை உள்ளது. அதையே களங்கம் என்றும் சொல்கிறோம். பெருமான் அணிவது பூர்ண சந்திரனாக இன்றிப் பிறையாக இருப்பதால் அது கோணலானது எனப்படுகிறது.)

அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ர-பு3த்4யா
வரிவஸிதும் ஸுலப4: ப்ரஸன்ன-மூர்த்தி: ।
அக3ணித-ப2லதா3யக: ப்ரபு4ர்-மே
ஜக3த்2தி4கோ ஹ்ருதி3 ராஜசேக2ரோஸ்தி ॥ 70

பிறைசூடியபெருமான் மனத்தை வசப்படுத்தியவர்களால் உள்ளத்தும் புறத்தும் ஆராதிக்கக்கூடியவர்; தெளிந்த உருவமுடையவர் (அல்லது அருள் புரியத் தயாராய் இருப்பவர்); எண்ணவியலாத நற்பயன்களை அளிப்பவர். சகலத்திற்கும் பிரபு. உலகத்திற்கு அதீத மானவர். (அத்தகையவர்) எனது உள்ளத்தில் எப்பொழுதும் உறைகின்றார்.

ஆரூ⁴-பக்தி-கு³ண-குஞ்சித-பா⁴வ-சாப
யுக்தை: சிவஸ்மரண-பா³ணக³ணை-ரமோகை⁴: ।
நிர்ஜித்ய கில்பி³ஷ-ரிபூன் விஜயீ ஸுதீ⁴ந்த்³ரஸ்-
ஸாநந்த³-மாவஹதி ஸுஸ்தி²ர-ராஜலக்ஷ்மீம் ॥ 71

எவன் சிறந்த பக்தியென்னும் நாண்கயிற்றினால் வளைக்கப்பட்ட பாவனையென்ற வில்லில் தொடுக்கப்பட்ட வீணாகாத சிவத் தியானம் என்ற அம்புகளால் தீவினைகளென்கிற பகைவர்களை அழித்து வெற்றி கொள்கிறானோ அவனே சிறந்த அறிவாளியாகிறான்; என்றும் நிலைத்த (மோக்ஷ) ஸாம்ராஜ்ய ஸம்பத்தை அடைகிறான்.

த்⁴யானாஞ்ஜனேன ஸமவேக்ஷ்ய தம: ப்ரதே³சம்
பி⁴த்வா மஹாப³லிபி⁴-ரீச்வரநாம-மந்த்ரை: ।
தி³வ்யாச்ரிதம் பு⁴ஜக³ பூ⁴ஷண-முத்³வஹந்தி
யே பாத³பத்³ம-மிஹ தே சிவ தே க்ருதார்தா²: ॥ 72

எவர்கள் தியானமென்னும் மையால் (புதையலிடத்தை) பரிசோதித்து அறிந்து கொண்டு, அதை மறைக்கும் அஞ்ஞானமென்னும் இருளையகற்றி, ஈச்வரனது நாமங்களாகிய மந்திரம் ஜபித்து, அதையே சிறந்த பலியாகத் தந்து, தேவர்களால் தஞ்சம் புகப்பெற்றதும், ஸர்பாபரணங்கள் கொண்டதுமான உங்களது திருவடி என்ற பத்மநிதியை வெளிக்கொண்டு வருகின்றனரோ அவர்கள் தான் இவ்வுலகில் வாழ்க்கைப் பயனைப் பெற்றவராகின்றனர், (மை போட்டு புதையல் உள்ள இடத்தை அறிந்து, பிறகு பலி கொடுத்துப் புதையலை வெளிக்கொண்டு வருவது வழக்கம்.)

பூ⁴தா³ரதா-முத³வஹத்³-யத³பேக்ஷயா ஸ்ரீ-
பூ⁴தா³ர ஏவ கிமதஸ் ஸுமதே லப⁴ஸ்வ ।
கேதா³ர-மாகலித-முக்தி-மஹௌஷதீ⁴னாம்
பாதா³ரவிந்த³-ப⁴ஜனம் பரமேச்வரஸ்ய ॥ 73

நன்னெஞ்சே! எதை விரும்பி திருமகளையும், பூதேவியையும் மனைவியராகக் கொண்டு திருமால் வராஹ உருக்கொண்டாரோ, முக்தியெனும் சிறந்த மூலிகையின் விளை நிலமாக எது உள்ளதோ, அந்தப்பரமேச்வரனது பாதகமல ஸேவையைப் பெறுவாயாக! அதைவிட உனக்கு மேலானது எது?

ஆசா-பாச-க்லேச-து³ர்வாஸனாதி³-
பே⁴தோ³த்³யுக்தைர்-தி³வ்யக³ந்தை⁴-ரமந்தை³: ।
ஆசா-சாடீகஸ்ய பாதா³ரவிந்த³ம்
சேத: பேடீம் வாஸிதாம் மே தனோது ॥ 74

எனது மனமாகிய பெட்டி ஆசாபாசங்களால் கெட்ட வாஸனைகள் நிரம்பி யுள்ளது. அதைத் தங்களது திருவடித் தாமரையினுடைய சிறந்த நறுமணங்கள் மணமுள்ளதாகச் செய்யட்டும்.

கல்யாணினம் ஸரஸ-சித்ர க³திம் ஸவேக³ம்
ஸர்வேங்கி³தஜ்ஞ-மனக⁴ம் த்⁴ருவலக்ஷணாட்⁴ய⁴ம் ।
சேதஸ்துரங்க³-மதி⁴ருஹ்ய சர ஸ்மராரே
நேதஸ்-ஸம்ஸ்த ஜக³தாம் வ்ருஷபா⁴தி⁴ரூட⁴ ॥ 75

தலைவா! வ்ருஷபத்தில் அமர்ந்தவரே! காமனையழிப்பவரே! எனது மனமாகிய குதிரையில் அமர்ந்து சஞ்சரிப்பீராக, அக்குதிரை மங்கள வடிவுடையது - அழகிய பற்பல விதமான நடையுடையது - வேகமுள்ளது - நோக்கமறிந்து பழகும் அறிவுடையது - குற்றமற்றது. அத்ருஷ்டரேகை. சுழியெனும் சுபலக்ஷணங்களும் உடையது.

ப⁴க்திர்-மஹேச பத³-புஷ்கர-மாவஸந்தீ
காத³ம்பி³னீவ குருதே பரிதோஷவர்ஷம் ।
ஸம்பூரிதோ ப⁴வதி யஸ்ய மனஸ்தடாகஸ் -
தஜ்ஜன்ம - ஸஸ்ய - மகி²லம் ஸப²லஞ்ச நான்யத் ॥ 76

எவருடைய மனமாகிய குளம், மஹேசனது திருவடிகளாகிய வானத்தில் விளங்கும் பக்தியெனும் மேகக்கூட்டம் பொழியும் பேரின்பமென்னும் மழையால் நிரப்பப்படுகிறதோ, அவரது பிறவியாகிற பயிர் வீண் போகாது முழுப்பயனை அடைந்ததாகும். மற்ற எதுவும் அல்ல.

பு³த்³தி⁴: ஸ்தி²ரா ப⁴விது-மீச்வர-பாத³பத்³ம-
ஸக்தா வதூ⁴ர்-விரஹிணீவ ஸதா³ ஸ்மரந்தீ ।
ஸத்³பா⁴வனா-ஸ்மரண-த³ர்சன-கீர்த்தனாதி³
ஸம்மோஹிதேவ சிவமந்த்ர-ஜபேன விந்தே ॥ 77

பரமனது திருவடித்தாமரையில் பற்றுக் கொண்ட எனது புத்தி என்கிற கன்னி அவைகளில் நிலைபெறுவதற்காக எப்பொழுதும் அத்திருவடியையே நினைத்தும், அதைப்பற்றிய கற்பனை செய்தும், மானஸீகமாகக் கண்டுகொண்டும், எண்ணிக்கொண்டும், புகழ்ந்து பாடிக்கொண்டும், சிவமந்திர ஜபத்தால் உணர்ச்சி யிழந்தும், பர்த்தாவின் பிறிவாற்றாமையால் வாடி நிற்கும் விரஹிணியைப்போல கவலைப்படுகிறது

ஸது³பசார-விதி⁴ஷ்-வனுபோ³தி⁴தாம்
ஸவிநயாம் ஸுஹ்ருத³ம் ஸது³பாச்ரிதாம் ।
மம ஸமுத்³த⁴ர பு³த்³தி⁴-மிமாம் ப்ரபோ⁴
வரகு³ணேன நவோட⁴-வதூ⁴மிவ ॥ 78

ஆண்டவனே! எனது புத்தி என்ற கன்னி பெரியோர் பணிவிடையில் நன்கு பொதிக்கப்பட்டு - அடக்கமுள்ளவளாக - நல்லிதயம் படைத்தவளாக - நற்காரியயங் களில் நாட்டமுடையவளாக உள்ளவள். புதிதாக விவாஹமானவளை மணாளன் தனது குணத்தால் மகிழ்விப்பதுபோல், எனது புத்தி என்கிற கன்னிகையைக் கை தூக்கிவிடு வீராக!

நித்யம் யோகி^{3}மனஸ்-ஸரோஜத^{3}ல-ஸஞ்சார-க்ஷமஸ்-த்வத்கரம்:
சம்போ^{3}தேன கத^{2}ம் கடோ^{2}ர யமராட்^{3}வக்ஷ: - கவாடக்ஷதி: |
அத்யந்தம் ம்ருது^{3}லம் த்வத^{3}ங்க்^{4}ரியுக^{3}லம் ஹர மே மனச்-சிந்தயத்-
யேதல்லோசன-கோ^{3}சரம் குரு விபோ^{4} ஹஸ்தேன ஸம்வாஹயே ॥ 79

சம்போ! தங்களுடைய மிகமிக மென்மையான அடிவைப்பு, யோகிகளது மனமாகிய தாமரை இதழ்களின் மேலேயே எப்போதும் ஸஞ்சரிக்கத் தக்கது. அதைக்கொண்டு மிக முரடான யமதருமராஜனது கதவு போன்ற மார்பை எங்ஙனம் பிளந்தீர்? ஐயோ! (இதை நினைத்து) என் மனம் வியாகுலப்படுகிறது. விபுவே! அவ்வடியை எனது கண்களுக்குத் தோன்றச்செய்யும். என் கைகளால் பிடித்துவிடுகிறேன்.

ஏஷ்யத்யேஷ ஜனிம் மனோ (அ)ஸ்ய கடி^{2}னம் தஸ்மிந் நடானீதிமத்^{3}
ரக்ஷாயை கி^{3}ரிஸீம்னி கோமலபத^{3}ந்யாஸ: புராப்^{2}யாஸித: |
நோ சேத்-திவ்ய-க்^{3}ருஹாந்தரேஷு ஸுமனஸ்-தல்ஷு வேத்^{3}யா-தி^{3}ஷு
ப்ராயஸ்ஸத்ஸு சிலாதலேஷு நடனம் சம்போ^{4} கிமர்த்த^{2}ம் தவ ॥ 80

சம்போ! தாங்கள் நடனம் புரிவதற்கு தேவர் மனைகள் இருக்கின்றன - பூக்களாலான படுக்கைகள் உள்ளன - மேடைகளுமுள்ளன. அங்ஙனமிருக்க கற்பாறைகள் நிரம்பிய மலையில் நடனம் புரிவது எக்காரணத்துக்காக?" "இந்த ஜீவன் (அடியேன்) பிறப்பான்; இவனது மனமோ மிகக் கரடுமுரடாயிருக்கும். அதில் நர்த்தனமாட வேண்டி வரும்" என (நீ) கருதி, என்னைக் காக்கவே இவ்விதமாக மலைப்பிரதேசத்தில் உன் மிருதுவான பாதத்தின் ஆடல் முன் கூட்டியே அப்பியாஸிக்கப்பட்டது போலும்!

கஞ்சித்கால-முமாமஹேச ப^{4}வத: பாதா^{3}ரவிந்தா^{3}ர்சனை:
கஞ்சித^{2}-த்^{4}யான-ஸமாதி^{4} பி^{4}ச்ச நதிபி^{4}: கஞ்சித் கதா^{2}கர்ணனை: |
கஞ்சித் கஞ்சித^{3} வேக்ஷணைச்ச நுதிபி^{4}: கஞ்சித்^{4}த^{3}சா-மீத்^{3}ருசீம்
ய: பராப்னோதி முதா^{3} த்வத^{2}ர்ப்பிதமனா ஜீவன் ஸ முக்த: க^{2}லு ॥ 81

உமாமஹேச்வரனே! சிறிது நேரம் திருவடிகளை அர்ச்சித்தும், சிறிது நேரம் தியான ஸமாதிநிலையடைந்தும், சிறிதுநேரம் வணங்கிக்கொண்டும், சிறிதுநேரம் உன் வரலாற்றை சிரவணம் செய்தும், சிறிதுகாலம் மூர்த்தி தரிசனம் செய்தும், சிறிதுகாலம் துதித்தும், இங்ஙனம் தன் மனத்தை மகிழ்ச்சியுடன் உம்மிடம்

அர்ப்பணம் செய்யும் நிலையை எவன் அனுபவிக்கிறானோ அவனே இவ்வுலகில் உயிர் வாழ்க்கையிலேயே மோக்ஷம் அநுபவிக்கும் ஜீவன் முக்தனாவான்.

பா^{3}ணத்வம் வ்ருஷப^{4}த்வ-மர்த^{4}வபுஷா பா^{4}ர்யாத்வ-மார்யாபதே
கோ^{4}ணித்வம் ஸகி^{2}தா ம்ருத^{3}ங்க^{3} வஹதா சேத்யாதி^{3}ரூபம்-த^{3}தெள^{4} ।
த்வத்பாதே^{3} நயனார்ப்பணஞ்ச க்ருதவான் த்வத்^{3} தே^{3}ஹ-பா^{4}கோ^{3} ஹரி:
பூஜ்யாத் பூஜ்யதரஸ்ஸ ஏவ ஹி ந சேத் கோ வா தத^{3}ன்யோ-(அ)தி^{4}க: ॥ 82

அம்பிகாபதியே! மஹா விஷ்ணுவானவர் திரிபுர ஸம் ஹாரத்தின்போது பாணத்தன்மை, (உன் வாஹன மான) விருஷபத்தன்மை, நினது பாதி உடலைக்கொண்டு மனைவித் தன்மை, (உன் அடிதேடி) பன்றித்தன்மை, (மோஹினி யாக வந்த போது) தோழித்தன்மை, (நடராஜ தாண்டவத்தில்) நினக்கு மிருதங்கம் வாசிப்பவனது தன்மை, இத்தகைய வடிவங்களைத் தாங்கினார். (உன்னை அர்ச்சிக்கையில் ஒரு பூ குறைய) உனது பாதத்தில் தனது கண்ணையும் அர்ப்பித்தார். (சங்கரநாராயணர் அவஸரத்தில்) நினது உடலில் பாதிப் பங்கும் கொண்டார். இக்காரணங்களைக்கொண்டே அவர் பூஜ்யரனை வரிலும் மிகவும் பூஜிக்கத் தக்கவராகிறார். அங்ஙனம் இல்லாவிடில், அவரிலும் மேலானவர் எவர்தான் உளர்.? (அம்பிகையும் திருமாலும் ஒன்றே என்கிற கருத்துப்படி இங்கு" பாதி உடலைக் கொண்டு மனைவித்தன்மை" என்கிறார்.)

ஜனன-ம்ருதியுதானாம் ஸேவயா தே^{3}வதானாம்
ந ப^{4}வதி ஸுக^{2}லேசஸ்-ஸம்சயோ நாஸ்தி தத்ர ।
அஜனி-மம்ருதரூபம் ஸாம்ப^{3}மீசம் ப^{4}ஜந்தே
ய இஹ பரம-ஸௌக்^{2}யம் தே ஹி த^{4}ன்யா லப^{4}ந்தே ॥ 83

பிறப்பு இறப்புள்ள மற்ற தேவதைகளை ஆராதித்து லவலேசமும் சுகம் ஏற்படாது. இதில் ஐயமில்லை. எவர்கள், பிறப்பு இறப்பு அற்றவரும் பராசக்தியுடன் கூடியவருமான ஈசனை இங்கு ஆராதிக்கின்றனரோ அவர்களே பிறவிப்பயனை யெய்தியவர்கள்; (பிறப்பிறப்பற்ற) பேரின்பத்தை (அவர்களே) பெறுகின்றனர்.

சிவ தவ பரிசர்யா-ஸந்நிதா^{4}னாய கௌ^{3}ர்யா
ப^{4}வ மம கு^{3}ண து^{4}ர்யாம் பு^{3}த்^{3}தி - கன்யாம் ப்ரதா^{2}ஸ்யே ।
ஸகல-பு^{4}வன-ப^{2}ந்தோ^{4} ஸச்சிதா^{3}னந்த^{3}-ஸிந்தோ^{4}
ஸத^{3}ய ஹ்ருத^{3}ய-கே^{3}ஹே ஸர்வதா^{3} ஸம்வஸ த்வம் ॥ 84

சிவனே! உலகை ஆக்கியவரே! உலகமனைத்திற்கும் உறவினரே! ஸச்சிதானந்தக் கடலே! தயை நிறைந்தவரே! கௌரியுடன் கூடிய தங்களுக்குப் பணி செய்யவே எனது நற்குணங்களமைந்த புத்தி என்னும் கன்னிகையை தானம் செய்கிறேன். அவளை ஏற்று எனது ஹ்ருதயமென்ற வீட்டில் நித்ய வாஸம் செய்யுங்கள்.

ஜலதி4 மத2னத3க்ஷோ நைவ பாதால-பே4தீ3
ந ச வன-ம்ருக3 யாயாம் நைவ லுப்3த4: ப்ரவீண: ।
அசன-குஸ்ம-பூ4ஷா-வஸ்த்ர-முக்2யாம் ஸபர்யாம்
கத2ய கத2மஹம் தே கல்பயானீந்து3 மௌலே ॥ 85

பிறைசூடியே! நான் கடலைக் கடையவியலாதவன், (ஆகவே உனது உணவான ஆலஹாலத்தையும், முடியணியான சந்திரனையும் தர இயலாதவன்) பாதாளத்தைப் பிளக்க முடியாதவன் நான். ஆகவே, உன் ஆபரணமான அரவத்தை நாகலோகத்திலேயிருந்து கொண்டுவர வல்லேனல்லன். நான் காட்டு விலங்குகளை வேட்டையாடவும் வல்லவனான வேடனும் அல்லன், (ஆகவே, உனது உடைகளான யானைத் தோலையும், புலித்தோலையும் அளிக்க முடியாதவன். இங்ஙனமிருக்க உனக்கு நைவேத்யம், புஷ்பம் (முடியணி) ஆபரணம், வஸ்திரம் இவற்றை அர்ப்பணிக்கும் பூஜையை நான் எங்ஙனம் செய்வேன்? சொல்.

பூஜாத்3ரவ்ய-ஸம்ருத்3த4யோ விரசிதா: பூஜாம் கத2ம் குர்மஹே
பக்ஷித்வம் ந ச வா கிடித்வ-மபி ந ப்ராப்தம் மயா துர்லப4ம் ।
ஜானே மஸ்தக-மங்க்4ரிபல்லவ-முமா ஜானே ந தே (அ)ஹம் விபோ4
ந ஜ்ஞாதம் ஹி பிதாமஹேன ஹரிணா தத்வேன தத்ரூபிணா ॥ 86.

எங்கும் நிறைந்தவனே! உமை மணாளனே! யான் உனது பூஜைக்கு ஏற்ற பொருளை ஸம்ருத்தியாகச் சேகரித்தேனாயினும், பூஜை செய்வது எங்ஙனம்? ஏனெனில், என்னால் அன்னப்பறவைத் தன்மையோ, பன்றித் தன்மையோ அடையப் படவில்லை. இனி அடையவும் இயலாது. எனவே, உன் முடியையும், தளிரடியையும் நான் அறியவில்லை. அன்னம், பன்றி இவ்வுருவங்களைக்கொண்டும் பிரம்மாவினாலும், விஷ்ணுவினாலும் உம் திருவுருவம் அறியப்படவில்லையே! ('உருவமே புலனாகாதபோது எப்படி மூர்த்தி வழிபாடு செய்வது?'என்பது கருத்து.)

அசனம் க3ரலம் பணீ கலாபோ
வஸனம் சர்ம ச வாஹனம் மஹோக்ஷ: ।
மம தா3ஸ்யஸி கிம் கிமஸ்தி சம்போ4
தவ பாதா3ம்பு3ஜ-ப4க்திமேவ தே2ஹி ॥ 87

சம்போ! உமக்கு உணவு விஷம்; அணி பாம்பு; ஆடை தோல் வாஹனமோ காளை. (எனக்குக் கொடுக்க உம்மிடம்) யாது உளது? எனக்கு எதை அளிக்கப்போகிறீர்? (உம்மால் கொடுக்கக்கூடியதான) "நினது திருவடியில் பக்தி" என்ற ஒன்றையே கொடுப்பீராக!

யதா3 க்ருதாம்போ4 நிதி4-ஸேதுபந்த4ன:
கரஸ்தலாத4: க்ருத-பர்வதாதி4ப: ।
ப4வானி தே லங்கி4த- பத்3மஸம்ப4வ:
ததா3 சிவார்சா-ஸ்தவ - பா4வன-க்ஷம: ॥ 88

சிவனே! (ராமலிங்கப் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ ராமனைப் போல்) கடலிலும் அணை கட்டும் திறன் வாய்ந்தவனாகவும், (அகஸ்தியரைப் போல விந்திய) மலையரசைத் தனது கைத்தலத்தால் அமுக்கும் திறமை வாய்ந்தவனாகவும், கமலத்துதித்த பிரம்மாவையும் தாண்டியவனாகவும் (பிறப்பைக் கடந்தவனாகவும்) நான் எப்போது ஆகிறேனோ அப்பொழுதுதான் உம்மை அர்ச்சிக்கவும், தோத்த ரிக்கவும், தியானிக்கவும் சக்தனாவேன்.

நதிபி⁴ர்-நுதிபி⁴ஸ்-த்வமீச பூஜா-
விதி⁴பி⁴ர்த்⁴யான-ஸமாதி⁴பி⁴ர்-ந துஷ்ட: ।
த⁴னுஷா முஸலேன சாச்மபி⁴ர் வா
வத³ தே ப்ரீதிகரம் ததா² கரோமி ॥ 89

ஈசனே! வில். உலக்கை, கல் முதலியவற்றால் (அடித்த அர்ஜுனன், சாக்கிய நாயனார் ஆகியோரிடம்) நீர் பிரீதியடைவதுபோல், உம்மை வணங்குவ தாலும், துதி செய்வதாலும், ஆராதிப்பதாலும் திருப்தியடைவதில்லை. எனவே உமக்கு விருப்பமான வழிபாடு எது என்று கூறுவீராக. அவ்விதமே செய்கிறேன்.

வசஸா சரிதம் வதா³மி சம்போ⁴-
ரஹ முத்³யோக³-விதா⁴ஸு தே(அ)ப்ரஸக்த: ।
மனஸாக்ருதி-மீச்வரஸ்ய ஸேவே
சிரஸா சைவ ஸதா³சிவம் நமாமி ॥ 90

சம்போ! நான் உயர்வான யோகமுறைகளில் ஈடுபட்டவனல்லன். வாக்கினால் உமது லீலைகளைச் சொல்கிறேன். மனத்தால் ஈச்வரனுடைய உருவத்தை தியானிக்கிறேன். தலையால் எக்காலும் ஸதாசிவத்தைப் பணிகிறேன். (இவ்விதம் முக்கரணங்களையும் உம்மிடத்தில் ஈடுபடுத்துகிறேன்.

ஆத்³யா (அ) வித்³யா ஹ்ருத்³க³தா நிர்க³ தாஸீத்-
வித்³யா ஹ்ருத்³யா ஹ்ருத்³க³தா த்வத்ப்ரஸாதா³த் ।
ஸேவே நித்யம் ஸ்ரீகரம் தவத்பதா³ப்3ஜம்
பா⁴வே முக்தேர்-பா⁴ஜனம் ராஜமௌலே ॥ 91

சந்திரமௌளியே! உனது அருளால் அனாதி காலமாய் மனத்தே குடிகொண்டிருந்த அஞ்ஞானம் அகன்றது. மனோரம்யமான ஞானம் இதயத்தில் தோன்றி விட்டது. முக்தியெனும் திருவையளிக்கும் உமது திருவடியை இடைவிடாது ஸேவித்து தியானிக்கிறேன்.

தூ³ரீக்ருதானி து³ரிதானி து³ரக்ஷராணி
தௌ³ர்பாக்³ய-து³: க³-து³ரஹங்க்ருதி-து³ர்வசாம்ஸி ।
ஸாரம் த்வதீ³யசரிதம் நிதராம் பிப³ந்தம்
கௌரீச மாமிஹ ஸமுத்³த⁴ர ஸத்கடாக்ஷை: ॥ 92

உமாபதியே! சுவை ததும்பும் உனது சரிதத்தை இடைவிடாது பருகுகின்ற என்னைவிட்டு பாவங்களும், துரதிர்ஷ்டம், துன்பம், தகாத அஹங்காரம் முதலான அனைத்தும் அப்பால் அகற்றப்பட்டன. இப்பொழுதே என்னைக் கை தூக்கி லிடுவீராக.

ஸோம-கலாத⁴ர-மௌலௌ
கோமல-க⁴னகந்த⁴ரே மஹாமஹஸி ।
ஸ்வாமினி கிரிஜாநாதே²
மாமக-ஹ்ருத³யம் நிரந்தரம் ரமதாம் ॥ 93

சந்திரகலையை சிரசில் சூடியவரும், கார்மேகம் போன்ற கண்டத்தை உடையவரும், உலகத்தின் உடைமையாளரும், பார்வதீகாந்தனுமாகிய பேரொளியில் எனதுள்ளம் இடைவிடாது களித்திருக்கட்டும்.

ஸா ரஸனா தே நயனே தாவேவ கரௌ ஸ ஏவ க்ருத-க்ருத்ய: ।
யா யே யௌ யோ ப⁴ர்க³ம் வத³தீக்ஷேதே ஸதா³ர்சத: ஸ்மரதி ॥ 94

பரமசிவனை எது பேசுகிறதோ அதுவே நாக்கு; எவை தரிசிக்கின்றனவோ அவையே கண்கள்; எவை அர்ச்சிச்கின்றன வோ அவையே கைகள்; எவன் ஸதா ஸ்மரிக்கின்றானோ அவனே வாழ்க்கைப் பயனையடைந்தவன்.

அதிம்ருது³லௌ மம சரணா-வதிகடி³னம் தே மனோ ப⁴வானீச ।
இதி விசிகித்ஸாம்ஸந்த்யஜ கத²மாஸீத்³-கி³ரௌ ததா² ப்ரவேச: ॥ 95

சிவனே! பவானீபதியே! "உனதுள்ளம் மிகக் கரடுமுரடானது. எனது திருவடிகளோ மிக மென்மையுள்ளவை" என்றிவ்வாறு உமது உள்ளத்தில் எழும் சந்தேஹத்தை விட்டொழியும். அப்படியாயின் அவை (கைலாய) மலையில் எங்ஙனம் எப்படி சஞ்சரிக்கின்றன?

தை⁴ர்யாங்குசேன நிப்⁴ருதம்
ரப்⁴ஸா-தா³க்ருஷ்ய ப⁴க்தி-ச்ருங்க² லயா ।
புரஹர சரணாலானே
ஹ்ருத³ய-மதே³ப⁴ம் ப⁴தா⁴ன சித்³யந்த்ரை: ॥ 96

முப்புரமெரித்தவரே! எனது மனம் என்ற மதங்கொண்ட யானையை உறுதியெனும் அங்குசத்தால் அடக்கி, பக்தியெனும் சங்கிலிகொண்டு வலிந்து இழுத்து, உமது திருவடியெனும் கட்டுத்தறியில் ஞானமாகிய யந்திரங்களைக் கொண்டு கட்டிவிடு வீராக.

ப்ரசரத்யபி4த: ப்ரக3ல்ப4-வருத்தயா
மத3வானேஷ மன: கரீ க3ரீயான் ।
பரிக்3ருஹ்ய நயேன ப4கதி-ரஜ்வா
பரம ஸ்தா2ணுபத3ம் த்3ருட4ம் நயாமும் ॥ 97

பரமேச்வரா! எனது மனமாகிய மதம்பிடித்த இந்த பெரிய யானை அடக்கவியலாததாக இங்குமங்கும் திரிகிறது. இதை நயமாக பக்தியெனும் கயிற்றால் கட்டி உன் வசத்தில் வைத்து, அசைவற்ற நிலைக்கு (பிரம்ம ஸமாதி நிலைக்கு) இழுத்துச் செல்வீராக.

ஸர்வாலங்காரயுக்தாம் ஸரலபத3யுதாம் ஸாது4வருத்தாம் ஸுவர்ணாம்
ஸத்3 பி4ஸ்ஸம்ஸ்தூயமானாம் ஸரஸ-குணயுதாம் லக்ஷிதாம் லக்ஷணாட்4யாம்।
உத்3யத்3பூஷா-விசேஷா-முபக3த-விநயாம் த்3யோதமானார்த2ரேகா3ம்
கல்யாணீம் தே3வ கௌ3ரீ-ப்ரிய மம கவிதா - கன்யகாம் த்வம் க்3ருஹாண ॥ 98

கௌரீ மணாளனான மஹாதேவா! எனது இக்கவிதைக் கன்னிகையை (நீர்) ஏற்றுக்கொள்ள வேண்டும். (பாணிக்கிரஹணம் புரிந்துகொள்ள வேண்டும்.) இனி இச்சுலோகம் கன்னிகையைக் குறிப்பதாயும், கவிதையைக் குறிப்பதாயும் இருபொருள்பட அமைந்துள்ளது.

கன்னிகையைக் குறிக்கும் பொருள் வருமாறு:

இவள் எல்லா அலங்காரங்களுடனும் (நகைகளுடன்) கூடியவள்; சீரிய ஒழுக்கம் படைத்தவள்; நல்ல நிறம் கொண்டவள்; ஸாமுத்திரிகா லக்ஷணங்கள் கொண்ட உத்தமி; பிரகாசமான பூஷணங்களால் சிறப்புற்றவள்; வினயம் உடையவள்; தனரேகை ஒளிர்பவள்; மங்கள வடிவினள். (கல்யாணம் புரிய உகந்த கல்யாணி.)

கவிதையைக் குறிக்கும் பொருள்:


இக்கவிதைப் பெண் (உவமை முதலான) எல்லா அலங்காரமும் (அணியும்) கூடியவள்; எளிய சொற்களால் ஆக்கப்பட்டவள்; நல்ல விருத்தத்தில் அமைந் தவள்; நல்ல எழுத்துக்களால் உருவானவள்; நல்லோரால் போற்றப்படுபவள்; பலவித (நவ) ரஸங்களும், சிறப்பியல்புகளும் கொண்டவள்; பக்தியால் லக்ஷ்யத்தை உடையவள்; தர்மோபதேசத்துடன் கூடியவள்; அர்த்தத் தொடர்ச்சியால் பிரகாசிப்பவள்; மங்களத்தை அளிப்பவள்.

இத2ம் தே யுக்தம் வா பரமசிவ காருண்யஜலதே4
க3தௌ திர்யக்3 ரூபம் தவ பதசிரோ-தர்சனதி4யா ।
ஹரிப்ர2ஹ்மாணௌ தௌ தி3வி பு4வி சரந்தௌ ச்ரமயுதௌ
கதம் சம்போ4வாமின் கத2ய மம வேத்3 யோஸி புரத : ॥ 99

கருணைக்கடலே! மங்களத்தையளிக்கும் பரமசிவனே! ஆண்டவனே! உமது அடியையும் முடியையும் காண வேண்டி பிரம்மாவும், திருமாலும் முறையே பறவையாகவும், மிருகமாகவும் உருக்கொண்டு வானத்தேயும் பூமியிலும் அலைந்து (உன்னைக் காணாது) களைத்தவர்களானார்கள் என்பது உலகமறிந்ததே. அப்படி யிருக்க எனக்கு எதிரில் எவ்வாறு காணுவதற்குரியவராக ஆகிறீர்கள்? இது உமக்குப் பொருத்தம் தானா?

ஸ்தோத்ரேணால-மஹம் ப்ரவச்மி ந ம்ருஷா தே3வா விரிஞ்சாத2ய:
ஸ்துத்யானாம் க2ணனாப்ரஸங்க - ஸமயே த்வாமக்ர - கண்யம் விது: ।
மாஹாத்ம்யாக்3ர-விசாரண-ப்ரகரணே தா4னாதுஷஸ்தோமவத் -
தூ4தாஸ்-த்வாம் விது2-ருத்தமோத்தம-பலம் சம்போ4 பவத் ஸேவகா: ॥ 100

பரமேச்வரா! நான் துதித்தது போதும். நான் இல்லாததைக் கூறவில்லை. பிரம்மா முதலான தேவர்கள் போற்றத்தக்கவர்களை எண்ணுங்கால் உம்மைத்தான் முதன்மையாக எண்ணி அறிகிறார்கள். உமது அடியார்களும் சிறந்து விளங்கும் பெருமைகளைப்பற்றி ஆராயுங்கால் உமிக்கூட்டத்துடன் கலந்த தான்யங்களில் உமியையகற்றுவதுபோல்; மற்ற வானவர்களை நீக்கி தான்யத்தை ஏற்பதுபோல் உம்மையே உயர்வுக்கெல்லாம் உயர்வென அறிகிறார்கள்



ஸ்ரீசைலம் : ஸ்ரீமல்லிகார்ஜுனர்

ஸ்ரீ சிவ பாதாதிகேசாந்த வர்ணன ஸ்தோத்ரம்

(பாதத்திலிருந்து கேசம் வரை ஒவ்வோர் அங்கமாக வர்ணிப்பதையே “பாதாதி கேசாந்த வர்ணன ஸ்தோத்ரம்” எனப்படும்.)

கல்யாணம் நோ வித4த்தாம் கடகதடலஸத்கல்பவாடீ நிகுஞ்ஜ-
க்ரீடா3ஸம்ஸக்த வித்2யா த3ர நிகரவதூ4 கீ3தருத்3ராபதா3ந: |
தாரை: ஹேரம்ப2நாதை: தரலித நினத3த்தாரகாராதிகேகீ
கைலாஸ: சர்வநிர்வ்ருத்யபிஜனகபத3: ஸர்வதா3 பர்வதேந்த3ர: || 1

தாழ்வரையில் விளங்கும் கற்பகமரக் கூட்டங்களில் இருக்கும் புதருக்குள் விளையாடுவதில் ஈடுபட்ட வித்யாதரப் பெண்களின் கூட்டத்தால் பாடப்பட்ட பரமசிவனுடைய வீரச்செயலை உடையதும், உர்த்த, வினாயகருடைய ஒலிகளால் சஞ்சலமானதும், ஒலிக்கின்றதுமான தாரகனை வென்ற முருகனின் மயிலை உடையதும், பரமசிவனுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் சுற்று பிரதேசத்தை உடையதுமான, மலைகளுக்கு அரசனாகிய, கைலாஸம், எப்பொழுதும், நமக்கு மங்களத்தை செய்யட்டும்.

யஸ்ய ப்ராஹு: ஸ்வரூபம் ஸகலதி3விஷதா3ம் ஸாரஸர்வஸ்வயோக3ம்
யஸ்யேஷு: சார்ங்கத4ன்வா ஸமஜனி ஜக3தாம் ரக்ஷணே ஜாக3ரூக: |
மௌர்வீ த3ர்வீகரணாமபி ச பரிப்3ருட4: பூஸ்த்ரயீ ஸா ச லக்ஷ்யம்
ஸோ அவ்யா த4வ்யாஜமஸ்மாநசிவபி4த் அனிசம் நாகினாம் ஸ்ரீபினாக: ||2

எந்த பினாகத்தினுடைய உருவத்தை எல்லா தேவர்களுடைய முக்கிய ஸாராம் சங்கனின் சொல்லுகின்றார்களோ, உலகங்களின் ரக்ஷணையில், விழிப்போடு கூடிய (சார்ங்கம் என்னும் வில்லை உடைய) மஹாவிஷ்ணு எதற்கு பாணமாக ஆனாரோ, மேலும் பாம்புகளுக்கு அரசனாகிய வாஸுகி நாண்கயிறானானோ, உலகத்தை துன்புறுத்திப் புகழ்பெற்ற அந்த பட்டண உருவம் கொண்ட மூன்று அசுரர்களும் குறியாகவும் ஆனார்களோ, தேவர்களுக்கு எப்பொழுதும் அமங்களத்தை அகற்றும், அந்த காந்தி பொருந்திய பினாகம் என்ற வில் கபடமின்றி (காரணம் பாராமல்) காப்பாற்ற வேண்டும்.

ஆதங்காவேக3ஹாரீ ஸகலதி3விஷதா3ம் அங்க்4ரிபத்3மாச்ரயாணாம்
மாதங்காத்யுக்3ர தை3த்யப்ரகரதனு க3ளத்3 ரக்ததா4ராக்ததா4ர: |
க்ரூர: ஸூராயுதா நாமபி ச பரிப4வம் ஸ்வீயபா4ஸா விதன்வன்
கோ4ராகார: குடா3ரோ த்3ருட4தர து3ரிதாக்3யாடவீம் பாடயேந்ந: || 3

தாமரை போன்ற திருவடியைத் தஞ்சமாய் அடைந்த எல்லா தேவர்களுடையவும், கவலையையும், துன்பத்தையும் அகற்றுகின்றதும் மாதங்கள்

முதலிய கொடிய அசுரக்கூட்டத்தின் சரீரத்தினின்று பெருகுகின்ற இரத்தப் பெருக்கால் பூசப்பட்ட நுனியை உடையதும், கொடியதும், தன் ஒலியால் பதினாயிரம் சீரியர்களுக்கும் அவமதிப்பை செய்வதும், பயங்கர வடிவம் கொண்டதுமான, (சிவபெருமான் கையில் உள்ள) கோடலி, மிகவும் வலிமையான எங்களுடைய பாபம் என்னும் காட்டை, பிளந்து அழிக்க வேண்டும்.

காலாராதே: கராக்3ரே க்ருதவஸதி: உரச் சாணசாதோ ரிபூணம்
காலே காலே குலாத்3ரிப்ரவர தனயயா கல்பிதஸ்னேஹலேப: ।
பாயாந்ந: பாவகார்சி: ப்ரஸரஸக2முக2: பாபஹந்தா நிதாந்தம்
சூல: ஸ்ரீபாதஸேவாப4ஜன ரஸஜுஷாம் பாலனைகாந்தசீல: ॥ 4

யமனை வென்ற பரமசிவனுடைய கை நுனியில் வாஸம் செய்வதும், எதிரிகளுடைய மார்பாகின்ற சாணைக்கல்லில் தீட்டப்பட்டதும், அவ்வப்பொழுதும், குல பர்வதங்களில் சிறந்த ஹிமவானின் பெண்ணாகிய பார்வதி அன்னையால், செய்யப்பட்ட எண்ணெயின் பூச்சொடு கூடியதும், நெருப்பின் ஜ்வாலை போன்ற நுனியை உடையதும், முற்றிலும் தீவினையை ஒழிப்பதும், சிவனின் திருவருடியின் சேவையாகின்ற பக்தியின் ரஸத்தை அனுபவிப்பவர்களை, தவறாமல் காக்கும் இயல்புடையதுமான, சூலம் நம்மை காக்கவேணும்.

தேவஸ்யாங்கா3ச்ரயாயா: குலகி3ரி து3ஹிது: நேத்ரகோணப்ரசார
ப்ரஸ்தாரானத்யுதா3ரான் பிபடி2ஷுரிவ யோ நித்யமத்யாத2ரேண ।
ஆத4த்தே ப4ங்கி3துங்கை3 ரநிசமயவை: அந்தரங்க2ம் ஸமோத3ம்
ஸோமாபீட3ஸ்ய ஸோயம் ப்ரதிசது குசலம் பாணிரங்க2 குரங்க2 ॥ 5

எந்த மான், பரமசிவனுடைய மடியில் வீற்றிருக்கும், குலாசலமான ஹிமவானுடைய பெண்ணாகிய பார்வதியினுடைய பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்வதில் மிக்க தாராளமான, கடைக்கண்களின் பலவிதமான பரவுதல்களை என்றும் மிகுந்த ஆவலோடு, படிக்க விருப்பம் கொண்டதுபோல், வளைவுகளால் உயர்வுற்ற உறுப்புக்களால், (தேவியின் பார்வையை கற்பதற்காக ஈசனின் கை மான் பல விதங்களில் அங்கங்களை நெளிக்கிறது) சந்திரனைத் தலைக்கு அணியாகக் கொண்ட பரமசிவனுடைய உள்ளத்தை மகிழ்வோடு கூடியதாக செய்கின்றதோ, அந்த பரமசிவன் கையை ஆடலரங்காகக் கொண்ட மான், நன்மையை எப்பொழுதும் கொடுக்கட்டும்.

குறிப்பு: - (பரமசிவன் கையில் வேதம் மானுருவம் கொண்டிருப்பதாகப் புராணம் கூறுகிறது. அது உடம்பை பலவிதத்தில் பங்கம் (நர்த்தனத்திற்கேற்றபடி அசைத்தல்) செய்து கொண்டிருப்பதைப் பார்த்தால் பார்வதியின் கடைக்கண் பார்வையில் அசைத்தலை கவனித்துக் கற்றுக்கொள்வதற்கு அதற்கேற்றபடி உடம்பை அசைத்துக் கொள்வது போல் இருப்பதாக இந்த ச்லோகத்தில் கூறப்பட்டிருக்கிறது.)

கண்ட2ப்ராந்தாவஸஜ்ஜத்கனகமய மஹாக4ண்டிகாகோ4ரகோ4ஷை:
கண்டா2ராவைரகுண்டை2ரபி ப4ரித ஜக3ச்சக்ரவாலாந்தரால: |
சண்ட3: ப்ரோத்3த4ண்ட3ச்ருங்க2: ககுத3கப3லிதோத்துங்க3 கைலாஸச்ருங்க3:
கண்டே2காலஸ்ய வாஹ: சமயது சமலம் சாச்வத: சாக்வரேந்த்3ர: || 6

கழுத்தின் ஓரத்தில் தொங்கும் பெரிய தங்க மணியினுடைய பயங்கரமான முழக்கங்களாலும், மழுங்காத (அதிக ஒலியோடு கூடிய) ஹம்பா காரங்களாலும் உலக வட்டத்தின் நடுவை நிரப்பியதும், மிகக் கொடியதும், பயங்காமான கொம்பை உடையதும், முதுகில் இருக்கும் ககுதத்தால் (திமிலால்) உயர்ந்த கைலாயத்தின் சிகரத்தை வென்றதும், கழுத்தில் கறுப்பை உடையவரான பரமசிவனுடைய வாகணமுமான அழிவற்ற விருஷபராஜன் பாவத்தை அகற்றட்டும்.

நிர்யத்3தா3னாம்சுதா4ராபரிமளதரலீ பூ4தரோலம்ப3பாலீ
ஜ2ங்காரை: சங்கராத்3ரே: சிகரசதத3ரீ: பூரயன் பூ4ரிகோ4ஷை: |
சார்வ: ஸௌவர்ணசைலப்ரதிமப்ருது2வபு: ஸர்வவிக்4னாபஹர்தா
சர்வாண்யா: பூர்வஸூநு: ஸ பவ4து ப4வதாம் ஸ்வஸ்திதோ3
ஹஸ்திவக்த்ர: || 7

பெருகுகின்ற மத நீர்ப்பெருக்கின் மணத்தால் கவரப்பட்ட சஞ்சலமான வண்டுகளின் வரிசைகளின் ஜம் என்ற ஒலிகளாலும், மிக்க வீரிடுதல்களாலும், பரமசிவனின் மலையாகிய கைலாயத்தின் நூற்றுக்கணக்கான சிகரங்களில் இருக்கும் குகைகளை நிரப்பிக்கொண்டுள்ள பரமசிவனின் பிள்ளையும், தங்க மலை எனப் படும் மேரு மலைக்கு ஒப்பான பருத்த உடலை உடையவரும், எல்லா இடையூறுகளையும் அகற்றுபவரும், பார்வதியின் முதற் பிள்ளையான வருமான, அந்த யானை முகம் உடைய கணபதி, உங்களுக்கு நன்மையைக் கொடுப்பவராக இருக்கட்டும்.

ய: புண்யைர் தே3வதானாம் ஸமஜனி சிவயோ: ச்லாக்4யவீர்யை-கமத்யாத்
யன்னாம்நி ச்ரூயமாணே தி3திஜப4டக4டா பீ4 திபா4ரம் ப4ஜந்தே |
பூ4யாத்ஸோ (அ)யம் விபூத்யை நிசிதசர சிகா2பாடிதக்ரௌஞ்சசைல:
ஸம்ஸாராகா3த4கூபோத3ரபதித ஸமுத்தாரகஸ்தாரகாரி: || 8

எந்த ஸ்கந்தன் தேவர்களுடைய புண்ணியங்களால், பார்வதீபரமேஸ்வரர் களுடைய புகழத்தக்க ஒற்றுமையினால் உண்டானாரோ, எவருடைய பெயர் கேட்கப்படும் பொழுது, அசுர வீரர்களின் கூட்டங்கள் அதிக பயத்தை அடைகின்றார்களோ, கூரிய பாணத்தின் நுனியால் க்ரௌஞ்சமலையைப் பிளந்தவரும், ஸம்ஸாரம் என்ற ஆழமான கிணற்றினுள் விழுந்தவர்களைக் கரையேற்றுபவருமான அந்த தாரகனை வென்ற ஸ்கந்தன் ஐச்வர்யத்தின் பொருட்டு ஆகவேண்டும். (ஐஸ்வர்யங்களை அளிக்க வேண்டும்)

ஆரூட4: ப்ரௌட4 வேக3ப்ரஜவிதபவனம் துங்க3 துங்க3ம் துரங்க3ம்
சேலம் நீலம் வஸான: கரதலவிலஸத் காண்ட3 கோத3ண்ட3 த3ண்ட3: ।
ராக3 த்3வேஷா தி3நாநாவித4 ம்ருக3படலீ பீதிக்ருத்3 பூ4தபார்த்தா
குர்வன்னாகே2ட்டலீலாம் பரிலஸது மன: கானனே மாமகீனே: ॥ 9

அதிகமான வேகத்தால் காற்றைத் தோற்கடிக்கும் உயரமான குதிரையில் ஏறிக் கொண்டவரும், கறுப்பான வஸ்திரத்தை கட்டிக்கொண்டவரும், கையில் விளங்கும் அம்பு வில்லை உடையவரும், பிரமதகணங்களை ஆட்சி செய்பவருமான சாஸ்தா, என்னுடையதான மனதாகிற காட்டில் ஆசை, வெறுப்பு முதலிய பற் பல விலங்குகளின் கூட்டத்திற்கு பயத்தைச் செய்து கொண்டு, வேட்டை என்னும் விளையாட்டை செய்கிறவராக விளங்கட்டும்.

அம்போ4 ஜாப்4யாம் ச ரம்பா4ரத2 சரண லதாத்3 வந்த்3வ கும்பீ4ந்த்2ரகும்பை4:
பி3ம்பேனேந்தோ3ச்ச கம்போ3ருபரி விலஸதா வித்3ருமேணோத்-
பலாப்4யாம் ।
அம்போ4தேனாபி ஸம்பா4விதமுப ஜனிதா ட3ம்ப3ரம் சம்ப3ராரே:
சம்போ4: ஸம்போ4கயோக்யம் கிமபி த4னமித3ம் ஸம்ப4 வேத் ஸம்பதே3 ந:
॥ 10

இரண்டு தாமரைகளாலும், வாழை. தேர்ச்சக்கரம், கொடி, சிறந்த யானையின் இரண்டு கும்பங்கள் இவைகளாலும், சங்கினுடைய மேலே விளங்குகின்ற சந்திரனுடைய பிம்பத்தாலும், பவழத்தாலும், இரண்டு அல்லி மலர்களாலும், மேகத்தாலும் கௌரவிக்கப்பட்டதும், உண்டாக்கப்பட்ட ஆடம்பரத்தை உடையதும், பரமசிவனுக்கு சேர்க்கைக்குத் தக்கதுமான சம்பரன் என்ற அஸுரனை வென்ற மன்மதனுடைய, இன்னது என்று சொல்ல இயலாத, இந்த தனம் நமக்கு செல்வத்திற்காக ஏற்பட வேண்டும்.

குறிப்பு: -

இந்த ச்லோகத்தில் தேவியை மன்மதனுடைய தனமாக வர்ணித்திருக்கிறது. தேவியினுடைய அவயவங்களைத் தாமரை, வாழை முதலானவற்றோடு சமமாக இருப்பதாகவும் கூறி இருக்கிறது. ஆனால் தேவியையோ, தேவியின் அவயவங்களையோ குறிக்கும் சொற்கள் இங்கு காணப்படவில்லை. ஸம்ஸ்க்ருத காவ்யம் படித்து பழக்கமிருப்போருக்கு இந்த ச்லோகத்தை வாசித்த உடனேயே தேவியையும், தேவி உருப்புக்களையும் தான். இந்த ச்லோகத்தில் குறிக்கிறார் கவி என்று அறிய முடியும். இவ்விதம் வர்ணிப்பது ரூபகாதிசயோக்தி என்று வழங்கும் சிறந்த அலங்காரமாகும்.

வேணீஸௌபா4க்3யவிஸ்மாபித தபனஸுதாசாருவேணீவிலாஸான் -
வாணீநிர்தூ4தவாணீகரதல வித்4ருதோதா3ரவீணாவிராவான் ।
ஏணீநேத்ராந்தப4ங்கீநிரஸன நிபுணாபாங்க3 கோணானுபாஸே
சோணான்ப்ராணானுதூ3ட4 ப்ரதிநவ ஸுஷமாகந்த2லானிந்து3-மௌளே: ॥
11

பின்னலின் அழகால் வியக்கும்படி செய்யப்பட்ட சூரியன் பெண்ணாகிய யமுனையின் அழகிய பெருக்கின் விலாஸங்களை உடையவளும், சொல்லால் உதறித் தள்ளப்பட்ட ஸரஸ்வதியின் கையில் தாங்கிய உயர்ந்த வீணையின் நாதத்தை உடையவளும், பெண் மானுடைய கடைக்கண்ணின் பங்கங்களை விரட்டுவதில் திறமை பூண்ட கடாக்ஷங்களை உடையவளும், புதிது புதிதாய்த் தளிர்க்கும் காந்தியை உடையவைகளுமான, பரமசிவனுடைய சிவந்த உயிர் நிலைகளை (ப்ராணன்களைப் போன்ற பார்வதியை) ஸேவிக்கின்றேன்.

குறிப்பு: -

'தேவியின் பின்னல் கருநீர்ப் பெருக்கான யமுனையையும், அவளது குரல் ஸரஸ்வதியின் வீணை நாதத்தையும், வீணை கடாக்ஷம் மானின் பார்வையையும் வெல்வன என்பது கருத்து)

ந்ரு தாரம்பே4ஷு ஹஸ்தாஹதமுரஜ தி4மித்3 தி4ங்க்ருதைரத்யுதா3ரை:
சித்தானந்த3ம் வித4த்தே ஸத3ஸி ப4கவத: ஸந்ததம் ய: ஸ நந்தி2 |
சண்டீ3சாத்யாஸ்ததா2 (அ)ன்யே சதுரகு3ண க3ணப்ரீணிதஸ்வாமிஸத்கார
உத்கர்ஷோ த்3யத்ப்ரஸாதா3: ப்ரமத2பரிப்ருடா4: பாந்து ஸந்தோஷிணோ ந: || 12

எவர் பகவானுடைய நிருத்தம் தொடங்கும் பொழுது, மிகவும் புகழத்தக்க அவையில் கையால் அடிக்கப்பட்ட மிருதங்கத்தின் திமி திமி என்ற சப்தங்களால் எப்பொழுதும் பகவானுடைய மனதிற்கு ஆனந்தத்தை செய்கின்றாரோ அந்த நந்தியம் அப்படியே உயர்ந்த குணக்குவியல்களால் திருப்தி செய்யப்பட்ட பகவான் செய்த ஸத்காரத்தினால் உண்டான ஸந்தோஷமுடைவர்களும், எப்பொழுது இன்புற்றிருப்பவர்களும், மற்ற சண்டீசர் முதலிய பிரமத கணங்களில் சிறந்தவர்களும் நம்மைக் காக்கட்டும்.

முக்தாமாணிக்யஜாலை: பரிகலிதமஹாஸாலமாலோகனீயம்
ப்ரத்யுப்தாநர்க4ரத்னைர் தி3சிதி3சி ப4வனை: கல்பிதைர் தி3க்பதீனம் |
உத்3யானைரத்3ரிகன்யாபரிஜன வனிதா மானனீயை: பரீதம்
ஹ்ருத்3யம் ஹ்ருத்3யஸ்து நித்யம் மம பு4வனபதேர்தா4ம ஸோமார்த4மௌலே: || 13

முத்துக்கள், மாணிக்கங்கள் இவைகளால் கட்டிய பெரிய கோட்டை மதிலை உடையதும், பார்க்கத்தக்கதும், விலை மதிக்க முடியாக ததும், விலை மதிக்க முடியாத இரத்தினங்களால் இழைத்தவைகளும், ஒவ்வொரு திக்கிலும் திக்பாலகர்களுக்காக கட்டப்பட்ட வீடுகளாலும், பார்வதி தேவியின் வேலைக்காரப் பெண்களால் அன்போடு வளர்க்கப்பட்ட தோட்டங்களாலும் சூழப்பட்டதுமான உலகத்திற்கே பதியாகிய அர்த்த சந்திரனைத் தலையில் அணிந்த பரமசிவனுடைய அழகிய இருப்பிடம் எப்பொழுதும் என்னுடைய உள்ளத்தில் இருக்கட்டும்.

ஸ்தம்பை4ர்ஜம்பா4ரிரத்னப்ரவரவிரசிதை: ஸம்ப்4ருதோபாந்தபா4க3ம்
சும்ப3த்ஸோபானமார்க3ம் சுசிமணிநிசயை: கும்பி4தானல்பசில்பம் ।
கும்பை4ஸ்ஸம்பூர்ணசோப4ம் சிரஸி ஸுக4டிதை: சாதகும்பை4ரப4ங்கை3:
சம்போ4: ஸம்பா4வனீயம் ஸகலமுனிஜனை: ஸ்வஸ்தி3தம் ஸ்யாத்
ஸதோ3 ந: ॥ 14

சிறந்த இந்திர நீலக் கற்களால் செய்யப்பட்ட தூண்களால் சூழப்பட்ட சுற்று பிரதேசத்தை உடையதும், தூயமணிகளின் கூட்டங்களால் விளங்கும் படிக்கட்டை உடையதும், மேல் பக்கத்தில் நன்றாக அமைக்கப்பட்டவைகளும், மாசற்றவைகளும் ஆன, தங்கமயமான குடங்களால் காந்தி நிறைந்ததும், எல்லா முனிவர்களாலும் மதிக்கத்தக்கதுமான பரமசிவனுடைய ஸபை, நமக்கு நன்மைகள் கொடுப்பதாக இருக்க வேண்டும்.

ந்யஸ்தோ மத்4யேஸபா4யா: பரிஸரவிலஸத் பாத3 பீடா2பி4ராமோ
ஹ்ருத்3ய: பாதை3ச்சதுர்பி4: கனகமணிமயை: உச்சகைருஜ்ஜ்வலாத்மா ।
வாஸோரத்னேன கேனாப்யதி4கம்ருது3தரேண ஆஸ்த்ருதோ விஸ்த்ருத ஸ்ரீ:
பீட2: பீடா3ப4ரம் ந: சமயது சிவயோ ஸ்வைரஸம்வாஸயோக்3ய ॥ 15

ஸபையினுடைய நடுவில் போடப்பட்டதும், அருகில் விளங்குகின்ற பாதம் வைத்துக்கொள்ளும் பீடத்தினால் அழகுற்றதாயும், கவர்ச்சி வாய்ந்ததும், உயர்ந்தவைகளும் தங்கம் இரத்தினங்கள் இவைகளால் ஆனவைகளுமான நான்கு கால்களால் துலங்குகின்றதும், மிகவும் மெல்லிய, சொல்ல இயலாத மேன்மை கொண்ட தொரு, சிறந்த ஆடையினால் மூடப்பட்டதும், பரவிய ஒளியை உடையதும், பார்வதீ பரமேச்வரர்களுக்கு தனிமையில் இச்சைப்படி இருப்பதற்கு ஏற்றதும் ஆன பீடம் நம்முடைய துன்பத்தின் பளுவை ஒடுக்கட்டும்.

ஆஸீனஸ்யாதி4பீட2ம் த்ரிஜக3த3தி4 பதேரங்க்4ரிபீடா2 நுஷக்தௌ
பாதோ2ஜாபோ4க3பா4ஜௌ பரிம்ருது3ல தலோல்லாஸி பத்3மாதி3 ரேகௌ2।
பாதாம் பாதா3வுபௌ4 தௌ நமத3 மரகிரீடோல்லஸச்சாருஹீர-
ச்ரேணீசோணாயமானோன்னத நக2 த்3சகோத்பா4ஸமானௌ ஸமானௌ ॥
16

பீடத்தில் உட்கார்ந்தவரான, மூன்று உலகங்களுக்கும் இறைவனாகிய பரமசிவனுடைய பாதங்கள் வைத்துக்கொள்ளும் பீடத்தில் அமைந்திருப்பவைகளும்; தாமரைகளின் உருவத்தை தரிப்பவைகளும், மிகவும் மென்மையான உள்ளங்காலில் விளங்கும் தாமரை முதலிய ரேகைகளை உடையவைகளும், வணங்கும் தேவர்களுடைய கிரீடங்களில் விளங்கும் அழகிய இரத்தினங்களின் வரிசைகளால் சிவந்து உயர்ந்த பத்து நகங்களோடு பிரகாசிப்பவைகளும், ஒன்றுக்கொன்று சமானமானவைகளுமான புகழ்பெற்ற அந்த பரமேச்வரனின் இரண்டு பாதங்கள் நம்மை காப்பாற்றட்டும்.

யன்னாதோ³ வேத³ வாசாம் நிக³த³ தி நிகி³லம் லக்ஷணம் பக்ஷிகேதோ:
லக்ஷ்மீஸம்போ⁴கஸௌக்யம் விரசயதி யயோச்சாபரோ ரூபபே⁴த³: ।
சம்போ⁴ஸ்ஸம்பா⁴வனீயே பத³கமல ஸமாஸங்க³ தஸ்துங்க³ சோபே⁴
மாங்க³ல்யம் ந: ஸமக்³ரம் ஸகலஸுக²கரே நூபுரே பூரயேதாம் ॥ 17

எவைகளுடைய ஒலி வேதவாக்குடைய எல்லா லக்ஷணத்தையும் சொல்லுகின்றதோ, எவைகளுடைய மற்றொரு உருவச்சிறப்பு, கருடனைக் கொடியாகக் கொண்ட மஹாவிஷ்ணுவிற்கு லக்ஷ்மியோடு சேருவதால் உண்டான இன்பத்தைச் செய்கின்றதோ, எல்லோராலும் மதிக்கத்தக்கவைகளும், பரமசிவனுடைய தாமரை போன்ற பாதங்களின் சேர்க்கையால் உயர்ந்த ஜாதியை உடையவைகளும் எல்லோருக்கும் இன்பமூட்டுகின்றவர்களுமான காற் சிலம்பு நமக்கு நிறைந்த மங்களத்தைத் தரட்டும்.

கருத்து: -

ஆதிசேஷன் பரமசிவனின் காற்சிலம்பாகச் சுற்றிக்கொண்டு இருக்கிறார். பதஞ்ஜலிமுனி ஆதிசேஷனுடைய அவதாரம். அந்தப் பதஞ்சலி முனியே வேதங்களுக்கு இலக்கணம் கூறும் வியாகரணத்திற்கு பாஷ்யம் செய்திருக்கிறார். இதே ஆதிசேஷன் லக்ஷ்மியோடு கூடிய மஹாவிஷ்ணுவுக்கு படுக்கையாக உள்ளார். இவ் விஷயங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த ச்லோகத்தை பரமாச்சாரியர் இயற்றியுள்ளார்.

எவைகளின் சப்தம் வேதங்களின் இலக்கணத்தைக் கூறுகின்றதோ, மஹாவிஷ்ணுவின் படுக்கையாக இருந்துகொண்டு எவைகள் அவருக்கு லக்ஷ்மியின் சேர்க்கையால் உண்டாகும் சௌக்கியத்தை உண்டாக்குகின்றனவோ, பரமசிவனின் பாத கமலங்களோடு சேருவதால் எவைகள் அதிக ஒலி பெற்று விளங்குகின்றனவோ, எல்லோரும் பூஜிக்கத்தக்கதும், எல்லா சுகத்தைக் கொடுப்பவைகளுமான அந்தப் பாத கமலங்களில் அணிந்த சலங்கைகள் நமக்கு மங்களத்தை உண்டாக்க வேண்டும்.

அங்கே³ ச்ருங்கா³ரயோனே: ஸபதி³ சலப⁴தாம் நேத்ரவஹ்னௌ ப்ரயாதே
சத்ரோருத்³த்⁴ருத்ய தஸ்மா தி³ஷுதி⁴ யுக³ மதோ⁴ந்யஸ்தமக்³ ரேகிமேதத் ।
சங்காமித்த³ம் நதானாமமர பரிஷதா³ மந்தரங்கூரயத் தத்
ஸங்கா⁴தம் சாரு ஜங்கா⁴யுக மகி²லபதேரம்ஹஸாம் ஸம் ஹரேன்ன: ॥ 18

சிவனது கண்ணிலிருந்தெழுந்த அக்னியில் மன்மதன் விட்டிற்பூச்சிபோல் நொடிப்பொழுதில் நீறியபொழுது, அவனுடைய இரண்டு அம்புறாத் துணிகள் தனியாக எடுக்கப்பட்டு கீழே வைக்கப்பட்டிருக்கின்றனவோ என்று காலில் விழுந்து பணிந்த தேவர்களெல்லாம் சந்தேகமுறக்கூடிய அழகு வாய்ந்த பரமசிவனுடைய ஜங்கைகள் நமது தீச்செயல்களை அழிக்க வேண்டும்.

ஜானுத்3 வந்த்3வேன மீனத்4வஜந்ருவர ஸமுத்3கோ3பமானேன ஸாகம்
ராஜந்தௌ ராஜாம்பா4கரிகாகநக ஸ்தம்ப4 ஸம்பா4 வநீயௌ ।
ஊரூ கௌ3ரீகராம்போருஹஸரஸ ஸமாமர்த3னாநந்த3பா4ஜௌ
சாரூ தூ3ரீக்ரியாஸ்தாம் து3ரித முபசிதம் ஜன்மஜன்மாந்தரே ந: ॥ 19

மச்சத்தைக் கொடியாகக் கொண்ட மதனராஜனுடைய தாம்பூலப் பெட்டிக்கு ஒப்பான இரண்டு முழங்கால்களோடு கூட விளங்குவதும், இராஜவாழை, (ஈசனின் கணுக்கால் முதல் முழங்கால் வரையிலான பகுதி அம்பறாத்துணி போலுள்ளது.) யானையின் துதிக்கை, தங்கத் தூண் இவைகளால் மதிக்கத் தகுந்தவைகளும் (அதாவது இவைகளுடன் ஒப்பிடுங்கால் அவைகளைக் காட்டிலும் மேன்மை பொருந்தியது) பார்வதியினுடைய தாமரை போன்ற கைகளால் இன்பமாயிருக்கும்படி பிடித்துவிடுவதினால் உண்டான இன்பத்தை அடைந்தவைகளுமாகிய அழகிய துடைகள், நம்முடைய பிறப்பையும் இதற்கு முந்தைய மற்றுமுள்ள பிறப்புக்களி லும் சேமித்த பாபத்தை அகற்ற வேண்டும்.

ஆமுக்தாநர்க4ர தனப்ரகரகர பரிஷ்வக்த கல்யாண காஞ்சீ-
தா3ம்நா ப3த்3தே4ன து3க்3த4 த்3யுதிநிசயமுஷா சீனபட்டாம்ப3ரேண ।
ஸம்வீதே சைலகன்யாஸுசரித பரிபாகாயமாணே நிதம்பே3
நித்யம் நர்நர்த்து சித்தம் மம நிகி3லஜகத் ஸ்வாமின: ஸோமமௌலே: ॥20

விலையற்ற இரத்தினங்களின் கூட்டத்தின் கிரணங்களால் சூழப்பட்ட மங்களமான தங்க அரைஞாணால் கட்டப்பட்டதும், பாலின் ஒளிக்கூட்டத்தைக் கவருகின்றதுமான சீன தேசத்துப் பட்டாடையினால் மூடப்பட்டதும், பார்வதியின் புண்ணிய பலம் போன்றவைகளுமான அகில அண்ட கோடிகளுக்கும் தலைவனாகிய சந்திரனைத் தலையணியாகக் கொண்ட பரமசிவனுடைய இடுப்பில் என்னுடைய மனது எப்பொதும் நர்த்தனம் செய்யட்டும்.

ஸந்த்4யாகாலானுரஜ்யத்கநகரஸருசா காலதௌ4தேன கா3ட4ம்
வ்யானத்3த4: ஸ்னிக்3த4 முக்த: ஸரஸமுத3ர ப3ந்தேன வீதோபமேன ।
உத்3தீ3ப்தை: ஸ்வப்ரகாசைருபசிதமஹிமா மன்மதா2ரேருதா3ரோ
மத்4யோ மித்2யார்த் த3ஸ த்4ர்யங் மம தி4சது ஸதா3 ஸங்க3திம்
மங்க3லாநாம் ॥ 21

அந்திப்பொழுதின் சிவந்த, உருக்கிய, தங்கத்தின் காந்தியை உடையதும், உவமையில்லாததுமான வயிற்றில் கட்டிக்கொள்ளும் பட்டையினால் அழகாக இருக்கும்படி வெகு நெருக்கமாய் கட்டப்பட்டதும், வழவழப்பாயும் அழகாயும் இருக்கின்றதும், உயர்ந்தோங்கி விளங்கும் தன்னொளிகளால் வளர்ந்த மேன்மையை உடையதுமான பொய்யெனக் கருதக் கூடியதும் பெருந்தன்மை வாய்ந்ததுமான இடை எனக்கு எப்பொழுதும் மங்களத்தைக் கொடுக்கட்டும்.

நாபீ⁴சக்ராலவாலாத் நவநவஸுஷமா தோ³ஹதஶ்ரீபரீதாத்
உத்³க³ச்சந்தீ புரஸ்தாது³த³ரபத²மதி க்ரம்ய வக்ஷ: ப்ரயாந்தீ ।
ச்யாமா காமாக³மார்த² ப்ரகத²னலிபிவத் பா⁴ஸதே யா நிகாமம்
ஸா மா ஸோமார்த⁴ மௌலே: ஸுக²யது ஸததம் ரோமவல்லீ மதல்லீ ॥
22

புதிது புதிதான காந்தியாகின்ற எருவின் சம்பத்து நிறைந்த நாபியாகின்ற பாத்தியிலிருந்து உயர்ந்து வளர்ந்து வருகின்றதும், வயிறாகிய வழியைக் கடந்து, மார்பை நோக்கிச் செல்லுகின்றதும், கறுப்பானதுமான எந்த ரோம வரிசை காம சாஸ்திரத்தின் கருத்தை விளக்கும் எழுத்துபோல் விளங்குகின்றதோ பாதி சந்திரனை தலை அலங்காரமாக உடைய பரமேச்வரனுடைய அந்த சிறந்த ரோம வரிசை என்னை எப்பொதும் மிகவும் சுகமடையச் செய்யட்டும்.

ஆச்லேஷேஷ்வத்³ரிஜாயா: கடி³னகுசதடீ லிப்தகாச்மீரபங்க -
வ்யாஸங்கா³துத்³யத³ர்கத்³யுதிபி⁴ருபசித ஸ்பர்த⁴முத்³தா³ மஹ்ருத்³யம் ।
த³க்ஷாராதேருதூ³ட⁴ப்ரதிநவமணி மாலாவலீபா⁴ஸமானம்
வக்ஷோ விக்ஷோபி⁴தாக⁴ம் ஸததநதிஜு ஷாம் ரக்ஷதாத³ க்ஷதம் ந: ॥ 23

மலைமகளாகிய பார்வதியினுடைய ஆலிங்கனத்தால் கடினமான ஸ்தன பிரதேசங்களில் பூசிய குங்குமப்பூவாலானன சேற்றின் சேர்க்கையால் உதிக்கின்ற சூரியனுடைய காந்திகளோடு சண்டை செய்கின்றதும், மிகவும் அழகியதும், அணிந்து கொண்ட புதிய இரத்தின மாலைகளின் வரிசைகளால் விளங்குகின்றதும் எப்பொழுதும் வணங்குகின்றவர்களுடைய பாபத்தை ஒழிக்கிறதுமான தக்ஷனின் பகைவனான பரமசிவனுடைய மார்பு நம்மை குறைவின்றி காக்க வேண்டும்.

வாமாங்கே விஸ்பு²ரந்த்யா: கரதலவிலஸச் சாருரக்தோத்பலாயா:
காந்தாயா வாமவக்ஷோருஹப⁴ர சிக²ரோன்மர்த³னவ்யக்³ரமேகம் ।
அன்யாம்ஸ்த்ரீனப்யுதா³ரான் வரபரசு ம்ருகா³லங்க்ருதீநிந்து³ மௌலே:
பாஹூநாபத்³த⁴ ஹேமாங்க³த³மணிகடகாந் அந்தராலோகயாம: ॥ 24

இடது பக்கத்தில் விளங்குகின்றவளும், கையில் விளங்கும் அழகிய செங்குவளைப்பூவை உடையவளுமான மனைவியின் இடது கொங்கையின் மேல் பக்கத்தை மர்த்தனம் செய்வதில் ஈடுபட்ட ஒரு கையையும், வரம், பரசு, மான் இவைகளால் அலங்கரிக்தப்பட்டவைகளும், தங்கத் தோள்களையும் இரத்தின வளைகளையும் அணிந்துகொண்டிருப்பவைகளுமான பிறைசூடிய பரமசிவனின் மற்ற மூன்று கைகளையும் உள்ளத்தில் பார்க்கிறோம்.

ஸம்ப்⁴ராந்தாயா: சிவாயா: பதிவிலயபி³யா ஸர்வலோகோபதாபாத்
ஸம்விக்³ நஸ்யாபி விஷ்ணோ: ஸரப⁴ ஸமுப⁴யோ:
வாரணப்ரேரணாப்யாம் ।
மத்⁴யே த்ரைசங்கவீாமனுப⁴ வதி த³சாம் யத்ர ஹாலாஹலோஷ்மா
ஸோயம் ஸர்வாபதா³ம் ந: சமயது நிசயம் நீலகண்ட²ஸ்ய கண்ட: ॥ 25

கணவனுக்குத் தீங்கு ஏற்படுமோ என்ற பயத்தால் பரபரப்புற்ற பார்வதியும், எல்லா உலகங்களும் எரிந்துவிடுமோ என கவலையுமுற்ற விஷ்ணுவும் (ஆக) இரண்டு பேர்களும் தடுப்பதாலும், தூண்டுவதாலும் இடையில் திரிசங்குவினுடைய நிலையை, எந்தக் கழுத்தில் ஆலாகால விஷாக்கனி அனுபவிக்கின்றதோ அந்தக் கருப்பான கழுத்தை உடைய பரமசிவன் எல்லா ஆபத்துக்களுடைய கூட்டத்தை அழிக்கவேண்டும்.

குறிப்பு: -

பாற்கடலில் நின்று ஆலாகாலம் என்ற விஷம் கிளம்பி உலகை எரிக்கத் தொடங்கியது. அப்பொழுது பகவான் அதை விழுங்க, பார்வதிதேவி விஷம் வயிற்றினுள் சென்றால் நாதனுக்குக் கெடுதல் வந்துவிடுமோ என்று அஞ்சி, அதை வயிற்றில் இறங்காதபடி தடுத்து வெளியில் தள்ள முயற்சித்தாள். அப்பொழுது மஹாவிஷ்ணு விஷம் வெளியில் வந்தால் உலகம் அழிந்துவிடுமோ என்ற பயத்தால் உள்ளே தள்ளிவிட்டார். இவ்விதம் பார்வதியும், விஷ்ணுவும் வெளியேயும் உள்ளேயுமாய்த் தள்ளுவதால் நடுவில் திரிசங்குவைப்போல் நிற்கும் விஷத்தோடு கூடிய நீலகண்டருடைய கழுத்து நமது ஆபத்துக்களின் கூட்டத்தை ஒழிக்கவேண்டும்.

ஹருத்3யைரத்3ரீந்த்3ரகன்யாம்ருது3த3சநபதை3: முத்3ரிதோ வித்3ருமஸ்ரீ:
உத்3யோதந்த்யா நிதாந்தம் த4வளத4 வளயா மிச்ரிதோ தந்தகாந்த்யா |
முக்தாமாணிக்ய ஜாலவ்யதிகரஸத்ருசா தேஜஸா பா4ஸமான:
ஸத்3யோஜா தஸ்ய த3த்3யாத3த4ரமணிரஸௌ ஸம்பதா3ம் ஸஞ்சயம் ந: || 26

மனத்தைக் கவரும் வனப்பு வாய்ந்த பர்வதராஜன் மகளாகிய பார்வதிதேவி மெதுவாய்ப் பற்களால் கடிப்பதால் அடையாளம் செய்யப்பட்டதும் பவழத்தின் ஒளிவீசுவதும், மிகவும் ஒளிருகின்றதும், அதிவெண்மையான துமான பற்களின் காந்தியோடு கலந்ததும், முத்துக்களும், மாணிக்கங்களும் சேர்ந்ததற்கொப்பான சோபையினால் பிரகாசிப்பதுமான ஸத்யோஜாதம் என்று அழைக்கப்படும் சிறந்த கீழ் உதடு நமக்கு செல்வங்களுடைய கூட்டத்தைக் கொடுக்கட்டும்.

கர்ணாலங்காரநாநாமணி நிகரருசாம் ஸஞ்சயைரஞ்சிதாயாம்
வர்ண்யாயாம் ஸ்வர்ணபத்3 மோத3ரபரிவிலஸத் கர்ணிகாஸன்னி பாயாம் |
பத்3த4த்யாம் ப்ராணவாயோ: ப்ரணதஜன ஹ்ருத3ம்போ4ஜவாஸஸ்ய சம்போ4:
நித்யம் நச்சித்தமேதத் விரசயது ஸுகே2நாஸிகாம் நாஸிகாயாம் || 27

காதில் அணிந்த அணிகளிலிருக்கும் இரத்தினங்களின் ஒளியோடு கலந்ததும் கவிஞர்கள் வியந்து போற்றுவதும், தங்கத் தாமரைக்குள் கர்ணிகை போன்றதும், பிராணவாயுவின் மார்க்கமாயுமிருக்கின்ற அடியார்கள் உள்ளத்தில் வாசம் செய்யும்

பரமசிவனின் மூக்கில் என்றும் நம்முடைய மனது இன்பமாய் பற்றுதலுடன் இருக்க வேண்டும்.

அத்யந்தம் பாஸ்4மானே ருசிரதரருசாம் ஸங்க3 மாத்ஸன்மணீநாம்
உத்3யச்சண்டா3ம்சுதா4மப்ரஸர நிரஸன ஸ்பஷ்டத்3ருஷ்டாபதா3னே ।
பூ4யாஸ்தாம் பூ4தயே ந: கரிவரஜயின: கர்ணபாசாவலம்பே3
பக்4தாலீபா4லஸஜ்ஜஜ்ஜனி மரணலிபே: குண்ட3லே குண்ட3லே தே ॥ 28

மிக்க அழகு வாய்ந்த உயர்தர இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருப்பதால் துலங்கிக்கொண்டு ஆதித்தனின் கிரணங்களையும் ஒதுக்கும் திறன் பூண்டவைகளும், அடியாரைக் காப்பாற்றுதல் முதலிய உயர்ந்த செய்கைகளை உடையவை களும், பக்தர்களுக்கு பிறக்கவும், இறக்கவும், பிரம்மாவால் தலையில் எழுதப்பட்ட எழுத்தை குண்டலரேகையிட்டு உபயோகமற்றதாக்குவதும், யானை வடிவம் கொண்டு எதிர்த்துவந்த அந்தகாசூரனை வென்ற பரமசிவனுடைய காதில் தொங்குவதுமான குண்டலங்கள் நமக்கு நன்மையை அருளவேண்டும்.

யாப்4யாம் காலவ்யவஸ்தா2 ப4வதி தனுமதாம் யோ முக2ம் தே3வதானாம்
யேஷாமாஹு: ஸ்வரூபம் ஜக3தி முனிவரா தே3வதானாம் த்ரயீம் தாம் ।
ருத்3ராணீவக்த்ரபங்கேருஹஸதத விஹாரோத்ஸு கேந்திந்3தி3ரேப்ய:
தேப்4யஸ்த்ரிப்ய: ப்ரணாமாஞ்ஜலிமுபரசயே த்ரீக்ஷணஸ்யேக்ஷணேப்ய: ॥ 29

ஈசனின் நெற்றிக்கண் அக்னியாகவும், மற்ற இரு கண்கள் சூரிய சந்திரராகவும் உள்ளன. மாந்தர்களுக்கு இரவு, பகல் முதலிய சமயங்களின் வரையறுப்பு வலது இடதாக இருக்கின்ற எந்த இரண்டு கண்களால் ஏற்படுகின்றதோ, எந்த மூன்றாவதான நெற்றிக்கண் அக்னி மயமாக இருந்துகொண்டு தேவதைகளுக்கு ஆகாரம் அளிக்கின்றதோ, பார்வதியின் தாமரையை ஒத்த முகத்தில் வண்டுகளைப் போல் இடைவிடாமல் களிகூர்ந்து விளையாடும் முக்கண்ணனுடைய ஸர்வதேவதா ரூபங்களாகிய அந்த மூன்று கண்களையும் கை கூப்பி வணங்குகிறேன்.

குறிப்பு: -

தேவர்கள் அக்கினியை முகமாக உடையவர்கள் என்று வேதம் கூறுகிறது. ஆகவே, அக்கினியாகிற பரமசிவனது மூன்றாவது நேத்திரத்தை இங்கு தேவதைகளுக்கு முகமாய் கூறப்பட்டிருக்கிறது.

வாமம் வாமாங்ககா3யா வத3னஸரஸிஜே வ்யாலகத் வல்லபா4யா
வ்யானம்ரேஷ்வன்யத3 ன்யத்புனரலிகப்4வம் வீதநிச்சேஷரௌக்ஷ்யம் ।
பூ4யோ பூ4யோzபி மோதா3ன்னிபதத3தித3யா சீதலம் சூதபாணே
த3க்ஷாரேரீக்ஷணானாம் த்ரயம்பஹாதாத் ஆசு தாபத்ரயம் ந: ॥ 30 -

இடது மடியில் வீற்றிருக்கும் பார்வதி தேவியின் தாமரை போன்ற முகத்தில்

பற்றிய இடது கண்ணும், திருவடியில் வணங்குவோரிடத்தில் பற்றிய வலது கண்ணும், முன்பு மன்மதனிடம் கோபங்கொண்டு கொடுமையாய் எரித்தும், பார்வதியை மணம் புரிந்த ஆனந்தத்தால் சற்றும் கொடுயிைன்றி பன்மடங்கு கருணையோடு அடிக்கடி அவன்பால் விழுவதுமான் நெற்றிக்கண்ணுமாகிய பரமசிவனுடைய மூன்று நேத்திரங்களும் தாமதமின்றி நம்முடைய மூன்று தாபங்களையும் ஒழித்தருளவேண்டும்.

யஸ்மின்னர்தே4ந்து முக்தத்3யுதி நிசய திரஸ்காரநிஸ்தந்த்3ரகாந்தௌ
காச்மீரக்ஷோதஸங்கல்பிதமிவ ருசிரம் சித்ரகம் பா4தி நேத்ரம் ।
தஸமின்னுல்லோலசில்லீநடவரதருணீ லாஸ்யரங்கா3யமாணே
காலாரே: பா2லதேசே விஹாது ஹ்ருத3யம் வீதசிந்தாந்தரம் ந: ॥ 31

இளம் சந்திரனைப் பழிக்கும் எழில் வாய்ந்த நெற்றியில் மூன்றாவது கண் குங்குமப்பூவாலான அழகிய திலகத்தைப்போல் பிரகாசிக்கின்றது. மஹா புருஷ லக்ஷணமாக ஸாமுத்ரிகா சாஸ்திரத்தில் கூறிய அழகிய ரேகைகள் ஈசனின் நெற்றியில் காணப்படுவதால், இளம் நடனப்பெண்மணிகள் நர்த்தனம் செய்யுமிடம் போன்றும் நெற்றி துலங்குகிறது. பரமசிவனுடைய அந்த நெற்றியில் மற்ற கவலைகள் யாவற்றையும் ஒழித்து என் உள்ளம் எப்பொழுதும் விளையாடட்டும்.

ஸ்வாமின் க2ங்கா3மிவாங்கீ குரு தவ சிரஸா மாமபீத்யர்த2 யந்தீம்
த4ன்யாம் கன்யாம் க2ராம்சோ: சிரஸி வஹதி கின்வேஷ காருண்ய சாலீ|
இத்த4ம் சங்காம் ஜனானாம் ஜனயத்திக4னம் கைசிகம் காலமேக4
ச்சா2யம் பூ4யாது3 தா3ரம் த்ரிபுரவிஜயின: ச்ரேயஸே பூ4யஸே ந: ॥ 32

அகில அண்டங்களுக்கும் நாதனாகிய சிவபெருமானே, மஹாவிஷ்ணுவின் திருவடிகளினின்று உண்டான கங்கையைத் தாங்கள் தலையில் வைத்துக் கொண்டாடவில்லையா? அப்படியே தங்களுடைய ஒரு கண்ணாக இருந்து உலகை விளங்கவைக்கும் கதிரவனுடைய பெண்ணாகிய என்னைத் தாங்கள் ஏன் சிரசில் வைத்துக்கொண்டு அநுக்கிரகம் செய்யக்கூடாது?" என்று யமுனை செய்த பிரார்த்தனைக்கிணங்கி அவளைத் தன் திருமுடியில் அணிந்துகொண்டிருக்கிறாரோ என்று காண்போரனைவரும் ஐயமுறும்படி உள்ளது, ஈசனின் கரிய ஜடாபாகம் நீருண்ட மேகம்போல் அடர்ந்து கறுத்திருப்பதும், பக்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதில் மிகத் தாராளமாயுமிருக்கின்ற பரமசிவனின் ஜடாபாரம் நமக்கு ஏராளமான நன்மைகளைச் செய்யட்டும்.

ச்ருங்கா3ராகல்பயோக்3யை: சிக2ரிவரஸுதா ஸத்ஸகீஹஸ்தலூனை:
ஸூனைராபத்3த4மாலாவலிபரிவிலஸத் ஸௌரபா4க்ருஷ்ட ப்4ருங்க3ம் ।
துங்க3ம் மாணிக்யகாந்த்யா பரிஹஸித ஸுராவாஸசைலேந்த்3ரச்ருங்க3ம்
ஸங்க4ம் ந: ஸங்கடானாம் விகடயது ஸதா3 காங்கடீகம் கிரீடம் ॥ 33

பார்வதியின் உற்ற தோழிகள் தன் கைகளாலேயே நந்தவனம் முதலிய தோட்டங்களிலிருந்து பறித்துத் தொடுத்த அழகிய சிருங்கார ரஸத்திற்கு உவந்த மாலைகளின் வாசனையால் கட்டுண்டு மயங்கிச் சுற்றிவரும் வண்டுகளோடு கூடியதும், உயரமானதும், தக்க இடத்தில் இழைத்த இரத்தினங்களின் ஒளியால் மேரு மலையின் உச்சியையும் பரிகாசம் செய்வதுபோல விளங்குவதும், தன்னைப் பணிந்த அடியார்களுக்கு இன்பமூட்டுவதும், உலோகத்தாலானதுமான சிவபெருமானுடைய கிரீடம் நம்முடைய துன்பக் கூட்டத்தை எப்பொழுதும் அகற்ற வேண்டும்.

வக்ராகார: கலங்கீ ஜட3தனுரஹமப்யங்க்4ரி ஸேவானுபா4வாத்
உத்தம்ஸத்வம் ப்ரயாத: ஸுலப4தரக்4ருணா ஸ்யந்தி3னச்சந்த்3ர
மௌலே: ।
தத்ஸேவந்தாம் ஜனௌகா4: சிவமிதி நிஜயாவஸ்த2யைவ ப்3ருவாணம்
வந்தே3 தே3வஸ்ய சம்போர்முகுட ஸுக4டிதம் முக்தபீயூஷபா4னும் ॥ 34

பாவங்களுக்கு இருப்பிடமாகிய அறிவேயில்லாத வளைந்த இடுப்பையுடைய நான்கூட எளிதில் கருணையைப் பெருக்கும் பரமசிவன் மலரடிகளை வணங்கிச் சேவித்து அவருக்குத் தலைக்கு அலங்காரமாக ஆகிவிட்டேன். ஜனங்களே நீங்கள் ஏன் துன்புறவேண்டும்? 'பரமசிவனை சேவித்து அழியாத ஆனந்தமடையுங்கள்' என்று தன் அனுபவத்தையே ஆதாரமாகக்கொண்டு எல்லோருக்கும் உபதேசம் செய்வதைப்போல் தோற்றுகிறான் சந்திரன். சிவபெருமான் கிரீடத்தில் சேர்ந்திருக்கின்ற அமிருதகிரணனான அந்த இளம் சந்திரனை நான் வணங்குகிறேன்.

காந்த்யா ஸம்பு2ல்லமல்லீ குஸுமத4 வளயா வ்யாப்ய விச்வம் விராஜன்
வ்ருத்தாகாரோ விதன்வன் முஹுரபி ச பராம் நிர்வ்ருதிம் பாத3பா4ஜாம் ।
ஸானந்த2ம் நந்தி3 தோ3ஷ்ணா மணிகடகவதா வாஹ்யமான புராரே:
ச்வேதச்ச2த்ராக்2 யசீதத்3 யுதிரபஹரதாத் ஆபத3 ஸ்தாபதா3 ந: ॥ 35

புதிதாய் மலர்ந்த மல்லிகை மலர் போல் கண்ணைக்கவரும் வெண்மைவாய்ந்து தன்னொளியால் உலகம் முழுவதையுமே துலங்கச் செய்வதும், வட்டமானதும், பரமசிவனுக்கு நிழல் கொடுப்பதால் அவருடைய மலரடிகளை அண்டினோர்களுக்கு பரமானந்த ரூபமான மோக்ஷத்தைக்கூடக் கொடுப்பதும், இரத்தினமிழைத்த வளைகள் பூண்டு ஒளிரும் நந்தியின் கைகளால் உற்சாகத்தோடு தாங்கிப் பிடிக்கப் பட்டதுமான பரமசிவனுடைய வெண்பட்டாலான குடையாக அமைந்த சந்திரன் நம்மை எப்பொழுதும் வாட்டிக்கொண்டிருக்கும் கொடிய ஆபத்துக்களை விலக்கி அருளவேண்டும்.

தி3வ்யாகல் போஜ்ஜ்வலானாம் சிவகி3ரிஸுதயோ: பார்ச்வயோராசரிதானாம்
ருத்3ராணீ ஸத்ஸகீனாம் மத3தரள கடாக்ஷாஞ்சலைரஞ்சிதானாம் ।
உத்3வேல்லத்3 பா3ஹுவல்லீவிலஸனஸமயே சாமராந்தோ3லனீனாம்
உத்3பூ4த: கங்கணாலீவலயகலகலோ வாரயேதா3பதோ3 ந: ॥ 36

தேவர்களுக்கேற்ற அணிகள் அணிந்து பார்வதீ பரமேச்வரர்களின் பக்கத்தில் நிற்பதால் உண்டான ஆனந்த மதத்தால் திளைத்த கடைக்கண்களை உடையவர் சாமரத்தைக் கையிலேந்தி வீசுகிறவர்களுமான பார்வதி தேவியின் தோழிகள் சாமரம் வீசும்பொழுது மேலுங்கீழுமாய் அழகாய் அசையும் கைகளில் இருக்கும் கங்கணங்கள், வளைகள் இவைகளுடைய இனிய ஒலி நம்மை ஆபத்துக்களினின்றும் காக்க வேண்டும்.

ஸ்வர்கௌ³கஸ்ஸுந்த³ரீணாம் ஸுலலிதவபுஷாம் ஸ்வாமிஸேவாபராணாம்
வல்க³த்பூ⁴ஷாணி வக்த்ராம்பு³ ஜபரிவிக³லன் முக்³த⁴கீ³தாம்ருதானி ।
நித்யம் ந்ருத்தான்யுபாஸே பு⁴ஜவித்⁴ருதி பத³ந்யாஸ்பா⁴வாவலோக
ப்ரத்யுத்³யத்ப்ரீதிமாத்³ய த்ப்ரமத² நடநடீ த³த்தஸம்பா⁴வனானி ॥ 37

அழகிய மேனியை உடைய தேவ கன்னிகைகள் பரமசிவனை சேவிப்பதற்கு ஆவல்கொண்டவர்களாய், அலங்காரங்கள் அசைந்து ஒலித்துக் கொண்டும், மலர்ந்த தாமரையினின்று பெருகும் தேன்போல இனிமையான பாட்டைப் பாடிக்கொண்டும் நர்த்தனம் செய்கிறார்கள். அதனிடையே ஹஸ்தாக்ஷேபம், பாதன்யாஸம், பாவங்களை இவைகளைக் கண்டு களிப்புற்றுத் தாங்காமல் மதங்கொண்டு தன்னை மறந்து பிரமத கணங்களே ஸாதுகாரம் செய்கின்றன. அந்த நர்த்தனங்களை நான் சேவிக்கின்றேன்.

ஸ்தா²னப்ராப்த்யா ஸ்வராணாம் கிமபி விசத³தாம் வ்யஞ்ஜயன் மஞ்ஜு வீணா -
ஸ்வானாவச்சி²ன்னதாலக்ரமமம்ருதமிவ ஆஸ்வா த்³யமானம்
சிவாப்⁴யாம் ।
நாநாராகா³திஹ்ருத்³யம் நவரஸமது⁴ர ஸ்தோத்ரஜாதானுவித்³த⁴ம்
கா³னம் வீணாமஹர்ஷே: கலமதிலலிதம் கர்ணபூராயதாம் ந: ॥ 38

ஸ்வரங்களை அதனதன் ஸ்தானங்களினின்று வழுவாமல் பாடுவதால் தேவர்களும் இதுவரையில் அறியாத ஒரு தெளிவை ஸ்வரங்களுக்கு விளக்கிக்கொண்டும் இனிய வீணாநாதத் தோடு வேறுபடாமல் கலந்து ஒழுகிவரும் தாளங்களை உடையதும், பார்வதீ பரமேச்வரர்கள் அமுதம் போல் ஆனந்தமாய்ப் பருகுவதும், பற்பல ராகங்கள் கலந்திருப்பதால் மிக மனோகரமாயிருப்பதும், சிருங்காரம், வீரம், கருணை, அற்புதம், ஹாஸ்யம். பயாநகம், பீபத்ஸம், ரௌத்ரம், சாந்தி என்கிற ஒன்பது ரஸங்கள் கொண்ட ஸ்தோத்ரங்களோடு இணைந்ததும், எளிமைக்கு இருப்பிடம் போன்றதும், சொல்ல இயலாத இனிமை வாய்ந்தது மான நாரத முனிவரின் பாட்டு நம் செவிக்கு இன்பத்தை ஊட்ட வேண்டும்

.

சேதோ ஜாதப்ரமோத³ம் ஸபதி¹ வித³த⁴தீ ப்ராணினாம் வாணினீனாம்
பாணித்³ வந்த்³ வாக்³ரஜாக்³ரத்ஸுலலிதரணித-ஸவர்ணதாலானுகூலா ।
ஸ்வீயாராவேண பாதோ²தர⁴ரவபடுனா நாத³ யந்தீ மயூரீம்
மாயூரீ மந்த³பா⁴வம் மணிமுரஜப⁴வா மார்ஜனா மார்ஜயேன்ன: ॥ 39

தன்னைக் கேட்கும் பிராணிகளுக்கு உடனேயே இன்பத்தைக் கொடுப்பதும், நர்த்தகிகளின் கையில் துலங்கும் தங்கத்தாலான தாளமிடும் வாத்தியத்திற்கு இசைந்ததும், மேகத்தின் குடுகுடு என்ற சப்தத்திற்கு நிகரான தனது ஓசையால் மயிலை அகவச் செய்வதும், மயிலின் நடனத்திற்கு ஏற்றதுமான பசுபதியின் சபையில் வாசிக்கும் இரத்தினம் இழைத்த மிருதங்கத்தின் இனிய ஓசை நமது சோம்பலை அகற்றவேண்டும்.

தே3வேப்4யோ தா3னவேப்4ய: பித்ருமுனிபரிஷத்-ஸித்3த4வித்3யாத4ரேப்ய:
ஸாத்4 யேப்4 யச்சாரணேப்4யோ மனு ஜபசுபதஜ் - ஜாதிகீடாதி3 கேப்4ய: ।
ஸ்ரீகைலாஸப்ரரூடா4 ஸ்த்ருணவிடபிமுகா2-ச்சாபி யே ஸந்தி தேப்ய:
ஸர்வேப்4யோ நிர்விசாரம் நதிமுபரசயே சர்வபாதா3ச்ரயேப்4ய: ॥ 40

உலகில் பிறந்ததற்கு சிவனை வணங்கி வழிபடுவதே சிறந்த பலமாகும். தியானத்தாலோ, சரீரத்தாலோ எவ்விதமாகிலும் அவரை அணுகியவர்களே பெரியோர்கள். எந்தனையோ யாகங்களையும், தவங்களையும் செய்து தேவர் முதலிய பிறப்பு எடுத்தவர்களும் அந்தப் பரமசிவனைத்தான் தியானம் செய்து தரிசித்து இன்புறுகிறார்கள். சிவபெருமான் அத்தகைய தனது அடியாருக்கும் அடியானாக விளங்குகிறார். ஆகவே, பரமசிவன் கருணைக்குப் பாத்திரமாகிய சிவத் தியானம் செய்கின்ற இந்திரன் முதலிய தேவர்களுக்கும், பலி முதலிய அசுரர்களுக்கும், பித்ருக்களுக்கும், ஸனகாதி மஹரிஷிகளுக்கும், ஸித்தர்கள், ஸாத்யாள், வித்யா தரர்கள், சாரணாள் முதலிய தேவயோனியில் பிறந்தவர்களுக்கும், மனிதர்கள், நாற்கால் பிராணிகள், பறவைகள், புழுக்கள் முதலியவைகளுக்கும்; கைலாயத்தில் முளைத்து சிவபெருமான் திருவடிபடும் பாக்கியம் கொண்ட புற்களுக்கும், அவர் உலவும் சமயங்களில் அவருக்கு நிழல் கொடுக்கும் பேறுபெற்ற மரங்களுக்கும், மற்றும் கைலாயத்தில் உண்டான பொருள்களுக்கும் என் மனதை ஒருமுகமாய் வைத்து, வேறு கவலையில்லாமல் நமஸ்காரம் செய்கிறேன்.ச்ச்

த்யா4யன்னித்த2ம் ப்ரபா4தே ப்ரதிதி3 வஸமித3ம் ஸ்தோத்ரரத்னம் படே3த்ய:
கிம் வா ப்3ரூமஸ்த்தீ3யம் ஸுசரிதமத2வா கீர்த்தயாம: ஸமாஸாத் ।
ஸம்பஜ்ஜாதம் ஸமக்3ரம் ஸத3ஸி பஹுமதிம் ஸர்வலோகப்ரியத்வம்
ஸம்ப்ராப்யாயுச்சதாந்தே பத3 மயதி பரப்3ரஹ்மணோ மன்மதா2ரே: ॥ 41

பரமசிவனுடைய மகிமையை எடுத்து விளக்குவதால் சொல்லமுடியாத மகாத்மியம் நிறைந்த இந்த ஸ்தோத்திரத்தை பக்தியோடு எவன் அதிகாலையில் பாராயணம் செய்கின்றானோ அவனுடைய புண்ய விசேஷத்தை உரைக்க யாராலும் முடியாது. ஆனாலும் நாம் சுருக்கமாக வேண்டுமானால் இங்குக் குறிப்பிட முடியும். எல்லாவிதமான சம்பத்துக்களையும் அறிந்த பெரியோர்கள் நிறைந்த சபையில் வெகுமானத்தையும், உலகிலுள்ளோர் அனைவரும் அன்போடு பழகும் உத்தம குணத்தையும் அடைந்து, நூறு வருஷகாலம் இன்புற்று வாழ்ந்து, பிறகு பரப்பிரம்ம

ரூபியாயும், மாயைக்கும் அப்பால் இருப்பவரும் மோட்சஸ்வரூபியாயும் இருக்கும் சதாசிவனுடைய நிலையை அடைகிறான்.

ஸ்ரீ சிவ கேசாதிபாதாந்த வர்ணன ஸ்தோத்ரம்

(கேசத்திலிருந்து பாதம் வரை ஒவ்வோர் அங்கமாக வர்ணிப்பதையே "கேசாதி பாதாந்த வர்ணன ஸ்தோத்ரம்" எனப்படும்.)

தே3யாத்ஸுமூர்த்4நி ராஜத்ஸரஸஸுரஸரித் - பாரபர்யந்த நிர்யத் -
ப்ராம்சுஸ்தம்பா2: பிசங்காஸ்துலித-பரிணதாரக்த சாலீலதா வ: |
து3ர்வாராபத்திக3ர்தசரிதநிகி2லஜநோத் - தாரணே ரஜ்ஜுபூ4தா:
கோ4ராகோ4ர்வீருஹாலீத3 ஹநசிகி2சிகா2: சர்ம சார்வா: கபர்தா3: || 1

கங்கைப் பிரவாகம் கரைபுரண்டு ஓடும்பொழுது அதன் இருகரையோரங்களில் முளைத்த புல்போல காட்சி அளிக்கின்றவைகளும், மஞ்சள் நிறம் பூண்டு பழுத்துச் சிறிது சிவப்போடிப் பாதி மடிந்து கிடக்கும் நெற்பயிர் போன்றவைகளும், தாளாத் துயரம் என்கிற படு குழியில் விழுந்து மேலேற வழி தெரியாமல் துன்புறும் மாந்தர் களைக் கரையேற்றுவதற்கு உகந்த கயிறு போன்றவைகளும். பாவமென்னும் விஷ மரங்களை எரித்துச் சாம்பலாக்குவதற்கு அக்னி சிகை போன்றவைகளுமான பரமசிவன் தலையில் விளங்கும் ஜடைகள் நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்க வேண்டும்.

குர்வந்நிர்வாணமார்க3ப்ரக3 மபரிலஸத்2 ரூப்யஸோபானசங்காம்
சக்ராரீணாம் புராணாம் த்ரயவிஜயக்ருத-ஸ்பஷ்டரேகா2யமாணம் |
அவ்யா த3வ்யாஜமுச்சைரலிகஹிமத4ரா-தி4த்யகாந்தஸ்த்ரிதோ4 த்3யஜ்-
ஜாஹ்நவ்யாப4ம் ம்ருடா3நீகமிதுருடு3பருக்-பாண்ட3ரம் வஸ்த்ரி-புண்ட3ரம் || 2

பரமசிவன் நெற்றியில் மூன்று பட்டையாய் அணிந்த திருநீறு. முக்திவழிச் செல்வோருக்கு எளிதாய் ஏறுவதற்குக் கட்டிய வெள்ளிப்படிக்கட்டு போன்றும், தேவர்களின் பகைவர்களாகிய புரர்கள் என்ற மூன்று அசுரர்களை வென்றதற்கு அடையாளமான மூன்று கோடுகள் போன்றும், நெற்றியென்னும் இமாலயத்தில் நின்று மூன்றாகப் பெருகும் கங்கையைப் போன்றும் விளங்குகிறது. சந்திரனைப் போன்ற வெளுப்பான அந்த முப்பட்டைகள் உங்களைக் கபடமின்றி எப்பொழுதும் இன்புறச் செய்யவேண்டும்

க்ருத்3த்4யத்3 கௌ3ரீப்ரஸாதா3நதிஸமய-பதா3ங்கு3ஷ்ட3 ஸங்க்ராந்தலாக்ஷா-
3ந்து3 ஸ்பர்தி4 ஸ்மராரே: ஸ்படி3கமணித்3 ருஷந்-மக்3நமாணிக்ய-சோப4ம் |
மூர்த்4ந்யுத்3யத்3 தி3வ்யஸிந்தோ4: பதித-சபரிகாகாரி வோ மஸ்தகம் ஸ்தாத்
அஸ்தோகாபத்திக்ருத்யை ஹூதவஹகணிகா-மோக்ஷரூக்ஷம்-ஸதா3zக்ஷி || 3

ஊடலால் கோபித்த பார்வதியைச் சமாதானம் செய்வதற்காக தேவியின் திருவடிகளில் தனது நெற்றி இடிக்கும்படி பணிந்து தவறுதலை மன்னிக்கும்படி கேட்டபொழுது, தேவியின் கால் பெருவிரலிலிருந்து ஒட்டிக்கொண்ட செம்பஞ்சுக் குழம்பு போன்றதும், நெற்றியாகிற ஸ்படிகக்கல்லில் புதைத்த மாணிக்கம் போன்றதும், தலையிலிருக்கும் தேவகங்கையிலிருந்து துள்ளிக்குதித்துத் தவறி வந்தப் பெண்மீனோ என்று வியக்கத்தக்கதும், எப்பொழுதும் நெருப்புத் துளியைக் கக்குவதால் பயங்கரமாயுமிருக்கின்ற சிவபெருமானுடைய நெற்றிக்கண் உங்களுடைய எவ்விதமான பெரும் ஆபத்தையும் அகற்ற உதவவேண்டும்.

பூ4த்யை த்3ருக்3பூ4தயோ: ஸ்யாத்3யத3ஹிமஹிமருக்3 பி3ம்ப3யோ: ஸ்நிக்த4-வர்ணோ
தை3த்யௌக4த்4வம்ஸசம்ஸீ ஸ்பு3ட இவ பரிவேஷோzதவசேஷோ விபா4தி ।
ஸர்க3ஸ்தி2யந்தவ்ருத்திர்மயி ஸமுபக3 தேzதீவ நிர்வ்ருத்தக3ர்வம்
சர்வாணீப4ர் துருச்சைர்யுக3 லமத2 த3த4த்3 விப்4ரமம் தத்3 ப்4ருவோர்: ॥ 4

சந்திரனும், சூரியனும் பகவானுடைய கண்கள் என ஆகமங்களும், புராணங்களும் கூறுகின்றன. அவ்விருவர்களும் சிவபெருமானின் கண்ணானபொழுது தனித்திருக்கும் அவர்களுடைய பரிவேஷம் (சுற்றிலுமிருக்கும் வட்டம்) புருவங்களாகத் தோன்றுகின்றன. அவ்விதம் தனித்துக் காணப்படுவது இயற்கைக்கு மாறானதால் அதை ஒரு அபசகுனமாகக் கருதுவதுண்டு. ஆகவே, அசுராகளுக்குக் கேடுகாலம் நெருங்கிவந்த தன் அறிகுறியாக அந்தப் புருவங்கள் தோன்றுவதாகக் கூறுகிறார். எவை ஆக்கல், காத்தல், அழித்தல் என்கின்ற செய்கைகளைச் செய்துகொண்டிருக்கின்றன வோ, அசுரர்களிடத்தில் கட்டிலடங்கா கர்வங்கொண்டிருந்தபோதிலும் நீயே சரணம் என உனது திருவடியில் வீழ்ந்து கிடக்கும் ஏழையாகிய என்னிடத்தில் சற்றும் கர்வம் இல்லாததும், அழகின் லக்ஷணங்கள் பொருந்தியதுமான அந்தப் பரமசிவனின் இரண்டு புருவங்களும் ஐசுவரியத்தை அளிக்கட்டும்.

யுக்3மே ருக்மாப்3 ஜபிங்கே3 க்3ரஹ இவ பிஹிதே த்3ராக்யயோ: ப்ராக்3 து3ஹித்ரா
சைலஸ்ய த்4வாந்த நீலாம்ப3ரரசிதப்3ருஹத்-கஞ்சுகோzபூ4த் ப்ரபஞ்ச: ।
தே த்ரைநேத்ரே பவித்ரே த்ரித3சவரக4டாமித்ர-ஜைத்ரோக்3ரசஸ்த்ரே
நேத்ரே நேத்ரே ப4வேதாம் த்3ருதமிஹ ப4வதாமிந்த்3 ரியாச்வாந்-நியந்தும் ॥ 5

பரமசிவன் கண்கள் சூரிய சந்திர வடிவமானதால், பார்வதி ஒரு சமயம் அவருடைய கண்களைப் பொத்திய போது, உலகம் கிரஹணம் முழுவதும் ஏற்பட்ட நேரத்தைப்போல - இருள் கவிந்து மூடிக்கொண்டு விட்டது. அசுரர்களை வெல்வதற்குச் சிறந்த ஆயுதமான அந்தப் பரமசிவனின் கண்கள் எனது புலன்களாகிய குதிரைகளை அடக்கும் சாரதிகளாக ஆகட்டும்.

குறிப்பு: -

பரமசிவனிள் வலதுகண்ணானது திறந்தால் பகலும், மூடினால் இரவும் ஏற்படுகிறது என புராணங்களில் காணப்படுகிறது. அம்மாதிரியே கிரஹணங்கள் கூட பார்வதிதேவி சிவனின் கண்களை மூடுவதாலேயே உண்டாகின்றது என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

சண்டீ[3] வக்த்ரார்பணேச்சோ[2]ஸ்த்த[3]னு ப[4]கவத: பாண்டு[3]ருக்பாண்டு[3] க[3]ண்ட[3]
ப்ரோத்[3] யத்கண்டு[3]ம் விநேதும் விதநுத இவ யே ரத்ன கோணைர்விக்[4]-ருஷ்டிம் ।
சண்டா[3]ர்சிர்மண்ட[3]லாபே[4] ஸத்தந்தஜன - த் வாந்தக ண்டா திசௌண்டே '
சாண்டீ[3]சே தே ச்ரியே ஸ்தாமதி[4]கம் அவனதாக[2]ண்ட[3]லே குண்ட[3]லே தே ॥ 6

பரமசிவன் காதில் இரத்தினமிழைத்து சூரிய மண்டலம் போல் ஒளி வீசிக் கொண்டு தொங்குகின்ற எந்தக் காதணிகள் தனது ஒளியால் அவர் கன்னங்களை வெண்மையாகத் தோன்றச் செய்கின்றனவோ; சிவன் சண்டீச்வரியின் இதழைப் பருக ஆவலோடு அசைந்து அணுகியபொழுது கன்னத்தில் இருக்கும் தினவை அகற்றுவது போல எவை உராய்கின்றனவோ; தனது திருமலரடி பணிந்து சேவிப்போர் உள்ளத்தின் இருளை அகற்றுவதில் திறன் கொண்டவைகளும், தேவேந்திரன் பணிவதுமான சண்டீசுவரனுடைய அந்தக் காதணிகள் உங்களுக்கு அதிகமான செல்வத்தைக் கொடுப்பவைகளாய் இருக்கட்டும்.

க[2]ட்வாங்கோ[3]த[3]க்[3]ரபரணே: ஸ்பு[2]டவிகட புடோ வக்த்ரரந்த்[4]ரப்ரவேச-
ப்ரேப்ஸூத[3]ஞ்சத்ப[2]ணோருச்வஸத[3]தி-த[4]வளாஹீந்த்[3]ரசங்காம் த[3]தா[4]ன: ।
யுஷ்மாகம் கம்ரவக்த்ராம்பு[2] ருஹ-பரிலஸத்கர்ணிகாகாரசோப[4]:
ச்வத் த்ராணாய பூ[4]யாத[3]லமதி-விமலோத்துங்க[3]கோண: ஸகோண: ॥ 7

கையில் கட்வாங்கம் தாங்கி நிற்கும் பரமசிவனுடைய முகத்தில் விளங்கும் மூக்கு உயர்ந்திருப்பதால், வாய் என்னும் துவாரத்தில் நுழைய விருப்பங்கொண்டு படமெடுத்துச் சீறும் பாம்போவென ஐயத்தை உண்டாக்குவதும், முகமாகிய செந்தாமரைக்கிடையில் ஒளிரும் கர்ணிகார புஷ்பத்தின் வடிவம் கொண்டதும், நுனியில் சற்று மேல் தூக்கி முகத்திற்குக் கவர்ச்சியளிப்பதுமாக விளங்கும் அந்த மூக்கு உங்களை எப்பொழும் காக்க வேண்டும்.

குறிப்பு: - கட்வாங்கம் என்பது நுனியில் மண்டையோட்டையுடைய ஓர் தடி.

க்ருத்[3]த[4] யத்யத்[3]தா[4] யயோ: ஸ்வாம் தனுமதி லஸதோர் பி[3]ம்பி[3] தாம்லக்ஷயந்தீ
ப[4]ர்த்ரே ஸ்பர்தா[4] திநிக்[4]நா முஹுரிதரவதூ[4]-சங்கயா சைலகன்யா ।
யுஷ்மாம்ஸ்தௌ சச்வது[3]ச்சைப[3]ஹுலத[3]சமீ-சர்வரீசாதிசுப்[4]ரௌ
அவ்யாஸ்தாம் தி[3]வ்யஸிந்தோ[4]: கமிதுரவனமல்லோகபாலௌ கபோலௌ ॥ 8

அலம்பித் துடைத்து விளங்கும் ஸ்படிகக் கல்போன்ற சிவபெருமான் கன்னங்

களில் பார்வதி அன்னை தனது நிழலையே கண்டு வேறு பெண் இருப்பதாய் நினைத்து கணவனிடம், சக்களத்தியிடம் உள்ள பொறாமையால் அதிகமாகக் கோபிக்க நேருகிறது. அத்தகைய சுக்லபக்ஷ தசமி சந்திரன் போல காணப்படுவதும், இந்திரன், விஷ்ணு முதலிய லோக பாலர்கள் வணங்குவதுமான, கங்காதேவியினிடம் அன்புகொண்ட பரமசிவனுடைய கன்னங்கள் நம்மைக் காக்க வேண்டும்.

யோ பா4ஸா பா4த்யுபாந்தஸ்தி2த இவ நிப்4ருதம் கௌஸ்துபோ4 த்ரஷ்டு-மிச்ச2ன்
ஸோத்த2ஸ்நேஹாந்நிதாந்தம் க2லக2தக3ரலம் பத்யுருச்சை: பசூனாம் |
ப்ரோத்3யத்ப்ரேம்ணா யமார்த்3ரா பிப2தி கி3ரிஸுதா ஸம்பத3: ஸாதிரேகா
லோகா: சோணீக்ருதாந்தா யத3த்4ரமஹஸா ஸோ த4ரோ வோ-
வித4த்தாம் || 9

பரமசிவனுடைய கழுத்திற்குச் சற்று உயரத்தில் இருக்கும் உதடு பாலாழியின் உடன் பிறந்த காலகூட விஷத்தைக்கண்டு இன்புற விரும்பி, கௌஸ்துபம்தான் வந்து விட்டதோ என்று காண்போரை நினைக்கச் செய்கிறது. உவகைப் பெருக்கால் மெய்மறந்து பார்வதி தேவி இந்த உதட்டையே பருகுகிறாள். இது தனது பரவிய ஒளியால் உலகனைத்தையும் சிவப்புறச் செய்கிறது. இத்தகைய பெருமைவாய்ந்த சிவபெருமானுடைய கீழ் உதடு நமக்கு எல்லாவற்றிலும் மேம்பட்ட செல்வங்களைஅளிக்க வேண்டும்.

அத்யர்த2ம் ராஜதே யா வத3னசசதராத் உத்க3லச்சாருவாணீ-
பீயூஷாம்ப4: ப்ரவாஹப்ரஸரபரிலஸத்-பே2னபி3ந்த் வாவலீவ |
தே3யாத் ஸா த3ந்தபங்க்திச்சிரமிஹ த3நுதா3யாத3தௌ3வாரிகஸ்ய
த்3யுத்யா தீ3ப்தேந்து3 குந்த3ச்ச2 விரமலதர-ப்ரோன்னதாக்3ரா முத3ம் வ: ||
10

எந்தப் பல்வரிசை, முகமென்னும் சந்திரனில் நின்று பெருகும் அழகிய மொழி என்னும் அமிருதப் பெருக்கின் நுரைபோலத் தோன்றுகிறதோ; பூர்ண சந்திரன், குந்த மலர் இவைகளுக்கொப்பான சோபையுடையதும், வெளுத்துச் சுத்தமாய் கூரிய நுனியுடையதுமான, பக்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி வருபவரு மாகிய பரமசிவனுடைய அந்தப் பல்வரிசை உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும்.

ந்யக்குர்வன்னுர்வராப்4 ருன்னிப4க4னஸமயோத்-கு4ஷ்டமேகௌ4க4 கோஷம்
ஸ்பூ2ர்ஜத்3 வார்த்4 யுத்தி2 தோருத்4 வனிதம்பி பரப்3ரஹ்மபூ4 தோ க3பீ3ர: |
ஸுவ்யக்தோzவ்யக்தமூர்தே: ப்ரகடிதகரண: ப்ராணநாத2ஸ்ய ஸத்யா:
ப்ரீத்யா வ: ஸம்வித3த்4யாத் ப2லவிகலமலம் ஜன்ம நாத2ஸ்ய நாத3: || 11

மழைக்காலத்து மேகக்கூட்டங்கள் கர்ஜித்தலையும், கடலினுடைய அலைகளின் கொந்தளிப்பின் இரைச்சலையும் கீழடக்கிக்கொண்டும், பரப்பிரம்ம வடிவமாயும், ஆழமாயும், மிகத்தெளிவானதும், கேட்போரின் மனதிற்கு வெளிச்சமூட்டுவதுமான ப்ரக்ருதியைத் தனது உடலாய் ஏற்றுக்கொண்டவரும்,

உலகனைத்திற்கும் நாதனாயும். ஸதீதேவியின் ப்ராண நாதனுமாகிய பரமசிவனுடைய நாதம் அன்பினால் உங்களுடைய பயனற்ற இப்பிறவியை இத்துடன் போதுமான தாகச் செய்யட்டும்.

பா4ஸா யஸ்ய த்ரிலோகீ லஸதி பரிலஸத் பே2நபி3ந்த் வர்ணவாந்த:
வ்யாமக்3 நேவாதிகௌ3ரஸ்துலிதஸுரஸரித்3 வாரிபூரப்ரஸார: ।
பீனாத்மா த3ந்தபா4பிர்ப்4ருசமஹஹஹஹகா-ராதிபீ4ம: ஸதே3ஷ்டாம்
புஷ்டாம் துஷ்டிம் க்ருஷீஷ்ட ஸ்பு2டமிஹ ப4வதாம்
அட்டஹாஸோzஷ்டமூர்தே: ॥ 12

பஞ்ச பூதங்கள், சந்திரன், சூர்யன், ஆத்மா ஆகிய எட்டு உருவங்கொண்ட பரமசிவனுடைய எந்த அட்டகாசத்தில் மூவுலகும் நுரை நிறைந்த ஸமுத்திரத்தில் மூழ்கியது போல் இருந்துகொண்டு, ஒளியால் தேவகங்கைக்கு நிகராகத் தன்னைச் செய்துகொள்கிறதோ; பற்களின் ஒளியால் வளர்ந்து அஹஹஹ என்று சப்திப் பதால் பயங்கரமாயிருக்கும் அட்ட ஹாஸம் நமக்கு விரும்பியதைக் கொடுத்து மகிழ்ச்சியையும் அளிக்கட்டும்.

ஸத்3யோஜாதாக்2யமாப்யம் யது3 விமலமுத3க்3-வர்த்தி யத்3வாமதே3வம்
நாம்னா ஹேம்னா ஸத்ருக்ஷம் ஜலத3நிப4-மகோ4ராஹ்வயம் த3க்ஷிணம் யத் ।
யத்3பா3லார்கப்ரப4ம் தத்புருஷநிக3தி3தம் பூர்வமீசானஸம்ஜ்ஞம்
யத்3தி3வ்யம் தாநி சம்போ4ர்ப4வதபிலஷிதம் பஞ்ச த3த்3யுர்முகா3நி ॥ 13

பரமசிவனுக்கு ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்பருஷம். ஈசானம் என்கிற ஐந்து முகங்கள் முறையே மேற்கு, வடக்கு, கிழக்கு. மேல் என ஐந்து திக்குகளை நோக்கி இருக்கின்றன. அவற்றில் ஸத்யோஜாதம் வெளுப்பாயும், வாமதேவம் தங்க நிறமாயும், அகோரம் மேகத்திற்கு நிகராயும், தத்புருஷம் இளங் கதிரவன் போன்றதாயும், ஈசானம் நெருப்புப் போன்றதாயும் இருப்பதாக புராணங்கள் கூறுகின்றன. பரமசிவனுடைய அந்த முகங்கள் உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றட்டும்.

ஆத்மப்ரேம்ணா ப4வான்யா ஸ்வயமிவ ரசிதா: ஸாத3ரம் ஸாம்வனன்யா
மஷ்யா திஸ்ர: ஸுநீலாஞ்ஜனநிப4-க3ரரேகா2: ஸமாபா4ந்தி யஸ்யாம் ।
ஆகல்பானல்பபா4ஸா ப்4ருசருசிரதரா கம்பு3 கல்பாம்பி காயா:
பத்யு: ஸாத்யந்தமந்தர்விலஸது ஸததம் மந்த2ரா கந்த4ரா வ: ॥ 14

தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தபோது காலகூடம் என்னும் விஷம் வெளிக்கிளம்பி உலகையே அழிக்கத் தொடங்கியது. அப்பொழுது சிவபெருமான், விஷ்ணு முதலான தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி விஷத்தை உட்கொள்ளத் தொடங்கினார். பார்வதிதேவி தன் கணவனுக்கு ஏதாவது

தீங்கு நேரிட்டுவிடுமோ என்று அஞ்சி விஷம் கீழே இறங்காவண்ணம் கழுத்தி லேயே தங்கிவிடும்படி நிறுத்தினாள். அதுதான் பரமசிவன் கழுத்தில் ஸாம்வனனீ என்கிற கருப்புமையால் வரைந்த கோடுகளோ என்று சந்தேகிக்கும்படி சிவன் கழுத்தில் மூன்று ரேகைகள் காணப்படுகின்றன. அணிந்த ஆயிரக்கணக்கான ஆபரணங்களின் ஒளியால் மிக அழகு வாய்ந்ததும், சங்கு போல் காணப்படுவதும், எழில் நிரம்பியதுமான, பார்வதி நாதனாகிய சிவபெருமானின் அந்தக் கழுத்து உங்கள் உள்ளத்தில் பிரகாசிக்கவேண்டும்.

வக்த்ரேந்தோ³ர்த³ந்தலக்ஷயாச்சிரமத⁴ ரமஹா-கௌஸ்துப⁴ ஸ்யாப்பு பாந்தே
ஸோத்தா³னாம் ப்ரார்த²யந்ய: ஸ்தி²திமசலபு⁴வே வாரயந்த்யை நிவேசம் |
ப்ராயுங்க்தேவாசிஷோ ய: ப்ரதிபத³ மம்ருதத்வே ஸ்தி²த: காலசத்ரோ:
காலம் குர்வன் க³லம் வோ ஹ்ருத³யமலமயம் க்ஷாலயேத் காலகூட: || 15

பகவான் காலகூடத்தை உட்கொள்ளும் பொழுது கணவருக்கு கெடுதி நேர்ந்து விடுமே என்று அஞ்சி பார்வதி தேவி காலகூடத்திற்கு சிவன் உடம்பில் இடமளிக்காமல் தடுத்துக்கொண்டிருந்தாள். ஆனால் காலகூடம் தன்னுடன் பிறந்த பரமசிவன் முகசந்திரனோடும், பற்களின் ஒளியாகிற லக்ஷ்மியோடும்; இதழ் என்னும் கௌஸ்துபத்தோடும் சேர்ந்து வாழ விரும்பி தான் அமுதத்திற்கு ஒப்பான நிலையை ஏற்றுக்கொண்டது. (அதாவது அமுதம்போல எல்லோரையும் போல அழிவற்றதாக்குகின்றது.) பார்வதிக்கு என்றும் சுமங்கலியாயிருத்தலையும் தந்தது. பரமசிவன் கழுத்தைக் கறுப்பாகச் செய்த அந்தக் காலகூடம் உங்களுடைய உள்ளத்தின் அழுக்கை அகற்றவேண்டும்.

ப்ரௌட⁴ ப்ரேமாகுலாயா த்³ருடதரபரிரம்பே⁴ஷூ பர்வேந்து³முக்²யா:
பார்வத்யாச்சாருசாமீகரவலயபதை³: அங்கிதம் காந்திசாலி |
ரங்க³ன்னாகா³ங்க³தா³ட⁴யம் ஸததமவிஹிதம் கர்ம நிர்மூலயேத் தத்
தோ³ர்மூலம் நிர்மலம் யத் ஹ்ருதி⁵ து³ரிதம் அபாஸ்யார்ஜிதம்-தூ⁴ர்
ஜடேர்வ: || 16

உவகைப் பெருக்கால் பொங்கியெழும் ஆர்வத்தோடு பார்வதிதேவி இறுகத் தழுவும் தருணத்தில், தேவியின் கையில் அணிந்திருந்த தங்க வளைகள்'அழுந்தி அடையாளம் செய்ததும், காந்தி நிரம்பியதும், ஒளிரும் நகங்களால் செய்த தோள் வளைகள் நிரம்பியதும், பரிசுத்தமான துமான பரமசிவனின் கைகளின் அடிப்பக்கம் உங்கள் மனத்திலிருக்கும் காமம், வெகுளி, முதலியவற்றை விலக்கி, கூடாத செயலைச் செய்ததில் உண்டாகிய பாபத்தையும் வேரறுக்கவேண்டும்.

கண்டா²ர்ச்லேஷார்த² மாப்தா தி³வ இவ கமிது: ஸ்வர்க³ஸிந்தோ⁴: ப்ரவாஹா:
க்ராந்த்யை ஸம்ஸாரஸிந்தோ⁴: ஸ்படிகமணி மஹா ஸம்க்ரமாகார
தீ³ர்கா⁴: |
திர்யக்³ விஷ்கம்ப⁴பூ⁴ தாஸ்த்ரிபு⁴வனவஸதே: பி⁴ன்னதை²த்யேப்⁴தே³ஹா:
பா³ஹா வஸ்தா ஹரஸ்ய த்³ருதமிஹ நிவஹா நம்ஹஸாம் ஸம்ஹரந்து
|| 17

பரமசிவன் தாண்டவம் செய்யும்பொழுது ஆகாயத்தில் விரித்த நீண்ட நான்கு கைகள், தேவகங்கை தனது ஆசை நாயகனாகிய தேவலோகத்தைக் கழுத்தில் தழுவிக்கொள்வதற்கு ஆர்வத்தோடு நீட்டிய வெள்ளங்களாகிற கைகள் போலவும், சம்சாரம் என்கிற கடக்க முடியாத கடலைக் கடக்க ஸ்படிகத்தால் கட்டிய பாலம் போல் நீளமாகவும், மூன்று உலகமாகும் வீட்டிற்குக் குறுக்கே இடப்பட்ட விட்டங்கள் போலவும் துலங்குகின்றன. அந்தகாசுரனை வென்ற பரமசினுடைய அந்த நான்கு கைகளும் உங்களுடைய தீவினைகளை அழித்தருளட்டும்.

குறிப்பு: - தேவகங்கை ஆகாயத்தில் பெருகுவதால் ஆகாயத்தை கங்கையின் நாயகனாக கவிகள் வர்ணிப்பது வழக்கம்.

வக்ஷோ த3க்ஷத் விஷோzலம் ஸ்மரப4ர-வினமத்3த3க்ஷஜாக்ஷணவக்ஷோ-
ஜாந்தர் நிக்ஷிப்தசும்ப4ன்மலயஜ-மிலிதோத்3பா4ஸிப4ஸ்மோக்ஷிதம் யத் |
க்ஷிப்ரம் தத்3ரூக்ஷசக்ஷ: ச்ருதிக3ணப2ண-ரத்னௌக4பா4பீ4க்ஷணசோப4ம்
யுஷ்மாகம் சச்வதே3ந: ஸ்படிகமணிசிலா-மண்ட3லாப4ம் க்ஷிணோது || 18

உவகைப் பெருக்கோடு சற்று வணங்கிய பார்வதி அன்னையின் சந்தன மணிந்த கொங்கைகளைத் தழுவியதால் ஒட்டிக்கொண்ட சந்தனத்தை உடையதும், திருநீறு பூசியதும், அணியாயிருக்கும் பாம்புகளின் படங்களில் ஒளிரும் இரத்தினங்களின் கிரணங்களால் இரண்டு மடங்கு சோபிப்பதும், ஸ்படிகக் கற்களின் குவியல் போன்றதுமான சிவபெருமானுடைய மார்பு உங்களுடைய பாபத்தை அழித்து அருளட்டும்.

முக்தாமுக்தே விசித்ராகுலவலிலஹரீ-ஜாலசாலின்யவாஞ்சன்-
நாப்4யாவர்தே விலோல த்3பு4ஜக வரயுதே காலசத்ரோர் விசாலே |
யுஷ்மச்சித்தத்ரிதா4மா ப்ரதிநவருசிரே மந்தி3ரே காந்திலஷ்ம்யா:
சேதாம் சீதாம்சுகௌ3ரே சிரதரமுத3ர-க்ஷீரஸிந்தௌ4 ஸலீலம் || 19

இந்தச் சுலோகத்தில் பரமாசார்யர் தான் பார்த்துச் சொல்லும் ஜனங்களுடைய மனதை மகா விஷ்ணுவாயும், பரமசிவன் வயிற்றைப் பாற்கடலாகவும் வர்ணித்துள்ளார். அதனால் சிவபெருமான் வயிற்றிற்குக் கூறும் அடைமொழிகள் பாற்கடலோடு பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றுக்கேற்ற கருத்தை நாம் இங்கு காணவேண்டும்.

பாலாழி முத்துச்சிப்பிகள் நிறைந்தும், திரைதிரையாக தொடர்ந்துவரும் அலைகளோடு கூடியும், ஆழமான சுழல்கள் சூழ்ந்தும், பல பாம்பு முதலிய நீர்வாழ் ஜந்துக்கள் நிரம்பியும், லக்ஷ்மி தேவிக்கு இருப்பிடமாயும், சந்திரன் உள்ளடங்கி இருப்பதால் அவனுடைய ஒளியால் அதிகம் வெளுத்தும், புதிது புதிதான காந்தியை உடையதாயும் இருக்கிறது. பரமசிவன் முத்துமாலை அணிந்தும், அழகிய வயிறும் அலைகள் போன்ற மூன்று மடிப்புகள் அமைந்தும், சுழல்போல் ஆழமான நாபியோடு கூடியும், அணியாய் அணிந்த பாம்புகள் நிரம்பியும், ஒளிக்கோர் இருப்பிடமாயும், ஒளியெல்லாம் சந்திரன் போல் வெண்மையாயும், கணத்திற்கோர்

அழகுவாய்ந்ததாயும் சிறப்புற்று விளங்குகிறது. இவ்விதம் பாற்கடல் போன்ற சிவபெருமான் வயிற்றில் உங்கள் மனது மகாவிஷ்ணுவிற்கு நிகராக இன்புற்று பள்ளிகொண்டிருக்கட்டும்.

வையாக்4ரீ யத்ர க்ருத்தி: ஸ்பு2ரதி ஹிமகிரே: விஸ்த்ருதோபத்யகாந்த:
ஸாந்த்3 ராவச்சாயமிச்ரா பரித இவ வ்ருதா நீலஜீமூதமாலா |
ஆப3த்3தா4 ஹீந்த்3ரகாஞ்சீகு3ணமதிப்ருது3லம் சைலஜாக்ரீட3பூ4மி:
தத்3 வோ நி: ச்ரேயஸே ஸ்யாஜ்ஜகனமதிக4னம் பா3லசீதாம்சு மௌலே: || 20

கறுப்பான புலித் தோல் உடுத்தி இமயமலையின் தாழ்வரையில் படர்ந்த நீருண்ட மேகம்போல் விளங்குவதும், பாம்பை ஒட்டியாணமாய்க் கட்டிக் கொண்டதும், பார்வதி தேவியின் இன்பக் கேளிக்கைக்கு இருப்பிடமாயும், பெருத்துக் கனமாயுமிருக்கின்ற இளம்பிறை சூடியின் பின்தட்டு உங்களுக்கு முக்தியின்பத்தைத் தந்து அருளட்டும்.

புஷ்டாவஷ்டம்ப4பூ4தௌ ப்ருது2 தரஜக4னஸ்யாபி நித்யம் த்ரிலோக்யா:
ஸம்யக்3வருத்தௌ ஸுரேந்த்3ரத்3விரத3வர-கரோதா3ரகாந்திம் த3தா4னௌ |
ஸாராவூரூ புராரே: ப்ரஸப4மரிக4டா-க4ஸ்மரௌ ப4ஸ்மசுப்4ரௌ
ப4க்தைரத்யார்த்3ரசித்தைர தி4கமவனதௌ வாஞ்சி2தம் வோ வித4த் தாம் || 21

பெருத்துக் கனமான பின் தட்டையும், மூவுலகத்தையும் தாங்கும் தூண்போல் இருப்பவையும், ஐராவதத்தின் துதிக்கைபோல உருண்டு, பெருத்து நீண்டவையும், பலம் பொருந்திக் கொடிய சத்ருக்களையும் வலு விலேயே விழுங்கும் திறமை பூண்டவையும், விபூதி பூசியதனால் வெளுப்பானதும், பக்திமேலீட்டால் உருகிக் கரைந்த மனமுடைய பக்தர்களால் இடைவிடாது பணியப்படுவதுமான பரமசிவனுடைய தொடைகள் உங்களுக்கு விருப்பத்தைக் கொடுக்கட்டும்.

ஆனந்தா3யேந்து3 காந்தோபலரசித: ஸமுத்கா3யிதே யே முனீனாம்
சித்தாத3ர்சம் நிதா4தும் வித3த4தி சரணே தாண்ட3 வாகுஞ்சநாநி |
காஞ்சீபோ4 கீந்த்3ரமூர்த்4னாம் ப்ரதிமுஹு: உபதா4னாயமானே க்ஷணம் தே
காந்தே ஸ்தாமந்தகாரேர்த்3யுதிவிஜித-ஸுதா4 பானுனீ ஜானுனீ வ: || 22

பரமசிவன் முழங்கால்கள், மாமுனிவர்கள் தங்களது மனங்களைச் செலுத்தி தியானம் செய்வதால் அவர்களின் மனதை வைத்துப் பூட்டுவதற்கு சந்திரகாந்தக் கல்லினால் ஆக்கிய அழகிய இரண்டு பேழைகள் போல் இருக்கின்றன. தாண்டவம் ஆடும் போது காலை வளைக்கும் தருணத்தில் இடுப்பு ஒட்டியாணம்போல் கட்டப்பட்ட பாம்புகளுடைய தலைகள் நீட்டிக்கொண்டிருப்பதால் முழங்காலில் படுகின்றன; அதைப் பார்த்தால் இடுப்பில் கட்டிய பாம்புகள் சிறிது நேரம் முழங்காலை தலையணை போல் வைத்துக்கொள்ளுகின்றன என்பது போல்

தோன்றுகிறது. தனது ஒளியால் அமுதத்தையும், சூரியனையும் ஜயித்த பரமசிவனுடைய அத்தகைய முழங்கால்கள் உங்களுக்கு இன்பமூட்டக்கடவது.

மஞ்ஜீரீபூ^{4}தபோ^{4}கி^{3}ப்ரவரக^{3}ண^{2}பணா-மண்ட^{3}லாந்தர் நிதாந்த-
வ்யாதீ^{3}ர்கா^{4}னர்க^{4} ரத்னத்^{3} யுதிகிஸலயிதே ஸ்தூயமானே த்^{3}யுஸத்^{3} பி^{4}: |
பி^{3}ப்^{4}ரத்யௌ விப்^{4}ரமம் வ: ஸ்ப^{3}டிகமணி-ப்^{3}ருஹத்^{3} த^{3}ண்ட^{3}வத்^{3} பா^{4}ஸிதே யே
ஜங்கே^{4} சங்கே^{2}ந்து^{3}சுப்^{4}ரே ப்^{4}ருசமிஹ ப^{4}வதாம் மானஸே சூலபாணே: || 23

தாண்டவம் செய்யும் போது சலங்கைகளாய் கட்டிக்கொண்ட பாம்புகளுடைய சிறந்த படங்களின் நடுவில் துலங்கும் இரத்தினங்களின் நீண்ட ஒளியால் தளிர் விடுகிறவைகள் போலவும், வானோர்கள் போற்றுவதும், பற்பல விலாஸங்களை உடையனவும், ஸ்படிகக் கல்லாலான பெரிய தண்டங்களைப் போல் (தூண்களைப் போல்) விளங்குகிறவைகளும், சங்கு, சந்திரன் போல வெளுத்தவைகளுமான சூல மேந்திய சிவபெருமானுடைய முன்னங்கால்கள் உங்கள் மனதில் மிகவும் ஒளியோடு பிரகாசிக்கட்டும்.

அஸ்தோகஸ்தோமசஸ்த்ரைரபசிதிமமலாம் பூ^{4}ரிபா வோபஹாரை:
குர்வத்பி^{4}: ஸர்வதோச்சை: ஸததமபி^{4} வ்ருதௌ ப்^{3}ரஹ்மவித் தே^{3}வ-
லாத்யை: |
ஸம்யக் ஸம்பூஜ்யமானாவிஹ ஹ்ருதி^{3} ஸரஸீவானிசம் யுஷ்மதீ^{3}யே
சர்வஸ்ய க்ரீட^{3}தாம் தௌ ப்ரபத^{3} வரப்ரு^{3}ஹத் கச்ச^{2} பாவச்ச^{2}பா^{4}ஸௌ ||24

ஸ்தோமம், சஸ்த்ரம் என்பது முறையே யாகங்களில் கையாளப்படும் ஸாம ரிக்வேத மந்த்ர பாகங்கள். அவைகளை உச்சரித்து மனோபாவங்களை காணிக்கையாய் அர்ப்பணம் செய்து எப்பொழுதும் பூஜையைச் செய்கின்ற பிரம்ம ஞானிகளாகிய தேவலர் முதலிய மாமுனிவர்கள் சூழ்ந்திருப்பதும், உலகத்திலுள்ள எல்லாப் பெரியோர்களும் நன்றாய் வழிபடுவதுமான தூய ஒளியுடைய பரமசிவனுடைய ஆமைகள் போன்ற பாதத்தின் மேல்பாகங்கள் உங்களுடைய குளம் போன்ற மனத்தில் விளையாடட்டும்.

யா: ஸ்வஸ்யை காம்சபாதாத^{3} திப^{2} ஹல-கலைத்ரக்தவக்த்ரம் ப்ரணுன்ன-
ப்ராணம் ப்ராக்ரோசயன் ப்ராங்நிஜமசலவரம் சாலயந்தம் தசாஸ்யம் |
பாதா^{3}ங்கு^{2}ல்யோ தி^{3}சந்து த்^{3}ருதமயுக^{3}த்^{3}ருச: கல்மஷப்லோஷகல்யா:
கல்யாணம் பு^{2}ல்லமால்யப்ரகரவிலஸிதா: வ: ப்ரண த^{3}தா^{4}ஹிவல்ய: || 25

முன்னொரு காலத்தில் இராவணன், கைலயங்கிரி, தனது தேருக்கு வழிமறித்து நிற்கவே, அதைத் தூக்கி வேறுபக்கம் எறிய விருப்பங்கொண்டு மலையின் அடியில் தோளைக்கொடுத்துத் தூக்கினான். அக்காலத்தில் மலை அசைவதைக் கண்டு சிவபெருமான் கவனித்துப் பார்த்த பொழுது, இராவணனே அதற்குக் காரணம் என்று அறிந்தார். உடனே தனது கால் கட்டைவிரலால் மலையை அழுத்த இராவணன் அதனடியில் சிக்குண்டு நசுங்கி பகவானைக் கதறித்துதித்தான் என்பது புராணம். தனது மலையை அசைக்கின்றவனும், நசுங்கும் உயிரை

உடையவனும்; வாயிலிருந்து கக்கிய ரத்தத்தையுடையவனுமான இராவணன் எந்த விரல்களின் ஒரு பாகத்தை அழுத்தமாய் ஊன்றியதால் கதறினானோ, எந்த விரல்கள் பாம்புகள் சுற்றியனவாயும், பாபங்களை எரித்து அருள்புரிவனவாயும், மலர்ந்த மல்லிகை மாலைகள் போலும் இருக்கின்றன வோ, அவ்முக்கண்ண னுடைய அந்த விரல்கள் தாமதமின்றி உங்களுக்கு மங்களங்களைச் செய்யட்டும்.

ப்ரஹ்வப்ராசீனப3ர்ஹி: ப்ரமுக2 ஸுரவர-ப்ரஸ்பு2ரன் மௌலிஸக்த-
ஜ்யாயோரத்னோத்கரோஸ்ரைரவிர தமமலா பூ4ரி நீராஜிதா யா ।
ப்ரோத3க்3ராக்3ரா ப்ரதே3யாத் ததிரிவ ருசிரா தாரகாணாம் நிதாந்தம்
நீலக்3ரீவஸ்ய பாதா4ம்புருஹவிலஸிதா ஸா நகா2லீ ஸுகம் வ: ॥ 26

தேவேந்திரன் முதலிய தேவர்கள் விழுந்து பணியும் பொழுது தலையிலிருக்கும் கிரீடங்களில் ஒளிரும் இரத்தினங்களின் கிரணங்களால் ஆரத்தி எடுக்கப்பட்டது போலத் தோற்றுவதும். பரிசுத்தமாய்த் துலங்குவதும், பாதத்தின் நுனியில் தலை தூக்கி நிற்பதும், நக்ஷத்திரங்களின் கூட்டத்தைப்போல் எழில் வாய்ந்ததும், தாமரையை ஒத்த பாதங்களில் பிரகாசிப்பதுமான நீலகண்டருடைய கால் நகங்களின் வரிசை உங்களுக்கு இன்பத்தை அளிக்கட்டும்.

ஸத்யா: ஸத்யாநநேந்தா2வபி ஸவித4க3தே யே விகாஸம் த3தா4தே
ஸ்வாந்தே ஸ்வாம் தே லப4ந்தே ச்ரியமிஹ ஸரஸீவாமரா யே த4தா4னா: ।
லோலம் லோலம்ப3 கானாம் குலமிவ ஸுதி4யாம் சேவதே யே ஸதா ஸ்தாம்
பூ4த்யை பூ4த்யைணபாணேர்விமலதரருச: தே பதா3ம்போ4ருஹே வ: ॥ 27

இரவில் சந்திரோதயமாவதால் தாமரை மலர்வதில்லை என்பது உலகமறிந்த செய்தி. தாமரைகள் குளத்தில் தான் மலரும் என்பதும், வண்டினங்களே அவைகளில் மொய்த்துக்கொள்ளும் என்பதும் அனைவரும் உணர்ந்ததே. சிவபெருமான் திருவடிகளாகும் தாமரைகளோ, பார்வதி தேவியின் முகமென்னும் பூர்ணசந்திரன் அருகிலிருக்கும்பொழுதும் மலர்கிறது. வானோர்கள் இவைகளை உள்ளத்தில் தரித்தபோதிலும், தாமரை ஓடையில் உள்ள ஒளி குன்றாமல் அங்கும் வீசுகிறது. வண்டினங்களைப் போல் அறிவாளிகளின் தொகுதிகள் இடை விடாமல் இந்த பாதத் தாமரைகளில் மொய்த்துக்கொள்கின்றன. (அதாவது எப்பொழுதும் இவற்றை மனத்தில் தரிக்கின்றன) வேதத்தின் வேற்றுருவாகிய மானைக் கையில் தாங்கிய சிவனுடைய திருவடிகள் என்னும் தாமரைகள் உங்களுக்குச் செல்வத்தை அளிக்க வேண்டும்.

யேஷாம் ராகா3தி3 தோ3ஷாக்ஷதமதி யதயேர யாந்தி முக்திம் ப்ரஸாதா3த்
யே வா நம்ராத்மமூர்தித்3 யுஸத்3 ருஷிபரிஷன்-மூர்த்4நி சேஷாயமாணா: ।
ச்ரீ கண்ட3 ஸ்யாருணோத்3 யச்சரணஸரஸிஜ-ப்ரோத்தி2தாஸ்தே ப4 வாக்2யாத்
பாராவராச்சிரம் வோ து3ரிதஹதிக்ருத: தாரயேயு: பராகா3: ॥ 28

புலன்களை அடக்கித் துறவறம் பூண்ட மகான்கள் எந்தப் பாததூளிகளின் அநுக்கிரகத்தால் விருப்பு, வெறுப்பு முதலிய குற்றங்களால் கெடுக்கப்படாத மனத்தோடு மோக்ஷத்தை அடைகிறார்களோ, எந்தத் தூளிகள் பரமசிவன் காலில் வணங்கிய தேவர்களின் தலையில் அலங்கார மாலைபோல சோபிக்கின்றன வோ, மலர்ந்த செந்தாமரை போன்ற கால்களினின்று உண்டாகிய சிவபெருமானுடைய அந்தப் பாததூளிகள் பாபத்தை ஒழித்து பிறவியென்னும் கடலினின்றும் உங்களைக் கரையேற்றவேண்டும்.

பூ[4]ம்நா யஸ்யாஸ்தஸீம்நா பு[4]வனமனுஸ்ருதம் யத் பரம் தா[4]ம தா[4]ம்னாம்
ஸாம்னாமாம்னாயதத்வம் யத[3]பி ச பரமம் யத்கு[3]ணாதீதமாத்[3]யம் ।
யச்சாம்ஹோஹன் நிரீஹம் க[3]ஹனமிதி முஹு: ப்ராஹுருச்சைர்மஹாந்தோ
மாஹேசம் தன்மஹோ மே மஹிதமஹரஹ: மோஹரோஹம் நிஹந்து ॥
29

பரமசிவன் மேனி ஒளி உலகம் முழுவதுமளாவி சூரியன், சந்திரன் முதலிய தேஜே வடிவமாய் நமக்குத் தோன்றுகிறது. அது எல்லா தேஜஸுக்கும் மேற்பட்டதாய் விளங்குகிறது. வேதத்தின் மேலான கருத்தாக இருக்கிறது. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று முக்குண முடைய ப்ரக்ருதியைக் கடந்து அது நிற்கிறது. அதைப் பெரியோர்கள் பாபங்களை அகற்றுவதாயும், ஆசை அற்றதாயும் இருப்பதாய் அடிக்கடி உரக்கக் கூறுகிறார்கள். அனைவரும் பூஜிப்பதான சிவ னுடைய அந்த காந்தி, தினமும் ஓங்கி வளரும் என்னுடைய மோஹத்தின் முளையை அகற்ற வேண்டும்.

“ஸ்ரீ சிவ கேசாதிபாதாந்த வர்ணன ஸ்தோத்ரம்" முற்றிற்று.

ஸ்ரீ சிவ அபராத க்ஷமாபண ஸ்தோத்ரம்

(குற்றங்களுக்கு மன்னிப்புக் கோருவதால் "ஸ்ரீ சிவ அபராத க்ஷமாபண ஸ்தோத்ரம்" எனப் பெயர்)

ஆதௌ3 கர்மப்ரஸங்கா2த் கலயதி கலுஷம் மாத்ரு குக்ஷௌ ஸ்தி2தம் மாம்
விண்மூத்ராமேத்3ய மத்4யே க்வத2யதி நிதராம் ஜாட2ரோ ஜாதவேதா3: ।
யத்3யத்3வை தத்ர து3: க2ம் வ்யத2யதி நிதராம் சக்யதே கேன வக்தும்
க்ஷந்தவ்யோ மேऽபராத4: சிவ சிவ சிவ போ4 ஸ்ரீமஹாதே3வ சம்போ4 ॥ 1

முன் பிறவிகளில் செய்த வினைகளின் பயனாக தாயின் கருவை அடைந்த என்னை, மலமூத்திரங்களினால் சூழப்பட்டு, வயிற்றில் உள்ள "ஜாடராக்னி" தபிக்கச் செய்யவும், அங்கு நான் அடைந்த துன்பங்களைச் சொல்ல யாரால் முடியும்? ஆகவே, "சிவ, சிவ, சிவ, மஹாதேவ, சம்போ," என்று சொல்லுவதினால் என் குற்றங்களைப் பொறுத்தருள்வாய்.

பா3ல்யே து3: கா2திரேகாந் மலலுலிதவபு: ஸ்தன்ய பானே பிபாஸு:
நோ சக்தச்சேந்த்3ரியேப்4யோ ப4வ மலஜனிதா ஜந்தவோ மாம் துத3ந்தி ।
நாநாரோகா3தி3 து3: காத்3ருதி3த பரவச: சங்கரம் ந ஸ்மராமி
க்ஷந்தவ்ய்ப்ப் மேऽபராத4: சிவ சிவ சிவ போ4 ஸ்ரீ மஹாதேவ சம்போ4 ॥ 2

சிறுபிராயத்தில் வருத்தத்துடன் தாயின் பால் குடிக்க ஆசைப்பட்ட என் இந்திரியங்களின் அழுக்கிலிருந்து உண்டான கிருமிகள் என்னைத் துன்புறுத்துகின்றன. பல நோய்களை அடைந்து அழுகைக்கு அடிமையாகி, சங்கரனை நினைக்கவில்லை. சிவ, சிவ, சிவ, மஹாதேவா, சம்போ, என் குற்றத்தைப் பொறுத்தருள்வாய்.

ப்ரௌடோ4ऽஹம் யௌவனஸ்தோ2 விஷயவிஷத4ரை: பஞ்சபி4ர் மர்மஸந்தௌ4
த3ஷ்டோ நஷ்டோ விவேக: ஸுதத4ந யுவதிஸ்வாத3 ஸௌக்2யே-
நிஷண்ண: ।
சைவே சிந்தாவிஹீனம் மம ஹ்ருத3யமஹோ மான க3ர்வாதி4ரூட4ம்
க்ஷந்தவ்யோ மேऽபராத4: சிவ சிவ சிவ போ4 ஸ்ரீ மஹாதேவ சம்போ4 ॥ 3

வாலிபப் பிராயத்தை அடைந்த நான், உலக விஷயங்கள் என்னும் விஷத்தைத் தன்னுள் அடக்கிய ஐம்புலன்களினாலும் ஒவ்வொரு இடத்திலும் கடிக்கப்பட்டு விவேகத்தை இழந்துவிட்டேன். 'பிள்ளை-பொருள்-இளம் மனைவி' ஆகிய இன்பத்தில் ஈடுபட்டு. சிவபக்தியை மறந்து, அறியாமையினால் செருக்கடைந்

திருக்கும் என் குற்றங்களை சிவ, சிவ, சிவ, மஹாதேவா, சம்போ பொறுத் தருள்வாய்.

வார்த4க்யே சேந்த்3ரியாணாம் விகலக3தி மதச்சாதி4 தை3 வாதி3தாபை:
ப்ராப்தைரோகை3ர்வியோகை3ர் வ்யஸனக்ருசதனோ ஞப்திஹீநம் ச தீ3னம் ।
மித்2யா மோஹாபி4லாஷைர்ப்ர4 மதி மம மனோ தூ4ர்ஜடேர்த்4யான சூன்யம்
க்ஷந்தவ்யோ மே அபராத4: சிவ சிவ சிவ போ ஸ்ரீமஹாதே3வ சம்போ4 ॥ 4

முதுமைப் பருவத்தில் புலன்கள் வலுவிழந்து, ஆதிபௌதிகம் எனப்படும் பஞ்சபூதங்களினாலும், ஆத்யாத்மிகம் என்னும் உடலில் ஏற்படக்கூடியதும், ஆதிதைவிகம் எனும் கடவுளினால் ஏற்படக்கூடியதுமான மூன்று முறையான துயரங்களை அடைந்து, நோயுற்று, நலிவுற்று, நல்லறிவை இழந்து, தீனருக்குத் தாழ்ந்து, பொய்யான மோகத்தினால் உண்டான ஆசையில் உழன்று, சிவஞான மில்லாமலிருக்கும் என்னை சிவ, சிவ, சிவ, மஹாதேவ, சம்போ, குற்றம் பொறுத்தருள்வாயாக.

ஸ்நாத்வா ப்ரத்யூஷ்காலே ஸ்நபநவிதி4 விதௌ4 நாஹ்ருதம் கா3ங்க3தோயம்
பூஜார்த2ம் வா கதா3சித்3ப3ஹுதர க3ஹனே஽க2ண்டபி3ல்வீத3ளம் வா ।
நாநீதா பத்3மமாலா ஸரஸி விகஸிதா க3ந்த4 புஷ்பைஸ்த்வதர்த2ம்
க்ஷந்தவ்யோ மே஽பராத4: சிவ சிவ சிவ போ4 ஸ்ரீ மஹாதே3வ சம்போ4 ॥ 5

பிரதி தினமும் விடியற்காலையில் எழுந்து உன் அபிஷேகத்திற்கு கங்கை நீர் கொண்டுவரவில்லை. காட்டிலிருந்து உன்னைப் பூஜிக்க மூவிதழ்கொண்ட பில்வமும் கொண்டுவரவில்லை. நீர் நிறைந்த குளத்தில் பூத்து மலர்ந்திருக்கும் பூக்களாலான மாலையும், மணமுள்ள சந்தனம், புஷ்பங்கள் ஆகிய எதுவும் உனது பூஜைக்கு நான் தயார்செய்யவில்லை. சிவ, சிவ, சிவ, மஹா தேவ, சம்போ, என் குற்றங்களைப் பொறுத்தருள்வாய்.

து3க்தை4ர்மத்4வாஜ்யயுக்தைர் த3தி4கு3ட3 ஸஹிதை: ஸ்நாபிதம் நைவ லிங்க3ம்
நோ லிப்தம் சந்த3நாத்3யை: கநகவிரசிதை: பூஜிதம் ந ப்ரஸூநை: ।
தூ4பை: கர்பூரதீ3பைர் விவித4ரஸயுதைர் நைவப4க்ஷ்யோபஹாரை:
க்ஷந்தவ்யோ மே஽பராத4: சிவ சிவ சிவ போ4 ஸ்ரீ மஹாதேவ சம்போ4 ॥ 6

பால், தேன், நெய், தயிர், வெல்லம் இவைகளால் சிவலிங்கத்திற்கு நான் அபிஷேகம் செய்யவில்லை. சந்தனம் முதலியவைகளால் அலங்காரமும் செய்யவில்லை. நல்ல மலர்களால் பூஜையும் செய்யவில்லை. தூபம், தீபம், கற்பூர நீராஜனம் செய்யவில்லை. உயர்ந்த சுவையுள்ள பொருட்களை நிவேதனம் செய்ய வில்லை. சிவ, சிவ, சிவ, மஹாதேவ, சம்போ, என் குற்றங்களைப் பொறுத் தருள்வாயாக.

நோ சக்யம் ஸ்மார்தகர்ம ப்ரதிபத³ க³ஹனே ப்ரத்யவாயாகுலாட்⁴யே
ச்ரௌதே வார்தா கத²ம் மே த்³விஜகுலவிஹிதே ப்³ரஹ்மமார்கா³னு - ஸாரே ।
தத்வேsஜ்ஞாதே விசாரை: ச்ரவண மனநயோ: கிம் நிதி³த்⁴யாஸிதவ்யம்
க்ஷந்தவயோ மேsபராத⁴: சிவ சிவ சிவ போ⁴ ஸ்ரீ மஹாதே³வ சம்போ⁴ ॥ 7

"எதைச் செய்தால் தவறிவிடுமோ என்பதால் தருமசாத்திரங்களில் சொல்லப்பட்ட கடமைகள் ஒன்றையும் நான் செய்யவில்லை. அந்தணர்களுக் கென்று சொல்லப்பட்டிருக்கும் வேதத்தில் சொல்லப்பட்ட கடமைகளின் வார்த்தை கூட என்னிடமில்லை. எங்கும் நிறைந்த பரம்பொருளை விசாரம் செய்ய அறியாமையால் கேட்பது, சிந்தனை செய்வது, அனுபவத்தில் கொண்டுவருவது இவை ஒன்றும் என்னிடமில்லை. சிவ, சிவ, சிவ, மஹா தேவ, சம்போ என் குற்றங்களைப் பொறுத்தருள்வாயாக.

த்⁴யாத்வா சித்தே சிவாக்³யம் ப்ரசுரதரத⁴னம் நைவ த³த்தம் த்³விஜேப்⁴ய:
ஹவ்யம் தே லக்ஷஸங்க்²யைர் ஹுத வஹவத³னே நார்பிதம் பீ³ஜ - மந்த்ரை:।
நோ தப்தம் கா³ங்க³ தீரே வரதஜப நியமை ருத்³ர ஜாப்யம் ந ஜப்தம்
க்ஷந்தவ்யோ மேsபராத⁴: சிவ சிவ சிவ போ⁴ ஸ்ரீ மஹாதே³வ சம்போ⁴ ॥ 8

சிவன் எனும் மேலான செல்வத்தை மனதில் நினைத்து, அந்தணர்களுக்கு நிறையச் செல்வத்தைத் தானம் செய்யவில்லை. உன் மந்திரங்களினால் (அன்னம் நெய், சமித் முதலிய) பொருட்களை வேள்வித் தீயில் முறைப்படி லக்ஷம் ஆவ்ருத்த ஹோமம் செய்யவில்லை. கங்கைக்கரை சென்று முறைப்படி விரதம், ஜபம் செய்யவில்லை. சிவ, சிவ, சிவ, மஹாதேவ, சம்போ, என் குற்றங்களைப் பொறுத்தருள்வாயாக.

நக்³நோ நி:ஸங்க² சுத்³த⁴ ஸ்த்ரிகு³ண விரஹிதோ த்⁴வஸ்தமோஹாந்த⁴-காரோ
நாஸாக்³ரன்யஸ்தத்³ருஷ்டிர் விதி³தப⁴வகு³ணோ நைவ த்³ருஷ்ட: கதா³சித்।
உன்மந்யாவஸ்த³யா த்வாம் விக³தக³திமதி: சங்கரம் ந ஸ்மராமி
க்ஷந்தவ்யோ மேsபராத⁴: சிவ சிவ சிவ போ⁴ ஸ்ரீ மஹாதே³வ சம்போ⁴ ॥ 9

அவதூதனாகி, பற்றற்ற தூயவனாய் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக் குணங்கள் அற்றவனாய், அறியாமை என்னும் இருள் போக்கடிக்கப்பட்டவனாய், மூக்கின் நுனியில் வைக்கப்பட்ட கண்களை உடையவனாய், பரமேச்வரனின் குணங்களை அறிந்துபார்க்கவில்லை. உன் மநீ என்னும் நிலையை அடைந்து-புத்தியை நிலை நிறுத்தி சங்கரனை நினைக்கவில்லை. சிவ, சிவ, சிவ, மஹாதேவ, சம்போ, என் குற்றங்களைப் பொறுத்தருள்யாயாக.

ஸ்தி²த்வா ஸ்தா³னே ஸரோஜே ப்ரணவமய மருத்கும்பி⁴தே ஸூக்ஷ்மமார்கே³
சாந்தே ஸ்வாந்தே ப்ரலீனே ப்ரகடித விப⁴வே தி³வ்யரூபே சிவாக்³யே ।
லிங்கா³க்³ரே ப்³ரஹ்மவாக்யே ஸகலதநுகதம் சங்கரம் ந ஸ்மராமி
க்ஷந்தவயோ மேऽபராத⁴: சிவ சிவ சிவ போ⁴ ஸ்ரீ மஹாதே³வ சம்போ⁴ ॥ 10

தலையிலுள்ள ஆயிரம் இதழ்த் தாமரையில் (அல்லது ஹ்ருதய தாமரையில்) மூச்சையடக்கி ஓம் என்பதில் நின்று, அமைதியான புகழ்பெற்ற ஒளி வடிவமான சிவன் பெயரில் லிங்க ரூபத்தில் என்னை ஒடுக்கி. மஹாவாக்கியங்களில் போற்றப் பட்டு. எல்லா உயிர்களிலும் ஊடுருவி நிற்கும், சங்கரனை நான் நினைக்கவில்லை. சிவ, சிவ, சிவ, மஹாதேவ, சம்போ, என் குற்றங்களைப் பொறுத்தருள்வாயாக.

ஹ்ருத்³யம் வேதா³ந்தவேத்³யம் ஹ்ருத³யஸாஸிஜே தீ³பதமுத்³யத்ப்ரகாசம்
ஸத்யம் சாந்தஸ்வரூபம் ஸகலமுனிமந: பத்³ம ஷண்டைகவேத்³யம் ।
ஜாக்³ரத் ஸ்வப்னே ஸுஷுப்தௌ த்ரிகு³ண விரஹிதம் சங்கரம் ந ஸ்மராமி
க்ஷந்தவயோ மேऽபராத⁴: சிவ சிவ சிவ போ⁴ ஸ்ரீ மஹாதே³வ சம்போ⁴ ॥ 11

உயிர்களின் இதயத்தில் உள்ளதும், மறைகளின் முடிவுகளால் அறியத் தக்கதும், இதயகமலத்தில் ஒளிவிட்டு உயர்ந்து விளங்குவதும், உண்மையானதும், அமைதியை உருவமாய்க் கொண்டதும், முனிவர்களின் மனதாகிற தாமரைகளுள் அறியத்தக்க ஒரே பொருளும், விழிப்பிலும் கனவிலும் தூக்கத்திலும் முக்குண மற்று விளங்குகிறதுமான சங்கரனை நான் நினைக்க வில்லை. சிவ, சிவ, சிவ, மஹா தேவ. சம்போ, என் குற்றங்களைப் பொருத்தருள்வாயாக.

சந்த்³ரோத்³பா⁴ ஸிதசேக²ரே ஸ்மரஹரே க³ங்கா³த⁴ரே சங்கரே
ஸர்பைர் பூ⁴ஷித கண்ட² கர்ண விவரே நேத்ரோத்த² வைச்வானரே ।
த³ந்தித்வக் க்ருத ஸுந்த³ராம்ப³ரத⁴ரே த்ரைலோக்யஸாரே ஹரே
மோக்ஷார்த²ம் குரு சித்த வ்ருத்திமமலாம் அந்யைஸ்து கிம் கர்மபி⁴: ॥ 12

பிறைச் சந்திரனை தலையில் உடையவரும், காமனை எரித்தவரும், கங்கையை சடையில் கொண்டவரும், உலகத்திற்கு நன்மை செய்கிற சங்கரரும், பாம்புகளால் அலங்கரிக்கப்பட்ட கழுத்து காதுகளையுடையவரும், மூன்றாவது கண்ணில் நெருப்பை உடையவரும், யானைத் தோலாகிற ஆடையை அழகாய் அணிந்தவரும் மூவுலகிற்கும் ஸாரமான பொருளாய் விளங்குகிற ஹரனான பரமேச்வரனிடத்தில் மோக்ஷத்தை அடைய வேண்டி மாசற்ற உள்ளத்தால் எண்ணவேண்டும். வேறு கர்மாக்களால் என்ன பயன்?

கிம் யானேன த⁴னேன வாஜிகரிபி⁴:: ப்ராப்தேன ராஜ்யேன கிம்
கிம் வா புத்ரகலத்ரமித்ரபசுபி⁴: தே³ஹேன கே³ஹேன கிம் ।
ஜ்ஞாத்வைதத் க்ஷண ப⁴ங்கு³ரம் ஸபதி³ ரே த்யாஜ்யம் மனோ தூ³ரத:
ஸ்வாத்மார்த²ம் கு³ருவாக்யதோ ப⁴ஜ ப⁴ஜ ஸ்ரீ பார்வதீ வல்லப⁴ம் ॥ 13

தேர், செல்வம், குதிரை, யானைகள், அரசு இவைகளை அடைவதால் என்ன பயன்? பிள்ளை, மனைவி. தோழன், பசுக்கள், அழகான உடல், வீடு இவைகளாலும் எனன பயன்? ஏ, மனமே இவைகள் ஒரு கணத்தில் அழியக்கூடியவை என் உணர்ந்து, தூர விலக்கி, உன் ஆத்மா கடைத்தேற மௌனமாய், பார்வதியுடன் கூடிய பரமேச்வரனை குரு உபதேசத்தால் வழிபடுக, வழிபடுக.

பௌரோஹித்யம் ரஜநிசரிதம் க்^{3}ராமணீத்வம் நியோகே^{3}
மாடா^{2}பத்யம் ஹ்யந்ருத வசனம் ஸாக்ஷிவாத^{3}: பராந்தம் |
ப்^{3}ரஹ்மத்^{3}வேஷ: க^{3}லஜனரதி: ப்ராணிநாம் நிர்த^{3}யத்வம்
மாபூ^{4} தே^{3}வம் மம பசுபதே ஜன்ம ஜன்மாந்தரேஷு || 14

புரோகிதராயிருப்பது, இரவில் தவறான காரியங்களைச் செய்வது (திருடுதல் போன்றது), மணியம் பார்ப்பது, உத்தரவுக்குக் கீழ்ப்படிவது, மடத்தின் தலைவரா யிருப்பது, பொய்ச்சாக்ஷி சொல்வது, பிறர் வீட்டில் சாப்பிடுவது, அந்தணனிடத்தில் வெறுப்பு, கெட்டவர்களுடன் சேர்க்கை, உயிர்களிடத்தில் தயவில்லாமலிருப்பது இவைகள் எதுவொன்றும் இந்தப் பிறவியிலோ மறுபிறவிகளிலோ பசுபதியான பரமேச்வரனே! எனக்கு உண்டாகவேண்டாம்.

ஆயுர்நச்யதி பச்யதாம் ப்ரதிதி^{3}னம் யாதி க்ஷயம் யௌவனம்
பரத்யாயந்தி க^{3}தா: புனர்ந தி^{3}வஸா: காலோ ஜக^{3}த்^{3}பக்ஷக: |
லக்ஷ்மீஸ்தோயரங்க^{3} ப^{4}ங்கசபலா வித்^{3}யுச்சலம் ஜீவிதம்
தஸ்மான்மாம் சரணாக^{3}தம் கருணயா த்வம் ரக்ஷ ரக்ஷாது^{4}நா || 15

பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே தினமும் ஆயுள் முடிகிறது. யௌவனமும் அழிந்துகொண்டே போகிறது, சென்ற நாட்கள் திரும்பிவருவதில்லை. காலமானது உலகை விழுங்கி விடுகிறது. செல்வமும் கடல் அலை வந்து போவது போல் நிலையற்றது. இந்த வாழ்க்கை மின்னல் தோன்றி மறைவது போலப் போய்விடும். ஆகையால் உன்னைச் சரணடைந்த என்னை நீ கருணையுடன் இப்பொழுதே காப்பாற்றவேண்டும்.

சிவபுஜங்கம்

(சிவன் பாம்புகளைத் தமக்கு மிகவும் உகந்த அணிகலன்களாகக் கொண்டிருப்பதால் இந்தச் ச்லோகங்கள் புஜங்கப்ராயாத விருத்தத்தில் அமைக்கப்பட்டுள்ளது.)

க3லத்3தா3ன க3ண்ட3ம் மிலத்3ப்4ருங்க3 ஷண்டம்
சலச்சாரு சுண்ட3ம் ஜ3க3த் த்ராண சௌண்ட3ம் |
கனத்3த3ந்தகாண்ட3ம் விபத்3ப4ங்கசண்ட3ம்
சிவப்ரேம்பிண்ட3ம் ப4ஜேவக்ரதுண்ட3ம் || 1

கருவண்டுகளின் குழாம் மொய்த்திடும் மதஜலம் வழியும் நெற்றியை யுடையவரும், எழிலுடன் அசையும் தும்பிக்கையை உடையவரும், உலகையெலாம் காப்பாற்றும் ஆற்றல் கொண்டவரும், பிரகாசமான தந்தங்களையுடையவரும், இன்னல்களை அறவே துடைப்பவரும், சிவபெருமானின் அன்பே உருவெடுத்ததென விளங்குபவருமான ஆனை முகத்தானை வணங்குகிறேன்.

அனாத்3யந்தமாத்3யம் பரம் தத்த்வமர்த்2ம்
சிதா3காரமேகம் துரீயம் த்வமேயம் |
ஹரிப்3ரஹ்ம ம்ருக்3யம் பரப்3ரஹ்மரூபம்
மனோவாக3தீதம் மஹ: சைவமீடே3 || 2

ஆதியுமந்தமும் இல்லாதவரும், எல்லாவற்றிற்கும் முதல்வராகவும், பரம தத்துவத்தின் உண்மைப் பொருளாக அறிவொளியாய், ஒன்றாய், விழிப்பு, கனவு, துயில் முதலிய நிலைகளுக்கப்பால் சாக்ஷியாக இருப்பவரும், அளவிலா சக்தி படைத்தவரும், ஹரி, பிரஹ்மா முதலியவர்களாலும் காண இயலாதவரும், பரப்ரஹ்மமாய் விளங்குபவரும், மனதுக்கும், சொல்லுக்கும் அப்பாற்பட்டவருமான சிவபெரும் ஜோதியை போற்றுவேன்.

ஸ்வசக்த்யாத3 சக்த்யந்த ஸிம்ஹாஸனஸ்த2ம்
மனோஹாரி ஸர்வாங்க ரத்னோருபூ4ஷம் |
ஜ3டாஹிந்து3 க3ங்கா3ஸ்தி2 ஸம்யாகமௌலிம்
பராசக்தி மித்ரம் நும: பஞ்சவக்த்ரம் || 3

ஆதிசக்தியாம் ஸ்வசக்தியாம் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பவரும், காண்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் எழிலுடன் கூடிய அங்கங்களில் ரத்னமயமான அணிகலன்களை அணிந்து திகழ்பவரும், சடை, அரவு, நிலவு, கங்கை, என்பு முதலியவைகளைத் தாங்கி நிற்கும் முடியையுடையவரும், பராசக்தியின் பங்காளனுமான ஐந்து முகத்தானை வணங்குகிறோம்.

சிவேசானதத்பூருஷா கோ4ரவாமா-

தி3பி4: பஞ்சபி4ர் ஹ்ருன்முகை2: ஷட்3பி4ரங்கை3: ।
அநௌபம்ய ஷத்ரிம்சதம் தத்வவித்3யா-
மதீதம் பரம்த்வாம் கத2ம் வேத்தி கோவா ॥ 4

சிவ ஸ்வரூபத்தை ஹ்ருதயமாயும், ஈசான தத்புருஷ அகோர வாம தேவாதி (ஸத்யோஜாதாதி) ஐந்து ரூபங்களை அங்கங்களாயும் கொண்ட இணையற்றவரே, முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவரே, தங்களை எவர் எங்ஙனம்தான் அறியமுடியும்.

ப்ரவால ப்ரவாஹ ப்ரபா4சோணமர்த4ம்
மருத்வந் மணி ஸ்ரீ மஹ: ச்யாமமர்த4ம் ।
குணஸ்யூதமேதத்3வபு: சைவமந்த:
ஸ்மராமி ஸ்மராபத்தி ஸம்பத்திஹேதும் ॥ 5

பவழம் போல் சிவந்ததான ஒரு பாதியும், இந்திர நீலமணி போன்ற கருத்ததானவோர் பாதியுடனும் கூடியதும், குணங்களுடன் விளங்குவதுமான தங்கள் ஸ்வரூபத்தை அர்த்த கர்மாதிகளை அடையும் பொருட்டு தியானிக்கிறேன்.

ஸ்வஸேவாஸமாயாத தேவாஸுரேந்த்ரா-
நமந்மௌலி மந்தா3ரிமாலாபி4ஷிக்தம் ।
நமஸ்யாமி சம்போ4 பதா3ம்போ4ருஹம் தே
ப4வாம்போ4தி போதம் ப4வானீவிபா4வ்யம் ॥ 6

தங்களை வணங்கும் பொருட்டு தங்கள் கிரீடங்களிலுள்ள மந்தார மலர் மாலைகளால் தேவர்களும், அசுரர்களும் வருடும் தங்கள் திருவடித்தாமரைகளை பிறப்பிறப்பென்னும் சம்சாரக்கடலைக் கடக்க ஹேதுவாயும், பவானியால் பூஜிக்கப் பட்டதுமாகிய தங்கள் திருவடித்தாமரைகளைத் தியானம் செய்கிறேன்.

ஜ்2க3ந்நாத2 மந்நாத2 கௌ2ரீஸநாத2
ப்ரபந்நானுகம்பின் விபந்நார்த்திஹாரின் ।
மஹ:ஸ்தோம மூர்த்தே ஸமஸ்தைகபந்தோ4
நமஸ்தே நமஸ்தே புனஸ்தே நமோஸ்து ॥ 7

உலகங்களுக்கெல்லாம் தலைவனே, எனையாட்கொள்ளும் தலைவா, கௌரியுடன் கூடி விளங்குபவரே, தங்களைச் சரணென நாடியவரிடம் அருள்பாலிப்பவரே இன்னல்களையெல்லாம் நீக்குபவரே; புகழ்களுக்கெல்லாம் உறைவிடமானவரே, உலகிலுள்ளோர் யாவருக்கும் ஒரே சுற்றமாய் விளங்குபவரே, தங்களுக்கு'நமஸ்காரம் - மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

விரூபாக்ஷ விச்வேச விச்வாதி3 தே3வ

த்ரயீமூல சம்போ4 சிவ த்ரயம்ப3கத்வம் ।
ப்ரஸீத3 ஸ்மர த்ராஹி பச்யாவமுக்த்யை
க்ஷமாம் ப்ராப்நுஹி த்ரயக்ஷமாம்ரக்ஷமோதா3த் ॥ 8

விருபாக்ஷ, விச்வேச, சகலதேவதைகளுக்கும் மேலானவரே, வேதங்களுக் கெல்லாம் மூலமானவரே சம்போ, சிவ, த்ரயம்பக ! எளியேன்பால் அருள் புரிக, ஏழையை நினைமின், என் - குற்றங்களை மன்னித்து மோக்ஷத்தையளிப்பீராக, முக்கண்ணே, அன்புடன் எனை ஆட்கொள்வீர்.

மஹாதே3வ தே3வேச தே3வாதி3 தே3வ
ஸ்மராரே புராரே யமாரே ஹரேதி ।
ப்3ருவாண: ஸ்மரிஷ்யாமி ப4க்த்யா ப4வந்தம்
ததோ மே த3யாசீல தே3வ ப்ரஸீத3 ॥ 9

மஹா தேவ, தேவேச, தேவாதிதேவ, காமனை எரித்தவனே, திரிபுரங்களையும் எரித்தவனே, யமனை ஒடுக்கினவரே, ஹரா, என்று உன்னைப்போற்றி, பக்தியுடன் உம்மை ஸ்மரிப்பேன். ஆதலின் தயாளனான தாங்கள் என்பால் கருணை செய்தல் வேண்டும்.

த்வத3ன்ய: சரண்ய: ப்ரபந்நஸ்ய நேதி
ப்ரஸீத3 ஸ்மரந்நேவ ஹன்யாஸ்து தை3ன்யம் ।
ந சேத்தே ப4வேத்3ப4க்த வாத்ஸல்ய ஹானி -
ஸ்ததோ மே தயாலோ ஸதா3 ஸந்நிதே4ஹி ॥ 10

தங்களை சரணடைந்தவர்களுக்கு வேறு துணை யென்பதில்லாததால், இடுக் கண்களில் அல்லல்படும் என்பால் அருள்பாலிப்பீராக. அங்ஙானம் அருள் செய்யாவிடில், மெய்யன்பர்களின் பால் வாத்ஸல்யம் உடையவரெனும் தங்கள் புகழ் எங்ஙனம் ஓங்கும்? ஆதலின், அருட்பெருங்கடலே என்பால் தயை செய்வீராக.

.

அயம்தா3ன காலஸ் த்வஹம் தா3னபாத்ரம்
ப4வானேவ தா3தா த்வத3ன்யம் ந யாசே: ।
ப4வத்3ப4க்திமேவ ஸ்தி2ராம் தே3ஹி மஹ்யம்
க்ருபாசீல சம்போ4 க்ருதார்தோ2ஸ்மி தஸ்மாத் ॥ 11

இதுவே அருளெனும் கொடையை வழங்க தகுந்த தருணம். அடியேனே அக்கொடையை ஏற்கத் தகுதிபெற்றவன். கொடைவள்ளலும் தாங்களே. தங்களை யன்றி வேறெவரிடமும் அருளை யாசியேன். தங்கள் பால் ஸ்திரமான பக்தியை எனக்கு அருள்வீராக. அருளாளா, சம்போ, தங்கள் பக்தியால்தான் க்ருதார்த்தனாவேன்.

.

பசும் வேத்ஸி சேந்மாம் தமேவாதி4ரூட4:

கலங்கீதி வா மூர்த்4னி த3த்ஸே தமேவ ।
த3விஜி3ஹ்வ: புன ஸோ஽பி தே கண்ட2 பூ4ஷா
தவத3ங்கீ3க்ருதா: சர்வே஽பி த4ன்யா: ॥ 12

என்னைத் தாங்கள் பசு என்று கருதினால், என்னைத் தங்கள் வாகனமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். களங்கங்களுடன் கூடியவனாக என்னைக் கருதுவீரானால், என்னைத் தங்கள் சிரசில் அணிந்து கொள்ளுங்கள். நாவிரண்டு படைத்தவனாக என்னைக் கருதுவீரானால், தங்கள் கழுத்துக்கு என்னை அணிகலனாக ஏற்றுக் கொள்ளுங்கள். ஹே சர்வ! தங்களால் ஏற்கப்பட்டவர்களெல்லாம் எத்தனை குறைபாடுள்ளவர்களாயினும், மேன்மை பெற்றவரே.

ந சக்றோமி கர்தும் பரத்3ரோஹலேசம்
கத2ம் ப்ரீயஸே த்வம் ந ஜா3னே கி3ரீச ।
ததா2ஹி ப்ரஸந்நோ஽ஸி கஸ்யாபி காந்தா -
ஸுதத்3ரோஹிணோ வா பித்ருத்3ரோஹிணோ வா ॥ 13

பிறருக்குத் துரோகமென்பதை லவலேசமும் செய்யவல்லேன் அல்லேன். அங்ஙனமிருக்க என்பால் அன்பு கொள்ளாததேன்? மனைவிக்கும், மகவுக்கும், தந்தைக்கும் துரோகம் செய்தவர்களிடமும் தாங்கள் அன்பு செலுத்தவில்லையா?

ஸ்துதிம் த்4யானமர்சாம் யதா2வத்3 வித4ரதும்
ப4ஜ3ந்தப்ய ஜா3னன் மஹேசாவலம்பே3 ।
தரஸந்தம் ஸுதம் த்ராதுமக்3ரே ம்ருகண்டோ3ர்
யமப்ராண நிர்வாணம் த்வத் பதா3ப்3ஜம் ॥ 14

தங்களை புகழ்வதற்கும், தியானிப்பதற்கும், முறைப்படி அர்ச்சிப்பதற்கும் இயலாதவனாய் தங்களையே சரண்புகுந்தேன். மகேச, மிருகண்டு முனிவரின் புதல்வனான மார்க்கண்டேயனுக்கு பயத்தையுண்டாக்கிய யமன் உயிரையும் சிதற அடித்ததல்லவா தங்கள் திருவடித்தாமரை.

சிரோத்3ருஷ்டி ஹ்ருத்3ரோக3 சூலப்ரமேஹ -
ஜ்3வரார்சோ ஜ2ராயக்ஷ்ம ஹிக்கா விஷார்தான் ।
தவமாத்3யோ பி4ஷக்3பே4ஷஜ3ம் ப4ஸ்ம சம்போ4
தவமுல்லாக4யா ஸ்மான் வபுர் லாக4வாய ॥ 15

சிரசு, கண்கள், இருதயம் முதலியவற்றின் நோய்களையும், மலமூத்ராசயங்களின் நோய்களையும், ஜ்வரம், மூப்பு, காசம், விக்கல் முதலிய வியாதிகள் தீர்க்க மருத்துவர் தாங்களொருவரே. மருந்தும் தாங்கள் அணியும் திருநீறே. எங்கள் சரீரங்கள் பிணியற்று லாகவத்துடனிருக்குமாறு தாங்கள் எங்களை பிணிகளி னின்றும் காப்பாற்றுவீராக.

த3ரித்3 ரோ஽ஸ்யப4த்5 ரோ஽ஸ்மி ப4க்3னோ஽ஸ்மி தூ3யே

விஷண்ணோsஸ்மி ஸந்நோsஸ்மி கி[2]ந்நோsஸ்மி சாஹம் |
ப[4]வான் ப்ராணினா மந்தராத்மாஸி சம்போ[4]
மமார்தி[4]ம் ந வேத்ஸி ப்ரபோ[4] ரக்ஷ மாம் த்வம் || 16

நான் தரித்திரன், க்ஷேமத்தையிழந்தவன், மனமுடைந்தவன், சோகத்தால் வாடியவன், நொடித்தேன், துடித்தேன். தாங்கள் சர்வ பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக விளங்குபவர். என் மனத்துயரை நீர் நன்கறிவீர். ஆதலின் என்னை ரக்ஷிப்பீராக.

த்வத[3] க்ஷணோ: கடாக்ஷ: பதேத் த்ரயக்ஷ யத்ர
க்ஷணம் க்ஷமா ச லக்ஷ்மீ: ஸ்வயம் தம் வருணாதே |
கிரீடஸ்பு[2]ரச் சாமரச் ச[2]த்ர மாலா -
கலாசீ க[3]ஜ[3]க்ஷௌம பூ[4]ஷாவிசேஷை: || 17

முக்கண்ணனே, எவனிடம் தங்கள் கடைக்கண்பார்வை பதிந்திடுமோ, அவனை அந்த க்ஷணமே பூதேவியும், ஸ்ரீதேவியும் நாடிவருவார்கள். கிரீடமும், ஒளிமிக்க சாமரங்களும், குடையும், மாலைகளும், யானைகள், பட்டாடைகள், ஆபரணங்கள் இவைகளுடன் லக்ஷ்மீதேவி அவனை வந்தடைவாள்.

ப[4]வான்யை ப[4]வாயாபி மாத்ரே ச புத்ரே
ம்ருடா[3]ன்யை ம்ருடா[3]யாப் யக[4] க[4]ன்யை மக[2]க்[4]நோ |
சிவாங்க்[3]யை சிவாங்கா[3]ய குர்ம: சிவாயை
சிவாயாம்பி[3]காயை நமஸ்த்ரயம்ப[3]காய || 18

ஜகன்மாதாவாகிய பவானிக்கும், ம்ருடானிக்கும் பாபங்களை போக்கடிப்பவளுக்கும், சிவனுடைய உடலில் பாதியிடம் பெற்றவளுக்கும், சிவசக்தியாய் விளங்கும் அம்பிகைக்கும், ஜகத்பிதாவான பவனுக்கும், ம்ருடனுக்கும், தக்ஷன வேள்வியை அழித்தவர்க்கும், பராசக்தியை பாதி உடலில் தரித்தவருக்கும், த்ரயம்பகருக்கும் வணக்கம்.

ப[4]வத்[3] கௌ[3]ரவம் மல்லகு[4]த்வம் விதி[3]த்வா
ப்ரபோ[4] ரக்ஷ காருண்ய த்[3]ருஷ்ட்யானுகம் மாம் |
சிவாத்மானுபா[4]வஸ்துதாவக்ஷமோsஹம்
ஸவசக்த்யா க்ருதம் மேsலபராத[4]ம் க்ஷமஸ்வ || 19

தங்கள் மஹிமையையும், என் எளிமையையும் கருதி, கருணாகடாக்ஷத்தினால் தங்களை நாடிய என்னை ஆட்கொள்ளுவீராக. என் குற்றங்களனைத்தையும் பொருத்தருள்வீராக.

யதா[3] கர்ணரந்த்[4]ரம் ப்ரஜே[3]த் காலவாஹ -

த்3விஷத்கண்ட2 க4ண்டா க4ணாத்காரநாத: |
வ்ருஷாதீ4 சமாருஹ்ய தை3வோபவாஹ்யம்
ததா3 வத்ஸ மா பீ4ரிதி ப்ரீணய த்வம் || 20

யமன் ஏறிவரும் பரியின் கழுத்தில் ஒலிக்கும் பயங்கரமான மணியின் ஒலி என் செவியில் கேட்கும் போது தாங்கள் ரிடப வாகனத்திலமர்ந்து வந்து என்னை நோக்கி, குழந்தாய்! அஞ்சேலென அன்புடன் அருள்புரிவீராக.

யதா3 தா3ருணா பா4ஷணா பீ4ஷணா மே
ப4விஷ்யந்த் யுபாந்தே க்ருதாந்தஸ்ய தூ3தா: |
ததா3 மன்மனஸ் த்வத் பதா3ம்போ4ருஹஸ்த2ம்
கத2ம் நிஸ்சலம் ஸ்யாந் நமஸ்தே஽ஸ்து சம்போ4 || 21

யம தூதர்கள் பயங்கரமான சப்தங்களுடன் என்னையணுகும்போது, தங்கள் திருவடித்தாமரையில் நன்கு பதிந்திருக்கும் என் மனம் எங்ஙனம் கலங்காமல் இருக்கும். (அதனால் இப்பொழுதிலிருந்தே தங்களை வணங்கி என் மனத்தை உங்கள் பாதகமலங்களில் லயிக்கச் செய்கிறேன். அதனால் யம தூதர்கள் வரும் நேரத்தில் எனக்கு யாதொரு துன்பமும் நேரிடாது.)

யதா3 து3ர்நிர்வார வ்யதோ2ஹம் சயானோ
லுட2ந்நிச்வஸந் நி: ஸ்ருதாவ்யக்தவாணி: |
ததா3 ஜ3ஹ்நுகன்யா ஜ3லாலங்க்ருதம் தே
ஜ3டாமண்ட3லம் மந்மனோமந்த்3ரம் ஸ்யாத் || 22

குணப்படுத்த இயலாது நோய்வாய்ப்பட்டு, மரணப் படுக்கையில் புரண்டு, மேல்மூச்சுடன் கூடி பேசவும் முடியாமல் அல்லல்படும்போது, கங்கையுடன் மிளிரும் தங்கள் ஜடாமண்டலம் என் இரு தயத்தில் கோயில் கொண்டிருக்குமாக.

யதா3 புத்ரமித்ராத3 யோ ஸத் ஸகாசே
ருத3ந்த்யஸ்ய ஹா கீத்3ருசீயம் தசேதி |
ததா3 தே3வதே3வேச கௌ3ரீச சம்போ4
நமஸ்தே சிவாயேத் யஜ3ஸ்ரம் ப்3ருவாணி || 23

புத்ரர்களும், மித்ரர்களும் மரணதசையிலிருக்கும் என்ன ருகில், "அந்தோ, இதென்ன கஷ்டம்" என்று கதறி ஓலமிடும் போது, தேவர்களுக்கெல்லாம் தலைவரான கௌரீச! "சம்போ, சிவ" என்று என் நாவில் தங்கள் திருநாமம் ஒலிக்குமாக.

யதா3 பச்யதாம் மாமஸௌ வேத்தி நாஸ்மா -

நயம் ச்வாஸ ஏவேதி வாசோ ப4வேயு: |
ததா3 பூதி பூ3ஷம் பு'ஜுங்கா வநத்தம்
புராரே ப4வந்தம் ஸ்புடம் பா4வயேயம் || 24

மரணகாலக்தில் என்னைச் சூழ்ந்து கொண்டு என்னைப் பார்ப்பவர்கள் "இவன் நம்மைத் தெரிந்து கொள்ளவில்லை. இதோ, அந்திய ச்வாசம்" என்று கூறும் அத்தருணத்தில் திருநீறு பூசி, அரவுமாலையணிந்து துலங்கும் தங்கள் திருமேனியை ஸ்மரிக்கவேண்டும்.

யதா3 யாதனாதே3ஹ ஸந்தே3ஹ வாஹீ
ப4வேதா3த்ம தே2ஹே நமோஹோ மஹான்மே |
ததா3 காசசீதாம்சு ஸம்காசமீச
ஸ்மராரே வபுஸ்தே நமஸ்தே ஸ்மராணி || 25

இவ்வுடலை விட்டுப்பிரிந்து, யாதனா சரீரத்தை அடைந்து நிற்கும் நிலையில் நிலவொளிபோல் பிரகாசிக்கும் தங்கள் திருவுருவை நான் ஸ்மரிக்கவேண்டும்.

யதா3 பாரமச்சா2யமஸ்தா2நமத்3பி4ர் -
ஜுனைர்வா விஹீனம் க3மிஷ்யாமி மார்க3ம் |
ததா3 தம் நிருந்த4ன் க்ருதாந்தஸ்ய மார்க3ம்
மஹாதே3வ மஹ்யம் மனோக்3ஞம் ப்ரயச்ச2 || 26

கடக்க இயலாததும், வழியெங்கும் நிழலற்றதும், தங்கி இளைப்பாற இடங்களற்றதும், தணணீரற்றதும், நிர்மானுஷ்யமுமான மார்க்கத்தில் யமலோகம் செல்வேனோ அப்போது, தாங்கள் யமலோக மார்க்கத்தில் என்னை வழிமறித்து, எனக்கு இன்பத்தையருளுவீராக.

யதா3 ரௌரவாதி3 ஸ்மரன்னேவ பீ4த்யா
வ்ரஜாம்யத்ர மோஹம் மஹாதே3வ கோ4ரம் |
ததா3 மாமஹோ நாத2 கஸ்தாரயிஷ்யத் -
யநாத2ம் பராதீ4னமர்தே4ந்து3 மௌலே || 27

ரௌரவாதி நரகங்களை நினைத்த மாத்திரத்தில் நினைக்க வொணா பயத்தை யடைந்து நான் துயரப்படும்போது, ஹே, மஹா தேவ, என்னை யார் காப்பாற்றுவர் யமன் கைவசப்பட்ட அனாதையான எனக்குத் துணை யார்? பிறைசூடிப் பெருமானே!

யதா3sச்வேதபத்ராயதாலங்க்4ய சக்தே:
க்ருதாந்தாத்2 ப4யம் ப4க்தவாத்ஸல்ய பா4வாத் |
ததா2 பாஹிமாம் பார்வதீ வல்லபா4ன்யம்
ந பச்யாமி பாதாரமேதாத்3ருசம் மே || 28

ஏக சக்ராதிபதியும், மீறமுடியாத சக்திவாய்ந்தவருமான யமதர்மராஜாவின் ஆணைக்கு பயந்து நான் நடுங்கி நிற்கும்போது, ஹே, பார்வதீவல்லப, தாங்கள் என்னைக் காப்பாற்றுவீராக. தங்களையன்றி வேறு ரக்ஷகனை நான் கண்டறியேன்.

இதா3னீமிதா3னீம் ம்ருதிர்மே ப4வித்ரீ -
த்யஹோ ஸந்ததம் சிந்தயா பீடி3தோsஸ்மி ।
கத2ம் நாம மாபூ4ந்ம்ருதௌ பீ4திரேஷா
நமஸ்தே க3தீனாம் க3தே நீலகண்ட2 ॥ 29

இத்தருணத்திலோ, எத்தருணத்திலோ, மரணம் நேரிடக்கூடுமெனக் கவலையினால் எக்காலும் கலவரமடைந்து நிற்கும் நான் எப்போது மரண பயமில்லாதிருப்பேன்? ஹே! நீலகண்ட! தங்களையன்றி வேறு கதிகாணாத நான் தங்களை தஞ்சமாய் நமஸ்கரிக்கின்றேன்.

அமர்யாத3 மேவாஹ மாபா3லவ்ருத்3த4ம்
ஹரந்தம் க்ருதாந்தம் ஸமீக்ஷ்யாமி பீ4த: ।
ம்ருதௌ தாவகாங்க்4ர்ப்3ஜ திவ்ய ப்ரஸாதா3த்
ப4வானீபதே நிர்ப4யோsஹம் ப4வானி ॥ 30

பாலன், வ்ருத்தன் எனும் பாகுபாடின்றி ஆயுளை அபகரிக்கும் யமன் வருகையை நான் எதிர்நோக்கி பயந்து நிற்கிறேன், ஆதலின், பவானீபதியான தங்கள் திருவடித்தாமரைகளை மரணத் தருவாயில் நான் நினைத்து பயமற்றவனாக இருப்பேனாக.

ஜராஜன்ம கர்பா4தி வாஸாதி3து3: கா2ன்
அஸஹ்யானி ஜஹ்யாம் ஜக3ந்நாத2 தே2வ ।
ப4வந்தம் விநா மே க3திர்நைவ சம்போ4
தயாலோ ந ஜாக3ர்தி கிம் வாத3யா தே ॥ 31

மூப்பு, மறுபிறப்பு, கர்ப்பவாஸம் முதலிய சொல்லொணாத் துயரங்களி லிருந்தும் நான் விடுபட வேண்டும். தங்களையல்லால் வேறு கதிகாணேன் கருணைக் கடலே! தங்கள் அருள் விழித்தெழாததேன்?

சிவாயேதி சப்3தோ3 நம: பூர்வ ஏஷ
ஸ்மரன் முக்திக்ருன் ம்ருத்யுஹா தத்வவாசீ ।
மஹேசான மா கா3ன் மனஸ்தோ வசஸ்த:
ஸதா3 மஹ்யமேதத் ப்ரதா3னம் ப்ரயச்ச2 ॥ 32

'நமச்சிவாய' என்னும் சப்தம், நினைத்த மாத்திரத்தில் மிருத்யுவை ஒழித்து முக்தியை அளிக்கவல்லது. உயர்ந்ததான தத்துவத்தையும் புகட்டவல்லது, ஆதலின்

'நமச்சிவாய' எனும் தங்கள் நாமம் என் மனதினின்றும் வாக்கிலிருந்தும் என்றும் அகலாதிருக்க வரமருளவேண்டும்,

த்வமப்யம்ப3 மாம் பச்ய சீதாம்சுமௌலி -
ப்ரியே பே4ஷஜம் த்வம் ப4வவ்யாதி4 சாந்தௌ ।
ப3ஹுக்லேச பா4ஜம் பதா3ம்போ4ஜபோதே
ப4வாப்3 தௌ நிமக்3னம் நயஸ்வாத்3ய பாரம் ॥ 33

பிறைசூடிப் பெருமானின் பேரணங்கே; தாயே! எனைக் கடைக்கண் பாராய்! இப்பிறப்புப் பிணி நீங்க உனையன்றி மருந்தேது? இன்னல்கள் நிறைந்த இப்பிறவிக்கடலில் மூழ்கித் தவிக்கும் என்னை உன் திருவடிகளெனும் ஓடம் கொண்டு கரைமீட்பாய்.

அநுத்3 யல்லலாடாக்ஷி வஹ்னிப்ரரோஹை -
ரவாம ஸ்புரச்சாரு வாமோருசோபை4: ।
அநங்க3 ப்4ரமத்3 போ4கி3 பூ4ஷாவிசேஷை -
ரசந்த்ரார்த4 சூடை3ரலம் தை3வதைர் ந: ॥ 34

அனலைக்கக்கும் நெற்றிக்கண்களில்லாதவரும், இடது பாகத்தில் தேவியைத் தரிக்காதவரும், பாம்புகள் நெளிந்து விளையாடுவதுமான தேகத்தை இல்லாதவரும் முடியில் பிறைச்சந்திரனை தரித்திராதவருமான இதர தேவதைகளால் எமக்குப் பயனென்ன?

அகண்டே2 கலங்காத3 நங்கே3 பு4ஜங்கா3 -
தபாணௌ கபாலாத3பா2லே ந லாக்ஷாத் ।
அமௌலௌ சசாங்காதவாமே கலத்ரா -
த1ஹம் தே3வமன்யம் ந மன்யே ந மன்யே ॥ 35

விடமுண்டதனால் கருத்திருக்கும் கழுத்தையுடையவரும், உடலில் சர்ப்பங்களான அணிகளை தரித்தவரும், கையில் கபாலத்தையேந்தியவரும், அக்னியாய் நெற்றிக்கண்ணை உடையவரும், முடியில் பிறை தரித்தவரும், இடப் பாகத்தில் உமையுடன் கூடியவருமல்லாது மற்றொரு தெய்வத்தை நான் நினைக்கவும் மாட்டேன்,

மஹாதே3வ சம்போ4 கி3ரீச த்ரிசூலிம் -
ஸ்தவதீ3யம் ஸமஸ்தம் விபா4தீதி யஸ்மாத் ।
சிவாத3ன்யதா2 தை3வதம் நாபி4ஜானே
சிவோ஽ஹம் சிவோ஽ஹம் சிவோ஽ஹம் சிவோ஽ஹம் ॥ 36

மஹாதேவ, சம்போ, கிரீசா, திரிசூலத்தை உடையவனே, இந்த ப்ரபஞ்சம் யாவும் தங்களிடமே தோன்றுவதனால், சிவனான தங்களைக் காட்டிலும் வேறு

தெய்வத்தை யானறியேன். நான் சிவன், நான் சிவன், நான் சிவன், நான் சிவமென மன உறுதி பெற்றேன்.

யதோऽரஜாயதேத³ம் ப்ரபஞ்சம் விசித்ரம்
ஸ்தி²திம் யாதி யஸ்மின்ய தே³வாந்தமந்தே ।
ஸ கர்மாதி3ஹீன: ஸ்வயம் ஜயோதிராத்மா
சிவோऽஹம் சிவோऽஹம் சிவோऽஹம் சிவோऽஹம் ॥ 37

எவரிடமிருந்து இந்த விசித்ரமான ப்ரபஞ்சம் உண்டாயிற்றோ, எவரிடம் நிலைபெற்றுள்ளதோ, எவரிடமே பிரளய காலத்தில் இது ஒடுங்குகின்றதோ, எவருக்கு கருமமென்பது லேசமும் கிடையாதோ, எவர் ஸ்வயம் ஜ்யோதியான ஆத்மாவாக விளங்குகிறாரோ, அத்தகைய சிவனே நானாவேன். நான் சிவன், நான் சிவன், நான் சிவன், நான் சிவன்.

கிரீடே நிசேசோ லலாடே ஹுதாசோ
பு4ஜே போ4கிராஜோ க3லே காலிமாசா ।
தநௌ காமினி யஸ்ய தத்துல்யதே'வம்
ந ஜானே ந ஜானே ந ஜானே ॥ 38

முடியில் பிறைச்சந்திரனும், நெற்றியில் அனலும், தோள்களில் பாம்பும், கழுத்தில் கரு நிறமும், சரீரத்தில் இடதுபுறம் மங்கையையும் உடைய சிவனுக்கு நிகரான தெய்வமெதையும் நான் அறியேன். நான் அறியேன், நான் அறியேன்.


அனேன ஸ்தவேனாத³ராத³ம்பி³கேசம்
பராம் ப⁴க்தி மாஸாத்⁴ய யம் யே நமந்தி ।
ம்ருதௌ நிர்பயாஸ்தே ஜநாஸ்தம்ப ஜந்தே
ஹ்ருதம்போஜமத்யே ஸதாஸீனமீசம் ॥ 39

எவர்கள் மிகுந்த பக்தி உணர்ச்சியுடன் பொருள் தெரிந்து இந்த ஸ்தோத்திரத்தைப் படித்து அம்பிகையின் பதியான பரமேச்வரனை வணங்குகிறார்களோ அவர்களுக்கு மரண பயம் உண்டாகாது. எவர்கள் தங்கள் இருதய கமலத்தில் ஜோதி வடிவமாக விளங்கும் அப்பரமசிவனை வீற்றிருக்கச் செய்து அவரைப் போற்றுகின்றனரோ அவர்கள் சிவ ஸாயுஜ்யம் அடைவார்கள்.

பு⁴ஜங்க³ ப்ரியா கல்ப சம்போ⁴ மயைவம்
பு⁴ஜங்க³ப்ரயாதேன வ்ருத்தேன கல்ருப்தம் ।
நர: ஸ்தோத்ரமேதத் படி3த்வோரு ப4க்த்யா
ஸுபுத்ராயுராரோக்3ய மைச்வர்ய மேதி ॥ 40

சம்போ, புஜங்க விருத்தத்திலமைக்கப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை எவனொருவன் படிக்கின்றானோ, அவன் புத்திரன் நீண்ட ஆயுள், ஆரோக்யம், ஐச்வர்யம் முதலியவைகளை அடைவானென்பது திண்ணம்.

ஸ்ரீ காளஹஸ்தி · காளஹஸ்தீஸ்வரர்



சிவநாமாவள்யஷ்டகம்

(நாமாவளிகளைக் கொண்ட எட்டுச் சுலோகங்களாதலால் 'நாமாவள்யஷ்டகம்' எனப்பட்டது.)

ஹே சந்த்3ரசூட3 மத3நாந்தக சூலபாணே
ஸ்தா2ணோ கி3ரீச கிரிஜேச மஹேச சம்போ4 ।
பூ4தேச பீ4தப4யஸூத3ன மாமநாத2ம்
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ3ச ரக்ஷ ॥ 1

சந்திரனைத் தலையில் சூடியவரே, காமனை அழித்தவரே, சூலத்தைத் தரித்தவரே, அசைவற்றவரே, மலையில் வசிப்பவரே, மலைமகளின் கணவரே மஹேச்வரரே, இன்பங்கள் எல்லாவற்றிற்கும் பிறப்பிடமான சம்புவே, பூதங்களின் தலைவனே, பயத்தைப் போக்குபவரே, உலகிற்கெல்லாம் ஈசனே, நாதனற்ற என்னை பிறவியென்னும் துக்கக் காட்டினின்றும் காக்க வேண்டும்.

ஹே பார்வதீஹ்ருத3 யவல்லப4 சந்த்3ரமௌலே
பூ4தாதி4ப ப்ரமத2நாத கி3ரீசசாப ।
ஹே வாமதே3வ ப4வ ருத்3ர பிநாகபாணே
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ3ச ரக்ஷ ॥ 2

பார்வதியின் மனத்திற்கு இசைந்தவரே. சந்திரனை முடியில் சூடியவரே, பூதங்களுக்கும் ப்ரமத கணங்களுக்கும் அதிபரே, மேருவை வில்லாகக் கொண்டவரே, மிக அழகுவாய்ந்த தெய்வமே, எங்கும் சத்ரூபியாய் நிறைந்த பவரே, துக்கத்தையும் அதன் காரணத்தையும் அழிக்கும் ருத்ரரே. பினாகத்தை தரித்தவரே, உலகிற்கெல்லாம் ஈசரே, என்னை ஸம்ஸார துக்கக் காட்டினின்றும் காக்க வேண்டும்,

ஹே நீலகண்ட2 வ்ருஷப4த்4வஜ பஞ்சவக்த்ர
லோகேச சேஷவலய ப்ரமதே3ச சர்வ ।
ஹே தூ4ர்ஜடே பசுபதே கி3ரிஜாபதே மாம்
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ3ச ரக்ஷ ॥ 3

கருத்த கழுத்தையுடைய நீலகண்டரே, காளையைக் கொடியாகக் கொண்டவரே, ஐந்து முகமுள்ளவரே, உலகத்திற்குப் பதியே, ஆதிசேஷனை வளையாகத் தரித்தவரே, ப்ரமத கணங்களின் தலைவரே. பாபங்களைப் போக்குபவரே, அசைக்கப்பட்ட ஜடையை உடையவரே, உயிர்களின் தலைவா, மலைமகளின் பதியே, உலகிற்கெல்லாம் ஈசரே, என்னை பிறவியென்னும் துக்கக் காட்டினின்றும் காக்க வேண்டும்.

ஹே விச்வநாத2 சிவசங்கர தே3வதே3வ
க3ங்கா3த4ர ப்ரமத2 நாயக நந்தி3கேச ।
பா3ணேச்வராந்த4 கரிபோ ஹர லோகநாத2
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ3ச ரக்ஷ ॥ 4

விச்வநாதரே, சிவபெருமானே, சங்கரனே, தேவ தேவா, கங்காதர, ப்ரமத நாயகரே, நந்திகேச, பாணனுக்கு ஈசரே, அந்தகனைக் கொன்றவரே, ஹர, உலகத்திற்கு நாதரே, ஜகதீச, நாதனற்ற என்னை பிறவியென்னும் துக்கக் காட்டினின்றும் காக்க வேண்டும்.

வாராணஸீபுரபதே மணிகர்ணிகேச
வீரேச த3க்ஷமக2கால விபோ4 க3ணேச ।
ஸர்வஜ்ஞ ஸர்வ ஹ்ருத3யைகநிவாஸ நாத3
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ3ச ரக்ஷ ॥ 5

காசிப் பட்டினத்திற்குத் தலைவரே, (காசியிலுள்ள) மணிகர்ணிகைக்கு நாயகரே, வீரர்களுக்கு ஈசனே, தக்ஷனின் யாகத்தை அழித்தவரே, எங்கும் பரவிய விபுவே, கணங்களுக்கு அதிபரே, எல்லாமறிந்தவரே, எல்லா இதயங்களிலும் குடிகொண்ட ஒன்றே, நாதனற்ற என்னை பிறவியென்னும் துக்கக் காட்டினின்றும் காக்கவேண்டும்.

ஶ்ரீமன்மஹேச்வர க்ருபாமய ஹே த3யாளோ
ஹே வ்யோமகேச சிதிகண்ட2 க3ணாதி4நாத2 ।
ப4ஸ்மாங்க3ராக3 ந்ருகபாலகலாபமால
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ3ச ரக்ஷ ॥ 6

திருவுடைய மகேசா, கருணையுருவமே, தயாளுவே, ஆகாயத்தை அளாவும் கேசம் உள்ளவரே, கறுத்த கண்டமுள்ளவரே, கணங்களின் அதிபரே, விபூதியை மேனிப் பூச்சாக அணிந்தவரே, மனித கபாலங்களைக் கழுத்துக்கு மாலையாக அணிந்தவரே, என்னை பிறவியென்னும் துக்கக் காட்டினின்றும் காக்க வேண்டும்.

கைலாஸ சைல விநிவாஸ வ்ருஷாகபே ஹே
ம்ருத்யுஞ்ஜய த்ரிநயன த்ரிஜக3ந்நிவாஸ ।
நாராயணப்ரிய மதா3பஹ சக்திநாத2
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ3ச ரக்ஷ ॥ 7

திருக்கயிலாய மலையில் வசிப்பவரே, வ்ருஷாகபி எனப்படுபவரே, எமனை வென்றவருக்குப் பிரியமானவரே, முக்கண் படைத்தவரே, மூலகத்திலும் வசிப்பவரே, நாராயணனுக்குப் பிரியமானவரே, மதத்தைப் போக்குபவரே. பராசகதியின் பதியே, என்னைப் பிறவி யென்னும் துக்கக் காட்டினின்றும் காக்கவேண்டும்.

விச்வேச விச்வப4வநாசக விச்வரூப
விச்வாத்மக த்ரிபு4வனைக கு3ணாதி4கேச ।
ஹே விச்வநாத2 கருணாமய தீ3னப3ந்தோ
ஸம்ஸார து3:க2 க3ஹனாஜ்ஜக3தீ2ச ரக்ஷ ॥ 8

உலகத்திற்கு அதிபரே, உலகின் பிறவிப் பிணியைப் போக்குபவரே, உலகத்தையே உருவமாய்க் கொண்டவரே, உலகின் ஆன்மாவே, மூவுலகத்திலும் மிகவும் குணமுள்ள ஈசரே, உலக நாதனாயும் கருணையுரு வாயும், தீனருக்கு பந்துவாயுமுள்ளவரே, பிறவியென்னும் துக்கக் காட்டினின்றும் என்னைக் காக்க வேண்டும்.

கௌ3ரீவிலாஸ ப4வனாய மஹேச்வராய
பஞ்சானனாய சரணாக3த கல்பகாய ।
சர்வாய ஸர்வஜக3தாம் அதி4பாய தஸ்மை
தா3ரித்3ர்ய து2:க2 த3ஹனாய நம : சிவாய ॥ 9

பார்வதியின் கேளிக்கைகளுக்கு உறைவிடமாயிருப்பவனும், மகேசுவரனும், ஐந்து முகங்களோடு கூடியவனும், சரணடைந்தோர் வேண்டியதைக் கொடுப்பவனும், தீமையை ஒழிப்பவனும், அனைத்துலகங்களுக்கும் தலைவனும், ஏழ்மையால் ஏற்படும் துக்கங்களைப் பொசுக்குகின்றவனுமான சிவனுக்கு வணக்கம்.



ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்ரம்

(சிவ பஞ்சாக்ஷர மந்திரத்தின் அக்ஷரங்களை வரிசைக் கிரமமாக ஒவ்வொரு ச்லோகத்தின் முதலெழுத்தாக அமைத்துச் செய்த துதி.)

நாகே3ந்த்3ரஹாராய விலோசனாய
ப4ஸ்மாங்க3 ராகா3ய மஹேச்வராய ।
நித்யாய சுத்3தா4ய தி3க3ம்ப3ராய
தஸ்மை நகாரய நம: சிவாய ॥ 1

வாசுகியை மாலையாய்க் கொண்டவரும், மூன்று கண் படைத்தவரும். உடம்பு முழுவதும் திருநீறு அணிந்தவரும், தேவனும், முதலும் முடிவும் அற்று ஆணவம் என்னும் மலப்பற்று நீங்கி எங்கும் நிறைந்திருப்பவரும், பஞ்சாக்ஷரங்களில் முதலான நகார ரூபியுமான அந்த சிவனுக்கு நமஸ்காரம்.

மந்தா3கினீஸலிலசந்த3 னசர்சிதாய
நந்தீ3ச்வர ப்ரமத2 நாதமஹேச்வராய ।
மந்தா3ரமுக்2ய ப3ஹுபுஷ்பஸு பூஜிதாய
தஸ்மை மகார மஹிதாய நம: சிவாய ॥ 2

கங்கையை தலையில் அணிந்து கொண்டு அதிலிருந்து உடம்பில் பெருகும் நீரைச் சந்தனம் போல் ஆனந்தமாய் பூசிக் கொள்பவரும், நந்திகேச்வரன், பிரமத கணங்களுக்கு தலைவன் முதலிய பெரியவர்களை அடக்கி ஆள்பவரும், மந்தாரம் முதலிய கற்பக மரத்தின் பூக்களால் என்றும் பூஜிக்கப்பட்டவரும், பஞ்சாக்ஷரத்தின் இரண்டாவது எழுத்தாகிய மகாரத்தினால் பூஜிக்கப்பட்டவருமான அந்த சிவபிரானுக்கு எனது வணக்கம்.

சிவாய கௌ3ரீவத3 னாப் ஜப்3ருந்த3 -
ஸூர்யாய த3க்ஷாத்4 வரநாசகய ।
ஸ்ரீ நீலகண்டா2ய வருஷத்4 வஜாய
தஸ்மை சிகாராய நம: சிவாய ॥ 3

மங்கள மூர்த்தியாயும், மலைமகளாகிய பார்வதியின் முகமாகின்ற தாமரையை மலரச் செய்வதில் கதிரவனும், தக்ஷப்ரஜாபதியின் யாகத்தை அழித்தவரும், காலகூட விஷத்தால் நீலமாகிய கழுத்தை உடையவரும், காளைக்கொடியை யுடையவரும் பஞ்சாக்ஷரத்தின் மூன்றாவது எழுத்தாகிய சிகார ரூபமாயுமிருக்கின்ற அந்த பரமேச்வரனுக்கு எனது நமஸ்காரம்.

வஸிஷ்ட[2] கும்போ[4]த்[3] ப[4]வகௌ[3] தமாதி[3] -
முனீந்த்[3]ரதே[3] வார்சித சேக[2]ராய ।
சந்த்[3]ரார்க வைச்வானர லோசனாய
தஸ்மை வகாராய நம: சிவாய ॥ 4

வசிஷ்டர், அகஸ்தியர், கௌதமர் போன்ற மாமுனிவர்களும் பணிந்து பூஜைசெய்யும் கங்கையைக் கிரீடம்போல் அணிந்துகொண்டும், சந்திரன், சூரியன் அக்னி இம்மூவர்களை தன் மூன்று கண்களாய் செய்து கொண்டும், பஞ்சாக்ஷரத்தின் நான்காவது எழுத்தாகிய வகாரமாயும் விளங்கும் பரமசிவனை நான் பணிகிறேன்.

யக்ஷஸ்வரூபாய ஜடாத[4]ராய
பினாக ஹஸ்தாய ஸனாதனாய ।
தி[3]வ்யாய தே[3]வாய தி[3]க[3]ம்ப[3]ராய
தஸ்மை யகராய நம : சிவாய ॥ 5

எல்லோரும் வியந்து பக்தியோடு பூஜிக்கத்தக்க வடிவம் கொண்டவரும், ஜடை சூடியவரும், பினாகம் என்னும் வில்லைக் கையில் தரித்தவரும், எங்கும் விளங்குபவரும், மாயையின் செய்கைக்கு உட்படாதவரும், எங்கும் ஒளிரும் பிரகாசம் பொருந்தியவரும், உலகத்தையே ஆட்கொண்டவரும், பஞ்சாக்ஷரத்தின் ஐந்தாவது எழுத்தான யகாரமாயுமிருக்கின்ற அப்பரமசிவனுக்கு நான் அடிபணிகின்றேன்.



சிவ பஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலா ஸ்தோத்ரம்

(ஆதிசங்கரர் நக்ஷத்திரங்களின் எண்ணிக்கையைக் கொண்டு 27 சுலோகங்களில் சிவபெருமானின் பெருமையை விளக்குகிறார். ஒவ்வொரு சுலோகத்தின் நான்கடிகளிலும் 'நமச்சிவாய' என்று கூறுவதால் 108 முறை இம்மந்திரத்தை உச்சரிக்கும் புண்ணியம் கிடைக்கும் வகையில் இந்த ஸ்தோத்திரத்தை அமைத்திருக்கிறார்.)

ஶ்ரீமதா³த்மனே கு³ணைகஸிந்த⁴வே நம: சிவாய
தா⁴மலேசதூ⁴ தகோகப³ந்த⁴வே நம: சிவாய ।
நாமசேஷிதாநமத்³ ப⁴வாந்த⁴வே நம: சிவாய
பாமரேதரப்ரதா⁴னப³ந்த⁴வே நம: சிவாய ॥ 1

பரமாத்மாவாகவும் குணப்பெருங்கடலாகவும் உள்ள சிவனுக்கு வணக்கம்; எவனுடைய ஒளிக்கீற்றினால் சூரியனே ஒதுக்கப்படுகின்றானோ அந்த சிவனுக்கு வணக்கம்; நிலையற்ற உலகவாழ்வாகிற பாழுங்கிணறு எவனுடைய பக்தர்களுக்கு இல்லை என்று ஆகிவிடுகிறதோ அந்த சிவனுக்கு வணக்கம்; மெய்ஞானம் பெற்ற மேன்மக்களுக்கு தலையாய சுற்றமாய் இருக்கிற சிவனுக்கு வணக்கம்.

காலபீ⁴தவிப்ரபா³லபால தே நம: சிவாய
சூலபி⁴ன்னது³ஷ்டத³க்ஷபா²ல தே நம: சிவாய ।
மூலகாரணாய காலகால தே நம: சிவாய
பாலயாது⁴ நா த³யாலவால தே நம: சிவாய ॥ 2

யமனைக்கண்டு அஞ்சிய அந்தணச் சிறுவனை (மார்க்கண்டேயனை) க் காத்த சிவனுக்கு வணக்கம்; எவனுடைய சூலத்தினால் கொடிய தக்கனுடைய தலை பிளக்கப்பட்டதோ அந்த சிவனுக்கு வணக்கம்; அனைத்திற்கும் மூலகாரணனாயும், காலனாகிற யமனுக்கும் காலனாகவும் இருக்கும் சிவனுக்கு வணக்கம்; அருளுக்கிருப்பிடமானவனே இன்றே காத்தருள்; சிவனாகிய உமக்கு வணக்கம்.

இஷ்டவஸ்து முக்²யதா³ன ஹேதவே நம: சிவாய
து³ஷ்ட தை³த்யவம்ச தூ⁴மகேதவே நம: சிவாய ।
ஸ்ருஷ்டி ரக்ஷணாய த⁴ர்மஸேதவே நம: சிவாய
அஷ்டமூர்த்தயே வ்ருஷேந்த்³ரகேதவே நம: சிவாய ॥ 3

வேண்டிய பொருளை சிறப்பாகத் தரு வோனாகிய சிவனுக்கு வணக்கம்; கொடிய அரக்கர் குலத்தை அழிக்கும் நெருப்பாக இருக்கின்ற சிவனுக்கு வணக்கம்; சிருஷ்டித் தொழிலையும் காத்தல் தொழிலையும் செய்து கொண்டு அறநெறியெனும் பாலமாக அமைந்துள்ள சிவனுக்கு வணக்கம்; (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், இயமானன், சந்திரன், சூரியன் ஆகிய) எட்டு உருவங்களைக் கொண்டவனாயும் இடபக்கொடியை உடையவனாயும் உள்ள சிவனுக்கு வணக்கம்.

ஆபத^{3}த்^{3}ரிபே^{4}த^3 டங்க ஹஸ்த தே நம: சிவாய
பாபஹாரிதி^{3}வ்யஸிந்து^{4} மஸ்த தே நம: சிவாய |
பாபதா^{3}ரிணே லஸந்நமஸ்ததே நம: சிவாய
சாபதோ^{3}ஷ க^{3}ண்டனப்ரசஸ்த தே நம: சிவாய || 4

இன்னலெனும் மலையை வெட்டித் தள்ளும் உளியாகிற (அபய) கரத்தை உடைய சிவனுக்கு வணக்கம்; பாவங்களைப் போக்கும் ஆகாய கங்கையைத் தலையிலுடைய சிவனுக்கு வணக்கம்; பாவங்களைப் போக்குகின்றவனாயும், நம: நம: என்று தொடர்ந்து வணங்கப்படுகின்றவனாயும் உள்ள சிவனுக்கு வணக்கம்; சாபங்களால் ஏற்படும் குற்றங்களைக் கடிவதில் புகழ் மிக்கவனான சிவனுக்கு வணக்கம்.

வ்யோமகேச தி^{3}வ்யப^{4}வ்ய ரூப தே நம: சிவாய
ஹேமமேதி^{3}நீத^4 ரேந்த்^{3}ரசாப தே நம: சிவாய |
நாமமாத்ரத^{3}க்^{3}த^4 சர்வபாப தே நம: சிவாய
காமனை கதானஹ்ருத்^{3}து^{3}ராப தே நம: சிவாய || 5

ஆகாயத்தையே செஞ்சடையாக உடையவனும், திவ்யமங்கள ரூபனாயும் உள்ள சிவனுக்கு வணக்கம்; பொன் மலையாகிற மேருவை வில்லாக உடைய சிவனுக்கு வணக்கம்; எவனுடைய பெயரைச் சொன்ன மாத்திரத்தில் அனைத்துப் பாவங்களும் பொசுக்கப்படுகின்றனவோ அந்த சிவனுக்கு வணக்கம். பொருள் வேட்கையிலே நாட்டம் கொண்ட இதயத்தோரால் அடையமுடியாத அச் சிவனுக்கு வணக்கம்.

ப்^{3}ரம்ஹ மஸ்தகாவலீநிப^{3}த்^{3}த^4 தே நம: சிவாய
ஜிம்ஹகே^{3}ந்த்^{2}ரகுண்டலப்ரஸித்^{3}த^4 தே நம: சிவாய |
ப்^{3}ரம்ஹணே ப்ரணீத வேத^3 பத்^{3}த^{4}தே நம: சிவாய
ஜிம்ஹகாலதே^{3}ஹத^3 த்தபத்^{3}த^4 தே நம: சிவாய || 6

பிரமனின் மண்டையோடுகளை மாலையாக அணிந்துள்ள சிவனுக்கு வணக்கம்; சிறந்த நாகங்களை குண்டலமாக அணிவதில் பிரசித்தனான சிவனுக்கு வணக்கம்; பிரம்மாவின் பொருட்டு வேத நெறிமுறையை வகுத்த சிவனுக்கு வணக்கம்; கோணல் புத்தியுள்ள யமனுடைய உடலைக் காலாலுதைத்த சிவனுக்கு வணக்கம்.

காமநாசனாய சுத்[3]த[4] கர்மணே நம: சிவாய
ஸாமகா[3]ன ஜாயமானசர்மணே நம: சிவாய |
ஹேமகாந்தி சாகசக்யவர்மணே நம: சிவாய
ஸாமஜாஸுராங்க[3]லப்[3]த[4] சர்மணே நம: சிவாய || 7

காமனைக் காய்ந்தவனும் தூய்மைப்படுத்தும் செயல்களைச் செய்கின்றவனுமான சிவனுக்கு வணக்கம்; சாமவேத கானத்தால் மகிழ்கின்ற சிவனுக்கு வணக்கம்; பொன்னொளியின் மினுமினிப்பால் சூழப்பட்ட சிவனுக்கு வணக்கம்; கஜாசுரனின் அங்கத்தினின்றும் பெறப்பட்ட தோலை (அணிந்தவனுக்கு) வணக்கம்.

ஜன்மம்ருத்யுகோ[4]ரது: க[2]ஹாரிணே நம: சிவாய
சின்மயை கரூபதே[3]ஹதா[4]ரிணே நம: சிவாய |
மன்மனோரதா[2]வபூர்த்தி காரிணே நமசிவாய
ஸன்மனோக[3]தாய காமவைரிணே நம: சிவாய || 8

பிறப்பிறப்பென்னும் கோரமான துக்கத்தைப் போக்குகின்ற சிவனுக்கு வணக்கம்; ஞானமே உருவான உடலைத் தாங்கியுள்ள சிவனுக்கு வணக்கம்; எனது எண்ணத்தை நிறைவேற்றுகின்ற சிவனுக்கு வணக்கம்; நன்மக்களின் உள்ளத்தில் உறைபவனும் மன்மதனின் எதிரியுமாகிய சிவனுக்கு வணக்கம்.

யக்ஷராஜப[3]ந்த[4]வே த[3]யாலவே நம: சிவாய
த[3]க்ஷபாணிசோபி[4] காஞ்சனாலவே நம: சிவாய |
பக்ஷிராஜவாஹஹ்ருச்ச[2] யாலவே நம: சிவாய
அக்ஷபா[2]ல வேதபூததாலவே நம: சிவாய || 9

குபேரனுக்குச் சுற்றமாயும் அருள்புரிவோனாயுமுள்ள சிவனுக்கு வணக்கம்; வலது கரத்தில் விளங்கும் பொற்குடுவையை உடைய சிவனுக்கு வணக்கம்; கருடவாகனனாகிய திருமாலின் இதயத்தில் சயனித்திருக்கும் சிவனுக்கு வணக்கம்; நெற்றிக்கண்ணையும், வேதமோதுவதால் புனிதமான வாயையும் பெற்ற சிவனுக்கு வணக்கம்.

த[3]க்ஷஹஸ்தநிஷ்ட[2] ஜாதவேத[3]ஸே நம: சிவாய
அக்ஷராத்மனே நமத்[3]பி[3]டௌ[3]ஜஸே நம: சிவாய |
தீ[3]க்ஷிதப்ரகாசிதாத்மதேஜஸே நம: சிவாய
உக்ஷராஜவாஹதேஸதாம் க[3]தே நம: சிவாய || 10

வலக்கரத்தில் அழலேந்திய சிவனுக்கு வணக்கம்; நித்திய பரமாத்மாவும் இந்திரனால் வணங்கப்பெற்றவருமான சிவனுக்கு வணக்கம்; தீக்கை பெற்றவர்களிடத்தே தன் பேரொளியைப் பிரகாசிக்கச் செய்யும் சிவனுக்கு வணக்கம்; இடப வாகனனும், நன்மக்களுக்குப் புகலிடமாயும் இருக்கும் சிவனுக்கு வணக்கம்.

ராஜதாசலேந்த்3ரஸா நுவாஸினே நம: சிவாய
ராஜமானநித்யமந்த3 ஹாஸினே நம: சிவாய |
ராஜகோரகாவதம்ஸ பா4ஸினே நம: சிவாய
ராஜராஜமித்ரதாப்ரகாசினே நம: சிவாய || 11

வெள்ளியங்கிரியின் பக்கலில் வசிக்கின்ற சிவனுக்கு வணக்கம்; பிரகாசிக்கின்றவனும் என்றும் புன் சிரிப்புடன் கூடியவனுமான சிவனுக்கு வணக்கம்; சந்திரப்பிறையைத் தலையில் சூடியவனான ஒளிபொருந்திய சிவனுக்கு வணக்கம்; குபேரனிடம் நட்பிலே பிரகாசிக்கும் சிவனுக்கு வணக்கம்.

தீ3னமானவாலிகாமதே4னவே நம: சிவாய
ஸூனபா3ண தா3ஹக்ருத்க்ருசானவே நம: சிவாய
ஸ்வானுராக3 ப4க்தரத்னஸானவே நம: சிவாய
தா3னவாந்த4 காரசண்ட3பா4னவே நம: சிவாய || 12

இரக்கத்திற்குரிய மக்கட் சமூகத்திற்கு காமதேனுவாக விளங்கும் சிவனுக்கு வணக்கம்; மலர்க்கணைகளை உடைய (மன்மதனை) எரியூட்டிய அக்கினியாய சிவனுக்கு வணக்கம்; தன்னிடத்து அன்பு செலுத்தும் பக்தர்களுக்கு மேரு மலை போன்றிருக்கும் சிவனுக்கு வணக்கம்; அரக்கரெனும் இருளைப் போக்கும் சூரியனாக விளங்கும் சிவனுக்கு வணக்கம்.

ஸர்வமங்க3ளாகுசாக்3ரசாயினே நம: சிவாய
ஸர்வதே3வதாக3ணாதிசாயினே நம: சிவாய |
பூர்வதே3 வநாசஸம்விதா4யினே நம: சிவாய
ஸர்வமன்மனோஜப3ங்கதா3யினே நம: சிவாய || 13

'ஸர்வமங்களா' என்னும் பார்வதி தேவியின் மார்பகத்திலே சயனித்துக் கொண்டிருக்கும் சிவனுக்கு வணக்கம்; எல்லா தேவதை கணங்களுக்கும் மேம்பட்டவனான சிவனுக்கு வணக்கம்; அசுரகுலத்தை அழித்த சிவனுக்கு வணக்கம்; காமத்தின் விளைவுகளனைத்தையும் முறியடிக்கின்ற சிவனுக்கு வணக்கம்.

ஸ்தோகப4க்திதோऽபி ப4க்தபோஷிணே நம: சிவாய
மாகரந்த3ஸார வர்ஷிபா4ஷிணே நம: சிவாய |
ஏகபி3ல்வதா3னதோऽபி தோஷிணே நம: சிவாய
நைகஜன்மபாபஜால சோஷிணே நம: சிவாய || 14

சிறிதளவு பக்தி இருந்தாலும் அத்தகைய பக்தர்களைப் போஷிக்கின்ற சிவனுக்கு வணக்கம்; தேன்ரசத்தைப் பிலிற்றும் இன்சொல்லை உடைய சிவனுக்கு

வணக்கம்; ஒரு வில்வத்தை அளித்தாலும் அதனால் மகிழ்கின்ற சிவனுக்கு வணக்கம்; அனேக பிறப்புக்களில் சேர்ந்த பாபக்கூட்டத்தை வற்றச் செய்யும் சிவனுக்கு வணக்கம்.

ஸர்வஜீவரக்ஷணைகசீலினே நம: சிவாய
பார்வதீப்ரியாய ப⁴க்தபாலினே நம: சிவாய ।
துர்வித³க்³த⁴தை³த்ய ஸைந்ய தா³ரிணே நம: சிவாய
சர்வரீசதா⁴ரிணே கபாலினே நம: சிவாய ॥ 15

எல்லா உயிர்களையும் காப்பதையே நெறியாகக் கொண்ட சிவனுக்கு வணக்கம்; பார்வதியிடத்தில் பிரியமுள்ளவனும் பக்தர்களைக் காத்தருள்பவனுமான சிவனுக்கு வணக்கம்; கொடிய அசுர சேனைகளை அழித்த சிவனுக்கு வணக்கம்; இரவின் நாயகனான சந்திரனையும், கபாலத்தையும் தரித்துள்ள சிவனுக்கு வணக்கம்.

பாஹி மாம் உமாமனோஜ்ஞதே⁴ஹ தே நம: சிவாய
தேஹி மே வரம் ஸிதாத்³ரிகே³ஹதே நம: சிவாய ।
மோஹிதர்ஷிகாமினீஸமூஹ தே நம: சிவாய
ஸ்வேஹிதப்ரஸந்ந காமதோ³ஹ தே நம: சிவாய ॥ 16

உமையோடு கூடியதான அழகிய தேகத்தை உடையவனே என்னைக் காப்பாற்று; சிவனாகிய உமக்கு வணக்கம்; வெண் (பனி) மலையில் வசிப்போனே! எனக்கு வரமருள்வாய். சிவனாகிய உமக்கு வணக்கம்; ரிஷிபத்தினிக் கூட்டத்தை மோகமறச் செய்தவனே, சிவனாகிய உமக்கு வணக்கம்; நீர் விரும்பியதையெல்லாம் முடிப்பதனால் பிரசன்னனாயிருக்கிறீர், வேண்டியதையெல்லாம் தருகின்றவனாகிய சிவனாம் உமக்கு வணக்கம்.

மங்க³ளப்ரதா³ய கோ³துரங்க³ தே நம: சிவாய
க³ங்க³யா தரங்கி³தோத்தமாங்க³ தே நம: சிவாய
ஸங்க³ரப்ரவ்ருத்தவைரிப⁴ங்க³தே நம: சிவாய
அங்க³ ஜாரயே கரேகுரங்க³தே நம: சிவாய ॥ 17

விரைவாகச் செல்லும் இடபத்தை உடையவனே! மங்களத்தைத் தருபவனான சிவனுக்கு வணக்கம்; கங்கையின் அலைபாயும் முடியை உடையவனே! சிவனாகிற உமக்கு வணக்கம்; போரில் ஈடுபட்ட எதிரிகளை ஒடுக்கியவனே; சிவனாகிற உமக்கு வணக்கம்; மன்மத விரோதியே, மானேந்திய கையனே, சிவனாகிற உமக்கு வணக்கம்.

ஈஹிதக்ஷணப்ரதா³ன ஹேதவே நம: சிவாய
ஆஹிதாக்னிபாலகோக்ஷகேதவே நம: சிவாய
தே³ஹகாந்திதூ⁴தரௌப்யதா⁴தவே நம: சிவாய
கே³ஹது: க²புஞ்ஜதூ⁴மகேதவே நம: சிவாய || 18

வேண்டியதை அக்கணத்திலேயே தரவல்லவனாகிய சிவனுக்கு வணக்கம்; தீயோம்பவோரைக் காப்பவனும் இடபக்கொடியோனுமாகிய சிவனுக்கு வணக்கம்; தனது தேககாந்தியினால் வெள்ளி உலோகத்தை வெல்லக்கூடிய சிவனுக்கு வணக்கம்; இல்வாழ்வின் துக்கத் தொகுதியினை அழிக்கும் தீயாகிய சிவனுக்கு வணக்கம்.

த்ர்யக்ஷ தீ³னஸக்த்ருபாகடாக்ஷ தே நம: சிவாய
த³க்ஷஸப்ததந்து நாசத³க்ஷ தே நம: சிவாய |
ருக்ஷராஜபா⁴நுபாவகாக்ஷ தே நம: சிவாய
ரக்ஷ மாம் ப்ரபந்நமாத்ர ரக்ஷ தே நம: சிவாய || 19

முக்கண்ணனே, எளியவருக்கு நன்மை பயக்கும் வண்ணம் திருவருட் பார்வையை நல்கும் சிவனுக்கு வணக்கம்; தக்கன் வேள்வியை அழிப்பதில் சமர்த்தனான சிவனுக்கு வணக்கம்; சந்திரன் சூரியன், அக்கினி ஆகியவற்றை (முக்) கண்களாக உடைய சிவனுக்கு வணக்கம்; சரணடைந்த மாத்திரத்தே காத்தருளுகின்றவனே, என்னைக் காத்தருள்வாயாக; சிவனாகிய உமக்கு வணக்கம்.

ந்யங்குபாணயே சிவங்கராய தே நம: சிவாய
ஸங்கடாப்³தி⁴தீர்ண கிங்கராய தே நம: சிவாய |
கங்கபீ⁴ஷிதாப⁴யங்கராய தே நம: சிவாய
பங்கஜாநநாய சங்கராய தே நம: சிவாய || 20

மானைக் கையில் தாங்குபவனே, மங்களத்தைச் செய்கின்ற சிவனாகிய உமக்கு வணக்கம்; இடரெனும் கடலைக் கடத்துவிப்பதில் பணியாளெனப் பணியாற்றும் சிவனுக்கு வணக்கம்; யமனிடம் அஞ்சுவோருக்கு அபயம் தருகின்ற சிவனுக்கு வணக்கம்; தாமரை போன்ற அழகிய முகத்தை உடையவனும் நல்லனவற்றையே செய்பவனுமான சிவனுக்கு வணக்கம்.

கர்மபாசநாச நீலகண்ட² தே நம: சிவாய
சர்மதா³ய வர்யப⁴ஸ்ம கண்ட²தே நம: சிவாய |
நிர்மமர்ஷிஸேவிதோபகண்ட² தே நம: சிவாய
குர்மஹே நதீர் நமத்³வகுண்ட² தே நம: சிவாய || 21

கருமமெனும் பாசத்தை நாசம் செய்பவனும் திருநீலகண்டனுமான சிவனுக்கு வணக்கம்; சுகத்தை அளிப்பவனும் மன்மதன் சாம்பலை கண்டத்தில் அணிந்தவனுமான சிவனுக்கு வணக்கம்; 'எனது' என்ற பற்றற்ற ரிஷிகளால்

அருகேயிருந்து சேவிக்கப்படுகின்ற சிவனுக்கு வணக்கம்; வணங்குவோரிடத்து சோம்பலின்றி (அருள்பவனாக) உள்ளவனே, உமக்கு வணக்கம் பல சிவனாகிய உமக்கு வணக்கம்.

விஷ்டபாதி4பாய நம்ரவிஷ்ணவே நம: சிவாய
சிஷ்டவிப்ரஹ்ருத3கு3ஹாசரிஷ்ணவே நம: சிவாய ।
இஷ்டவஸ்துநித்யதுஷ்டஜிஷ்ணவே நம: சிவாய
கஷ்டநாசனாய லோகஜிஷ்ணவே நம: சிவாய ॥ 22

தேவலோகத்ததிபனும் விஷ்ணுவால் வணங்கப்படுகின்றவனுமான சிவனுக்கு வணக்கம்; ஒழுக்கத்தில் சிறந்த அந்தணர்களின் இதயக்குகையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் சிவனுக்கு வணக்கம்; வேள்வியில் இட்ட பொருளை ஏற்று என்றும் மகிழ்கின்றவனும் அனைத்தையும் வென்றவனுமான சிவனுக்கு வணக்கம்; இடர்களைவோனும் உலகியலை வென்றவனுமான சிவனுக்கு வணக்கம்.

அப்ரமேய தி3வ்யஸுப்ரபா4வதே நம: சிவாய
ஸத்ப்ரபன்னரக்ஷணஸ்வபா4வ தே நம: சிவாய ।
ஸ்வப்ரகாச நிஸ்துலானுபா4வ தே நம: சிவாய
விப்ரடி3ம்ப4த3ர்சிதார்த்3ரபாவ தே நம: சிவாய ॥ 23

அளவிடற்கரியனும், திவ்யமான நற்பெருமையுடையவனுமான சிவனுக்கு வணக்கம்; அடைக்கலமடைந்த நல்லோர்களைக் காக்கும் இயல்பை உடைய சிவனுக்கு வணக்கம்; சுயம்பிரகாசமாயும் இணையற்ற வீரியம் உடையவனாயும் இருக்கிற சிவனுக்கு வணக்கம்; அந்தணச் சிறுவனுக்கு (மார்க்கண்டேயனுக்கு) அருட்பான்மை காட்டிய சிவனுக்கு வணக்கம்.

ஸேவகாய மே ம்ருட3 ப்ரஸீத3 தே நம: சிவாய
பா4வலப்4ய தாவகப்ரஸாத3 தே நம: சிவாய ।
பாவகாக்ஷ தேவபூஜ்யபாத3 தே நம: சிவாய
தாவகாங்க்4ரி ப4க்த த3த்தமோத3 தே நம: சிவாய ॥ 24

கருணாமூர்த்தியே, அடியேனாகிய எனக்கு அருள்புரிய வேண்டும். சிவனாகிய உமக்கு வணக்கம்; பக்தியினால் பெறக்கூடியது உமது அருள்; சிவனாகிய உமக்கு வணக்கம்; அக்கினிக் கண்ணனே, தேவர்கள் வழிபடும் திருவடியுடையோனே, சிவனாகிய உமக்கு வணக்கம்; தங்கள் திருவடிப்பேற்றினால் பக்தர்களை மகிழ்விப்பவனே, சிவனாகிய உமக்கு வணக்கம்.

பு4க்தி முக்தி தி3வ்யபோ4கதா3யினே நம: சிவாய
சக்திகல் பிதப்ரபஞ்சபா4கி3னே நம: சிவாய
ப4க்தஸங்கடாபஹாரயோகி3னே நம: சிவாய
யுக்தஸந்மனஸ்ஸரோஜயோகி3னே நம: சிவாய ॥ 25

இம்மையின்பம், முக்தியின்பம், தேவலோக இன்பம் ஆகியவற்றை அருளும் சிவனுக்கு வணக்கம்; (தனது மாயா) சக்தியால் தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சத்தை உடையவனான சிவனுக்கு வணக்கம்; பக்தர்களின் இடர்களைப் போக்குவதில் ஈடுபட்டுள்ள சிவனுக்கு வணக்கம். யோக நெறியில் நிற்கும் மேன்மக்களின் மனமாகிற தாமரையில் பொருந்தியிருக்கும் சிவனுக்கு வணக்கம்

அந்தகாந்தகாய பாபஹாரிணே நம: சிவாய
சந்தமாய த3ந்திசர்மதா4ரிணே நம: சிவாய ।
ஸந்ததாச்ரிதவ்யதா2 விதா3ரிணே நம: சிவாய
ஜந்துஜாதநித்யஸௌக்2யகாரிணே நம: சிவாய ॥ 26

கூற்றுவனுக்கும் கூற்றுவனாயும் பாபத்தைப் போக்குகின்றவனாயுமுள்ள சிவனுக்கு வணக்கம்; மேலான மக்கள் சொரூபனாயும் யானைத்தோலை தரிக்கின்றவனாயுமுள்ள சிவனுக்கு வணக்கம்; என்றும் தன்னிடம் புகலடைவோரின் துன்பத்தைப் போக்குகின்ற சிவனுக்கு வணக்கம்; எல்லா உயிர் வர்க்கங்களுக்கும் என்றும் நலம் புரிகின்ற சிவனுக்கு வணக்கம்.

சூலினே நமோ நம: கபாலினே நம: சிவாய
பாலினே விரிஞ்சிமுண்ட3 மாலினே நம: சிவாய ।
லீலினே விசேஷருண்ட3 மாலினே நம: சிவாய
சீலினே நம : ப்ரபுண்யசாலினே நம: சிவாய ॥ 27

சூல மேந்தியவனே வணக்கம்; கபாலமேந்திய சிவனுக்கு வணக்கம்; காத்தற்றொழிலைச் செய்பவனே, பிரமனின் ஓட்டுமாலை யணிந்தவனே, சிவனாகிய உமக்கு வணக்கம்; திருவிளையாடல் புரிகின்றவனே, விசேடமான கபந்தமாலை யணிந்தவனே, சிவனாகிய உமக்கு வணக்கம்; சீலம் பொருந்தியவனே வணக்கம்; மிகுதியும் புண்ணியசாலியாகிய சிவனுக்கு வணக்கம்.

சிவபஞ்சாக்ஷரமுத்3ரா சதுஷ்பதோ3ல்லாஸ பத்3யமணிக3டிதாம் ।
நக்ஷத்ரமாலிகாம் இஹ த3த்4து3பகண்ட2ம் நரோ பவேத்-ஸோம: ॥ 28

எந்த ஒரு மனிதன் சிவபஞ்சாக்ஷரமான 'நமசிவாய' எனும் மந்திரத்தை முத்திரையாக ஒவ்வொரு அடியிலும் கொண்டதும், இரத்தினங்கள் போன்ற (இருபத்தேழு) பாக்களால் அமைக்கப்பெற்றதுமான இந்த நக்ஷத்திர மாலையை தனது கண்டத்தில் அணிகின்றானோ அவன் உமையொரு பாகனான சிவனே ஆவான்.



சிவ மானஸ பூஜா ஸ்தோத்ரம்

(சிவபெருமானை மானஸிகமாகப் பூஜித்துப் பார்க்க உதவும் வழிபாட்டுக் கிரமத் துதி.)

இத்துதியின் தொடக்கத்தில் அடியிற்காணும் சுலோகமும் கூறப்படுவதுண்டு:

ஆராத4யாமி மணி ஸந்நிப4ம் ஆத்ம லிங்க4ம்
மாயாபுரீ ஹ்ருதய பங்கஜ ஸந்நிவிஷ்டம் ।
ச்ரத்3தா4நதீ விமல சித்த ஜலாபி4ஷேகை:
நித்யம் ஸமாதி4 குஸுமை: ந புனர்ப4வாய ॥ 1

மாயையான உடலுள் இதயத் தாமரையில் நன்கு குடி கொண்ட மணியை நிகர்த்த, ஆத்மாவாம் லிங்கத்தை (ஜீவனுள் அங்குஷ்ட ப்ரமாணமாக ஒளிரும் பரமாத்மாவை), சிரத்தை என்ற நதியிலிருந்து, தூய சித்தத்தால் கொணர்ந்த நீரைக் கொண்டு தினமும் முழுக்காட்டி, ஸமாதி நிலை என்கிற பூவால் அர்ச்சித்து வழிபடுகிறேன். மறுபடி பிறப்பெடுக்காமலிருப்பதற்காக (இவ்வழிபாட்டைச் செய்கிறேன்).

ரத்நை: கல்பிதமாஸநம் ஹிமஜலை: ஸ்நாநம் ச த3வ்யாம்ப3ரம்
நாநாரத்ன விபூ4ஷணம் ம்ருகமதா3 மோதா3ங்கிதம்-சந்த3நம் ।
ஜாதீ சம்பக பி3ல்வ பத்ரமதுலம் புஷ்பம் ச தூ4பம் ததா2
தீ3பம் தே3வ த3யாநிதே4 பசுபதே ஹ்ருத் கல்பிதம்-க்ருஹ்யதாம் ॥ 1

தயாநிதியான பசுபதியே! (உன்னை அமர்த்த) ரத்னமயமாக ஏற்படுத்திய ஆசனம்; (உனக்கு) பனிநீரில் திருமுழுக்கு; திவ்யமான வஸ்திரம்; பற்பல மணிகள் இழைத்த அணிகள்; கஸ்தூரியால் மணமூட்டப்பட்ட சந்தனம் (கந்த உபசாரம்); ஜாதி மல்லிகை, சம்பகம், வில்வ தளம், இணையற்ற (வேறு பல) பூக்கள் (ஆகியவற்றால் புஷ்ப உபசாரமான அர்ச்சனை); இவ்வாறே தூபம் காட்டும் உபசாரம்; தீபாராதனை உபசாரம் ஆகியனவுமாக - என் ஹ்ருதயத்தில் (மானஸீகமாக)) செய்யப்படுவதை ஏற்றுக்கொள்வாயாக!

ஸௌவர்ணே நவரத்த க2ண்ட3 ரசிதே பாத்ரே (அ)ந்நமப்யத்2பு4தம்
ப4க்ஷ்யம் பஞ்சவித4ம் பயோக்3ருதயுதம் ரம்பா ப2லம் பாயஸம் ।
சாகாநாமயுதம் ஜலம் ருசிகரம் கர்பூரக2ண்டோ3ஜ்ஜ்வலம்
தாம்பூ3லம் மநஸா மயா விரசிதம் ப4க்த்யா ப்ரபோ4 ஸ்வீகுரு ॥ 2

(இனி நைவேத்ய உபசாரமாக) நவரத்னங்களை ஏராளமாக இழைத்த பொற் பாத்திரங்களில் (வைக்கப்பட்ட). ஐந்து விதமான பக்ஷ்யங்களுடனும், பால் நெய் இவற்றுடனும் கூடியதான அதியற்புதமான அன்னம், வாழைப்பழம், பாயஸம், கணக்கற்ற காய்கறிகள், ஜீரணகாரியான தீர்த்தம், பச்சைக் கர்ப்பூரம், மிளிரும் தாம்பூலம் - ஆகிய, என்னால் மான ஸீகமாக பக்தியுடன் கல்பிக்கபட்டவற்றை ஏற்றுக்கொள்வாய், ப்ரபுவே !

ச2த்ரம் சாமரயோர்யுக3ம் வ்யாஜனகம் சாத3ர்சகம் நிர்மலம்
வீணாவேணு ம்ருத2ங்க3காஹல கலாகீ3தம் க ந்ருத்யம் ததா2 ।
ஸாஷ்டாங்கம் ப்ரணதி: ஸ்துதிர் ப3ஹுவிதா4 ஹ்யேதத்-ஸமஸ்தம் மயா
ஸங்கல் பேன ஸமர்பிதம் தவ விபோ4 பூஜாம் க்3ருஹாண ப்ரபோ4 ॥ 3


விச்வ வியாபகனான விபுவே, விச்வத்தை ஆளும் ப்ரபுவே! குடைபிடித்தலாகிய சத்ர உபசாரம், இரட்டை சாமரம், விசிறி (முதலியவற்றாலான உபசாரங்கள்), அழுக்கில்லாத கண்ணாடி (கையை பகவானுக்குக் காட்டும் உபசாரம்), வீணை - புல்லாங்குழல் - மிருதங்கம் - முரசு முதலியவற்றின் கீதம் (இசை உபசாரம்), இவ்விதமே நடன (உபசாரமும்; (இவற்றின் பின் நான் செய்யும்) ஸாஷ்டாங்க நமஸ்காரம், உன்னைக் குறித்த பலவிதமான துதிகளை ஓதல் - என்றிப்படி ஸங்கல்பத்தால் நான் அனைத்து அங்கங்களோடும் உனக்குப் புரியும் பூஜையை ஏற்றருள்க!

ஆத்மா த்வம் கி3ரிஜா மதி: ஸஹசரா: ப்ராணா: சரீரம் க்3ருஹம்
பூஜா தே விஷயோபபோ4க3ரசனா - நித்ரா ஸமாதி4 ஸ்தி2தி: ।
ஸஞ்சார பத3யோ: ப்ரத3க்ஷிணவிதி4: ஸ்தோத்ராணி ஸர்வாகி2ரோ
யத்3யத் கர்ம கரோமி தத்தத3கி2லம் சம்போ4 - தவாராத4னம் ॥ 4

[என்னுடைய, அதாவது அனைத்து ஜீவராசிகளுடைய] ஆத்மா (பரப்ப்ரம்மமான பரமசிவமாம்) நீயே; (என்னுடைய) அறிவென்பது (உமது சக்தியாம் பராசக்தியான) மலைமகளே; (என்னுடைய) ஐந்து ப்ராணன்களே (உன்) பரிவாரம்; என்னுடைய சரீரமே (உனது) கோயில்; நான் இந்திரியங்களால் அநுபவிக்கும் எல்லாமே உன் வழிபாடு (வழிபாட்டின் அங்கமான பல - உபசாரங்கள்); நான் உறங்குவது (உன்னில் ஒருமித்த) ஸமாதி நிலை; காலால் (நான் செய்யும் ஸஞ்சாரம் யாவும் (உனக்குச் செய்யும்) பிரதக்ஷிண முறை; (பேசுகிற) எல்லா வார்த்தைகளும் (உன்னைப் போற்றும்) துதிகள். சம்புவே! நான் எந்தக் காரியம் செய்கிறோனோ, அது முழுதும் உனக்கான பூஜை (யாகட்டும்).

கர சரண க்ருதம் வாக் காயஜம் கர்மஜம் வா
ச்ரவண நயநஜம் வா மாநஸம் வா (அ)பராத4ம் ।
விஹிதம் அவிஹிதம் வா ஸர்வம் ரதத் க்ஷமஸ்வ
ஜய ஜய கருணாப்3தே4 ஸ்ரீ மஹதே3வ சம்போ4 ॥ 5

மஹாதேவனான ஸ்ரீ சம்புவே! கைகால்களினால் (நான்) செய்த பிழை; வாக்காலோ, சரீரத்தாலோ அல்லது மனத்தாலோ (நான்) புரிந்த அபராதம்; சிலவற்றைச் செய்ததால் ஏற்பட்ட அபராதம்; அவ்வாறே சிலவற்றைச் செய்யாமலிருந்ததால் உண்டான அபராதம் - இவை அனைத்தையும் மன்னித்தருள்வாயாக! கருணைக்கடலே, போற்றி, போற்றி!



ஸ்ரீ வேதஸார சிவ ஸ்தோத்ரம்

(பரமசிவனுடைய மகிமையை நன்கு எடுத்துக் காட்டும் பல நாமாக்களை கொண்ட பாடல்.)

பசூநாம் பதிம் பாபநாசம் பரேசம்
க³ஜேந்த்³ரஸ்ய க்ருத்திம் வஸானம் வரேண்யம் ।
ஜடாஜூடமத்⁴யே ஸ்பு²ரத்³காங்க³வாரிம்
மஹாதே³வ மேகம் ஸ்மராமி ஸ்மராரிம். ॥ 1

பசுக்கள் எனக் கருதப்படும் உயிர்களுக்கு தலைவரும் பாவத்தை ஒழிப்பவரும், பரமேச்வரரும் சிறந்த யானையினுடைய தோலை அணிந்து கொண்டவரும், எல்லோராலும் சேவிக்கத்தக்கவரும், ஜடைக்கூட்டத்திற்கிடையே விளங்கும் கங்கை நீரை உடையவரும், தேவர்களுக்கு தேவரும், ஒப்பு உயர்வற்ற ஒருவருமான, மன்மதனை வென்ற சிவனை சிந்திக்கின்றேன்.

மஹேசம் ஸுரேசம் ஸுராரரதி நாசம்
விபு⁴ம் விச்வநாத²ம் விபூ⁴த்யங்கபூ⁴ஷம் ।
விரூபாக்ஷமிந்த³வர்கவஹ்னி த்ரிணேத்ரம்
ஸதா³னந்த³ மீடே³ ப்ரபு⁴ம் பஞ்சவக்த்ரம் ॥ 2

(ஈச்வரன் எனக் கருதப்படும் பிரம்மா முதலியவர்களுக்கும் தலைவரானதால்) மஹேச்வரனாயும், தேவர்களுக்கும் அரசனாயும், தேவர்களின் பகைவர்களை வெல்பவராயும், எங்கும் நிறைந்தவராயும், அனைத்திற்கும் அதிபராயும், திரு நீராலான உடம்பின் அணியை உடையவராயும்; இயற்கைக்கு விரோதமான (மூன்று) கண் படைத்தவராயும், சந்திரன், சூரியன். அக்னி இவைகளாகிய மூன்று கண்களை உடையவராயும், எப்பொழுதும் ஆனந்தராயும், ஐந்து முகம் படைத்தவராயுமிருக்கின்ற பிரபுவான பரமசிவனை ஸ்தோத்திரம் செய்கிறேன்.

கி³ரீசம் க³ணேசம் க³லே நீலவர்ணம்
க³வேந்த்ரா³தி⁴ரூட⁴ம் கு³ணாதீத ரூபம் ।
ப⁴வம் பா⁴ஸ்வரம் ப⁴ஸ்மனா பூ⁴ஷிதாங்க³ம்
ப⁴வானீ களத்ரம் ப⁴ஜே பஞ்சவக்த்ரம் ॥ 3

மலைக்குத் தலைவரும், ப்ரமதகணங்களை அடக்கி ஆளுபவரும், கழுத்தில் நீல நிறமுள்ளவரும், சிறந்த எருதின்மேல் ஏறிக்கொண்டவரும், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களைக் கடந்த உருவத்தை உடையவரும், உலகத்திற்

குக் காரணரும், ஒளியோடு கூடியவரும், விபூதியால் அலங்கரிக்கப்பட்ட உடம்பை உடையவரும், பார்வதி பதியுமான ஐந்து முகமுடைய பரமசிவனை சேவிக்கிறேன்.

சிவாகாந்த சம்போ4 சசாங்கார்த4 மௌலே
மஹேசான சூலின் ஜடாஜூடதா4ரின் ।
த்வமேகோ ஜக3த்3வ்யாபகோ விச்வரூப:
ப்ரஸீத ப்ரஸீத3 ப்ரபோ4 பூர்ணரூப ॥ 4

மங்கள வடிவமான பார்வதியின் மனதிற்கிசைந்த நாயகரும், நன்மைகள் அனைத்திற்கும் பிறப்பிடமானவரும். இளம் சந்திரனை தலைக்கு அணியாய் கொண்டவரும், மஹிமை பொருந்திய ஈசானரும், சூலத்தை கையில் வைத்திருப்பவரும், ஜடைக் கூட்டத்தைத் தாங்குபவரும், பரிபூர்ண உருவம் உடையவருமான பிரபுவே, நீர் ஒருவரே உலகம் முழுவதும் வியாபித்து இருக்கின்றீர். (என்னிடத்தில்) தயவு செய்யும்; தயவு செய்யும்.

பராத்மானமேகம் ஜக3த் பீ3ஜமாத்3யம்
நிரீஹம் நிராகாரமோங்காரவேத்3யம் ।
யதோ ஜாயதே பால்யதே யேன விச்வம்
தமீசம் ப4ஜே லீயதே யத்ர விச்வம் ॥ 5

பரமாத்மாவாயும், ஒன்றாயும், முதலாவதான உலகத்திற்கு முதலாயும் ஆசை அற்றவராயும், உருவமில்லாதவராயும் ஓம் என்ற அக்ஷரத்தால் அறியத் தகுந்தவராயும் (உள்ள) எந்த பரமேச்வரனிடமிருந்து உலகம் உண்டாகிறதோ, எவரால் (அந்த உலகம்) காப்பாற்றப்படுகிறதோ எந்த பரமேச்வரனிடத்தில் (அந்த உலகம்) நடுங்குகிறதோ அந்தப் பரமேச்வரனை சேவிக்கிறேன்.

ந பூ4மிர்ந் சாபோ ந வஹ்நிர் ந வாயு:
ந சாகசமாஸ்தே ந தந்த்3ரா ந நித்3ரா ।
ந சோஷ்ணம் ந சீதம் ந தே3சோ ந வேஷோ
ந யஸ்யாஸ்தி மூர்த்தி: த்ரிமூர்த்திம் தமீடே3 ॥ 6

(எந்த பரமசிவன்) பூமியாக இல்லையோ, ஜலமாக இல்லையோ, அக்னியாக இல்லையோ, காற்றாக இல்லையோ, ஆகாசமாகவும் இல்லையோ, சோம்பலாக இல்லையோ, தூக்கமாயில்லையோ, சூடாகவும் இல்லையோ, குளுமையாகவும் இல்லையோ, எவருக்கு இருப்பிடமில்லையோ, வேஷம் இல்லையோ, உருவமில்லையோ, பிரம்மா விஷ்ணு ருத்ரவடிவமான அந்தப் பரமசிவனை போற்றுகிறேன்.

அஜம் சாச்வதம் காரணம் காரணானாம்
சிவம் கேவலம் பா⁴ஸகம் பா⁴ஸகானாம் |
துரீயம் தம: பாரமாத்³யந்தஹீனம்
ப்ரபத்³யே பரம் பாவனம் த்³வைதஹீனம் || 7

பிறவி இல்லாதவரும், எப்பொழுதுமிருப்பவரும், காரணம் என்று கருதப் படுகின்றவைகளுக்கும் காரணமானவரும், ஒப்புயர்வற்றுத் தனித்திருப்பவரும், உலகை பிரகாசிக்கச் செய்யும் சூர்யன் முதலியவர்களையும் விளங்கச் செய்பவரும், மும்மூர்த்திகளையும் கடந்த நான்காவதானவரும், (ஆணவ) இருளுக்கு அக்கரை யானவரும், ஆதி அந்தம் அற்றவரும், மேலானவரும், பரிசுத்தியைச் செய்கிறவரும், வேற்றுமை (தன்மை) அற்றவருமான மங்கள வடிவமான சிவனை அடி பணிகிறேன்.

நமஸ்தே நமஸ்தே விபோ⁴ விஸ்வமூர்த்தே
நமஸ்தே நமஸ்தே சிதா³னந்த³மூர்த்தே |
நமஸ்தே நமஸ்தே தபோயோக³க³ம்ய
நமஸ்தே நமஸ்தே ஸ்ருதிஜ்ஞானக³ம்ய || 8

எங்கும் நிறைந்தவரும் எல்லாமாய் உருவெடுத்தவருமான பரமசிவனே உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம். ஞான ஆனந்த வடிவமானவரே உமக்கு நமஸ்காரம். உமக்கு நமஸ்காரம். தவத்தாலும் யோகத்தாலும் அடையத்தகுந்தவரே உமக்கு நமஸ்காரம். உமக்கு நமஸ்காரம். வேதத்தால் அடையும் ஞானத்தால் அறியத்தகுந்தவரே, உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம்.

ப்ரபோ⁴ சூலபாணே விபோ⁴ விஸ்வநாத²
மஹாதே³வ சம்போ⁴ மஹேச த்ரிணேத்ர |
சிவாகாந்த சாந்த ஸ்மராரே புராரே
த்வத³ன்யோ வரேண்யோ ந மான்யோ ந கண்ய: || 9

நாதனே! சூலாயுதத்தைக் கையில் ஏந்தியவரும், எங்கும் நிறைந்தவரும், அனைத்திற்கும் நாதனும், தேவர்களுக்கும் தேவனும், மங்களங்களுக்குப் பிறப்பிடமும், முக்கண் படைத்தவரும், மங்களரூபியாகிய பார்வதியின் கணவனும் சாந்த வடிவம் கொண்டவரும், மன்மதனை எரித்தவரும், திரிபுரர்களை வென்றவரும் மான மஹேச்வரனே! உம்மைத்தவிர மற்றொருவன் போற்றத் தகுந்தவனாயும் இல்லை; சிறந்தவனாக எங்களால் எண்ணக் கூடியவனாகவும் இல்லை.

சம்போ⁴ மஹேச கருணாமய சூலபாணே
கௌ³ரீபதே பசுபதே பசுபாசநாஸின் |
காஸீபதே கருணயா ஜக³தே³ததே³க:
த்வம் ஹம்ஸி பாஸி வித⁴ தா⁴ஸி மஹேஸ்வரோऽஸி || 10

கருணை வடிவம் கொண்டவரும், சூலத்தைக் கையில் ஏந்தியவரும், கௌரியின் கணவனும் உயிர்களுக்குப் பதியாயும், பசுவான உயிர்களுடைய பாசத்தை அகற்றுபவரும், காசிக்குப் பதியாயும் இருக்கின்ற மஹேச்வரனே! மங்களங்களைச் செய்யும் சம்புவே! நீர் ஒருவனே இந்த உலகத்தை அழிக்கிறீர்; காப்பாற்றுகிறீர்; படைக்கிறீர்; (ஆகவே நீர்) எல்லோருக்கும் மேலான மஹேச்வரனாக இருக்கிறீர்.

த்வத்தோ ஜகத் ப^{3}வதி தே^{3}வ ப^{4}வ ஸ்மராரே
த்வய்யேவ திஷ்ட^{2}தி ஜக^{3}ன் ம்ருட^3 விச்வநாத ।
தவய்யேவ க^{2}ச்சதி லயம் ஜக^{3}தே^{3}த்தீ^{3}ச
லிங்கா^{3}த்மகே ஹர சராசரவிச்வரூபின் ॥ 11

தேவரும், மதனனை வென்றவருமான எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய பரமசிவனே! உம்மிடமிருந்து உலகம் உண்டாகிறது. அனைத்திற்கும் நாதனாகிய பரமசிவனே! உண்டாகிய உலகம் உம்மிடத்திலேயே (நிலைத்து) இருக்கிறது. யாவற்றையும் ஆளுபவரும், அசைகின்றதும் அசைவற்றதுமான எல்லாப் பொருளாயுமிருக்கின்ற ஸம்ஹார மூர்த்தியாக சிவனே! லிங்கவடிவங் கொண்ட உம்மிடத்திலேயே இந்த உலகம் லயத்தை அடைகிறது.



ஸுவர்ணமாலா ஸ்துதி

('அ' விலிருந்து 'க்ஷ' வரை உள்ள அக்ஷரங்களை வரிசைக்கிரமமாக ச்லோகங்களின் முதலெழுத்தாக வைத்து செய்த துதியாதலால் "ஸுவர்ணமாலா" எனப்பட்டது.)

அத^{2} கத^{2}மபி மத்^{3}ரஸநாம் த்வத்^{3}கு^{4}ண
லேசைர் விசோத^{4}யாமி விபோ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{4} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் **1**

எங்கும் நிறைந்த பரமேச்வரா! மிகவும் சிரமப்பட்டு உன் குணங்களில் கொஞ்சம் சொல்லுவதால் என் நாக்கை தூய்மைப்படுத்திக் கொள்கிறேன். அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே, சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஆக^{2}ண்ட^{3}ல மத^{3} க^{3}ண்ட^{3}ந பண்டி^{3}த
தண்டு^{3} ப்ரிய சண்டீ^{3}ச விபோ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{3} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் **2**

இந்திரனின் கர்வத்தை அடக்குவதில் ஸமர்த்தரும், (தாண்டவத்தை உண்டாக்கிய) தண்டுவுக்குப் பிரியமானவரும், சண்டி தேவிக்குக் கணவருமான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே,! சங்கரனே ! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

இப^{4}சர்மாம்ப^{3}ர சம்ப^{3}ர ரிபுவபு:
அபஹரணோஜ்ஜ்வல் நயந விபோ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{4} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் **3**

யானைத்தோலை ஆடையாய்க் கொண்டவரும், மன்மதன் உடலை எரித்த அக்னிக் கண்ணையுடைய வருமான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே சம்புவே, சங்கரனே உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஈச கி^{3}ரீச நரேச பரேச
மஹேச பி^{3}லேசய பூஷண போ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{4} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் **4**

ஈச்வரன், மலைக்கு ஈச்வரன், மனிதர்க்கு ஈச்வரன், எல்லாவற்றிற்கும் மேம்பட்ட பரேச, மஹேச! (புற்றில் வசிக்கும்) பாம்பை அணிகலனாய்க் கொண்ட ஏ பரமேச்வரா, அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே சம்புவே, சங்கரனே உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

உமயா தி3வ்ய ஸுமங்க3ள விக்3ரஹ -
யாலிங்கி3த வாமாங்க3 விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 5

ஒளிபொருந்திய மங்களமான உடலோடு கூடிய உமாதேவியால் இடப் பாகத்தில் தழுவப்பெற்ற ஏ பரமேச்வரா ! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஊரீ குரு மாமஜ்ஞ மநாத2ம்
தூ3ரீ குரு மே து3ரிதம் போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 6

ஒன்றும் தெரியாதவனும், கதியற்றவனுமான என்னை ஏற்றுக்கொண்டு என் பாபங்களைத் துரத்துவாய் ஏ! பசமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ரிஷிவர மாநஸ ஹம்ஸ சராசர
ஜநநஸ்தி2திலய காரண போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 7

உயர்ந்த ரிஷிகளின் மனதிற்கு ஹம்ஸமாய் விளங்குகிறவரும், அசைவதும் அசையாததுமான வஸ்துக்களுக்கு பிறப்பு, வளர்ப்பு, அழிவு இவற்றின் காரணருமான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ருக்ஷாதீ4ச கிரீட மஹோக்ஷா -
ரூட4 வித்4ருத ருத்3ராக்ஷ விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 8

நக்ஷத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனைக் கிரீடமாகக் கொண்டவரும், பெரிய காளைமாட்டை வாகனமாய்க் கொண்டவரும் ருத்ராக்ஷம் பூண்டவரும் எங்கும் நிறைந்தவருமான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப,

ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ல்ருவர்ணத்[3] வந்த்[3]வ மவ்ருந்த ஸுகுஸுமமி
- வாங்க்[4]ரௌ தவார்ப்பயாமி விபோ[4]
ஸாம்ப[4] ஸதா[3]சிவ சம்போ[4] சங்கர
சரணம் மே தவ சரணயுக[3]ம் 9

என் இரண்டு கண்களாகிற காம்பற்ற மலர்களை உன் திருவடிகளில் அர்ப்பணம் செய்கிறேன். ஏ பரமேச்வரா! நீயே எனக்குச் சரணம். அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஏகம் ஸதி[3]தி ச்ருத்யா த்வமேவ
ஸத[2]ஸீத்யுபாஸ்மஹே ம்ருட[3] போ[4]
ஸாம்ப[3] ஸதா[3]சிவ சம்போ[4] சங்கர
சரணம் மே தவ சரணயுக[3]ம் 10

ஒன்றே ஸத்யம் எனும் வேதவாக்யத்தால் நீயே அந்த சத்யமாக இருக்கிறாய் என்று உபாஸிக்கிறேன். ம்ருட (இரண்டும் அளிக்கும்) பரமேச்வர, அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - இந்த கவி வாக்யம் விப்ரர்கள், ஒரே பரம் பொருளையே பலவாய்ச் சொல்லுகிறார்கள். இதனால் அத்வைத சாஸ்திர பரம்பொருள் சிவனே என ஆசார்யாள் நிரூபிக்கிறார்கள்.

ஐக்யம் நிஜப[4]க்தேப்[4]யோ விதரஸி
விச்வம் ப[4]ரோsத்ர ஸாக்ஷீபோ[4]
ஸாம்ப[3] ஸதா[3]சிவ சம்போ[4] சங்கர
சரணம் மே தவ சரணயுக[3]ம் 11

உன்னைத்தொழும் பக்தர்களுக்கு உன்னோடு ஐக்யத்தை அருள்புரிகிறாய். எல்லா உலகையும் தாங்குகிறாய், இங்கு (எல்லாவற்றிலும்) சாக்ஷியாக இருக்கிறாய். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே; உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - ஆச்சரியமாயும், பலவாய் உண்டாவதும் இருப்பதும் ஆன இவ்வுலகு எல்லாம் ருத்ரனே, அந்த ஈச்வரனுக்கு நமஸ்காரம் இந்த வேத வாக்யமே, இந்த சுலோகத்தில் மூலமாய்க் கொள்ளலாம்.

ஓமிதி தவ நிர்தே³ஷ்ட்ரீ மாயா -
ஸ்மாகம் ம்ருடோ³பகர்த்ரீ போ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 12

'ஓம்' எனும் இந்த எழுத்தானது உன்னையே மாயையைத் தாண்டிய பரம்பொருளாய்க் குறிக்கிறது, ம்ருடனான உன்னைத் தெரிந்துகொள்ள எனக்கும் மிகவும் உதவியாயிருக்கிறது. ஏ! பரமேச்வரா, அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்கும் புகலாக இருக்கட்டும்.

ஔதா³ஸ்யம் ஸ்புடயதி விஷயேஷ
தி³க³ம்ப³ரதா ச தவைவ விபோ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 13

நீ திக்குகளை ஆடையாய்க் கொண்டிருப்பது உலக விஷயங்களில் உனக்குள்ள பற்றின்மையையே காட்டுகிறது. ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

அந்த: கரண விசுத்³தி⁴ம் ப⁴க்திம்
ச த்வயி ஸதீம் ப்ரதே³ஹி விபோ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 14

உள்ளேயிருப்பதான மனதிற்குத் தூய்மையும், உன்னிடத்தில் நிலைத்திருக்கும் படியான பக்தியையும் கொடுக்கவேண்டுகிறேன். ஏ பரமேச்வரா? அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

அஸ்தோபாதி⁴ ஸமஸ்தவ்யஸ்தை
ரூபைர்ஜக² ந்மயோSஸி விபோ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 15

தடையற்ற மொத்த முழுப் பொருளும் தனித்தனியானதுமான உன் உருவங்களால் சிவமயமான நீ எல்லா உலகமாயிருக்கிறாய்! ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

கருணாவருணாலய மயி தா3ஸ
உதா3ஸஸ் தவோசிதோ ந ஹி போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 16

கருணைக்கடலே! உன் வேலைக்காரனான என்னிடத்தில் பாராமுகம் காட்டுவது உசிதமல்ல! ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதா சிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

க2ல ஸஹவாஸம் விக4டய க4டய ஸ
தாமேவ ஸங்க3மநிசம் போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 17

கெட்டவர்களோடு சேர்க்கையைத் தடுத்து நல்லவர்களுடன் எப்போதும் கூடும்படி செய்! ஏ பரமேச்வரா! அம்பாளுடன் கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

க3ரளம் ஜக3து3பக்ருதயே கி3லிதம்
ப4வதா ஸமோঽஸ்தி கோঽத்ர விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 18

உலகிற்கு உதவி செய்வதற்காக (பாற்கடலில் அமுதம் கடையும் பொழு துண்டான) விஷத்தை உண்ட உனக்கு நிகர் உலகில் ஒருவருமில்லை. ஏ பரமேச் வரா! அம்பாளுடன் கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

க4னஸார கௌ3ர கா3த்ர ப்ரசுர
ஜடாஜூடபத்3த4 க3ங்க3 விபோ
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 19

கற்பூரம் போல் வெளுத்த உடலை உடையவரே! மிகப் பெரியதான ஜடை வைத்துள்ள ஏ பரமேச்வரா! அம்பாளுடன் கூடிய ஸாம்ப ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஜ்ஞப்தி: ஸர்வ சரீரேஷ்வக2ண்டி3தா
யா விபா4தி ஸா த்வம் போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 20

எல்லா சரீரங்களிலும் பிரிவுபடாத அறிவாக விளங்குகிற சக்தியாகிய பரம்பொருள் நீயே. ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதா சிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - எவனால் இந்த எல்லாம் நிறைந்து காணப்படுகிறதோ, அவனே ஆத்மா, என்று சுருதி சொல்லுகிறது. இந்த சுலோகத்திற்கு. இது பிரமாணமாய் ஆகலாம்.

சபலம் மம ஹ்ருத³ய கபிம் விஷய
த்³ருசரம் தருட⁴ம் ப³தா⁴ன விபோ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 21

என் மனதாகிற குரங்கு உலக விஷயங்களில் அலைகிறது. இதை நிலை நிறுத்த வேண்டுகிறேன். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதா சிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

சா²யா ஸ்தா²ணோரபி தவ தாபம்
நமதாம் ஹரத்யஹோ சிவ போ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 22

விந்தை! ஸ்தாணு (பட்டுப் போன மரம்) என்று பெயர் பெற்ற போதிலும் உன் நிழல் பட்ட மாத்திரத்தில் வணங்குகிறவர்களின் தாபங்களை போக்கடிக்கிற ஏ சிவ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஜய கைலாஸ நிவாஸ ப்ரமத²
க³ணாதீ⁴ச பூ⁴ஸுரார்சித போ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 23

கைலையங்கிரியில் வாழ்பவரும் ப்ரமதகணங்களின் தலைவரும் அந்தணர்களால் பூஜிக்கப்பட்டவருமான ஏ பரமேச்வரா! வெல்க! அம்பாளோடு கூடிய

ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஜ²ணுதக ஜ²ங்கிணு ஜ²ணுகத் கி டதக
சப்³தை³ர் நடஸி மஹாநட போ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 24

ஜணு, தக, ஜங்கிணு. ஜணு, தத்கிட, தக என்ற ஒலியுடன் நடனம் புரியும் பெரிய நடனான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஜ்ஞானம் விக்ஷேபாவ்ருதிரஹிதம்
குரு மே கு3ருஸ்த்வமேவ விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 25

நீயே (தக்ஷிணாமூர்த்தி), குரு உருவாயிருந்து இருப்பதை மறைப்பது. இல்லாததைத் தோற்று விட்டதுமான சக்தியின் செயல் நீங்கிய ஞானத்தை எனக்கு அருள்புரிவாய் ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - ஆவ்நதி - உள்ளதை மறைப்பது; விக்ஷேப சக்தி - இல்லாததை இருப்பது போல் காட்டுவது; ஞானம் - பரம்பொருளை அறியும் அறிவு.

டங்காரஸ்தவ த4னுஷோ த3லயதி
ஹ்ருத3யம் த்3விஷாமசநிரிவ போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 26

உன் (பிநாகம் எனும்) வில்லின் நாண் ஓசை, கேட்ட மாத்திரத்திலேயே இடியோசை போல் பகைவர்கள் மனத்தை பிளக்கிறது. ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

டா2க்ருதிரிவ தவ மாயா ப3ஹி:
அந்த: சூந்ய ரூபிணீ க2லு போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 27

பூஜ்யத்தைப் போல உள்ளும், வெளியும் இல்லாத ஒன்றல்லவோ உன் வசமுள்ள மாயை. ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - மாயையை ப்ரக்ருதியாகவும் அதை தன் வசம் கொண்டவன் மாயீ என்றும் சுருதி சொல்லுகிறது.

ட³ம்பரமம்பு³ ருஹாமபி த³லயதி
அநக⁴ம் த்வதங்க்⁴ரி யுக³லம் போ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 28

செந்தாமரையின் புகழையும் தோற்கடிப்பன உன் மாசற்ற திருவடிகள். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே, உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ட⁴க்காக்ஷஸூத்ர சூல த்³ருஹிணக -
ரோட ஸமுல்லஸத்கர போ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 29

உடுக்கை, ஜபமாலை, சூலம், பிரம்மகபாலம் இவைகளைக் கையில் கொண்ட ஏ பரமேச்வரா! அம்பளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ணாகார க³ர்பி⁴ணீ சேச்சு²ப⁴தா³
தே சரக³திர் ந்ருணாமிஹ போ
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 30

'ந' என்ற எழுத்தின் வடிவைக் கொண்ட உன் அம்புப் பெட்டியில் உள்ள அம்பானது (எங்களை நோக்கி) வெளியில் வராத வரை மனிதர்களுக்கு நன்மையே செய்யும். ஏ பரமேச்வரா ! நீயே எனக்குச் சரணம். அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

தவ மந்வதி ஸஞ்ஜபத: ஸத்³ய:
தரதி நரோ ஹி ப⁴வாப்³தி⁴ம் போ⁴
ஸாம்ப³ ஸதா³சிவ சம்போ⁴ சங்கர
சரணம் மே தவ சரணயுக³ம் 31

உன் திருமந்திரமான ஐந்தெழுத்தை மிகுதியாக ஜபம் செய்கிறவன் உடனேயே பிறவிக்கடலை கடக்கிறான். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே, சம்புவே, சங்கரனே, உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

தூ2த்காரஸ்தஸ்ய முகே பூ4யாத்
தே நாம நாஸ்தி யஸ்ய விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 32

எவன் உன் நாமத்தை சொல்லவில்லையோ, ஜனங்கள் அவனைத் 'தூ' என்று சொல்லட்டும். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப. சிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

த3யேநீயஸ்ச த3யாலு: கோSஸ்தி மத்
அந்யஸ் த்வத3னய இஹ வத3 போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 33

இங்கு தயை வேண்டுபவனும் தயை உடையவனும் முறையே என்னையும் உன்னையும் தவிர வேறு யார்? சொல். ஏ. பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

த4ர்மஸ்தா2பந்த3க்ஷ த்ர்யக்ஷ கு3ரோ
த3க்ஷயஜ்ஞ சிக்ஷக போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 34

தருமத்தை நிலைநாட்டுவதில் வல்லவரும். முக்கண்ணரும், குருவின் உருவானவரும், தக்ஷனின் யாகத்தை அழித்தவருமான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

நநு தாடி3தோSஸி த4னுஷா லுப்3த4தி4யா
த்வம் புரா நரேண விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 35

வேடனாய் வந்த உன்னை மனிதன் (அர்ஜுனன்) முன்பு பேராசை கொண்டு வில்லால் அடித்தான் அன்றோ! ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

பரிமாதும் தவ மூர்த்திம் நாலம்
அஜஸ்தத்பராத்பரோऽஸி விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 36

(லிங்க) மூர்த்தியான உன்னை அளக்க பிரும்மாவாலும், விஷ்ணுவாலும் கூட முடியவில்லை. அப்பாலுக்கு அப்பாலான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ப2லமிஹ ந்ருதயா ஜனுஷஸ்த்வத்பத3
ஸேவா ஸநாதநேச விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 37

உன் திருவடித் தொண்டில் ஈடுபட்ட மனிதனுக்கு அவன் மனிதனாக இருக்கிற காரணத்தால் தான் இங்கேயே எல்லாவற்றையும் கொடுத்து அருள் புரிகிறாய். ஏ ஆதி ஈசனான பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதா சிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ப3லமாரோ3க்யம் சாயுஸ்த்வத்3கு3ண
ருசிதாம் சிரம் ப்ரதே3ஹி விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 38

பலம், நோயற்ற தன்மை, ஆயுள், உன் குணங்களில் இன்புறுதல், இவைகளை வெகுகாலம் எனக்கு நன்கு கொடுத்தருள்வாய். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ப4க3வன் ப4ர்க3 ப4யாபஹ பூ4தபதே
பூ4திபூ4ஷிதாங்க3 விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 39

பர்க்கன் (சூரியன்) எனப் பெயர் பெற்ற இறைவனே, அச்சத்தைப் போக்கடிப்பவனே, பூதங்களுக்குத் தலைவனே, உடல் முழுதும் விபூதியைப் பூசியவனே, ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

மஹிமா தவ நஹி மாதி ச்ருதிஷ ஹி
மாநீத4 ராத்மஜாத3வ போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 40

பனிமலையின் புதல்வியான உமையின் கணவரே, வேதங்களில் கூட உன் மஹிமை முழுதும் அளக்கப்படவில்லை. ஏ பரமேசவரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

யம நியமாதி3பி4ரங்கை3ர்யமிநோ
ஹ்ருத3யே ப4ஜந்தி ஸ த்வம் போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 41

யமம், நியமம், ஆஸனம் ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி முதலிய (எட்டு) அங்கங்களால் யோகம் செய்து உன்னை மனதில் காணுபவரே யோகியர். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ரஜ்ஜாவஹிரிவ சுக்தௌ ரஜதமிவ
த்வயி ஜக3ந்தி பா3ந்தி விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 42

கயிற்றில் பாம்பு தோன்றுவது போலும் கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவது போலும் பரமனாகிய உன்னிடத்தில் உலகம் (தோற்ற மாத்திரமே) பிரகாசிக்கிறது. ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - ஆதிசங்கரர் தான் ஸ்தாபித்த அத்வைத மதத்தை இங்கு உதாரணத்தோடு சுட்டிக்காட்டுகிறார். பிரம்மமே உண்மை, உலகம் பொய், என்னும் உண்மை இங்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

லப்3த்4வா ப4வத்ப்ரஸாதா3ச்சக்ரம்
விது4ரவதி லோகமகி2லம் போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 43

உன் அருளினால் சக்கரம் பெற்று விஷ்ணு உலகத்தைக் காக்கிறான். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

வஸுதா^{4}தத்^{3}த^{4}ரதச்ச^{2} யரத^{2} மௌர் -
வீசர பராக்ருதாஸுர போ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{4} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் 44

பூமியைத் தேராகவும், வாசுகியை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு முப்புர அரக்கர்களை தோல்வியுறச் செய்த ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - யஜுர்வேதம் ஆறாவது காண்டத்தில் சொல்லப்பட்டுள்ள திரிபுர ஸம்ஹாரக் கதை இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

சர்வ தே^{3}வ ஸர்வோத்தம ஸர்வத^{3}
து^{3}ர்வ்ருத்த க^{3}ர்வ ஹரண விபோ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{4} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் 45

சம்ஹராமூர்த்தியே! எல்லோரிலும் சிறந்த தெய்வமே, அனைத்தும் அளிப்போனே, நடத்தை கெட்டவர்களின் செருக்கை அடக்குபவருமான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! : சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ஷட்^{3}ரிபுஷ்டு^{3}ர்மிஷட்^{3}விகார ஹர
ஸந்முக^{2} ஷண்முக^{2} ஜநக விபோ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{4} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் 46

ஆறு பகைவர்களையும், ஆறு மாறுதல்களையும் ஆறு அலைகளையும் போக்கடிப்பவரும், சத்தியத்தை முன்னிட்ட முருகனுக்கு தகப்பனாருமான ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாய் இருக்கட்டும்.

குறிப்பு: - காமம், க்ரோதம், லோபம், மோஷம், மதம், மாத்ஸர்யம் என்பவை அறுபகைகள்; பிறத்தல், இருத்தல், வளர்த்தல், மாறுதல், தேர்தல், மறைதல் என்பவை ஆறு மாறுபாடுகள் - பசி, பிணி, முதுமை, சாவு, இன்பம், துன்பம் இவை ஆறு அலைகள்.

ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்^{3}ரஹ்மே (தி)
ஏதல்லக்ஷண லக்ஷித போ^{4}
ஸாம்ப^{3} ஸதா^{3}சிவ சம்போ^{4} சங்கர
சரணம் மே தவ சரணயுக^{3}ம் 47

உண்மை, அறிவு, முடிவற்றது பரம்பொருள் என்னும் (உபநிஷத) குறிப்பால் லக்ஷ்யமாகக் காட்டப்படும் பரம்பொருளே, ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

குறிப்பு: - பொய்யான, அறிவற்ற, அழிகின்ற உலகத்தினின்று வேறுபட்டது பரம்பொருள் என்பது இங்கே குறிப்பு.

ஹாஹாஹூஹூ முக ஸுர கா3யக
கீ3தாபதா3நபத்3ய விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 48

ஹாஹா, ஹூஹூ என்ற கந்தர்வர்களின் தலைமையில் தேவப்பாடல்களோடு பாடப்பட்ட திருவடிகளையுடைய ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

ளாதி3ர்ந ஹி ப்ரயோக3 ஸ்தத3ந்தம்
இஹ மங்க3ளம் ஸதா3ஸ்து விபோ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 49

'ள' என்ற எழுத்தை முதலாகக் கொண்ட சொற்பிரயோகம் இல்லை; அதை இறுதியில் கொண்ட மங்களம் கொண்டு உண்டாகட்டும். ஏ பரமேச்வரா! அம்பாளோடு கூடிய ஸாம்ப, ஸதாசிவனே! சம்புவே! சங்கரனே! உன் இரண்டு திருவடிகள் எனக்குப் புகலாக இருக்கட்டும்.

க்ஷணமிவ தி3வஸாந்நேஷ்யதி த்வத்பத3
ஸேவாக்ஷணோத்ஸுக: சிவ போ4
ஸாம்ப3 ஸதா3சிவ சம்போ4 சங்கர
சரணம் மே தவ சரணயுக3ம் 50

உன் திருவடி சேவை செய்வதில் ஆவல் உள்ளவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு க்ஷணம் மாதிரியே கழிந்துவிடுகிறது. அம்பாளோடு கூடிய வரும், ஸாம்ப, ஸதாசிவரும், சம்புவும், சங்கரருமான ஏ பரமேச்வரா! உன் இரு பாதமே என் புகலிடம்.


சில்பி

தசச்லோகீ ஸ்துதி

(பத்து ஸ்லோகங்களைக் கொண்டதால் இது “தசச்லோகீ” எனப்படும்.)

ஸாம்போ3 ந: குலதை3வதம் பசுபதே
ஸாம்ப3 த்வதீ3யா வயம்
ஸாம்ப3ம் ஸ்தௌமி ஸுராஸுரோரக3க3ணா:
ஸாம்பே3 ந ஸந்தாரிதா: |
ஸாம்பா3யாஸ்து நமோ மயா விரசிதம்
ஸாம்பா3த் பரம் நோ ப4ஜே
ஸாம்ப3ஸ்யானுசரோऽஸ்ம்யஹம் மம ரதி :
ஸாம்பே3 பரப்3ரஹ்மணி || 1

பார்வதி அன்னையோடு கூடிய பரமசிவன் நமக்கு பரம்பரையாகக் குடும்பத்தார் வழிபட்டு வரும் தெய்வம். பசுக்களாகிய உயிர்கள் காக்கும் பதியாகிய பரமசிவனே! நாங்கள் உம்மைச் சேர்த்தவர்கள். பார்வதியோடு இணைபிரியா திருக்கும் உன்னை ஸ்தோத்திரம் செய்கிறேன். பரமசிவனாகிய உன்னால் தேவர்கள் அசுரர்கள், உரர்கள் முதலியவர்களின் கூட்டங்கள் பிறவியாகிற கடலினின்று நன்கு கரையேற்றப்பட்டார்கள். என்னால் செய்யப்பட்ட நமஸ்காரம் பரமசிவனுக்கே இருக்கட்டும்! பரமசிவனைத் தவிர மற்றொருவனை தொழமாட்டேன். நான் பரமசிவனுடைய வேலைக்காரனாக இருக்கின்றேன். (மாயைக்கு அப்பால் என்றும் ஒரே வடிவமாய்த் துலங்கும்) பரப்பிரம்ம வடிவமான தாயாகிய பார்வதியோடு கூடிய பரமசிவனிடத்திலேயே எனக்கு அன்பு இருக்கட்டும்.

விஷ்ண் வாத்யாச்ச புரத்ரயம் ஸுரக3ணா:
ஜேதும் ந சக்தா: ஸ்வயம்
யம் சம்பும் பக3வன் வயம் து பசவ:
(அ) ஸ்மாகம் த்வமேவேச்வர: |
ஸ்வஸ்வஸ்தா2நநியோஜிதா: ஸுமனஸ:
ஸ்வஸ்தா2 ப3பூ4வுஸ்தத
தஸ்மின் மே ஹ்ருத3யம் ஸுகே2ந ரமதாம்
ஸாம்பே3 பரப்ர3 ஹ்மணி || 2

விஷ்ணு முதலிய தேவர்களின் கூட்டங்கள் கூட பட்டண வடிவம் கொண்டு உலகை அழித்து வந்த புரர்கள் என்ற மூன்று அசுரர்களை தானாக வெல்வதற்கு திறமை அற்றவர்களாக இருந்ததினால் (மங்களங்களுக்கு உறைவிடமான) பரம சிவனை அடைந்து "எல்லா செல்வங்களும் நிறைந்த இறைவனே, நாங்களோ பசுக்கள். (எங்களுடைய நன்மை தீமையை அறிவதற்குக் கூட அறிவில்லாதவர்கள்.) எங்களுக்கு நீர்தான் (அடக்கி ஆளக்கூடிய திறன் வாய்ந்த) ஈச்வரன்'. (என்று ஸ்தோத்திரம் செய்தார்களோ); பிறகு (ஒரு நொடியில் பரமேச்வரன் அசுரர்களை

வென்று விட்டதால்) அந்த தேவர்கள் அவரவர் இடங்களில் முன்போல் வைக்கப் பட்டவர்களாகி, மனக்கவலை இன்றி தன் நிலையை அடைந்தவர்களாக ஆனார்களோ; அந்த பரம்பொருள் உருவமான அம்பிகையோடு சேர்ந்த பரமசிவனிடத்தில் என்னுடைய உள்ளம் இன்பத்தோடு விளையாடிக் கொண்டிருக்கட்டும்.

க்ஷோணீ யஸ்ய ரதோ2 ரதா2ங்க3 யுக3லம்
சந்த்3ரார்கபி3ம்ப3த்3வயம்
கோத3ண்ட: கனகாசலோ ஹரிரபூ4த்
பா3ணோ விதி3ஸ்ஸாரதி: ।
தூணீரோ ஜலதிர்3 ஹயா: ச்ருதிசயோ
மௌர்வீ பு4ஜங்3கா3தி4ப
தஸ்மின் மே ஹ்ருத3யம் ஸுகே2 ந ரமதாம்
ஸாம்பே3 பரப்ர3ஹ்மணி ॥ 3

எந்த பரமசிவனுக்கு, (திரிபுரர்களைக் கொல்லும் பொழுது) பூமி தேராகவும், சந்திரன் சூர்யன் இவ்விரண்டு பிம்பங்களும் இரண்டு சக்ரமாயும், தங்கமலை யாகின்ற மேரு பர்வதம் வில்லாகவும், மஹாவிஷ்ணு அம்பாகவும், பிரம்மா தேரோட்டியாகவும், கடல் அம்புறாத்தூணியாகவும், வேதக்கூட்டம் குதிரைகளாகவும், பாம்புகளுக்கு அரசனாகிய வாஸுகி நாண்கயிறாகவும் இருந்ததோ அந்த பரப்பிரம்ம ரூபமான அம்பிகையோடு சேர்த்த பரமசிவனிடத்தில் என் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக் கொண்டிருக்கட்டும்.

யே நாபாதி3 தமங்க3 ஜாங்க3 ப4ஸிதம்
தி3வ்யாங்க3ராகை3: ஸமம்
யேந ஸ்வீக்ரு தமப்3ஜஸம்ப4வசிர:
ஸௌவர்ணபாத்ரைஸ்ஸமம் ।
யே நாங்கீ3க்ருதமச்யுதஸ்ய நயநம்
பூஜாராவிந்தை3 ஸ்ஸமம்
தஸ்மின் மே ஹ்ருத3யம் ஸுகே2 ந ரமதாம்
ஸாம்பே3 பரப்ர3ஹ்மணி ॥ 4

எந்தப் பரமசிவனால் மன்மதனுடைய உடம்பின் சாம்பல் திவ்யமான மேனி பூச்ச திரவியங்களுக்கு சமமாக செய்யப்பட்டதோ; எவரால் (தாமரையினின்று உண்டான) பிரம்மாவினுடைய தலை ஓடு தங்கத்தால் செய்த பாத்திரங்களுக்கு சமமாக எடுத்துக் கொள்ளப்பட்டதோ; எவரால் மஹாவிஷ்ணுவினுடைய கண் பூஜைக்காக கொண்டு வந்த தாமரைப் பூக்களுக்கு சமமாக ஏற்றுக் கொள்ளப் பட்டதோ அந்தப் பரப்பிரம்ம ரூபமான அம்பிகையோடு சேர்ந்த பரமசிவனிடம் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக் கொண்டிருக்கட்டும்.

கோ3விந்தா3த3தி4கம் ந தை3வதமிதி
ப்ரோச்சார்ய ஹஸ்தாவுபௌ4
உத்3த்4ருத்யாத2 சிவஸ்ய ஸன்னிதி4க3 தோ
வ்யாஸோ முனீனாம் வர ।
யஸ்ய ஸ்தம்பி4 தபாணிரான திக்ருதா
நந்தீ3ச்வரேணாப4வத்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகே2நே ரமதாம்
ஸாம்பே3 பரப்ர3ஹ்மணி ॥ 5

முனிவர்களுக்குள் சிறந்த வியாஸரை எந்த பரமசிவனுடைய முன்னிலையில் இருந்துகொண்டு இரண்டு கைகளை உயரத்தூக்கி மஹா விஷ்ணுவைக் காட்டிலும் மேலான தெய்வம் இல்லை என்று சொல்லி, பிறகு சிவனிடம் பணியாதவர்களை பணியவைக்கும் நந்கிகேச்வரனால் அசைவற்று தூக்கியவாறு இருக்கும்படி செய்யப்பட்ட கையை உடையவராக இருந்தாரோ அந்த பரப்பிரம்ம ரூபமான அம்பிகையோடு சேர்ந்த பரமசிவனிடத்தில் என் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக் கொண்டிருக்கட்டும்.

கதை: - வியாஸர், பரமசிவன் வீற்றிருக்கும் ஸபையில் வந்து அவருக்கு எதிரிலேயே இரண்டு கைகளையும் தூக்கி 'கோவிந்தனுக்கு மேல் தெய்வமில்லை' என்று கூறினார். அப்பொழுது, நந்திகேச்வரன் வியாஸருடைய உயரத் தூக்கிய கையைக் கீழே தணிக்க முடியாமல் அசைவற்றிருக்கச் செய்து விட்டார். பிறகு வியாஸர் சிவபெருமானின் உயர்வை ஒப்புக் கொண்டு வழிபட்ட பின்னரே அவரது ஸ்தம்பித்த கை மறுபடி செயற்படத் தொடங்கியது

.

ஆகாசச்சிகுராயதே த3ச3தி3சா -
பா4கோ3 து3கூலாயதே
சீதாம்சு: ப்ரஸவாயதே
ஸ்தி2ரதரானந்த3: ஸ்வரூபாயதே ।
வேதா3ந்தோ நிலயாயதே ஸுவினயோ
யஸ்ய ஸ்வபா4வாயதே
தஸ்மின் மே ஹ்ருத3யம் ஸுகே2ந ரமதாம்
ஸாம்பே3 பரப்3ரஹ்மணி ॥ 6

எந்த பரமசிவனுக்கு ஆகாயம் தலைமுடியாக இருக்கிறதோ, பத்து திக்குக்களும் பட்டாடையாக இருக்கிறதோ, குளுமையான கிரணங்கள் உடைய சந்திரன் தலையில் சூடிக்கொள்ளும் மலர்போல் இருக்கிறானோ, என்றும் நிலைபெற்ற ஆனந் தம் தன்னுருவமாய் இருக்கின்றதோ, உபநிஷத்து இருப்பிடமாக இருக்கிறதோ, நல்ல அடக்கம் இயற்கை குணமாக இருக்கிறதோ அந்த பரப்பிரம்ம ரூபமான அம்பிகையோடு சேர்ந்த பரமசிவனிடத்தில் என் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக் கொண்டிருக்கட்டும்.

விஷ்ணுர்யஸ்ய ஸஹஸ்ர நாம நியமாத்
அம்போ⁴ருஹாண்யர்சயன்
ஏகோநோபசிதேஷு நேத்ரகமலம்
நைஜம் பதா³ப்³ஜத்³ வயே ।
ஸம்பூஜ்யாஸுரஸம்ஹதிம் வித³லயந்
த்ரைலோக்ய பாலோப⁴வத்.
தஸ்மின் மே ஹ்ருத³யம் ஸுகே²ந ரமதாம்
ஸாம்பே³ பரப்3ரஹ்மணி ॥ 7

எந்தப் பரமசிவனுடைய தாமரை போன்ற இரண்டு பாதங்களில் மஹா விஷ்ணு ஆயிரம் நாமங்களின் கணக்காய் தாமரை மலர்களை பூஜை செய்து கொண்டு வருங்கால் ஒன்று குறைந்த பொழுது தன்னுடைய கண் என்னும் தாமரை மலரையே எடுத்து பூஜை செய்து, இவ்வாறு பூஜித்ததற்குப் பலனாக அசுர கூட்டத்தத அழித்து மூன்று உலகையும் காப்பாற்றுகிறவனானாரோ அந்த பரப்பிரம்ம ரூபமான அம்பிகையோடு சேர்ந்த பரமசிவனிடத்தில் என் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக் கொண்டிருக்கட்டும்.

சௌரிம் சத்யகி³ரம் வராஹவபுஷம்
பாதா³ம்பு³ ஜாத³ர்சனே
சக்ரே யோ த³யயா சமஸ்தஜக³ தாம்
நாதம் சிரோதர்சனே ।
மித்²யாவாசபூஜ்யமேவ ஸததம்
ஹம்சஸ்வரூபம் விதி⁴ம்
தஸ்மின் மே ஹ்ருத³யம் ஸுகே² ந ரமதாம்
ஸாம்பே³ பரப்³ரஹ்மணி ॥ 8

உண்மையான வார்த்தைகளை உடையவரும், பரமசிவனுடைய தாமரை போன்ற திருவடிகளைக் காண்பதற்காக (பூமிக்குள் புகுந்து பார்ப்பதற்குத் தகுந்தவாறு) பன்றியின் உடலை எடுத்துக்கொண்டவரும் ஆன மஹாவிஷ்ணுவை எந்தப் பரமசிவன் தயவினால் எல்லா உலகங்களுக்கும் நாதனாக செய்தாரோ; எவருடைய தலையைப் பார்ப்பதில் (முயன்றவரும்) (தலையைப் பார்க்காமலே, "பார்த்தேன்" என்று) பொய்யான வார்த்தையைக் கூறியவரும் (ஆகாயத்தில் அளாவிய பரமசிவன் தலையைப் பார்ப்பதற்கு அனுகூலமான) அன்னத்தின் உருவத்தை உடையவரும் ஆன பிரம்மாவை எப்பொழுதும் பூஜிக்கத் தகாதவ ராகவே செய்தாரோ அந்த பரப்பிரம்ம ரூபமான அம்பிகையோடு சேர்ந்த பரமசிவனிடத்தில் என் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக்கொண்டிருக்கட்டும்.

யஸ்யாஸந் த⁴ரணீஜலாக்³ நிபவன
வ்யோமார்கசந்த்³ராத³ய:
விக்²யாதாஸ்தனவோऽஷ்டதா⁴ பரிணதா:
நான்யத்ததோ வர்த்ததே ।

ஓங்காரார்த2 விவேசனீ ச்ருதிரியம்
சாசஷ்ட துர்யம் சிவம்
தஸ்மின் மே ஹ்ருத3யம் ஸுகே2 ந ரமதாம்
ஸாம்பே2 பரப்ர3ஹ்மணி || 9

பூமி, ஜலம், அக்னி, காற்று, ஆகாசம், சூர்யன், சந்திரன் (யஜமானன்) முதலிய எட்டு விதமாக ஏற்பட்ட, புகழ் பெற்ற சரீரங்கள் எந்தப் பரமசிவனுக்கு இருக்கின்றனவோ; (எந்த அஷ்டமூர்த்தியான) பரமசிவனைக். காட்டிலும் வேறொன்று இல்லையோ, ஓங்காரத்தின் அர்த்தத்தை விளக்கும் (மாண்டூக்ய) ச்ருதியும் (எந்த பரமசிவனை) (ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி இம் மூன்றவஸ்தைகளிலும் இருக்கும் விச்வம், தைஜஸன், ப்ராஜ்ஞன் இம்மூவரைக் காட்டிலும் மேலான ஆத்மாவான) நான்காவதாகவும் மங்கள ரூபியாகவும் சொல்லுகிறதோ அந்த பரப்பிரம்ம ரூபமான அம்பிகையொடு சேர்ந்த பரம சிவனிடத்தில் என் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக்கொண்டிருக்கட்டும்.

விஷ்ணுப்3ரஹ்மஸுராதி4பப்ரப்4ருதய:
சர்வேடபி தே3வா யத3ர
ஸம்பூ4 தாஜ்ஜலதே4ர் விஷாத் பரிப4வம்
ப்ராப்தாஸ்ததா3 ஸத்வரம்
தாநார்தான் சரணாகதானிதி ஸுரான்
யோடரக்ஷத3ர் த4க்ஷணாத்
தஸ்மின் மே ஹ்ருத3யம் ஸுகே2 ந ரமதாம்
ஸாம்பே3 பரப்ர3 ஹ்மணி || 10

எப்பொழுது விஷ்ணு, ப்ரஹ்மா, தேவேந்திரன் முதலிய எல்லா தேவர்களும் ஸமுத்திரத்திலிருந்து உண்டான (ஹாலாஹல) விஷத்திலிருந்து (அதாவது, அவ்விஷத்தை அடக்க முடியாமல்) அவமானத்தை அடைந்தார்களோ, அப்பொழுது கஷ்டமுற்ற அந்த தேவர்களை,'சரண் அடைந்தவர்கள்' என்கிற காரணத்தால் எந்த பரமசிவன் சீக்கிரமாக அரை க்ஷணத்தில் காப்பாற்றினாரோ அந்த பரப்பிரம்ம ரூபமான, அம்பிகையோடு சேர்ந்த பரமசிவனிடத்தில் என் உள்ளம் இன்பத்தோடு விளையாடிக்கொண்டிருக்கட்டும்.



ஸ்ரீ தக்ஷிணாமூர்தயஷ்டகம்

(அஷ்டகம்: எட்டுச்லோகம் கொண்ட துதி)

"தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்" எனப்பட்டாலும் பத்து ச்லோகங்கள் கொண்ட இந்த ஸ்தோத்ரத்தின் தொடக்கத்தில் அடியிற்காணும் த்யான ச்லோகம் கூறப்படும்:

மௌன - வ்யாக்²யா - ப்ரகடித - பர
ப்³ரஹ்ம தத்வம் யுவானம்
வர்ஷிஷ்டா²ந்தேவஸத்³ - ருஷிக³ணை
- ராவ்ருதம் ப்²ரஹ்ம நிஷ்டை: |
ஆசார்யேந்த்³ரம் கரகலித - சின்
முத்³ர - மானந்த³ ரூபம்
ஸ்வாத்மாராமம் முதி³தவத³னம்
த³க்ஷிணாமூர்த்தி - மீடே³ ||

மௌனமான விளக்கத்தாலேயே பரப்பிரம்ம தத்வத்தைப் பிரகடனம் செய்பவரும், யுவவடிவினரும், மிகவும் கிழவர்களான - பிரம்ம நிஷ்டர்களான ரிஷிகளை சிஷ்யர்களால் சூழ்ப்பட்டவரும், ஆசார்யருள் தலைசிறந்தவரும், கையில் சின்முத்ரை கூடியவரும், ஆனந்தரூபியும், தன் ஆன்மாவிலேயே ரசிப்பவரும், நகைமுகத்தினருமான தக்ஷிணாமூர்த்தியைப் போற்றுகிறேன்.

விச்வம் த³ர்பண த்³ருச்யமான நக³ரீ
துல்யம் நிஜாந்தர்க³தம்
பச்யன்னாத்மனி மாயயா ப³ஹிரிவோத்³-
பூ⁴தம் யதா² நித்³ரயா,
ய: சாக்ஷாத்குருதே ப்ரபோ³த⁴ஸமயே
ஸ்வாத்மானமேவாத்வயம்
தஸ்மை ஸ்ரீ கு³ருமூர்த்தயே நம இத³ம்
ஸ்ரீ த³க்ஷிணாமூர்த்தயே. 1

கண்ணாடியில் காணும் நகரம் போன்றதும், தனக்குள்ளேயே இருப்பதுமான இவ்வுலகை, தூக்கத்தில் தன்னொருவனிடமிருந்தே பலவற்றை உண்டாக்கிக் கனவு காண்பதுபோல் மாயையினால் வெளியில் உண்டானதைப் போல் பார்த்துக் கொண்டு எந்த ஜீவன் தூங்கி விழித்த ஸமயத்தில் (ஞானம் வந்த ஸமயத்தில்) இரண்டில்லாத (யாவற்றிற்கும் காரணமாகிய) தன் ஆத்மாவையே நேரில் ன் தான் அந்த ஆத்மா' என்று உணருகிறானோ அந்த (சச்சிதானந்த ஸம்பத்து பொருந்திய குருவின் உருவமுடைய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக.)

பீ³ஜஸ்யாந்தரிவாங்குரோ ஜக³தி³த³ம்
ப்ராங் நிர்விகல்பம் புன:
மாயாகல்பித தே³சகாலகலனா
வைசித்ர்யசித்ரீக்ருதம்,
மாயாவீவ விஜ்ரும்ப⁴யத்யபி மஹா
யோகீ³வ ய: ஸ்வேச்சயா
தஸ்மை ஸ்ரீ கு³ருமூர்த்தயே நம இத³ம்
ஸ்ரீ த³க்ஷிணாமூர்த்தயே. 2

விதையின் உள்ளே முளையிருப்பதுபோல் சிருஷ்டிக்கு முன்பு வேற்றுமை யில்லாததும், (சிருஷ்டிக்குப்) பிறகு (ஈசனின் சக்தியாகிய) மாயையினால் கற்பித்த தேசம், காலம் அவைகளின் சேர்க்கை ஆகிய வேற்றுமையினால் பற்பலவிதமா யிருக்கின்றதுமான இந்த உலகை எவர் இந்த்ர ஜாலம், செய்பவனைப் போலவும் மஹா யோகியைப் போலவும் தன்னிஷ்டத்தினாலேயே சிருஷ்டிக்கிறாரோ அந்த (ஸச்சிதானந்த) ஸம்பத்து பொருந்திய குருவின் உருவமுடைய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீதக்ஷிணா மூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக.)

யஸ்யைவ ஸ்பு²ரணம் ஸதா³த்மகமஸத்
கல்பார்த²க³ம் பா⁴ஸதே
ஸாக்ஷாத் தத்வமஸீதி வேத³வசஸா
யோ போ³த⁴யத்யாச்ரிதான்,
யத்ஸாக்ஷாத்கரணாத் ப⁴வேந்த புனரா
வ்ருத்திர்ப⁴வாம்போ⁴ நிதௌ⁴
தஸ்மை ஸ்ரீகு³ருமூர்த்தயே நம இத³ம்
ஸ்ரீ த³க்ஷிணாமூர்த்தயே. 3

எந்த பரமாத்மாவினுடைய ஸத்ருபமான (எக்காலத்திலும் எத்தேசத்திலும் 'இருக்கிறது' என்ற அறிவிற்கு விஷயமான) வெளிப்பாடே இல்லாமலிருக்கும் பொருளுக்கு ஒப்பான வெளி வஸ்துக்களை அடைந்து விளங்குகிறதோ; அதாவது புற ப்ரபஞ்சம் போல விளங்குகிறதோ; சரணமடைந்தவர்களை நீயே அது (பரமாத்மா) வாக இருக்கிறாய் "தத் - தவம் - அஸி" என்ற வேத வாக்கியத்தினால் நேருக்கு நேராகவே (தத்வ ஸ்வரூபமான ஆத்மாவை) அறிவிக்கிறாரோ; எவரை நேராக அனுபவிப்பதால் பிறவியென்னும் கடலில் மறுமுறை வருகை உண்டாகாதோ அந்த (ஸச்சிதானந்த ஸம்பத்து பொருந்திய குருவின் உருவமுடைய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக).

நானாசித்ர கடோதரஸ்தித மஹா
தீப ப்ரபா பாஸ்வரம்
ஜ்ஞானம் யஸ்ய து சக்ஷுராதி கரண
த்வாரா பஹி: ஸ்பந்ததே,
ஜானாமீதி தமேவ பாந்த மனுபாத்

யேதத் ஸமஸ்தம் ஜகத்
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம்
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே. 4

பற்பல ஓட்டைகளோடு கூடிய குடத்தின் உள்ளே இருக்கின்ற பெரிய விளக்கின் ஒளி (அந்த ஓட்டைகள் மூலம்) போல் எந்த ஆத்மாவினுடைய அறிவு கண் முதலிய புலன்களில் வழியாக வெளியில் செல்லுகிறதோ, "நான் அறிகி றேன்" என்று விளங்குகிற அந்த ஆத்மாவான யாதொன்றையே இந்த எல்லாமான உலகமும் பின்பற்றி விளங்குகிறதோ அந்த (ஸச்சிதானந்த) ஸம்பத்து பொருந்திய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக)

தே³ஹம் ப்ராணமபீந்த்³ரியாண்யபி சலாம்
பு³த்³தி⁴ம் ச சூன்யம் விது³:
ஸ்த்ரீபா³லாந்த⁴ ஜடோ³பமாஸ்த்வஹமிதி
ப்⁴ராந்தா ப்⁴ருசம் வாதி³ன:
மாயா சக்தி விலாஸ கல்பித மஹா
வ்யாமோஹ ஸம்ஹாரிணே
தஸ்மை ஸ்ரீ கு³ருமூர்த்தயே நம இத³ம்
ஸ்ரீ த³க்ஷிணாமூர்த்தயே. 5

உடலையும், உயிர்மூச்சையும் புலன்களையும், (கணத்திற்கோர் முறை) மாறுகின்ற புத்தியையும், ஒன்றுமில்லாத சூன்ய நிலையையும் தான்" என்று (ஆத்மாவென்று) தத்வ வாதிகள், பெண்கள், குழந்தைகள், குருடர்கள், அறிவற்றவர்கள் இவர்களுக்கு ஒப்பாக மிகவும் ஏமாந்தவர்களாக அறிந்தார்கள் (எண்ணுகிறார்கள்). (இவ்வாறு) மாயா சக்தியின் விலாஸங்களால் உண்டாக்கப் பட்ட பெரும் மயக்கத்தை அகற்றும் அந்த (ஸச்சிதானந்த) ஸம்பத்து பொருந்திய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக).

ராஹுக்³ரஸ்த தி³வாகரேந்து³ ஸத்³ருசோ
மாயாஸமாச்சா²த³னாத்
ஸன்மாத்ர: கரணோபஸம்ஹரணதோ
யோபூ⁴த் ஸுஷுப்த: புமான்,
ப்ராக³ ஸ்வாப்ஸமிதி ப்ரபோ³த⁴ ஸமயே
ய: ப்ரத்யபி⁴ஜ்ஞாயதே
தஸ்மை ஸ்ரீ கு³ருமூர்த்தயே நம இத³ம்
ஸ்ரீ த³க்ஷிணாமூர்த்தயே. 6

எந்த ஆத்மா தூக்கத்தில் மாயையினால் மூடப்பட்டிருப்பதால் ராகு மறைத்த சூர்ய சந்திரர்களுக்கு ஒப்பாக, ஸத் (இருத்தல்) ரூபமாக மட்டும் இருந்துகொண்டு இந்த்ரியங்களை செயலற்றனவாக அடக்கி இருந்தானோ, (எந்த ஆத்மா) விழித்துக்கொண்ட சமயத்தில் முன்பு (இதுவரையில்) "தூங்கினேன்" என்று நினைக்கப்படுகிறானோ அந்த ஸச்சிதானந்த ஸம்பத்து பொருந்திய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக).

குறிப்பு: - உறங்கும் பொழுது ஆத்மா ஐம்புலன்களையும் மனதையும் ஒருவித செய்கையும் இல்லாமல் அடக்கி இருக்கிறது. இவ்வாறு மனமும் புலனும் செயற்படாத போதிலும், தூக்க நிலையிலும் ஆத்மாநுபவம் ஏற்படவில்லை. ஏனெனில் தூங்கும் பொழுதும் மாயை மூடிக் கொண்டிருக்கிறது. ஆகவே கிரகண வேளையில் சூரியனும் சந்திரனும் அழியா விடினும், புலனாகாமல் இருப்பது போல், ஆத்மா தூக்கத்தில் இருப்பினும், விளங்காமல் இருக்கிறது. உறங்கும் பொழுது மனமும் புலனும் இல்லாதது போல், ஆத்மாவும் இல்லை என்று கூறமுடியாது. ஏன் என்றால், விழித்துக் கொண்டவுடன் 'தான் உறங்கினேன்' என்று உறங்கினவனுக்கு அறிவு உண்டாகிறதல்லவா;

பா³ல்யாதி³ஷ்வபி ஜாக்³ரதா³தி³ஷ ததா²
ஸர்வாஸ்வவஸ்தா²ஸ்வபி
வ்யாவ்ருத்தாஸ்வனுவர்தமானமஹ -
மித்யந்த: ஸ்பு²ரந்தம் ஸதா³,
ஸ்வாத்மானம் ப்ரகடீகரோதி ப⁴ஜதாம்
யோ முத்³ரயா ப⁴த்³ரயா
தஸ்மை ஸ்ரீகு³ருமூர்த்தயே நம இத³ம்
ஸ்ரீ த³க்ஷிணாமூர்த்தயே, 7

குழந்தைப் பருவம் (இளமை, முதுமை) முதலானதும், அப்படியே ஜாக்ரத் (விழிப்பு, கனவு, தூக்கம்) முதலான துமான வேறுபட்ட எல்லா அவஸ்தைகளிலும் வேறுபடாமல் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதும்; எப்பொழுதும் நான் என்று உள்ளே விளங்குவதுமான; தன்னைக் காட்டிலும் வேற்றுமை இல்லாத பரமாத்மாவை தன்னை ஸேவிப்பவர்களுக்கு எந்த தக்ஷிணாமூர்த்தி மங்களமான சின் முத்திரையினால் ப்ரத்யக்ஷமாக காண்பிக்கிறாரோ அந்த (ஸச்சிதானந்த) ஸம்பத்து பொருந்திய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக).

குறிப்பு: - தக்ஷிணாமூர்த்தியின் உருவத்தில் வலது கை கட்டை விரலும் ஆள் காட்டி விரலும் சேர்க்கப்பட்டு துலங்குவதைப் படங்களிலும் உருவ சிலைகளிலும் காணலாம். அதற்கு சித் அல்லது ஞான முத்திரை என்று பெயர். அதற்கு ஜீவ - பிரம்ம ஐக்யம், (உயிரும் கடவுளும் ஒன்றுதல்) என்பது பொருள். அதனாலேயே தன்னை அடக்கலம்

புகுந்தோர்க்கு சித் முத்திரையால் அவர் ஆத்ம தத்வத்தை உபதேசிப்பதாக இந்த சுலோகம் கூறுகிறது.

விச்வம் பச்யதி கார்யகாரணதயா
ஸ்வஸ்வாமி ஸம்ப^{3}ந்த^{4}த:
சிஷ்யாசார்யதயா ததை^{2}வ பித்ரு
புத்ராத்^{3}யாத்மனா பே^{4}த்^{3}த:
ஸ்வப்னே ஜாக்^{3}ரதி வா ய ஏஷ புருஷோ
மாயா பரிப்^{4}ராமித:
தஸ்மை ஸ்ரீ கு^{3}ருமூர்த்தயே நம இத^{3}ம்
ஸ்ரீ த^{3}க்ஷிணாமூர்த்தயே. 8

தூக்கத்திலோ, விழிப்பிலோ எந்த ஒரு ஆத்மா மாயையினால் பற்பல மருளை அடைவிக்கப்பட்டவராக இந்த உலகை கார்ய - காரணத் தன்மையோடும், தான் - தன் தலைவன் என்ற உறவோடும், சீடன் ஆசார்யன் என்ற தன்மையோடும், அப்படியே தகப்பன் - மகன் என்றும் பற்பல வேற்றுமையை உடையதாக பார்க்கிறாரோ அந்த (ஸச்சிதானந்த) ஸம்பத்து பொருந்திய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக.)

குறிப்பு: - உலகம் பொய். ஆத்மா மாயையில் உட்பட்டுப் பலவிதமாக கற்பித்தது இவ்வுலகம். அந்த மாயை கடவுளின் சக்தி. ஆகவே கடவுள் மாயைக்குள் புகுந்து ஜீவ வடிவம் கொண்டு உலகை உண்டாக்குவதாக வேதாந்தம் கூறுகிறது. இக்கருத்து இங்கு விளங்குகிறது.

பூ^{4}ரம்பா^{4}ம்ஸ்ய நலோ நிலோம்ப^{3}ர
மஹர் நாதோ^{2} ஹ்மாம்சு: புமான்
இத்யாபா^{4}தி சராசராத்மகமித^{3}ம்
யஸ்யைவ மூர்த்யஷ்டகம்,
நான்யத் கிஞ்சன வித்^{3}யதே விம்ருசதாம்
யஸ்மாத் பரஸ்மாத் விபோ^{4}:
தஸ்மை ஸ்ரீ கு^{3}ருமூர்த்தயே நம இத^{3}ம்
ஸ்ரீ த^{3}க்ஷிணாமூர்த்தயே. 9

எந்த பரமேச்வரனுக்கே பூமி, ஜலம், அக்னி, காற்று, ஆகாயம், சூர்யன், சந்திரன், உயிர் என்று இவ்விதம் இந்த அசைகின்றதும் அசையாததுமான எட்டு உருவம் பிரகாசிக்கின்றதோ; உலகத்தின் உண்மையை சோதிக்கின்றவர்களுக்கு எங்கும் நிறைந்த எந்த பரமாத்மாவைக் காட்டிலும் வேறு ஒன்றும் இல்லையோ அந்த (சச்சிதானந்த) ஸம்பத்து பொருந்திய தெற்கு நோக்கிய தெய்வமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் (உரித்தாகுக).

ஸர்வாத்மத்வமிதி ஸ்புடிக்ருதமித3ம்
யஸ்மாத3முஷ்மிம்ஸ்தவே
தேனாஸ்ய ச்ரவணாத் தத3ர்த2 மனனாத்
த்4யானாச்ச ஸங்கீர்த்தனாத்,
ஸர்வாத்மத்வ மஹா விபூ4தி ஸஹிதம்
ஸ்யா3 தீச்வரத்வம் ஸ்வத:
ஸித்3த்4 யேத் தத் புனரஷ்டதா4 பரிணதம்
சைச்வர்யமவ்யாஹதம். 10

இந்த முறையில் இந்த ஸ்தோத்ரத்தில், எல்லாம் ஒரே ஆத்ம ரூபம் என்ற தத்துவம் விளக்கப் பெற்றிருக்கிறதோ அவ்வாறு அறிவதால் இந்த ஸ்தோத்த ரத்தை கேட்பதாலும், இதன் பொருள் மனதால் சிந்திப்பதாலும், தியானம் செய்வதாலும், பிறருக்கு நன்றாகச் சொல்வதாலும், எல்லாம் ஒரே ஆத்மாவாக இருக்கும் நிலையாகிய பெரிய ஐச்வர்யத்தோடு கூடிய பரமாத்மத் தன்மை ஏற்படும். மேலும் எட்டாக வகுக்கப்பட்ட அணிமாதி ஸித்திகளான ஐச்வர்யமும் தடையின்றி தானாகவே கைகூடும்.

அதன்பின் அடியாற்காணும் சுலோகங்களும் கூறப்படுவது வழக்கம்.

சித்ரம் வடதரோர் - மூலே வ்ருத்3தா4:
சிஷ்யா கு3ருர்யுவா ।
கு3ரோஸ்து மௌனம் வ்யாக்2யானம்
சிஷ்யாஸ்து சி3ன்னஸம்சயா: ॥

ஆலமரத்தடியிலே ஒரு விசித்ரம்! சீடர்கள் கிழவர்கள். குருவோ யுவர்! குருவின் விளக்கவுரை மௌனமாகவே உள்ளது ஆயினும் சிஷ்யர்கள் ஐயம் தீர்ந்தவராகின்றனர்!

ஓம் நம: ப்ரணவார்தா2ய
சுத்3த4 ஜ்ஞானைக மூர்த்தயே நம: ।
நிர்மலாய ப்ரசாந்தாய
ஸ்ரீ த3க்ஷிணாமூர்த்தயே நம: ॥

ஓம்! ஓம் எனும் ப்ரபாவத்தின் பொருளாயும், கேவல ஞானத்தின் ஏக மான வடிவினராயும், நிர்மலராயும், உயர்ந்த அமைதி மயமாயும் உள்ள தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

கு3ரவே ஸர்வலோகானாம்
பி4ஷஜே ப4வரோகி3ணாம் ।
நித4யே ஸர்வவித்3யானாம்
ஸ்ரீ த3க்ஷிணாமூர்த்தயே நம ॥

எல்லா உலகங்களுக்கும் குருவும், ஸம்ஸாரம் என்னும் நோயுற்றோருக்கு மருத்துவரும், எல்லா வித்யைகளுக்கும் பொக்கிஷமும் ஆன தக்ஷிணாமூர்த்திக்கு வணக்கம்.

(இதன்பின், முதலிற் சொன்ன" மௌன - வ்யாக்யா'என்ற த்யான ச்லோகத்தை மீண்டும் கூறி முடிக்கவும்.)

மௌன - வ்யாக்^{2}யா - ப்ரகடித - பர
ப்^{3}ரஹ்ம தத்வம் யுவானம்
வர்ஷிஷ்டா^{2}ந்தேவஸத்^{3} - ருஷிக^{3}ணை
- ராவ்ருதம் ப்^{3}ரஹ்ம நிஷ்டை^{2}: |
ஆசார்யேந்த்^{3}ரம் கரகலித - சின்
முத்^{3}ர மானந்த^{3} ரூபம்
ஸ்வாத்மாராமம் முதி^{3}தவத^{3}னம்
த^{3}க்ஷிணாமூர்த்தி - மீடே^{3} ||

மௌனமான விளக்கத்தாலேயே பரப்பிரம்ம தத்வத்தைப் பிரகடனம் செய்பவரும், யுவ வடிவினரும், மிகவும் கிழவர்களான - பிரம்ம நிஷ்டர்களான ரிஷிகளை சிஷ்யர்களால் சூழப்பட்டவரும், ஆசார்யருள் தலைசிறந்தவரும், கையில் சின்முத்ரை கூடியவரும், ஆனந்தரூபியும், தன் ஆன்மாவிலேயே ரசிப் பவரும், நகை முகத்தினருமான தக்ஷிணாமூர்த்தியைப் போற்றுகிறேன்.



ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரம்

(ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்குரிய மந்திரமொன்றின் எழுத்துக்களை வரிசையாக ச்லோகத்தின் ஆரம்ப அக்ஷரங்களாக வைத்துச் செய்யப்பட்டதால் 'வர்ணமாலா ஸ்தோத்ரம்' எனப்பட்டது.)

ஓமித்யேதத்^{3} யஸ்ய பு^{3}தை^{4}ர் நாம க்^{3}ருஹீதம்
யத்^{3}பா^{4}ஸேத^{3}ம் பா^{4}தி ஸமஸ்தம் வியதா^{3}தி^{3} ।
யஸ்யாக்ஞாத: ஸ்வஸ்வப^{3}தஸ்தா^{2} விதி^{4} முக்^{2}யா:
தம் ப்ரத்யஞ்சம் த^{3}க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 1

ஓம் என்ற பிரணவ எழுத்தை எந்த தெய்வத்தின் பெயராகப் பெரியோர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ, ஆகாயம் முதலான எல்லாப் பொருள்களும் எந்த தெய்வத்தின் ஒளியினாலேயே அறியப்படுகின்றனவோ. பிரம்மா முதலான தேவர்கள் அனைவரும் எந்த தெய்வத்தின் ஆணையினால் தங்கள் தங்கள் இடத்தில் நிலைபெற்றிருக்கிறார்களோ, அந்தத் தெய்வமான தெற்கு நோக்கிய தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

நம்ராங்கா^{3}ணாம் ப^{4}க்திமதாம் ய: புருஷார்தா^{2}ன்
த^{3}த்வா க்ஷிப்ரம் ஹந்தி ச தத்ஸர்வ விபத்தீ: ।
பாதா^{3}ம்போ^{4}ஜாத^{4} ஸ்தனிதாபஸ்மிருதிமீசம்
தம் ப்ரத்யஞ்சம் த^{3}க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 2

எந்த தெய்வமானது பக்தியுடன் தன்னை வணங்குபவர்களுக்கு வேண்டிய புருஷார்த்தங்களைக் கொடுத்து, அவர்களை அணுகும் எல்லா ஆபத்துக்களையும் உடனேயே போக்குகின்றதோ, (அரக்க உருவத்தில் தோன்றிய) அபஸ் மாரத்தைத் தனது (இடது) காலின் கீழ் அடக்கி வைத்திருக்கின்றதோ, அந்தத் தெய்வமான தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

மோஹத்^{4} வஸ்த்யை வைணிக வையாஸிகி முக்^{2}யா :
ஸம்விந்முத்^{3}ரா புஸ்தக வீணாக்ஷகு^{3}ணான்யம் ।
ஹஸ்தாம்போ^{4}ஜைர்பி^{3}ப்^{4}ரதமாராதி^{4} தவந்த:
தம் ப்ரத்யஞ்சம் த^{3}க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 3

சின்முத்ரை, புத்தகம், வீணை, ருத்ராக்ஷமாலை இவைகளைத் தனது தாமரைக் கைகளில் தரித்துக் கொண்டிருக்கும் எந்த தெய்வத்தைத் தங்களது அறியாமையை விலக்கிக் கொள்வதற்காக நாரதர், சுகர் போன்ற பெரியோர் களும்

அண்டினார்கலோ அந்த தெய்வமான தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கிறேன்.

ப4த்3ராரூட4ம் ப4த்3ரத3 மாராத4 யித்ருணாம்
ப4க்திச்ரத்3தா பூர்வகமீசம் ப்ரணமந்தி ।
ஆதி3த்யா யம் வாஞ்சி2த ஸித்3த்யை கருணாப்3திம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 4

பத்ராசனத்தில் வீற்றிருப்பவரும், பக்தி சிரத்தையுடன் தன்னை ஆராதிப்பவர்களுக்கு எல்லா நன்மைகளையும் கொடுப்பவரும், கருணைக் கடலுமான் எவரை எல்லாத் தேவதைகளும் தங்களுடைய விருப்பங்கள் நிறைவேறுவதற்காக எப்பொழுதும் வணங்குகிறார்களோ அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

க3ர்பா4ந்த: ஸ்தா2: ப்ராணின ஏதே ப4வபாச
ச்சே2தே3 த3க்ஷம் நிச்சிதவந்த: சரணம் யம் ।
ஆராத்4யாங்க4ரி ப்ரஸ்பு2ரத3ம்போ4ருஹ யுக்3மம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 5

கருவில் வளரும் எல்லாவகையான உயிரினங்களும் தங்களது பெற தளையை அறுக்கவல்லவராக எவரை நிச்சயித்து சரணடைகின்றனவோ, தன் கத்தக்க், தாமரை போன்ற திருவடிகளை உடைய அந்த தக்ஷிணாமூத்த பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன். எப்பொழுதும் மனத்தில் நினக்கின்றேன்.

வக்த்ரம் த4ன்யா: ஸம்ஸ்ருதி வார்த்4தேரதிமாத்ராத்
பீ4தா, ஸந்த: பூர்ணச்சாங்கத்3யுதி யஸ்ய - ।
ஸேவந்தே sத்4யாஸீ நமனந்தம் வடமூலம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 6

பிறவிக் கடலிலிருந்து மிகவும் பயத்தையடைந்த புண்யசாலிகளான நல்லோர்கள் முழு நிலவை ஒத்த எவரது முகத்தையே எதிர் நோக்கி சேவிக்கின்றார்களோ, ஆலமரத்தடி நிழலில் வீற்றிருக்கும் எல்லையற்ற பரம்பொருளான அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

தேஜ: ஸ்தோமைரங்க3த3 ஸங்க4ட்டித பா4ஸ்வன்
மாணிக்யோத்தை2ர் பா4ஸித் விச்வோ ருசிரைர்ய: ।
தேஜோமூர்த்திம் கா2னிலதேஜ: ப்ரமுகா2ப்2தி4ம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 7

தோள்வளையில் பதிக்கப் பெற்ற பிரகாசமான மாணிக்கங்களிலிருந்து தோன்றும் அழகிய ஒளிப்பிழம்புகளால் எல்லா உலகங்களையும் பிரகாசப்படுத்திக் கொண்டிருப்பவரும், ஆகாயம் - காற்று - அக்னி முதலான பூதங்களின் தோற்றத்திற்கு இருப்பிடமாக இருப்பவரும், தன்னொளியோடு விளங்குபவருமான அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

த3த்4யாஜ்யாதி3 த்3ரவ்யககர்மாண்யகி2லோனி
த்யக்த்வா காங்க்ஷாம் கர்மப2லேஷ்வத்ர கரோதி ।
யஜ்ஜிஜ்ஞாஸாம் ரூபப2லார்தீ2 க்ஷிதிதே3வ:
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 8

பூ - தேவர்களான அந்தணர்கள் தயிர், நெய் போன்ற பொருள்களால் செய்யப்பட வேண்டிய (யஜ்ஞாதி) காரியங்களை எல்லாம் அவைகளால் அடையப் பெறும் சிறிய பயன்களைக் கருதாமலேயே செய்து, பின்னர் அதன் (நிஷ்காம்ய கர்ம) பயனாக தங்களது உண்மையான தன்மையையே தாங்கள் அடைவதற்காக எந்த தக்ஷிணாமூர்த்தியையே அறிய விரும்புகிறார்களோ அந்த தக்ஷிணாமூர்த்தியையே எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

க்ஷிப்ரம் லோகே யம் ப4ஜமான: ப்ருது2புண்ய:
ப்ரத்4வஸ்தாதி4: ப்ரோஜ்ஜி2தஸம்ஸ்ருத்யகி2 - லார்தி ।
ப்ரத்யக்3 பூ4தம் ப்3ரஹ்ம பரம் ஸன்ரமதே ய:
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 9

புண்யசாலியான ஒருவன் எந்த தக்ஷிணாமூர்த்தியை பஜிப்பதால் சீக்கிரமே மனோவியாதிகள் அழிவுற்று, ஏனைய, பிறவியினால் வரும் துக்கங்களிலிருந்தும் விடுபட்டு உள்ளூறிய தனது பரம்பொருட் தன்மையையே அடைந்து மகிழ்ந்து கொண்டிருப்பானோ அந்த தக்ஷிணாமூர்த்தியையே எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

ணாநேத்யேவம் யன்மனுமத்4யஸ்தி2த வர்ணான்
ப4க்தா: காலே வர்ணக்3ருஹீத்யை ப்ரஜபந்த: ।
மோத3ந்தே ஸம்ப்ராப்த ஸமஸ்தச்ருதி தந்த்ரா:
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 10

வேத நூல்களை நன்றாகக் கற்றுணர்ந்த பக்தர்கள் மந்த்ர ஜபகாலத்தில் எந்த தக்ஷிணாமூர்த்தி மந்த்ரத்தின் நடுவிலுள்ள'ணா'என்ற எழுத்தை முக்கியமாகக் கொண்டு ஜபம் செய்து மகிழ்கிறார்களோ, அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

மூர்த்திச்சா2யா நிர்ஜித மந்தா3கினிகுந்த3
ப்ராலேயாம்போ4ராசி ஸுதா4பூ4தி ஸுரேபா4 ।
யஸ்யாப்3ராபா4 ஹாஸவிதௌ4 த3க்ஷசிரோதி4:
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 11

வெள்ளை நிறமான எவருடைய உடலானது மந்தாகினி - (தேவகங்கை) குந்தபுஷ்பம், பனி, பாற்கடல்;'அம்ருதம், விபூதி, ஐராவதம் இவைகளை யெல்லாம் தோல்வியடையச் செய்கின்றதோ, சிரிக்கும் சமயத்தில் விஷமுண்ட எவருடைய கழுத்தானது மேகம் போன்று கருநிறமாக விளங்குகின்றதோ அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்

தப்தஸ்வர்ணச்சா2ய ஜடாஜூடகடாஹ
ப்ரோத்3யத்3 வீசீவல்லி விராஜத்ஸுரஸிந்து4ம் ।
நித்யம் ஸூக்ஷ்மம் நித்ய நிரஸ்தாகி2லதோ3ஷம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 12

புடம் போட்டெடுத்த தங்கத்தின் வண்ணம் போன்ற வண்ணமுடைய எவருடைய கடாஹம் (குன்று) போன்ற ஜடை முடியில் ஆகாய கங்கையானது அலைகளுடன் சுழன்று கொண்டிருக்கிறதோ, அழிவற்றவரும், நுட்பமானவரும், எப்போதும் யாதொரு. குற்றமுமற்றவருமான அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

யேன ஜ்ஞாதேநைவ ஸமஸ்தம் விதி3தம் ஸ்யாத்
யஸ்மாத3ன்யத்3 வஸ்து ஜக3த்யாம் சசச்ருங்க3ம் ।
யம் ப்ராப்தானாம் நாஸ்தி பரம் ப்ராப்யமனாதி3ம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 13

எந்த ஸ்வரூபத்தை அறிந்தால் ஏனைய பொருள்களும் அறியப்பட்டதாக ஆகுமோ, எந்த ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறானவஸ்துவே உலகில் முயற் கொம்புபோல உண்மையாக இல்லையோ, எந்த ஸ்வரூபத்தை அடைந்தால் பின்னர் அடைய வேண்டியது ஒன்றுமே இருக்காதோ, ஆதியில்லாத அந்த தக்ஷிணா மூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

மத்தோ மாரோ யஸ்ய லலாடாக்ஷிப4வாக்3னி -
ஸ்பூ2ர்ஜத்கீலப்ரோஷித ப4ஸ்மீக்ருத தே3ஹ: ।
தத்3ப4ஸ்மாஸீத்3யேஸ்ய ஸுஜாத: படவாஸ:
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 14

மதங்கொண்ட மன்மதன் எவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து உண்டான அக்னி வெடித்து வெளிப்பட்ட ஜ்வாலையினால் சாம்பலாக்கப் பட்டானோ. அந்த

சாம்பலே எவருக்கு அழகான வஸ்திரமாக மாறியதோ அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

ஹ்யம்போ4ராசௌ ஸம்ஸ்ருதிரூபே லுட2தாம் தத்
பாரம் க3ந்தும் யத்பத4 ப4க்திர்த்3ருட4 நௌகா ।
ஸர்வாராத்4யம் ஸர்வக3 மானந்த3 பயோதி4ம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 15

பிறவியெனப்படும் பெருங்கடலில் விழுந்து சுழல்பவர்களுக்கு அதன் கரையை அடைய எவருடைய பாதங்களில் வைக்கப்பட்ட பக்தியொன்றே உறுதியான ஓடமாய் உள்ளதோ, எல்லோராலும் ஆராதிக்கத் தக்கவரும் எங்கும் நிறைந்த வரும் ஆனந்தக் கடலானவருமான அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

மேதா4வீ ஸ்யாதி3ந்து வதம்ஸம் த்4ருதவீணம்
கர்ப்பூராப4ம் புஸ்தக ஹஸ்தம் கமலாக்ஷம் ।
சித்தே த்4யாயன்யஸ்ய வபுர்த்3ராங் மிஷார்த4ம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 16

சந்திரனைத் தலையணியாகக் கொண்டவரும், வீணையைக் கையில் ஏந்திய வரும். கர்ப்பூர நிறமானவரும், புத்தகத்தைக் கையிலேந்தியவரும், தாமரை போன்ற கண்களையுடையவருமான எவருடைய ஸ்வருபத்தை அரை நொடி நேர மேனும் ஒருவன் மனதில் நினைப்பதால் சீக்கிரமே அறிவின் மேன்மையை அடைவானோ அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

தா4ம்நாம் தா4ம ப்ரௌட4 ருசீனாம் பரமம் யத்
ஸூர்யாதீ3 நாம் யஸ்ய ஸ ஹேதுர்ஜகதா3தே3: ।
ஏதாவான்யோ யஸ்ய ந ஸர்வேச்வரமீட்3யம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 17

அதிக ஒளியுள்ள சூரியன் முதலானவைகளுக்கும் எவர் ஒளியைக் கொடுக்கின்றாரோ, எல்லா உலகத்தினுடைய தோற்றத்திற்கும் எவர் காரணமானவரோ, எவர் அளவிடமுடியாதவரோ எல்லாவற்றிற்கும் ஈச்வரனும் துதிக்கத் தக்கவருமான அந்த தக்ஷிணாமூர்த்தியை மனத்தில் நினைக்கின்றேன்.

ப்ரத்யாஹார ப்ராண நிரோதா4தி3 ஸமர்தை2:
ப4க்தைர்தா3ந்தை: ஸம்யத சித்தைர்யதமாநை: ।
ஸ்வாத்மத்வேன ஜ்ஞாயத ஏவ த்வரயாய:
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்தரம் கலயாமி ॥ 18

ப்ரத்யாஹாரம் (புலன்களை உள்ளிழுத்தல்) - ப்ராணாயாமம் (மூச்சை அடக்குதல்) முதலியவற்றைச் செய்யும் வல்லமை உள்ளவர்களும், பக்தர்களும், ஐம்புலன்களையும் வென்றவர்களும், மனவடக்கமுள்ளவர்களும், முயற்சி செய்பவர்களுமான சாதகர்களால் விரைவிலேயே இவரே நம்முடைய உண்மையான ஸ்வரூபமானவர் என்று அறியப்படுபவரான் அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

ஜ்ஞாம்சீபூ4தான் ப்ராணின ஏதான்ப2லதா3தா
சித்தாந்தஸ்த2: ப்ரோயதி ஸ்வே ஸகலேடபி |
க்ருத்யே தே3வ: ப்ராக்த கர்மானுஸர: ஸந்
தம் பரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி || 19

அறிவனான இறைவனுடைய இந்த எல்லா உயிர்களுடைய மனத்துள்ளும் உள் இருந்து கொண்டு அவரவர்களை அவரவர்களின் வினைகளின்படி அவரவர்களின் செயல்களில் ஏவல் செய்து கொண்டு அந்தந்தச் செயல்களின் பயன்களை எவர் கொடுத்துக் கொண்டிருக்கிறாரோ அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

ப்ரஜ்ஞாமாத்ரம் ப்ராபித ஸம்வின்னிஜப4க்தம்
ப்ராணாக்ஷாதே3: ப்ரோயிதாரம் ப்ரணவார்த2ம் |
ப்ராஹு: ப்ராஜ்ஞா யம் விதி3த்தானுச்ரவதத்வா:
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி || 20

வேதங்களின் உட்கருத்தை நன்குணர்ந்த, அறிவாளிகள் எவரை அறிவு மயமானவர், உண்மை பக்தர்களுக்கு ஞானத்தை அடைவிபவர், பிராணனையும் இந்திரியங்களையும் ப்ரேரணை (ஏவுதல்) செய்பவர். பிரணவத்தின் பொருளானவர் என்றெல்லாம் சொல்கின்றார்களோ, அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

யஸ்யாஜ்ஞானாதே3வ ந்ருணாம் ஸம்ஸ்ருதிபோ3தோ4
யஸ்ய ஜ்ஞாநாதே3வ விமோக்ஷோ ப4வதீதி |
ஸ்பஷ்டம் ப்3ருதே வேத3சிரோ தே3சிகமாத்3யம்
தம் ப்ரத்யஞ்சம் த3க்ஷிணவக்த்ரம் கலயாமி || 21

எவருடைய உண்மை ஸ்வரூபத்தை அறியாமையாலேயே இந்த பிறவித் தளை ஏற்படுகிறதென்றும், எவருடைய உண்மை ஸ்வரூபத்தை அறிவதனாலேயே இந்த பந்தத்தினின்றும் விடுதலை ஏற்படுகிறதென்றும் உபநிடதங்கள் தெளிவாகக் கூறுகின்றனவோ, ஆதிகுருவான. அந்த தக்ஷிணாமூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

ச²ன்னேஸவித்³யாரூப படேநைவ ச விச்வம்
யத்ராத⁴ யஸ்தம் ஜீவபரேசத்வமபீத³ம் ।
பா⁴னோர் பா⁴னுஷ்வம்பு³ வத³ஸ்தாகி²லபே⁴த³ம்
தம் ப்ரத்யஞ்சம் த³க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 22

உலகம், உயிர், இறைவன் என்ற பலவகையான வேற்றுமைகளாக, பல நீர்ப்பாத்திரங்களில் பல சூரியர்கள் போன்று, அறியாமையென்றும் ஆடையினால் மறைபட்டுள்ள எவருடைய ஸ்வரூபத்தில் அனைத்தும் ஆரோபிக்கப்பட்டுள்ள வைகளோ, (உண்மையில் அவ்வேற்றுமைகளெல்லாமற்றவரான) அந்த தக்ஷிணா மூர்த்தியை எப்பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

ஸ்வாபஸ்வப்னௌ ஜாக்ர³த³வஸ்தா²பி ந யத்ர
ப்ராணச்சேத: ஸர்வக³தோ ய: ஸகலாத்மா ।
கூடஸ்தோ² ய: கேவல ஸச்சித்ஸுக²ரூப:
தம் ப்ரத்யஞ்சம் த³க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 23

ஜாக்ரத், (விழிப்பு) ஸ்வப்னம், (கனவு) ஸுஷுப்தி (தூக்கம்) எனப்படும் மூன்று உணர்வு நிலைகளும் எவரிடம் இல்லையே, உயிராய் உணர்வாய், எங்கும் நிறைந்தவராய், எல்லா ஆத்மாவுமாய், மாற்றமில்லாதவராய், கலப்பற்ற ஸச்சிதானந்த ஸ்வரூபராய் எவர் இருக்கிறாரோ, அந்த தக்ஷிணாமூர்த்தியை எப் பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

ஹாஹேத்யேவம் விஸ்மயமீயுர்முனிமுக்²யா
க்ஜ்ஞாதே யஸ்மின் ஸ்வாத்மதயானாத்ம விமோஹ: ।
ப்ரத்யக்³பூ⁴தே ப்³ரஹ்மணி யாத: கத²மித்த²ம்
தம் ப்ரத்யஞ்சம் த³க்ஷிணவக்த்ரம் கலயாமி ॥ 24

இவரே தன்னுடைய உண்மையான ஸ்வரூபம் என்று எவரை அறிந்தபின் மாமுனிவர்களும் ,'ஆஹா", உன் முகஞானமான உள்ளுறையும் ப்ரம்ம ஸ்வரூபத்தில் இந்த மெய்ப்பொருளல்லாதவற்றின் மயக்கம் எப்படித்தான் வந்ததோ, போயிற்றோ" என வியப்போ அடைகின்றனரோ அந்த தக்ஷிணாமூர்த்தியை எப் பொழுதும் மனத்தில் நினைக்கின்றேன்.

யைஷா ரம்யைர் மத்தமயூராபி⁴த⁴வ்ருத்தை:
ஆதௌ³ க்லுப்தா யன்மனுவர்ணைர் முனிப⁴ங்கீ ।
தாமேவைதாம் தக்ஷிணவக்த்ரா: க்ருபயாஸௌ
ஊரீகுர்யாத்³தே³சிக ஸம்ராட் பரமாத்மா ॥ 25

எவருடைய மந்த்ர எழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்டு இனிய " மத்த மயூரம்'எனப்படும் விருத்தத்தில் இந்த எழுத்து மாலையானது அமைக்கப் பெற்றுள்ளதோ, இந்த எழுத்து மாலையை முனிவேடம் கொண்ட் குருராஜாவான

தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமான அந்த பரம்பொருள் அருளுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.



ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

(தக்ஷிணாமூர்த்தியின் சின்முத்ரை, புன்சிரிப்பு, வீணை தரித்துக் கொண்டிக்கின்ற எழில், கடைக் கண் பார்வை அருள் இவற்றைப்பாடித் துதிக்கின்ற ஸ்தோத்ரம்.)

உபாஸகானாம் யத2 உபாஸனீயம்
உபாத்தவாஸம் வடசாகி2 மூலே ।
தத்2தா4ம தா3க்ஷிண்ய ஜுஷா ஸ்வமூர்த்யா
ஜாக3ர்து சித்தே மம போ3த4ரூபம் ॥ 1

எது உபாஸகர்களுக்கு எப்பொழுதும் நினைக்கப்படவேண்டியதோ, எது ஆலமரத்தின் கீழ் இருக்கையை ஏற்படுத்திக் கொண்டதோ, அந்தப் பரம பதமான பொருள் விருப்பமோடு தெற்கு நோக்கிய தனது வடிவத்தால் எனது மனத்தில் அறிவின் தோற்றத்தை விழிப்புறச்செய்யட்டும்.

அத்3ராக்ஷம் அக்ஷண - த3யா நிதா4னம்
ஆசார்யம் ஆத்3யம் வடமூல பா4கே3 ।
மௌனேன மந்த3 ஸ்மிதபூ4ஷிதேன
மஹர்ஷிலோகஸ்ய தமோ நுத3ந்தம் ॥ 2

குறைவிலாத தயையின் இருப்பிடமாயும், புன்சிரிப்பினால் அணி செய்யப்பட்ட மௌனத்தினால் முனிவர்களின் கூட்டத்தினுடைய இருளை அழிப்பதாயும் உள்ள ஆதிகுருவை ஆலமரத்தினடியில் கண்டேன்.

வித்3ராவித அசேஷதமோக3ணேன
முத்3ராவிசேஷேண முஹுர்முனீனாம் ।
நிரஸ்ய மாயாம் த3யயா வித4த்தே
தே3வோ மஹான் தத்த்வமஸீதி போ3தம் ॥ 3

மிச்சமில்லாமல் இருட்கணங்களை விரட்டிய சிறந்த சின்முத்திரையினால் அடிக்கடி முனிவர்களுடைய மாயையை மாய்த்து, பெரியவனான இறைவன் "நீயே பிரம்மம்" என்ற மெய்யறிவைத் தயையோடு அளிக்கிறான்.

அபாரகாருண்யஸுதா4 தரங்கை3:
அபாங்க3 பாதைரவலோகயந்தம் ।
கடோ2ர ஸம்ஸார நிதா3க4தப்தான்
முனீன் அஹம் நௌமி கு3ரும் கு3ரூணாம் ॥ 4

கடுமையான பிறவி என்னும் சூட்டினால் எரிக்கப்படுகின்ற முனிவர்களை கரைகாணாக் கருணையமுத அலைவீச்சுக்கள் கொண்ட கடைக்கண் பார்வைகளால் நோக்குகின்ற குருக்களுக்கெல்லாம் குருவானவரை நான் வணங்குகின்றேன்.

மம ஆத்[3]ய தே[3]வோ வடமூலவாஸீ
க்ருபாவிசேஷாத் க்ருதஸந்நிதா[4]ன: ।
ஓம்காரரூபாம் உபதி[3]ச்ய வித்[3]யாம்
ஆவித்[3]யகத்[4] வாந்தம் அபாகரோது ॥ 5

ஆலின் கீழ் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய முதற்கடவுள், தன்னுடைய கருணைச் சிறப்பினாலே என் முன்வந்து, ஓங்காரமாகிய வித்யையை உபதேசித்து அறியாமை என்னும் இருளை அழிக்கட்டும்.

கலாபி[4]: இந்தோ[3]ரிவ கல்பிதாங்க[3]ம்
முக்தாகலாபைரிவ பத்[3]த[4]மூர்த்திம் ।
ஆலோகயே தேசிகம் அப்ரமேயம்
அநாதி[3] அவித்[3]யா திமிர ப்ரபா[4]தம் ॥ 6

சந்திரனின் கலைகளைப் போன்ற அங்கங்களை உடையவரும் முத்துச் சரத்தினால் பின்னப்பட்டது போன்ற உருவம் கொண்டவரும், அநாதியான அவித்யை என்னும் இருட்டுக்கு விடிவானவரும், அறிய முடியாதவருமான குருவைக் கண்கொண்டு பார்க்கிறேன்.

ஸ்வத[3] க்ஷஜானுஸ்தி[2] தவாமபாத[3]ம்
பாதோ[3]த[3]ராலம்க்ருத யோக[3] பட்டம் ।
அபஸ்ம்ருதேராஹித பாத[3] மங்கே[3]
ப்ரணௌமி தேவம் ப்ரணிதா[4]னவந்தம் ॥ 7

தனது வலது துடையின் மேல் இடது பாதத்தை வைத்தவரும், பாம்பினால் அணி செய்யப்பட்ட யோக வஸ்த்ரத்தை அணிந்தவரும், அபஸ்மார புருஷனின் முதுகில் காலை ஊன்றியவரும், பூஜ்யருமான இறைவனை வணங்குகிறேன்.

தத்த்வார்த[2]ம் அந்தேவஸதாம் ரிஷீணாம்
யுவாபி ய: ஸன் உபதேஷ்டுமீஷ்டே ।
ப்ரணௌமி தம் ப்ராக்தன புண்யஜாலை:
ஆசார்யம் ஆஸ்சர்யகுணாதிவாஸம் ॥ 8

சீடர்களான ரிஷிகளுக்கு; தான் இளையவனான போதிலும், உண்மையின் விளக்கத்தை உபதேசிக்க யார் முனைந்தாரோ, அந்த வியத்தகு குணங்களையுடைய ஆசார்யனை முன்பிறவியில் செய்த புண்ணியத்தின் பெருக்கினால் வணங்குகிறேன்.

ஏகேன முத்ராம் பரசும் கரேண
கரேண ச அன்யேன ம்ருகாம3ம் தத4ன: |
ஸ்வஜானு வின்யஸ்தகர: புரஸ்தாத்
ஆசார்ய சூடா3மணி: ஆவிரஸ்து || 9

ஒருகையினால் சின்முத்ரையும், மற்றொன்றினால் கோடலி ஆயுதமும் இன்னொரு கையினால் மானையும் தாங்கி, தனது துடையில் வைக்கப்பட்ட நான்காவது கையையுமுடைய ஆசார்ய சிரோன்மணி என் முன் தோன்றட்டும்.

ஆலேபவந்தம் மத3னாங்க3 பூ4த்யா
சார்தூ3லக்ருத்த்யா பரிதா4ன வந்தம் |
ஆலோகயே கஞ்சன தே3சிகேந்த்3ரம்
அஞ்ஞான வாராகர பா3ட3 வாக்3னிம் || 10

மன்மதனின் சாம்பலைப் பூசியவரும், புலித்தோலைப் போர்த்தியிருப்பவரும், மிகுந்த அஞ்ஞானமாகிய கடலுக்கு வடவாக்கினியானவருமான, ஒரு தேசிக முதல்வனைக் கண்முன் காண்கிறேன்.

சாருஸ்மிதம் ஸோமகலாவதம்ஸம்
வீணாத4ரம் வ்யக்த ஜடா2கலாபம் |
உபாஸதே கேசன யோகினஸ் - த்வாம்
உபாத்த - நாதா3னுபவ - ப்ரமோத3ம் || 11

இனிய புன்சிரிப்புடையவரும். சந்திரக்கலையைச் சூடியவரும் வீணையை ஏந்தியவரும், வரித்த செஞ்சடைக்கற்றையை, எழுந்த இன்னிசையில் திளைத்து மகிழ்ந்தவருமாக உம்மைச் சில யோகிகள் உபாஸிக்கிறார்கள்.

உபாஸதே யம் முனய: சுகாத்3யா
நிராசிஷோ நிர்மமதாதிவாஸா: |
தம் தக்ஷிணாமூர்த்திதனும்
உபாஸ்மஹே மோஹமஹார்திசாந்த்யை || 12

பற்றற்றவர்களும், அபிமானமற்றவர்களுமான சுகர் முதலிய முனிவர்கள் யாரை உபாஸிக்கிறார்களோ அந்த மஹேசனான தக்ஷிணாமூத்த ரூபத்தை, மோஹம் என்ற பெரிய துன்பத்திலிருந்து அமைதி பெறும் பொருட்டு வழி படுகிறேன்.

காந்த்யா நிந்தி3த குந்த3 கந்த3லவபுர் -
ந்யக்3ரோத4 மூலே வஸன்
காருண்யாம்ருதவாரிபிர் முனிஜனம்
ஸம்பா4வயன் வீக்ஷிதை: |
மோஹத்4 வாந்த விபே4த3னம் விரசயன்

போ³தே⁴ன தத்தாத்³ருசா
தேவஸ் - தத்த்வமஸீதி போ³த⁴யதுமாம்
முத்³ராவதா பாணி நா ॥ 13

ஒளியினாலே மல்லிகை மலரைப் பழிக்கும் திருமேனியோடு ஆலின் கீழே அமர்ந்து கருணையமுதவெள்ளமான பார்வைகளால் முனிவர் பெருமக்களை அருளிக்கொண்டு சின்முத்திரையோடு கூடிய கையினால் மோகம் எனும் இருட்டை 'நீ பிரம்மமே' என்ற மெய்யுபதேசத்தினால் பிளந்து கொண்டு விளங்கும் தேவன் என்னையும் அறிவிக்கட்டும்.

அகௌ³ர கா³த்ரை அல்லாட நேத்ரை:
அசாந்தவேஷை : அபு⁴ஜங்க³பூ⁴ஷை: ।
அபோ³த⁴ முத்³ரை: அனபாஸ்த நித்³ரை:
அபூர்ண காமை: அமரைரலம் ந: ॥ 14

வெண்மை ஒளியில்லாத உடலுடையவரும், நெற்றிக் கண்ணில்லாதவரும், சாந்தரூபமில்லாதவரும், பாம்பணியாதவரும், சின்முத்ரையில்லாதவரும், தூக்கத்தை ஒழிக்காதவரும், ஆசைகள் அறாதவருமான தேவர்களால் எங்களுக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை.

தை³வதானி கதி ஸந்தி ச அவனௌ
நைவ தானி மனஸோ மதானி மே ।
தீ³க்ஷிதம் ஜ³ட³ தி⁴யாமநுக்³ரஹே
த³க்ஷிணாபி⁴ முக² மேவவதைவதம் ॥ 15

அவனியில் எத்தனையோ தெய்வங்கள். அவையெல்லாம் என் மனத்தால் நினைக்கப்படவில்லை. அறிவற்ற மூடர்களுக்கு அருள் செய்வதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற தெற்கு நோக்கியிருப்பதுதான் தெய்வம்.

முதி³தாய முக்³த⁴ சசி நாவதம்ஸினே
ப⁴ஸிதாவலேப ரமணீய மூர்த்தயே ।
ஜக³திꣳந்த்³ரஜால ரசனாபடீயஸே
மஹஸே நமோஸ்து வடமூலாஸினே ॥ 16

மகிழ்வுற்றவரும், அழகிய சந்திரனைத் தலையில் சூடியவரும், விபூதி அணிந்த அழகான உருவமுள்ளவரும், இந்திரஜால வித்தையாக இந்த உலகத்தைப்படைக்கும் ஆற்றலுள்ளவரும் , பெரியவருமான அந்த ஆலமர் கடவுளுக்கு நமஸ்காரம்.

வ்யாலம்பி3னீபி4: பரிதோ ஜடாபி4:
கலாவசேஷேண கலாத4ரேண ।
பச்யல் லலாடேன முகே2ந்து3னா ச
ப்ரகாசஸே சேதஸி நிர்மலானாம் ॥ 17

சுற்றும் தொங்குகின்ற சடைகளாலும், ஒருகலைமிஞ்சிய பிறைச் சந்திரனாலும், கண்ணையுடைய நெற்றியினாலும் முகசந்திரனாலும் தூய்மையான மனங்களில் விளங்குகிறாய்!

உபாஸகானாம் த்வம் உமாஸஹாய:
பூர்ணேந்து3 பா4வம் ப்ரகடீகரோஷி ।
யத3த்3ய தே த3ர்சனமாத்ரதோ மே
த்3ரவத்யஹோர மானஸசந்த்3ரகாந்த: ॥ 18

உமையொருபாகனான நீ பக்தி செய்பவர்களுக்குச் சந்திரனின் தன்மையை வெளிப்படுத்துகின்றாய். அது உன்னை இன்று பார்த்த மாத்திரத்தில், ஆஹா! என் மனமாகிற சந்திரகாந்தக்கல்லை உருக்கிவிடுகிறது.

யஸ்தே ப்ரஸன்னாம் அநுஸந்த3தா4னோ
மூர்த்திம் முதா3 முக்த4சசாங்க மௌலே: ।
ஐச்வர்யமாயுர் லப4தே ச வித்யாம்
அந்தே ச வேதாந்த மஹாரஹஸ்யம் ॥ 19

எவர்கள் அழகிய சந்திரனை முடியிலணிந்த ஒளியுள்ள உன்னுடைய மூர்த்தியை மகிழ்வோடு எப்போதும் சிந்திக்கிறார்களோ அவர்கள் செல்வத்தையும், ஆயுளையும், கல்வியையும், முடிவில் வேதாந்தமென்னும் பெரிய ரஹஸ்யத்தையும் அடைகிறார்கள்.



ம்ருத்யுஞ்ஜய மானஸிக பூஜா ஸ்தோத்ரம்

(துதியைச் சொல்லுகையிலேயே மானஸிகமாக ஒவ்வோர் உபசாரத்தையும் செய்து பூஜிக்க உதவுவதால் 'மானஸிக பூஜா ஸ்தோத்ரம்' எனப்படும்.)

கைலாஸே கமநீய ரத்நகசிதே கல்பத்3ருமூலேஸ்தி2தம்
கர்பூர ஸ்படி2கேந்து3 ஸுந்தரத3நும் காத்யாய நீ ஸேவிதம் ।
க3ங்கா3 துங்க3 தரங்க3 ரஞ்சித ஜடாபா4ரம் க்ருபா ஸாக3ரம்
கண்டா2லங்க்ருத சேஷ பூ4ஷணமமும் ம்ருத்யுஞ்ஜயம் பா4வயே ॥ 1

கயிலையங்கிரியில், கல்பவ்ருக்ஷத்தின் அடியில் அழகான ரத்தினங்களால் ஆன இருக்கையில் வீற்றிருப்பவரும்; கர்ப்பூரம், ஸ்படிகம், சந்திரன் ஆகியவை போன்ற வெளுத்த உடலையும் உடையவரும்; காத்யாயனீ தேவியால் வணங்கப் பட்டவரும்; பெரிய அலைகளுடைய கங்கையை இன்பத்துடன் கொண்ட ஜடை முடியை உடையவரும்; கருணைக் கடலும்; ஆதிசேஷனை மாலையாகக் கழுத்தில் கொண்டவருமான இந்த (காலனை வென்ற) மிருத்யுஞ்ஜய பரமேச்வரனை மனத்தில் எண்ணுகிறேன்.

ஆக3த்ய ம்ருத்யுஞ்ஜய சந்த்3ரமௌளே
வ்யாக்4ராஜிநாலங்க்ருத சூலபாணே ।
ஸ்வப4க்த ஸம்ரக்ஷண காமதே4நோ
ப்ரஸீத3 விச்வேச்வர பார்வதீச ॥ 2

காலனை வென்றவரே! சந்திரனை முடியில் கொண்டவரே! புலித்தோலால் அலங்கரிக்கப்பட்டவரே! சூலத்தைக் கையில் கொண்டவரே! தன் பக்தர்களைக் காப்பாற்றுவதில் விருப்பத்தைக் கொடுக்கிற காமதேனுப் பசு போன்றவரே! உலகத்திற்கெல்லாம் தலைவரே! பார்வதியின் கணவரே! வருகைதந்து அருள் புரியும்.

பா4ஸ்வன் மௌக்திக தோரணே மரகதஸ்தம்பா4யுதாலங் க்ருதே
ஸௌதே4 தூ4பஸுவாஸிதே மணிமயே மாணிக்யதீ3 பாஞ்சிதே ।
ப்3ரம்மேந்த்3 ராமரயோகி3 புங்க3வக3 ணைர்யுக்தேச கல்பத்3ருமை:
ஸ்ரீம்ருத்யுஞ்ஜய ஸுஸ்தி2ரோ ப4வ விபோ4 மாணிக்ய ஸிம்ஹாஸநே ॥ 3

காலனை வென்றவரே! எங்கும் வியாபித்தவரே ! ஒளிவிடுகிற முத்துத் தோரணங்களாலும் பதினாயிரம் மரகதத் தூண்களாலும் அலங்கரிக்கப்பட்ட மணிமய மாளிகையில் தூபத்தின் நறுமணத்தோடு கூடியதும், மாணிக்க தீபங்களோடு

கூடியதும், நான்முகன், இந்திரன், தேவர்கள், யோகி சிரேஷ்டர்களின் கூட்டங்களோடு கூடியதும், கல்ப மரங்களோடு கூடியதுமான, மாணிக்க அரியாசனத்தில் நன்கு வீற்றிருப்பீராக.

மந்தா3ரமல்லீ கரவீர மாத4வீ
புந்நா3க நீலோத்பல சம்பகாந்விதை: ।
கர்பூர பாடீர ஸுவாஸிதைர்ஜலை -
ராத4த்ஸ்வ ம்ருத்யுஞ்ஜய பாத்ய3 முத்தமம் ॥ 4

மந்தாரை, மல்லிகை, அரளீ, மாதவீ, புந்நாகம், கருங்குவளை, சம்பகம் ஆகியவைகளோடு கூடியதும், பச்சை கர்ப்பூரம், சந்தனங்களால் வாசனையுடையதுமான, கால் அலம்புவதற்கு வேண்டிய (பாத்ய) நீரை, காலனை வென்றவரே! ஏற்றுக் கொள்ளும்.

ஸுக3ந்த4 புஷ்ப ப்ரகரை: ஸுவாஸிதை:
வியன்நதீசீதள வாரிபி3: சுபை: ।
த்ரிலோக நாதா2ர்தி ஹரார்க4ய - மாத3ராத்
க்3ருஹாண ம்ருத்யுஞ்ஜய ஸர்வ வந்தி3த் ॥ 5

காலனை வென்றவரே! எல்லோராலும் போற்றப்படுபவரே! மூவுலகத்தின் துயரைப் போக்குபவரே! நல்ல வாசனையோடு கூடிய புஷ்பங்களோடு கூடி மணக்கும் குளிர்ந்த கங்கையின் மங்கள நீரைக்கொண்டு (என்னால்) கொடுக்கப்படும் அர்க்யத்தை அன்போடு பெற்றுக் கொள்வீராக.

ஹிமாம்பு3 வாஸிதைஸ்தோயை: சீதளைரதிபாவனை: ।
ம்ருத்யுஞ்ஜய மஹாதே3வ சுத்3தா4சம நமாசர ॥ 6

காலனை வென்றவரே! மஹாதேவனே! மிகவும் பரிசுத்தமானவைகளும் வாசனையோடு கூடியதும் பனி நீர்களால் கொடுக்கப்பட்டதுமான குளிர்ந்த நீரினால் தூய ஆசமனம் செய்யும்.

கு3ட3த3தி4: ஸஹிதம் மது4ப்ரகீர்ணம்
ஸுக்4ருதஸமன்வித தே4 நுது3க்3த யுக்தம் ।
சுபகரமது3 பர்கமாஹர த்வம்
த்ரிநயந ம்ருத்யுஹா த்ரிலோகவந்த்3ய ॥ 7

முக்கண்ணரே! காலனை ஒழிப்பவரே! மூவுலகாலும் போற்றப்படுபவரே! வெல்லம், தயிர், தேன், நல்ல நெய், பசுவின் பால் இவைகளால் ஆகிய மது பர்க்கத்தை நல்லதையே செய்கிற நீர் ஏற்றுக் கொள்ளும்.

பஞ்சாஸ்த்ரசாந்த பஞ்சாஸ்ய பஞ்சபாதகஸம்ஹர ।
பஞ்சாம்ருதஸ்நாநமித3ம் குரு ம்ருத்யுஞ்ஜய ப்ரபோ4 ॥ 8

ஐந்தம்புகளைக் கொண்ட காமனை அடக்கியவரே! ஐந்து முகத்தை உடையவரே! பஞ்சமாபாதகமெனும் ஐந்து பெரிய பாவங்களைத் தொலைப்பவரே! ப்ரபுவான ம்ருத்யஞ்ஜயரே! பழம், பால், நெய், தேன், சர்க்கரை என்ற ஐந்து அம்ருதங்களாலான இந்தப் பஞ்சாமிருதத்தில் ஸ்னானத்தைச் செய்யும்.

ஜக3த்ரயீக்2யாத ஸமஸ்த தீர்த2
ஸமாஹ்ருதை: கல்மஷஹாரிபி4ச்ச ।
ஸநாநம் ஸுதோயை: ஸமுதா3சரத்வம்
ம்ருத்யுஞ்ஜயானந்தகுணாபி4ராம ॥ 9

காலனை வென்றவரே! முடிவற்ற கல்யாண குணங்களை உடையவரே! மூவுலகிலும் புகழ் பெற்றவரே! எல்லா நீர்களிலிருந்து கொண்டு வரப்பட்டதும் பாவங்களைப் போக்கடிப்பதுமான நல்ல நீரினால் நீர் ஸ்நானம் செய்யும்.

ஆநீதேநாதிசுப்4ரேண கௌசேயே நாமரத்3திருமாத் ।
மார்ஜயாமி ஜடாபா4ரம் சிவ ம்ருத்யஞ்ஜய ப்ரபோ4 ॥ 10

சிவனே! காலனை வென்றவரே! ப்ரபுவே! தேவலோகத்திலுள்ள கல்பக மரத்திலிருந்து கொண்டுவரப்பட்டதும் மிகவும் வெளுத்ததுமான பட்டினால் உங்கள் ஜடைமுடியைத் துடைக்கிறேன்.

நாநாஹேமவிசித்ராணி சீரசீ நாம்ப3ராணிச ।
விவிதா4நிச தி3வ்யாநி ம்ருத்யுஞ்ஜய ஸுதா4ரய ॥ 11

காலனை வென்றவரே! பலவகையான தங்க வேலைப்பாடு உள்ள மரவுரிகளையும், சீனப்பட்டுக்களையும், விதவிதமான தேவலோகத்து ஆடைகளையும் நன்கு அணிந்து கொள்ளுங்கள்.

விசுத்3த4 முக்தாப2ல ஜால ரம்யம்
மநோஹரம் காஞ்சநஹேமஸூத்ரம் ।
யஜ்ஜோபவீதம் பரமம் பவித்ரம்
ஆத4த்ஸ்வ ம்ருத்யுஞ்ஜய ப4க்திகம்3ய ॥ 12

காலனை வென்றவரே! பக்தியினால் அடையக்கூடியவரே! தூய முத்துக் சரங்களால் அழகானதும், மனத்தைக் கவர்வதும், ஒளிரும் தங்க இழைகளாலானதும் மிகவும் புனிதமானதுமான யக்ஞோபவீதத்தை தரித்துக் கொள்வீராக.

ஸ்ரீ க3ந்த4ம் க4னஸார குங்குமயுதம் கஸ்தூரிகா பூரிதம்
காலேயே ந ஹிமாம்பு3நா விரசிதம் மந்தா3ர ஸம்வாஸிதம் ।
தி3வ்யம் தே3வமனோஹரம் மணிமயே பாத்ரே ஸமாரோபிதம்
ஸர்வாங்கே3ஷ விலேபயாமி ஸததம் ம்ருத்யுஞ்ஜய ஸ்ரீவிபோ4 ॥ 13

எங்கும் நிறைந்தவரே, காலனை வென்றவரே! பச்சை கர்ப்பூரம் குங்குமப்பூ கஸ்தூரி கலந்ததும் இமயமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட கருஞ் சந்தனம் சேர்ந்ததும், தேவ விருக்ஷமான மந்தாரத்தால் வாசனை சேர்க்கப்பட்டதும், தேவர்களுக்குரியதும், தேவர் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுப் பதும் நவரத்ன மணிகளால் செய்யப்பட்ட பாத்திரத்தில் வைக்கப்பட்டதுமான உயர்ந்த சந்தனத்தை உங்கள் உடலில் எல்லா அவயங்களிலும் எப் போதும் பூசுகிறேன்.

அக்ஷதைர் த4வளைர்தி3வ்யை: ஸம்யக்தில ஸமன்விதை: ।
ம்ருத்யுஞ்ஜய மஹாதே3வ பூஜயாமி வ்ருஷத்4வஜ ॥ 14

காலனை வென்றவரே! மஹாதேவரே! காளைமாட்டுக் கொடியை உடையவரே! நல்ல பொறுக்கியெடுத்த எள்ளோடு கூடிய வெளுத்ததான அழகான அக்ஷதைகளால் உம்மைப் பூஜிக்கிறேன்.

சம்பக பங்கஜ குரவக கரவீர மல்லிகா குஸுமை: ।
விஸ்தாரய நிஜமகுடம் ம்ருத்யுஞ்ஜயபுண்ட3ரீக நயநாப்தா ॥ 15

காலனை வென்றவரே! தாமரைக் கண்ணனாகிய திருமாலன் நண்பரே! சம்பகம், தாமரை, குரவகம், அரளி, மல்லி ஆகிய மலர்களால் மணிமகுடம் பொருந்திய முடியை (அலங்கரித்துக்கொண்டு) மேலும் பெரிதாக்கிக் கொள்ளவும்.

மாணிக்ய பாது3காத்3வந்த்3வே மௌநிஹ்ருதபதம் மந்தி3ரே ।
பாதௌ3 ஸத்பத்3மஸத்ருசௌ ம்ருத்யுஞ்ஜய நிவேசய ॥ 16

காலனை வென்றவரே! முனிவர்களின் இதயக் கோயிலில் உள்ள, மாணிக்கத்தாலான இரண்டு காலணிகளில் நல்ல தாமரை போன்ற உன் இரு திருவடிகளை வைத்தருள் புரியும்.

மாணிக்யகேயூர கிரீட ஹாரை:
காஞ்சீ மணி ஸ்தா2பித குண்ட2லைச்ச ।
மஞ்ஜீர முக்2யாப4ரணைர் மநோஜ்ஞை:
அங்கா3நி ம்ருத்யுஞ்ஜய பூ4ஷயாமி ॥ 17

காலனை வென்றவரே! மாணிக்கத்தாலான தோள்வளைகள், மகுடம், மாலைகள், அரைஞாண், மணிகள் இழைத்த குண்டலங்கள், காற்சிலம்புகள் ஆகிய சிறந்த அணிகலன்களை அலங்கரிக்கிறேன்.

க^{3}ஜவத^{3}ந ஸக^{3}ந்த^{3}த்^{4}ருதே நாதிஸ்வச்சே^{2}ந சாமரயுகே^{3} ந ।
க^{3}லத^{3}லகாநந பத்^{3}மம் ம்ருத்யுஞ்ஜய பா^{4}வயாமி ஹ்ருத்பத்^{3}மே ॥ 18

யானை முகத்தோனாலும், முருகனாலும் பிடித்து வீசப்பட்ட மிக வெண்மையான இரண்டு சாமரங்களினால் அலைகிற முன் மயிர்களை உடைய தாமரை போன்ற உம் முகத்தை என் இதயத் தாமரையில் எண்ணுகிறேன்.

முக்தாதபத்ரம் சசிகோடிசுப்^{4}ரம்
சுப^{4}ப்ரத^{3}ம் காஞ்சந்த^{3}ண்ட^{3}யுக்தம் ।
மாணிக்ய ஸம்ஸ்தா^{2}பிதஹேமகும்ப^{4}ம்
ஸுரேச ம்ருத்யுஞ்ஜய தே (அ)ர்ப்பயாமி ॥ 19

தேவர் தலைவனே! காலனை வென்றவனே! கோடிக்கணக்கான சந்திரர்கள் போன்று வெண்மையானதும் தங்கப்பிடியோடு கூடியதுமான முத்துக் (குடையையும், மாணிக்கத்தில் வைக்கப்பட்ட பொன் குடத்தையும் உமக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

மணிமுகுரே நிஷ்படலே த்ரிஜக^{3}த் கா^{3}டா^{4}ந்த^{4}கார ஸப்தாச்வே ।
கந்த^{3}ர்ப கோடிஸத்^{3}ருசம் மருத்யுஞ்ஜய பச்ய வத^{3} நமாத்மீயம் ॥ 20

காலனை வென்றவரே! அழுக்கற்றதாயும் மூவுலகிற்கும், திரண்ட இருட்டைப் போக்கடிக்கிற ஸுர்யன் போன்றதுமான மணிமயமான நிலைக்கண்ணாடியில் கோடி மன்மதனுக்கொப்பான உம் முகத்தைப் பாரும்.

கர்பூர சூர்ணம் கபிலாஜ்யபூதம்
தா^{3}ஸ்யாமி காலேயஸமந்விதைச்ச ।
ஸமுத்^{3}ப^{4}வம் பாவந க^{3}ந்த^{4}தூ^{4}பிதம்
ம்ருத்யுஞ்ஜயாங்க^{3}ம் பரிகல்பயாமி ॥ 21

காலனை வென்றவரே! பச்சைக் கற்பூரம், கபிலைப்பசுவின் நெய், கருஞ் சந்தனம் இவைகளை நெருப்பில் இடுவதால் உண்டான புனிதமான தூப வாஸனையை ஸமர்ப்பிக்கிறேன்.

வர்தித்ரயோபேதமக^{2}ண்டதீ^{3}ப்த்யா
தமோஹரம் பா^{3}ஹ்யமதா^{2}ந்தரம்ச ।
ஸாஜ்யம் ஸமஸ்தாமரவர்க^{3}ஹ்ருத்யம்
ஸுரேச ம்ருத்யுஞ்ஜய வம்ச தீ^{3}பம் ॥ 22

தேவர் தலைவ! காலனை வென்றவரே! மூன்று திரிகளோடு நிறைத்து ஒளிவிடுவதும், வெளி இருட்டோடு உள் இருட்டையும் போக்கடிப்பதும், நெய்யுடன்

கூடியதும், எல்லா தேவக் கூட்டங்களுக்கு மனமகிழ்ச்சியைக் கொடுப்பதுமான அடுக்கு தீபத்தை ஸமர்ப்பிக்கிறேன்.

ராஜாந்நம் மது4ராந்விதம் ச ம்ருது3ளம் மாணிக்யபாத்ரேஸ்தி2தம்
ஹிங்கூ3 ஜீரக ஸன்மரீசி மிளிதை: சாகைரநேகை: சுபை4 ।
ஸாகம் ஸம்யக3பூபஸூபஸஹிதம் ஸத்3யோக்4ருதே நாப்லுதம்
ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜய பார்வதீப்ரிய விபோ4 ஸாபோசநம்பு4ஜ்யதாம் ॥ 23

காலனை வென்றவரே! பார்வதியிடம் அன்புள்ளவரே! எங்கும் நிறைந்தவரே! வெளுப்பான மதுரம் நிறைந்த, மென்மையான மாணிக்க பாத்திரத்தில் இருப்பதான அன்னத்தை, பெருங்காயம், ஜீரகம், மிளகோடு கூடிய பல நல்ல காய்கறிளோடும் அதோடுகூட ருசியான அப்பம், அப்பொழுதே நிறைய நெய் விடப்பட்ட பருப்புடனும் (விதிப்படி) ஆபோசனம் செய்து சாப்பிடுங்கள்.

கூசமாண்ட3 வார்த்தாக படோலிகாநாம்
ப2லாநி ரம்யாணிச காரவல்லயா ।
ஸுபாகயுக்தா நி ஸஸௌரபா4ணி
ஸ்ரீ கண்ட2 ம்ருத்யுஞ்ஜய ப4க்ஷயேச ॥ 24

பூசணிக்காய், கத்தரிக்காய், புடலங்காய், (மற்றும்) மிகவும் அழகான பாகற் பழங்களாலும் நன்கு பக்குவமானதும் வாசனையுடன் கூடியதுமான இவைகளை, ஸ்ரீ கண்டரே! காலனை வென்றவரே! சாப்பிடும்.

சீதளம் மது4ரம் ஸ்வச்ச2ம் பாவநம் வரஸிதம் லகு4 ।
மத்யே ஸ்வீகுரு பாநீயம் சிவ ம்ருத்யுஞ்ஜய ப்ரபோ ॥ 25

குளிர்ந்த; சுவையுள்ள, தெளிந்த சுத்தமான, வாசனையோடு கூடிய குடி நீரை, சிவனாகிய காலனை வென்ற ப்ரபுவே! நடுவே உட்கொள்ளும்.

சர்கராமிளிதம் ஸ்நிக்3த4ம் து3க்3தா4ந்தம் கோ3க்4ருதாந்விதம் ।
கத3ளீப2ல ஸம்மிச்ரம் பு4ஜ்யதாம் ம்ருத்யுஸம்ஹர ॥ 26

சர்க்கரை போட்டதும், பசையுடன் கூடியதும், பசுவின் நெய் கலந்து, வாழைப்பழத்தைச் சேர்த்ததுமான பால் அன்னத்தை, காலனை வென்றவரே! சாப்பிடும்.

கேவலமதிமாது4ர்யம் து3க்3தை: ஸ்நிக்3தை4சச சர்கராமிலிதை: ।
ஏலா மரீசீ மிலிதம் ம்ருத்யுஞ்ஜயதே3வ பு4ங்க்ஷ்வ பரமாந்நம் ॥ 27

மிகவும் தித்திப்பானதும், பசையுடன் கூடியதும், பாலோடு சர்க்கரை கலந்ததும், ஏலக்காய், மிளகு முதலியவைகளுடன் கூடியதுமான பரமான்னத்தை (பாயஸம்), ம்ருத்யுஞ்ஜயக் கடவுளே! சாப்பிடும்.

ரம்பா4 சூத கபித்த2 கண்டகப2லைர் த்ரா3க்ஷாரஸ ஸ்வாதுமத்
க2ர்ஜூரைர் மது3ரேக்ஷுக2ண்ட3சகலை: ஸந்நாரிகேளாம்பு3பி4: ।
கர்பூரேணஸுவாஸிதைர் கு3ட3ஜலைர் மாது4ர்யயுக்தைர் விபோ4
ஸ்ரீம்ருத்யுஞ்ஜய பூரய த்ரிபுவநாதா4ரம் விசாலோத3ரம் ॥ 28

வாழை, மா, விளாம்பழங்களுடன் ருசியான திராக்ஷை ரஸத்தையும், பேரீச்சங்காய், இனிமையான கரும்புத் துண்டுகளுடனும், நல்ல இளநீருடனும் பச்சை கற்பூரத்தாலும் வாசனையுள்ள வெல்லம் கரைத்த நீரையும் (பாநகம்) எங்கும் நிறைந்த ம்ருத்யுஞ்ஜயரே! மூவுலகுக்கும் ஆதாரமாய் விளங்குகிற உமது விசாலமான வயிறு நிறையச் சாப்பிடும்.

மநோஜ்ஞ ரம்பா4வந் க2ண்ட3 க2ண்டி3தாந்
ருசிப்ரதா3ந் ஸர்ஷப ஜீரகரம்ச்ச ।
ஸஸௌரபா4ன் ஸைந்த4வ ஸேவிதாம்ச்ச
க்ருஹாண ம்ருத்யுஞ்ஜய லோகவந்த்3ய ॥ 29

மனதிற்கிஷ்டமானதும், வாழைத் தோட்டத்தில் வெட்டித் துண்டு போட்டு ருசியைக் கொடுக்கக்கூடியதும், கடுகு, சீரகம் கூடியதும், வாஸனை யுடையதும், கல் உப்பு கலந்ததுமான (ஊறுகாயை) உலகத்தால் போற்றப் படுகிற ம்ருத்யுஞ்ஜயரே ஏற்றுக்கொள்ளும்.

ஹிங்கூ3 ஜீரக ஸஹிதம் விமலாமலகம் கபித்த4மதிமது4ரம் ।
பி3ஸக3ண்டான் லவணயுதான் ம்ருத்யுஞ்சய தே (அ)ர்ப்பயாமி ஜக3தீ3ச ॥30

உலகத்திற்கு ஈசனே! ம்ருத்யுஞ்ஜயரே! பெருங்காயம், சீரகத்தோடு கூடிய சுத்தமான நெல்லிக்காயும், இனிமையான விளாம்பழமும், உப்போடு கூடிய தாமரைத் தண்டுத் துண்டுகளும் உமக்குக் கொடுக்கிறேன்.

ஏலா சுண்டீ2 ஸஹிதம் த3த்4யன்னம் சாருஹேமபாத்ரஸ்த2ம் ।
அம்ருத ப்ரதிநிதி4மாட்4யம் ம்ருத்யுஞ்ஜய பு4ஜ்யதாம் த்ரிலோகேச ॥ 31

ஏலக்காய் சுக்குடன் கூடியதும் அம்ருதத்திற்கொப்பானதும், அழகான தங்கப்பாத்திரத்தில் நிறைந்திருப்பதுமான தயிர் சாதத்தை, மூவுலகத் தலைவரான ம்ருத்யிஞ்ஜயரே! சாப்பிடும்.

ஜம்பீ3ர நீராஞ்சித ச்ருங்கி3பே3ரம்
மநோஹராநாம்ல சலாடு க2ண்டா3ந் ।

ம்ருதூ3 பத3்மசாந்ஸஹஸோப பு4ங்க்ஷ்வ
ம்ருத்யுஞ்ஜய ஸ்ரீ கருணா ஸமுத்ர ॥ 32

எலுமிச்சம் சாறு கலந்த, இஞ்சி, அழகான மாங்காய், இவைகளோடு கூடிய சலாடு (மாகாளி?) துண்டம், மிருதுவானதும் ஜீர்ணசாலிகளுமான உபகரணங்களைக் கருணைக் கடலான ம்ருத்யுஞ்ஜயரே! சாப்பிடும்.

நாக3ர ராமட2 யுக்தம்
ஸுலலித ஜம்பீ3ரநீரஸம்பூர்ணம் ।
மதி2தம் ஸைந்த4வ ஸஹிதம்
பிப3 ஹர ம்ருத்யுஞ்ஜய க்ரதுத்4வம்ஸிந் ॥ 33

(தக்ஷயாகத்தையழித்த அரனே! காலனை வென்றவரே! இஞ்சி, பெருக காயம், அழகான எலுமிச்சை நீர் கலந்து நன்கு கடையப்பட்டு உப்பு கலந் ததை (மோரை)க் குடியும்.

மந்தா3ர ஹேமாம்பு3ஜ க3ந்த4யுக்தை:
மந்தா3கிநீ நிர்மல புண்யதோயை: ।
க்3ருஹாண ம்ருத்யுஞ்ஜய பூர்ணகாம
ஸ்ரீமத் பராபோசநமப்4ர கேச ॥ 34

மந்தாரை, தாமரைகளால் வாசனையுடைய அழுக்கற்ற புண்யமான கங்கை நீரால் ஆன உத்தராபோசனத்தை, நிறைவு பெற்ற ஆசையை உடைய ம்ருத்யுஞ்ஜயரே. ஏற்றுக்கொள்ளும்.

க3க3ந து4நீ விமஜலை:
ம்ருத்யுஞ்ஜய பத்3மராக3பாத்ரக3தை: ।
ம்ருக3மத3 சந்த3ந பூர்ணம்
ப்ரக்ஷாளய சாரு ஹஸ்தபத3யுக3மம் ॥ 35

பத்மராக பாத்திரத்திலுள்ளதும், புனுகு, சந்தனம் கலந்ததுமான ஆகாய கங்கையின் தூய ஜலத்தினால் கை கால்களை அலம்பிக் கொள்ளும், ஹே ம்ருத்யுஞ்ஜயரே!

புந்நாக3 மல்லிகா குந்த3வாஸிதைர் ஜான்ஹவீஜலை: ।
ம்ருத்யுஞ்ஜய மஹாதே3வ புநராசம நம் குரு ॥ 36

காலனை வென்ற மஹாதேவரே! புன்னாகம், மல்லிகை, குந்தம் இவை களால் வாஸனையோடு கூடியிருக்கிற கங்கை ஜலங்களால் மறுபடி (புநராச மனம்) ஆசமநம் செய்யும்.

மௌக்திக சூர்ணஸமேதை:
ம்ருக3மத3 க4நஸார வாஸிதை: பூகை3:
பர்ணை ஸ்வர்ணஸமானை:
ம்ருத்யுஞ்ஜய தே(அ)ர்ப்பயாமி தாம்பூ3லம் ॥ 37

காலனை வென்றவரே! முத்துச் சுண்ணாம் போடும் புனுகு, பச்சைக் கர்ப்பூரம் இவைகளோடும். கூடிய பாக்குப் பொடியும், தங்கத்திற்கொப்பான வெற்றிலையுமான தாம்பூலத்தை உமக்கு கொடுக்கிறேன்.

நீராஜநம் நிர்மல்தீ3ப்திமத்3பி4:
தீ3பாங்குரைருஜ்ஜ்வலமுச்ச்2 ரிதைச்ச ।
க4ண்டாநிநாதே3ந ஸமர்ப்பயாமி
ம்ருத்யுஞ்ஜயாய த்ரிபுராந்தகாய ॥ 38

காலனை வென்றவரே! முப்புரத்தை அழித்தவரே! அழகற்ற ஒளியோடு கூடிய தீபவரிசைகளால் நன்கு எரிவதும் உயர்த்திக் காட்டப்பட்டதுமான தீபம் காட்டுவதை மணியின் ஓசையுடன் உங்களுக்குக் காட்டுகிறேன்.

விரிஞ்சி முக்2யாமர ப்3ருந்த3வந்தி3தே
ஸரோஜ மத்ஸ்யாங்கித சக்ரசிஹ்நிதே ।
த3தா3மி ம்ருத்யுஞ்ஜய பாத3பங்கஜே
ப2ணீந்த்3ர பூ4ஷே புநரர்க்4யமீச்வர ॥ 39

ஈச்வரரே! நான்முகனை முதன்மையாகக் கொண்ட தேவர் கூட்டத்தால் வணங்கப்பட்டதும், தாமரை, மீன், சக்கரம் ஆகிய அடையாளங்களுள்ளதும், உயர்ந்த பாம்பை அணிகலனாய்க் கொண்டதுமான உன் திருவடித் தாமரையில் மறுபடி அர்க்யம் கொடுக்கிறேன்.

புந்நாக3 நீலோத்பல குந்த3ஜாஜீ
மந்தா3ர மல்லீ கரவீர பங்கஜை: ।
புஷ்பாஞ்ஜலிம் பில்வத3ளை ஸ்துலஸ்யா
ம்ருத்யுஞ்ஜயாங்க்4ரௌ விநிவேசயாமி ॥ 40

புன்னை, கருநெய்தல், குந்தம், ஜாதீ. மந்தாரை, மல்லி, அரளீ. தாமரை வில்வதளம், துளஸீ இவைகளால் ம்ருத்யுஞ்ஜயரின் திருவடிகளில் குவித்த இரண்டு கைகளாலும் வைக்கிறேன்.

பதே3 பதே3 ஸர்வதமோ நிக்ருந்தினம்
பதே3 பதே3 ஸர்வ சுபப்ர தா3யகம் ।
ப்ரத3க்ஷிணம் ப4க்தியுதேந சேதஸா
கரோமி ம்ருத்யுஞ்ஜய ரக்ஷ ரக்ஷ மாம் ॥ 41

காலனை வென்றவரே! ஒவ்வொரு அடியிலும் எல்லாவிதமான அறியாமையைப் போக்குவதும், ஒவ்வொரு அடியிலும் எல்லா சுபங்களைக் கொடுப்பதுமான உன்னைச் சுற்றுதலை (பிரதக்ஷிணம்) பக்தியுடன் கூடிய மனத்துடன் செய் கிறேன். என்னைக் காப்பாற்றும்.

நமோ கௌ3ரீசாயஸ்ப2டிக த4வளாங்கா3ய ச நமோ
நமோ லோகேசாயஸ்துதவிபு3த4 லோகாய ச நம: |
நம: ஸ்ரீகண்டா2யக்ஷபித புரதை3த்யாய ச நமோ
நம: பா2லாக்ஷாய ஸ்மரமத3விநாசாய ச நம: || 42

கௌரியின் கணவருக்கு வணக்கம். ஸ்படிகம் போல் வெளுத்த உடலை உடையவருக்கு வணக்கம். உலகத்தின் தலைவருக்கு வணக்கம். தேவர்களால் துதிக்கப்பட்டவருக்கு வணக்கம். ஸ்ரீகண்டருக்கு வணக்கம். முப்புரங்களை அழித்தவருக்கு வணக்கம். நெற்றிக்கண்ணருக்கு வணக்கம். காமனையெரித்தவருக்கு வணக்கம். நமஸ்காரம்.

ஸம்ஸாரே ஜநிதாபரோக3 ஸஹிதே தாபத்ரயாக்ரந்தி3தே
நித்யம் புத்ர களத்ரவித்த விலஸத்பாசைர் நிப3த்3த4ம் த்3ருட4ம் |
க3ர்வாந்த4ம் ப3ஹுபாப க3ர்வ ஸஹிதம் காருண்ய த்2ருஷ்ட்யா விபோ4
ஸ்ரீம்ருத்யுஞ்ஜய பார்வதீப்ரிய ஸதா3 மாம் பாஹீ ஸர்வேச்வர || 43

ஸம்ஸாரத்தில் பிறவியை அடைந்து மனத்துன்பமும் நோயும் உற்று, (அத்யாத்மகம் என்பதாகத் தன்னிலேயே ஏற்படுவதும், ஆதிபௌதிகம் என்ப தாகப் பஞ்ச பூதங்களாலுண்டாவதும். கடவுளின் கோபத்தால் உண்டாவதுமான) மூவகைத் துன்பத்தால் பீடிக்கப்பட்டு, தினமும் பிள்ளை, மனைவி, செல்வம் இவைகளாகிற பாசத்தால் நன்கு கட்டுண்டு, கர்வத்தால் கண் தெரியாமலும், அதனால் பல பாபங்களோடு கூடியுமிருக்கிற என்னை - காலனை வென்ற வரும், பார்வதியின் கணவரும், ஸர்வேச்வரனுமான நீர் எப்பொழுதும் கருணை நோக்கால் காப்பாற்ற வேண்டும்.

ஸௌதே4 ரத்நமயே நவோத்பலத3ளாகீர்ணேச தல்பாந்தரே
கௌசேயேந மநோஹரேண த4வளேநாச்சா2தி3தே ஸர்வச: |
கர்பூராஞ்சித தீ3பதீ3ப்திமிளிதே ரம்யோபதா4நத்3வயே
பார்வத்யா: கரபத்3மலாலிதபத3ம் ம்ருதயுஞ்ஜயம் பா4வயே || 44

இரத்தினத்தினாலான மாடியில், மனதுக்கு இன்பம் தருகிற பட்டுகளால் முழுதும் மூடப்பட்டதும், கர்ப்பூரத்துடன் கூடிய தீபங்களின் ஒளியுடன் கூடி யதும், இரண்டு தலையணைகளையுடையதுமான புதிய தாமரை இதழ்கள் பரப்பப்பட்ட படுக்கையில் பார்வதீ தேவியின் கைகளால் வருடப்பட்ட திருவடிகளை உடைய ம்ருத்யுஞ்ஜயரை மனதில் தொழுகிறேன்.

சதுச்சத்வாரிம்சத்[3] விலஸது[3] பசாரைரபி[4]மதை:
மந: பத்[3]மே ப[4]க்த்யா ப[3]ஹிரபிச பூஜாம் சுபகரீம் ।
கரோதி ப்ரத்யூஷே நிசிதி[3]வஸமத்[4]யேபி ச புமாந்
ப்ரயாதி ஸ்ரீம்ருத்யுஞ்ஜய பத[3]மநோகாத்[3] பு[4]தப[3]தம் ॥ 45

காலையிலும், பகலிலும், இரவிலும் அறுபத்து நான்கு உபசாரங்களை முறைப்படி பக்தியுடன் இருதயத் தாமரையில் (மானஸீகமாகச்) செய்தும், (இந்த அகப் பூஜையோடு) வெளியிலும் சுபம் தரும் பூஜை செய்தும் வருகிற மனிதன், காலனை வென்ற (ம்ருத்யுஞ்ஜயரின்) வியக்கத் தக்க பதவிகளைக் கொடுக்கக் கூடிய திருவடியை அடைகிறான்.

ப்ராதர்லிங்க[3]முமாபதே ரஹரஹ: ஸந்த[4]ர்சநாத்ஸ்வர்க[3]த[3]ம்
மத்[4]யாஹ்னே ஹயமேத[4]துல்ய ப[2]லதம் ஸாயந்தநே மோக்ஷத[3]ம் ।
பா[4]நோரஸ்தமயே ப்ரதோ[3]ஷ ஸமயே பஞ்சாக்ஷராராத[4]நம்
தத்காலத்ரயதுல்ய மிஷ்ட ப[2]லத[3]ம் ஸத்[3]யோ நவத்[3]யம்த்[3]ருடம் ॥ 46

தினமும் காலையில் உமாபதியின் லிங்கத்தை தரிசிப்பதால் ஸ்வர்க்கம் கிடைக்கும். நடுப்பகலில் அச்வமேதயாகம் செய்த பயன் கிட்டும். மாலையில் முக்தி கிடைக்கும். சூரியன் மறையும் பிரதோஷ சமயத்தில், பஞ்சாக்ஷரத்தினால் பூஜிப்பது மூன்று காலங்களும் சேர்ந்ததற்கு நிகரான இஷ்டப்பூர்ணமாயும், உறுதியாயும் உடனேயே கொடுத்தருள் செய்யும்.



காலபைரவாஷ்டகம்

(எட்டு ச்லோகம் கொண்டது ‘அஷ்டகம்’.)

தே3வராஜஸேவ்யமான பாவனாங்க்4ரி பங்கஜம்
வ்யால யக்ஞஸூத்ர - மிந்து3 சேக2ரம் க்ருபாகரம்
நாரதாதி3யோகி3 ப்3ருந்த3 வந்தி3தம் தி3க3ம்பரம்
காசிகாபுராதி4நாத2 காலபை4ரவம் ப4ஜே 1

இந்திரனால் வணங்கப்படுகிற மிகத் தூயமான தாமரை போன்ற பாதங்களை உடையவரும், சர்ப்பத்தைப் பூணூலாக தரித்திருப்பவரும், சந்திரனைத் தலையில் தரித்திருப்பவரும், தயைச் சுரங்கமும், நாரதர் முதலான யோகிக் கூட்டங்களினால் வணங்கப்படுகின்றவரும், திக்குகளையே ஆடையாக தரித்திருப் பவருமான காசித்தலத்தைக் காக்கும் ஸ்ரீ காலபைரவ மூர்த்தியைப் போற்றுகிறேன்.

பா4னு கோடிபா4ஸ்வரம் ப4வாப்3தி4தாரகம் பரம்
நீலகண்ட2மீபஸிதார்த2 தா3யகம் த்ரிலோசனம்
காலகால - மம்பு3ஜாக்ஷமக்ஷ சூலமக்ஷரம்
காசிகாபுராதி4 நாத2 காலபை4ரவம் பஜே 2

கோடி சூர்யனின் ஒளியைப் போல பிரகாசிப்பவரும், பிறவிக் கடலைத் தாண்டு விப்பவரும், பரம்பொருளும், கருத்த கழுத்தை உடையவரும், வேண்டு வதை அளிப்பவரும். முக்கண்ணரும், யமனை அடக்குபவரும், தாமரைப்பூ போன்ற கண்களை உடையவரும், ருத்ராக்ஷம், சூலம் இவைகளை ஏந்தியவரும், அழிவற்ற அக்ஷரவடிவரும் காசீ தலத்தைக் காக்கும் காலபைரவ மூர்த்தியைப் போற்றுகிறேன்.

சூலடங்கபாசத3ண்ட3பாணி - மாதி3: காரணம்
ச்யாமகாயம் ஆதி3தே3வமக்ஷரம் நிராமயம்
பீம4 விக்ரமம் ப்ரபு4ம் விசித்ரதாண்ட3வ ப்ரியம்
காசிகாபுராதி4 நாத2 காலபை4ரவம் ப4ஜே 3

சூலம், கோடாரி, பாசக்கயிறு, தண்டம் இவைகளைக் கையில் ஏந்தியவரும் எல்லா உலகத்திற்கும் முதற் காரணமாக உள்ளவரும், கருத்த மேனியரும், முதற் கடவுளும், அக்ஷரரூபியும், பிணியற்றவரும், அஞ்சத்தக்க பராக்கிரமம் கொண்டவரும், ப்ரபுவும், பலவித நடனங்களில் பற்றுக் கொண்டவரும், காசீத் தலத்தைக் காப்பவனும் கால பைரவ மூர்த்தியைப் போற்றுகிறேன்.

பு4க்தி முக்தி தா3யகம் ப்ரசஸ்தசாருவிக்3ரஹம்
ப4க்தவத்ஸலம் ஸ்தி2ரம் ஸமஸ்தலோக விக்3ரஹம்
நிக்வணன் - மனோஜ்ஞ ஹேம கிங்கிணீ லஸத்கடிம்
காசிகாபுராதி4நாத2 காலபை4ரவம் ப4ஜே 4

போகத்தையும், மோக்ஷத்தையும் அளிப்பவரும், போற்றத்தக்கதான அழகான சரீரத்தை உடையவரும், பக்தர்கள் பால் அன்பு கொண்டவரும், என்றைக்கும் அழிவற்றவரும், எல்லா உலகத்தின் சரீரமாக விளங்குபவரும், மனதுக்கு ரம்யமாக சப்திக்கின்ற தங்கமயமான சலங்கை விளங்கும் இடுப்பை உடையவரும், காசித்தலத்தைக் காப்பவனுமான கால பைரவ மூர்த்தியைப் போற்றுகிறேன்.

த4ர்மஸேது பாலகம் த்வத4ர்மமார்க3 நாசகம்
கர்மபாச மோசகம் ஸுசர்மதா3யகம் விபு4ம்
ஸ்வர்ணவர்ண கேசபாசசோபி4 தாங்க3 நிர்மலம்
காசிகாபுராதி4 நாத2 காலபை4ரவம் ப4ஜே 5

தர்மத்தின் அரணைக் காப்பவரும், அதர்ம மார்க்கத்தை அழிப்பவரும், கர்மாக்களிலிருந்து ஏற்படும் பந்தத்தை விடுவிப்பவரும், மிக்க ஸௌக்யத்தை அளிப்பவரும், தங்கம் போன்ற காந்தி கொண்ட தலை மயிரினால் அழகாக்க காணும் சரீரத்தை உடையவரும், சுத்தமானவரும், காசித்தலத்தைக் காப்பவனுமாகிய எங்கும் நிறைந்த விபுவான கால பைரவ மூர்த்தியை போற்றுகிறேன்.

ரத்னபாது3கா ப்ரபா4பி4ராமபாத3 யுக3மகம்
நித்ய - மத3விதீய மிஷ்ட தை3வதம் நிரஞ்ஜனம்
ம்ருத்யுத3ர்ப நாசநம் கராலத3மஷ்ட்ர பூ4ஷணம்
காசிகாபுராத4 நாத2 காலபை4ரவம் ப4ஜே 6

ரத்தினக்கற்கள் இழைக்கப்பட்ட பாதுகைகளின் ஒளியினால் மிக அழகாகப் பிரகாசிக்கும் இரு பாதங்களை உடையவரும், நித்யமானவரும், தமக்கு வேறாக ஏதும் அற்றவரும், விரும்பிப் போற்றத்தக்க தெய்வமானவரும், மாசற்றவரும், யமனின் கொழுப்பை அடக்கியவரும், கோரைப் பற்களை அலங்காரமாக கொண்டவரும், காசித்தலத்தைக் காப்பவனுமாகிய பாலகருமான காலபைரவ மூர்த்தியைப் போற்றுகிறேன்.

அட்டஹாஸ பி4ன்ன ப3த்மஜாண்ட3 கோச ஸந்ததிம்
த்4ருஷ்டிபாத நஷ்டபாபஜாலம் உக்3ரசாஸநம்
அஷ்டஸித்3தி4தா3யகம் கபால மாலிகாத4ரம்
காசிகாபுராதி4 நாத3 காலபை4ரவம் ப4ஜே 7

(பிரளய காலத்தில் தன்னுடைய) கோரமான சிரிப்பினாலேயே பிளக்கப்பட்ட பிரம்மாண்ட வரிசையை உடையவரும், (தன்) பார்வை விழும் மாத்திரத்திலேயே பாபக் கூட்டங்களை தொலைப்பவரும், கடுமையான தண்டனையை விதிப்பவரும், (அணிமா, மஹிமா என்றதான) எட்டு ஸித்திகளை அளிப்பவரும், மண்டை ஓடுகளை மாலையாக தரித்திருப்பவரும், காசித்தலத்தைக் காப்பவனுமாகிய பாலகருமான காலபைரவ மூர்த்தியை போற்றுகிறேன்.

பூ4தஸங்4க நாயகம் விசாலகீர்த்தி தா4யகம்
காசிவாஸி லோகபுண்ய பாப சோ4தகம் விபு4ம்
நீதிமார்க3 கோவித3ம் புராதநம் ஜக3த்பதிம்
காசிகாபுராதி4நாத காலபை4ரவம் பஜே 8

பூதக்கணக் கூட்டத்தின் தலைவரும், அகண்டமான புகழை அளிப்பவரும், சியில் வசிக்கின்ற மக்களின் புண்ணிய பாபங்களை பரிசோதிப்பவரும், எங்கும் நிறைந்து விளங்குபவரும், நீதி வழியை நன்கு அறிந்தவரும், மிகப் பழமையான உலகுக்கு நாயகனும், காசீதலத்தைப் பாதுகாப்பவனுமாகிய கால பைரவ மூர்த்தியைப் போற்றுகிறேன்.

காலபை4ரவாஷ்டகம் பட2ந்தி யே மனோஹரம்
ஜ்ஞானமுக்தி ஸாத4கம் விசித்ர புண்ய வர்த4னம்
சோகமோஹலோப4 தை3ன்ய கோபதாபநாசநம்
தேப்ரயாந்தி காலபை4ரவாங்க்4ரிஸந்நிதி4 ம்த4ருவம் 9

மிகவும் அழகானதும், ஞான மோக்ஷத்தை அளிப்பதும், பலவித புண்ணியங்களை வளர்க்க வல்லதும், சோகம், மோஹம், லோபம், ஏழ்மை, கோபதாபங்கள் இவைகளைத் தொலைக்க வல்லதுமான கால பைரவரின் இந்த எட்டு ச்லோகம் கொண்ட துதியைப் பாராயணம் செய்பவர்கள். (மேலே கூறிய நற்பயன்களோடு) நிலைத்ததான காலபைரவரின் பாத ஸந்நிதியை அடைவார்கள்.



த்வாதசலிங்க ஸ்தோத்ரம்

"த்வாதசம்" என்றால் பன்னிரண்டு. பாரததேசத்திலுள்ள பன்னிரண்டு சிவமஹா க்ஷேத்ரங்களிலுள்ள ஜோதிர்லிங்கங்களை இந்த ஸ்தோத்ரம் துதிக்கிறது.

(1) ஸோமநாதர் விளங்குவது ஸௌராஷ்டிரத்தில் உள்ள ஸோமநாதபுரம்.

(2) மல்லிகார்ஜுனர் விளங்குவது ஆந்திரத்திலுள்ள ஸ்ரீசைலம்.

(3) மஹாகாலேசர் விளங்குவது மத்யப்பிரதேசத்திலுள்ள உஜ்ஜயினி.

(4) ஓம்காரேசன் அல்லது அவலேச்வரர் என்பவர் விளங்குவது பம்பாய்க்கு வடக்கே சம்கார் மாந்தாதா. (மர்தக் ரயில் நிலையம்).

(5) வைத்யநாதர் விளங்குவது மஹாராஷ்டிரதிலுள்ள பரலி வைத்யநாத்

(6) நாகநாதர் அல்லது நாகேசர் விளங்குவது பரலிக்கு வடக்கே உள்ள தாருகாவனம் எனும் ஔந்த். (சாண்டி ரயில் நிலையம்).

(7) விச்வநாதர் விளங்குவது பிரஸித்தமான காசி.

(8) பீமசங்கரர் விளங்கும் பீமசங்கரம் என்பது பூனா - ஜுன்னார் மார்க்கத்தில் ஜுன்னாருக்கு 90 மைலில் உள்ளது.

(9) ராமேச்வரர் எனும் ராமநாதர் விளங்குவது புகழ்பெற்ற ராமேச்வரத்தில்.

(10) த்ர்யம்பகேச்வரர் விளங்குவது நாஸிக்ரோட் ரயில் நிலையத்தருகே உள்ள கௌதமீதடம்.

(11) கேதாரேச்வரர் விளங்குவது புகழ்பெற்ற கேதாரிநாத் - ஹிமாலயத்தில் உள்ளது.

(12) திஷணேசர் என்னும் குஸ்ருணேசர் என்றும் கூறப்படுபவர் எல்லோரா குகைக்கருகே விளங்குகிறார்.

ஸௌராஷ்ட்ர தேசே வஸுதா⁴வகாசே
ஜ்யோதிர் மயம் சந்த³ரகலாவதம்ஸம் ।
ப⁴க்திப்ரதா³நாய க்ருதாவதாரம்
தம் ஸோமநாத²ம் சரணம் ப்ரபத்³யே ॥ 1

உலகத்தில் உகந்த இடமான ஸௌராஷ்ட்ர தேசத்தில், ஒளிமயமாக, பிறைச்சந்திரனை முடியில் கொண்டு, ஜனங்களுக்கு பக்தியை ஊட்டுவதற்கே அவதரித்த ஸ்ரீஸோமநாதரை சரணம் அடைகிறேன்.

ஶ்ரீசைலச்ருங்கே³ விவித⁴ப்ரஸங்கே³
சேஷாத்³ரிச்ருங்கே³பி ஸதா³வஸந்தம்
தமர்ஜுநம் மல்லிகபூர்வமேநம்
நமாமி ஸம்ஸாரஸமுத்³ரஸேதும் || 2

பலவாறு நற்சேர்கை பெற்ற ஶ்ரீசைலமலையுச்சியிலும் சேஷாத்ரி மலையுச்சியிலும் எப்பொழுதும் வசிக்கிறவரும், பிறப்பிறப்பாகிற கடலுக்குக் கரையாக இருப்பவருமான ('அர்ஜுன' என்பதற்கு முன் 'மல்லிகை' என்பதைக் கொண்ட) மல்லிகார்ஜுனர் என்று புகழ் பெற்றவரை வணங்குகிறேன்.

அவந்திகாயாம் விஹிதாமதாரம்
முக்திப்ரதா³நாய ச ஸஜ்ஜநா நாம்: |
அகாலம்ருத்யோ: பரிரக்ஷணார்த²ம்
வந்தே³ மஹாகாலமஹம் ஸுரேசம் || 3

அவந்தி என்னும் நன்மக்களுக்கு முக்தியைக் கொடுப்பதற்கும், காலம் வராதபோதே ஏற்படும் மரணத்திலிருந்து காப்பதற்கும் உஜ்ஜயிநியில் அவதரித்தவரும், தேவர்கள் தலைவனான மஹாகாலேச்வரரை வணங்குகிறேன்.

காவேரிகா நர்மத³யோ: பவித்ரே
ஸமாக³மே ஸஜ்ஜந்தாரணாய |
ஸதை³வ மாந்தா⁴த்ருபுரே வஸந்தம்
ஓங்காரமீசம் சிவமேகமீடே³ || 4

காவேரீ நர்மதை இவைகளின் சேர்க்கையில் தூய்மையான மாந்தாத்ருபுரம் என்னுமிடத்தில் நல்லவர்களைக் கரையேற்ற வஸிப்பவரான ஓங்காரேச்வரர் எனும் பரமசிவனைத் துதிக்கிறேன். (இங்கு'காவேரி'என்பது நர்மதையோடு சேரும் ஓர் ஆறு)

பூர்வோத்தரே பாரலிகாபி⁴தா³நே
ஸதா³சிவம் தம் கி³ரிஜாஸமேதம் |
ஸுராஸுராராதி⁴த பாத³பத்³மம்
ஶ்ரீவைத்யநாத²ம் ஸததம் நமாமி || 5

வடகிழக்கில் "பரலி" என்னும் திருத்தலத்தில் மலைமகளோடு கூடிய ஸதாசிவனாகி, தேவர்களாலும் அரக்கர்களாலும் பூஜிக்கப்பட்ட திருவடித் தாமரைகளையுடைய ஶ்ரீவைத்யநாதர் என்னும் பெயரில் எப்பொழுதும் வணங்குகிறேன்.

ஆமர்த³ஸம்ஜ்ஞே நகரேச ரம்ய
விபூ⁴ஷிதாங்க²ம் விவிதை³ச்சபோ⁴கை³: |
ஸத்³பு⁴க்தி முக்தி ப்ரத³மீசமேகம்
ஶ்ரீ நாக³நாத²ம சரணம் ப்ரபத்³யே || 6

ஆமர்தம் அல்லது தாருகாவநம் என்ற பெயர் பெற்ற அழகிய திருத்தலத்தில் பலவிதமான பாம்புகளை அணிகலன்களாய்க் கொண்டு தர்மத்திற்கு விரோதமில்லாத போகமும் மோக்ஷமும் ஒருங்கே கொடுக்கக் கூடிய ஒரே ஈச்வரனான திருநீற்று மேனியராக விளங்கும் நாகநாதரைச் சரணம் அடைகிறேன்.

ஸாநந்த³மாநந்த³ வநேவஸந்தம்
ஆனந்த³கந்த³ம் ஹதபாபப்³ருந்த³ம் ।
வாராணஸீ நாத²மநாத² நாத²ம்
ஸ்ரீவிச்வ நாத²ம் சரணம்ப்ரபத்³யே ॥ 7

ஆனந்தவனம், வாராணஸீ என்னும் பெயர் கொண்ட காசீ நகரத்தில் பாபக்கூட்டங்களை ஒழிப்பவராயும், மகிழ்ச்சிக்கு மூலகாரணராயும், ஆதரவற்ற வர்களுக்கெல்லாம் ஆதரவு கொடுத்துக் காப்பவருமான இன்பமயமான ஸ்ரீவிச்வநாதரைப் புகலிடமாய்க் கொள்கிறேன்.

யோ டா³கிநீ சாகிநிகா ஸமாஜே
நிஷேவ்ய மாண: பிசிதாசநைச்ச ।
ஸதை³வ பீ⁴மாதி³ பத³ப்ரஸித்³த⁴ம்
தம் சங்கரம் பக்தஹிதம் நமாமி ॥ 8

டாகிநீ சாகிநி (என்னும் சக்திகளை) கூட்டத்தாலும், அரக்கர்களாலும் பூஜிக்கப் பட்டவரும் பக்தர்களின் நன்மையிலேயே கருத்துள்ள புகழ்வாய்ந்த பீம என்னும் பெயரோடு கூடியவருமான சங்கரரை (பீமசங்கரரை) வணங்குகிறேன்.

ஸ்ரீதாம்ரபர்ணீஜலராசியோகே³
நிப³த்³த்⁴யஸேதும் நிசிபி³ல்வபத்ரை: ।
ஸ்ரீராமசந்த்³ரேண ஸமர்ச்சிதம் தம்
ராமேச்சவராக்²யம் ஸததம் நமாமி ॥ 9

தாமிரபரணி ஆற்றின் நீர் கடலில் கலக்கும் இடத்தில் அணைகட்டி, இரவில் ஸ்ரீராமசந்திரரால் (வில்வங்களால்) நன்கு பூஜைசெய்ய வில்வங்களால்) நன்கு பூஜை செய்யப்பட்ட ராமேச்வரரை எப்பொழுதும் வணங்குகிறேன்.

ஸிம்ஹாத்³ரிபார்சவேபி தடே ரமந்தம்
கோ³தா³வரீ தீரபவித்ர தேசே ।
யத்³த³ர்சநாத்பாதகஜாதநாச:
ப்ரஜாயதே த்ரயம்ப³கமீசமீடே³ ॥ 10

ஸிம்மாத்ரி மலைத்தாழ்வரையில் இன்புற்றவரும், மிகப்புனிதமான கோதாவரி நதிக்கரையில் இருப்பவருமான எவரைக்கண்ட உடனே பாபக் கூட்டங்கள் அழிந்துவிடுமோ அந்த த்ரியம்பக ஈச்வரனைத்துதிக்கிறேன்.

ஹிமாத்³ரிபார்ச்வேபி தடே ரமந்தம்
ஸம்பூஜ்யமானம் ஸததம் முநீந்த்³ரை: ।

ஸுராஸுரைர்யக்ஷ மஹோரகா³த்³யை:
கேதா³ரஸம்ஜ்ஞு ம் சிவமீசமீடே³ ॥ 11

இமயமலைத்தாழ்வரையில் இன்புற்றவரும், சிறந்த முனிவர்களாலும், தேவர்கள், அரக்கர்கள், யக்ஷர்கள், உரகர்கள் முதலிய எல்லோராலும் பூஜிக்கப்படுகிற சிவன், ஈசன் எனப் பெயர் பெற்ற கேதாரேச்வரரைத் துதிக்கிறேன்.

ஏலாபுரீ ரம்ய சிவாலயேஸ்மிந்
ஸமுல்லஸந்தம் த்ரிஜ³கத்³வரேண்யம் ।
வந்தே³ மஹோதா³ரதரஸ்வபா⁴வம்
ஸதா³சிவம் தம் தி⁴ஷணேச்வராக்²யம் ॥ 12

ஏலாபுரம் (எல்லோரா) என்னுமிடத்தில் உள்ள அழகான சிவாலயத்தில் சிறந்து விளங்குபவரும், மூவுலகிலும் போற்றப்படுபவரும், மிக மிக உயர்ந்த உவமையற்ற இயல்பை உடையவருமான திஷணேச்வரரான ஸதாசிவனை வணங்குகிறேன்.

ஏதாநி லிங்கா³நி ஸதை³வமர்த்யா:
ப்ராத படெ²ந்த: அமல மாநஸாச்ச: ।
தே புத்ர பௌத்ரைச்ச த⁴நைருதா³ரை :
ஸத்கீர்த்திபா⁴ஜ: ஸுகி²நோப⁴வந்தி ॥ 13

இந்த 12 லிங்கங்களின் துதியை தூயமனதுடன் காலையில் பாராயனம் செய்பவர்கள் பிள்ளை பேரன் அளவற்ற செல்வம் நல்ல புகழ் இவைகளுடன் நலனுடனிருப்பார்கள்.



உமாமஹேச்வர ஸ்தோத்ரம்

(உமா, மஹேச்வரன் இருவரையும் சேர்ந்துத் துதிப்பது.)

நம: சிவாப்⁴யாம் நவயௌவ நாப்⁴யாம்
பரஸ்பராச்லிஷ்டவபுர்த⁴ராப்⁴யாம்
நகே³ந்த்³ரகன்யா வ்ருஷகேத நாப்⁴யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்⁴யாம் 1

மங்கள வடிவானவர்களும் எப்பொழுதும் யௌவனப் பருவங் கொண்டவர்களுமான பார்வதீ பரமேச்வரர்களுக்கு வணக்கம். ஒருவரோடொருவர் அணைத்துக் கொள்ளப்பட்ட சரீரத்தை உடையவர்களும், இமயமலையின் புதல்வியும் காளைமாட்டுக் கொடியரும் மான பார்வதிக்கும் சங்கரருக்கும் வணக்கம்.

நம: சிவாப்⁴யாம் ஸரஸோத்ஸவாப்⁴யாம்
நமஸ்க்ருதாபீஷ்ட வரப்ரநா³ப்⁴யாம்
நாராயணே நார்சிதபாது³காப்⁴யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்⁴யாம் 2

மங்களமே வடிவானர்களும் எப்பொழுதும் சுவையான உத்ஸவத்தை உடையவர்களும், தங்களை வணங்குகிற பக்தர்களுக்கு வேண்டிய வரன்களை கொடுப்பவர்களும், மஹாவிஷ்ணுவினால் தொழப்பட்ட திருவடிகளை உடையவர் களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.

நம: சிவாப்⁴யாம் வ்ருஷவாஹநாப்⁴யாம்
விரிஞ்சி விஷ்ண்விந்த்³ரஸுபூஜிதாப்⁴யாம்
விபூ⁴தி பாடீர விலேபநாப்4யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்⁴யாம் 3

மங்கள வடிவானவர்களும் காளை மாட்டை வாகனமாய்க் கொண்டவர்களும், நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோரால் நன்கு தொழப்பட்டவர்களும், திருநீறும் - மஞ்சள் குங்குமமும் பூசியவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.

நம: சிவாப்யாம் ஜக³தீ³ச்வராப்⁴யாம்
ஜக³த்பதிப்⁴யாம் ஜயவிக்³ரஹாப்⁴யாம்
ஜம்பா⁴ரிமுக்³யைரபி⁴ வந்தி³தாப்⁴யாம்
நமோநம: சங்கர பார்வதீப்⁴யாம் 4

மங்கள வடிவானர்களும் உலகெல்லாம் ஆள்பவர்களும், உலகத் தலைவர் களும் வெற்றியே உருவானவர்களும், இந்திரன் முதலானவர்களால் வணங்கப் பட்டவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.

நம: சிவாப்^{4}யாம் பரமௌஷதா^{4}ப்^{4}யாம்
பஞ்சாக்ஷரீ பஞ்ஜராஞ்ஜிதாப்^{4}யாம்
ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்தி^{2}திஸம்ஹ்ருதாப்^{3}யாம்
நமோநம: சங்கர பார்வதீப்^{4}யாம் 5

மங்களமே வடிவானர்களும் (பிறப்பிறப்பெனும் நோய்க்கு) சிறந்த மருந்து ஆனவர்களும், பஞ்சாக்ஷரம் என்ற ஐத்து எழுத்தாகிற கூட்டில் ஆனந்திப்பவர் களும், உலகத்தை படைத்தல் காத்தல் அழித்தல் ஆகியவைகளைச் செய்பவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.

நம: சிவாப்^{4}யாம் அதிஸுந்த^{3}ராப்^{4}யாம்
அத்யந்தமாஸக்த ஹ்ருத^{3}ம்பு^{4}ஜாப்^{4}யாம்
அசேஷலோகைகஹிதங்கராப்^{4}யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்^{4}யாம் 6

மங்களமே வடிவானர்களும் மிகவும் அழகானவர்களும், மிகவும் ஒற்றுமை யான இதய கமலத்தை உடையவர்களும், எல்லா உலகிற்கும் நன்மையே செய் பவர்களுமான சங்கரருக்கும் பார்வதித்கும் வணக்கம்.

நம: சிவாப்^{4}யாம் கலிநாசநாப்^{4}யாம்
கங்கால கல்யாண வபுர்த^{4}ராப்^{4}யாம்
கைலாஸ சைலஸ்தி^{2}த தே^{2}வதாப்^{4}யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்^{4}யாம் 7

மங்களமே வடிவானவர்களும் கலி தோஷத்தைப் போக்குபவர்களும், (ஒருபுறம்) எலும்புக்கூடு தரித்து மறுபுறம் சுபமான உடலை உடையவர்களும், கயிலை மலையை இருப்பிடமாய்க் கொண்ட தெய்வங்களுமான, சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.

நம: சிவாப்யாம் அசுபா^{4}பஹாப்^{2}யாம்
அசேஷ லோகைக விசேஷிதாப்^{4}யாம்
அகுண்டி^{2}தாப்^{4}யாம் ஸ்மிருதி ஸம்ப்^{4}ருதாப்^{4}யாம்
நமோநம: சங்கர பார்வதீப்^{4}யாம் 8

மங்கள வடிவானவர்களும் அசுபத்தைப் போக்கடிப்பவர்களும், எல்லா உலகிற்கும் மேலானவர்களும், மழுக்க முடியாத (சக்தி பொருந்திய) வர்களும் சாஸ்திரங்களினால் அடைவிக்கப்படுபவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வண்க்கம்.

நம: சிவாப்4யாம் ரத2வாஹநாப்4யாம்
ரவீந்து3 வைச்வாநரலோசநாப்4யாம்
ராகாசசாங்காப4முகா2ம்பு4 ஜாப்4யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்4யாம் 9

மங்களமே வடிவானவர்களும் ரதத்தை வாகனமாயுடையவர்களும், சூரியன் - சந்திரன், அக்னி ஆகிய மூவரையும் கண்களாய்க் கொண்டவர்களும், முழு நிலவுக்கு ஒப்பான முகத்தை உடையவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக் கும் வணக்கம்.

நம: சிவாப்4யாம் ஜடிலந்த4ராப்4யாம்
ஜராம்ருதிப்4யாஞ்ச விவர்ஜிதாப்4யாம்
ஜநார்த3நாப்3ஜோத்3ப4வ பூஜிதாப்4யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்4யாம் 10

மங்களமே வடிவானர்களும் சடை முடி உடையவர்களும், முதுமையும் இறப்பும் அற்றவர்களும், திருமால் நான்முகன் ஆகிய இருவராலும் தொழப் பட்டவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.

நம: சிவாப்4யாம் விஷமேக்ஷணாப்4யாம்
பி3ல்வச்ச2தா3ரமல்லிகதா3 மப்4ருத்ப்4யாம்
சோபா4வதீ சாந்தவதிச்வராப்4யாம்
நமோ நம: சங்கர பார்வதீப்4யாம் 11

மங்களமே வடிவானவர்களும் நெற்றிக்கண்ணை உடையவர்களும், வில்வத் களத்தையும் மல்லிகைப்பூ மாலையையும் அணிந்தவர்களும், அழகையும் அமைதி யையும் கொண்டவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.


நம: சிவாப்4யாம் பசுபாலகாப்4யாம்
ஜகத்ரயீரக்ஷண ப3த்3த4ஹ்ருத்2ப்4யாம்
ஸமஸ்த தே3வாஸுரபூஜிதாப்4யாம்
நமோநம: சங்கர பார்வதீப்4யாம் 12

மங்களமே வடிவானவர்களும் பசுக்களாகிய (உயிர்களை) காப்பவர்களும் மூவுலகையும் காப்பதிலேயே கட்டப்பட்ட இதயமுள்ளவர்களும், எல்லா தேவர் களாலும் அரக்கர்களாலும் பூஜிக்கப்பட்டவர்களுமான சங்கரருக்கும் பார்வதிக்கும் வணக்கம்.

ஸ்தோத்ரம் த்ரிஸந்த்4யம் சிவபார்வதீப்4யாம்
ப4க்த்யா படே2த்3த்3வாத3சகம் நரோ ய:
ஸ ஸர்வ ஸௌபா4க்ய ப2லாநி பு4ங்க்தே
சதாயுரந்தே சிவலோகமேதி 13

உமாமஹேச்வர ஸ்தோத்ரம்

சிவ பார்வதியினுடைய 12 சுலோகங்கள் கொண்ட இந்தத் துதியை மூன்று ஸ்ந்த்யைகளிலும் படிக்கும் மனிதன் எல்லா பேறுகளையும் அடைந்து நூறு வயது வாழ்ந்து முடிவில் சிவலோகத்தை அடைவான்.



அர்த்தநாரீச்வர ஸ்தோத்ரம்

(தேவியையும், இறைவனையும் மாற்றி மாற்றித் துதிப்பது.)

சாம்பேய கௌ³ரார்த⁴சரீரகாயை
கர்பூர கௌ³ரார்த⁴சரீரகாய ।
த⁴ம்மில்லகாயைச ஜடாத⁴ராய
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 1

சம்பக மலர் போன்ற சுத்தமான பாதி உடலை உடையவனும், கர்ப்பூரம் போன்று வெளுத்த பாதி உடலை உடையவரும்; அழகான பின்னலையுடையவளும் சடைமுடியைக் கொண்டவருமான, 'சிவா' என்ற அம்பிகைக்கும், சிவபெருமானுக்கும் (இவ்விருவரும் ஒருங்கிணைந்த அர்த்த நாரீச்வர மூர்த்திக்கு) நமஸ்காரம்.

கஸ்தூரிகா குங்குமசர்ச்சிதாயை
சிதாரஜ: புஞ்ஜவிசர்ச்சிதாய ।
க்ருதஸ்மராயை விக்ருதஸ்மராய
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 2

கஸ்தூரி குங்குமம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், சிதை பஸ்மத்தால் பூசப்பட்ட உடலையுடையவரும், மன்மதனை உயிர் பெறச் செய்தவளும், மன்மதனை எரித்தவருமான, சிவா என்ற அம்பிகைக்கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

ஜ⁴ணத்க்வணத் கங்கண நூபுராயை
பாதா³ப³ஜரரஜத்ப²ணி நூபுராய ।
ஹேமாங்க³தா³யை பு⁴ஜகா³ரங்க³தா³ய
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 3

ஒலிக்கிற காப்பு கால் கொலுசுகளையுடையவளும், பாம்புகளாகிற கால் சலங்கையை உடையவரும், தங்கத்தினாலான தோள்வளைகளை உடையவளும் பாம்பையே தோள்வளைகளாகக் கொண்டவருமான,'சிவா'என்ற அம்பிகைக் கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

விசால நீலோத்பலலோசநாயை
விகாஸிபங்கேருஹ லோசநாய ।
ஸமேக்ஷணாயை விஷமேக்ஷணாய
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 4

விரிந்த கருங்குவளை மலர் போன்ற விழிகளை உடையவளும், மலர்ந்த தாமரை போன்ற கண்களை உடையவரும், இரட்டைக் கண்களை உடையவளும் முக்கண்ணருமான, 'சிவா' என்ற அம்பிகைக்கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

மந்தா3ரமாலாகலிதாலகாயை
கபாலமாலாங்சித கந்த4ராய ।
தி3வ்யாம்ப3ராயை ச தி3க3ம்ப3ராய
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 5

மந்தார மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட முடியை உடையவளும், மண்டையோட்டு மாலைகளை கழுத்திலணிந்தவரும், நல்ல பட்டு வஸ்திரங்களை யணிந்தவளும், திசைகளையே ஆடையாய்க் கொண்ட வருமான, 'சிவா' என்ற அம்பிகைக்கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

அம்போ4த4ரச்யாமல குந்தளாயை
தடித்பரபா4தர்ம்ர ஜடாத4ராய ।
நிரீச்வராயை நிகி2லேச்வராய
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 6

மேகம் போல் கறுத்த முன் மயிர்களையுடையவளும், மின்னல் ஒளி போல் சிவந்த ஜடைமுடியுடையவரும், : தனக்கு - மேல் ஆளுவோர் இல்லாதவளும் உலகெல்லாம் ஆளும் ஈசனுமான,'சிவா'என்ற அம்பிகைக்கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

ப்ரபஞ்சஸ்ருஷ்ட்யுந்முக2 லாஸ்யகாயை
ஸமஸ்தஸம்ஹாரக தாண்ட3வாய ।
ஜகஜ்ஜனன்யை ஜக3தே3கபித்ரே
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 7

உலகைப் படைப்பிக்கும் நடனத்தை செய்பவளும், எல்லாவற்றையும் அழிக்கும் ஆனந்த தாண்டவரும். உலகுக்கு தாயும், உலகின் ஒரே தகப்பனுமான 'சிவா' என்ற அம்பிகைக்கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

ப்ரதீ3ப்த ரேகோ2ஜ்ஜ்வல் குண்ட3லாயை
ஸ்பு2ரன்மஹர்பன்னக3 பூ4ஷணாய ।
சிவாந்விதர்யை ச சிவாந்விதாய
நம: சிவாயை ச நம: சிவாய ॥ 8

ஒளி விடுகிற காது குண்டலங்களை உடையவளும், பெரிய பாம்புகளை காதுக்கு அணிகலனாய்க் கொண்டவரும், எப்பொழுதும் சிவனோடு சேர்ந்தவளும், சிவாவோடு சேர்ந்தவருமானத்'சிவா என்ற அம்பிகைக்கும் சிவபெருமானுக்கும் நமஸ்காரம்.

ஏதத்படே2த3ஷ்டக மிஷ்டத3ம் யோ
ப4க்த்யா ஸமான்யோ பு4வித்ரீக4ஜீவீ ।
ப்ராப்நோதி ஸௌபா3க்3யமனந்தகாலம்
பூ4யாத் ஸதா4 தஸ்ய ஸமஸ்த ஸித்3தி: ॥ 9

எவனொருவன் இந்த எட்டு சுலோகங்களை பக்தியுடன் படிக்கிறானோ அவன் உலகில் புகழ் பெற்று நீண்ட ஆயுளுடன் வெகுகாலம தனக்கு வேண்டிய பாக்யங்களை அடைந்து, எப்போதும் எல்லாவித ஸித்திகளையும் நன்கு பெற்று விளங்குவான்.



ப்ராதஸ் - ஸ்மரண ஸ்தோத்திரம்

(விடியற்காலையில் தியானித்துச் சொல்லும் துதி.)

ப்ராதஸ் - ஸ்மராமி ஹ்ருதி^{3} ஸம்ஸ்பு^{2}ரதாத்மதத்வம்
ஸச்சித்ஸுக^{2}ம் பரமஹம்ஸக^{3}திம் துரீயம் ।
யத் - ஸ்வப்ந - ஜாக^{3}ர - ஸுஷுப்தமவைதி நித்யம்
தத் - ப்^{3}ரஹ்ம - நிஷ்களமஹம் ந ச பூ^{4}தஸங்க^{4}: ॥ 1

பரமஹம்ஸர்களால் அடையக்கூடியதும், விழிப்புக்கான வைச்வானரன், கனவுக்கான ஹிரண்யகர்பன், உறக்கத்திற்கான ஈச்வரன், இம்மூவர்களைக் காட்டிலும் மோன நான்காவதும், ஸத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் ப்ரகாசிப்பதுமான ஆத்மதத்துவத்தை விடியற்காலையில் ஹ்ருதயத்தில் ஸ்மரிக் கிறேன். ஜாகரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி (விழிப்பு, கனவு, உறக்கம்) இம்மூன்று அவஸ்தைகளுக்கும் சாக்ஷியானதும், அழிவில்லாததுமான நிஷ்கள (பகுபடாத பூர்ணமான) ப்ரஹ்மம் எதுவோ அது தான் நான். (பஞ்ச) பூதக் கூட்ட மல்லேன்.

ப்ராதர் - ப^{4}ஜாமி ச மனோவசஸா - மக^{3}ம்யம்
வாசோ விபா^{4}ந்தி நிகி^{2}லா: யத^{3}னுக்^{3}ரஹேண ।
யம் நேதி நேதி வசனைர் - நிக^{3}மா அவோசன்
தம் தே^{3}வதே^{3}வ - மஜ - மச்யுத - மாஹுரக்^{3}ர்யம் ॥ 2

மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவரை காலையில் பஜிக்கிறேன். எவர் அனுக்ரஹத்தால் எல்லா வாக்குகளும் ப்ரகாசிக்கின்றனவோ, வேதங்கள் (நேராகக் குறிக்க முடியாமல் மற்றவைகளை) இதல்ல, இதல்ல என்று (தள்ளி சேஷ மாக எவரைச்) சொல்லுகின்றன வோ, அவரையேதான் தேவர்களுக்கெல்லாம் தேவராகவும், பிறப்பு இல்லாதவராகவும், நழுவலில்லாதவராகவும், (தன் நிலையில் நிலைத்தவராகவும், காரண ரூபியான முதல்வராகவும் (வேதங்கள்) கூறுகின்றன.

ப்ராதர் - நமாமி தமஸ: பரமர்கவர்ணம்
பூர்ணம் ஸநாதனபத^{3}ம் புருஷோத்தமாக்^{3}யம் ।
யஸ்மின்னித^{3}ம் ஜக^{3}த^{3} சேஷமசேஷபூ^{4}தெள
ரஜ்ஜ்வாம் பு^{4}ஜங்கம இவ ப்ரதிபா^{4}ஸிதம் வை ॥ 3

எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாயுள்ள எதனிடத்தில் இவ்வுலகம் முழுவதும் பழுதையில் பாம்பு போல் (அறிவின் தவறான பிரதிபலிப்பு ஒளியினால்) காணப் படுகிறதோ, எது (அவித்யை) இருளுக்கு அப்பாற்பட்டதான சிறந்த தேஜோ

ரூபமானதோ, எது எங்கும் நிறைந்ததோ, எது சாச்வதமான நிலையோ, எது புருஷோத்தமன் என்னும் பெயர் பெற்றதோ அதை காலையில் நமஸ்கரிக்கிறேன்.

ச்லோக - த்ரய - மித³ம் புண்யம் லோக - த்ரய - விபூ⁴ஷணம் |
ப்ராத: காலே படே²த் யஸ்து ஸ க³ச்சேத் பரமம் பத³ம் || **4**

மூன்று உலகங்களுக்கும் ஆபரணம் போன்றதும், புண்ணியமளிப்பதுமான இம்மூன்று சுலோகங்களையும் காலையில் எவனொருவன் படிக்கிறானோ அவன் பாமபதம் (ப்ரம்ம ஞானம்) அடைகிறான்.

நிர்குணமானஸ பூஜா

(ஸகுணமான தெய்வத்தை நம் உடற்கருவிகள் கொண்டு வழிபடுவதையே பொதுவாகப் பூஜையென எண்ணுகிறோம். இங்கு ஸ்ரீமத் ஆசார்யாள் நிர்குணமான ப்ரஹ்மத்தை மனம் கடந்த நிலையில் அநுபவிக்கு முகமாகவே மனத்தால் பாவிப்பதையும் உவமை மூலம் பூஜைச் சடங்குடன் பொருத்திக் காட்டுகிறார்.)

சிஷ்ய உவாச: -

அக2ண்டே3 ஸச்சிதா3நந்தே3 நிர்விகல்பைக ரூபிணி |
ஸ்தி2தே(அ)த்3விதீய பா4வே(அ)பி கத2ம் பூஜா விதீ4யதே || 1

சிஷ்யன் சொல்கிறான்: -

ஸத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் உள்ள (ப்ரஹ்மமான)து பிரிவற்றதாகவும், எவ்வித விகல்பத்திற்கும் இடமில்லாமல் ஒரே ரூபமாகவும், இரண்டாவது பொருளில்லாததாகவும் இருக்கும் போது (அதற்குப்) பூஜையானது எப்படி செய்யப்படுகிறது?

பூர்ணஸ்யாவாஹனம் குத்ர ஸர்வாதா4ரஸ்ய சாஸநம் |
ஸ்வச்ச2ஸ்ய பாத்3யமர்க்4யம் ச சுத்3த4ஸ்யாசமநம் குத: || 2

எங்கும் நிரம்பியிருக்கிற பிரஹ்மத்திற்கு (பூஜாக்ருஹம், விக்ரஹம் எனும் படியாகக் குறிப்பிட்ட இடத்தில்) ஆவாஹனம் எங்கே செய்வது? எல்லாவற்றையுமே தாங்குவதற்கு (அதனைத் தாங்கும்) ஆஸனமும் (எப்படிக் கொடுப்பது)? நிர்மலமாயிருப்பதற்கு (கழுவிக்கொள்வதற்கான) பாத்யமும், எதற்கு? சுத்தமாயிருப்பதற்கு ஆசமனம் எங்கிருந்து வரும்? (பாத்யம் - பாத தீர்த்தம்; அர்க்யம் - முக தீர்த்தம்; ஆசமனம் - அங்கசுத்திக்காக நீர் அருந்துதல்)

நிர்மலஸ்ய குத: ஸ்நாநம் வாஸோ விச்வோத3ரஸ்ய ச |
அகோ3த்ரஸ்ய த்வவர்ணஸ்ய குதஸ்தஸ்யோபவீதகம் || 3

அழுக்கற்றவருக்கு ஸ்நானம் எதற்காக? பிரபஞ்சத்தையே தன் வயிற்றில் அடக்கியுள்ளவருக்கு வஸ்திரம்தான் எப்படி உடுத்த முடியும்? கோத்திர மில்லாதவரும், ஜாதியில்லாதவருமான அவருக்கு எதற்காக யக்ஞோபவீதம்? (பூணூல் சாற்றும் உபசாரம்)

நிர்லேபஸ்ய குதோ க3ந்த3: புஷ்பம் நிர்வாஸநஸ்ய ச |
நிர்விசேஷஸ்ய கா பூ4ஷா கோ(அ)லங்காரோ நிராக்ருதே: || 4

எதிலும் ஒட்டாதவருக்கு கந்த (உபசார)ம் (சந்தனப் பூச்சு) எப்படி (ஏற்படும்)? எவ்வித வாசனையுமற்றவருக்கு புஷ்பமும் (எதற்கு)? எந்த விசேஷமு மில்லாதவருக்கு பூஷணம் எது? ரூபமேயில்லாதவருக்கு அலங்காரம் எது?

(வாஸனை என்பது கர்மாவின் அநுபோக நெடியையும் குறிக்கும் விசேஷம் என்பது ஒன்றைவிட இன்னொன்று சிறப்புற்றுள்ள போதே தோன்றுவது. ப்ரஹ்மமோ தனக்கு வேறாய் இன்னொன்று இல்லாததால் நிர்விசேஷமானது. ஒருவர் பிறரினும் சிறப்பு எய்துவதற்காகவே அவரை பூஷிப்பது வழக்கம். பிறிதற்ற ப்ரஹ்மத்துக்கு பூஷணம் எப்படி இருக்க முடியும் என்பது கேள்வி.)

நிரஞ்ஜநஸ்ய கிம் தூ4பைர் தீ3பைர் வா ஸாவஸாக்ஷிண: |
நிஜாநந்தை3க - த்ருப்தஸ்ய நைவேத்3யம் கிம் ப4வேதிஹ || 5

தோஷமில்லாதவருக்கு தூபங்களினால் என்ன பிரயோஜனம்? ஸர்வ ஸாக்ஷியாக (எல்லாவற்றையும் நேரில் பார்த்துக்கொண்டிருக்கிறவருக்கு) தீபங்களினால் தான் என்ன பயன்? தன்னுடைய ஆனந்தத்தினாலேயே திருப்தி அடைந்துள்ளவருக்கு இங்கே எது நைவேத்யமாக ஆகும்?

(துர்வாஸனை, ஸ்நானத்தின் பின் விளைவால் ஏற்படக்கூடிய கெடுதல்கள் இவை போகவே தூபம் காட்டுவது. தோஷமெதுவும் அண்டவொண்ணா ப்ரஹ்மத்துக்கு இது எதற்கு? தேவதைக்கு ஒளிகாட்டவே தீபம். ப்ரஹ்மமோ ஒளிக்குள் ஒளிதருவதாக தானே அனைத்தையும் பார்ப்பதாயுள்ளதே! ஸ்வரூபானந்தத்திலேயே முட்டமுட்டத் திளைக்கும் ப்ரஹ்மத்துக்குப் பசியும் உண்டா என்ன? நிவேதனம் செய்வான் வேண்டி?)

விச்வாநந்த3யிதுஸ் - தஸ்ய கிம் தாம்பூ3லம் ப்ரகல்பதே |

பிரபஞ்சம் முழுவதற்கும் ஆனந்தம் தருகிற அவருக்கு, எது தாம்பூலமாக ஆகும்? (மகிழ்ச்சியூட்டவே தாம்பூலம் அளிப்பது.)

ஸ்வயம்ப்ரகாச - சித்3ரூபோ யோ(அ)ஸாவர்காதி3பா4ஸக: || 6
கீ3யதே ச்ருதிதி4பிஸ் - தஸ்ய நீராஜா - விதி3: குத: |

எவர் ஸ்வயம் பிரகாசமான ஞானஸ்வரூபரோ அவர் ஸூர்யன் முதலானவர் களுக்கும் பிரகாசம் தருபவராக வேதவாக்யங்களினால் பாடப்படுகிறார். அவருக்கு எதற்காக கர்ப்பூராரத்தி முறை?

ப்ரத3க்ஷிண - மநந்தஸ்ய ப்ரணாமோ (அ)த்3வயவஸ்துந: || 7

எல்லையற்றவருக்கு ப்ரதக்ஷிணம் (எப்படிச் செய்ய)? இரண்டாவதற்ற வஸ்துவிற்கு நமஸ்காரம் (செய்ய அடியார் என்று ஒருத்தரும்) தனியாக உண்டா?

வேத3வாசா - மவேத்3யஸ்ய கிம் வா ஸ்தோத்ரம் விதீ3யதே |

வேத வாக்யங்களினாலேயே அறியவொண்ணாமலிருப்பவருக்கு, ஸ்தோத்திரமாக எதைத்தான் விதிக்க முடியும்? (நீராஜனத்துக்குப் பின் செய்யும் ஸ்தோத்ர உபசாரம் ஏது?)

அந்தர் ப^{3}ஹி: ஸம்ஸ்தி^{2}தஸ்ய உத்^{3}வாஸந விதி^{4}: குத: || 8

உள்ளும் வெளியும் நன்கு உறைந்திருப்பவருக்கு உத்வாஸன முறை எப்படி? (பூஜை முடிவில் தேவதையை அதன் இருப்பிடத்திறகு திரும்ப அனுப்பிவைப்பது "உத்வாஸனம்" எனப்படும்.)

ஸ்ரீ குருருவாச: -

ஆராத^{4}யாமி மணி ஸந்நிப^{4}-மாத்ம-லிங்க^{3}ம்
மாயாபுரீ ஹ்ருத^{3}ய-பங்கஜ-ஸந்நிவிஷ்டம் |
ச்ரத்^{3}தா^{4} நதீ^{3} - விமல சித்த ஜலாபி^{4}ஷேகை:
நித்யம் ஸமாதி^{4} - குஸுமை - ரபுநர்ப^{4}வாய || 9

ஸ்ரீ குரு சொல்கிறார்:

மாயா புரியின் மாயையால் ஏற்பட்ட நவத்வார புரியான சரீரத்திலுள்ள ஹ்ருதய பத்மத்தில் நன்கு வீற்றிருக்கும் ஸ்படிகம்போல் நன்கு விளங்குகிற ஆத்மாவாகிற லிங்கத்தை மறுபடியும் ஸம்ஸார பந்தத்தில் அகப்படாமலிருக்கும் பொருட்டு சிரத்தையாகிற நதியில் நிர்மலமான மனஸாகிற (குடத்தை முழுக்கி எடுத்த) ஜலத்தினால் அபிஷேகங்கள் செய்து, ஸமாதியாகிற புஷ்பங்களினால் ஆராதிக்கிறேன்.

அயமேகோ(அ)வசிஷ்டோ(அ)ஸ்மீத் - யேவ - மாவாஹயேத் சிவம் |
ஆஸநம் கல்பயேத் பச்சாத் ஸ்வப்ரதிஷ்டா^{2}த்மசிந்தனம் || 10

தனித்து மிஞ்சினவனாக, இந்த (நான் தான்) இருக்கிறேன் என்று, இவ்விதமாக (தன்னிடமே) சிவத்தை (மங்கள ஸ்வரூபியான பரமாத்மாவை) தன்னிடமே ஆவாஹனம் செய்யவேண்டும். பிறகு தன்னிடத்தில் நிலைத்திருக்கும் ஆத்மாவைச் சிந்தனை செய்வதையே ஆஸனம் என்று பாவிக்க வேண்டும்.

புண்ய - பாப - ரஜஸ்ஸங்கோ^{3} மம நாஸ்தீதி வேத^{3}நம் |
பாத்^{3}யம் ஸமர்பயேத் வித்^{3}வான் ஸர்வகல்மஷநாசநம் || 11

'புண்ணியம், பாபம் என்கிற அழுக்கின் சேர்க்கை எனக்குக் கிடையாது' என்று அறிவதையே எல்லா தோஷங்களையும் போக்கக்கூடிய பாத்யமாக அறிவாளியானவன் கொடுக்க வேண்டும்.

அநாதி^{3} - கல்ப - வித்^{4}ருத - மூலாஜ்ஞ்ஞாந - ஜலாஞ்ஜலிம் |
விஸ்ருஜேதா^{3}த்மலிங்க^{3}ஸ்ய ததே^{3} வார்க்^{4}ய - ஸமர்பணம் || 12

அநாதி கல்ப காலமாகச் சுமந்து வந்த மூல அவித்யையை ஜலமாகக் கொண்ட (பாவித்து) அஞ்ஜலியை விடவேண்டும். அதுவேதான் ஆத்மாவாகிற லிங்கத்திற்கு அர்க்யத்தைக் கொடுத்தல் ஆகும்.

ப்[3]ரஹ்மாநந்தா[3]ப்[3]தி[4] கல்லோல கண கோட்யம்சலேசகம் ।
பி[3]பந்தீந்த்[3]ராத[3]ய இதி த்[4]யாநமாசமநம் மதம் ॥ 13

பிரஹ்மானந்தமாகிற ஸமுத்திரத்தின் அலையின் திவலையில் கோடியில் ஒரு அம்சத்தின் சிறு துளியைத் தான் இத்திரன் முதலான தேவர்கள் பானம் செய்கிறார்கள் என்று தியானம் செய்வது ஆ ஸமன மென்று எண்ணப்படுகிறது. (தேவலோக ஆனந்தமென்பது, ஆத்மானந்தத்தின் வெகுவெகு அற்பமான அம்சமே.)

ப்[3]ரஹ்மாநந்த[3] - ஜலேநைவ லோகா: ஸர்வே பரிப்லுதா: ।
அக்லேத்[3]யோ (அ)யமிதி த்[4]யாந - மபிஷேசன - மாத்மந: ॥ 14

பிரஹ்மாநந்தமாகிற ஜலத்தினாலேயே எல்லா உலகங்களும் நாலாபக்கங் களிலும் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன, (அப்படிப்பட்ட) இந்த ஆத்மரூபி எந்த ஜலத்தினாலும் நனைக்கப்படக்கூடியவரல்ல என்று எண்ணுவதே ஆத்மாவிற்கு அபிஷேகமாகும்.

நிராவரண சைதன்யம் ப்ரகாசோ (அ) ஸ்மீதி சிந்தனம் ।
ஆத்மலிங்க[3]ஸ்ய ஸத்[3]வஸ்த்ர - மித்யேவம் சிந்தயேன்முனி: ॥ 15

மறைவில்லாத சைதன்யமாகவும் பிரகாச ஸ்வரூபமாகவும் நான் இருக் கிறேன் என்று நினைப்பதே ஆத்ம லிங்கத்திற்கு (ச் சார்த்தும்) நல்லாடை என்று எண்ண வேண்டும். (மறைத்துக்கொள்ளத்தான் நாம் ஆடை உடுத்துவது.)

த்ரிகு[3]ணாத்மாசேஷ - லோக - மாலிகா ஸூத்ரமஸ்ம்யஹம் ।
இதி நிச்சய ஏவாத்ர ஹ்யுபவீதம் பரம் மதம் ॥ 16

முக்குணங்களை ஸ்வபாவமாகவுடைய, எல்லா உலகங்களும் சேர்ந்த மாலைக்கு ஸூத்ரமாக (நாராக) நான் இருக்கிறேன் என்ற தீர்மான மே இங்கு உத்தமமான யக்ஞோபவீத ஸூத்ரமாகக் கருதப்படுகிறது. (நார் என்ற ஆதாரமின்றி பூக்களைத் தொடுக்க முடியாதது போல் ஆத்மாவின் ஆதாரமின்றி முக்குண மில்லை. மலர்கள் வாடி அழிந்தாலும், நார் வாடாமல் அழியாமலிருப்பது போல குணங்கள் மாறி நாசமுற்றாலும் ஆத்மா மாறுதலும் நாசமும் இன்றி விளங்குகிறது.)

அநேக வாஸநா மிச்ர ப்ரபஞ்சோ (அ) யம் த்[4]ருதோ மயா ।
நாந்யேநேத்யனுஸந்தா4ன - மாத்மநச் - சந்தனம் ப[4]வேத் ॥ 17

"பலவிதமான வாஸனைகள் கலந்த இந்த பிரபஞ்சம் என்னால் தாங்கப்பட்டிருக்கிறது, வேறு எதனாலும் இல்லை." என்று அனுஸந்தானம் செய்வது தான் (இடையறாமல் சிந்தித்து அனுபவத்துக்குக் கொண்டுவருவதுதான்) ஆத்மாவிற்குச சந்தனம் கொடுப்பதாக ஆகும்.

ரஜஸ் - ஸத்வ - தமோ - வ்ருத்தி த்யாக[3]ரூபைஸ் திலாக்ஷதை: ।
ஆத்மலிங்க[3]ம் யஜேத் நித்யம் ஜீவன் முக்தி ப்ரஸித்[3]த[4]யே ॥ 18

ஜீவன் முக்தி நிலை நன்கு விதிக்க வேண்டியதற்காக ரஜஸ், ஸத்வம், தமஸ் இவைகளால் ஏற்படும் மனோவிருத்திகளை விட்டு விடுவது என்பதாகிய எள்ளு கலந்த அக்ஷதைகளால் ஆத்மாவாகிற லிங்கத்தை எப்பொழுதும் பூஜிக்க வேண்டும். (சித்த ஓட்டத்தை விடுவதாக எண்ணுவதே அக்ஷதா ஸமர்ப்பணம்.)

ஈச்வரோ கு3ருராத்மேதி பே4த - த்ரய விவர்ஜிதை: |
பி3ல்வ - பத்ரை - ரத்3விதீயை - ராத்மலிங்க3ம் யஜேத் சிவம் || 19

ஈசுவரன், குரு, ஆத்மா என்கிற மூன்று வித வேற்றுமையு மற்று இரண் டற்றதாயிருக்கும் தன்மையாகிற பில்வபத்திரங்களினால் சிவ (மங்களஸ்வ ரூப) மான ஆத்மலிங்கத்தைப் பூஜிக்க வேண்டும். (வில்வத்தின் மூன்று தளமாக ஈச்வர - குரு - ஜீவ என்ற மூன்று பேத நீக்கம், த்ரிதளத்தில் மேலே உள்ள ஒரு தளம் மற்ற இரண்டிலிருந்து நீங்கியிருப்பது போல, த்வைதம் விடுத்த அத்வைத பாவம்.)

ஸமஸ்த வாஸநா த்யாக3ம் தூ4பம் தஸ்ய விசிந்தயேத் |
ஜ்யோதிர்மயாத்ம விஜ்ஞாநம் தீ3பம் ஸந்3தர்சயேத் பு3த4: || 20

எல்லா வாஸனை களையும் விட்டுவிடுவதையே (ஆத்மாவாகிய) அவருக்கு தூபம் என்று எண்ணவேண்டும். ஜ்யோதிஸ்வ ரூபமாயிருக்கும் ஆத்மாவை நன்கு அறிவது என்பதையே தீபமாக ஞானி காட்டவேண்டும்.

நைவேத்3ய - மாத்மலிங்க3ஸ்ய ப்3ரஹ்மாண்டா3க்3யம் மஹோத3னம் |
பி3பா (சிதா3) நந்தரஸம் ஸ்வாது3 ம்ருத்யு - ரஸ்யோபஸேசநம் || 21

பிரஹ்மாண்டம் என்கிற பெரிய அன்னம் தான் ஆத்மாவாகிற லிங்கத்திற்கு ருசியுள்ள நைவேத்தியம். ('சிதானந்த ரஸம்'என்ற பாடத்தின்படி : (ப்ரஹ்மத்துக்கு) ஞான இன்பமே ரஸமாகும் - கனிச் சாறாகும். 'பிபானந்த ரஸம்' என்ற பாடத்தின்படி: (ஹே ப்ரம்ம ஸ்வரூபியே) ஆனந்த ரஸத்தைப் பருகு.) அதற்கு மிருத்யு வேதான் வியஞ்சனம். (உலகத்தை அன்னமாயும், உபநிஷதம் கூறுவது போல், காலனையே (காலத்தை யே) ஊறுகாயாகவும் விழுங்குவது ப்ரஹ்மம்.)

அஜ்ஞானோச்சி2ஷ்டகரஸ்ய க்ஷாளநம் ஜ்ஞானவாரிணா |
விசுத்3த4 ஸ்யாத்மலிங்க3ஸ்ய ஹஸ்த - ப்ரக்ஷாளனம் ஸ்மரேத் || 22

அஜ்ஞானமாகிற எச்சில்பட்ட கையை, ஞான மாகிற ஜலத்தினால் அலம்பு வதையே அதிபரிசுத்தமான ஆத்மாவாகிற லிங்கத்திற்கு கையலம்புதல் என்று நினைக்க வேண்டும்.

ராகா3தி3 கு3ண சூந்யஸ்ய சிவஸ்ய பரமாத்மந: |
ஸராக3 விஷயாப்4யாஸ த்யாக3ஸ் தாம்பூ3ல - சர்வணம் || 23

ராகம் (ஆசை) முதலான குணங்களற்ற சிவமான பரமாத்மாவிற்கு, ஆசையுடன் விஷயங்களில் ஈடுபடுவதென்பதை விடுவதே தாம்பூலம் போட்டுக் கொள்ளுதலாகும்.

(ராகம் என்பது சிவப்பையும் குறிக்கும். ராகம் (சிவப்பு) ஏற்றிக்கொள்வதே மற்றவருக்குத் தாம்பூலம், ஆத்மாவுக்கோ ராகம் (ஆசை) நீக்குவதே தாம்பூலம்.)

அஜ்ஞாந த்[3]வாந்த வித்[4]வம்ஸ ப்ரசண்ட - மதி - பா[4]ஸ்கரம் |
ஆத்மநோ ப்[3]ரஹ்மதா ஜ்ஞாநம் நீராஜநமிஹாத்மந: || 24

அஜ்ஞானமாகிற இருட்டைப் போக்கடிப்பதில் மிகவும் ஸாமர்த்திய முள்ளதாயும், ஸூர்யனை மீறினதாயும் (வெகு பிரகாசத்தைக் கொடுக்கக்கூடிய தாயும்) உள்ள ஆத்மா பிரஹ்மம்தான் என்கிற ஞானமே இங்கு ஆத்மாவிற்கு நீராஜனம் (கர்ப்பூர ஆரத்தி) ஆகும்.

விவித[4] ப்[3]ரஹ்ம ஸந்த்[3]ருஷ்டி மாலிகாபி[4] ரலங்க்ருதம் |
பூர்ணாநந்தா[3]த்மதா த்[3]ருஷ்டிம் புஷ்பாஞ்ஜலிமனுஸ்மரேத் || 25

பலவிதமான பிரபஞ்சமும் ப்ரஹ்மம்தான் என்ற நல்லறிவே பூமாலை அலங்கரிப்பு. நிறைந்த ஆனந்த ஸ்வரூபமான ப்ரஹ்மமே நான் என்று அறிவதையே புஷ்பாஞ்ஜலியாக நினைக்க வேண்டும்.

பரிப்[4]ரமந்தி ப்[3]ரஹ்மாண்ட[3] ஸஹஸ்ராணி மயீச்வரே |
கூடஸ்தா[2]சலரூபோ (அ)ஹமிதி த்[4]யானம் ப்ரத[3]க்ஷிணம் || 26

"ஈசுவரனாயிருக்கிற என்னிடத்தில் ஆயிரக்கணக்கான ப்ரஹ்மாண்டங்கள் சுழலுகின்றன," நான் கூடம்போல் (ப்ரபஞ்சம் மாற்றுருவங்களை அடைய ஆவேசமாக) இருந்து கொண்ட ஸ்வயமாக அசையாமலிருக்கும் ஸ்வரூபத்தை யுடையவன் என்று தியானம் செய்வதுதான் பிரதக்ஷிணம் செய்வதாகும்.

(எல்லா இரும்புப் பண்டங்களையும் எந்த அடி இரும்புத்தட்டின் மேல் வைத்து அடிக்கிறார்களோ, ஆனாலும் எந்த அடி இரும்பு தான் அடிபடுவதில்லையோ அது "கூடம்" எனப்படும்.)

விச்வ - வந்த்[3]யோ (அ)ஹ - மேவாஸ்மி நாஸ்தி வந்த்[3]யோ ம[3]தந்யக: |
இத்யாலோசனமேவாத்ர ஸ்வாத்மலிங்க[3]ஸ்ய வந்த[3]னம் || 27

"நான் தான் ஜகத் பூராவினாலும் வந்தனம் செய்யப்படவேண்டியவனாக இருக்கிறேன். என்னைத் தவிர வேறு யாரும் வந்தனம் செய்யப்படவேண்டியவனாக இல்லை" என்று ஆய்ந்து தெளிவதுதான் இங்கு தன்னுடைய ஆத்மாவாகிற லிங்கத்திற்கு வந்தனமாகும்.

ஆத்மந : ஸத்க்ரியா ப்ரோக்தா கர்தவ்யாபா[4]வ பா[4]வநா |
நாமரூப - வ்யதீதாத்ம - சிந்தனம் நாமகீர்த்தனம் || 28

ஆத்மாவிற்கு செய்ய வேண்டியதொன்றும் கிடையாதென்று பாவிப்பதே (அதற்கான) உபசாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாமகீர்த்தனம் என்பது நாமரூபங்களைக் கடந்த ஆத்மாவைச் சிந்திப்பது தான்.

ச்ரவணம் தஸ்ய தே3வஸ்ய ச்ரோதவ்யாபா4வ சிந்தனம்
மநநம் த்வாத்மலிங்க3ஸ்ய மந்தவ்யாபா4வ சிந்தனம் ॥ 29

அந்த ஸ்வயம்பிரகாச அத்மாவிற்கு சிரவணம் என்பது கேட்டறிய வேண்டியதாக ஒன்றும் கிடையாதென்று சிந்திப்பது தான். ஆத்மாவென்கிற லிங்கத்திற்கு மனனம் என்பது மனனம் செய்யவேண்டியதாக ஒன்றும் கிடையா தென்று சிந்திப்பது தான்.

த்4யாதவ்யாபா4வ விஜ்ஞாநம் நிதி3த்4யாஸனமாத்மந: ।
ஸமஸ்த ப்4ராந்தி விக்ஷேப ராஹித்யே நாத்ம நிஷ்ட3தா ॥ 30

ஸமாதி4ராத்மநோ நாம நாந்யத் சித்தஸ்ய விப்4ரம: ।
தத்ரைவம் ப்3ரஹ்மணி ஸதா3 சித்த விச்ராந்திரிஷ்யதோ ॥ 31

ஆத்மாவிற்கு நிதித்யாஸனம் (ஆழ்ந்த தியானம்) செய்ய வேண்டிய விஷயமே கிடையாதென்று அறிவதேயாகும். ஆத்மாவிற்கு ஸமாதி என்பது எல்லா வித பிராந்தியும் விக்ஷேபமும் இல்லாத்தன்மையோடு ஆத்மாவிடத்திலேயே நிலைத் திருத்தல் என்பது தான், வேறு அல்ல. (மற்றவை) மனசின் பிரமைதான். இவ்விதமாக அந்த பிரஹ்மத்தினிடத்தில் எப்பொழுதும் மனசிற்கு ஓய்வு விரும்பப்படுகிறது. (இந்த விச்ராந்தியே விடாயாற்றி உத்ஸவமாகும்.)

[சிஷ்யன் "பிரஹ்மத்திற்கு உத்வாஸனம் எப்படி?" என்று கேட்டதற்கு மாத்திரம் குரு பதில் சொல்லவில்லை. ஸர்வ வியாபகமான பிரஹ்மத்திற்கு உவமையாகக் கூட உத்வா ஸனம் ஸாத்தியமில்லை என்று உறுதிப்படுத்தப்பெறுகிறது போலும் !]

ஏவம் வேதா3ந்த கல்போக்த ஸ்வாத்ம லிங்க3 ப்ரபூஜனம் ।
குர்வன்னாமரணம் வா (அ)பி க்ஷணம் வா ஸுஸமாஹித: ॥ 32

ஸர்வ - து3ர்வாஸநா ஜாலம் பத2பாம்ஸுமிவ த்யஜேத் ।
விதூ4யாஜ்ஞாந து: கெ2ளக4ம் மோக்ஷாநந்த3ம் ஸமச்நுதே ॥ 33

இவ்விதமாக வேதாந்தமாகிற கல்பத்தில் சொல்லப்பட்ட தன்னுடைய ஆத்மலிங்க பூஜையை மரணம் வரையிலோ, ஒரு க்ஷணமேனுமோ நன்கு மனத்தை ஒருமைப்படுத்திச் செய்கிறவர் எல்லா கெட்ட வாஸனைக்கூட்டத்தையும் காலிலுள்ள புழுதியைப் போல உதறிவிடுவர்; அக்ஞானத்தையும் அதனால் ஏற்படும் துக்கக்குவியலையும் உதறிவிட்டு மோக்ஷானந்தத்தை நன்கு அடைவர்.



உபதேச பஞ்சகம்

(அல்லது)

ஸோபான பஞ்சகம்

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசாரியாள் சரீரத்தைத் துறக்க விருந்த தருணத்தில் சில சிஷ்யர்கள் தங்களது "ஸூத்ரபாஷ்யம் முதலான க்ரந்தங்களை வாசித்துத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு புத்தி ஸாமர்த்தியமில்லாத ஸாமான்ய அதிகாரிகளும், சிரேயஸ்ஸை அடையும் மார்க்கத்தை உபதேசித்து அருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, அப்பொழுது இந்த ஐந்து சுலோகங்களையும் உபதேசித்தார். மேலும், வேதாத்யயனம் செய்ய ஆரம்பிப்பது முதல் பரப்ரஹ்ம நிலையை அடைவதுவரை மனிதனைக் கீழிருந்து படிப்படியாக மேலே அழைத்துச் செல்வதால் “ஸோபான பஞ்சகம்” என்று இதைக் கூறுகிறார்கள். (ஸோபானம்: படி)

வேதோ3 நித்யமதீ4யதாம் தது3தி3தம் கர்ம ஸ்வநுஷ்டீ2யதாம்
தேநேசஸ்ய விதீ4யதாம் அபசிதி: காம்யே மதிஸ்த்யஜ்யதாம் |
பாபௌக4: பரிதூ4யதாம்ப4 வஸுகே2தோ3ஷோ (அ)நுஸந்தீ3யதாம்
ஆத்மேச்சா2 வ்யவஸீயதரம் நிஜக்3ருஹாத் தூர்ணம் விநிர்க3ம்யதாம் || 1

வேதமானது, தினந்தோறும் அத்யயனம் செய்யப்படவேண்டும். அதில் கூறப்பட்ட கர்மங்கள் நன்கு அனுஷ்டிக்கப்படவேண்டும். அந்தக் கர்மாவால் ஈஸ்வரனுக்கு பூஜை செய்யப்படவேண்டும். (ஸ்வதர்மப்படி செய்யும் தொழிலையே வழிபாடாகக் கொள்ள வேண்டும்.) காம்யமான (பலனை உத்தேசித்துச் செய்யும்) கர்மாவில் எண்ணம் விடப்பட வேண்டும். (பலனை எண்ணிக் கர்மம் புரியக் கூடாது.) பாவக்குவியல் நன்கு உதறப்பட வேண்டும். ஸம்ஸார ஸுகத்தில் உள்ள தோஷமானது இடைவிடாமல் நினைவிலிருக்க வேண்டும். ஆத்மவிஷயமான இச்சை உறுதியாக்கப்படவேண்டும் . (இவ்விதம் உறுதியாக்கப்பட்டபின்) தன் வீட்டிலிருந்து விரைவில் வெளிக்கிளம்பவேண்டும்.

ஸங்க3: ஸத்ஸு விதீ4யதாம் ப4க3வதோ ப4க்திர் த்3ருடா4(ஆ)தீயதாம்
சாந்த்யாதி3: பரிசீயதாம் த்3ருட4தரம் கர்மாசு ஸந்த்யஜ்யதாம் |
ஸத்3வித்3வான் உபஸர்ப்யதாம் அநுதி3னம் தத்பாது3கா ஸேவ்யதாம்
ப்3ரஹ்மைகாக்ஷரமர்த்2யதாம் ச்ருதிசிரோவாக்யம் ஸமாகர்ண்யதாம் || 2

நல்லோர்களிடம் சேர்க்கை செய்யவேண்டும். ஈஸ்வரனிடம் உறுதியான பக்தி கைக்கொள்ளப்பட வேண்டும். சாந்தி முதலானவை (ஆன்மீயப் பண்புகள்) பழக்கிக்கொள்ளப்பட வேண்டும். (ஞானத்தின் பொருட்டன்றி, கர்மாவுக்காகவே) கர்மா விரைவில் விடப்பட வேண்டும். நல்ல வித்வான் (ஞானி) பணிவுடன் அணுகப்பட வேண்டும். தினந்தோறும் அவருடைய பாதுகை ஸேவிக்கப்பட வேண்டும். ப்ரஹ்மஸ்வரூபமான ஒரே அக்ஷர (பிரணவ)மானது பிரார்த்திக்கப்பட வேண்டும். உபநிஷத் வாக்யம் முறைப்படி சிரவணம் செய்யப்படவேண்டும்.

வாக்யார்த2: ஸுவிசார்யதாம் ச்ருதிசிர: பக்ஷ: ஸமாச்ரீயதாம்
து3ஸ்தர்காத் ஸுவிரம்யதாம் ச்ருதிமதஸ்தர்கோது - ஸந்தீ4யதாம் ।
ப்3ரஹ்மாஸ்மீதி விபா4வ்யதாம் அஹரஹர் க3ர்வ: பரித்யஜ்யதாம்
தே3(அ)ஹம்மதி ருஜ்யதாம் பு3த4ஜனைர் வாத4: பரித்யஜ்யதாம் ॥ 3

(உபநிஷத்துக்களில் ஜீவ - ப்ரம்ம அபேதத்தைக் கூறுவனவான) மஹா வாக்யங்களின் அர்த்தம் நன்கு விசாரிக்கப்பட வேண்டும். உபநிஷத்துக்கள் கூறும் ஸித்தாந்தம் நன்கு கைக்கொள்ளப்பட வேண்டும். குதர்க்கத்திலிருந்து அறவே ஒதுங்கவேண்டும். உபநிஷத்துக்கு ஸம்மதமான தர்க்கம் நன்கு பின் பற்றப்பட வேண்டும்.'(நான்) ப்ரஹ்மமாக இருக்கிறேன்'என்று தியானம் செய்ய வேண்டும். அன்றன்றும் (எக்காலமும்) கர்வம் விடப்பட வேண்டும். சரீரத்தில் நான் என்ற எண்ணம் தள்ளப்பட வேண்டும். அறிவாளிகளுடன் வாதிப்பது விடப்பட வேண்டும்.

க்ஷுத்3வ்யாதி3ச்ச சிகித்ஸ்யதாம் ப்ரதிதி3னம் பி4க்ஷௌஷதம் பு4ஜ்யதாம்
ஸ்வாத்3வன்னம் ந து யாச்யதாம் விதிவசாத் ப்ராப்தேந ஸந்துஷ்யதாம் ।
சீதோஷ்ணாதி3 விஷஹ்யதாம் ந து வ்ருதா2 வாக்யம் ஸமுச்சார்யதாம்
ஔதா3ஸீந்யமபீ4ப்ஸ்யதாம் ஜநக்ருபாநைஷ்டுர்யம் உத்ஸ்ருஜ்யதாம் ॥ 4

பசி என்ற வியாதி சிகிச்சை செய்யப்பட வேண்டும். (வியாதிக்கு எப்படி அளவாகவே மருந்துண்போமோ, அப்படியே பசிக்கு அளவு மீறாது உணவுண்ண வேண்டும்) (அதற்காக) பிக்ஷை என்னும் மருந்து உட்கொள்ளப்பட வேண்டும். ருசியான உணவு வேண்டப்படக் கூடாது. விதிவசமாகக் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷப்படவேண்டும். ஒன்றிலும் பற்றற்ற தடஸ்த நிலையை விரும்ப வேண்டும். பொது ஜனங்களிடம் இரக்கமோ கொடுமையோ இரண்டும் விடப்பட வேண்டும். குளிர், சூடு முதலியவை பொறுத்துக்கொள்ளப்படவேண்டும். வீண்வார்த்தை பேசப்படக்கூடாது.

ஏகாந்தே ஸுக2மாஸ்யதாம் பரதரே சேத: ஸமாதீ4யதாம்
பூர்ணாத்மா ஸுஸமீக்ஷ்யதாம் ஜக3தி3தம் தத்பா3தி4தம் த்3ருச்யதாம் ।
ப்ராக்கர்ம ப்ரவிலாப்யதாம் சிதி3பலாத் நாப்யுத்தரை: ச்லிஷ்யதாம்
ப்ராப்3த4ம் த்விஹ பு4ஜ்யதாமத2 பரப்3ரஹ்மாத்மநாஸ்தீயதாம் ॥ 5

சுகமாக ஏகாந்தத்தில் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலான (ப்ரஹ்மத்) திடம் மனம் நிலைநிறுத்தப்படவேண்டும். எங்கும் நிறைந்த ஆத்மா நன்கு நேரில் அநுபவிக்கப்பட வேண்டும். இந்த ஜகத்து அதனால் அறவே மறைந்து போனதாக உணரப்பட வேண்டும். முன்வினை, ஞான பலத்தால் அழிக்கப்பட வேண்டும். பின்வினைகளோடு ஒட்டுதல் நீக்கப்படவேண்டும். இங்கு பிராரப்தமோவெனில் அனுபவிக்கப்பட வேண்டும். அதன் பிறகு பரப்ரஹ்ம ஸ்வரூபமாக நிற்க வேண்டும்.

(முன் வினை: ஸஞ்சிதகர்மா. ப்ராரப்தம்: மேற்படி ஸஞ்சிதத்தில் நிகழ் பிறவியில் அநுபவித்துத் தீர்க்க வேண்டிய வினை. பின்வினை: வரும் பிறவியினில் பயன்படும் ஆகாமி எனும் கர்மா.)



அத்வைத பஞ்சரத்னம்

(ஜீவனும், ப்ரம்மமும் வெவ்வேறான இரண்டல்ல என்பதைக்கூறும் ரத்தினம் போன்ற ஐந்து ச்லோகங்கள் கொண்டது.)

நாஹம் தே3ஹோ நேந்த்3ரியாண்யந்தரங்கோ3
நாஹங்கார: ப்ராண வர்கோ3 ந புத்3தி4: |
தா3ராபத்ய க்ஷேத்ர வித்தாதி3 தூ3ர:
ஸாஜீ நித்ய: ப்ரத்யகா3த்மா சிவோ(அ)ஹம் || 1

நான் தேகம் அல்ல. இந்திரியங்கள் அல்ல. மனம் அல்ல. அஹங்காரம் (நாணுணர்வு) அல்ல. (ஐந்து வகையான பிராணக் கூட்டம் அல்ல. புத்தி அல்ல. (நான்) மனைவி, பிள்ளை, இருப்பிடம், பணம் முதலியவைகளிலிருந்து வெகு தூரத்தில் இருப்பவன். (இவைகளுடன் எனக்கு கொஞ்சமும் ஸம்பந்தம் கிடையாது.) நான் ஸாக்ஷி (மாத்ரமாயிருப்பவன்), என்றுமுள்ளவன், உள் விளங்கும் ஆத்மவஸ்து, சிவம்.

(அனைத்தையும் அறியும் போதிலும், அந்த அனைத்தில் எதனாலும் பாதிப்புறாத தால் ஆத்மாவானது ஸாக்ஷி எனப்படும். அமைதி, அன்பு, நன்மை, மங்களம், அத்வைதம் ஆகியன சிவம் எனப்படும்.)

ரஜ்ஜ்வக்ஜ்ஞானாத்3 - பா4தி ரஜ்ஜௌ யதா2(அ)ஹி:
ஸ்வாத்மாஜ்ஞானாதா3த்மனோ ஜீவபா3வ: |
ஆப்தோக்த்யா(அ)ஹிப்ரா4ந்தி நாசே ஸ ரஜ்ஜு:
ஜீவோ நாஹம் தேசிகோக்த்யா சிவோ (அ) ஹம் || 2

இது கயிறு என்று தெரிந்துகொள்ளாததால் எவ்வாறு கயிற்றில் பாம்பு தோன்றுகிறதோ (ஒருவன் கயிற்றைப் பாம்பாக எண்ணி விடுகிறானோ, அது போலவே) தன் ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாததால், தனக்கு ஜீவத் தன்மை (ஏற்படுத்திக்கொள்கிறான்.) நண்பனின் வார்த்தையால் (அதாவது யாரேனும் அன்பர் அது கயிறு என்று கூறுவதால்) பாம்பு என்ற பிரமை நீங்கிய உடனே, அது கயிறாகத் தோன் துகிறது. (அதுபோல்) குருவின் உபதேசத்தால் நான் ஜீவன் அல்ல, நான் சிவம் (என்று தொந்து கொண்டேன்).

ஆபா3தீத3ம் விச்வமாத்மந்யஸத்யம்
ஸத்யஜ்ஞானானந்த3 ரூபே விமோஹாத் |
நித்3ராமோஹாத் ஸ்வப்னவத் தந்ந ஸத்யம்
சுத்3த4: பூர்ணோ நித்ய ஏக: சிவோ(அ)ஹம் || 3

துக்கம் என்ற மயக்கத்தால் ஸ்வப்னம் (தோன்றுவது) போல, ஸச்சிதானந்த

ஸ்வரூபமான ஆத்ழாவில் அக்ஞானத்தால், பொய்யான இந்தப் பிரபஞ்சம்'தோன்றுகிறது; அது உண்மையல்ல. நான் பரிசுத்தமானதும், பூர்ணமானதும், அழிவற்றதும், ஒன்றானதுமான சிவம்.

நாஹம் ஜாதோ ந ப்ரவ்ருத்[3]தோ ந நஷ்டோ
தே[3]ஹஸ்யோக்தா: ப்ராக்ருதா: ஸர்வதர்மா: ।
கர்த்ருத்வாதி[3]ச்சிந்மயஸ்யாஸ்தி நாஹாங்காரஸ்யைவ
ஹ்யாதமநோ மே சிவோ(அ)ஹம் ॥ 4

நான் பிறப்பு எடுத்த (ஒரு ஜீவன் அல்ல, வளர்பவன் அல்ல, அழிப்பவன் அல்ல. ப்ருக்ருதி (மாயை) யால் ஏற்பட்ட எல்லா தர்மங்களும் தேகத்தினுடையவை (யே ஆத்மாவுடையவை அல்ல என்று) சொல்லப்பட்டிருக்கின்றன, கர்த்ருத்வம் முதலியன அஹங்காரத்தினுடையவை தானேயன்றி, ஞான ஸ்வரூபமான ஆத்மா வாக இருக்கும் எனக்கு இல்லை. நான் சிவம்.

மத்தோ நாந்யத் கிஞ்சித[3]த்ராஸ்தி விச்வம்
ஸத்யம் பா[3]ஹ்யம் வஸ்து மாயோபக்லுப்தம் ।
ஆத[3]ர்சாந்தர் - பா[4]ஸமாநஸ்ய துல்யம்,
மய்யத்[3]வைதே பா[4]தி தஸ்மாத் - சிவோ(அ)ஹம் ॥ 5

இங்கு, என்னைக்காட்டிலும் வேறான உண்மையாகப் பிரபஞ்சம் ஒன்றும் இல்லை. மாயையால் ஏற்பட்டுள்ள வெளிப்பொருள். அத்வைதமான என்னிடம் கண்ணாடிக்குள் தோன்றும் பொருளுக்கு ஸம்மாக விளங்குகிறது. ஆகையால் நான் சிவம்.



மநீஷா பஞ்சகம்

பகவத்பாதாள் காசீ க்ஷேத்திரத்துக்குச் சென்றபோது அவருடைய பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டவே விசுவநாதர் சண்டாள வேஷம் பூண்டு பகவத்பாதாள் முன்பு தோன்றினார். அவரை பகவத்பாதாள் "விலகிச் செல்" என்றார். இது கேட்டு சண்டாளன் கூறினான்:

அன்னமயாத3ன்னமயம் அத2வா சைதன்யமேவ சைதன்யாத் |
யதிவர தூ3ரீகர்தும் வாஞ்ச2ஸி கிம் ப்3ரூஹி க3ச்ச2 க3ச்சே2தி ||

அதாவது, "சிறந்த ஸந்யாஸியே, அன்னத்திலிருந்து உண்டான ஒரு சரீரத்திலிருந்து, அன்னத்திலிருந்து உண்டான இன்னொரு சரீரத்திலிருந்து விலகச் சொல்கிறீரா? அல்லது சைதன்யத்திலிருந்து சைதன்யத்தை விலகச் சொல்கிறீரா? எதை "போ போ" என்று தூரத்தில் விலக்குவதற்கு விரும்புகிறீர்; சொல்லும்" என்றான்.

விசாரித்துப் பார்த்தால் இரண்டும் தப்பு. இரண்டு சரீரங்களுக்கும் அன்னம் தான் காரணம். ஒரே காரணத்திலிருந்து உண்டான இரு வஸ்துக்கள் வெவ்வேறு ஸ்வபாவமுள்ளதாக எவ்விதம் இருக்கமுடியும்? அதனால் இதில் ஒன்றால் மற்றதற்கு எப்படித் தீட்டு வரும்? சைதன்யத்தையும் விலகச்சொல்ல முடியாது. அது எங்கும் நிறைந்த ஒன்றேயன்றி, இரண்டு சைதன்யம் என்றே கிடையாது. ஸர்வ வியாபகமான வஸ்துவை எப்படி எங்கு விலகச்சொல்ல முடியும்? உடலாகப் பார்த்தால் இரண்டும் அன்ன மயமான மாம்ஸபிண்டமே. உயிராகப் பார்த்தால் இரண்டிலும் உள்ள சைதன்யம் ஒன்றே. இவ்விதம் இருக்க ஒருவர் மற்றவரை விலக்குவது உசிதம் அல்ல என்பது தாத்பரியம்.

சைதன்ய ஸ்வரூபத்தில் வேற்றுமை இல்லை என்பதை விளக்கி மேலும் சொன்னான்:

ப்ரத்யக்3வஸ்துனி நிஸ்தரங்க3 ஸஹஜாநந்தா3வபோதா4ம்பு3 தெ4ள
விப்ரோயம் சவபசோயமித்யபி மஹான் கோ(அ)யம் விபே4தப்4ரம: |
கிம் க3ங்கா3ம்பு3நி பி3ம்பி3தே (அ)ம்ப3ரமணௌ சாண்டாளவீதி2பய: -
பூரே வா(அ)ந்தரமஸ்தி காஞ்சநக4டீம்ருத்கும்ப4யோர் வாம்ப3ரே ||

"அலையில்லாத ஸ்வபாவஸித்தமான, ஆனந்த ஞானக்கடல் ரூபமான, ஆத்மவஸ்துவில்," இவன் அந்தணன், இவன் நாய் மாமிஸம் தின்னும் சண்டாளன்" என்று, இது என்ன பெரிய வேற்றுமை பிராந்தி? கங்கா ஜலத்திலும், சேரியிலுள்ள நீர்க்குட்டையிலும் ஒரே போலப் பிரதிபிம்பித்த சூரியனிடத்திலோ, தங்கக் குடம், மண் குடம் இரண்டிலும் ஒரே போல் நிறைந்துள்ள ஆகாசத் திலோ வேற்றுமை இருக்கிறதா என்ன?"

எல்லா சரீரங்களிலும் ஒரே ஆத்மா தோன்றும் பொழுது எப்படி ஒரே சரீரத்தை இன்னொன்றிடமிருந்து விலகிப்போகும்படி சொல்லலாம் என்பதே மொத்தத்தில் கேள்வி.

உடனே ஜகதாசாரியரிடம் இப்படி ஒரு சரீரத்தை வெறும் மாமிஸ பிண்ட மாகவும், அதனுள் உள்ள ஆத்மாவை ஏக சைதன்யமாகவும் உணர்ந்துள்ள ஞானியான ஒருவன் இருக்கிறானெனில் அப்படிப்பட்ட ஞானியிடம் வர்ணாச்ரம தர்மங்களைப் பொறுத்தாமல். அவன் சண்டாளனேயாயினும் குருவாகக் கொள்ள வேண்டும் என்றும், தாமே அப்படிக் கொள்வதாகவும், ஐந்து ச்லோகங்களில் எடுத்தியம்புகிறார். அதுவே "மநீஷா பஞ்சகம்" - "மநீஷா" என்றால் உறுதியான கொள்கை. (ஞானிகளுக்கு வர்ணாச்ரமமில்லை என்று இங்கு ஆசார்யாள் கூறுவதை வியவஹாரதசையிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் வர்ணாச்ரம தர்மம் வேண்டாமென பொருள் கொள்வது சற்றும் தகாது.)

ஜா3க்ரத் ஸ்வப்ந ஸுஷுப்திஷு ஸ்பு2டதரா யா ஸம்விது5ஜ்ஜ்ரும்ப4தே
யா ப்3ரஹ்மாதி பிபீலிகாந்ததனுஷு ப்ரோதா ஜக3த்ஸாக்ஷிணீ |
ஸைவாஹம் ந ச த்3ருச்யவஸ்த்விதி த்3ருட4ப்ரஜ்ஞாபி யஸ்யாஸ்தி சேத்
சாண்டா3ளோஸ்து ஸ து த்3விஜோஸ்து கு3ருரித்யேஷா மநீஷா மம || 1

"நனவு, கனவு, தூக்கம் இம்மூன்று நிலைகளிலும், எந்த சைதன்யம் மிகத் தெளிவாக விளங்குகிறதோ, உலகை காண்கிற (அறிகிற) எது ப்ரஹ்மா முதல் எறும்புவரை உள்ள (ஸகலப் பிராணிகளின் சரீரங்களில்) ஊடுருவியிருக்கிறதோ, அதுதான் நான்; அறியப்படும் வஸ்து அல்ல. ஆதார அறிவேதான்; அறியப்படுபவன் அல்ல)" என்று எவனொருவனுக்கு உறுதியான பிரக்ஞை இருக்கு மானாலும், அப்படிப்பட்டவன் சண்டாளனாக இருக்கட்டும் அல்லது பிராமணனாயிருக்கட்டும் அவன் (என்) குரு என்ற இதுவே என்னுடைய உறுதியான கொள்கை.

ப்3ரஹ்மைவாஹமித3ம் ஜக3ச்ச ஸகலம் சின்மாத்ரவிஸ்தாரிதம்
ஸர்வம் சைத்த3வித்3யயா த்ரிகு3ணயா ஸேசம் மயா கல்பிதம் |
இத்த2ம் யஸ்ய த்3ருடா மதி: ஸுக2தரே நித்யே பரே நிர்மலே
சாண்டா2ளோஸ்து ஸ து த்3விஜோஸ்து கு3ருரித்யேஷா மநீஷா மம || 2

"நான் ப்ரஹ்மமே; இந்த உலகம் எல்லாம் ஞானமாத்ரமான ப்ரஹ்மத்தினால் விரிவை அடைந்திருக்கிறது. (ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும்) முக்குண வடிவமான, அவித்யை (என்னும் சாதனம்) கொண்டு ஈசுவரனுடன் கூடிய ஈதனைத்துமே என்னால் ஆரோபம் செய்யப்பட்டிருக்கிறது. (ஆத்மா என்ற ஆதாரத்தின்மேல் கல்பிக்கப்பட்டுள்ளது) என்று இவ்வாறு எவனுக்குப் பேரானந்த ஸ்வரூபமாயும் அழிவற்றதாயும், தோஷமற்றதாயும் உள்ள பா (ப்ரஹ்ம)த்தில் திடமான புத்தி இருக்கிறதோ, அவன் சண்டாளனாக இருக்கட்டும் அல்லது பிராமணனாக இருக்கட்டும் (அவனே) குரு என்ற இது என்னுடைய தேர்ந்த அபிப்ராயம்.

சச்வந்நச்வரமேவ விச்வமகி2லம் நிச்சித்ய வாசா கு3ரோ:
நித்யம் ப்3ரஹ்ம நிரந்தரம் விம்ருசதாம் நிர்வ்யாஜ சாந்தாத்மநாம் ।
பூ4தம் பா4வி ச து3ஷ்க்ருதம் ப்ரத3ஹதாம் ஸம்வின்மயே பாவகே
ப்ராரப்3தா4ய ஸமர்பிதம் ஸ்வவபுரித்யேஷா மநீஷா மம ॥ 3

உலக வஸ்துக்கள் யாவும் எப்போதும் அழியக்கூடியதுதான் என்பதை குருவின் உபதேசத்தால் தீர்மானித்து, அழிவற்றதான ப்ரஹ்மத்தை இடை விடாமல் தியானிப்பவர்களும், கபடமில்லாத சாந்த உள்ளம் படைத்தவர்களும், ஸஞ்சித மாயும், ஆகாமியாயுமுள்ள பாபத்தை, ஞான மயமான அக்னியில் பொசுக்குகின்றவர்களுமான ஞானிகளுடைய சரீரம் பிராரப்தானுபவத்திற்காக கொடுக்கப்பட்டதாக ஆகிறது என்ற இது என்னுடைய தீர்ந்த அபிப்ராயம்.

(முற்பிறவிக் கர்மங்கள் ஸஞ்சிதம் எனப்படும். அதில் இந்த ஜன்மத்தில் அநுபவித்தேயாக வேண்டுமென்பது பிராப்தம். மீதமுள்ள ஸஞ்சித முன்வினையும், இப்பிறவியில் செய்யும் வினையும், இனி வரவிருக்கும் பிறவிகளில் பலன் தருவதற் காக "ஆகாமி" என்ற பெயரில் சேரும். ஞானம் எய்தி ஒருவன் தனது ஜீவபாவத்தையே போக்கிக்கொண்டவுடன் ஸஞ்சித, ஆகாமி கர்மங்கள் நசிக்க, ப்ராப்தம் தீரும்வரையில் அவன் உலகில் ஜீவமுக்தனாக வாழ்கிறான்.)

யா திர்யங்நரதே3வதாபி4ரஹமித்யந்த: ஸ்பு2டா க்3ருஹ்யதே
யத்பா4ஸா ஹ்ருத2யாக்ஷதே3 ஹவிஷயா பா4ந்தி ஸ்வதோ(அ)சேதநா: ।
தாம் பா4ஸ்யை: பிஹிதார் கமண்ட3லநிபா4ம் ஸ்பூ2ர்திம் ஸதா3 பா4வயன்
யோகீ3 நிர்வ்ருதமாநஸ: ஸ கு3ருரித்யேஷா மநீஷா மம ॥ 4

எந்த சைதன்யம் மிருகம், மனிதன், தேவர் முதலிய எல்லா ஜீவன்களாலும் "நான்" என்று உள்ளே விளக்கமாக உணரப்படுகிறதோ, எதன் பிரகாசத்தால் ஸ்வயம் ஜடமான மனம், இந்திரியம், தேஹம், விஷயம் ஆகியவைகள் விளக்க முறுகின்றன வோ, பிரகாசிக்கப்படும் மேகங்களால் மறைக்கப்பட்ட சூரிய மண்டலத்திற்கொப்பான அந்த உள் ளொளியை, எப்பொழுதும் தியானம் செய்து கொண்டு யோகியானவன் நிறைந்த மனிதனாக ஆகிறான். அப்படிப்பட்டவன் குரு என்ற இது என்னுடைய உறுதியான அபிப்பிராயம்.

யத்ஸௌக்2யாம்பு3 தி4லேசலேசத இமே சக்ராத3யோ நிர்வ்ருதா:
யச்சித்தே நிதராம் ப்ரசாந்தகலனே லப்3த்4வா முநிர் நிர்வருத: ।
யஸ்மிந்நித்யஸுகா2ம்பு3தெ4ள க3ளித்தீ4ர் ப்3ரஹ்மைவ ந ப்3ரஹ்மவித்
ய: கச்சித் ஸ ஸுரேந்த்3ரவந்தி3தபதோ3 நூநம் மநீஷா மம ॥ 5

எந்த ஆத்மாநந்தம் என்ற கடலிலுள்ள சிறிய திவலை யினுடைய திவலையினால் (தான்) எப்பேர்ப்பட்ட இந்திராதியரும் இன்புற்றவர்களாக இருக் கின்றனரோ, எதை எண்ண ஓட்டம் நன்கு அடங்கிய சித்தத்தில் அடைந்து முனிவர்கள் ஆனந்தமாக இருக்கிறார்களோ, எந்த அழிவற்ற ஆனந்தக் கடலுள் நழுவிய மனத்தினன்'ப்ரஹ்மத்தை அறிந்தவன்'மட்டுமாயின்றி, ப்ரஹ்மமாகவே

உள்ளானோ, அவன் யாராயிருந்தாலும் தேவேந்திரனாலும் பூஜிக்கப்பட்ட பாதங்களை உடையவன். (இது) என்னுடைய நிச்சயமான அபிப்ராயம்.



மாயா பஞ்சகம்

(மாயை குறித்து ஐந்து ச்லோகங்கள்)

நிருபம நித்ய நிரம்சகே(அ)ப்யக2ண்டே3
மயி சிதி ஸர்வ விகல்பநாதி3சூந்யே ।
க4டயதி ஜகதீ3ச ஜீவ பே4த3ம்
த்வக4டித - கடநா - படீயஸீ மாயா ॥ 1

சேர முடியாததைச் சேர்த்துவைப்பதில் மிகத் திறமையுள்ள மாயையானது ஒப்பற்றதும், அழிவற்றதும், கூறுபோட முடியாததும், பிரிவு அற்றதும், வேற்றுமை முதலிய எதுவும் இல்லாததும், ஞான ஸ்வரூபமான என்னிடமும் உலகம் - ஜீவன் - ஈசுவரன் என்ற வேற்றுமையைச் சேர்த்துவைக்கிறது.

ச்ருதிசத நிக3மாந்த சோத4காந
பயஹஹ த4நாதி3: நிதர்சநேந ஸத்3ய: ।
கலுஷயதி சதுஷ்பதா3 த்3யபி4ந்நான்
அக4டித - க4டநா - படீயஸீ மாயா ॥ 2

சேரமுடியாததைச் சேர்த்துவைப்பதில் மிகத் திறமையுள்ள மாயையானது நூற்றுக்கணக்கான ச்ருதிகளையும், உபநிஷத்துக்களையும் பரிசோதித்துப் பார்ப்பவர் களையும், பணம் முதலானவைகளைக் காட்டுவதனால் உடனேயே நாலுகால் பிராணிகளைக் காட்டிலும் விசேஷம் இல்லாதவர்களாக மாசுபடுத்துகிறது. ஆச்சர்யம்!

ஸுக2 சித3க3ண்ட3 விபோ3த4 மத்3விதீயம்
வியத3நிலாதி3 விநிர்மிதே நியோஜ்ய ।
ப்4ரமயதி ப4வஸாக3ரே நிதாந்தம்
தவக4டித க4டநா - படீயஸீ மாயா ॥ 3

அகண்ட ஆனந்த சைதன்யம் போன்ற ஸ்வரூபமானதும், இரண்டாவது வலது இல்லாததுமானதை (ஆத்மாவை) ஆகாசம், வாயு முதலியவைகளால் உண்டுபண்ணப்பட்ட (பாஞ்சபௌதிகமான சரீரத்)தில் செலுத்தி இயக சோத துவைப்பதில் திறமையுள்ள மாயை, ஸம்ஸார ஸாகரத்தில் மிகவும் சுழற்றுகிறது.

அபக3த கு3ண வர்ண ஜாதி பே4தே3
ஸுக2சிதி விப்ர விடா3த்3யஹங்க்ருதிம் ச ।
ஸ்பு2டயதி ஸுத தா3ர கே3ஹ மோஹம்
த்வக4டித க4டநா படீயஸீ மாயா ॥ 4

குணம், வர்ணம், ஜாதி இவைகளின் வேற்றுமைகள் அற்றதும், ஆனந்த சைதன்ய ரூபமுமான தில் (ஆத்மாவில்) பிராமணன், வைச்யன் முதலான அஹங்

காரத்தையும், பிள்ளை, மனைவி, வீடு இவைகளில் எனது என்ற மயக்கத்தையும், சேராததைச் சேர்ப்பதில் திறமையுள்ள மாயை அழுத்தமாகத் தோற்றுவிக்கிறது.

விதி4 ஹரி ஹர பே4த3மப்யக3ண்டே3
ப3த விரசய்ய பு3தா4நபி ப்ரகாமம் ।
ப்4ரமயதி ஹரி ஹர விபே4த பா4வான்
அக4டிதக4டநா படீயஸீ மாயா ॥ 5

சேரமுடியாததைச் சேர்த்துவைப்பதில் திறமையுள்ள மாயையானது, பிரிக்கமுடியாத (ப்ரஹ்மத்) திலும் ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்ற வேற்றுமையை ஏற்படுத்திப் படித்தவர்களையும், விஷ்ணுவிடமும், சிவனிடமும் வேற்றுமை உணர்ச்சி உள்ளவர்களாக மிகவும் மயக்குவிக்கிறது.



யதிபஞ்சகம்

(ஸந்நியாஸிகளின் மஹாபாக்யத்தை வியந்து ஐந்து சுலோகங்களால் விளக்குகிறது இந்தப் பிரகரணம்.)

வேதா³ந்தவாக்யேஷு ஸதா³ ரமந்தோ
பிக்ஷாந்தமாத்ரேண ச துஷ்டிமந்த: |
விசோகமந்த: கரணே ஸ்மரந்த:
கௌபீநவந்த: க²லு பா⁴க்³யவந்த: || 1

உபநிஷத்துக்களிலுள்ள வாக்யங்களில் எப்பொழுதும் ஆனந்தம் அடைபவர்களும், பிக்ஷையில் கிடைக்கும் ஆஹாரத்தினாலேயே ஸந்தோஷப்படுபவர்களும், சோகமற்ற (தாக உபநிஷத்தில் கூறப்பட்ட ஆத்ம) வஸ்துவையே உள்ளத்தில் நினைப்பவர்களுமான கௌபீனவான்கள் (துறவிகள்) அன்றோ பாக்யசாலிகள்?

மூலம் தரோ: கேவலமாச்ரயந்த:
பாணித்³வயம் போ⁴க்துமமத்ரயந்த: |
கந்தா²தமிவ ஸ்ரீமபி குத்ஸயந்த:
கௌபீநவந்த: க²லு பா⁴க்³யவந்த: || 2

மரத்தினடியை மட்டும் இருப்பிடமாகக் கொண்டவர்களும், இரு கைகளையும் சாப்பிடுவதற்குப் பாத்திரமாகக் கொண்டவர்களும், கந்தையைப் போல செல்வத்தையும் வெறுக்கிறவர்களுமான கௌபீன தாரிகளன்றோ பாக்யசாலிகள்?

தே³ஹாதிபா⁴வம் பரிமார்ஜயந்த:
ஆத்மாநமாத்மயவலோகயந்த: |
நாந்தர் ந மத்⁴யம் ந ப³ஹி: ஸ்மரந்த:
கௌபீநவந்த: க²லு பா⁴க்ய³வந்த: || 3

சரீரம் முதலியவைகளில் உணர்ச்சியை முழுதும் துடைத்து (போக்கி)க் கொண்டவர்களும், மனத்தில் ஆத்ம வஸ்துவைப் பார்க்கின்றவர்களும், உள்ளேயும், நடுவேயும், வெளியிலும் (வேறெதுவும்) நினைக்காதவர்களுமான கௌபீன தாரியரன்றோ பாக்யசாலிகள்?

ஸ்வாநந்த³-பா⁴வே பரிதுஷ்டிமந்த:
ஸம்சாந்த ஸர்வேந்த்³ரிய த்³ருஷ்டிமந்த: |
அஹர் நிசம் ப்³ரஹ்மணி யே ரமந்த:
கௌபீநவந்த: க²லு பா⁴க்³யவந்த: || 4

எவர்கள் ஆத்மாவான தன தேயான ஆனந்த ஸ்வரூபத்தில் நன்னிறைவைப் பெற்றவராகவும், எல்லா இந்திரியங்களின் நுகர்ச்சியும் அடங்கியவர்களாகவும்,

இரவும் பகலும் ப்ரஹ்மத்திலேயே களிப்புறுகின்றவர்களுமாக (இருக்கின்றனரோ, அந்த) கௌபீன தாரியரேயன்றோ பாக்யசாலிகள்?

பஞ்சாக்ஷரம் பா4வநமுச்சரந்த:
பதிம் பசூநாம் ஹ்ருதி3 பாவயந்த: ।
பி4க்ஷாசநா தி3க்ஷு பரிப்4ரமந்த:
கௌபீநவந்த: க2லு பா4க்3யவந்த: ॥ 5

பரிசுத்தியைக் கொடுக்கும் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக்கொண்டும், மனத்தில் பசுபதியான பரமேசுவரனை தியானம் செய்துக்கொண்டும், பிக்ஷை எடுத்துக் கிடைக்கும் அன்னத்தை உண்பவர்களாய், திசைகள் எங்கும் சுற்றிக் கொண்டும் இருக்கிற கோவணாண்டிகளல்லவா பாக்யசாலிகள்?



குருபாதுகா பஞ்சகம்

(ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கராசார்யர் அவர்கள் நர்மதா நதிக்கரையில் தம்முடைய குருவான ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரைத் தரிசித்த பொழுது அந்த ஆச்ரமத்தின் வாயிலில் குருவின் திவ்ய பாதுகைகளைக் கண்டவுடன் இந்த ச்லோகங்கள் ஸ்ரீ பகவத்பாதரின் வாக்கிலிருந்து உதித்தன.)

ஜக^{3}ஜ்ஜநிஸ்தே^{2}ம - லயாலயாப்^{4}யாம்
அக^{3}ண்ய - புண்யோத^{3}ய - பா^{4}விதாப்^{4}யாம் ।
த்ரயீசிரோஜாத - நிவே^{3}திதாப்^{4}யாம்
நமோ நம: ஸ்ரீகு^{3}ருபாது^{3}காப்^{4}யாம் ॥ 1

ஸகல உலகங்களின் உற்பத்தி, ஸ்திதி, லயம் இவற்றுக்குக் காரணங்க ளாயும், எல்லையில்லாமல் இருக்கிற புண்ணிய பரிபாகத்தின் மகிமையினால் அடையக்கூடியனவாயும், வேதங்களின் சிரோபூதமான உபநிஷத்துக்களால் மட்டும் அறியக்கூடியனவுமான சத்சார்யருடைய பாதுகைகளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

விபத்தமஸ்தோம - விகர்த்தநாப்^{4}யாம்
விசிஷ்ட - ஸம்பத்தி - விவர்த^{4}நாப்^{4}யாம் ।
நமஜ்ஜநாசேஷ - விசேஷதா^{3}ப்^{4}யாம்
நமோ நம: ஸ்ரீகு^{3}ருபாது^{3}காப்^{4}யாம் ॥ 2

ஆபத்துக்களாகிற இருள் கூட்டங்களைப் போக்குவதில் சூரியனாகவும், உயர்ந்த ஐச்வர்யங்களை மேன்மேலும் விருத்திபண்ணிக் கொடுக்கக்கூடியனவாயும் வணங்குகிற ஜனங்களுக்கு, எல்லை இல்லாத ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடியவையுமான ஸ்ரீ ஆச்சார்யாருடைய பாதுகைகளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

ஸமஸ்த^{3} - துஸ்தர்க்க - கலங்க - பங்கா -
பநோத^{3}ந - ப்ரௌட^{4} - ஜலாசயாப்^{4}யாம் ।
நிராச்ரயாப்^{4}யாம் நி^{2}கி^{2}லாச்ரயாப்^{4}யாம்
நமோ நம: ஸ்ரீகு^{3}ருபாது^{3}காப்^{4}யாம் ॥ 3

பலவாறான போலித் தர்க்கத்தினால் கற்பிக்கப்பட்ட தோஷங்களாகிற சேற்றைப் போக்கடிப்பதில் பெரிய ஜலப்பெருக்காயும், மற்றொன்றைத் தாம் ஆச்ரயிக்காமலும், மற்றவர்களாலே ஆச்ரயிக்கப்பெறுவனவாகவும் இருக்கிற ஸ்ரீ ஆச்சார்யாருடைய பாதுகைகளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

தாபத்ரயாதி3த்ய - கரார்தி3தாநாம்
சா2யாமயீப்4யாம் அதிசீதலாப்4யாம் ।
ஆபந்ந - ஸம்ரக்ஷண3 - தீக்ஷிதாப்4யாம்
நமோ நம: ஸ்ரீகு3ருபாது3காப்4யாம் ॥ 4

ஆத்யாத்மிகம்: ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்று சொல்லக்கூடிய தாபத்ரயங்களாகிற கொடிய சூரிய கிரணங்களால் தகிக்கப்படுகிற ஸர்வ ஜீவராசி களுக்கும், மிகவும் குளிர்ந்த நிழலைக் கொடுப்பவையாயும், சரணமடைந்தவர்களை ஸம்ரக்ஷிப்பதையே முக்கிய நோக்கத்துடன் கூடியவையுமான ஸ்ரீ ஆச்சார்யா ருடைய பாதுகைகளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

யதோ கி3ரோ(அ)ப்ராப்ய தி4யா ஸமஸ்தா
ஹ்ரியா நிவ்ருத்தா: ஸமமேவ நித்யா: ।
தாப்4யாமஜே3சாச்யுத - பா4விதாப்4யாம்
நமோ நம: ஸ்ரீகு3ருபாது3காப்4யாம் ॥ 5

ஸகல வேதராசிகளும், தம்முடைய புத்தி, யுக்திகளோடு கூடி, எவற்றின் மகிமையை வர்ணிக்க ஆரம்பித்தும் இயலாமல், லஜ்ஜையோடு திரும்பு கின்றனவோ, பிரம்மா, விஷ்ணு, ருத்திரர்களால் எப்பொழுதும் கொண்டாடப பெற்றவையுமான ஸ்ரீ ஆச்சார்ய பாதுகைகளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

யே பாது3கா - பஞ்சகமாத3ரேண
பட2ந்தி நித்யம் ப்ரயதா: ப்ரபா4தே ।
தேஷாம் க்3ருஹே நித்யநிவாஸசீலா
ஸ்ரீதே3சிகேந்த்3ரஸ்ய கடாக்ஷலக்ஷ்மீ: ॥ 6

எந்தப் பக்தர்கள் இந்தப் பாதுகா பஞ்சகத்தைத் ஆதராதிசயத்துடனும் பரிசுத்தர்களாயும் பிரதிதினம் காலையில் பாராயணம் செய்கிறார்களோ, அவர்க ளுடைய வீட்டில் ஸ்ரீ பரமாசார்யர்களுடைய கருணாவிலாசம் என்ற லக்ஷ்மீ நித்ய வாஸம் செய்கிறாள்.



நிர்வாணஷட்கம்

(விளக்கு அணைக்கப்படுவதுபோல ஜீவபாவம் அறவே அழிக்கப்பட்ட விடுதலை நிலையே 'நிர்வாணம்' எனப்படும். அதைக் குறித்து ஆறு ச்லோகங்கள் கொண்டது இப் ப்ரகிரணம்.)

மனோபு[3]த்[3]த்[4]யஹங்கார சித்தானி நாஹம்
ந கர்ணம் ந ஜிஹ்வா ந ச க்[4]ராண நேத்ரே ।
ந ச வ்யோம பூ[4]மிர் ந தேஜோ ந வாயு:
சிதா[3]நந்த[3]ரூப: சிவோ(அ)ஹம் சிவோ(அ)ஹம் ॥ 1

நான் மனஸ், புத்தி, அஹங்காரம், சித்தம் என்பவைகள் அல்ல; காதும் அல்ல, நாக்கும் அல்ல, மூக்கும் அல்ல, கண்ணும் அல்ல. (நான்) ஆகாசமும் அல்ல, பூமியும் அல்ல, தேஜஸ்ஸும் அல்ல, வாயுவும் அல்ல. ஞானத்தையும் ஆனந்தத்தையும் ஸ்வரூபமாயுடைய சிவமே (மங்கள ரூபியான பரமாத்மாவே) நான்.

ந ச ப்ராண ஸம்ஜ்ஞோ நவை பஞ்ச வாயுர் -
நவா ஸப்த தா[4]துர் நவா பஞ்ச கோச: ।
ந வாக் பாணி பாதௌ[3] ந சோபஸ்த பாயூ
சிதா[3]நந்த[4]ரூப: சிவோ(அ)ஹம் சிவோ(அ)ஹம் ॥ 2

நான் பிராணன் என்ற பெயருள்ளதும் அல்ல, ஐந்துவித வாயுவும் அல்ல, ஏழுவித தாதுக்களும் அல்ல, ஐந்து கோசங்களும் அல்ல, வாக்கு அல்ல, கையும் காலும் அல்ல, கருக்குழி, எருக்குழிகளும் அல்ல. ஞானானந்த ஸ்வரூபனான சிவமே நான், சிவமே நான்.

ந மே த்[3]வேஷ ராகௌ[3] ந மே லோப[4]மோஹௌ
மதோ[3] நைவ மே நைவ மாத்ஸர்ய பா[4]வ: ।
ந த[4]ர்மோ ந சார்தோ[2] ந காமோ ந மோக்ஷ:
சிதா[3]நந்த[3]ரூப. சிவோ(அ)ஹம் சிவோ(அ)ஹம் ॥ 3

எனக்கு வெறுப்பும் - விருப்பமும் கிடையாது. எனக்கு பேராசையும் - மதி மயக்கமும் கிடையாது. எனக்கு இறுமாப்பு கிடையவே கிடையாது. பொறாமையும் கிடையவே கிடையாது. தர்மமும், அர்த்தமும், காமமும் மோக்ஷமும் எதுவும் (எனக்குக்) கிடையாது. ஞானானந்த ரூபியான சிவமே நான், சிவமே நான்.

ந புண்யம் ந பாபம் ந ஸௌக்[2]யம் ந து:[3]கம்
ந மந்த்ரோ ந தீர்த[2]ம் ந வேதா[3] ந யஜ்ஞா: ।
அஹம் போ[4]ஜனம் நைவ போ[4]ஜ்யம் ந போ[4]க்தா
சிதா[3]நந்த[3]ரூப: சிவோ(அ)ஹம் சிவோ(அ)ஹம் ॥ 4

(எனக்கு)ப் புண்ணியம் கிடையாது, பாபம் கிடையாது, சுகம் கிடையாது, துக்கம் கிடையாது, மந்திரம் (ஜபம் முதலானது) கிடையாது. வேதங்கள் (வேதாத்யயனம்) கிடையாது. யக்ஞுங்கள் (வைதிக யாகாதி கர்மானுஷ்டானம்) கிடையாது. நான் போகப்பொருள் இல்லவே இல்லை. போகமாக அனுபவிக்கப் படுபவனும் இல்லை, போகம் அனுபவிக்கிறவனும் இல்லை. ஞானானந்த ஸ்வரூபரான சிவமே நான், சிவமே நான்.

ந ம்ருத்யுர் ந சங்கா ந மே ஜாதி பே^{4}த:
பிதா நைவ மே நைவ மாதா ச ஜன்ம |
ந ப^{3}ந்து^{4}ர் ந மித்ரம் கு^{3}ருர் நைவ சிஷ்ய:
சிதா^{3}நந்த^{3}ரூப: சிவோ(அ)ஹம் சிவோ(அ)ஹம் || 5

எனக்கு மரணம் கிடையாது, ஸந்தேஹம் கிடையாது, ஜாதி வேற்றுமை கிடையாது. தந்தையும் - தாயும் கிடையவே கிடையாது. பிறவியும் கிடையாது, உறவின ரும் கிடையாது, ஸ்நேகிதன் கிடையாது. குரு கிடையாது, சிஷ்யனும் கிடையவே கிடையாது. ஞானானந்த ஸ்வரூபியான சிவமே நான், சிவமே நான்.

அஹம் நிர்விகல்போ நிராகார ரூபோ
விபு^{4}த்வாச்ச ஸர்வத்ர ஸர்வேந்த்^{3}ரியாணாம் |
ந சாஸங்க^{3}தம் நைவ முக்திர் ந ப^{3}ந்த^4:
சிதா^{3}நந்த^{3}ரூப: சிவோ(அ)ஹம் சிவோ(அ)ஹம் || 6

நான் நிர்விகல்பன் (வேறாக எதுவுமில்லாதவன்) எல்லா பதார்த்தங்களிலும் வியாபித்திருப்பதினாலேயே (நான் தனியொரு) உருவமற்றவன். எல்லா இந்திரியங் களுடன் (வாஸ்தவத்தில் ஸம்பந்தப்படாமல் இருந்தபோதிலும்) சேராமலிருக்கும் வஸ்துவும் இல்லை, (எனக்கு) மோக்ஷ மென்பது கிடையாது. பந்தமென்பதும் கிடையாது. ஞானானந்த ஸ்வரூபியான சிவமே நான், சிவமே நான்.



தன்யாஷ்டகம்

(தன்யன் - அதாவது நிரந்தரச் செல்வத்தைப் பெற்ற பாக்யசாலி - யார் என்பது பற்றிய எட்டுச் சுலோகங்கள் கொண்டது.)

தத் ஜ்ஞானம் ப்ரசமகரம் யதி[3]ந்த்[3]ரியாணாம்
தத் ஜ்ஞேயம் யது[3]பநிஷத்ஸு நிச்சிதார்த[2]ம்
தே த[4]ந்யா பு[4]வி பரமார்த[2]நிச்சிதேஹா:
சேஷாஸ்து ப[4]ரம நிலயே பரிப்[4]ரமந்தி || 1

எது புலன்களின் ஆழ்ந்த அடக்கத்தைக் கொடுக்கிறதோ அதுவே ஞானம். எது வேதாந்தங்களில் (இறுதி ஸத்யமாகித்) தீர்மானிக்கப்பட்ட பொருளோ அதுவே அறியத் தகுந்தது. பூமியில் (எவர்கள்) உயர்ந்த ஸத்யப் பொருளில் உறுதியான முயற்சி உள்ளவர்களோ, அவர்களே தன்யர்கள். மற்றவர்களோ வெனில் ப்ராந்தியைத் தரும் இடத்தில் சுற்றிற்சுற்றித் திரிபவரே.

ஆதெ[3]ள விஜித்ய விஷயான் மத[3]மோஹராக[3]
த்[3]வேஷாதி[3] சத்ரு - க[3]ணமாஹ்ருத - யோக[3] - ராஜ்யா: |
ஜ்ஞாத்வா மதம் ஸமனுபூ[4]ய பராத்மவித்[3]யா -
காந்தா ஸுக[2]ம் வனக்[3]ஹே விசரந்தி த[4]ன்யா: || 2

முதலில் சப்தம் (ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்) முதலான விஷயங்களையும் கர்வம், அவிவேகம், ஆசை, வெறுப்பு முதலான எதிரிக்கூட்டத்தையும் ஜயித்து, (மனோநிக்ரஹம் என்ற) யோக ராஜ்யத்தை ஸ்வாதீனம் செய்துகொண்டு, (உபநிஷத்) ஸித்தாந்தத்தை அறிந்து, பரமாத்ம ஞானம் என்ற பத்னியிடமிருந்து கிடைக்கும் சுகத்தை நன்கு அநுபவிக்கும் தன்யர்கள், காடு எனும் கிருஹத்தில் ஸஞ்சரிக்கின்றனர். (ஸந்நியாஸாச்ரமத்தையே ஒரு க்ருஹஸ்தாச்ரமமாக வர்ணிக்கிறார்.)

த்யக்த்வா க்[3]ருஹே ரதிமதோ[4]க[3]தி ஹேதுபூ[4]தாம்
ஆத்மேச்ச[2]யோபநிஷத[3]ர்த[2]ரஸம் பிப[3]ந்த: |
வீத ஸ்ப்ருஹா விஷய போ[4]க[3]பதே[3] விரக்தா:
த[4]ந்யாச்சரந்தி விஜநேஷு விமுக்தஸங்கா[3]: || 3

தாழ்ந்த நிலையை அடைவதற்குக் காரணமாக உள்ள வீட்டில் ஆசையை விட்டுவிட்டு, ஆத்மஸ்வரூபத்தை அறிவதில் ஆசையால், உபநிஷத்துக்களில் கூறப்பட்ட பொருளின் ரஸத்தைப் பானம் செய்து கொண்டு, விஷயங்களை அநுபவிக்கும் நிலையில் பற்று நீங்கியவர்களாய், வைராக்யமுள்ளவர்களாக தன்யர்கள் ஜன ஸஞ்சாரம் இல்லாத இடத்தில் பற்றற்றவர்களாய் ஸஞ்சாரம் செய்கின்றனர்.

த்யக்த்வா மமாஹமிதி ப³ந்த⁴கரே பதே³ த்³வே
மாநாவமான ஸத்³ருசா: ஸமத³ர்சிநச்ச ।
கர்தாரமந்யமவக³ம்ய தத³ர்பிதானி
குர்வந்தி கர்ம பரிபாக ப²லானி த⁴ன்யா: ॥ 4

பந்தத்தை உண்டுபண்ணுகிற 'என்னுடைய' 'நான்' என்ற இரண்டு நிலைகளையும் விட்டு மதிப்பு, அவமதிப்பு இரண்டிலும் ஸமமாக இருப்பவர்களும், யாவற்றையும் சமமான ப்ரஹ்மமாகப் பார்ப்பவர்களுமான தன்யர்கள், சிருஷ்டி செய்கின்றவரும் (பிரபஞ்சத்தைக் காட்டிலும்) வேறாக இருக்கிறவருமான வரை (ஈசனை) அறிந்து கர்மா பழுத்து ஏற்படும் பயன்களை அவரிடமே ஸமர்ப்பணம் செய்கிறார்கள்.

த்யக்த்வைஷணா - த்ரய - மவேக்ஷித - மோக்ஷ மார்கா³:
பை⁴க்ஷாம்ருதேன பரிகல்பித - தே³ஹ - யாத்ரா: ।
ஜ்யோதி: பராத் - பரதரம் பரமாத்ம ஸம்ஜ்ஞ ம்
த⁴ன்யா த்³விஜா ரஹஸி ஹ்ருத்யவலோகயந்தி ॥ 5

மூன்று பற்றுக்களையும், (தாரைஷணா (மனைவியிடம் பற்று) புத்ரைஷணா (மக்களிடம் பற்று) வித்தைஷணா (பணத்தில் பற்று விட்டு, மோக்ஷம் அடையும் வழியைக்கண்டவர்களான, பிக்ஷை எடுப்பதில் கிடைக்கும் அமிருதத் திற்கொப்பான அன்னத்தால், தேஹ ஜீவனத்தை நடத்துகின்றவர்களாய், தன்யர்களான இரு பிறப்பாளர்கள், ரஹஸ்யத்தில், ஹிரு தயத்தில், சிற நத வற்றைக் காட்டிலும் மிகச்சிறந்த தான, பரமாத்மா என்று பெயருள்ள பிரகாசத் தைப் பார்க்கிறார்கள்.

நாஸத் ந ஸத் ந ஸதஸத் ந மஹத் ந சாணு
ந ஸ்த்ரீ புமான் ந ச நபும்ஸகமேகபீ³ஜம் ।
யைர் ப்³ரஹ்ம தத்ஸம - முபாஸித - மேகசித்தைர்
த⁴ன்யா விரேஜுரிதரே ப⁴வபாச ப³த்³தா⁴: ॥ 6

ப்ரஹ்மம் அஸத்து (இல்லாதது) இல்லை. ஸத்து (இருப்பது) இல்லை ஸததாகவும், அஸத்தாகவும் கலந்து இல்லை. பெரியதுமில்லை; சிறியதுமில்லை. பெண் அல்ல; ஆணும் அல்ல; அலியும் அல்ல. ஒரே காரணப்பொருளும் அனத்துக்கும் பொதுவானதுமான அந்த (ப்ரஹ்மம்) ஒன்றிலேயே மனம் நிலைத் துள்ள எவர்களால் த்யானம் செய்யப்படுகிறதோ (அவர்கள்) பாக்யசாலிகளாக விளங்குகிறார்கள். மற்றவர்கள் பிறப்பு (இறப்பு) என்ற பாசத்தால் கட்டப் பட்டவர்கள்.

அஜ்ஞான - பங்க - பரிமக்³நமபேத - ஸாரம்
து: கா²லயம் மரண - ஜன்ம - ஜராவஸக்தம்
ஸம்ஸார - ப³ந்த⁴ன - மநித்யமவேக்ஷ்ய த⁴ன்யா:
ஜ்ஞானாஸிநா தத³வசீர்ய விநிச்சயந்தி ॥ 7

அஞ்ஞானம் என்ற சேற்றில் அமிழ்ந்தியதும், ஸாரமற்றதும், துக்கங்களுக்கு இருப்பிடமும், இறப்பு - பிறப்பு - மூப்பு இவைகளுடன் கூடியதும், அழியக்

கூடியதுமான ஸம்ஸாரமென்ற பந்தத்தை ஆராய்ந்து தன்யர்கள் ஞானம் என்ற கத்தியால் அதை சிதற அடித்து (அறுத்து) (ப்ரஹ்மத்தில்) உறுதி பெறுகிறார்கள்.

சாந்தைரநந்ய மதிபி⁴ர் மது⁴ர ஸ்வபா⁴வை:
ஏகத்வ நிச்சித மநோபி⁴ரபேத மோஹை: |
ஸாகம் வநேஷ விதி³தாத்ம பக³ஸ்வரூபை:
தத்³வஸ்து ஸம்யக³நிசம் விம்ருசந்தி த⁴ன்யா: || 8

சாந்தர்களும்; (மனத்தை அடக்கினவர்களும்) வேறு ஒன்றிலும் மனதைச் செலுத்தாதவர்களும், இனிமையான ஸ்வபாவம் உள்ளவர்களும், ஒரே தத்வத்தில் உறுதி கொண்ட மனம் உள்ளவர்களும், மோஹம் விலகியவர்களும், ஆத்ம நிலையின் ஸ்வரூபத்தை அறிந்தவர்களோடு (மஹான்களோடு) கூடக் காடுகளில் தன்யர்கள் (ப்ரஹ்மமான) அந்த வஸ்துவை எப்பொழுதும் விசாரம் செய்கின்றனர்.



தச-ச்லோகீ ஸ்துதி

(பத்து ச்லோகம் கொண்ட ஆன்ம மஹிமை துதி.)

ந பூ[4]மிர் ந தோயம் ந தேஜோ ந வாயு:
ந க[3]ம் நேந்த்[3]ரியம் வா ந தேஷாம் ஸமூஹ: ।
அனைகாந்திகத்வாத் ஸுஷுப்த்யேகஸித்[3]த[4]:
ததே[3]கோ(அ)வசிஷ்ட: சிவ:கேவலோ(அ)ஹம் ॥ 1

நான் என்ற ஆத்மா நிலமல்ல, நீரல்ல, தீயல்ல, வாயு அல்ல, வெளியல்ல, புலனல்ல, அவைகளின் கூட்டமுமல்ல. முடிவற்று நிலைபெற்றதான தால், தூக்க நிலையில் மாத்திரம் தெளியப்படுகிறது. எல்லாவற்றையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்த கேவல சிவமே நான்.

ந வர்ணா ந வர்ணாச்ரமாசாரத[4]ர்மா:
ந மே தா[4]ரணாத்[2]யான யோகா[3]த[3]யோபி ।
அனாத்மாச்ரயாஹம் மமாத்யாஸஹானாத்
ததே[3]கோ(அ)வசிஷ்ட: சிவ:கேவலோ(அ)ஹம் ॥ 2

அந்தணன் முதலான ஜாதியல்ல, ப்ரம்மசர்யம் முதலான ஆச்ரமமல்ல, ஆசார தர்மமல்ல, தாரணம், தியானம், யோகம் முதலியவையுமல்ல. ஆத்மா அல்லாத பொய்ப்பொருளைச் சார்ந்து உதிக்கின்ற "நான்" "எனது" என்ற பொய்க் குழப்பத்தை அழிப்பதால், அனைத்தையும் விலக்கி எஞ்சி நிற்கும் அந்தக் கேவல சிவமே நான்.

ந மாதா பிதாவா ந தே[3]வா ந லோகா
ந வேதா[3] ந யக்ஞா ந தீர்த்த[2]ம் ப்[3]ருவந்தி ।
ஸுஷுப்தௌ நிரஸ்தாதி[3]சூன்யாத்மகத்வாத்
ததே[3]கோவசிஷ்ட: சிவ:கேவலோ(அ)ஹம் ॥ 3

தாயுமல்ல, தந்தையுமல்ல, தேவர்களுமல்ல, உலகங்களுமல்ல, மறைக மல்ல, யாகங்களுமல்ல, தூய்மையான இடமுமல்ல. தூக்க நிலையில் எல்லார் அற்று இல்லாமல் போய்விடுகிறபடியால், அனைத்தையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்தக் கேவல சிவமே நான்.

ந ஸாங்க்[3]யம் ந சைவம் ந தத்பாஞ்சராத்ரம்
ந ஜைனம் ந மீமாம்ஸகாதே[3]ர் மதம் வா ।
விசிஷ்டானுபூ[4]த்யா விசுத்[3]தா[4]த்மகத்வாத்
ததே[3]கோவசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ॥ 4

ஸாங்க்ய மதமுமல்ல, சைவ மதமல்ல, பாஞ்சராத்ர மதமல்ல, ஜைன மதமல்ல, மீமாம்ஸா முதலான மதமுமல்ல, சிறந்த் மெய்ய நுபூதியில் தூய்மையாக விளங்குவதால் எல்லாவற்றையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்தக் கேவல சிவமே நான்.

ந சோர்த்4வம் ந சாதோ4 ந சாந்தர் ந பா3ஹ்யம்
ந மத்3யம் ந திர்யங் ந பூர்வாபராதி3க் ।
வியத்3வ்யாபகத்வாத் அக2ண்டை3கரூப:
ததே3கோவசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ॥ 5

மேல் இல்லை, கீழ் இல்லை, உள்ளில்லை, வெளியில்லை, நடுவல்ல, குறுக்கல்ல என்பதல்ல, கிழக்கு - மேற்கு என்பதல்ல, ஆகாயம் போல் எங்கும் பரவியதாக இருப்பதால், பேதமின்றி ஒரே வடிவமாயுள்ளதும், அனைத்தையும் நீக்கி எஞ்சி நிற்கின்ற அந்தக் கேவல சிவமே நான்.

ந சுக்லம் ந க்ருஷ்ணம் ந ரக்தம் ந பீதம்
ந குப்3ஜம் ந பீனம் ந ஹ்ரஸ்வம் ந தீ3ர்கம் ।
அரூபம் ததா ஜயோதிராகாரகத்வாத்
ததே3கோவசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ॥ 6

வெண்மையல்ல, கருப்பல்ல, சிவப்பல்ல, மஞ்சளல்ல, நொண்டியல்ல, பருமனல்ன, குறிலல்ல, நெடிலல்ல, உருவமல்ல. அதுபோல, ஒளிவடிவமாயுள்ள அனைத்தையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்தக் கேவல சிவமே நான்.

ந சாஸ்தா ந சாஸ்த்ரம் ந சிஷ்யோ ந சிக்ஷா
ந சத்வம் ந சாஹம் ந சாயம் ப்ரபஞ்ச: ।
ஸ்வரூபாவபோ3தோ4 விகல்பாஸஹிஷ்ணு:
ததே3கோவசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ॥ 7

குருவல்ல, உபதேசமல்ல, சீடனுமல்ல, சிட்சையுமல்ல, நீயுமல்ல; நானுமல்ல. புலப்படும் இந்த உலகமுமல்ல. தன்னையறிதலால் உணரப்படுபவனும், தருக்கத்திற்கு அப்பாற்பட்ட அனைத்தையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்தக் கேவல சிவமே நான்.

ந ஜாக்3ரந்த மே ஸ்வப்னகோ வா ஸுஷுப்தி:
ந விச்வோ ந வா தைஜஸ: ப்ராக்ஞகோவா ।
அவித்3யாத்மகத்வாத் த்ரயாணாம் துரீய:
ததே3கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ॥ 8

விழிப்பல்ல, கனவல்ல, தூக்கமல்ல, விழிப்பு நிலையைக் கொண்டவனல்ல, கனவ நிலையைக் கொண்டவனல்ல, கனவு நிலையைக் கொண்டவனல்ல, தூக்க

நிலையைக் கொண்டவனல்ல, இம்மூன்றும் அறியாமையாலுண்டாவதால் இம் மூன்றையும் பார்க்கின்ற நான்காவதான துரீயமாக, அனைத்தையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்தக் கேவல சிவமே நான்.

அபிவ்யாபகத்வாத் ஹி தத்வப்ரயோகா^{3}த்
ஸ்வதஸ்ஸித்^{3}த^{4}பா^{4}வாத் அனன்யாச்ரயத்வாத் |
ஜக^{3}த்துச்ச^{2}மேதத் ஸமஸ்தம் தத^{3}ன்யத்
ததே^{3}கோவசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் || 9

மேலும் இல்லை என மறுக்க இடமின்றி எங்கும் பரவியிருந்து விளங்குவதாலும், தானே சுயம்பிரகாசமான தும், பிரிதொன்றைச் சாராததுமான, அந்தப் பரம்பொருளைத் தவிர மற்ற இந்த உலகமெல்லாம் வெறும் பொய். அனைத்தையும் நீக்கி எஞ்சி நிற்கும் கேவல சிவமே நான்.

ந சைகம் தத^{3}ன்யத்^{3} - த்^{3}விதீயம் குத: ஸ்யாத்
ந வா கேவலத்வம் ந சாகேவலத்வம் |
ந சூன்யம் ந சாசூன்யம் அத்^{3}வைதகத்வாத்
கத^{2}ம் ஸர்வவேதா^{3}ந்தஸித்^{3}த^{4}ம் ப்^{3}ரவீமி || 10

ஒன்று என்பதல்ல. அதைத் தவிர்த்து வேறு என்பது எவ்விதம் இருக்க முடியும்? தனியென்பதுமல்ல, தனியற்ற துமல்ல, சூன்யமுமல்ல, சூன்ய மில்லாததுமல்ல, ஏனெனில் அது இரண்டு என்ற பேதமற்றதாக உள்ளது. வேதாந்த நூல்கள் அனைத்தும் ஒருமிக்கத் தீர்மானித்து உபதேசிக்கப்படும் ஆத்மாவை எவ்வாறு சொற்களால் எடுத்துரைப்பேன்?



அத்வைதானுபூதி

(பிரத்யக்ஷமான அத்வைத அநுபவம் பற்றிக் கூறும் ப்ரகரணம்.)

அஹமானந்த3ஸத்யாதி3லக்ஷண: கேவல: சிவ: |
ஸதா3னந்தா3தி3ரூபம் யத் தேநாஹமசலோ(அ)த்வய || 1

நான் ஆனந்தம், சத்யம் முதலியவைகளை லக்ஷணமாகக் கொண்டவனும், தனித்தவனும் (தனி ஒன்றானவனும்) சிவமுமானவன். அது (யாதொரு ப்ரம்மம்) ஸத், ஆனந்தம் முதலான ரூபமுடையதோ (அதே நான்) அதனால் நான் சலனமற்றவனாயும், இரண்டற்றவனாகவுமிருக்கிறேன்.

அக்ஷிதோ3ஷாத்3 - யதை2கோ(அ)பி த்2வயத்3 - பா4தி சந்த்3ரமா: |
ஏகோ(அ)ப்யாத்மா ததா2 பா4தி த்3வயவந்மாய்யா ம்ருஷா || 2

சந்திரன் ஒன்றாக இருந்த போதிலும், கண்ணில் உள்ள தோஷத்தினால் எவ்விதம் இரண்டுபோலத் தோன்றுகின்றதோ; அவ்விதமே ஆத்மாவானது ஒன்றாக இருப்பினும், அக்ஞானத்தினால் பொய்யாக இரண்டாக இருப்பது போல் தோன்றுகிறது. (ஆத்மாவே பிரம்மம், ஜீவன் என்ற இரண்டு போல் தோன்றுகிறது.)

அக்ஷிதோ3ஷவிஹீநாநாமேக ஏவ யதா2 சசீ |
மாயாதோ3ஷவிஹீநாநாம் ஆத்மைவைகஸ்ததா2 ஸதா || 3

சந்திரன் கண்ணில் குற்றமில்லாதவர்களுக்கு எவ்விதம் ஒன்றுதானோ, அவ்விதமே அக்ஞானமாகிற குற்றம் இல்லாதவர்களுக்கு எப்பொழுதும் ஆத்மா ஒன்று தான்.

த்3வித்வம்பா4த்யக்ஷிதோ3ஷேண சந்த்3ரே ஸ்வே மாயயா ஜக3த் |
த்3வித்வம் ம்ருஷா யதா2 சந்த்3ரே ம்ருஷா த்3வைதம் ததா3த்மனி || 4

எவ்விதம் சந்திரனிடத்தில் கண்ணின் நோயால் இரண்டு என்ற தன்மை தோன்றுகின்றதோ, அவ்வாறு தன்னிடத்தில் (தன் ஸ்வரூபமான ஆத்மாவில்) உலகம் மாயையினால் (தோன்றுகின்றது.) எவ்வாறு சந்திரனிடத்தில் இரண்டு என்பது பொய்யோ, அவ்வாறே ஆத்மாவில் இரண்டு என்பது பொய்.

ஆத்மந: கார்யமாகாசோ விநாத்மநம் ந ஸம்ப4வேத்
கார்யஸ்ய பூர்ணதா ஸித்3தா4 கிம் புன: பூர்ணதாத்மந: || 5

ஆத்மாவிடமிருந்து உண்டான ஆகாயமானது ஆத்மாவை விட்டு இருக்காது. கார்யமான ஆகாயத்திற்கு பூர்ணத்வம் (எங்கும் பரவி இருத்தல்) பிரசித்த •மானது.

எனவே (காரணமான) ஆத்மாவிற்கு பூர்ணத்வம் (வியாபகத்வம்) இருப்பதைக் கூறவும் வேண்டுமா?

கார்யபூ4தோ யதா2காச ஏக ஏவ நஹி த்3விதா ।
ஹேதுபூ4த ஸ்ததா2த்மாயமேக ஏவ விஜானத: ॥ 6

எவ்வாறு காரியமாக ஆன ஆகாயமானது ஒன்றுதானோ, இரண்டாக இல்லையோ, அவ்வாறே காரணமான இந்த ஆத்மாவானது அறிவாளிக்கு ஒன்றுதான்.

ஏகோ(அ)பி த்3வயவத்3 பா4தி யதா2காச உபாதி4த: ।
ஏகோ(அ)பி த்3வயவத் - பூர்ணஸ்த்தா2த்மாயமுபாதி4த: ॥ 7

எவ்வாறு ஆகாயம் ஒன்றாக இருப்பினும், உபாதிகளால் இரண்டுபோல் தோன்றுகின்றதோ, அவ்வாறே வியாபகமான இந்த ஆத்மா ஒன்றாயினும் உபாதி ஸம்பந்தத்தால் இரண்டு போல் பிரகாசிக்கின்றது.

காரணோபாதி4 சைதன்யம் கார்யஸம்ஸ்தா2ச்சிதோ(அ)திக4ம் ।
ந க4டாப்4ரான் - ம்ருதா3காச: குத்ரசித் நாதி4கோ ப4வேத் ॥ 8

காரணோபாதியான சைதன்யம் (மாயையுடன் கூடிய ஞானம்) அந்தக் கரணத்தை அடைந்த சைதன்யத்தைக்காட்டிலும் வேறாக ஆகாது. கடாகாசத் தைக்காட்டிலும் மண்ணைச்சேர்ந்த ஆகாசம் ஒருக்காலும் வேறாக ஆகாது.

நிர்க3தோபாதி4ராகாச ஏக ஏவ யதா2 ப4வேத் ।
ஏக ஏவ ததா2த்மாயம் நிர்க3தோபாதி4க: ஸதா ॥ 9

எவ்வாறு ஆகாயமானது உபாதி ஸம்பந்தம் இல்லாத நிலைமையில் ஒன்றாகவே ஆகுமோ, அவ்வாறே இந்த ஆத்மா உபாதி ஸம்பந்தம் அற்றநிலையில் எப்பொழுதும் ஒன்றுதான்.

ஆகாசாத3ன்ய ஆகாச: ஆகாசஸ்ய யதா2 நஹி ।
ஏகத்வாதா3த்மனோ நான்ய ஆத்4மா ஸித்3த்4யதி சாத்மந: ॥ 10

எவ்வாறு ஆகாயம் ஒன்றாயிருப்பதால், ஆகாசத்தைக் காட்டிலும் மற்றொரு ஆகாயம் இல்லையோ, அவ்வாறு ஆத்மாவானது ஒன்றாக இருப்பதால், ஆத்மாவைக் காட்டிலும் மற்றொரு ஆத்மா ஸித்திக்காது.

மேக4யோகா3த்3 - யதா2 நீரம் கரகாகாரதாமியாத் ।
மாயாயோகா3த் ததை2வாத்மா ப்ரபஞ்சாகாரதாமியாத் ॥ 11

எவ்விதம் ஜலமானது மேகத்தின் சேர்க்கையினால் ஆலங்கட்டி உருவத்தை அடையுமோ, அவ்விதமே ஆத்மாவானது மாயையின் ஸம்பந்தத்தினால், உலகமாயிருக்கும் தன்மையை அடைகின்றது.

வர்ஷோபல இவாபா4தி நீரமேவாப்4ரயோக3த: |
வர்ஷோபலவிநாசேன நீரநாசோ யதா2 நஹி ॥ 12

ஆத்மைவாயம் ததா2 பா4தி மாயாயோகா3த் ப்ரபஞ்சவத் |
ப்ரபஞ்சஸ்ய விநாசேன ஸ்வாத்மநாசோ நஹி க்வசித் ॥ 13

எவ்விதம் ஜலமே மேகத்தின் சேர்க்கையினால் ஆலங்கட்டி போன்று தோன்றுகின்றதோ ஆலங்கட்டியின் அழிவினால் ஜலத்திற்கு அழிவு இல்லையோ, அவ்விதம் இந்த ஆத்மாவே மாயையின் ஸம்பந்தத்தினால் உலகம் போன்று தோன்றுகின்றது. அத்தகைய உலகத்தின் அழிவினால், தன் ஆத்மாவிற்கு அழிவானது ஒருபொழுதும் உண்டாகாது.

ஜலாத3ன்ய இவாபா4தி ஜலோத்தோ2 பு3த்3பு3தோ3 யதா2 |
ததா2த்மன: ப்ருத2கி2வ ப்ரபஞ்சோ(அ)யமநேகதா4 ॥ 14

யதா2 பு3த்3பு3த3நாசேன ஜலநாசோ ந கர்ஹிசித் |
ததா3 ப்ரபஞ்சநாசேன நாச: ஸ்யாதாத்மனோ நஹி ॥ 15

எவ்விதம் ஜலத்திலிருந்து உண்டான குமிழியானது ஜலத்தைக் காட்டிலும் வேறாக உள்ளது போல் தோன்றுகிறதோ, அவ்விதமே பலவாறாக உள்ள இந்த உலகமானது ஆத்மாவைக் காட்டிலும் வேறானது போன்று தோன்றுகிறது.

எவ்வாறு குமிழியின் நாசத்தினால் ஒருபொழுதும் ஜலத்திற்கு நாசம் இல்லையோ, அவ்விதமே உலகத்தின் அழிவினால் ஆத்மாவிற்கு நாசம் கிடையாது.

அஹிநிர்ல்வயனீஜாத: சுச்யாதி3ர் நாஹிமாப்னுயாத் |
ததா3 ஸ்தூ2லாதி3ஸம்பூ4த சுச்யாதி3ர் நாப்னுயாதி3மம் ॥ 16

(கழற்றப்பட்ட) பாம்புச் சட்டையில் உண்டான அக்னி முதலியவை (ஒரு பாம்பு சட்டை உரித்த பின் அச்சட்டையைத் தீப்பற்றினால்) பாம்பை (அந்தத் தீ முதலியன) எப்படிப் பற்றாவோ, அவ்விதமே ஸ்தூலம் முதலிய சரீரங்களில் உண்டான சுத்தம் (அசுத்தம்) முதலியவை இந்த ஆத்மாவைச் ஸம்பந்திக்காது.

(சுசி என்பது நெருப்பு, சுத்தம் என்ற இரு பொருள்களில் உபயோகிக்கப் பட்டுள்ளது.)

த்யக்தாம் த்வசமஹிர் யத்3வதா4த்மத்வேன ந மன்யதோ ।
ஆத்மத்வேன ஸதா3ஜ்ஞானீ த்யக்ததே3ஹத்ரயம் ததா2 ॥ 17

எவ்வாறு பாம்பு கழற்றப்பட்ட சட்டையை "தான்" ஆக எண்ணாதோ, அவ்விதமே ஞானியானவன் அபிமானம் துறந்து விட்ட ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களை ஒரு பொழுதும் ஆத்மாவாக எண்ணமாட்டான்.

அஹிநிர்ல்வயநீநாசாத3ஹேர் நாசோ யதா2 ந ஹி ।
தே3ஹத்ரயவிநாசேன நாத்மநாசஸ்த்தா2 ப4வேத் ॥ 18

எவ்விதம் பாம்புச்சட்டையின் அழிவினால் பாம்பிற்கு அழிவு இல்லையோ, அவ்விதமே, மூன்று தேகங்களின் அழிவினாலும் ஆத்மாவிற்கு நாசம் ஏற்படாது.

தக்ராதி3 லவணோபேதமஜ்ஞைர் லவணவத் யதா2 ।
ஆத்மா ஸ்தூ2லாதி ஸம்யுக்தோ த்3ருச்யதே ஸ்தூ2லகாதி3வத் ॥ 19

உப்புடன்கூடிய மோர் முதலியவை உப்புச் சுவையுடன் கூடியதாக எவ்விதம் அறிவற்றவர்களால் காணப்படுகின்றதோ, அவ்விதம் ஸ்தூலம் முதலிய சரீரங்களுடன்கூடிய ஆத்மாவானது, ஸ்தூலம் ஆகியவற்றுக்கான தர்மங்களுடன் கூடியதாகத் தவறாக எண்ணப்படுகின்றது.

(மோரின் உப்புச்சுவை அதற்கே இயல்பான தெனத் தவறாக எண்ணுவது போலத்தான், ஆத்மாவுக்கு மூவித சரீர லக்ஷணங்களைக் கற்பிப்பது.)

அய: காஷ்டா2தி3கம் யத்3வத்3 - வந்ஹிவத்3 - வந்ஹியோக3த: ।
பா4தி ஸ்தூ2லாதி3கம் ஸர்வமாத்மவத் ஸ்வாத்மயோக3த: ॥ 20

எவ்வாறு இரும்பு, விறகு முதலியவை அக்னியின் சேர்க்கையினால் அக்னி போன்று பிரகாசிக்கின்றதோ, அவ்விதமே ஸ்தூலம் முதலிய எல்லாம் தன் ஆத்மாவின் ஸம்பந்தத்தினால், ஆத்மாவைப்போன்று பிரகாசிக்கின்றது.

தா3ஹகோ நைவ தா3ஹ்யம் ஸ்யாத் தா3ஹ்யம் தத்வத் ந தா3ஹக: ।
நைவாத்மா(அ)யமநாத்மா ஸ்யாத் (அ)நாத்மாயம் ந சாத்மக: ॥ 21

(எவ்விதம்) எரிக்கும் பொருள் எரிக்கப்படும் பொருளாக ஆகாதோ, எரிக்கப்படும் பொருள் எரிக்கும் பொருளாகவும் ஆகாதோ, அது போன்று இந்த ஆத்மாவானது அநாத்மாவாக (ஜடமாக) வும், இந்த ஆத்மாவிற்கு வேறான ஜடப்பொருள் ஆத்மாவாகவும் ஆகாது.

ப்ரமேயாதி3 த்ரயம் ஸார்த3ம் பா4நுநா க4ட குட்4யவத்
யேந பா4தி ஸ ஏவாஹம் ப்ரமேயாதி3விலக்ஷண: ॥ 22

ப்ரமேயம் முதலான மூன்றும் (ப்ரமேயமான பொருள்கள், பிரமாணமான அறிவு, ப்ரமாதாவான அறிபவன் (ஒரே சமயத்தில் சூரியனால் குடம், சுவர் இவைகள் போல் எந்த ஆத்மாவினால் விளங்குகின்றதோ, ப்ரமேயம் முதலிய வற்றைக்காட்டிலும் வேறான அந்த ஆத்மாவே நான்.

(சூரியனால் குடம், சுவர் முதலியவை ஒரே சமயத்தில் விளங்குகின்றது. அவைகளைவிட சூரியன் வேறானவனே, அவ்வாறே ப்ரமேயம் (அறியப்படும் பொருள்) ப்ரமாணம் (அறிவு) ப்ரமாதா (அறிகின்றவன்) ஆகிய மூன்றும் ஒரே சமயத்தில் எதனால் விளங்குகின்றதோ அது அவற்றினின்றும் வேறுபட்டது. அதையே ஸாக்ஷி என்பர். அந்த ஸாக்ஷியே நான்.)

பா4னு ஸ்பு3ரணதோ யத்3வத் ஸ்பு2ரதீவ க4டாதி3கம்
ஸ்பு2ரதீவ ப்ரமேயாதி3ராத்மஸ்புரணதஸ்ததா2 || 23

எவ்வாறு சூரியனது பிரகாசத்தினால் குடம் முதலியவை (தாமே) பிரகாசம் உடையவை போல இருக்கின்றதோ, அவ்விதமே ப்ரமேயம் முதலியவை ஆத்மாவின் பிரகாசத்தினால் தாமே பிரகாசிப்பவை போன்று தோன்றுகின்றது.

(சூரியன் ஒளியினால் விளங்கும் குடம் முதலியவை, தானே பிரகாசிப்பதாகத் தோன்றுவது போல், ஆத்மாவின் பிரகாசத்தினாலேயே விளங்குகின்ற ப்ரமேயம் முதலானவை தாங்களே ப்ரகாசிப்பவை போலத் தோன்றுகின்றன.)

பிஷ்டாதி3ர் - கு3ளஸம்பர்காத் கு3ளவத் ப்ரீதிமான் யதா2
ஆத்மயோகா3த் ப்ரமேயாதி3ராத்மவத் ப்ரீதிமான் ப4வேத் || 24

மாவு முதலியவை எவ்விதம் வெல்லத்தின் சேர்க்கையால் வெல்லம் போன்று பிரியத்தை உண்டுபண்ணுகின்றதாக ஆகின்றதோ, அவ்விதம் ப்ரமேயம் முதலியவை ஆத்மாவின் ஸம்பந்தத்தினால், ஆத்மாவினிடத்தினில் போல் பிரீதீ கொள்ளத்தக்கதாக ஆகின்றது.

க4ட நீரான்ன பிஷ்டாநாமுஷ்ணத்வம் வஹ்னியோக3த: |
வஹ்னிம் விநா கத3ம் தேஷாமுஷ்ணதா ஸ்யாத்3யதா2 க்வசித் || 25

பூ4தபெ4ளதிகதேஹாநாம் ஸ்பூ2ர்திதா ஸ்வாத்மயோக3த: |
விநாத்மானம் கத2ம் தேஷாம் ஸ்பூ2ர்திதா ஸ்யாத் ததா2 க்வசித் || 26

பானை (அதில் இட்ட) ஜலம், அன்னம், மாவு இவைகளுக்கு அக்னியின் ஸம்பந்தத்தினால் சூடு உண்டாகிறது. அவைகளுக்கு அக்னி இல்லாமல் ஒரு இடத்திலாவது (தமக்கேயென) சூடு எவ்வாறு உண்டாகும்? இது எவ்வாறோ அவ்வாறே பூதங்கள் (பூமி முதலியவை) அவைகளின் காரியங்கள், தேஹங்கள் இவைகளுக்கு ஆத்மாவின் ஸம்பந்தத்தினாலேயே விளக்கம் உண்டாகின்றது.

அவைகளின் பிரகாசமானது ஆத்மா இல்லாமல் ஒரு இடத்திலாவது எப்படி உண்டாகும்?

நாநாவிதே4ஷு கும்பே4ஷூ வஸத்யேகம் நபோ யத2ர ।
நாநாவிதே4ஷு தே3ஹேஷு தத்3வதே3கோ வஸாம்யஹம் ॥ 27

எவ்விதம் பலவிதமான குடங்களில் ஒரே ஆகாயம் இருக்கின்றதோ, அது போல பல விதமான சரீரங்களில் நான் ஒருவனே வசிக்கிறேன்.

எவ்வாறு பல விதமான குடங்களில் உள்ள ஆகாசம் ஒன்றோ, அவ்வாறே பலவித தேஹங்களிலும் நான் ஒருவனே ஆத்மாவாக வசிக்கின்றேன்.

நாநாவித4த்வம் குத்பா4னாம் ந யாத்யேவ யதா2 நப4: ।
நாநாவித4த்வம் தே3ஹானாம் தத்3வதே3வ ந யாம்யஹம் ॥ 28

எவ்விதம் ஆகாயமானது குடங்களுடைய பல விதத் தன்மையை அடைவ தில்லையோ, அதுபோல் நான் சரீரங்களுடைய பலவிதத் தன்மையை அடைவ தில்லை.

யதா2 க4டேஷு நஷ்டேஷு க4டாகாசோ ந நச்யதி ।
ததா2 தே3ஹேஷு நஷ்டேஷு நைவ நச்யாமி ஸர்வக3: ॥ 29

எவ்விதம் குடங்கள் அழியும்பொழுது, குடங்களிலுள்ள ஆகாயம் அழிவ. தில்லையோ அவ்விதம் சரீரங்கள் அழியும் பொழுது, எங்கும் நிறைந்த "நான்" அழிவதில்லை.

உத்தமாதீ3னி புஷ்பாணி வர்த்தந்தே ஸூத்ரகே யதா2 ।
உத்தமாத்3யாஸ்ததா2 தே3ஹா வர்த்தந்தே மயி ஸர்வதா3 ॥ 30

எவ்விதம் நூலில் (நாரில்) உயர்ந்தது, நடுத்தரம், தாழ்ந்தது முதலான புஷ்பங்கள் இருக்கின்றனவோ, அவ்விதமே உத்தம, மத்யம, அதம முதலிய சரீரங்கள் என்னிடத்தில் எப்பொழுதும் இருக்கின்றன.

(பலவிதப் பூக்களை ஒரே நாரில் தொடுப்பதுபோல, ஒரே ஆத்மாவில் எல்லா சரீரங்களும் தொடுக்கப்பட்டுள்ளது.)

யதா2 ந ஸம்ஸ்ப்ருசேத் ஸூத்ரம் புஷ்பாணாமுத்தமாதி3தா ।
ததா2 நைகம் ஸர்வக3ம் மாம் தே3ஹாநாமுத்தமாதி3தா ॥ 31

புஷ்பேஷூ தேஷு நஷ்டேஷு யத்3வத் ஸூத்ரம் ந நச்யதி ।
ததா2 தே3ஹேஷு நஷ்டேஷு நைவ நச்யாம்யஹம் ஸதா3 ॥ 32

எவ்விதம் நூலைப் (நார்) பூக்களுடைய உயர்ந்தது, நடுவானது, தாழ்ந்தது முதலிய தன்மை ஒட்டாதோ, அவ்விதம் ஒன்றான வனும் எங்கும் நிறைந்தவனு மான என்னை சரீரங்களுடைய மேல், நடு, தாழ்ந்தது முதலிய தன்மை ஒட்டாது.

எவ்விதம் அந்தப் பூக்கள் அழிந்தபொழுதும் நால் (நார்) அழிவதில்லையோ அவ்விதம் சரீரங்கள் அழிந்த பொழுதும் நான் எப்பொழுதும் அழிவதே இல்லை.

பர்யங்கரஜ்ஜூரந்த்^{4}ரேஷு நாநேவைகாபி ஸூர்யபா^{4} ।
ஏகோ(அ)ப்யநேகவத் பா^{4}தி ததா^{2} க்ஷேத்ரேஷு ஸர்வக^{3}: ॥ 33

எவ்விதம் சூரிய வெளிச்சம் ஒன்றாயினும், ஊஞ்சல் சங்கிலிகளின் இடை களில் (இழைகள் வழியாக வரும்போது) அநேகம்போல் தோன்றுகின்றதோ அவ்விதம் எங்கும் நிறைந்த ஆத்மா ஒன்றாக இருப்பினும், சரீரங்களில் அநேகம் போலத் தோன்றுகின்றது.

ரஜ்ஜூரந்த்^{4}ரஸ்த^{4} தோ^{3}ஷாதி^{3} ஸூர்யபா^{4}ம் ந ஸ்ப்ருசேத் யதா^{2} ।
ததா^{2} க்ஷேத்ரஸ்த^{2} தோ^{3}ஷாதி^{3} ஸர்வக^{3}ம் மாம் ந ஸம்ஸ்ப்ருசேத் ॥ 34

எவ்வாறு ஊஞ்சல் சங்கிலியின் தோஷம் முதலியவை சூரியபிரகாசத்தை தொடாதோ, அவ்வாறு சரீரங்களிலுள்ள குற்றம் முதலியவை எங்கும் நிறைந்த என்னைத் தொடுவதில்லை.

தத்^{3}ரஜ்ஜு ரந்த்^{4}ர நாசேஷு நைவ நச்யதி ஸுர்யபா^{4} ।
ததா^{2} க்ஷேத்ர விநாசேஷு நைவ நச்யாமி ஸர்வக^{2}: ॥ 35

எவ்விதம் சூரியப்பிரகாசம் அந்த ஊஞ்சல் சங்கிலியின் இடைவெளி நாசமான பொழுது அழிவதில்லையோ, அவ்விதம் சரீரங்களின் அழிவினால் எங்கும் நிறைந்த நான் அழிவதில்லை.

தே^{3}ஹோ நாஹம் ப்ரத்^{3}ருச்யத்^{3}வாத் பெ^{4}ளதிகத்வாத் ந சேந்த்ரியம் ।
ப்ராணோ நாஹமநேகத்வாத் மநோ நாஹம் சலத்வத: ॥ 36

பு^{3}த்^{3}தி^{4}ர் நாஹம் விகாரித்வாத் தமோ நாஹம் ஜட^{3}த்வத: ।
தே^{3}ஹேந்த்^{3}ரியாதி^{3}கம் நாஹம் விநாசித்வாத் க^{4}டாதி^{3}வத் ॥ 37

சரீரம் (தனக்கு வேறாகப்) பார்க்கப்படுகிறபடியால் (அது பார்ப்பவனாக)" நான் "(ஆத்மா) இல்லை. புலனும் பஞ்சபூதங்களால் உண்டாகியிருப்பதால் ஆத்மா இல்லை. மனம் சலனமுள்ளதாகையால் ஆத்மா இல்லை. புத்தி மாறுதல்கள் அடைவதால், ஆத்மா இல்லை. அஞ்ஞானம் அசேதனமானதால் ஆத்மா இல்லை. இவ்வாறு தேகம், இந்திரியம் முதலியன குடம் முதலியவை போன்று அழியும் தன்மையுடையதால் ஆத்மா இல்லை. (குடத்துள் உள்ள ஆகாயம் அழிவுறாதது போலவே, தேஹேந்திரியங்களின் உள்ளே இருக்கும் ஆத்மா.)

தே³ஹேந்த்³ரிய ப்ராண மநோ பு³த்³த்⁴யஜ்ஞாநானி பா⁴ஸயன் ।
அஹம்காரம் ததா² பா⁴மி சைதேஷாமபி⁴மாநினம் ॥ 38

சரீரம், புலன்கள் பிராணன்கள், மனது, புத்தி, அஞ்ஞானம் இவைகளையும் அவ்விதமே இவைகளில் "நான்" என்ற பற்றுதல் உள்ள அஹங்காரத்தையும் பிரகாசிக்கச் செய்து கொண்டு பிரகாசிக்கின்றேன்.

ஸர்வம் ஜக³தி³த³ம் நாஹம் விஷயத்வாதி³த³ம்தி⁴ய: ।
அஹம் நாஹம் ஸுஷுப்த்யாதெ³ள அஹம: ஸாக்ஷித: ஸதா³ ॥ 39

இந்த எல்லாப் பிரபஞ்சமும் "இது" என்று (தனக்கு வேறாக) புத்திக்கு விஷயமாவதால் " நான்" இல்லை. நான் தூக்கம் முதலியவைகளில் அஹங்காரத் திற்கு எப்பொழுதும் ஸாக்ஷியாக இருப்பதால், அஹங்காரமும் ஆத்மா இல்லை.

ஸுப்தெள யதா² நிர்விகாரஸ் ததா²வஸ்தா² த்³வயே(அ)பிச ।
த்³வயோர் மாத்ராபி⁴யோகே³ன விகாரீவ விபா⁴ம்யஹம் ॥ 40

நான் ஸுஷுப்தியில் (தூக்கத்தில்) எவ்விதம் விகார மற்றவனோ, ஜாக்ரத் (விழிப்பு) ஸ்வப்னம் (கனவு என்ற) இரண்டு அவஸ்தைகளிலும், அவ்வாறே (விகாரமற்றவன்). ஜாக்ரத், ஸ்வப்நம் இரண்டிலும், விஷயங்களின் ஸம்பந்தத் தினால் மாறுதல் உள்ளவன் போல நான் தோன்றுகின்றேன்.

உபாதி⁴ நீல ரக்தாத்³யை: ஸ்ப²டிகோ நைவ லிப்யதே ।
ததா²த்மா கோசஜை: ஸர்வை: காமாத்³யைர் நைவ லிப்யதே ॥ 41

எவ்விதம் உபாதிகளில் உள்ள (நீல புஷ்பம், சிவப்பு புஷ்பங்களிலுள்ள) கருப்பு, சிவப்பு முதலிய நிறங்களுடன் ஸ்படிகமணி ஒட்டுவதில்லையோ, அவ்விதம் ஆத்மா ஐந்து கோசங்களால் உண்டான ஆசை முதலிய எவற்றுடனும் ஒட்டுவதில்லை.

(ஸ்படிக லிங்கத்துக்குப் பலவர்ண மலர்களைச் சூட்டினால், ஸ்படிகத்தின் மூலமே அவை தெரிந்தாலும் கூட அவற்றின் வர்ணத்தால், ஸ்படிகம் பாதிக்கப் படுவதில்லை.)

பா²லேந ப்⁴ராம்யமாணேந ப்⁴ரமதீவ யதா² மஹீ ।
அகோ³(அ)ப்யாத்மா விமூடே⁴ன சலதீவ ப்ரத்ருச்யதே ॥ 42

எவ்விதம் பூமியானது தலைசுற்றும் பொழுது சுழலுவது போல் இருக்கின்றதோ, அவ்விதம் ஆத்மா சலனமற்றதாயினும் அறிவில்லாதவனால் சலன முடையது போன்று பார்க்கப்படுகின்றது.

தே³ஹத்ரயமித³ம் நித்யமாத்மத்வே நாபி⁴மன்யதே ।
யாவத் தாவத³யம் மூடோ⁴ நாநாயோநிஷு ஜாயதே ॥ 43

இந்த அக்ஞானி, இந்த ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களை எப்பொழுதும் ஆத்மாவாக எதுவரை அபிமானிக்கிறானோ அதுவரை பல கருக்களில் பிறக்கிறான்.

நித்3ராதே3ஹஜ து3:கா2தி3ர் ஜாக்ரத்3தே3ஹம் ந ஸம்ஸ்ப்ருசேத் |
ஜாக்3ரத்3- தே3ஹஜ து3: கா2தி4ஸ்ததா2த்மாநம் ந ஸம்ஸ்ப்ருசேத் || 44

எவ்விதம் ஸ்வப்ன சரீரத்திலுண்டான சுகதுக்கங்கள், விழிப்பு நிலையிலுள்ள சரீரத்தைச் சாருவதில்லையோ, அவ்விதம் விழிப்பு நிலையிலுள்ள சரீரத்தி லேற்பட்ட சுகதுக்கங்கள் ஆத்மாவைச் சாருவதில்லை.

ஜாக்3ரத்4 - தே3ஹவதா3பா4தி நித்3ரா தே3ஹஸ்து நித்3ரயா |
நித்3ராதே3ஹ விநாசேன ஜாக்ரத்3தே3ஹோ ந நச்யதி || 45

ததா2யமாத்மவத் பா4தி ஜாக்3ரத்3 - தே3ஹஸ்து ஜாகராத் |
ஜாக்3ரத்3- தே3ஹ விநாசேன நாத்மா நச்யதி கர்ஹிசித் || 46

நித்திரை (யிலுண்டாகும் ஸ்வப்ன) சரீரமானது, ஸ்வப்னத்தில், ஜாக்ரத் (விழிப்பு) நிலையின் சரீரம் போன்றே தோன்றுகின்றது. (இந்த) ஸ்வப்ன தேஹ நாசத்தினால், ஜாக்ரத் நிலையிலுள்ள சரீரம் அழிவதில்லை.

அதுபோன்று இந்த விழிப்பிலுள்ள சரீரமும், விழிப்பில் ஆத்மாவைப்போல் தோன்றுகின்றது. விழிப்பிலுள்ள சரீர நாசத்தினால் ஆத்மா ஒரு பொழுதும் அழிவதில்லை.

ஹித்வாயம் ஸ்வாப்நிகம் தே3ஹம் ஜாக்3ரத்3தே3ஹமபேக்ஷதே |
ஜாக்3ரத்3தே3ஹப்ரபு3த்2தோ4(அ)யம் ஹித்வாத்மாநம் யதா2 ததா2 || 47

எவ்விதம் இந்த ஜீவன் ஸ்வப்னத்திலுண்டான சரீரத்தை விட்டுவிட்டு, விழிப்பிலுள்ள சரீரத்தை அடைகின்றானோ, அவ்விதமே விழிப்பிலுள்ள சரீரத்தை ஞான விழிப்பு பெற்றவுடன், இவன் ஆத்மாவை எய்துகிறான்.

ஸ்வப்நபோ4கே3 யதை2வேச்சா2 ப்ரபு3த்3த4ஸ்ய ந வித்3யதே |
அஸத்ஸ்வர்கா3தி3கே போ4கே3 நைவேச்சாஜ்ஞானினஸ்ததா2 || 48

எவ்விதம் ஸ்வப்னா நுபவத்தில் விழிப்படைந்தவனுக்கு ஆசையானது ஏற்படுவதில்லையோ, அவ்விதம் ஞானிக்கு பொய்யான ஸ்வர்க்கம் முதலான போகத்தில் ஆசை உண்டாவதில்லை.

(கல்லில் நாகப்ரதிஷ்டை செய்தால், செய்பவன் தான் அதை நாகமாக அநுபவிக்கிறானேயன்றி, கல் தன்னை நாகமாக உணர்வதில்லை. இவ்வாறே ஜீவனின் சரீரம், நடத்தை முதலியனவும் தம்மளவில் கல் போல ஜடம் தான். இவற்றை அனுபவிக்கும் ஆத்மாவுக்கே இவை போக்யம்.)

போ4க்த்ரா ப3ஹிர் யதா2 போ4க்3ய: ஸர்போ த்3ருஷதி3 கல்பித: ।
ரூபசீலாத3யச்யாத்ம போ4கா3 போ4க்3ய ஸ்வரூபகா: ॥ 49

எவ்வாறு வெளியில், அனுபவிக்கிறவனால், கல்லில் கல்பிக்கப்பட்ட ஸர்ப்பம் போக்ய வஸ்துவோ, (அவ்வாறே) ஆத்மாவில் போகத்தைத் தருகின்ற ரூபம், சீலம் முதலியவைகளும் போக்ய வஸ்துக்களே.

ஜ்ஞஸ்ய நாஸ்த்யேவ ஸம்ஸாரோ யத்3வத3க்ஜ்ஞஸ்ய கர்மிண: ।
ஜானதோ நைவ பீ4ர்யத்3வத் - ரஜ்ஜுஸர்பமஜானத: ॥ 50

ஸம்ஸாரமானது, அக்ஞானியான கர்மிக்கு (ஞான உபாயமாயின்றி கர்மாவையே லஷ்யமாகக் கொள்பவனுக்கு) எவ்வி தமிருக்கின்றதோ, (அதாவது பயங்கரமாயிருப்பது போல) (அவ்விதம்) ஞானிக்கு இராது. எவ்விதம் கயிற்றில் பாம்பை அறியாதவனுக்கு பயம் உண்டாகிறதோ (அவ்விதம்) அறிந்தவனுக்கு பயம் ஏற்படுவதில்லை.

ஸைந்த4வஸ்ய க4நோ யத்3வத் ஜலயோகாத் ஜலம் ப4வேத் ।
ஸ்வாத்மயோகா3த் ததா2 பு3த்3தி4ராத்மைவ ப்3ரஹ்மவேதி3ந: ॥ 51

எவ்விதம் உப்புக்கட்டியானது ஜலத்தின் சேர்க்கையினால் ஜலமாக ஆகுமோ, அவ்விதமே பிரம்மத்தை அறிந்தவனுடைய புத்தியானது, தன் ஆத்ம ஸம்பந்தத்தினால் ஆத்ம ஸ்வரூபமாகவே ஆகின்றது.

(ஜலத்தில் போடப்பட்ட உப்புக்கட்டி ஜலமாக ஆவது போல், ப்ரஹ்மக் ஞானியின் புத்தியும் ஆத்மஞானத்தால் ஆத்மாவாகவே ஆகிவிடுகின்றது.)

தோயாச்ரயேஷு ஸர்வேஷு பா4நுரேகோ(அ)ப்யநேகவத் ।
ஏகோ(அ)ப்யாத்மா ததா2 பா4தி ஸர்வக்ஷேத்ரேஷ்வநேகவத் ॥ 52

எவ்விதம் சூரியன் ஒருவனாயினும் எல்லா நீர்நிலைகளிலும், அநேகம் போல் தோன்றுகின்றதோ, அவ்விதம் ஆத்மா ஒன்றான போதிலும் எல்லா சரீரங்களிலும் அநேகம் போல தோன்றுகின்றது.

பா4நோரன்ய இவாபா4தி ஜலபா4னுர்ஜலே யதா2 ।
ஆத்மநோ(அ)ன்ய இவாபா4ஸோ பா4தி புத்3தௌ ததா2த்மந: ॥ 53

எவ்விதம் ஜலத்தில் பிரதிபிம்ப சூரியன் (ஆகாச) சூரியனைக்காட்டிலும் வேறான துபோல் தோன்றுகின்றதோ, அவ்விதம் புத்தியில் ஆத்மாவினுடைய பிரதிபிம்பமானது ஆத்மாவைக் காட்டிலும் வேறானது போன்று தோன்றுகின்றது.

பி3ம்ப3ம் விநா யதா3 நீரே ப்ரதிபி3ம்போ3 ப4வேத் கத2ம் ।
விநாத்மானம் ததா2 பு3த்3தெ4ள சிதா3பா4ஸோ ப4வேத் கத2ம் ॥ 54

பிம்பம் (உருவம்) இல்லாமல் ஜலத்தில் பிரதிபிம்பமானது எப்படி உண்டாகும்? இது எவ்விதமோ, அவ்விதம் ஆத்மா இல்லாமல் புத்தியில் சைதனயத்தின் பிரதிபிம்பம் எவ்விதம் உண்டாகும்?

ப்ரதிபி[3]ம்ப[3]சலத்வாத்[2]யா யதா[2] பி[3]ம்ப[3]ஸ்ய கர்ஹிசித் |
ந ப[4]வேயுஸ்ததா[2]பா[4]ஸகர்த்ருத்வாத்[3] யாஸ்து நாத்மன: || 55

எவ்விதம் பிரதிபிம்பத்தில் உள்ள அசைவு (ஜலம் ஆடும் போது, பிரதிபிம்ம ஸூரியனும் ஆடுவது) முதலியவை பிம்பத்திற்கு ஒரு பொழுதும் உண்டாகாதோ, அவ்விதம் அந்தக்கரணப் பிரதி பிம்பத்தில் உள்ள கர்த்ருத்வம் முதலியன ஆத்மாவிற்கு ஏற்படுவதில்லை.

ஜலே சைத்யாதி[3]கம் யத்[3]வத் ஜலபாநும் ந ஸம்ஸ்ப்ருசேத் |
புத்[3]தே[4] கர்மாதி[3]கம் தத்[3]வத் சிதா[3]பா[4]ஸம் ந ஸம்ஸ்ப்ருசேத் || 56

எவ்வாறு தண்ணீரில் உள்ள குளிர்ச்சி முதலியன தண்ணீரில் பிரதிபலிக்கும் சூரியனைத் தொடாதோ, அவ்வாறே அந்தக்கரணத்தின் கிரியை முதலியன சைதன்ய பிரதிபிம்பத்தை (ஜீவனை) தொடாது.

பு[3]த்[3]தே[4]: கர்த்ருத்வ போ[4]க்த்ருத்வ து[3]:கி[2]த்வாத்[3]யைஸ்து ஸம்யுத: |
சிதா[3]பா[4]ஸோ விகாரீவ சராவஸ்தா[2]ம்பு பா[4]நுவத் || 57

அந்தக்கரணத்தினுடைய கர்த்ருத்வம், போக்த்ருத்வம், துக்கிப்பது முதலியவைகளுடன் கூடிய ஞானப் பிரதிபிம்பனான ஜீவனோவெனில், சட்டியில் உள்ள ஜலத்தில் தோன்றும் சூரிய பிரதிபிம்பம் போன்று, மாறுதல் உடையவன் போலத் தோன்றுகிறான்.

(சட்டியில் உள்ள ஜலத்தில் தோன்றும் சூரியப்ரதிபிம்பம் ஜலத்தின் சலனத்தினால் சலிப்பது போல் தோன்றுகின்றது. அதேபோன்று புத்தியின் கர்த்ருத்வம், போக்த்ருத்வம், சுகம், துக்கம் இவைகளுடன் கூடிய சிதாபாஸனும் இவற்றுடன் கூடியவன் போல் தோன்றுகின்றான்.)

சராவஸ்தோ[2]த[3]கே நஷ்டே தத்ஸ்தோ[2] பா[4]னுர் விநஷ்டவத் |
பு[3]த்[3]தோ[4]லயே ததா[2] ஸுப்தௌ நஷ்டவத் ப்ரதிபா[4]த்யயம் || 58

எவ்விதம் சட்டியில் உள்ள தண்ணீர் இல்லாமற்போனதும், அதிலுள்ள சூரியனும் இல்லாமற்போனது போன்று (தோன்றுகின்றதோ) அவ்விதம் ஸுஷுப்தியில் (தூக்கத்தில்) புத்தியினுடைய. ஒடுக்கம் ஏற்பட்டபொழுது, இந்த ஆத்மாவும் இல்லாதது போன்று தோன்றுகின்றது.

ஜலஸ்தா[2]ர்கம் ஜலம் சோர்மிம் பா[4]ஸயன் பா[4]தி பா[4]ஸ்கர: |
ஆத்மாபா[4]ஸம் தி[4]யம் புத்[3]தே[4]: கர்த்ருத்வாதீ[3]னயம் ததா[2] || 59

எவ்விதம் சூரியன் ஜலத்திலுள்ள பிரதிபிம்ப சூரியனையும், ஜலத்தையும் (ஜல சூர்யனை அசைப்பிக்கும்) அலையையும் பிரகாசிக்கச் செய்துகொண்டு தானும் பிரகாசிக்கிறானோ, அவ்விதம் இந்த ஆத்மாவும் தன் பிரதிபிம்பத்தையும் புத்தியையும், புத்தியினுடைய கர்த்ருத்வம் முதலியவைகளையும் பிரகாசிக்கச் செய்து கொண்டு தானும் பிரகாசிக்கிறான்.

மேகா^{4}வபா^{4}ஸகோ பா^{4}நுர் மேக^{4}ச்ச^{2}ந்நோ(அ)வபா^{4}ஸதே ।
மோஹாவபா^{4}ஸகஸ் தத்^{3}வன் மோஹச்ச^{2}ந்நோ விபா^{4}த்யயம் ॥ 60

எவ்விதம் மேகத்தைப் பிரகாசிக்கச் செய்யும் சூரியன், மேகத்தினால் மறைக்கப்பட்டு இருக்கிறானோ அது போன்று, அக்ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்கின்ற இந்த ஆத்மா, அக்ஞானத்தினால் மறைக்கப்பட்டவனாக விளங்குகிறான்.

பா^{4}ஸ்யம் மேகா^{3}தி^{3}கம் பா^{4}நுர் பா^{4}ஸயன் ப்ரதிபா^{4}ஸதே ।
ததா^{2} ஸ்தூ^{2}லாதி^{3}கம் பா^{4}ஸ்யம் பா^{4}ஸயன் ப்ரதிபா^{4}த்யயம் ॥ 61

எவ்விதம் பிரகாசப்படுத்த வேண்டிய மேகம் முதலியவற்றை, சூரியன் பிரகாசிக்கச் செய்துகொண்டு பிரகாசிக்கிறானோ, அவ்விதம் பிரகாசப்படுத்த வேண்டிய ஸ்தூலம், ஸூக்ஷ்மம் முதலிய சரீரங்களை பிரகாசிக்கச் செய்து கொண்டு இந்த ஆத்மா பிரகாசிக்கின்றான்.

ஸர்வப்ரகாசகோ பா^{4}நு: ப்ரகாச்யைர் நைவ தூ^{3}ஷ்யதே ।
ஸர்வப்ரகாசகோ ஹ்யாத்மா ஸர்வைஸ்தத்^{3}வத் ந தூ^{3}ஷ்யதே ॥ 62

எவ்விதம் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் சூரியன், பிரகாசிக்கப் படும் பொருள்களால் கெடுக்கப்படுவதில்லையோ, அதுபோல எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் ஆத்மாவானது எப்பொருள்களாலும் கெடுக்கப்படுவதில்லை.

(எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் சூரியன் தன்னால் பிரகாசிக்கும்படி செய்யப்பட்ட வஸ்துக்களின் குண தோஷங்களை அடையாதது போல் எல்லா வற்றையும் பிரகாசிக்கச் செய்யும் ஆத்மா எந்த வஸ்துக்களுடைய குண தோஷங்களையும் அடைவதில்லை).

முகுரஸ்த^{2}ம் முக^{2}ம் யத்^{3}வத் முக^{2}வத் ப்ரத^{2}தே ம்ருஷா ।
புத்^{3}தி^{4}ஸ்தா^{2}பா^{4}ஸகஸ் - தத்^{3}வதா^{2}த்மவத் ப்ரத^{2}தே ம்ருஷா ॥ 63

முகுரஸ்த^{2}ஸ்ய நாசேன முக^{2}நாசோ ப^{4}வேத் கத^{2}ம் ।
பு^{3}த்^{3}தி^{4}ஸ்தா^{2}பா^{4}ஸநாசேன நாசோ நைவாத்மந: க்வசித் ॥ 64

எவ்விதம் கண்ணாடியில் பிரதிபலித்த முகமானது பொய்யாக, முகம்போல் தோன்றுகின்றதோ, அதுபோல புத்தியில் பிரதிபிம்பிக்கின்ற ஜீவன் ஆத்மாவைப் போன்று பொய்யாகத் தோன்றுகின்றது.

கண்ணாடியிலுள்ள பிரதிபிம்பத்தின் நாசத்தினால் முகத்தின் நாசமானது எவ்விதம் உண்டாகும்? உண்டாகாது. (அதுபோல்) அந்தக்கரண பிரதிபிம்ப நாசத்தினால், ஒருகாலும் ஆத்மாவினுடைய நாசமானது உண்டாகாது.

தாம்ர கல்பிததே3வாதி3ஸ: தாம்ராத3ன்ய இவ ஸ்பு2ரேத் ।
ப்ரதிபா4ஸ்யாதி3ரூபேண ததா2த்மோத்த2மித3ம் ஜக3த் ॥ 65

எவ்வாறு செம்பில் (விக்ரஹமாகச்) செய்யப்பட்ட தேவதை முதலியவை செம்பைக்காட்டிலும் வேறான துபோல் தோன்றுமோ, அவ்வாறே ப்ரமேயம். முதலான ரூபமாக ஆத்மாவிலிருந்து உண்டான இந்த பிரபஞ்சமும் (வேறானது போல் தோன்றுகிறது.) (ப்ரமேயம் - அறியப்படும் பொருள். இங்கு ப்ரபஞ்சம்; ப்ரமாதா - அறியும் ஜீவன்; ப்ரமாணம் - அறிவு.)

ஈச ஜீவாத்மவத் பா4தி யதை2கமபி தாம்ரகம் ।
ஏகோப்யாத்மா ததை2வாயமீசஜீவாதி3வன் ம்ருஷா ॥ 66

யதே2ச்வராதிநாசேன தாம்ரநாசோ ந வித்3யதே ।
ததேச்வராதி3நாசேன நாசோ நைவாத்மந: ஸதா3 ॥ 67

எவ்விதம் செம்பு ஒன்றான போதிலும், ஈச்வரன் போன்றும், ஜீவன் போன்றும் (பலவாக வெவ்வேறு ப்ரதிமைகளில்) தோன்றுகின்றதோ, அவ்விதமே இந்த ஆத்மாவானது ஒன்றான போதிலும் ஈச்வரன், ஜீவன் முதலியவைபோன்று பொய்யாகத் தோன்றுகின்றது.

எவ்வாறு ஈச்வரன் முதலிய உருவங்களின் நாசத்தினால், செம்பின் நாசம் உண்டாவதில்லையோ, அவ்விதம் ஈச்வரன் முதலியவர்களின் நாசத்தினால், ஆத்மா விற்கு எப்பொழுதும் அழிவு உண்டாவதில்லை.

அத்2யஸ்தோ ரஜ்ஜுஸர்போ(அ)யம் ஸத்யவத் ரஜ்ஜுஸத்தயா ।
ததா2 ஜக3தி2த3ம் பா4தி ஸத்யவத் ஸ்வாத்ம ஸத்தயா ॥ 68

எவ்விதம் கயிற்றில் ஆரோபம் செய்யப்பட்ட (கல்பிதமாக ஏற்றி வைக்கப்பட்ட) பாம்பானது கயிற்றிலுள்ள ஸத்தையால் (கயிறு என்பது உண்மையாக உள்ள ஒன்றாக இருப்பதால்) (தானும்) உண்மையானது போன்று தோன்று கின்ற தோ, அவ்விதம் இந்தப் பிரபஞ்சம் தன் ஆத்மாவின் ஸத்தையினால் உண்மையானது போல் தோன்றுகின்றது.

அத்4யஸ்தாஹேரபா4வேந ரஜ்ஜுரேவாவசிஷ்யதோ ।
ததா2 ஜக3த்3பா4வேன ஸதா3த்மைவாவசிஷ்யதே ॥ 69

எவ்வாறு ஆரோபிக்கப்பட்ட பாம்பினுடைய இல்லாமையால் (கயிறு பாம்பல்ல என்று தெரிந்தபின்) கயிறு மட்டும் மிஞ்சுகின்றதோ, அவ்விதம் ஜகத்தின் இன்மையால் உண்மையான ஆத்மா மாத்திரம் மிஞ்சுகின்றது.

ஸ்ப2டிகே ரக்ததா யத்3வதுபாதே4ர் நீலதாம்ப3ரே ।
யதா2 ஜகதி3த3ம் பா4தி ததா2 ஸத்யமிவாத்3வயே ॥ 70

ஸ்ப2டிகே ரக்ததா மித்யா ம்ருஷா கே2 நீலதா யதா2 ।
ததா2 ஜகதி3த3ம் மித்3யா ஏகஸ்மிந்நத்3வயே மயி ॥ 71

எவ்விதம் உபாதியின் ஸம்பந்தத்தினால் ஸ்படிகமணியில் சிவப்பும், எவ்விதம் ஆகாயத்தில் நீலமும் தோன்றுகின்றனவோ, அவ்விதம் இரண்டற்ற ஆத்மாவில் இந்தப் பிரபஞ்சம் உண்மையானது போல் தோன்றுகின்றது.

ஸ்படிக மணியில் சிவப்பு எவ்விதம் தோற்றமோ, ஆகாயத்தில் நீலநிறம் எவ்விதம் தோற்றமோ, அவ்விதம் ஒன்றான தும் இரண்டற்றதுமான என்னிடத்தில் (ஆத்மாவில்) இந்தப் பிரபஞ்சம் பொய்த் தோற்றமே.

ஜீவேச்வராதி4பா4வேன பே4தம் பச்யதி மூட4தீ: ।
நிர்பேதே3 நிர்விசேஷ(அ)ஸ்மின் கத2ம் பே4தோ3 ப4வேத்3-த்4ருவம் ॥ 72

அக்ஞானி ஜீவன், ஈச்வரன் முதலான ரூபமாக வேற்றுமையைப் பார்க் கிறான். பேதமற்றதும் ஒருவித தன்மையும் அற்றதுமான, இந்த ஆத்மாவில் எவ்விதம் பேதம் இருக்கும்? (இருக்காது,) இது நிச்சயம்.

லிங்க3ஸ்ய தா4ரணாதே3வ சிவோயம் ஜீவதாம் வ்ரஜேத் ।
லிங்க3நாசே சிவஸ்யாஸ்ய ஜீவதாவேசதா குத: ॥ 73

இந்த சிவன் (பரமாத்மா) லிங்க (காரண) சரீரத்தை தரிப்பதினாலேயே ஜீவத்தன்மையை அடைகிறான். லிங்கசரீரம் நாசம் அடைந்த பொழுது, இந்த பரமாத்மாவிற்கு, ஜீவ ரூபமான ஆவேசமானது எவ்விதம் ஸம்பவிக்கும்? (ஸம்பவிக்காது.)

சிவ ஏவ ஸதா3 ஜீவோ ஜீவ ஏவ ஸதா3 சிவ: ।
வேத்யைக்யமநயோர் யஸ்து ஸ ஆத்மஜ்க்ஞோ ந சேதர: ॥ 74

ஜீவன் எப்பொழுதும் சிவனே (பரமாத்மாவே). பரமாத்மா எப்பொழுதும் ஜீவனே. எவன் இந்த ஜீவாத்மா - பரமாத்மா இருவர்களுக்கும் ஒருமையை அறிகிறானோ, அவனே ஆத்மாவை அறிந்தவன். மற்றவரல்லர்.

க்ஷீர யோகா3த் யதா2 நீரம் க்ஷீரவத் த்3ருச்யதே ம்ருஷா ।
ஆத்ம யோகா3தநாத்மா(அ)யமாத்மவத் த்ருச்யதே ததா3 ॥ 75

பாலின் சேர்க்கையினால் ஜலமானது பால்போன்று பொய்யாக எவ்விதம் தோன்றுகின்றதோ, அவ்விதம் ஆத்மாவின் ஸம்பந்தத்தினால், இந்த ஆத்மாவிற்கு வேறான சரீரம் முதலியவை ஆத்மாவைப்போன்று காணப்படுகின்றது.

நீராத் க்ஷீரம் ப்ருத²க்க்ருத்ய ஹம்ஸோ ப⁴வதி நாந்யதா² |
ஸ்தூ²லாதே²: ஸ்வம் ப்ருத²க்க்ருத்ய முக்தோ ப⁴வதி நாந்யதா² || 76

ஜலத்திலிருந்து பாலை வேறுபடுத்துவதால் (புள்ளினத்தில் ஒன்று) ஹம்ஸ பக்ஷியாக ஆகின்றது. அவ்வி தமில்லாவிடில், ஹம்ஸ பக்ஷியாக ஆவதில்லை. இதுபோன்று ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களிலிருந்து ஆத்மாவை வேறு படுத்தித் தெரிந்துகொள்வதால் (ஒரு ஜீவன்) மோக்ஷ மடைந்தவனாக ஆகிறான். அவ்விதமில்லாவிடில் முக்தனாக ஆகமாட்டான்.

க்ஷர நீர விவேகஜ்ஞோ ஹம்ஸ ஏவ ந சேதர: |
ஆத்மாநாத்ம விவேகஜ்ஞோ யதிரேவ ந சேதர: || 77

ஹம்ஸம் தான் பாலையும், நீரையும் பிரித்துத் தெரிந்து கொள்ளும். வேறு (பக்ஷி) ஒன்றும் அறிந்து கொள்ளாது. அது போல, யதி தான் ஆத்மாவையும், அநாத்மாவையும் பிரித்துத் தெரிந்து கொள்வான். மற்றவர் அல்லர்.

அத்⁴யஸ்த சோரஜ: ஸ்தா²ணோர் விகார: ஸ்யாத் நஹி க்வசித் |
நாத்மநோ நிர்விகாரஸ்ய விகாரோ விச்வஜஸ்ததா² || 78

கட்டையில் ஆரோபம் செய்யப்பட்ட (கற்பனையாக ஏற்றிவைக்கப்பட்ட திருடனிடம் உண்டான மாறுதல் (குணதோஷங்கள்), கட்டைக்கு ஒரு போதும் உண்டாகாது. அவ்விதமே மாறுதலற்ற (ஏகரூபமான) ஆத்மாவிற்கு, பிரபஞ்சத்தில் உண்டான மாறுதல் இல்லை. (மரத்தாலான தூணைத் திருடன் என்று கல்பித்துக்கொண்டு அந்தத் திருடனிடம் ஒருவர் எண்ணும் மாறுதல்கள் வாஸ்தவத்தில் தூணுக்கு இல்லாதது போல, பிரம்மத்தைப் பிரம்பஞ்சமாகக் கல்பித்துக் காணும் மாறுதல் பிரம்மத்தைத் தொடா.)

ஜ்ஞாதே ஸ்தா²ணௌ குதச்சோரச்சோராபா⁴வே ப⁴யம் குத: |
ஜ்ஞாதே ஸ்வஸ்மின் குதோ விச்வம் விச்வாபா⁴வே-குதோ(அ)கி²லம் || 79

கட்டையைக் (கட்டையென்று) அறிந்த பிறகு (அதில் தோன்றிய) திருடன் ஏது? திருடன் இல்லாதபொழுது பயம் எவ்விதம் ஏற்படும்? (இவ்வாறு) ஆத்ம ஸ்வரூபமானது அறியப்பட்ட பொழுது பிரபஞ்சம் எவ்விதம்? பிரபஞ்சம் இல்லாத பொழுது மற்றவை எல்லாம் ஏது?

கு³ண வ்ருத்தி த்ரயம் பா⁴தி பரஸ்பர விலக்ஷணம் |
ஸத்யாத்ம லக்ஷணே யஸ்மின் ஸ ஏவாஹம் நிரம்சக: || 80

ஸத்ய ஸ்வரூபமாகிய எந்) த (ஆத்மாவி) னிடத்தில் ஒன்றுக்கொன்று மாறுதல் உள்ள (ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற) குணங்களினால் உண்டான மூன்று விருத்திகளும் (குண பரிணாமங்களும்) விளங்குகின்றதோ அவயவமற்ற (பகுக்கப்படாத முழுமையான) அது (ஆத்மா)வே நான்.

தே³ஹ த்ரயமித3ம் பா⁴தி யஸ்மின் ப்³ரஹ்மணி ஸத்யவத் |
ததே³வாஹம் பரம் ப்³ரஹ்ம தே³ஹத்ரய விலக்ஷண: ॥ 81

எந்த பரமாத்மாவினிடம் இந்த (ஸ்தூலம், ஸுக்ஷ்மம், காரணம் என்ற) மூன்று சரீரமும் உண்மையானது போல் தோன்றுகின்றதோ, அந்த பரப்ரம்மமே மூன்று சரீரங்களுக்கும் வேறான நான்.

ஜாக்³ரதாதி³ த்ரயம் யஸ்மின் ப்ரத்யகா³த்மனி ஸத்யவத் |
ஸ ஏவாஹம் பரம் ப்³ரஹ்ம ஜாக்³ரதா³தி³விலக்ஷண: || 82

எந்த உள் வஸ்துவான ஆத்மஸ்வரூபத்தில் ஜாக்ரத் (ஸ்வப்னம், ஸுஷுப்தி) முதலிய மூன்றும் உண்மை போன்று (தோன்றுகின்றதோ) ஜாக்ரத் முதலான வற்றுக்கு வேறான அந்தப் பரப்ரஹ்மமே நான்.

விச்வாதி³க த்ரயம் யஸ்மின் பரமாத்மனி ஸத்யவத் |
ஸ ஏவ பரமாத்மாஹம் விச்வாதிக விலக்ஷண: || 83

எத்த பரமாத்வாவினிடம் விச்வன் (தைஜஸன், ப்ராக்ஞன்) ஆகிய (முறையே ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி அவஸ்தாபிமானிகள்) மூவரும் உண்மையானவர்கள் போன்று தோன்றுகிறார்களோ, விச்வன் முதலானவர்களுக்கு வேறான அந்த பரமாத்மாவே நான்.

விராடா³தி த்ரயம் பா⁴தி யஸ்மின் ஸாக்ஷிணி ஸத்யவத் |
ஸ ஏவ ஸச்சிதானந்த3 லக்ஷணோஹம் ஸ்வயம்ப்ரப: || 84

ஸாக்ஷியான. எந்த ஆத்மாவிடம் விராட், ஹிரண்யகர்ப்பன், ஈச்வரன் என்ற மூவரும் உண்மை போன்று தோன்றுகின்றன ரோ ஸத், சித் ஆனந்தங்களை ஸ்வரூபமாகக் கொண்டவரும், ஸ்வயம்பிரகாசருமான அந்த பரமாத்வே நான்.

ஸாக்ஷியான எந்த பரமாத்மாவிடம் ஸமஷ்டியான ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீராபிமானிகளான விராட்புருஷன், ஹிரண்யகர்பன், அந்தர்யாமி என்ற மூவர்களும் தோற்றமோ, ஸச்சிதானந்த ரூபனும், ஸ்வயம் பிரகாசனுமான அந்த பரமாத்மாவே நான்.

(ஜீவனுக்கு ஜாக்ரத் - ஸ்வப்ந - ஸுஷுப்தி போலவே, ஸகல ஜீவ ஸமூகத் திற்கும் காரணமான ஸகுணப்ரம்மத்துக்கு ஸ்திதி - - ஸ்ருஷ்டி - ஸம்ஹாரம்

என்பன. முறையே இம்மூன்றையும் ஆற்று கையில், ஸகுணப்ரஹ்மம் விராட், ஹிரண்யகர்பன், ஈச்வரன் எனப்படுகிறது.



ஜீவன்முக்த ஆனந்தலஹரீ

(பேரானந்த நிலையான ஆத்ம ஸாக்ஷாத்காரமடைந்தவர் உலகில் உடலில் இருப்பவராகக் காணப்படினும், இவற்றிலிருந்து விடுபட்ட முக்தி நிலையில் இருப்பவராதலிம், ஜீவன்முக்தர் எனப்படுவர். அவர்களது ஸ்திதி எப்பேர்ப்பட்ட பேரின்பப் பெருக்காய் உள்ளது என்பதை விளக்குவதால் இது "ஜீவன் முக்தானந்தலஹரீ" என்ப்படும்.)

புரே பௌரான் பச்யன் நர யுவதி நாமாக்ருதி மயான்
ஸுவேஷான் ஸ்வர்ணாலங்கரண கலிதாம் ச்சித்ர ஸத்3ருசான் ।
ஸ்வயம் ஸாக்ஷாத்3 - த்3ரஷ்டேத்யபி ச கலயம்ஸ்தை: ஸஹ ரமன்
முநிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருதீ3க்ஷா - க்ஷததமா: ॥ 1

(ஒரு) நகரத்தில் நல்ல உடை உடுத்தின வர்களாகவும்; தங்க ஆபரணங்களை தரித்தவர்களாகவும், உள்ள ஸ்திரீ புருஷர்களென்ற பெயரையும், உருவத்தையும் உடைய ஜனங்களைச் சித்திரத்தில் காணும் வடிவங்களைப்போலவே பார்த்துக் கொண்டும், தான் பார்த்துக்கொண்டிருக்கிற ஸாக்ஷி மாத்திரமே என்றும், அதே ஸமயத்தில் உணர்ந்துகொண்டும், அவர்களோடு ரமித்துக் கொண்டு இருக்கிற ஞானியானவர் (ஜீவன் முக்தர்) குருநாதரிடமிருந்து அடையப்பெற்ற ஞான தீக்ஷையினால் (அக்ஞான) இருள் நீங்கி விட்டவர். எனவே இவர் நகரத்திலே மாந்தரிடையே கலந்தாற்போல் வாழ்ந்த போதிலும் மோஹத்தை அடையவே மாட்டார்.

வநே வ்ருஷான் பச்யன் த3ள - ப2ல - ப4ராந் - நம்ர ஸுசிகா2ன்
க4நச்சா2யாச்ச2ன்னான் ப3ஹுளகல - கூஜ3த் - த்3விஜ - க3ணான் ।
ப4ஜன் க4ஸ்ரே ராத்ரா - வவநி - தல - தல்பைக - சயநோ
முநிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருத3க்ஷா - க்ஷததமா: ॥ 2

காட்டில் இலைகள், பழங்கள் இவைகளின் பாரத்தினால் தாழ்ந்திருக்கும் அழகான கிளைகளோடு கூடியதும், அடர்த்தியான நிழலால் மறைக்கப்பட்டதும், இனிக்கக் கூவுகிற ஏராள பக்ஷிக் கூட்டங்களோடு கூடியதுமான மரங்களைப் பார்த்துக்கொண்டும், பகல் வேளையில் அங்கு பார்த்தவைகளைக் கொண்டும், இரவு வேளையில் கட்டாந் தரையையே படுக்கையாகக் கொண்டு சயனிக்கிறவருமான முனி (ஜீவன் முக்தர்) தீக்ஷையினால் (அக்ஞான) இருள் நீங்கி விட்டவர். (எனவே அவர் வன வாழ்வின் வனப்புகளைக் காணும்) மோஹம் அடையமாட்டார்.

கதா[3]சித் ப்ராஸாதே[3] க்வசி[3]தபி ச ஸௌதே[4]ஷு த[4]நிநாம்
கதா[3] காலே சைலே க்வசித[3]பி ச கூலேஷு ஸரிதாம் |
குடீரே தா[3]ந்தாநாம் முநிஜந - வராணாமபி வஸன்
முநிர் ந வயாமோஹம் ப[4]ஜதி குருதீ[3]க்ஷா - க்ஷததமா: || 3

ஒரு ஸமயத்தில் அரண்மனையிலும், வேறு சில ஸமயங்களில் பணக்காரர் களுடைய மாடி வீடுகளிலும், பிரிதொரு ஸமயத்தில் மலையிலும், மற்றும் சில ஸமயங்களில் நதிகளுடைய கரைகளிலும், (இன்னும் சில ஸமயம்) இந்திரியங்களை அடக்கிய முனிஜன சிரேஷ்டர்களுடைய குடிசையிலும் வசித்துக்கொண்டிருக்கும் முனி தீக்ஷையினால் அக்ஞானம் நிவர்த்தியானவர் (ஆதலால் வாஸஸ்தான ஸௌக்யத்தில்) மோஹம் அடைகிறதில்லை.

க்வசித் பா[3]லை: ஸார்த[4]ம் கரதலக[3] தாலை: ஸஹஸிதை:
க்வசித் - தாருண்யாலங்க்ருத நர வதூ[4]பி: ஸஹ ரமன் |
க்வசித்[3] - வ்ருத்தை[4]ச்சிந்தாகுலித - ஹ்ருத[3]யைச்சாபி விலபன்
முநிர் ந வ்யாமோஹம் ப[4]ஜதி கு[3]ருதீ3க்ஷா - க்ஷததமா: || 4

சில ஸமயங்களில் உள்ளங்கைகளினால் தாளம் போட்டுக்கொண்டு சிறுவர்களுடன் சிரித்துப் பேசிக்கொண்டும், சில ஸமயங்களில் யௌவனப் பருவத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஸ்திரீ புருஷர்களோடு ரமித்துக்கொண்டும் சில ஸமயங்களில் கவலையினால் கலங்கின ஹிருதயத்தோடு கூடிய கிழவர்களோடு கூடப் புலம்பிக்கொண்டும் இருக்கிற முனியானவர் குரு தீக்ஷையினால் அக்ஞானம் நிவர்த்தியானவர் (ஆனதினால் இவர்களிடம் பற்றுக் கொண்டு) மோஹம் அடைவ தில்லை.

கதா[3]சித் வித்[3]வத்[3]பிர் விவிதி[3]ஷுபி - ரத்யந்த நிரதை:
கதா[3]சித் காவ்யாலங்க்ருதி ரஸ ரஸாலை: கவிவரை: |
கதா[3]சித் ஸத்தர்கை - ரநுமிதி - பரைஸ் தார்கிக வரைர்
முநிர் நவ்யாமோஹம் ப[4]ஜதி கு[3]ருதீ[3]க்ஷா - க்ஷததமா: || 5

சில ஸமயத்தில் இடைவிடா ஈடுபாட்டுடன் கூட ஞான நாட்டம் வைத்த வித்வான்களோடும், சில சமயத்தில், காவியங்களிலுள்ள அலங்காரங்களின் ரஸத்தை நன்கு ரஸிக்கும் கவிசிரேஷ்டர்களோடும், சில சமயத்தில் நன்கு தர்க்கம் செய்கிறவர்களும், அனுமானப் பிரமாணத்திலேயே ஈடுபட்டவர்களுமான தார்க்கீக சிரேஷ்டர்களோடும் (கலந்து பழகுவதாகக் காணப்படும்) முனியானவா குருவின் தீக்ஷையினால் அக்ஞானம் அழிவுபட்டவர் (ஆதலின்) முமுக்ஷுக்களிடம் பாசம், கலையில் பாசம், தர்க்கத்தில் பாசம் என்றிப்படி) மோஹமுறுவதில்லை.

கதா த்⁴யானாப்³யாஸை: க்வசி³தபி ஸபர்யாம் விகஸிதை:
ஸுக³ந்தை⁴: ஸத்புஷ்பை: க்வசிதபி த³ளைரேவ விமலை: ।
ப்ரகுர்வன் தே³வஸ்ய ப்ரமுதி⁴த - மநா: ஸந்நதிபரோ
முநிர் ந வ்யாமோஹம் ப⁴ஜதி கு³ருதீ³க்ஷா - க்ஷததமா: ॥ 6

சில ஸமயம் தியானாப்யாஸங்களோடும், சில ஸமயத்தில் நன்கு மலர்ந்த வாஸனையாயுள்ள சிறந்த புஷ்பங்களினாலும், சில ஸமயங்களில் சுத்தமான இதழ்களாலே மாத்திரமும், மிகுந்த வினயத் துடன்கூடியவராக பகவானுடைய பூஜையை ஆனந்தம் பொங்கும் மனத்தினராக ஈடுபட்டுச் செய்துகொண்டிருக்கும் முனி, குரு தீக்ஷையினால் அக்ஞானம் போன வராதலின் (தியானம், பூஜை இவையே லக்ஷ்யம் என்று) மோஹமுறுவதில்லை.

சிவாயா: சம்போ⁴ர் வா க்வசித³பி ச விஷ்ணோரபி கதா³
கணாத்யக்ஷஸ்யாபி ப்ரகடித - வரஸ்யாபி ச கதா³ ।
பட³ன் வை நாமாளிம் நயந - ரசிதாநந்த³ - ஸலிலோ
முநிர் ந வ்யாமோஹம் ப⁴ஜதி கு³ருதீ³க்ஷா - க்ஷததமா: ॥ 7

சில சமயங்களில் அம்பிகையின் அல்லது பரமசிவனின் (நாமாவளியை) சில சமயத்தில் விஷ்ணுவின் அல்லது கணபதியின் நாமாவளியையும், சில சமயம் வரம் கொடுக்கும் (வேறு ஏதோ ஒரு) மூர்த்தியின் நாமாவளியை கண்களில் ஆனந்தக்கண்ணீருடன் படித்துக்கொண்டிருக்கும் முனியானவர் குரு தீக்ஷ யினால் அக்ஞானம் அகன்றவர் (ஆதலால் பூஜிக்கப்பெறும் தேவதையும் பூஜிக்கும் தாமும் வேறு என்ற) மோஹத்தை அடைவதில்லை.

கதா³ க³ங்காம்போ⁴பி⁴: க்வசி³தபி ச கூபோத்²த ஸலிலை:
க்வசித் காஸாரோத்தை²: க்வசி³த³பி ஸது³ஷ்ணைச்ச சிசிரை: ।
ப⁴ஜன் ஸ்நாநம் பூ⁴த்யா க்வசி²தபி ச கர்பூர நிப⁴யா
முநிர் ந வ்யாமோஹம் ப⁴ஜதி கு³ருதீ³ஷா - க்ஷததமா: ॥ 8

ஒருசமயம் கங்கா ஜலத்தினால், சில சமயம் கிணற்றில் ஊறும் ஜலத்தினால் பின்னும் ஒரு சமயம் குளத்திலுள்ள ஜலத்தினால், வேறு சில சமயம் நல்ல சூடான வெந்நீரினால், மற்றும் சில சமயம் குளிர்ந்த ஜலத்தினால், சில சமயத்தில் கர்பூரம் பிரகாசிக்கும் விபூதியினால் (என்றிப்படிப் பலவிதத்தில்) ஸ்நாநம் செய்கிற முனியானவர் குரு தீக்ஷையினால் அக்ஞானம் விலகின வராதலால் (நித்ய சுத்த ஆத்மாவுக்கு ஸ்நானம் வேண்டும் என்ற) மோஹத்தை அடைகிறதில்லை.

கதா³சித் ஜாக³ர்த்யாம் விஷய கரணை: ஸம்வ்யவஹரன்
கதா³சித் ஸ்வப்நஸ்தா²னபி ச விஷயானேவ ச ப⁴ஜன் ।
கதா³சித் ஸௌஷுப்தம் ஸுக²மநுபவன்னேவ ஸததம்
முநிர் ந வ்யாமோஹம் ப⁴ஜதி கு³ருதீ³க்ஷா க்ஷத-தமா: ॥ 9

ஒரு சமயம் விழித்துக் கொண்டிருக்கும் போது விஷயங்களோடும், இந்திரியங்களோடும் நன்கு வியவஹாரம் செய்து கொண்டும், ஒரு சமயம் ஸ்வப்னதசைக்கான விஷயங்களையே துய்த்துக்கொண்டும், ஒரு சமயம் நல்ல தூக்கத்திலுள்ள ஸுகத்தை இடையின்றி அனுபவித்துக் கொண்டும் இருக்கிற முனி (இவ்வாறு காணப்பட்டாலும்) குரு தீக்ஷையினால் அக்ஞானம் போன வராதலால் (இம்மூன்று நிலைகளுக்கும் மேம்பட்ட துரீயத்தில் உறைந்தவராதலால், இந் நிலைகளை உண்மை என எண்ணாமல்) மோஹமுறுவதில்லை.

கதா3(அ)ப்யாசா வாஸா: க்வசி3தபி ச தி3வ்யாம்ப3ர - த4ர:
க்வசித் பஞ்சாஸ்யோத்தா2ம் த்வசமபி ததா4ந: கடி தடே ।
மநஸ்வீ நிஸ்ஸங்க3: ஸுஜந ஹ்ருத3யாநந்த3 ஜநகோ
முநிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருதீ3க்ஷா-க்ஷத-தமா: ॥ 10

ஒரு சமயம் திகம்பரராகவும், ஒரு சமயம் சிறந்த வஸ்திரத்தை உடுத்திக் கொண்டவராகவும், ஒரு சமயம் சிம்ஹத்திலிருந்து உண்டான தோலை (புலித் தோலை) இடுப்புப் பிரதேசத்தில் கட்டிக்கொண்டவராகவும் உள்ள நல்ல மனத்தவரும் பற்றற்றவரும், ஸாது ஜனங்களுடைய ஹிருதயத்திற்கு ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறவருமான முனி, குரு தீக்ஷையால் அக்ஞானம் விலகினவ ரானதால் (ஆடை ஆபரணங்களில்) மோஹம் அடைகிறதில்லை.

கதா3சித் ஸத்வஸ்த2: க்வசி3தபி ரஜோவ்ருத்தி ஸுக3தஸ்
தமோ வ்ருத்தி: க்வாபி த்ரிதய - ரஹித: க்வாபி ச புந: ।
கதா3சித் ஸம்ஸாரீ சருதிபத2 - விஹாரீ க்வசித3ஹோ
முநிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருதீ3க்ஷா - க்ஷத - தமா: ॥ 11

ஒரு சமயம் ஸத்வகுணத்தில் இருப்பவராகவும், ஒரு சமயம் ரஜோ குண நடத்தையில் ஈடுபட்டவராகவும், ஒரு சமயம் தமோகுண நடத்தையுள்ளவ ராகவும், ஒரு சமயம் முக்குணங்களற்றவராயும், ஒரு சமயம் (ஸுகதுக்கங்களை அனுபவிக்கும்) ஸம்ஸாரியாகவும், ஒரு சமயம் வேதமார்க்கத்தில் சஞ்சரிக்கிறவ ராகவும் முனிவர் (தோன்றுவது) ஆச்சரியம்! (இப்படியெல்லாம் தோன்றினாலும் அவர் குரு தீக்ஷையினால் அக்ஞானம் நீங்கின வராதலால் (இவை எவற்றிலும்) மன மயக்கமடைவதில்லை.

கதா3சிந் மௌநஸ்த2: க்வசித3பி ச வாக்3வாத3 - நிரத:
கதா3சித் ஸாநந்த3ம் ஹஸித - ரப4ஸஸ் - த்யக்த - வசந: ।
கதா3சித் லோகாநாம் வ்யவஹ்ருதி ஸமாலோகந பரோ
முநிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருதீ3க்ஷா - க்ஷத - தமா: ॥ 12

ஒருவேளை, மௌன நிலையில் இருந்துகொண்டும், மற்றொருவேளையில் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டும், ஒரு வேளை ஆனந்தமாக அடங்காமல் சிரித்துக்கொண்டு (அதனால்) பேசாமலிருந்துகொண்டும் (பேசமுடியாதவராகியும்,

உலகத்தார்களுடைய வியவஹாரங்களைப் பார்ப்பதிலேயே ஈடுபட்டுமிருக்கிற முனி, குரு தீக்ஷையினால் அக்ஞானம் நிவர்த்தியானவர் (இந்த உணர்ச்சிகள் ஸத்யமென எண்ணும்) மயக்கை அடைகிறதில்லை.

கதா3சித் சக்தீநாம் விகச முக3பத்3மேஷு கமலம்
க்ஷிபம்ஸ் - தாஸாம் க்வாபி ஸ்வயமபி ச க்3ருஹ்ணன் ஸ்வமுக2த: |
தத3த்3வைதம் ரூபம் நிஜபரவிஹீநம் ப்ரகடயன்
முநிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருதீ3க்ஷா - க்ஷத - தமா: ॥ 13

ஒரு சமயத்தில் ஸ்திரீகளுடைய மலர்ந்த பத்மம் போலுள்ள முகங்களின் மேல் தாமரையை விட்டெறிந்து கொண்டும், ஒரு சமயத்தில் தானும் அந்த ஸ்திரீகளால் (போடப்படும் தாமரையை) தன் முகத்தில் வாங்கிக்கொண்டும் தான் பிறர் என்பவை கிடையாதாய், இரண்டற்றதாய் உள்ள அந்த (ப்ரஹ்ம) ஸ்வரூபத்தை நன்கு காட்டிக்கொண்டிருக்கிற முனி ஞானியானவர் குருதீக்ஷையினால் அக்ஞானம் விலகினவராதலின் (ஸ்த்ரீ - புருஷ பேதமெனும்) மோஹத்தை அடைகிறதில்லை.

க்வசித் சைவை: ஸார்த4ம் க்வசித3பி சாக்தை: ஸஹ வஸன்
கதா3 விஷ்ணோர் ப4க்தை: க்வசி3தபி ச ஸௌரை: ஸஹ வஸன் |
கதா3 கா3ணாத்4யக்ஷைர் க3த - ஸகல - பே4தோ3(அ)த்3வயதயா
முனிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருதீ3க்ஷா - க்ஷத - தமா: || 14

சில சமயங்களில் சிவபக்தர்களோடும், சில சமயங்களில் சக்தி உபாசகர் களோடும் வசித்துக்கொண்டும், சில சமயங்களில் விஷ்ணுவினுடைய பக்தர் களோடும், சில சமயங்களில் ஸூர்ய உபாசகர்களோடு வசித்துக் கொண்டும், சில சமயங்களில் கணபதி உபாசகர்களோடு வசித்துக்கொண்டும், இரண்டற்ற தன்மையை அடைந்தவராய், எல்லாவித வேற்றுமைகளுமற்றவராய் இருக்கும் முனியானவர் குரு தீக்ஷையினால் அக்ஞானம் விலகின வராதலால் (தெய்வபேதம் எனும்) மோஹத்தை அடைகிறதில்லை.

நிராகாரம் க்வாபி க்வசித3பி ச ஸாகார - மமலம்
நிஜம் சைவம் ரூபம் விவித4குண பே4தே3ன ப3ஹுதா4 |
கதா3(ஆ)ச்சர்யம் பச்யன் கிமித3மிதி ஹ்ருஷ்யன்னபி கதா3
முநிர் ந வ்யாமோஹம் ப4ஜதி கு3ருதீ3க்ஷா - க்ஷத - தமா: || 15

சில சமயம் உருவமற்ற (பிரஹ்ம ஸ்வரூபத்)தையும், சில சமயம் நிர்மலமான தன்னுடைய மங்களமான ரூபத்தைபேய், பலவித குணங்களின் வேற்றுமையால் பலவித ரூபமுள்ளதாகவும், சிலசமயம் "இது என்ன?" என்று ஆச்சர்யமாகப் பார்த்துக்கொண்டும், (தனக்குத் தேஹமும் உண்டா என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டும்) பார்த்துக் கொண்டும், சில சமயம (இதில்) சந்தோஷப்பட்டுக் கொண்டும் இருக்கிற முனியானவர் குரு தீக்ஷையினால்

அக்ஞானம் நிவர்த்தியானவராதலின் (ரூபா ரூப பேதங்களில்) மோஹ முறுவதில்லை.

கதா[3](அ)த்[3]வைதம் பச்யன்னகி[3]லமபி ஸத்யம் சிவமயம்
மஹாவாக்யார்த்தா[2] - நா - மவக[2]தி - ஸமப்[4]யாஸ - வசத: ।
க[3]த - த்[3]வைதாபாஸ: சிவ சிவ சிவேத்யேவ விலபன்
முநிர் ந வ்யாமோஹம் ப[4]ஜதி கு[3]ருதீ[3]க்ஷா - க்ஷத - தமா: ॥ 16

சிலசமயம் (ஜீவ - ப்ரஹ்ம ஐக்யம் கூறுவதான உபநிஷத்திலுள்ள மஹா வாக்யங்களுடைய தாத்பர்யார்த்தங்களை அறிந்து நன்கு அப்யாஸம் செய்திருப் பதனால், எல்லாவற்றையும் இரண்டற்ற சத்யமான சிவமயமாக (அதாவது சாந்த அத்வைத - துரியமாக வே) பார்த்துக் கொண்டு, த்வைதத் தோற்றம் விலகினவராக

"சிவ, சிவ, சிவ," என்று மாத்திரம் புலம்பிக்கொண்டிருக்கும் முனியானவர் குரு தீக்ஷையினால் அக்ஞானம் விலகிவிட்டவராதலால் ('சிவ' என்னும் சொல், அதைச் சொல்லும் தாம், சொல்லப்படும் சிவபரமாத்மா இவற்றிடை பேதம் என்ற) மோஹத்தை அடைவதில்லை.

இமாம் முக்தாவஸ்த்தாம் பரமசிவ ஸம்ஸ்த்தாம் குருக்ருபா
ஸுதாபாங்க வ்யாப்யாம் ஸ்ஹஜ ஸுக வாப்யாமநுதினம் ।
முஹுர் மஜ்ஜன் மஜ்ஜன் பஜதி ஸுக்ருதைச்சேத் நரவர:
ஸதா த்யாகீ யோகீ கவிரிதி வதந்தீஹ கவய: ॥ 17

ஒருவர் நற்செயல்களால் (நற்செயல்களின் புண்ய பலனால்) குருவருளாகிய அமிருத கடாக்ஷத்தினால், பரமசிவ (மாகிய பரப்பிரஹ்ம)த்தில் நிலைத்து அநுதின மும மீள மீள தனது ஸ்வபாவமேயான ஆனந்தவாரியில் முழுகி முழுகி (மேலே ச்லோகங்களில் சொல்லப்பட்ட) இந்த ஜீவன் முக்தருடைய போக்கை (தாமறியாமல்)ச் செய்து காட்டு வாரேயானால் அவரே எப்பொழுதும் எல்லாவற்றையும் விட்டு விட்ட தியாகி (ஸன்யாஸி) அவரே, யோகி, அவரே எல்லாமறிந்தவர் என்று அறிவாளிகள் சொல்கிறார்கள்.



தத்த்வோபதேசம்

[சாந்தோக்ய உபநிஷத்தில் 'தத்-த்வமஸி' என்ற மகாவாக்யம் காணப்படுகிறது. இதில் தத், த்வம், அஸி என்று மூன்று பதங்கள் இருக்கின்றன. 'த்வம்' என்ற பதத்திற்கு 'நீ' என்று பொருள். இது ஜீவனைக் குறிக்கிறது. 'தத்' என்ற பதத்திற்கு 'அது' என்று பொருள். இது ப்ரஹ்மத்தைக் குறிக்கிறது. 'அஸி' என்றால் 'இருக்கிறாய்.' ஆகவே, 'நீ அதுவாக இருக்கிறாய்' அதாவது 'ஜீவனே ப்ரஹ்மம்' என்பது இந்த வாக்யத்தின் பொருள். ஆனால் ஜீவஸ்வரூபத்தில் பல தர்மங்கள் இருக்கின்றன. இதற்கு மாறான பல தர்மங்கள் ஸத்வஸ்துவான ப்ரஹ்மத்தில் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று முரண்பாடுற்ற தர்மங்களையுடைய இரண்டு வஸ்துக்கள் ஒன்றாக இருக்க முடியாதே என்ற நமது ஐயத்தைப் போக்க, 'தத்த்வோபதேசம்' என்ற இந்த ப்ரகரணத்தில் மஹா வாக்யத்திலுள்ள 'த்வம்' பதத்தின் பொருளையும், 'தத்' பதத்தின் பொருளையும் நன்கு சோதித்துக் காட்டுகிறார். அதாவது ஜீவனிடத்திலும், ப்ரஹ்மத்தினிடத்திலும் தோன்றும் பரஸ்பர மாறுபாடான தர்மங்கள் எல்லாம் உண்மையில் ஜீவ ஸ்வரூபத்திலோ, ஈசுவர ஸ்வரூபத்திலோ சேர்ந்தவையல்ல என்றும் மாயா ப்ரமையால் அவ்வாறு தோன்றுகிறது என்று கூறி அந்த தர்மங்களை எல்லாம் விலக்கி, சுத்தமான ஜீவ ஸ்வரூபத்தையும், ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் காட்டி இவற்றில் ஒன்றுக் கொன்று விரோதமில்லாமையால் இரண்டும் ஒன்று தான் என்று தீர்மானிக்கிறார். தத், த்வம் என்ற இருபதங்களின் லக்ஷ்யார்த்தமான ப்ரஹ்ம தத்வத்தை உபதேசிப்பதால் இதற்குத் 'தத்த்வோபதேசம்' என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது.]

தத்-தவம் பதா3ர்த2-சுத்3த்4யர்த2ம் கு3ரு: சிஷ்யம் வசோ(அ)ப்3ரவீத் |
வாக்யே தத்-த்வமஸித்யத்ர த்வம் பதா2ர்த2ம் விவேசய || 1

ஆசார்யர் "தத்" "த்வம்" என்ற இருபதங்களின் பொருளை சுத்தமாகச் (தெளிவாக விளக்கும் பொருட்டு) செய்ய சிஷ்யனைப் பார்த்து பின்வரும் வார்த்தையை சொன்னார். "தத்த்வமஸி" என்ற இந்த வாக்யத்தில் 'த்வம்' என்ற பதத்தின் பொருளைப் பிரித்துத் தெரிந்து கொள்.

ந த்வம் தே3ஹோ(அ)ஸி த்3ருச்யத்வாத் ரூப ஜாத்யாதி3மத்வத: |
பெ4ளதிகத்வா-தசுத்3த4த்வா-த3நித்யத்வாத் ததை2வ ச || 2

அத்3ருச்யோ ரூப ஹீனஸ்த்வம் ஜாதி ஹீநோ(அ)ப்யபெ4ளதிக: |
சுத்3தநித்யோ(அ)ஸி த்3ருக்3ரூபோ க4டோ யத்3வத் ந த்3ருக் ப4வேத் || 3

அறியப்படுவதாலும், ரூபம், ஜாதி முதலியவைகளுடன் கூடியிருப்பதாலும் பூதங்களிலிருந்து உண்டாகியிருப்பதாலும், அசுத்தமாயிருப்பதாலும் அவ்விதமே அழிந்து போவதாலும் தேஹமாயிருக்கவில்லை.

நீ அறியப்படாதவனாயும்; ரூபமற்றவனாயும்; ஜாதியில்லாதவனாயும், பூதங்களிலிருந்து உண்டாகாதவனாயும்; சுத்தனாயும் - அழிவில்லாதவனாயும்; அறிகிற ஞான ரூபியாயும் இருக்கிறாய். நீ பார்க்கும் ஜடமான (குடம் எவ்விதம் ஞானமாக தன்னைக் குடமாய்ப் பார்த்துக் கொள்வதாக) ஆகாதோ அறிவாலேயே அறியப்படுவதும், அறிவில்லாவிடில் வெறும் ஜடமேயான துமான தேஹமும் ஞான ரூபமான ஆத்மா ஆகாது.

ந ப⁴வாநிந்த்³ரியாண்யேஷாம் கரணத்வேந யத் ச்ருதி: |
ப்ரேரகஸ் - த்வம் ப்ருதக் தேப்⁴யோ ந கர்தா கரணம் ப⁴வேத் || 4

நீ இந்திரியங்கள் அல்ல. ஏனெனில், இவை கரணமாக (கருவியாக) கேட்கப்படுகிறது (அநுபவிக்கப்படுகின்றன). (அவைகளை) ஏவுகின்ற நீ அவைகளைக்காட்டிலும் வேறானவன். செய்கிறவனே கருவியாக ஆகமாட்டான்.

நாநைதாந் - யேகரூபஸ் - த்வம் பி⁴ந்நஸ் தேப்⁴ய: குத: ச்ருணு |
ந சைகேந்த்³ரிய - ரூபஸ் - த்வம் ஸர்வத்ராஹம் - ப்ரதீதித: || 5

இந்த இந்திரியங்கள் பலவாக இருக்கின்றன. ஒரே ஸ்வரூபமுள்ள நீ அவைகளைக்காட்டிலும் வேறானவன்; ஏனெனில் கேள் (சொல்கிறேன்) எல்லா இந்திரியங்களிலும் நான் என்ற (பொது) அறிவு ஏற்படுவதால் நீ ஏதாவது ஒரு இந்திரியமாக (மட்டும்) இருக்கமுடியாது.

ந தேஷாம் ஸமுதா³யோஸி தேஷாமந்யதமஸ்ய ச |
விநாசே(அ)ப்யாத்மதீ⁴ஸ் - தாவத³ஸ்தி ஸ்யாத் நைவமந்யதா² || 6

இந்த இந்திரியங்களுடைய கூட்டமாக நீ இல்லை. அவைகளில் ஏதாவது ஒன்றுக்கு அழிவு ஏற்பட்டாலும், நான் என்ற ஞானம் (அழியாமல்) இருக்கிறது. இவவாறு இல்லாவிட்டால் (இந்திரிய சமுதாயம் ஆத்மாவானால்) (ஒரு இந்திரியம் இல்லாதவனுக்கு) இவ்வாறு (நான் என்ற ஞானம்) உண்டாகாது.

பரத்யேகமபி தாந்யாத்மா நைவ தத்ர நயம் ச்ருணு |
நாநா ஸ்வாமிக தே³ஹோ(அ)யம் நச்யேத் பி⁴ந்ந மதாச்ரய: || 7

நாநாத்மாபி⁴மதம் நைவ விரு³த்³த⁴ விஷயத்வத: |
ஸ்வாம்யைக்யே து வ்யவஸ்தா² ஸ்யாதேகபார்தி²வ-தே³சவத்: || 8

அந்த இந்திரியங்கள் ஒவ்வொன்றும் ஆத்மாவல்ல. அந்த விஷயத்தில் யுக்தியை (காரண விளக்கத்தை) க் கேள். வெவ்வேறு அபிப்ராயங்களுக்கு இடமான, இந்த பல பேர்களை யஜமானர்களாக உடைய தேஹமானது அழிந்து விடும்.

ஒன்றுக்கொன்று எதிரிடையான விஷயங்களுள்ளதால் பல ஆத்மா என்பது (ஒரு ஜீவனுக்கே உள்ளது) ஒருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதல்ல. ஒரே'யஜமானன்

இருந்தால் தான், ஒரே அரசனுள்ள தேசம் போலக் கட்டுப்பாடு இருக்கும் (இருக்கமுடியும்).

(கண், காது முதலான இந்திரியங்களில் ஒவ்வொன்றும் ஆத்மா என்ற வாதமும் சரியல்ல. ஏனெனில் இந்த சரீரத்தில் ஆத்மாதான் யஜமானன். அவன் இஷ்டப்படிதான் சரீரத்தில் கார்யம் நடைபெறவேண்டும். ஒவ்வொரு இந்திரியமும் ஆத்மாவானால் ஒவ்வொரு இந்திரியமும் இந்த சரீரத்திற்குப் பூரண அதிகாரமுள்ள யஜமானன் ஆகும். பல யஜமானர்களுக்குக் கொள்கை ஒன்றாக இருக்குமானால் ஒத்துப்போக முடியும். இதில்லாமல் வெவ்வேறு எதிரிடையான கொள்கைகள் கொண்ட பலர் ஒரு தேசத்திற்கு அரசர்களாக இருப்பார்களேயானால் ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக்கொள்வதன் மூலம் தேசம் அழிந்துவிடும். இதுபோல கண்ணுக்கு ரூபம் விஷயம், காதுக்கு சப்தம் விஷயம், இவ்விதமே ஒவ்வொரு இந்திரியத்துக்கும் வெவ்வேறான விஷயங்கள். எல்லோருக்கும் சமமான அதிகாரம் இருக்கிறது. இந்த நிலைமையில் கண் என்ற யஜமானன் ரூபத்தைப் பார்க்க வேண்டும் என்று சொல்லும். அதே சமயத்தில் காது என்ற யஜமானன் சப்தத்தைக் கேட்க வேண்டும் என்று சொல்லும். ஒரே சமயத்தில் இரண்டும் நடை பெற முடியாது. ஆகவே ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக்கொண்டு தேஹத்தையே அழித்து விடும். ஆதலால் சரீரத்தில் பலர் யஜமானர்களாக இருக்க முடியாது. ஒரு தேசத்தில் ஒருவனே எல்லா அதிகாரங்களும் கொண்ட மஹாராஜனாக இருந்தால் அவனுக்குக் கட்டுப்பட்டு எல்லோரும் நடப்பதால் ராஜ்ய பரிபாலனம் நன்கு நடை பெறும். இதுபோல் சரீரத்திலும் செவ்வனே காரியங்கள் நடைபெறுவதால் ஒரே ஆத்மாவை (யஜமானனை) த்தான் ஒப்புக் கொள்ள வேண்டும்.)

ந மநஸ் - த்வம் ந வா ப்ராணோ ஜட³த்வாதே³வ சைதயோ: |
க³த - மந்யத்ர மே சித்த - மித் - யந்யத்வாநுபூ⁴தித: || 9

க்ஷுத் தருட்³ப்⁴யாம் பீடி³த: ப்ராணோ மமாயம் சேதி பே⁴த³த: |
தயோர் த்³ரஷ்டா ப்ருதக் தாப்⁴யாம் க⁴டத்³ரஷ்டா க³டாத்யதா² || 10

(மனம், ப்ராணன் என்ற) இவ்விரண்டும் ஜடமாயிருப்பதாலேயே (ஞான முள்ள) நீ, மனம் அல்ல. பிராணனுமல்ல." என்னுடைய மனது வேறிடத்தில் சென்றிருந்தது' என்று தன்னைக் காட்டிலும் வேறு பொருளாக அனுபவம் ஏற்படுவதால், (மனம் ஆத்மாவல்ல) என்னுடைய இந்த பிராணன் என்று சொல்கையில் வேற்றுமை தோன்றுவதாலும், பசிதாகங்களால் துன்பப்பட்ட (துன்பப்படுவதாலும்) பிராணன் (ஆத்மாவல்ல). எவ்விதம் குடத்தைப் பார்க்கிறவன் குடத்தைக்காட்டிலும் வேறானவனோ (அவ்வாறு) அந்த மனத்தையும் பிராணனையும் அறிகிறவன் அவைகளைக் காட்டிலும் வேறானவன். (என்னுடைய

வீடு, என்னுடைய புத்ரன் என்பது போல் என்னுடைய மனம், என்னுடைய ப்ராணன் என்றும் சொல்வதால், சொல்வதும் "நான்" இவற்றிற்கு வேறானவன் - என்றாகிறது. "என்னுடைய நான்" என்பதில்லை)

ஸுப்தௌ லீநா(அ)ஸ்தி யா போ³தே⁴ ஸர்வம் வ்யாப்நோதி தே³ஹகம் |
சிச்சா²யயா ச ஸம்ப³த்³தா⁴ ந ஸா புத்³திர் ப⁴வான் த்³விஜ || 11

நாநாரூபவதீ போ³தே⁴ ஸுப்தௌ லீநா(அ)திசஞ்சலா |
யதோ த்³ருகேகரூபஸ் த்வம் ப்ருத²க் தஸ்ய ப்ரகாசக: || 12

இரு பிறப்பாளனே! எது தூக்கத்தில் அடங்கியிருக்கிறதோ, விழித்திருக்கும் பொழுது சைதன்யப் ப்ரதிபிம்பத்துடன் சேர்ந்துகொண்டு சரீரம் முழுவதிலும் பரவியிருக்கிறதோ, அந்த புத்தியும் நீ இல்லை.

(புத்தியானது) விழித்துக் கொண்டிருக்கும் பொழுது, பலவித உருவ (ஆகார) த்துடன் கூடியதாகவும், மிகவும் சஞ்சலமான தாகவும், தூக்கத்தில் மறைந்ததாகவும் இருக்கிறது. ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாகக் கொண்டவனாதலால் அதை, (அந்த புத்தியைப்) பிரகாசப்படுத்துகிற (நீ) அந்த புத்தியைக் காட்டிலும் வேறானவன்.

நாம் விழித்துக் கொண்டிருக்கும்பொழுது பல விஷயங்களைத் தெரிந்து கொள்கிறோம். இதற்கு புத்திதான் காரணம். வெளியில் உள்ள விஷயங்களை கண், காது முதலான இந்திரியங்கள் மூலம் புத்தியால் மட்டும் அறிந்து கொள்கிறோம். உள்ளே ஏற்படும் ஸுகம், துக்கம் முதலியவைகளை புத்தியால் மட்டும் அறிந்து கொள்கிறோம். புத்தியானது சரீரம் முழுவதும் பரவியிருக்கிறது. சரீரத்தில் எந்த இடத்தில் வலி ஏற்பட்டாலும் புத்திக்குத் தெரிந்து விடுகிறது. கண்ணால் கோவிலில் உள்ள தேவதாமூர்த்தியைப் பார்க்கும் பொழுது புத்தியும் அந்த உருவமாக ஆகிவிடுகிறது. இதற்கு புத்தி விருத்தி என்று பெயர். இதில் சைதன்யம் பிரதிபிம்பிக்கிறது. உடனே நமக்கு அந்த விஷயத்தின் அறிவு ஏற்படுகிறது. புத்தி ஸ்வபாவத்தில் ஜடமாயிருந்தாலும் ப்ரகாசமான சைதன்ய பிரதி பிம்பத்துடன் கூடியிருப்பதால் அறியும் சக்தி அதற்கு ஏற்படுகிறது. தூக்கத்திலோ நமக்கு ஒன்றும் தெரிவதில்லை. அப்பொழுது புத்தி மறைந்து விடுகிறது. இவ்வாறு தான் ஜடமாய், வேறொரு பிரகாச வஸ்துவின் உதவியைக் கொண்டு பிரகாசிக்கிறதாயும், பலவித மாறுபாடுகளை அடைகிறதாயும், ஒரு சமயத்தில் மறைந்தே போவதாயும் உள்ள புத்தி எவ்வாறு ஆத்மாவாக இருக்க முடியும்? மேலும் மற்ற பொருள்களை நமக்குப் பிரகாசப்படுத்தும் புத்தியையும் பிரகாசப்படுத்துபவன் ஆத்மா. அவன் ஸ்வரூபமே ஞானம்தான். ஆதலால், புத்தி பிரகாசனான ஆத்மா புத்தியைக் காட்டிலும் வேறு.

ஸுப்தௌ தே³ஹாத்யபா⁴வே(அ)பி ஸாக்ஷீ தேஷாம் ப⁴வான் யத: |
ஸ்வானுபூ⁴தி ஸ்வரூபத்வாத் நாந்யஸ் தஸ்யாஸ்தி பா⁴ஸக: || 13

தூக்கத்தில் தேஹம் முதலியவைகள் இல்லாமல் போனாலும் அவைகளை ஸாக்ஷியாக அறிகிறவனாக நீ இருக்கிறதனால் ஸ்வானுபவ ரூபமாக இருக்கும் இந்த ஆத்மாவை விளங்கச் செய்கிற வேறு வஸ்து இல்லை.

ப்ரமாணம் போ3த4யந்தம் தம் போ3தம் மாநேந யே ஜநா: |
பு3பு4த்ஸந்தே த ஏதோ4பி4ர் த3க்3தும் வாஞ்ச2ந்தி பாவகம் || 14

ப்ரமாணமான (அறிவதற்கு ஸாதன் மான இந்திரியம் முதலியவற்றை) அறிவுறுத்துகின்ற அந்த அறிவை (யே) பிரமாணத்தால் எந்த மனிதர்கள் அறிய விரும்புகிறார்களோ, அவர்கள் விறகுகளால் நெருப்பை (யே) எரிப்பதற்கு விரும்புகிறார்கள்!

(உலகிலுள்ள விஷயங்களை இந்திரியம், மனம் முதலான பிரமாணங்களால் அறிந்து கொள்கிறோம், இந்த பிரமாணங்களை அறியப்படுத்துகிறது ஞான ரூபமான ஆத்மா. இவ்விதமிருக்க இந்த பிரமாணங்களைக்கொண்டு ஆத்மாவை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? அக்னி தான் விறகை எரிக்கலாம் (அழிக்கும்). விறகால் நெருப்பை (அழிக்க) எரிக்க முடியுமா? இந்திரியம், மனம் முதலிய வற்றால் ஆத்மாவை அறிவது என்பது விறகால் நெருப்பை எரிப்பது போலத்தான்.)

விச்வமாத்மானுப4வதி தேநாஸௌ நாநுபூ4யதே |
விச்வம் ப்ரகாசயத் - யாத்மா தேநாஸௌ ந ப்ரகாச்யதே || 15

ஆத்மாவானது உலகத்தை அனுபவிக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தால் அந்த ஆத்மா அனுபவிக்கப்படுகிறதில்லை. ஆத்மாவானது பிரபஞ்சத்தை விளங்க வைக்கிறது. இந்த பிரபஞ்சத்தால் அந்த ஆத்மா பிரகாசிக்கப்படுவதில்லை.

ஈத்3ருசம் தாத்3ருசம் நைதத் ந பரோக்ஷம் ஸ்தே3வ யத் |
தத் - ப்ரஹ்ம த்வம் ந தே3ஹாதி3 த்3ருச்யரூபோ(அஸி ஸர்வத்ருக் || 16

எது "இப்பேற்பட்டது", "அப்பேற்பட்டது", "இவ்வாறு" (என்றெல்லாம் வர்ணிக்கும்படி) இல்லையோ, பரோக்ஷமாகவும் இல்லையோ (முக்காலத்திலும்) அழியாத தாகவே இருக்கிற அந்த ப்ரஹ்மம் தான் நீ. எல்லாவற்றையும் அறியும் நீ, சரீரம் முதலிய அறியப்படும் பொருளாக இருக்கவில்லை. (பரோக்ஷம் என்பது நேரில் அறிய முடியாதது; ஆத்மஜீவா தன்னைத்தானாய்த் தன்னிலேயே அறியும். இப்படி நேருக்கு நேர் அறிவது அபரோக்ஷம் எனப்படும்.)

இத3ம் - த்வேநைவ யத் பா4தி ஸர்வம் தச்ச நிக்ஷித்4யதே |
அவாச்ய தத்வ - மநித3ம் ந வேத்3யம் ஸ்வப்ரகாசத: || 17

எது "இது" என்றே தோன்றுகிறதோ அது எல்லாம் (ப்ரஹ்மம் அல்ல என்று உபநிஷத்துக்களில்) மறுக்கப்படுகிறது, "இது" வல்லாதது (ஆத்மா) சப்தத்தால்

சொல்லமுடியாத உண்மைப்பொருள். (அது) தானாகவே ப்ரகாசிப்பதால் (தன்னைத்தானே அறிந்து கொள்வதால், வேறொன்றால் அறியப்படும் பொருள் அல்ல.

ஸத்யம் ஞான - மநந்தம் ச ப்3ரஹ்ம - லக்ஷண - முச்யதே |
ஸத்யத்வாத் ஞாநரூபத்வாத் அருந்ததத்வாத் த்வமேவ ஹி || 18

ஸத்யம் (உண்மை), ஞானம் (அறிவு), அநந்தம் (எல்லையில்லாதது) என்பன ப்ரஹ்மத்தின் லக்ஷணமாகச் சொல்லப்படுகின்றன. ஸத்யமாயிருப்பதாலும், ஞான ரூபமாயிருப்பதாலும், எல்லையற்று இருப்பதாலும் நீதான் (அந்த ப்ரஹ்மம்).

ஸதி தே3ஹாத்3யுபாதெ4ள ஸ்யாத் ஜீவஸ் - தஸ்ய நியாமக: |
ஈச்வர: சக்த்யுபாதி4த்வாத் த்3வயோர் - பா3தே4 ஸ்வயம் ப்ரப4: || 19

சரீரம் முதலிய உபாதி இருக்கும்பொழுது, ஜீவன் அதற்கு அடக்கி ஆள்பவனாக ஆவான், (மாயா) சக்தியை உபாதியாகக் கொண்டிருப்பதால், ஈசுவரன் (அதற்கு நியாமகன்). இரண்டு உபாதிகளையும் விலக்கிவிட்டால், தானே பிரகாசிக்கும் சைதன்யம் ஒன்று தான் (ஜீவன், ஈச்வரன் இருவருக்கும்) மிஞ்சி நிற்கும்.

அபேக்ஷ்யதே(அ)கி'2ர் மாநைர் ந யன் மாந - மபேக்ஷதோ |
வேத3வாக்யம் ப்ரமாணம் தத் ப்ரஹ்மாத்மா - வகதெள - மதம் || 20

எல்லா பிரமாணங்களாலும் எது எதிர்பார்க்கப்படுகிறதோ, எது வேறு ப்ரமாணத்தை எதிர்பார்க்கிறதில்லையோ, அந்த உபநிஷத் வாக்யம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தில் (ப்ரஹ்மத்தை ஆத்மாவாக நேரில் தெரிந்து கொள்வதில்) ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(ப்ரத்யக்ஷம், அநுமானம் முதலிய ப்ரமாணங்கள் எல்லாம் சப்தப்ரமாண மான வேதத்தை அனுஸரித்தால் தான் ப்ரமாணமாகும். வேத முடியான உபநிஷத் வாக்யத்தால் ஜீவப்ரஹ்ம ஐக்ய ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது.)

அதோ ஹி தத் - த்வமஸ்யாதி வேதவாக்யம் ப்ரமாணத: |
ப்ரஹ்மணோ(அ)ஸ்தி யயா யுக்த்யா ஸா(அ)ஸ்மாபி: ஸம்ப்ரகீர்த்யதே || 21

ஆகையால், எந்த யுக்தியினால்'தத் - த்வமஸி'முதலான வேதவாக்யம் ப்ரஹ்மத்திற்கு ப்ரமாணமாக இருக்கிறதோ, அந்த யுக்தி எங்களால் நன்கு சொல்லப்படுகிறது.

('தத்த்வமஸி' முதலான உபநிஷத் வாக்யத்தினால் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுவதாகக் கூறப்பட்டது. ஆனால் இந்த வாக்யத்தைக் கேட்பதால் மட்டும் ஒருவருக்கும் இந்த அனுபவம் ஏற்படுவதில்லை. அதனால் இந்த வாக்கியத்தி

லிருந்து ஆத்மானுபவம் ஏற்படுவதற்குவேண்டிய உபாயத்தை குருமார்களாகிய தங்களிடமிருந்து பெறவேண்டும் என்கிறார்.)

சோதி4தே த்வம் - பதா3ர்தே2 ஹி தத் - த்வமஸ்யாதி3 சிந்திதம் ।
ஸம்ப4வேத் நாந்யதா2 தஸ்மாத் சோத4நம் க்ருதமாதி3த: ॥ 22

'த்வம்' என்ற சொல்லின் பொருள், ஆராய்ந்து பார்க்கப்பட்ட பொழுதல்லவா'தத்த்வமஸி'முதலான வாக்யம் ஆராயப்பட்டதாக ஆகும்? அப்படியில்லாவிடில் ஆகாது. ஆகையால் முதலில் (இந்த ப்ரகரணத்தில் இதற்கு முன் இது) சோதனம் செய்யப்பட்டது. (ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டது. மேலும், இந்த "த்வம்" ஆகிய" நீ'யை விளக்குகிறார்.)

தே3ஹேந்த்3ரியாதி3 த4ர்மான் ய: ஸ்வாத்மந் - யாரோபயன் ம்ருஷா ।
கர்த்ருத்வாத் - யபி4மாநீ ச வாச்யார்த2ஸ் த்வம் - பத3ஸ்ய ஸ: ॥ 23

எவன் தன் ஸ்வரூபத்தில், தேஹம், இந்திரியம் முதலியவற்றின் தர்மங்களைப் பொய்யாக ஆரோபணம் செய்துகொண்டு (சுமத்திக் கொண்டு) கர்த்ருத்வம் முதலியவை இருப்பதாக அபிமானம் கொள்கிறானோ, அவன் த்வம்'எனும் பதத்திற்கு வாச்யார்த்தம் (வாச்யமான பொருள்). (யாவருக்கும் தெரியும் வெளிப்படையான பதப்பொருள்" வாச்யார்த்தம்'எனப்படும்.)

தே3ஹேந்த்3ரியாதி3 ஸாக்ஷீ ய: தேப்4யோ பா4தி விலக்ஷண: ।
ஸ்வயம் போ3த4 ஸ்வரூபத்வாத் லக்ஷயார்த2ஸ் த்வம் - பத3ஸ்ய ஸ: ॥ 24

எவன் தான் ஞானஸ்வரூபமாக இருப்பதால், தேஹம், இந்திரியம் முதலிய

வைகளை நேரில் அறிபவனாகவும், அவைகளைக்காட்டிலும் வேறுபட்ட தன்மை உள்ளவனாகவும் விளங்குகிறானோ, அவனே த்வம் என்ற சொல்லுக்கு லக்ஷ்யார்த்தம். (லக்ஷணையினால் கிடைக்கும் பொருள்). (ஆராய்ந்தறியும் உட்பொருளே லக்ஷ்யார்த்தம்.)

வேதா3ந்த வாக்ய ஸம்வேத்3ய விச்வாதீதாக்ஷரா - த்3வயம் ।
விசுத்தம் யத் ஸ்வஸம்வேத்3யம் லக்ஷயார்த2ஸ் தத் - பதஸ்ய ஸ: ॥ 25

எது உபநிஷத் வாக்யங்களால் அறியத்தக்கதும், பிரபஞ்சத்திற்கு அப்பால் பட்டதும், அழிவற்றதும், இரண்டற்றதும், பரிசுத்தமான தும், ஸ்வயம் ப்ரகாசமாகவும் உள்ளதோ, அது 'தத்' என்ற பதத்திற்கு லக்ஷ்யார்த்தம்.

ஸாமாநாதி4கரண்யம் ஹி பத3யோஸ் தத் - த்வமோர் - த்3வயோ:
ஸம்ப3ந்த4ஸ் - தேந வேதா3ந்தைர் - ப்3ரஹ்மைக்யம் ப்ரதி பாத்3யதே ॥ 26

'தத்' 'த்வம்' என்ற இரண்டு பதங்களுக்கும், ஸாமாநாதிகரண்யம் அல்லவா ஸம்பந்தம்? அதனால் உபநிஷத் வாக்யங்களால் ப்ரஹ்மத்தினின்று அபேதம் (வேறின்மை) விளக்கப்படுகிறது.

(தத், த்வம், இவ்விரு பதங்களும் 'தத்வமஸி' என்ற ஒரே வாக்யத்தில் இருப்பதால் ஒன்றுக்கொன்று சேர்ந்து கொண்டு தான் வாக்யார்த்தத்தை உண்டு பண்ணுகிறது. இவ்விரு பதங்களின் ஸம்பந்தத்திற்கு ஸாமாநாதிகரண்யம் என்று பெயர். அதை மேற்கொண்டு விளக்குகிறார். ஒரே பொருளைக் குறிப்பது தான் ஸாமாநாதிகரண்யம் என்பது. ஆகவே இந்த மஹா வாக்யத்திலிருந்து ப்ரஹ்ம அபேத ஞானம் உண்டாகிறது.)

பி[4]ந்ந ப்ரவ்ருத்தி ஹேதுத்வே பத[3]யோரேக வஸ்துநி |
வ்ருத்தித்வம் யத் ததை[2]வைக - விப[4]க்த்யந்தகயோ - ஸ்தயோ: || 27

ஸாமாநாதி[4] கரண்யம் தத் ஸம்ப்ரதா[3]யிபி[4]ரீரிதம் |
ததா[2] பதா[3]ர்தயோரேவ விசேஷண விசேஷ்யதா || 28

இருபதங்களுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் வெவ்வேறாக இருக்கும் பொழுது ஒரே விபக்தியந்தத்தை (ஒரே வேற்றுமை உருபைக் கடைசியில்) கொண்ட அவ்விரு பதங்களுக்கும் அப்படியே ஒரே வஸ்துவில் இருப்பது என்பது எதுவோ, அது ஸாமாநாதிகரண்யம் என்று சாஸ்திர ஸம்ப்ரதாயம் அறிந்தவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமே, இருபதங்களின் அர்த்தங்களுக்கும் விசேஷண விசேஷ்யபாவம் (சொல்லப்பட்டிருக்கிறது).

ஒரு சொல் ஒரு பொருளைக் குறிக்கிறதென்றால் அதற்குத் தனிப்பட்ட காரணம் இருக்கிறது. இதற்கு'ப்ரவ்ருத்தி நிமித்தம்'என்று பெயர். (ப்ரவ்ருத்திக்கு- சொல் பொருளைக் குறிப்பதற்கு, நிமித்தம் - காரணம்.) ஒவ்வொரு சப்தத்திற்கும் ஒவ்வொன்று ப்ரவிருத்தி நிமித்தமாக இருக்கும். ஒரே மாதிரி விபக்தியுடன் (வேற்றுமை உருபுடன்) கூடிய இருபதங்களுக்கு, ப்ரவ்ருத்தி நிமித்தம் வெவ்வேறாக இருந்தாலும் இரண்டும் ஒரே பொருளைக் குறிக்குமானால் அங்கு ஸாமாநாதிகரண்யம் இருப்பதாக சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. அதாவது, "சுக்லா கௌ:" வெளுப்பு நிறமுள்ள பசு" என்று சொல்கிறோம். இங்கு சுக்லபதமும், கோபதமும், ப்ரதமாவிபக்த்யந்தம். (முதல் வேற்றுமையில் இருப்பவை.) சுக்ல பதத்திற்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் வெளுப்பு நிறம். கோ பதத் திற்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் 'கோத்வம்' என்ற ஜாதி. ப்ரவ்ருத்தி நிமித்தம் வெவ்வேறாக இருந்தாலும் இரண்டு பதங்களும் சேர்ந்து ஒரே பசுவைக் குறிக்கிறது. இங்கு கோ - பதம் விசேஷ்யம் (விசேஷிக்கப்படுவது) சுக்லபதம் விசேஷணம் (விசேஷத்தைத் தருவது). விசேஷ்ய விசேணபாவம் உள்ள இடங் களில் ஸாமாநாதிகரண்யம் இருக்கும்.

அயம் ஸ : ஸோ(அ)யமிதிவத் ஸம்ப[3]ந்தோ[4] ப[4]வதி த்[3]வயோ: |
ப்ரத்யக்த்வம் ஸத்[3]விதீ[3]யத்வம் பரோக்ஷத்வம் ச பூர்ணதா || 29

பரஸ்பர விருத்3த4ம் ஸ்யாத் ததோ ப4வதி லக்ஷணா ।
லக்ஷய லக்ஷண ஸம்ப3ந்த4: பதா3ர்த2 ப்ரத்யகா3த்மனோ: ॥ 30

"இவன் (தான்) அவன், "அவன் (தான்) இவன்" என்பது போல் இரண்டு பதங்களுக்கும் ஸம்பந்தம் ஏற்படுகிறது. அபரோக்ஷமாயிருக்கும் தன்மையும், பரோக்ஷ மாயிருக்கும் தன்மையும், இரண்டாவது பொருளுடன் கூடியிருக்கும் தன்மையும், எங்கும் நிறைந்து ஒரே வஸ்துவாயிருக்கும் தன்மையும், ஒன்றுக் கொன்று எதிரிடையானதாக ஆகும். ஆகையால் லக்ஷணையானது இருக்கிறது. பதத்திற்கும் அதன் அர்த்தமான ப்ரத்யக் (உள்வஸ்துவான) ஆத்மாவுக்கும் லக்ஷ்யலக்ஷண ஸம்பந்தம்.

('சுக்லா கௌ:' என்ற வாக்யத்தில் போல தத் - த்வமஸி வாக்யத்தில் விசேஷ்ய விசேஷண பாவத்தைக்கொண்ட ஸாமாநாதிகரண்யம் கூற முடியாது. அவனே இவன், இவனே அவன் என்ற வாக்யத்தில் போல அபேதத்தைத்தான் வாக்யார்த்தமாகக் கூறவேண்டும். ஏனெனில் வெளுப்பான பசுவை நாம் நேரில் காண்பதால் அங்கு எல்லோருக்கும் தெளிவும், வெளிப்டையான வாச்யார்த்தத் தைக் கொண்டாலே போதும். இங்கு நீ (ஜீவன்) அவனாக (ஈசுவரனாக) இருக் கிறாய் என்று வாச்யார்த்தத்தைக்கொண்டு பொருள் கூறினோமானால் இது ஒன்றுக் கொன்று விருத்தமாயிருக்கிறது. த்வம் - பதத்தின் பொருளான ஜீவன் ப்ரத்யக்ஷ மாக இருக்கிறது. பல வேற்றுமைகளுடன் கூடியது. தத்பதத்தின் பொருளான ஈசுவரனோ பரோக்ஷம், எங்கும் நிறைந்த ஒரே வஸ்து. ஜீவன் ஈசுவரனாக இருக்க முடியாது. ஈசுவரன் ஜீவனாக இருக்க முடியாது. இவ்வாறு வாச்யார்த்தத்தில் விரோதம் ஏற்படுவதால் அதை விட்டு லக்ஷ்யார்த்தத்தையே கொள்ள வேண்டும்.

மாநாந்தரோபரோதா4ச்ச முக்2யார்த2ஸ்யாபரிக்3ரஹே ।
முக்2யார்த2ஸ்யாவிநாபூ4தே ப்ரவ்ருத்திர் - லக்ஷணோச்யதே ॥ 31

வேறு ப்ரமாணத்திற்கு விரோதம் ஏற்படுவதால், முக்யமான (வாச்ய) அர்த்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும் பொழுது, முக்யார்த்தத்தில் சேர்ந்துள்ள பொருளில் செல்வது'லக்ஷணை'என்று கூறப்படுகிறது.

(ஒரு வாக்யத்திலுள்ள பதங்களிலிருந்து கிடைக்கும் முக்யார்த்தத்தைச் சேர்த்துப் பார்த்ததில் அந்த வாக்யார்த்தம் ப்ரமாண விருத்தமாக இருக்குமானால் முக்யார்த்தத்துடன் சேர்ந்த வேறு பொருளை அந்த பதத்திற்கு அர்த்தமாகச் சொல்வது லக்ஷணை எனப்படும்.)

த்ரிவிதா4 லக்ஷணா ஜ்ஞேயா ஜஹத்யஜஹதீ ததா2 ।
அந்யோப4யாத்மிகா ஜ்ஞேயா தத்ராத்3யா நைவ ஸம்ப4வேத் ॥ 32

லக்ஷணையானது மூன்று விதமாக அறியத்தக்கது (ஜஹத், அஜஹத், ஜஹத்

ஜஹத் என்ற மூன்று விதம்.) (ஒன்று) விட்டது. (இரண்டு) அவ்விதம் விடாதது. (மூன்றாவது) இரண்டுமாக இருப்பதால் (விட்டும் விடாதது) என இவை அறியத் தகுந்தவை. இவற்றில் முதலாவது அர்த்தம் இங்கு பொருந்தாது. (பின்வரும் ச்லோகங்கள் இதை விளக்கும்.)

வாச்யார்த²மகில²ம் த்யக்த்வா வ்ருத்தி: ஸ்யாத்³யா தத³ன்விதே ।
க³ங்கா³யாம் கோ⁴ஷ இதிவத் ஜஹதீ லக்ஷணா ஹி ஸா ॥ 33

வாச்யார்த்தம் முழுவதையும் விட்டு, அதனுடன் சேர்ந்த வேறு பொருளில் இருப்பது யாதொன்று உண்டோ அது" கங்கையில் இடைச்சேரி" என்பது போல ஜஹத் லக்ஷணையல்லவா?

(சப்தத்திலிருந்து கிடைக்கக் கூடிய வாசயார்த்தத்தை விட்டு விட்டு அதனுடன் ஸம்பந்தமுள்ள வேறொரு வஸ்துவை இந்தப் பதத்திற்குப் பொருளாகக் கூறுவது ஜஹத்லக்ஷணை எனப்படும். உதாரணம்: - “கங்காயாம் கோஷ:" இந்த வாக்யத்திற்கு "கங்கையில் இடைச்சேரி இருக்கிறது" என்பது பொருள். கங்கை என்னும் சொல் இருகரைகளுக்குள் ஓடுகிற பிரவாஹத்தைக் குறிக்கும். அதுதான் வாச்யார்த்தம். ஜலப்ரவாஹத்தில் இடைச்சேரி இருக்க முடியாது. வாச்யார்த்தமான ப்ரவாஹத்தைக் கொண்டால் விரோதம் ஏற்படுகிறது. அதனால் இங்கு வாச்யார்த்தமான ப்ரவாஹத்தை விட்டுவிட்டு பிரவாஹத்தை ஒட்டியுள்ள கரையை, கங்கா பதத்தின் பொருளாக லக்ஷணையால் சொல்கிறோம். கங்கைக் கரையில் இடைச்சேரி இருக்கலாம். இப்போது விரோதம் இல்லை. இங்கு வாச்யார்த்தம் முழுவதையும் விட்டுவிடுவதால் இதற்கு ஜஹத்லக்ஷணை (விட்டலக்ஷணை) என்று பெயர்.

வாச்யார்த²ஸ்யைகதே³ சஸ்ய ப்ரக்ருதே த்யாக³ இஷ்யதே ।
ஜஹதீ ஸம்ப⁴வேத் நைவ ஸம்ப்ரதா³ய விரோத⁴த: ॥ 34

இங்கு கூறப்படும் தத் - த்வமஸி வாக்யத்தில், வாச்யார்த்தத்தினுடைய ஒரு அம்சத்திற்கு விடுதல் விரும்பப்படுகிறது. இது சாஸ்திர ஸம்ப்ரதாயத்திற்கு விரோதமாயிருப்பதால் ஜஹத் லக்ஷணை இங்கு ஸம்பவிக்காது.

'தத் - த்வமஸி' மஹாவாக்யத்தில் 'தத்' என்ற ஈச்வரன் மாயா உபாதியுடன் கூடிய சைதன்யம் என்பதே வாச்யார்த்தம்.) ஆனாலும் பொருள் கொள்கை யில்'தத்'என்பது மாயா உபாதியுமற்ற சைதன்யமான பிம்பம் என்றே கொள்கிறோம். அதாவது லக்ஷ்யார்த்தத்தை முழுதும் விடாமல் ஒரு அம்சத்தை மட்டும் விடுகிறோம். இவ்வாறே தேஹாதிகள் என்ற உபாதியுடன் கூடிய சைதன்யம் என்ற த்வம்பத வாச்யார்த்தத்திலும் ஏகதேசமான உபாதியைவிட்டு சைதன்யத்தை மட்டும் த்வம் பதத்தின் பொருளாகச் சொல்கிறோம்.'கங்காயாம்'என்பதில்'ப்ரவாஹம்'என்ற வாசயார்த்தம் முழுவதையும் விட்டு 'கரை' என்ற வேறு அர்த்தத்தைக் கொள்வதால், அங்கு ஜஹத்ல க்ஷணை (விட்டலக்ஷணை) பொருந்தும். மஹாவாக்யத்தில்

வாச்யார்த்தம் முழுவதையும் விடாதபடியாலும் ஏகதேசத்தை வைத்துக்கொள்வதாலும், இங்கு ஜகத்லக்ஷணை (விட்டலக்ஷணை) பொருந்தாது.

வாச்யார்த[2]மபரித்யஜ்ய வ்ருத்திரந்யார்த[2]கே து யா |
கதி[2]தேய - மஜஹதீ சோணோ(அ)யம் தா[4]வதீதிவத் || 35

வாச்யமான பொருளை விடாமல் வேறு பெருாளில் இருப்பது எதுவோ இது "சிகப்பு நிறமுள்ள இது (குதிரை) ஓடுகிறது" என்பது போல அஜஹத் லக்ஷணையாக கூறப்பட்டுள்ளது.

வாச்யமான பொருளையும் விடாமல் வாச்யமல்லாத வேறு பொருளையும் குறிக்குமானால் அங்கு அஜஹத்ல க்ஷணையாகும். சோணோ தாவதி என்ற வாக்யத்தில்'சோண'என்றால் சிகப்பு நிறம்','தாவதி'என்றால் 'ஓடுகிறது' என்று பொருள். நிறம் என்பது குணமான தால் அது திரவ்யத்தை விட்டுத் தனியாக இருக்காது. சிகப்பு நிறம் மட்டும் தனியாக ஓடாது. ஆகவே, 'சிவப்பு நிறம் ஓடுகிறது' என்ற வாக்யார்த்தில் ப்ரத்யக்ஷ விரோதம் ஏற்படுவதால் சோணபதத்திற்கு 'சிகப்பு நிறமுள்ள குதிரை' என்று லக்ஷணையால் பொருள் சொல்கிறோம். இங்கு வாச்யார்த்தமான சிவப்பு நிறத்தை விடாமல், அதையும் சேர்த்து சிகப்புக் குதிரை என்று பொருள் கூறுவதால் இங்கு அஜஹலக்ஷணை யாகும்.

ந ஸம்ப[4]வதி ஸா(அ)ப்யத்ர வாச்யரர்தே[2](அ)திவிரோத[4]த: |
விரோதா[4]ம்ச பரித்யாகோ[3] த்[3]ருச்யதே ப்ரக்ருதே யத: || 36

ப்ரக்ருதமான தத்த்வமஸி வாக்யத்தில், வாச்யமான பொருளில் மிகுந்த விரோதமிருப்பதால் விருத்தமான பாகத்தைக் கைவிடுவது காணப்படுகிற படியால் இங்கு அந்த அஜஹத்லக்ஷணையும் பொருந்தாது.

('தத் - த்வமஸி' மஹாவாக்யத்தில் அஜஹத்லக்ஷணையும் பொருந்தாது. வாச்யார்த்தத்தைவிடாமல் முழுவதும் சேர்த்துக்கொண்டால்தான் அஜஹத் லக்ஷணை சொல்லலாம். மஹாவாக்யத்திலோ வாச்யார்த்தமான உபாதிகளைச் சேர்த்துக்கொண்டால் விரோதம் ஏற்படுகிறது. அதற்காக விருத்தமான அம்சத்தை விட்டு விடுகிறோம். ஆகையால் அஜஹத்லக்ஷணையும் இல்லை.)

வாச்யார்த[2]ஸ்யைகதே[3]சம் ச பரித்யஜ்யைகதே[4]சகம் |
யா போ[3]த[4]யதி ஸாஜ்ஞேயா த்ருதீயா பா[4]க[3]லக்ஷணா || 37

வாச்யமான அர்த்தத்தின் ஒரு அம்சத்தை விட்டு விட்டு மற்றோர் அம்சத்தை எது அறிவிக்கிறதோ, அது மூன்றாவதான பாகலக்ஷணையாக அறியத் தகுந்தது.

(வாச்யமான அர்த்தத்தில் ஒரு அம்சத்தை விட்டுவிட்டு மற்றோர் அம்சத்தை மட்டும் பதத்திற்குப் பொருளாகக் கூறுவதானால் அது மூன்றாவதான ஜஹத்

ஜஹத்லக்ஷணை எனப்படும். வாச்யார்த்தத்தில் ஒரு பாகத்தைவிட்டு ஒரு பாகத்தை எடுத்துக்கொள்வதால் இதற்கு பாகலக்ஷணை என்றும் பெயர் உண்டு.)

ஸோ(அ)யம் விப்ர இத³ம் வாக்யம் போ³த4யத்யாதி3தஸ்ததா2 ।
தத்காலத்வ விசிஷ்டம் ச ததை2தத் கால ஸம்யுதம் ॥ 38

அதஸ்தயோர் விருத்³த⁴ம் தத் தத்காலத்வாதி3தர்மகம் ।
த்யக்த்வா வாக்யம் யதா. விப்ரபிண்டம் போதயதீரிதம் ॥ 39

ததை2வ ப்ரக்ருதே தத்த்வமஸித்யத்ர ச்ருதௌ ச்ருணு । 39

"அவன் (தான்) இந்த ப்ராஹ்மணன்," என்ற இந்த வாக்கியம் முதலில் அப்படியே அந்த காலத்துடன் கூடின வரும், அவ்விதமே இந்தக் காலத்துடன் கூடினவருமான பிராமணனை அறிவிக்கிறது. ஆகையால் அவைகளில் விருத்தமான அந்த அந்தக்காலம் முதலான தர்மத்தை விட்டு விட்டு வாக்யமானது எப்படி பிராமணவ்யக்தியை அறிவிக்கிறது (என்று) சொல்லப்பட்டுள்ள தோ அவ்விதமே ப்ரக்ருதமான தத்வமஸி என்ற இந்த வேத வாக்யத்தில் கேள். (காசியில் ஒருவன் ஒரு பிராமணரைக் கண்டான். பிற்பாடு அதே பிராமணரை ராமேசுவரத்தில் கண்டான். ஞாபகம் வந்துவிடுகிறது. "ஸோயம் விப்ர:' "அவன் தான் இந்த பிராமணன்" என்று சொல்கிறான். காசியில் அன்று பார்த்தோமே அந்த பிராமணன் தான் இவன் என்பது இந்த வாக்யத்தின் பொருள். இந்த வாக்யத்தில் ஸ: "அவன்" என்ற பதத்திற்கு, அந்தக் காசி தேசம், அந்தக் காலம் இவைகளுடன் சேர்ந்த பிராமணன் என்று அர்த்தம். அயம் "இவன்" என்ற பதத்திற்கு இந்த ராமேசுவர தேசம், இந்தக் காலம் இவைகளுடன் சேர்ந்த பிராமணன் என்று அர்த்தம். இரண்டும் ஒன்று என்பதை வாக்யம் காட்டுகிறது. இது விருத்தம். காசியும், ராமேசுவரமும், அந்தக் காலமும், இந்தக் காலமும் ஒன்றாக முடியாது. அதற்காக ஸ:, அயம் என்ற பதங்களின் வாச்யார்த்தத்தில் ஏகதேசமான காலதேசங்களை விட்டு, மற்றோர் பாகமான பிராமண வியக்தியைமட்டும் இருபதங்களும் லக்ஷணையால் கூறுவதாக ஒப்புக்கொண்டு இந்த வாக்யம் அபேதத்தை போதிக்கிறதாகச் சொல்கிறோம். இதுதான் பாகலக்ஷணை. இதேபோல் தத்தவமஸி மஹாவாக்யத்திலும் உபாதிகளை விட்டு விட்டுப் பார்த்தால்'தத்" எனும் ஈச்வரன், "த்வம்" எனும் பிரம்மம் இரண்டுக்கும் ஐக்யம் தான் அர்த்தம்.

ப்ரத்யக்த்வாதீ³ன் பரித்யஜ்ய ஜீவ த³ர்மாம்ஸ் - த்வம்: பதா³த் ॥ 40

ஸர்வஜ்ஞத்வபரோக்ஷாதீ³ன் பரித்யஜ்ய தத³: பதா³த் ।
சுத்த⁴ம் கூடஸ்த²- மத்³வைதம் போ³த யத்யாத³ராத் பரம் ॥ 41

தத் - த்வமோ: பத³யோரைக்யமேவ தத் - த்வமஸீத் - யலம் ।

“த்வம்" பதத்திலிருந்து கிடைக்கும் அபரோக்ஷத்வம் முதலான ஜீவனுடைய தர்மங்களை விட்டு,'தத்'பதத்திலிருந்து கிடைக்கும் ஸர்வஞத்வம், பரோஷம் முதலான தர்மங்களை விட்டு, தத்த்வமஸி என்ற வாக்யம் தத் - த்வம்

பதார்த்தங்களின் அபேதத்தைத் தான் (அதாவது) சுத்தமாயும், விகாரமற்றதாயும், இரண்டற்றதாயுமுள்ள பரப்ரஹ்மத்தை கவனமாக நன்கு அறியப்படுத்துகிறது.

(தத்த்வமஸி மஹாவாக்யத்தில் த்வம் பதத்திற்கு அபரோக்ஷத்வம், பேதம் முதலிய தர்மங்களுடன் கூடிய சைதன்யம் வாச்யார்த்தம். இதில் முதலில் கூறப்பட்ட தர்மங்களை விட்டு விடவேண்டும். தத்பதத்திற்கு ஸர்வஞத்வம், பரோக்ஷத்வம் முதலிய தர்மங்களுடன் கூடிய சைதன்யம் வாச்யார்த்தம். இதிலும் முதலில் கூறப்பட்ட தர்மங்களை விட்டுவிட வேண்டும். இரண்டிலும் வாச்யார்த் தத்தில் மிஞ்சியுள்ளது சைதன்யம் தான். இந்த சைதன்யமே லக்ஷணையால் இரண்டு பதங்களுக்கும் பொருள் ஆகிறது. அதனால்'தத்'தும் தவம் மும ஒன்றுதான் என்பதை வாக்யம் காட்டுகிறது.

இத்த²மைக்யாவபோ³தேந⁴ ஸம்யக்²ஜ்ஞானம் த்³ருடம் நயை: || 42
அஹம் ப்ரஹ்மேதி விஜ்ஞானம் யஸ்ய சோகம் தரத்யஸௌ |

இவ்வாறு யுக்திகளால் (உண்டாகும்) அபேத ஞானத்தால், தத்வஞானம் உறுதியாகி எவனுக்கு" நான் ப்ரஹ்மம்" என்ற ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறதோ அவன் பிறவித் துன்பத்தைத் தாண்டுகிறான்.

ஆத்மா ப்ரகாசமாநோ(அ)பி மஹாவாக்யைஸ் ததை²கதா || 43

தத் - த்வமோர் - போ34த்யதே (அ) தாபி பௌர் வாபர்யானுஸாரத: |
ததாபி சக்யதே நைவ ஶ்ரீகுரோ : கருணாம் விநா ॥ 44

அபரோக்ஷயிதும் லோகே மூடை4: பண்டி3தமாநிபி4: |

ஆத்மா, (எப்போதும்) பிரகாசிப்பதாயிருந்த போதிலும், அப்படியே மஹா வாக்யங்களால் முன்னாலும், பின்னாலும் சொல்லியிருக்கும் விஷயத்தை அனுஸரித்து தத்பதார்த்தமான ஈசுவரனுக்கும், த்வம்பதார்த்தமான ஜீவனுக்கும் அபேதம் அறிவிக்கப்படுகிறதாயிருந்தபோதிலும், உலகில் பண்டிதர் என்ற கர்வம் கொண்ட மூடர்களால், ஸத்குருவின் கருணை இல்லாமல் நேரில் அறிந்துகொள்வதற்கு (ப்ரத்யக்ஷமாய் அநுபவிப்பதற்கு) முடியாது.

அந்த:கரண ஸம்சுத்தௌ ஸ்வயம் ஜ்ஞானம் ப்ரகாசதே || 45
வேத3வாக்யைரத: கிம் ஸ்யாத் கு3ருணேதி ந ஸாம்ப்ரதம்

மனமானது பரிசுத்தமாக ஆனதும், உபநிஷத் வாக்யங்களால் ஞானமானது தானாகவே ப்ரகாசிக்கிறது. ஆகையால் குருவினால் என்ன பிரயோஜனம் ஏற்படும்? என்பது உசிதம் இல்லை.

ஆசார்யவான் புருஷோ ஹி வேதே³த்யேவம் ச்ருதிர்ஜகெ³ள || 46
அநாதா³விஹ ஸம்ஸாரே போ³த⁴கோ கு³ருரேவ ஹி |

"ஆசார்யனுடன் கூடிய மனிதன் (தான்) (ஸத்யத்தை) அறிந்துகொள்கிறான்"

என்று இவ்விதமாக வேதம் சொல்லியுள்ளது அல்லவா! (ஆகையால்) ஆரம்பமில்லாத இந்த ஸம்ஸாரத்தில் ஞானத்தைத் தருபவர் குருநாதனே! அன்றோ?

(சாந்தோக்ய உபநிஷத்தில் ஆறாவது அத்தியாயத்தில் (14 - 2) ச்வேதகேது வுக்கு ஆருணி 'தத்த்வமஸி' மஹாவாக்யத்தை உபதேசம் செய்யும் இடத்தில் 'ஆசார்யவான் புருஷோவேத' என்னும் வாக்யம் காணப்படுகிறது. ஆசார்யரோடு கூடிய, அதாவது ஆசார்யரிடமிருந்து உபதேசம் பெற்றவர்தான் ஆத்மாவை அறிகிறான், அவனுக்குத்தான் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும் என்பது இந்த வாக்யத்தின் கருத்து.)

அதோ ப்³ரஹ்மாத்ம வஸ்த்வைக்ய ஜ்ஞாத்வா த்³ருச்யமஸத்தயா || 47

அத்³வைதே ப்³ரஹ்மணி ஸ்தே²யம் ப்ரத்யக்²ப்ரஹ்மாத்மநா ஸதா |

ஆகையால் ப்ரஹ்மம், ஆத்மா இந்த வஸ்துக்களின் அபேததுதை (குருவின் உபதேசத்தால்) அறிந்து, காணப்படுப் பிரபஞ்சத்தைப் பொய்யான தாக அறிந்து, எப்பொழுதும் உள் பொருளான ப்ரஹ்மஸ்வ ரூபமாக அத்வைத ப்ரஹ்மத்தில் நிலைத்திருக்கவேண்டும்.

ஞான அடர்த்தியான அந்த இரண்டற்ற ப்ரஹ்மம் பிரத்யக்ஷ மாக அறியப் பட்டதாக ஆகிறது. அதுதான் இங்கு உபநிஷத்துக்களால் கருத்துடன் விளக்கத்தக்கது. ஜடமான த்வைதம் இல்லை. (த்வைதம் என்பது பலவான அழியும் பிரபஞ்சத்தைக் குறிக்கும்.)

ஸுக²ரூபம் சித³த்⁴வைதம் து³: கரூபமஸத் ஜட³ம் || 49
வேதா³ந்தைஸ் தத்³ - த்³வயம் ஸம்யக் நிர்ணீதம் வஸ்துதோ நயாத் |

ஒன்றான சைதன்யம் ஆனந்த ரூபம். பொய்யான ஜடப்பொருள் துக்க ரூபம். அவ்விரண்டும் யுக்தியினால், வஸ்து ஸ்வபாவத்தால், உபநிஷத்துக்களால் நன்றாக தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

அத்³வைதமேவ ஸத்யம் த்வம் வித்³தி⁴ த்³வைதமஸத் ஸதா³ || 50
சுத்³தே⁴ கத²மசுத்³த⁴ ஸ்யாத் த்³ருச்யம் மாயா மயம் தத: |

அத்வைதத்தையே உண்மையாகவும், த்வைதத்தை பொய்யாகவும் எப்பொழுதும் நீ அறிந்துகொள். சுத்தமான வஸ்துவில் அசுத்தமான பதார்த்தம். எப்படி இருக்கும்? ஆகையால், காணப்படும் பிரபஞ்சம் மாயையால் ஏற்பட்டது (பொய்யானது).

சுக்தௌ ரூப்யம் ம்ருஷா யத்3வத் ததா2 விச்வம் பராத்மனி || 51
வித்3யதே ஸ்வத: ஸத்வம் நாந்யத: ஸத்வமஸ்தி ஹி |

எப்படி கிளிஞ்சலில் வெள்ளி பொய்யாக உள்ள தோ, அப்படிப் பிரபஞ்சம் ப்ரஹ்மத்தில் (பொய்யாக) இருக்கிறது. (அதற்கு) உண்மை தானாகவும் இல்லை; மற்றவை மூலமாகவும் உண்மை கிடையாதல்லவா.

(வெயிலில் மினுமினுக்கும் கிளிஞ்சலைப் பார்த்து. ப்ராந்தியால் வெள்ளி என நினைக்கிறான். அவன் கண்ணுக்கு கிளிஞ்சல் தெரிவதில்லை. வெள்ளி தெரிகிறது. இந்த வெள்ளி உண்மையல்ல. பொய்யானது. இதற்குத் தானாகவும் ஸத்வம் கிடையாது. காரணத்திலுள்ள தர்மங்களை கார்யத்தில் காண்பது போல் வேறொன்றின் மூலமாகவும் இதற்கு ஸத்வம் சொல்லமுடியாது.)

பா3த்4யத்வாத் நைவ ஸத்3 த்3வைதம் நாஸத் ப்ரத்யக்ஷபா4நத: || 52
ஸத3ஸத் ந விருத்3த4த்வாத் அதோ(அ)நிர்வாச்யமேவ தத் |

வேற்றுமை கொண்ட பிரபஞ்சம் மறைந்து போவதால், ஸத்தான (உண்மையான) பொருள் அல்ல. நேரில் தோன்றுவதால், இல்லாத பொருளும் அல்ல. ஒன்றுக்கொன்று விருத்தமாயிருப்பதால், ஸத்தாயும், அஸத்தாயும் உள்ள பொருளும் அல்ல. ஆகையால் அது இன்ன விதம் என்று சொல்ல முடியாததுதான்.

(கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளியைக் கடையில் உள்ள வெள்ளியைப்போல் ஸத்வஸ்து (உண்மைப் பொருள்) எனக் கூறமுடியாது. ஏனெனில், 'இது கிளிஞ்சல்' என்ற உண்மை அறிவு ஏற்பட்டவுடன், இந்த வெள்ளி மறைந்து விடுகிறது. உண்மைப் பொருளாயிருந்தால், ஞானத்தால் மறைந்து போகாது. ஆயினும் இதை அஸத் (இல்லவே இல்லை) என்றும் கூறமுடியாது. ஏனெனில் நேரில் அதை (மினுமினுப்பைப்) பார்க்கிறோம். இல்லாததை எப்படிப் பார்க்க முடியும்? ஸதஸத் (இருப்பும் இல்லாமையும் கலந்தது) என்றும் கூறமுடியாது. ஏனெனில், இரண்டும் ஒன்றுக்கொன்று விருத்தமானது. ஸத்தாயிருந்தால் அஸத்தாக இருக்காது. அஸத்தாயிருந்தால் ஸத்தாக இருக்காது. ஆகவே அது அநிர் வாச்யம் அல்லது அநிர் வசநீயம், அதாவது இன்னவிதம் என்று கூற முடியாத பொருள் எனப்படுகிறது. இதேபோல பிரபஞ்சமும் ப்ரஹ்மஞானத்தால் மறைந்து போவதாலும், நேரில் தோன்றுவதாலும் ஸத்தாகாவா, அஸத்தாகவோ கூறமுடியாமலிருப்பதால் அநிர்வசனீயம்)

ய: பூர்வமேக ஏவாஸீத் ஸ்ருஷ்ட்வா பச்சாதி3த3ம் ஜக3த் ||
ப்ரவிஷ்டோ ஜீவரூபேண ஸ ஏவாத்மா ப4வான் பர: | 53

எது ஸ்ருஷ்டிக்கு முன்னால் ஒன்றாகவே இருந்ததோ, பின்னால் இந்த பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டி செய்து, ஜீவஸ்வ ரூபமாக (சரீரத்திற்குள்) நுழைந்திருக்கிறதோ அந்த பரமாத்மாதான் நீ.

ஸச்சிதா³னந்த³ ஏவ த்வம் விஸம்ருத்யாத்மதயா பரம் ॥ 54

ஜீவபா⁴வமனுப்ராப்த: ஸ ஏவாத்மாஸி போ³த⁴த: ।
அத்³வயாநநந்த³ சின்மாத்ர: சுத்த: ஸாம்ராஜ்யமாக³த: ॥ 55

நீ ஸச்சிதானந்தமான பரப்ரஹ்மம்தான். உன் ஆத்மாவாக இருக்கும் பரப்ரஹ்மத்தை மறந்து ஜீவத்தன்மையை அடைந்துவிட்டாய். (இப்பொழுது) ஞானத்தால் இரண்டற்றதும், ஆனந்தத்தையும், ஞானத்தையுமே ஸ்வ ரூபமாகக் கொண்டதும், பரிசுத்தமானதுமான அந்தப் பரமாத்மாவாகவே இருக்கிறாய். (மோக்ஷ) ஸாம்ராஜ்யத்தை அடைந்து விட்டாய்.

கர்த்ருத்வாதீ³னி யாந்யாஸம் - ஸ் - த்வயி ப்3ரஹ்மாத்³வயே பரோ ।
தாநீதாநீம் விசார்யந்தே கிம்ஸ்வரூபாணி வஸ்துத: ॥ 56

இரண்டற்ற ப்ரஹ்மமாயும், எல்லாவற்றிற்கும் மேம்பட்டவனாயும் உள்ள உன்னிடத்தில், கர்த்ருத்வம் முதலிய எந்த தர்மங்கள் இருந்தனவோ, அவைகள் உண்மையில் எத்தகைய ஸ்வரூபமுள்ளவை என்று இப்பொழுது விசாரிக்கப் படுகின்றன.

அத்ரைவ ச்ருணு வ்ருத்தாந்த மபூர்வம் ச்ருதிபா⁴ஷிதம் ।

இவ்விஷயத்திலே உபநிஷத்தில் கூறப்பட்ட அபூர்வமான கதையைக் கேள்.

(இந்த விஷயத்தில் சாந்தோக்ய உபநிஷத்தில் ஆறாவது அத்யாயத்தில் ஆருணி ச்வேதகேதுவுக்கு தத்வமஸி மஹாவாக்யத்தை உபதேசிக்கும் பொழுது சொன்ன கதையைச் சொல்கிறேன் கேள்.)

கச்சித் கா³ந்தா⁴ர தே³சீயோ மஹாரத்ந விபூ⁴ஷித: ॥ 57
ஸ்வக்³ருஹே ஸ்வாங்கணே ஸுப்த: ப்ரமத்த: ஸன் கதா⁴சநா ।

ஒருசமயம், காந்தார தேசத்தில் வசிக்கும் ஒருவன் சிறந்த ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டவனாக தன் வீட்டில், தன் அறையில் கவனக்குறைவுள்ளவனாகத் தூங்கினான்.

ராத்ரௌ சோரை: ஸமாக³த்ய பூ⁴ஷணானாம் ப்ரலோபி⁴தை: ॥ 58

ப³த்³த்⁴வா தே³சாந்தரம் சோரைர் நீத: ஸன் க³ஹனே வநே ।
பூ⁴ஷணாந்யபஹ்ருத்யாபி ப³த்³தா⁴க்ஷகர பாதக: ॥ 59

நிக்ஷிப்தோ விபிநே(அ)தீவ குச - கண்டக - வ்ருச்சிகை: ।
வ்யாள - வ்யாக்ராதிபிச்சைவ ஸங்குலே தருஸங்கடே ॥ 60

இரவில் நகைகளில் பேராசைகொண்டு வந்த திருடர்களால், கட்டி வேறு தேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உட்புக முடியாத காட்டில், நகைகள் திருடப்பட்டு, திருடர்களால் கண், கைகால்கள் கட்டப்பட்டவனாய் தர்ப்பை முள், தேள் இவற்றாலும், பாம்பு, புலி முதலியவைகளாலும் அடர்ந்து நிறைந்ததும் மரங்கள் நிறைந்ததுமான காட்டில் தள்ளப்பட்டான்.

வ்யாளாதி³ து³ஷ்ட ஸத்வேப்⁴யோ மஹாரண்யே ப⁴யாதுர: |
சிலா கண்டக த³ர்பா⁴த்³யைர் தே³ஹஸ்ய ப்ரதிகூலகை: || 61

க்ரியமாணே விலுட²நே விசீர்ணாங்கோ³(அ)ஸமர்த²க: |
க்ஷுத்-த்ருடா³தப-வாய்வக்³ந்யாதிபி⁴ஸ்தப்தோ(அ)திதாபகை: || 62

ப³ந்த⁴ முக்தௌ ததா² தே³ச-ப்ராப்தா-வேவ ஸுது³: க²தீ⁴: |
த³த்³ருசே கஞ்சிதா³க்ரோசன் ஏகம் தத்ரைவ தஸ்தி²வான் || 63

பெரிய காட்டில் பாம்பு முதலான துஷ்ட பிராணிகளிடமிருந்து பயத்தால் துன்பமடைந்தவனாய் புரளும் பொழுது, உடலுக்கும் தீங்கு விளைவிக்கின்ற கல், முள், தர்ப்பை முதலியவைகளால், சிதைந்த அவயவங்களை உடையவனாக, பலம் இல்லாதவனாய், மிகுந்த தாபத்தைக் கொடுக்கும் பசி, தாகம், வெயில், காற்று, நெருப்பு முதலியவைகளால் துன்பம் அடைந்தவனாய், மிகுந்த துக்கம் அடைந்தவனாக, கட்டிலிலிருந்து விடுபடவும், அவ்விதமே தன் தேசத்தை அடைவதற்காகவும் யாராவது ஒருவரைக் குறித்துக் கத்திக்கொண்டு அங்கேயே கிடந்தவனாகக் காணப்பட்டான்.

ததா² ராகா³தி³பி⁴ர் வர்கை³: சத்ருபி⁴ர் து³:கதா³யிபி⁴: |
சோரைர் தே³ஹாபிமாநாத்³யை: ஸ்வானந்த³ த⁴நஹாரிபி: || 64

ப்³ரஹ்மானந்தே³ ப்ரமத்த: ஸ்வாஜ்ஞான நித்³ரா வசீக்ருத: |
ப³த்³த⁴ஸ்த்வம் ப³ந்த⁴னைர் போ⁴க³ த்ருஷ்ணா ஜ்வராதி³பி⁴ர்-த்ருட⁴ம் || 65

அவ்விதமே, ப்ரஹ்மானந்தத்தில் கவனக் குறைவுள்ளவனாகவும், தன் அக்ஞானம் என்னும் நித்ரைக்கு வசமாக்கப்பட்டவனாகவும் உள்ள நீ, துன்பத்தைத் தருகின்ற ஆசை முதலிய எதிரிக்கூட்டங்களாலும், தன் ஆனந்தம் என்னும் பணத்தைப் பறிக்கின்ற தேஹத்தில், அபிமானம் முதலிய திருடர்களாலும், போகங்களில் ஆசை, தாபம் முதலிய கட்டுகளால் உறுதியாகக் கட்டப் பட்டிருக்கிறாய்.

அத்³வயாநந்த³ரூபாத் த்வாம் ப்ரச்யாவ்யாதீவ தூ⁴ர்தகை: |
தூ³ர நீதோ(அ)ஸி தே³ஹேஷு ஸம்ஸாராரண்ய பூ⁴மிஷு || 66

வஞ்சகர்களால் (காமன் முதலியவர்களால்). பேதமில்லாத ஆனந்த ஸ்வரூபத்திலிருந்து உன்னை நழுவும்படி செய்து, ஸம்ஸாரம் என்ற காட்டுப் பிரதேசங்களில் சரீரங்களில் வெகுதூரம் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறாய்.

ஸர்வது3: க2நிதா3நேஷ சரீராதி3 த்ரயேஷு ச |
நாநா யோநிஷு கர்மாந்த4வாஸநா நிர்மிதாஸு ச || 67

ப்ரவேசிதோ(அ)ஸி ஸ்ருஷ்டோ(அ)ஸி ப3த்3த4 ஸ்வாநந்த3 த்3ருஷ்டித: |

எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமான (ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்ற) மூன்று சரீரங்களிலும் கர்மாக்களைச் செய்வதால் ஏற்பட்ட ஸூக்ஷ்மமான ஸம்ஸ்காரம் என்னும் வாஸனையால் உண்டுபண்ணப்பட்டு பலவிதப் பிறவிகளில் நுழையும்படியும் செய்யப்பட்டிருக்கிறாய். தன் ஸ்வரூபமான ஆத்மானந்த த்ருஷ்டி மறைக்கப்பட்டு விட்டதால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவனாக இருக்கிறாய்.

அநாதி3 காலமாரப்4ய து3:க2ம் சானுப4வன் ஸதா3 || 68

ஜந்ம - ம்ருத்யு - ஜரா தோ3ஷ நரகாதி3 பரம்பராம் |
நிரந்தரம் விஷண்ணோ(அ)நுப4வன் - னத்யத்த - சோகவான் || 69

அநாதிகாலமாக எப்பொழுதும் துன்பத்தை அனுபவித்துக்கொண்டும், பிறவி, மரணம், மூப்பு, ராகத்வேஷாதி தோஷங்கள், நரகம் முதலியவைகளின் பரம்பரையை அனுபவித்துக்கொண்டும், மிகுந்த சோகத்துடன் கூடியவனாக இடைவிடாமல் வருந்திய வனாக இருக்கிறாய்.

அவித்3யாபூ4த ப3ந்த4ஸ்ய நிவ்ருத்தௌ து3:க2த3ஸ்ய ச |
ஸ்வரூபானந்த3ஸம்ப்ராப்தௌ ஸத்யோபாயம் ந லப்3த4வான் || 70

துன்பத்தைத் தருகின்ற அக்ஞானத்தால் ஏற்பட்ட கட்டு விலகவும், தன் ஸ்வரூபமான ஆனந்தத்தை அடையவும் உண்மையான உபாயத்தை (இப்படிப் பட்டவன்) அடையவில்லை.

யதா2 கா3ந்தா4ர தேசீய: சிரம் தை3வாத்3 - த்3யாளுபி4: |
கைச்சித் பாந்தை2: பரிப்ராப்தை: முக்த த்3ருஷ்ட்யாதி3 ப3ந்த4ன: || 71

ஸ ஸ்வஸ்தை2ருபதி3ஷ்டச்ச பண்டி3தோ நிச்சிதாத்மக: |
க்3ராமாத்3 - க்ரா3மாந்தரம் கச்ச2ன் மேதா4வீ மார்க3 - தத்பர: || 72

க3த்வா கா3ந்தா4ரதேசம் ஸ ஸ்வக்3ருஹம் ப்ராப்ய பூர்வவத் |
பா3ந்த4வை: ஸம்பரிஷ்வக்த: ஸுகீ2 பூத்4வா ஸ்தி2தோ(அ)பதிவத் || 73

காந்தாரதேச நபர் வெகுநேரம் சென்ற பிறகு அதிருஷ்டவசமாக அங்கு வந்த இரக்கமுள்ள சில வழிப்போக்கர்களால், கண் முதலியவைகளின் கட்டு அவிழ்க்கப்பட்டவனாய், ஸ்வஸ்தர்களான அவர்களால் மார்க்கம் உபதேசிக்கப் பட்டவனாக, புத்திமானாகவும், உறுதியான மன முள்ளவனாகவும், மேதையுடன் கூடினவனாகவும், வழியிலேயே மனத்தைச் செலுத்தியவனாயும் இருந்து, ஒவ்வொரு கிராமமாகச் செல்கின்றவனாய் அவன் காந்தார தேசம் சென்று தன் வீட்டை அடைந்து, உறவினர்களால் தழுவிக்கொள்ளப்பட்டவனாய், ஸுகமுள்ளவனாக ஆகி முன் போல் நிலைபெற்றிருந்தான். (இது) எவ்வாறோ,

த்வமப்யேவ - மநேகேஷு து3:க2தா3யிஷு ஜந்மஸு ।
ப்4ராந்தோ தை3வாத் சுபே4 மார்கே3 ஜாதச்ரத்3த4: ஸுகர்மக்ருத் ॥ 74

வர்ணாச்ரமாசாரபரோ(அ)வாப்த - புண்ய மஹோத3ய: ।
ஈச்வராநுக்3ரஹாத் லப்3த4 ப்3ரஹ்மவித் கு3ரு ஸத்தம: ॥ 75

விதி4வத் க்ருத ஸந்யாஸோ விவேகாதி3யுத: ஸுதீ4: ।
ப்ராப்த ப்ரஹ்மோபதே3சோ(அ)த்ய வைராக்3யாப்4யாஸத: பரம் ॥ 76

பண்டி3தஸ் தத்ர மேதா4வீ யுக்த்யா வஸ்து விசாரயன் ।
நிதித்4யாஸன ஸம்பந்ந: ப்ராப்தோ ஹி த்வம் பரம் பத3ம் ॥ 77

அவ்வாறே நீயும் துன்பங்களைத் தருகின்ற பல பிறவிகளில் உழன்று, அதிருஷ்டவசமாக நல்வழியில் நம்பிக்கை ஏற்பட்டவனாய் நல்லகாரியங்களைச் செய்துகொண்டு, தன் வர்ணத்திற்கும், ஆச்ரமத்திற்கும் ஏற்பட்ட ஆசாரங்களிலேயே ஈடுபட்டவனாய், புண்யங்களால் மிகுந்த சிறப்பைப்பெற்று, ஈசுவரனுடைய அருளால் ப்ரஹ்மத்தை அறிந்த குரு சிரேஷ்டரை அடைந்து, சாஸ்திர முறைப்படி ஸந்யாஸம் செய்துகொண்டு, விவேகம் முதலியவைகளுடன் கூடியவனாகவும், சிறந்த புத்தியுள்ளவனாகவும், நிறைந்த வைராக்யத்தாலும் அப்யாஸத்தாலும், இப்பொழுது ப்ரஹ்மம்பற்றி உபதேசம் பெற்று அதில் பண்டிதனாகவும், மேதாவியாகவும், யுக்தியால் வஸ்துவை விசாரித்துக்கொண்டு, த்யானத்துடன் கூடினவனாய் நீ மேலான நிலையை அடைந்து விட்டாய் அல்லவா?

அதோ ப்3ரஹ்மாத்ம விஜ்ஞானமுபதி3ஷ்டம் யதா3விதி4 ।
மயா(ஆ)சார்யேண தே தீர4 ஸம்யக் தத்ர ப்ரயத்னவான் ॥ 78

பூ4த்வா விமுக்தப3நத4ஸ் - த்வம் சின்ன - த்3வைதாத்மஸம்சய: ।
நிர்த்3வந்த்3வோ நிஸ்ப்ருஹோ பூ4த்வா விசரஸ்வ யதா2ஸுகம் ॥ 79

ஆகையால் தீரனே! ஆசார்யனான என்னால் உனக்கு ப்ரஹ்மஸ்வரூபமான ஆத்மாவின் ஞானம் முறைப்படி உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதில் நன்கு முயற்சியுடன் கூடியவனாக இருந்து நீ பந்தத்திலிருந்து விடுபட்டு, த்வைத

ப்ரபஞ்சத்திலும் ஆத்மாவிலும் உள்ள ஸம்சயங்கள் எல்லாம் நீங்கியவனாகவும், த்வந்த்வங்கள் அற்றவனாகவும், ஆசையற்றவனாகவும் ஆகி ஸுகமாக ஸஞ்சாரம் செய்வாயாக.

வஸ்துதோ நிஷ்ப்ரபஞ்சோ(அ)ஸி நித்யமுக்த: ஸ்வபா4வத: |
ந தே ப3ந்த4விமோக்ஷௌ ஸ்த: கல்பிதௌ தௌ யதஸ்த்வயி || 80

உண்மையில். இயற்கையாகவே பிரபஞ்ச ஸம்பந்தமற்றவனாகவும், எப்பொழுதும் விடுபட்டவனாகவும் நீ இருக்கிறாய். உனக்கு பந்தமும் இல்லை, மோக்ஷமும் இல்லை. ஏனெனில் உன்னிடத்தில் அவைகள் ஆரோபம் செய்யப் பட்டவைகளே (கல்பிதமாகச் சுமத்தப்பட்டவையே).

ந நிரோதோ4 ந சோத்பத்திர் ந ப3த்தோ4 ந ச ஸாத4க: |
ந முமுக்ஷர் ந வை முக்த இத்யேஷா பரமார்த2தா || 81

"ப்ரளயம் இல்லை. சிருஷ்டியும் இல்லை. கட்டுப்பட்டவன் இல்லை. ஸாதனங்களை அனுஷ்டிக்கிறவனும் இல்லை. விடுதலை அடைய விரும்புகிறவன் இல்லை. விடுபட்டவனும் இல்லை." என்ற இது தான் உயர்ந்த உண்மை நிலை. (இது ஆசாரியாளின் பரமகுரு வான் ஸ்ரீ கௌடபாதரின் "மாண்டூக்யகாரிகை"யில்.)

ச்ருதி ஸித்3தா4ந்த ஸாரோ(அ)யம் ததைவ த்வம் ஸ்வயா தி4யா |
ஸம்விசார்ய நிதி3த்4யாஸ்ய நிஜாநந்தா2த்மகம் பரம் || 82

ஸாக்ஷாத் - க்ருத்வா(அ)பரிச்சிந்நாத்3வைத - ப்3ரஹ்மாக்ஷரம் ஸ்வயம்
ஜீவந்நேவ விநிர்முக்தோ விச்ராந்த: சாந்திமாச்ரய || 83

இது உபநிஷத் ஸித்தாந்தத்தின் ஸாரம். அவ்விதமே நீ தன் புத்தியால் நன்கு விசாரித்து (மனனம் செய்து), ஆழ்ந்த த்யானம் செய்து, தனது ஸ்வபாவ ஆனந்தஸ்வ ரூபமாயும், மேலானதும், எல்லையற்றதும் இரண்டற்றதும் அழிவற்றதுமான ப்ரஹ்ம ஸ்வ ரூபத்தைத் தானாகவே ப்ரத்யக்ஷமாக அறிந்து, உயிர்வாழும் பொழுதே பந்தம் விலகியவனாய், துன்பம் அற்றவனாய், அமைதியை அடைவாயாக.

விசாரணீயா வேதா3ந்தா: வந்த3நீயோ கு3ரு: ஸதா3
கு3ரூணாம் வசனம் பத்2யம் த3ர்சனம் ஸேவநம் ந்ருணாம் || 84

உபநிஷத்துக்கள் விசாரிக்கத் தக்கவை. எப்பொழுதும் ஆசார்யர் வணங்கத்தக்கவர். ஆசார்யர்களுடைய உபதேசமும், தர்சனமும், ஸேவையும் மனிதர்களுக்கு மிகவும் நலன் தரவல்லது.

கு3ரூர் ப்3ரஹ்ம ஸ்வயம் ஸாக்ஷாத் ஸேவ்யோ வந்த3யோ முமுக்ஷபி4: |
நோத்3வேஜநீய ஏவாயம் க்ருதஜ்ஞேந விவேகிநா || 85

தானே நேராக ப்ரஹ்ம ஸ்வரூபமாக உள்ள குருவானவர் மோக்ஷம் அடைய ஆசையுள்ளவர்களால் ஸேவிக்கத்தக்கவர், வணங்கத்தக்கவர். நன்றியறிவுள்ள விவேகமுள்ள சிஷ்யனால் இவர் தாபம் அடையும்படி செய்யத்தக்கவரேயல்ல.

யாவதா^{3}யுஸ் தவயா வந்த^{3}யோ வேதா^{3}ந்தோ கு^{3}ருரீச்வர: |
மநஸா கர்மணா வாசா ச்ருதிரேவைஷ நிச்சய: || 86

உன்னால் ஆயுள் உள்ளவரை மனத்தினாலும், செய்கையாலும், வாக்காலும் உபநிஷத்தும், ஆசாரியரும், ஈசுவரனும் வணங்கத்தக்கவர்கள். இந்தத் தீர்மானம் வேதக் கருத்தேயாம்.

பா^{4}வாத்^{3}வைதம் ஸதா^{3} குர்யாத் க்ரியாத்^{3}வைதம் ந கர்ஹிசித் |
அத்^{3}வைதம் த்ரிஷுலோகேஷு நாத்^{3}வைதம் கு^{3}ருணா ஸஹ || 87

மனோபாவனையில் அத்வைதத்தை எப்பொழுதம் செய்யலாம். ஒரு இடத்திலும் கார்யம் செய்கையில் அத்வைதம் கூடாது. மூவுலகங்களிலும் அத்வைத பாவனை செய்யலாம். ஆசார்யனிடத்தில் (மட்டும்) அத்வைத பாவனை செய்யக்கூடாது.

உலக வியவஹாரங்களில் ஈடுபட்டு காரியங்களைச் செய்யும் பொழுது வேற்றுமைகளை மதித்துத்தான் நடக்கவேண்டும். இங்கு அத்வைதத்தைக் காட்டினால் காரியங்களே நடைபெறாது. விபரீத விளைவுகளும் ஏற்படும். ஆகையால் மனோபாவத்தில் அத்வைதமே தவிர, க்ரியையில் அத்வைதம் கிடையாது. பாவ அத்வைதத்தையும் குருவினிடம் காட்டக்கூடாது. மூவுலகிலம் உள்ள எல்லாப் பொருள்களையம் தானேயாக மனத்தில் பாவனை செய்யலாம். இது போல் குருவும் தானும் ஒன்றுதான் என்ற எண்ணம் கொள்ளவே கூடாது. ஜீவன் முக்தனும் கூடத் தன் குருவைப் பூஜ்யராகவே நினைக்க வேண்டும்.)



ப்ரச்நோத்தர ரத்நமாலிகா

[ப்ரச்நம்: கேள்வி. உத்தரம்: பதில். வினா - விடைத் தொடராக மணியான கருத்துக்களைக் கோத்துத் தருவதால் இந்நூல் "ப்ரச்நோத்தர ரத்நமாலிகா" எனப்படுகிறது.]

க: க^{2}லு நாலங்க்ரியதே
த்^{3}ருஷ்டாத்^{3}ருஷ்டார்த^2 ஸாத^{4}நபடீயாந் ।
அமுயா கண்ட^{2}ஸ்தி^{3}தயா
ப்ரச்நோத்தர ரத்நமாலிகயா ॥ 1

இஹபர ச்ரேயஸ்ஸை அடைய சாமர்த்தியமுள்ள யார் தாம் இந்த ப்ரச்நோத்தர ரத்நமாலிகையைக் கழுத்திலே கொண்டு (அதாவது இதை ஓதி) இதனால் அலங்கரிக்கப்படவில்லை?

(இம்மை மறுமை நலன்களைப்பெற விரும்புபவர் 'ப்ரச்நோத்தர ரத்ந மாலிகை'யை ஓதி உணர்ந்தால் பயனுறுவர் என்பது கருத்து. மனப்பாடம் செய்து ஒப்பிப்பதை'கழுத்தில்கொள்வது' ('கண்டஸ்தம்') என்பர். மாலை யையும் கழுத்தில் தானே அணிவர்?)

ப^{4}க^{2}வந் கிமுபாதே^{3}யம்?
கு^{3}ருவசநம். ஹேயமபிச கிம்? அகார்யம் ।
கோ கு^{3}ரு:? அதி^{4}க^{3}ததத்வ:
சிஷ்யஹிதாயோத்^{3}யதஸ் ஸததம் ॥ 2

கே: - ஸ்வாமி, கிரகித்துக்கொள்ள வேண்டியது என்ன?
ப: - குரு வசனம்.
கே: - தள்ள வேண்டியது என்ன?
ப: - அகார்யம். (செய்யத்தகாதது. அதாவது செய்யத்தகாதது என குரு கூறுபவை.)
கே: - குரு யார்?
ப: - உண்மையை அறிந்தவர். தம்மை அண்டின சிஷ்யர்களின் க்ஷேமத்துக்காக இடைவிடாமல் பாடுபடுபவர்.

[கே: = கேள்வி. ப: = பதில்.]

த்வரிதம் கிம் கர்தவ்யம்
விது^{3}ஷாம்? ஸம்ஸாரஸந்ததிச்சே^{2}த^3: ।
கிம் மோக்ஷதரோர் பீ^{3}ஜம்?
ஸம்யக்^{3}ஜ்ஞாநம் க்ரியா ஸித்^{3}த^{4}ம் ॥ 3

கே: - அறிவுள்ளவன் துரிதமாகச் செய்யவேண்டியது என்ன?
ப: - ஸம்ஸாரத் தொடரைக் கத்தரித்தல். (செத்துச் செத்துப் பிறக்காமல் மோக்ஷமடைவது.)
கே: - மோக்ஷ மரத்துக்கு விதை எது?
ப: - உள்ளதை உள்ளபடி அறிந்து (ஸத்ய தத்வஞானம் பெற்று) காரியத்தில் காட்டுவது.

க: பத்[4]யதரோ? த[4]ர்ம:
க: சுசிரிஹ? யஸ்ய மாநஸம் சுத்[3]த[4]ம் ।
க: பண்டி[3]தோ? விவேகீ
கிம் விஷம்? அவதீ[4]ரணா கு[3]ருஷ ॥ 4

கே: - எது பத்தியம்? (ஹிதமானது.)
ப: - தர்மம்.
கே: - இங்கு (இவ்வுலகில்) எவன் சுத்தன்?
ப: - எவன் மனம் சுத்தமாக இருக்கிறதோ அவன்.
கே: - எவன் பண்டிதன்?
ப: - விவேகி. (விவேகத்தையுடையவன். நித்யமான ஆத்மா எது? அநித்யமான பிற யாவை? என்ற பாகுபாடு அறிவதே விவேகம்.)
கே: - எது விஷம்?
ப: - பெரியோர் வார்த்தையை அலட்சியம் செய்வது.

கிம் ஸம்ஸாரே ஸாரம்?
பஹுசோ(அ)பி விசிந்த்யமாநமித[3]மேவ ।
கிம் மநுஜேஷ்விஷ்டதமம்?
ஸ்வபரஹிதாயோத்[3]யதம் ஜந்ம ॥ 5

கே: - ஸம்ஸாரத்தில் ஸாரம் எது?
ப: - அடிக்கடி இதை நினைத்துக் கொண்டிருப்பதே. (ஸம்ஸாரத்தில் ஸாரம் எது என்று ஆராய்ந்து கொண்டே இருப்பதனால் அதில் பற்றுவிட்டுப் பிறப்பறுக்கலாம்.)
கே: - மனிதர்கள் விரும்பத்தக்கதில் தலை சிறந்தது எது?
ப: - தான், பிறர் இரண்டு பேரின் க்ஷேமத்திற்காகவும் ஈடுபடும் ஜன்மம்.

மதி[3]ரேவ மோஹஜநக:
க:? ஸ்நேஹ:, கே ச த[3]ஸ்யவோ? விஷயா: ।
கா ப[4]வவல்லீ? த்ருஷ்ணா,
கோ வைரீ? யஸ்த்வநுத்[3]யோக[3]: ॥ 6

கே: - கள்போல் மயக்கத்தை உண்டு பண்ணுவது எது?

ப: - பற்றுதல். (ஆசை, சிநேகம்.'சிநேகம்'என்றால் எண்ணெய் போல் ஒட்டிக் கொள்ளுதல்.)
கே: - திருடர்கள் யார்?
ப: - (இந்திரியங்களை இழுத்துக்கொண்டு போகும்) விஷயங்கள் (எனும் புல நுகர்ச்சிக்கான வஸ்துக்கள்.)
கே: - ஸம் ஸாரக் கொடி எது?
ப: - (தாஹம் போன்ற) ஆசை வேட்கை,
கே: - சத்துரு யார்?
ப: - சோம்பேறித்தனமே.

கஸ்மாத் ப[4]யமிஹ? மரணாத்,
அந்தா[4]தி[3]ஹ கோ விசிஷ்யதே? ராகீ[3] | 1
க: சூரோ? யோ லலநா
லோசநபா3ணைர் ந ச வ்யதி4த: || 7

கே: - இங்கு (உலகில்) எல்லோரும் பயப்படுவது எதனிடம்?
ப: - மரணத்தினிடம்.
கே: - குருடனைக்காட்டிலும் குருடன் யார்?
ப: - ஆசையுள்ளவன்.
கே: - சூரன் யார்?
ப: - ஸ்தீரிகளின் பார்வைகளான பாணங்களால் அடிபடாதவன்.

பாதும் கர்ணாஞ்ஜலிபி[4]:
கிமம்ருதமிஹ யுஜ்யதே? ஸது[3]பதேச: |
கிம் கு[3]ருதாயா மூலம்?
யதே[3] ததத்ப்ரார்த[2]நம் நாம || 8

கே: - காதாகிய அஞ்சலி (செவியின் கேள்விக்குழாய்க்கு அஞ்சலி என்று பெயர். இரண்டு கைகளையும் சேர்த்துக் குவித்துக் கொள்வது போலக் காது குவிந்திருப்பதனால் அஞ்ஜலி எனப்படுகிறது.)யால் சாப்பிடக்கூடிய அமிருதம் எது?
ப: - ஸாதுக்களுடைய உபதேசம்.
கே: - மதிப்புக்கு மூலம் எது?
ப: - ஒருவனிடமும் எதையும் வேண்டா திருத்தல்.

கிம் க3ஹநம்? ஸ்த்ரீ சரிதம்,
க: சதுரோ? யோ ந க[2]ண்டிதஸ் தேந |
கிம் து:க[2]ம்? அஸந்தோஷ:,
கிம் லாக[4]வம்? அத[4]மதோ யாச்ஞா || 9

கே: - மர்மமானது எது?

ப: - பெண்களின் நடத்தை.
கே: - ஸமர்த்த ன் யார்?
ப: - (பெண்களின் நடத்தையினால்) இதனால் வஞ்சிக்கப்படாதவன்.
கே: - துக்கம் யாது?
ப: - திருப்தியின்மை.
கே: - கீழ்மை யாது?
ப: - கீழ்ப்பட்டவனிடத்தில் யாசிப்பது.

கிம் ஜீவிதம்? அநவத்[3]யம்,
கிம் ஜாட்[3]யம்? பாட[2]தோ(அ)ப்யநப்[3]யாஸ: ।
கோ ஜாக[3]ர்தி? விவேகீ,
கா நித்[3]ரா? மூட[4]தா ஜந்தோ ॥ 10

கே: - (உயர்ந்த) ஜீவனம் யாது?
ப: - குற்றமின்மை. (மாசு இல்லாத நடத்தை.)
கே: - அறிவின்மை யாது?
ப: - கற்றதையும் (நடைமுறையில்) பழகாமலிருத்தல்.
கே: - விழிப்புடையோன் எவன்?
ப: - விவேகமுள்ளவன்.
கே: - உறக்கம் யாது?
ப: - ஜீவர்களது மூடத்தன்மை.

நலிநீத[3]லக[3]தஜலவத்
தரலம் கிம்? யௌவநம் த[4]நம் சாயு: ।
கத[2]ய புந: கே சசிந:
கிரணஸமா:? ஸஜ்ஜநா ஏவ ॥ 11

கே: - தாமரையிலைத் தண்ணீர் போல நிலையில்லாதவை எவை?
ப: - இளமை, செல்வம், ஆயுள் என்பன.
கே: - சந்திரகிரணம் போன்றவர் (பிறருக்கு ஹிதம் செய்பவர்) யார் எனச் சொல்லவும்.
ப: - நன்மக்களே.

கோ நரக:? பரவசதா,
கிம் ஸௌக்[2]யம்? ஸர்வஸங்க[3]விரதிர் யா ।
கிம் ஸாத்[4]யம்? பூ[4]தஹிதம்,
ப்ரியம் ச கிம்? ப்ராணிநாம் அஸவ: ॥ 12

கே: - நரகம் யாது?
ப: - பிறர் வசமாயிருத்தல்.
கே: - ஸௌக்கியம் யாது?

ப: - ஸர்வஸங்க பரித்யாகம். (எல்லாத் தொடர்புகளையும் துறப்பது.)
கே: - ஸாதிக்கத்தக்கது யாது?
ப: - ஜீவர்களுக்கு ஹிதம் செய்தல்.
கே: - பிராணிகளுக்கு பிரியமுள்ளது யாது?
ப: - பிராணன்.

கோ(அ)நர்த²ப²லோ? மாந:,
கா ஸுகதா? ஸாது⁴ஜநமைத்ரீ ।
ஸர்வவ்யஸநவிநாசே
கோ த³க்ஷ :? ஸர்வதா³ த்யாகீ³॥ 13

கே: - எது அநர்த்தத்தைத் தரும்?
ப: - மானம் (மானாபிமானமான அஹம்பாவம்.)
கே: - எது ஸுகத்தைத் தரும்?
ப: - நல்ல மனமுள்ளவர்களின் சிநேகம் (ஸத்ஸங்கம்).
கே: - எல்லாத் துக்கத்தையும் தொலைப்பதில் எவன் கெட்டிக்காரன்?
ப: - யாவற்றையும் தியாகம் செய்பவன்.

கிம் மரணம்? மூர்க³த்வம்,
கிம் சாநர்க⁴ம்? யத³வஸரே த³த்தம் ।
ஆமரணாத் கிம் சல்யம்?
ப்ரச்ச²ந்நம் யத் க்ருதம் பாபம் ॥ 14

கே: - மரணம் எது?
ப: - அறிவின்மை.
கே: - விலை மதிக்கவொண்ணாதது எது?
ப: - ஸமயத்தில் செய்யும் தானம் (உதவி).
கே: - சாகும் வரையில் (ஈட்டி போல்) குத்துவது எது?
ப: - ரகஸ்யத்தில் செய்த பாபம்.

குத்ர விதே⁴யோ யத்நோ?
வித்³யாப்⁴யாஸே, ஸதெ³ளஷதே⁴ தா³நே ।
அவதீ⁴ரணா க்வ கார்யா?
க²லபரயோஷித்பரத⁴நேஷு ॥ 15

கே: - எதற்காகப் பிரயத்தனம் செய்ய வேண்டும்?
ப: - வித்தியாப்பியாஸம், நல்ல மருந்து, தானம் செய்தல் இவற்றுக்காக.
கே: - அலக்ஷ்யம் செய்யவேண்டியது எது?
ப: - கெட்டவர்கள்; பிறருடைய மனைவி; பிறருடைய பொருள்.

கோ(அ)ஹர்நிசமநுசிந்த்யா?
ஸம்ஸாராஸாரதா, நது ப்ரமதா3 ।
கா ப்ரேயஸீ விதே3யா?
கருணா தீ3நேஷு ஸஜ்ஜநே மைத்ரீ ॥ 16

கே: - இராப்பகல் நினைக்க வேண்டியது எது?
ப: - ஸம்ஸாரத்தில் சாரம் இல்லை என்பது. பெண்ணல்ல.
கே: - பிரியமாகச் செய்யவேண்டியது எது?
ப: - தீனர்களிடத்தில் கருணையும், ஸாதுக்களிடத்தில் சிநேகமும்.

கண்ட2க3தைரப்யஸுபி4:
கஸ்ய ஹ்யாத்மா ந சக்யதே ஜேதும்
மூர்க2ஸ்ய சங்கிதஸ்ய ச
விஷாதி3நோ வா க்ருதக்4நஸ்ய ॥ 17

கே: - பிராணன் போவதாக இருந்தாலும், எவனுடைய ஆத்மாவை நல்வழிப்படுத்த முடியாது?
ப: - அறிவீனன், சந்தேகப்ராணி, அழுமூஞ்சி, நன்றியில்லாதவன் ஆகியவர்கள்.

க: ஸாது4:? ஸத்3வ்ருத்த:,
கமத்4மமாசக்ஷதே? த்வஸத்3வருத்தம் ।
கேந ஜிதம் ஜக3தே3தத்?
ஸத்யதிதிக்ஷாவதா பும்ஸா ॥ 18

கே: - ஸாது யார்?
ப: - நல்ல நடத்தையுடையவன்.
கே: - எவன் அதமன்?
ப: - கெட்ட நடத்தையுடையவன் தான்,
கே: - இந்த உலகை எவரால் வெல்லமுடியும்?
ப: - ஸத்தியமும், திதிக்ஷையும் இருப்பவரால். (எதிரெதிர் அநுபவங்களை சம நிலையில் தாங்கும் பொறுமைத் திறனே திதிக்ஷை.)

கஸ்மை நமாம்ஸி தே3வா :
குர்வந்தி? த3யாப்ரதா4நாய ।
கஸ்மாது3த்3வேக3ஸ் ஸ்யாத்?.
ஸம்ஸாராரண்யத: ஸுதிய4: ॥ 19

கே: - எவனைத் தேவர்களும் கும்பிடுகிறார்கள்?
ப: - தயை உடையவனை.
கே: - எதைக்கண்டு நடுங்க வேண்டியது?
ப: - ஸம்ஸாரமாகிய காட்டைக்கண்டே நல்லறிவினர் நடுங்குவர்.

கஸ்ய வசே ப்ராணிக[3]ண:?
ஸத்யப்ரியபா[4]ஷிணோ விநீதஸ்ய ।
க்வ ஸ்தா[2]தவ்யம்? ந்யாய்யே
பதி[2] த்[3]ருஷ்டாத்[3]ருஷ்டலாபா[4]ட்[4]யே ॥ 20

கே: - ஜீவராசிகள் எவனுக்கு வசமாகும்?
ப: - ஸத்யமும் பிரியமுமான வசனமுடைய விநயமுள்ளவனுக்கு.
கே: - நிற்கவேண்டியது எங்கே?
ப: - காணப்படுவனவும், காணப்படாதனவுமாகிய (இஹபர) லாபங்கள் நிரம்பிய நியாயமான வழியில்.

கோ(அ)ந்தோ? யோ(அ)கார்யரத:
கோ ப[3]தி[4]ரோ யோ ஹிதாநி ந சருணோதி ।
கோ மூகோ? ய: காலே
ப்ரியாணி வக்தும் ந ஜாநாதி ॥ 21

கே: - குருடன் யார்?
ப: - கெட்ட காரியத்தில் களிப்பவன்.
கே: - செவிடன் யார்?
ப: - ஹிதத்தைக் கேட்காதவன்.
கே: - ஊமை யார்?
ப: - இனிமையான வார்த்தைகளைச் சரியான காலத்தில் சொல்ல அறியாதவன்.

கிம் தா[3]நம்? அநாகாங்கக்ஷம்,
கிம் மித்ரம்? யோ நிவாரயதி பாபாத் ।
கோ(அ)லங்கார.? சீலம்,
கிம் வாசாம் மண்ட[3]நம்? ஸத்யம் ॥ 22

கே: - தானம் யாது?
ப: - கேட்காமல் கொடுத்தல்.
கே: - சிநேகிதன் யார்?
ப: - பாவத்திலிருந்து தடுப்பவன்.
கே: - எது அலங்காரம்?
ப: - சீலம்.
கே: - வாக்கிற்கு அழகு எது?
ப: - ஸத்யம்.

வித்[3]யுத்[3] விலஸிதசபலம்
கிம்? துர்ஜநஸங்க[3]திர் யுவதயச்ச ।
குலசீலநிஷ்ப்ரகம்பா:
கே கலிகாலேபி? ஸஜ்ஜநா ஏவ ॥ 23

கே: - மின்ன லொளிபோல் சஞ்சலமானவை யாவை?
ப: - துர்ஜனரின் ஸங்கமமும், ஸ்திரீகளும்.
கே: - கலிகாலத்திலும் குலசீலத்திலிருந்து சலிக்காதவர் (பிறழாதவர்) யார்?
ப: - ஸத்புருஷர்களே.

சிந்தாமணிரிவ துர்லப4ம்
இஹ கிம்? கத2யாமி தச்சதுர்ப4த்3ரம் ।
கிம் தத்3 - வத3ந்தி பூ4யோ?
விதூ4ததமஸோ விசேஷேண ॥ 24

தா3நம் ப்ரியவாக்ஸஹிதம் ஜ்ஞாநமக3ர்வம்
க்ஷமாந்விதம் சௌர்யம் ।
வித்தம் த்யாக2ஸமேதம்
துர்லப4மேதத் நதுர்ப4த்3ரம் ॥ 25

கே: - சிந்தாமணிபோல் துர்லபமானது (கிடைத்தற்கரியது) எது?
ப: - சதுர்பத்ரம் (நான்கு சுபப் பொருட்கள்.)
கே: - அந்தச் சதுர்பத்ரம் என்ன வென்று அறிஞர் சொல்லுகின்றனர்?
ப: - பிரியவாக்குடன் செய்யும் தானம், கர்வமில்லாத ஞானம், க்ஷமையுடன் (க்ஷமிக்கும் பண்புடன்) கூடிய சூரத்தனம், தியாகத்துடன் கூடிய செல்வம்.

கிம் சோச்யம்? கார்பண்யம்,
ஸதி விப4வே கிம் ப்ரசஸ்தம்? ஔதா3ர்யம் ।
க: பூஜ்யோ வித்வத்பி4:?
ஸ்வபா4வத: ஸர்வதா3 விநீதோ ய: ॥ 26

கே: - பரிதாபப்படத்தக்கது எது?
ப: - கார்ப்பண்ணியம். (கருமித்தனம். தனக்குமில்லாமல், பிறருக்குமில்லாமல், கத்துக்குமில்லாமல், பரத்துக்குமில்லாமல் சேர்த்துவைத்துக்கொண்டிருத்தல்.)
கே: - செல்வச் செழிப்பு ஏற்பட்டக்கால் எது புகழுக்குரியது?
ப: - உதாரகுணம். (வாய்மை.)
கே: - அறிவுடையோரால் யார் பூஜிக்கப்படுவர்?
ப: - இயல்பாகவே எப்பொழுதும் வணக்கமுள்ளவரை.

க: குலகமலதி2நேச:?
ஸதி கு3ணவிபவே(அ)பி யோ நம்ர: ।
கஸ்ய - வசே ஜக3தே3தத்?
ப்ரியஹித வசநஸ்ய த4ர்மநிரதஸ்ய ॥ 27

கே: - எந்தச் சூரியனைக் கண்டால் நம் குலமான தாமரை ஆனந்தத்துடன் பிரகாசிக்கும்?

ப: - குணங்கள் பரிபூர்ணமாக விருந்தும், விநயத்துடன் இருப்பவன்.
கே: - இந்தப் பிரபஞ்சம் யாருக்கு வசப்படும்?
ப: - பிரியமாக இத வாக்கு சொல்பவனாகவும், தர்மத்தை அனுஷ்டிப்பவனாகவும் இருப்பவனுக்கு.

வித்[3]வந்மநோஹரா கா?
ஸத்கவிதா - போ[2]த[4]வநிதா ச ।
கம் ந ஸ்ப்ருசதி விபத்தி:?
ப்ரவ்ருத்[3]த[4] வசநா - நுவர்த்திநம் தா[3]ந்தம் ॥ 28

கே: - வித்வான்களின் மனத்தைக் கவர்பவள் யார்?
ப: - நற்க விதைக் கன்னியும் - ஞான மடந்தையும்.
கே: - விபத்து எவனைத் தீண்டாது?
ப: - பெரியோர் வார்த்தையை யனுஸரித்து நடப்பவனையும், அடக்கமுள்ள வனையும்.

கஸ்மை ஸ்ப்ருஹயதி கமலா?
த்வநலஸசித்தாய நீதிவ்ருத்தாய ।
த்யஜதி ச கம் ஸஹஸா? த்3விஜ
கு[3]ருஸுர நிந்தா[3]கரம் ச ஸாலஸ்யம் ॥ 29

கே: - லக்ஷ்மி யாரை விரும்புவாள்?
ப: - சோம்பாத சித்தமும், நீதிப்படியான நடத்தையுமுடையவனை.
கே: - எவனை விரைவில் விட்டு விலகுவாள்?
ப: - பிராம்மணன், குரு, தேவர் ஆகியோரை நிந்திப்பவனையும், சோம்பல் உடையவனையும்.

குத்ர விதே[4]யோ வாஸ:?
ஸஜ்ஜநநிகடே(அ)த[2]வா காச்யாம் ।
க: பரிஹார்யோ தேச:?
பிசுநயுதோ லுப்[3]த[4]பூ[4]பச்ச ॥ 30

கே: - வாசஞ் செய்யவேண்டியது எங்கே?
ப: - நல்லவர்களுடைய சமீபத்தில் அல்லது காசி க்ஷேத்திரத்தில்.
கே: - விட்டு விலக வேண்டிய தேசம் யாது?
ப: - கீழ்மக்களுள்ளதும், லோ பியான அரசனுடையதுமான தேசம்.

கேநாசோச்ய: புருஷ:?
ப்ரணதகலத்ரேண தீ[4]ரவிப[4]வேந ।
இஹ பு[4]வநே க: சோச்ய?
ஸத்யபி விப[4]வே ந யோ தா[3]தா ॥ 31

கே: - எதனால் மனிதன் துக்கமில்லாதவனாவான்?
ப: - வணக்கமுள்ள மனைவியினாலும், நிலையுள்ள செல்வத்தாலும்.
கே: - இவ்வுலகில் விசனிக்கப்படத் தக்கவன் எவன்?
ப: - பொருளிலிருந்தும் எவன் கொடையாளியாயில்லையோ அவன்.

கிம் லகு[4]தாயா மூலம்?
ப்ராக்ருதபுருஷேஷு யா யாச்ஞா ।
ராமாத[2]பி க: சூர:?
ஸ்மரசரநிஹதோ ந யச்சலதி ॥ 32

கே: - இகழ்ச்சிக்குக் காரணம் எது?
ப: - தாழ்ந்தவர்களிடம் யாசிப்பது.
கே: - ஸ்ரீராமனைவிட சூரன் யார்?
ப: - மன்மத பாணங்கள் அடித்தாலும் தன்னிலை தவறாதவன்.

கிமஹர்நிசமநுசிந்த்யம்?
ப[4]க[3]வச்சரணம் ந ஸம்ஸார: ।
சக்ஷுஷ்மந்தோப்யந்தா[4]:
கே ஸ்யு:? யே நாஸ்திகா மநுஜா: ॥ 33

கே: - இரவும், பகலும் சிந்திக்கத்தக்கது எது?
ப: - ஈச்வரனது பாதாரவிந்தங்களே - ஸம்ஸாரமல்ல.
கே: - கண்ணிருந்தும் குருடர்களாயிருப்போர் யாவர்?
ப: - நாஸ்திகர்களான மனிதர்கள்.

க: பங்கு[3]ரிஹ ப்ரதி[2]த:?
வ்ரஜதி ச யோ வார்த[4]கே தீர்த[3]ம் ।
கிம் தீர்த[2]மபி ச முக்[2]யம்?
சித்தமலம் யந்நிவர்தயதி ॥ 34

கே: - முடவன் யார்?
ப: - முதிர்ந்த வயதில் தீர்த்த யாத்திரை போகிறவன். (முதுமைக்குள் ஒருவன் தான் உள்ள விடத்திலேயே, தன் உள்ளத்திலேயே இறைவனை உணர வேண்டுமேயன்றி, அதற்கு ஆரம்பமாக, இளமையில் மேற்கொள்ள வேண்டிய தீர்த்தயாத்திரையை முதுமையின் போது மேற்கொள்வதில் பலனிராது.)
கே: - முக்யமான தீர்த்தம் எது?
ப: - சித்தத்திலுள்ள அழுக்கை எது நீக்குகிறதோ அதுதான்.

கிம் ஸ்மர்தவ்யம் புருஷை:?
ஹரிநாம ஸதா[3], ந யாவநீ பாஷா ।
கோ ஹி ந வாச்ய: ஸுதியா?
பரதோ[3]ஷச்சாந்ருதம் தத்[3]வத் ॥ 35

கே: - மனிதர்களால் ஸ்மரிக்கத்தக்கது எது?
ப: - எப்பொழுதும் ஹரிநாமமே. யவனரின் பாஷையல்ல. (பழங்காலத்தில் கிரேக்க மொழியிலிருந்த பற்றுதலைப்பற்றி ஸ்ரீ ஆசார்யாள் கூறுகிறார்.)
கே: - நல்ல புத்தியுடையவனால் சொல்லத்தகாதது எது?
ப: - பிறரது குற்றமும், அஸத்யமும்.

கிம் ஸம்பாத்3யம் மநுஜை:?
வித்3யா வித்தம் ப4லம் யச: புண்யம்
க: ஸர்வகு3ணவிநாசீ?
லோப4: சத்ருச்ச க:? காம: || 36

கே: - மனிதர்களால் ஸம்பாதிக்கத்தக்கது எது?
ப: - கல்வி, செல்வம், வலிமை, புகழ், புண்யம் ஆகியன.
கே: - ஸகல குணங்களையும் அழிப்பது எது?
ப: - லோபம். (கருமித்தனம்.)
கே: - பகைவன் எவன்?
ப: - காமம்.

கா ச ஸபா4 பரிஹார்யா?
ஹீநா யா வ்ருத்3த4ஸசிவேந |
இஹ குத்ராவஹித: ஸ்யாந்
மநுஜ:? கில ராஜஸேவாயாம் || 37

கே: - எந்த (ராஜாங்க) ஸபையை விலக்க வேண்டும்?
ப: - வயது முதிர்ந்த மந்திரிகள் இல்லாத ஸபையை.
கே: - இவ்வுலகில் மனிதன் எவ்விஷயத்தில் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும்?
ப: - ராஜ சேவை செய்வதில்.

ப்ராணாத3பி கோ ரம்ய:
குலத4ர்ம: ஸாது4 ஸங்க3ச்ச |
கா ஸம்ரக்ஷ்யா? கீர்த்தி:
பதிவ்ரதா நைஜபு4த்3தி4ச்ச || 38

கே: - பிராணனைவிடப் பிரியமானது எது?
ப: - குலதர்மமும், ஸாதுக்களின் சேர்க்கையும்.
கே: - ரட்சிக்கத்தக்கன யாவை?
ப: - கீர்த்தியும், கற்புள்ளவளும், சுயபுத்தியுமாம்.

கா கல்பலதா லோகே
ஸச்சி3ஷ்யாயார் பிதா வித்3யா |
கோ(அ)க்ஷயவடவ்ருக்ஷ: ஸ்யாத்?
விதி4வத் ஸத்பாத்ரத3த்ததா3நம் யத் || 39

கே: - லோகத்தில் கற்பகக் கொடியாக உள்ளது எது?
ப: - ஸத் சிஷ்யனுக்கு அளிக்கப்படும் கல்வி.
கே: - அக்ஷயவடம் போன்றது (ஆல்போல் தழைப்பது) எது?
ப: - விதிப்படி ஸத்பாத்திரத்தில் கொடுக்கப்படும் தானம்.

கிம் சஸ்த்ரம் ஸர்வேஷாம்?
யுக்தி:, மாதா ச கா? தே[4]நு: |
கிம் நு ப[3]லம்? யத்[3] - தை[4]ர்யம்,
கோ ம்ருத்யு:? யத[3]வதா[3]நரஹிதத்வம் || **40**

கே: - யாவர்க்குமான ஆயுதம் எது?
ப: - யுக்தி. (நியாயபூர்வமாக நிரூபணம் செய்யக்கூடிய சக்தி.)
கே: - (எல்லோருக்கும்) தாயார் யார்?
ப: - பசு, (தன் கன்றுகளுக்குப் பால் கொடுப்பதோடு, இதரருக்கும் பால் கொடுக்கும் தாய் பசுவே).
கே: - எது வலிமை?
ப: - தைரியம்.
கே: - எது யமன்?
ப: - கவனக்குறைவு.

குத்ர விஷம்? து[3]ஷ்டஜநே,
கிமிஹாசௌசம் ப[4]வேத்? ருணம் ந்ருணாம் !
கிமப[4]யமிஹ? வைராக்[3]யம்,
ப[4]யமபி கிம்? வித்தமேவ ஸர்வேஷாம் || **41**

கே: - விஷம் எங்கு இருக்கிறது?
ப: - துஷ்ட ஜனங்களிடத்தில்
கே: - தீட்டு எது?
ப: - கடன். (கடன்காரனிடமிருந்து மனிதர் விலகுகின்றனர். தீட்டு என்பதும் ஸமூஹ விலக்குத்தானே?)
கே: - அபயம் (பயப்படவேண்டாத நிலைமை) எது?
ப: - வைராக்கியம். (ஆசையை விடுதல்)
கே: - எது பயம்?
ப: - எவருக்கும் பணம் தான் (பயத்துக்குக் காரணமாகிறது).

கா துர்லபா[4] நராணாம்?
ஹரி[4]பக்தி:, பாதகம் ச கிம்? ஹிம்ஸா |
கோ ஹி ப[4]கவத்ப்ரிய: ஸ்யாத்?
யோ(அ)ந்யம் நோத்[3]வேஜயேத[3]நுத்[3]விக்[3]ந: || **42**

கே: - நரர்களுக்குத் துர்லபமானது எது?
ப: - ஹரிபக்தி.
கே: - எது பாதகம்?
ப: - இம்சித்தல்.
கே: - பகவானுக்கு யாரிடத்தில் பிரியம் உண்டாகிறது? -
ப: - தானும் கவலைப்படாமல் பிறருக்கும் கவலை உண்டாக்காதவனிடத்தில்.

கஸ்மாத் ஸித்3தி4:? தபஸ:
புத்3தி4: க்வ நு? பூ4ஸுரே, குதோ பு3த்3தி4:?
வ்ருத்3தோ4பஸேவயா, கே
வ்ருத்3தா4:? யே த3ர்மதத்வஜ்ஞா: || 43

கே: - எதனால் (காரிய சித்தி (உண்டாகிறது)?
ப: - தபஸினால் (ஒருமுக மனத்தோடு செயற்படுதலே தபஸ்.)
கே: - புத்தி எங்கு இருக்கிறது?
ப: - அந்தணனிடத்தில்.
கே: - நிஜமான புத்தி எங்கிருந்து வரும்? (அதாவது எப்படி வரும்?)
ப: - பெரியோரை அடுத்துப் பணிவிடை செய்து. (செய்வதால்.)
கே: - பெரியோர் யார்?
ப: - தர்ம தத்துவங்களை அறிந்தவர்கள். (அவர்கள் வயதில் சிறியோராக இருப்பினும் பெரியோரே.)

ஸம்பா4விதஸ்ய மரணாத்
அதி4கம் கிம்? துர்யசோ ப4வதி |
லோகே ஸுகீ2 ப4வேத் கோ?
த4நவான், த4நமபி ச கிம்? யதச் சேஷ்டம் || 44

கே: - மதிப்புடையவனுக்கு மரணத்தைக்காட்டிலும் எது பெரிது?
ப: - அபகீர்த்தி.
கே: - எவன் ஸுகி (இன்புறுவான்)?
ப: - தனவான்.
கே: - தனம் என்பது எது?
ப: - எதனால் இஷ்டஸித்தி உண்டாகுமோ அது.

ஸர்வஸுகா2நாம் பீ3ஜம்
கிம்? புண்யம். து3: க2மபி குத:? பாபாத் |
கஸ்யைச்வர்யம்? ய: கில
சங்கரமாராத4யேத்3 ப4க்த்யா || 45

கே: - எல்லா ஸுகத்துக்கும் மூலம் எது?
ப: - புண்யம்.

கே: - துக்கம் எங்கிருந்து வருகிறது?
ப: - பாபத்திலிருந்து.
கே: - ஐசுவரியம் யாருக்கு (உண்டாகும்)?
ப: - சங்கரனைப் பக்தியுடன் ஆராதிப்பவனுக்கு.

கோ வர்த⁴தே? விநீத:
கோ வா ஹீயேத? யோ த்³ருப்த: ।
கோ ந ப்ரத்யேதவயோ?
ப்³ருதே யச்சாந்ருதம் சச்வத் ॥ 46

கே: - எவன் முன்னுக்கு வருவான்?
ப: - விநயமுடையவன்.
கே: - எவன் க்ஷணமடைவான்?
ப: - கர்வமுள்ளவன்.
கே: - எவனை நம்பக்கூடாது?
ப: - எப்பொழுதும் பொய் சொல்பவனை.

குத்ராந்ருதே(அ)ப்யபாபம்?
யச்சோக்தம் த⁴ர்மரக்ஷார்த²ம் ।
கோ த⁴ர்ம:? அபி⁴மதோ ய:
சிஷ்டாநாம் நிஜகுலீநாநாம் ॥ 47

கே: - பொய் சொல்வது எப்பொழுது பாபமல்ல?
ப: - தர்மத்தை ரக்ஷிப்பதற்காகச் சொல்லப்படும் பொழுது.
கே: - எது தர்மம்?
ப: - நமது வம்சத்தில் பிறந்த பெரியோர்கனில் சிஷ்டர்கள் அநுஷ்டித்ததே.

ஸாது⁴ப³லம் கிம்? தை³வம்,
க: ஸாது⁴:? ஸர்வதா³ துஷ்ட: ।
தை³வம் கிம்? யத் ஸுக்ருதம்,
க: ஸுக்ருதீ? சலாக்யதே ச யஸ் - ஸத்³பி⁴: ॥ 48

கே: - ஸாதுவுக்கு பலம் யார்?
ப: - தெய்வம்.
கே: - ஸாது யார்?
ப: - எப்பொழுதும் (ஸந்) துஷ்டியுடன் இருப்பவன். (திருப்தியாக மகிழ்ந்திருப்பவன்.)
கே: - தெய்வம் என்பது என்ன?
ப: - அவரவர் செய்த புண்ய காரியமே.
கே: - புண்ய கார்யம் செய்தவன் யார்?
ப: - ஸாதுக்களால் சிலாகிக்கப்படுகிறவன்.

க்[3]ருஹமேதி[4]நச்ச மித்ரம்
கிம்? பா[4]ர்யா, கோ க்[3]ருஹீ ச? யோ யஜதே ।
கோ யஜ்ஞோ? ய: ச்ருத்யா
விஹித: ச்ரேயஸ்கரோ ந்ருணாம் ॥ 49

கே: - கிரஹஸ்தாசிரமத்தினனுக்கு எது நட்பு?
ப: - மனைவி.
கே: - கிருஹஸ்தன் யார்?
ப: - யஜ்ஞங்களைச் செய்கிறவன்.
கே: - யஜ்ஞம் என்பது என்ன?
ப: - செய்யப்படவேண்டியது என்று வேதத்தால் எது விதிக்கப்பட்டு. நமக்கு சிரேயஸ்ஸைத் தருகின்றதோ, அது தான்.

கஸ்ய க்ரியா ஹி ஸப[2]லா?
ய: புநராசாரவாந் - சிஷ்ட: ।
க: சிஷ்டோ? யோ வேத[3]
ப்ரமாணவாந், கோ ஹத:? க்ரியாப்[4]ரஷ்ட: ॥ 50

கே: - கர்மாநுஷ்டானங்கள் எவனுக்குப் பலிக்கும்?
ப: - ஆசாரமுள்ளவனாகவும், சிஷ்டனாகவும் இருப்பவனுக்கு.
கே: - யார் சிஷ்டன்?
ப: - வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்.
கே: - எவன் (இருந்தும்) செத்தவன்?
ப: - (சாஸ்த்ரம் விதித்த) கர்மாக்களைச் செய்யாதவன்.

கோ த[4]ந்ய:? ஸந்யாஸீ,
கோ மாந்ய:? பண்டி[3]தஸ் ஸாது[4]: ।
கஸ்ஸேவ்ய:? யோ தா[3]தா,
கோ தா[3]தா? யோ(அ)ர்தி[2]த்ருப்திமாதநுதே ॥ 51

கே: - எவன் தந்யன் (செல்வந்தன். அதாவது பாக்யவான்)?
ப: - ஸந்நியாஸி.
கே: - எவன் மதிக்கப்படுகிறவன்?
ப: - (அறிவில்) பண்டிதனாகவும் (இதயத்தில்) நல்லவனாகவும் இருப்பவன்.
கே: - எவன் பணிவிடைக்குரியவன்?
ப: - வள்ளல்.
கே: - வள்ளல் யார்?
ப: - யாசிப்பவனுக்குத் திருப்தி செய்து வைப்பவன்.

கிம் பா⁴க்³யம் தே³ஹவதாம்?
ஆரோக்³யம் க: ப²லி? க்ருஷிக்ருத் ।
கஸ்ய ந பாபம்? ஜபத⁴:
க: பூர்ணோ? ய: ப்ரஜாவாந் ஸ்யாத் ॥ 52

கே: - உடலெடுத்தவருக்கு பாக்கியம் எது?
ப: - ஆரோக்கியம்.
கே: - எவன் பயன் படைத்தவன்?
ப: - உழவு செய்பவன். ('உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர்" என்பதாகக் கொள்ளலாம். அல்லது உவமையாக, விடாமுயற்சி செய்கிறவன் எனக் கருதலாம்.)
கே: - பாபம் யாருக்கு இல்லை?
ப: - ஜபம் செய்கிறவனுக்கு.
கே: - நிறைந்தவன் யார்?
ப: - நல்ல பிள்ளைகளை உடையவன்.

கிம் து³ஷ்கரம் நராணாம்?
யந் மநஸோ நிக்³ரஹஸ் - ஸததம் ।
கோ ப்³ரஹ்மசர்யவாந் ஸ்யாத்?
யச்சாஸ்க²லிதோர்த்⁴வரேதஸ்க: ॥ 53

கே: - மனிதர்க்கு வியலாதது எது?
ப: - இடைவிடாமல் மனதை கட்டிப்போடுவதே.
கே: - எவன் பிரம்மசாரி?
ப: - ஊர்த்துவ ரேதஸ்ஸுடையவன். (வீர்யத்தைக் கீழ்முகமாகச் சிந்தாமல் மேல்முகமாக ஏற்றியவன்.)

கா ச பரதே³வதோக்தா?
சிச்²சக்தி:, கோ ஜக³த்ப⁴ர்தா? ।
ஸூர்ய:, ஸர்வேஷாம் கோ
ஜீவநஹேது:? ஸ பர்ஜந்ய: ॥ 54

கே: - பர வதை யார்?
ப: - ஞானசக்தியான அம்பிகை.
கே: - உலகைத் தாங்குகிறவன் யார்?
ப: - சூரியன்.
கே: - (உலக) ஜீவனத்துக்குக் காரணம் எது?
ப: - மழை.

க: சூரோ? யோ பீ[4]த
த்ராதா, த்ராதா ச க:? ஸ கு[3]ரு: |
கோ ஹி ஜக[3]த்குருருக்த:?
சம்பு:, ஜ்ஞாநம் குத:? சிவாதே[3]வ || **55**

கே: - சூரன் யார்?
ப: - பயப்பட்டவனை ரட்சிக்கிறவன்.
கே: - ரட்சிக்கிறவன் யார்?
ப: - குரு.
கே: - ஜகத்குரு யார்?
ப: - சம்பு. (நித்யானந்த மூலமே சம்பு எனும் சிவபெருமான்.)
கே: - ஞானம் எங்கிருந்து கிடைக்கும்?
ப: - சிவனிடமிருந்தே.

முக்திம் லபே[4]த கஸ்மாத்?
முகுந்த3ப4க்தே:, முகுந்த3: க:? |
யஸ்தாரயேத3வித்யாம்,
கா சாவித்3யா? யதா3த்மநோ(அ)ஸ்பூ2ர்தி: || **56**

கே: - மோக்ஷம் எவ்வாறு உண்டாகும்?
ப: - முகுந்த பக்தியால்.
கே: - முகுந்தன் யார்?
ப: - அவித்யைக் கடக்க வைப்பவன்.
கே: - அவித்யை என்ன?
ப: - ஆத்மாவின் விளக்கமின்மை.

கஸ்ய நீ சோகோ? ய:. ஸ்யாத்
அக்ரோத[4]: கிம் ஸுக[2]ம்? துஷ்டி: |
கோ ராஜா? ரஞ்ஜநக்ருத்,
கச்ச ச்வா? நீசஸேவகோ யஸ் ஸ்யாத் || **57**

கே : - யாருக்குத் துக்கம் இல்லை?
ப : - கோபமற்றவனுக்கு.
கே : - ஸுகம் எது?
ப : - திருப்தி.
கே : - ராஜா யார்?
ப : - ரஜ்ஜனம் (மகிழ்ச்சி) ஊட்டுகிறவன்.
கே : - நாய் யார்? ப : - நீசனுக்குத் தொண்டு செய்யவன்.

கோ மாயீ? பரமேச:,
க இந்த்[3]ரஜாலாயதே? ப்ரபஞ்சோ(அ)யம் |
க: ஸ்வப்நநிபோ[4]? ஜாக்[3]ரத்[3]
வ்யவஹார:, ஸத்யமபி ச கிம்? ப்[3]ரஹ்ம || 58

கே: - மாயையை உடையவன் (மாயைக்கு ஆதாரமாக அதை அடக்கி ஆள்பவன்) யார்?
ப: - பரமேச்வரன்.
கே: - இந்திர ஜாலம் எது?
ப: - பிரபஞ்சமே.
கே: - கனவுபோன்றது எது?
ப: - விழிப்பு நிலையிலுள்ள விவகார (உலக) ம்.
கே: - ஸத்யம் எது?
ப: - ப்ரஹ்மம்.

கிம் மித்[2]யா? யத்[3]வித்[2]யா
நாசயம், துச்ச[2]ம் து? சசவிஷாணாதி[3] |
கா சாநிர்வசநீயா?
மாயா, கிம் கல்பிதம்? த்[3]வைதம் || 59

கே: - மித்யை (கீழ்நிலையில் உண்மை போலிருந்து, மேல் நிலையில் பொய்யாவது) எது?
ப: - ஞானத்தினால் நாசமாவது. (அதாவது விவகார உலகம். முந்தைய ச்லோகத்துடன் இதைச் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். விழிப்பிலேயே நாம் உணர்வதால் விவகார உலகம் தெரிந்தாலும், இதற்கு மேல் நிலையான ஞானத்தில் இவ்வுலகு பொய்யாக மறைந்துவிடும்.)
கே: - துச்சம் (சூன்யம்) எது
ப: - முயற்கொம்பு முதலியன. (முயலின் கொம்பு ஒரு நிலையிலுமே இல்லாத முழுப்பொய். அத்யந்த அஸத்)
கே: - (நிஜம் பொய் என்று) சொல்ல முடியாதது எது?
ப: - மாயை.
கே: - அதனால் கற்பிக்கப்படுவது என்ன?
ப: - த்வைதம். (ப்ரம்மம் வேறு, ஜீவன் வேறு என்ற எண்ணம்.)

கிம் பாரமார்திக[2]ம் ஸ்யாத்?
அத்[3]வைதம், சாஜ்ஞதா குதோ?(அ)நாதி[3]: |
வபுஷச்ச போஷகம் கிம்?
ப்ராரப்[3]த[4]ம், சாந்நதா[3]யி கிம்? சாயு: || 60

கே: - எது பாரமார்த் திகம்? (உயர்பொருள் படைத்தது)
ப: - அத்வைதம். (ப்ரம்மமும், ஜீவனும் இரண்டல்ல, ஒன்றே என்பது.)

கே: - (இவற்றை வெவ்வேறாக எண்ணும்) அஞ்ஞானம் எதனால் உண்டாகிறது?
ப: - அதற்கு ஆதி இல்லை. (எனவே அதை உண்டாவதாகவே சொல்வதற்கில்லை.)
கே: - உடம்புக்குப் போஷணை கொடுப்பது எது? (போஷணை என்பது இங்கு உடம்பைவைத்து ஆட்டுவதையே குறிக்குமேயன்றி, அதற்கு நல்ல ஊட்டமளிப்பதை மட்டுமல்ல.)
ப: - பிராரப்தம் என்னும் கர்மம்.
கே: - அன்னத்தைக் கொடுப்பது யாது?
ப: - ஆயுள். அன்னம் ஆயுளைக் கொடுப்பதாகத் தோன்றினாலும், கர்மப்படி ஆயுள் விதிக்கப்பட்டுள்ளவரையே, அன்னம் ஜீர்ணமாகிப் போஷிக்கும்.)

கோ ப்[3]ராஹ்மணைருபாஸ்யோ? -
கா[3]யத்ர்யர்க்காக்[3]நிகோ[3]சர: சம்பு[4]: |
கா[3]யத்ர்யாமாதி[3]த்யே
சாக்[3]நௌ சம்பௌ[4] ச கிம் நு? தத் தத்வம் || 61

கே: - பிராம்மணனால் உபாஸிக்க வேண்டியது யார்?
ப: - காயத்ரி, சூரியமண்டலம், அக்னி இவற்றில் கோசாரமாகவுள்ள (புலனாகின்ற) சம்புவை.
கே: - காயத்ரி, சூரியன், அக்னி, சம்பு இவர்களிடத்தில் உள்ளது என்ன?
ப: - தத் (எனும் ப்ரஹ்ம) தத்துவம்.

ப்ரத்யக்ஷதே[3]வதா தா?
மாதா, பூஜ்யோ கு[3]ருச்ச க:? தாத: |
க: ஸர்வதே[3]வதாத்மா?
வித்[3]யாகர்மாந்விதோ விப்ர: || 62

கே: - பிரத்தியக்ஷ தேவதை யார்?
ப: - தாயார்.
கே: - பூஜிக்க வேண்டிய குரு யார்?
ப: - தகப்பனார்.
கே: - ஸகல தேவஸ்வரூபி யார்?
ப: - ஞான கர்மஸித்தியுடைய பிராம்மணன்.

கச்ச குலக்ஷயஹேது:?
ஸந்தாப: ஸஜ்ஜநேஷு யோ(அ)காரி |
கேஷாமமோக[4]வசநம்?
யே ச புந: ஸத்யமௌநசமசீலா: || 63

கே: - குலநாசத்துக்குக் காரணம் எது?
ப: - ஸாது ஜனங்களுடைய உள்ளத்தில் தாபத்தை உண்டாக்கும் கெட்ட செய்கை.

கே: - யாருடைய சொல் தவறாமல் பலிக்கும்?
ப: - ஸத்தியம், மௌனம், மனவடக்கம் ஆகிய சீலங்களை உடையவர் சொல்.

கிம் ஜந்ம? விஷயஸங்க[3]:,
கிமுத்தரம் ஜந்ம? புத்ர : ஸ்யாத் |
கோ(அ)பரிஹார்யோ? ம்ருத்யு:,
குத்ர பத[3]ம் வித்யஸேச்ச? த்[3]ருக்பூதே || 64

கே: - ஜன்மத்துக்கு காரணம் யாது?
ப: - விஷயத்தில் பற்று.
கே: - மேல்ஜன்மம் எது?
ப: - புத்திரன்.
கே: - பரிஹாரம் செய்ய முடியாதது எது?
ப: - சாவு.
கே: - காலை எங்கே வைக்க வேண்டும்?
ப: - கண்ணுக்குப் பரிசுத்தம் என்று தெரிந்த இடத்தில். (தூய ஒழுக்கத்தில் நடக்க வேண்டும்.)

பாத்ரம் கிமந்நதா[3]நே?
க்ஷதி[3]தம், கோ(அ)ர்ச்யோ ஹி? ப[4]க[3]வத[3]வதார: |
கச்ச ப[4]க[3]வான்? மஹேச:
சங்கரநாராயணாத்மைக: || 65

கே: - அன்ன தானத்திற்குப் பாத்திரன் யார்?
ப: - பசியுள்ளவன்.
கே: - யாரை அர்ச்சிக்கவேண்டும்?
ப: - பகவத் அவதாரத்தை.
கே: - பகவான் யார்?
ப: - சங்கரனும் நாராயணனுமாகிய ஒரே பெரிய ஈசன்.

ப[2]லமபி ப[4]க[3]வத்ப[4]க்தே:
கிம்? தல்லோகஸ்வரூபஸாக்ஷாத்வம் |
மோஷச்ச கோ? ஹ்யவித்[3]யாஸ்தமய:
க: ஸர் வேத[3]பூ[4]:? அத[2]சோம் || 66

கே: - பகவத் பக்திக்குப் பலன் எது?
ப: - அவனுடைய லோகம், ஸ்வரூபம் இவற்றின் ஸாக்ஷாத்காரம் (ப்ரத்யக்ஷ அநுபவம்).
கே: - மோக்ஷம் எது?
ப: - அவித்யை அழிதல்.
கே: - ஸகல வேதங்களுக்கும் உற்பத்தி(யும் லயமும்) எது?

ப: - ஓம்.

இத்யேஷா கண்ட[2] ஸ்தா[2]
ப்ரச்நோத்தாரரத்நமாலிகா யேஷாம் ।
தே முக்தாப[4]ரணா இவ
விமலாச்சாபா[4]ந்தி ஸத்ஸமாஜேஷு ॥ 67

இந்தப் பிரச்நோத்தர ரத்நமாலையைக் கழுத்தில் (கருத்தில்) தரித்தவர்கள் முக்தாபரணங்கள் (முக்தர்களுக்குள் சிறந்தவர்) போல், நிர்மலமாக நலலோர் நிறைந்த ஸபைகளில் பிரகாசிப்பார்கள்.



ஏகசுலோக பிரகரணம்

(குருவுக்கும் - சிஷ்யனுக்கும் இடையில் நடக்கும் ஸம்வாத உருவில் உள்ள இந்த ஒரே ச்லோகத்தில், அத்வைத வித்யையின் ஸாரம் முழுதும் உபதேசிக்கப்படுவதால் இது "ஏகச்லோக ப்ரகரணம்" எனப்படுகிறது. இது ப்ருஹதாரண்ய உபநிஷத்தின் நான்காம் அத்தியாயத்தில் ஜனகயாஜ்ஞவல்க்ய ஸம்வாதமாக அமையும் "ஜ்யோதிர் ப்ராஹ்மணம்" என்பதைத் தழுவியது.)

கிம் ஜ்யோதிஸ்தவ பா^{4}நுமான் அஹநி மே ராத்ரௌ ப்ரதீ^{3}பாதி^{3}கம்
ஸ்யாதே^{3}வம் ரவி-தீ^{3}ப-தர்சநவிதௌ^{4} கிம் ஜ்யோதிராக்^{2}யாஹி மே ।
சக்ஷுஸ்-தஸ்ய நிமீலநாதி^{3}ஸமயே கிம் தீ^{4}ர்-தி^{4}யோத^{3}ர்சநே
கிம் தத்ராஹமதோ ப^{4}வான் பரமகம் ஜ்யோதிஸ்-தத^{3}ஸ்மி ப்ரபோ^{4} ॥ 1

ஆசார்யர்: - உனக்கு ஜ்யோதி பிரகாசம் எது? (எந்த பிரகாசத்தால் நீ விஷயங்களைத் தெரிந்து கொள்கிறாய்?)

சிஷ்யன்: - பகலில் எனக்கு சூரியன். (விஷயங்களைப் பார்க்க சூரியப்பிரகாசம் உதவி செய்கிறது.)

ஆசார்யர்: - இரவில் (எது பிரகாசத்தைக் கொடுக்கிறது)?

சிஷ்யன்: - விளக்கு முதலியவை.

ஆசார்யர்: - இவ்விதம் இருக்கலாம். (ஆனால்) சூரியனையும், தீபத்தையும் பார்க்கும் விஷயத்தில் எது பிரகாசத்தைத் தருவது? எனக்குச் சொல். (சூரிய, சந்திரரின் பிரகாசத்தை அறியும் திறனில்லா குருடருக்கு இவையும் விஷயங்களைத் தெரிவிப்பதில்லையல்லவா? என வே, இந்த வெளி ஒளியின் உதவியைப்பெற உதவும் உள்ளொளி எது என ஆசார்யர் வினவுகிறார்.)

சிஷ்யன்: - கண்.

ஆசார்யர்: - அந்தக் கண்ணுக்கு மூடுதல், மறைவு முதலியவை ஏற்படும் சமயம் எது ஜ்யோதி? (எதனால் விஷயத்தை அறியலாம்? விஷயத்தை விளக்குவது எதுவானாலும் அதுவே விளக்கு - அதாவது ஜ்யோதி.)

சிஷ்யன்: - புத்தி. (கண்ணற்றவரும் புத்தியினால் பொருட்களைத் தெரிந்து கொள்கின்றனரன்றோ?)

ஆசார்யர்: - புத்தியை அறியும் விஷயத்தில் எது ஜ்யோதி? (வெளி ஒளியை அறியக் கண்: கண்ணை அறியச் செய்ய புத்தி. புத்தியை அறியச் செய்யும் ஜ்யோதி எது?)

சிஷ்யன்: - அதில் நான். (புத்தியில் உள்ளுறையும் " நான்" என்ற உயிருணர்வு தான் அதனை அறியச் செய்கிறது.)

ஆசார்யர்: - ஆகையால் நீர் மேலான (தானே பிரகாசிக்கும்) ஜ்யோதி. "நான்", எனும் ஆத்மாவிற்குப் பிறவற்றை அறியவும், தன்னையே அறிந்து கொள்ளவும் திறன். வேறெங்கிருந்தும் வரவில்லை. அதுவே தன்னையும், ஸகலத்தையும் தானாகவும் விளங்கிக்கொள்ளும் ஜ்யோதி.)

சிஷ்யன்: - ப்ரபுவே! அதுவாகவே (அத்த ஜ்யோதிஸ்வரூப ப்ரஹ்மமாகவே நான்) இருக்கிறேன்.



அநாத்ம ஸ்ரீ விக3ர்ஹணம்

[ஆத்மாவைத் தவிரப் பிறவான அநாத்மாவின் எல்லா ஐசுவரியமும் (ஸ்ரீயும்) நிந்திக்கத் தக்கதேயாகும் என்பதை இப்பிரகரணத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் எடுத்துக் காட்டுவதால் இவ்வாறு தலைப்பிடப் பட்டுள்ளது.]

லப்3தா4 வித்3யா ராஜ மாந்யா தத: கிம்
ப்ராப்தா ஸம்பத் ப்ராப4வாட்4யா தத: கிம் |
பு4க்தா நாரீ ஸுந்த3ராங்கீ3 தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் || 1

அரசர்களால் வெகுமானிக்கத்தகுந்த வித்யை ஸம்பாதிக்கப்பட்டு விட்டது. அதனால் என்ன? பிரபுத்தன்மையுடன் (ஆளும் சக்தியுடன்) கூடி சிறப்புற்ற ஐசுவரியம் அடையப்பட்டு விட்டது. அதனால் என்ன? அழகான அங்கத்தோடு கூடிய ஸ்திரீ அனுபவிக்கப்பட்டு விட்டாள். அதனால் என்ன? எவனொருவனால் தன்னுடைய ஆத்மஸ்வரூபம் ஸாக்ஷாத்கரித்ததாக (ப்ரத்யக்ஷத்தில் அநுபவிக்கப் பட்டதாக) ஆகவேயில்லையோ (அவனுக்கு மற்ற இவற்றால்) என்ன பயன்?

கேயூராத்3யைர் பூ4ஷிதோ வா தத: கிம்
கௌசேயாத்3யை - ராவ்ருதோ வா தத: கிம் |
த்ருப்தோ ம்ருஷ்டாந்நாதி3நா வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் || 2

எவன் ஒருவனால் தன் ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்படவில்லையோ அவன் தோள்வளை முதலானவைகளால் அலங்காரம் செய்யப்பட்டு விட்டதனால என்ன? பட்டு முதலானவைகளால் போர்த்தப்பட்டு விட்டதனால் என்ன ! சுத்தமான ஆஹாராதிகளால் திருப்தியடைந்துவிட்டதனால் தான் என்ன (பயன்)?

த்3ருஷ்டா நாநா சாருதே3சாஸ் - தத: கிம்
புஷ்டாச்சேஷ்டா ப3ந்து4வர்காஸ்தத: கிம் |
நஷ்டம் தா3ரித்3ர்யாதி4 து2:கம் தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் || 3

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்பட வில்லையோ, அவனால் அழகான பல தேசங்கள் பார்க்கப்பட்டு விட்டதனால் என்ன? (அவனால்) ஸ்நேஹிதர்களும் பந்து வர்க்கங்களும் போஷிக்கப்பட்டு விட்டதனால் என்ன? தரித்திரத்தன்மை முதலிய துக்கங்களெல்லாம் போய்விட்டதனால் தான் என்ன?

ஸ்நாதஸ் - தீர்தே2 ஜஹ்நுஜாதெ3ள தத: கிம்
தா3னம் த3த்தம் த்3வ்யஷ்ட - ஸங்க்3யம் தத: கிம் |
ஜப்தா மந்த்ரா: கோடிசோ வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் || 4

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வ ரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்பட வில்லையோ அவனால் கங்கை முதலான புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யப் பட்டதனால் என்ன? பதினாறு விதமான தானங்களும் கொடுத்தாய்விட்டதனால் என்ன? கோடிக்கணக்கான மந்திரங்கள் ஜபிக்கப்பட்டு விட்டதனால்தான் என்ன (பயன்)?

கோ3த்ரம் ஸம்யக்3 - பூ4ஷிதம் வா தத: கிம்
கா3த்ரம் ப4ஸ்மாச்சா2தி3தம் வா தத: கிம் |
ருத்3ராக்ஷாதி3: ஸந்த்3ருதோ வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் || 5

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்பட வில்லையோ அவன் தன் வம்சத்திற்குத் தான் அலங்காரமாக இருந்து சிறப்பை உண்டுபண்ணி விட்டதனால் தான் என்ன? சரீரம் பூராவும் விபூதியினால் பூசியாகி விட்டதனால் என்ன? ருத்ராக்ஷம் முதலானவைகள் நன்கு தரித்துக் கொள்ளப்பட்டு விட்டதனால் என்ன (பயன்)?

அந்நைர் - விப்ராஸ்தர்பிதா வா தத: கிம்
யஜ்ஞைர் தே3வாஸ்தோஷிதா வா தத: கிம் |
கீர்த்யா வ்யாப்தா: ஸர்வலோகாஸ்தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் || 6

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்படவே யில்லையோ, அவனால் அன்னங்களால் பிராஹ்மணர்கள் திருப்தி செய்யப்பட்டு விட்டதனால் என்ன? யஜ்ஞங்களால் தேவர்கள் ஸந்தோஷிக்கப்பட்டுவிட்டதனால் என்ன? கீர்த்தியினால் எல்லா உலகங்களும் வியாபிக்கப்பட்டு விட்டதனால் என்ன (பயன்)?

காய: க்லிஷ்டச்சோபவாஸைஸ் - தத: கிம்
லப்3தா4: புத்ரா: ஸ்வீய பத்ந்யாஸ் தத: கிம் |
ப்ராணாயாம: ஸாதி4தோ வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் || 7

எவனொருவனால் தன் ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப் படவேயில்லையோ (அவனது) சரீரம் உபவாஸங்களினால் துன்புறுத்தப்பட்டு விட்டதனால் என்ன? (அவனால்) தன் பத்னியின் மூலமாக புத்திரர்கள்

அடையப்பட்டுவிட்டதனால் என்ன? பிராணாயாமம் ஸாதிக்கப்பட்டு விட்டதனால் தான் என்ன?

யுத்3தே4 சத்ருர் நிர்ஜிதோ வா தத: கிம்
பூ4யோ மித்ரை: பூரிதோ வா தத: கிம் ।
யோகை3: ப்ராப்தா: ஸித்3த4யோ வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் ॥ 8

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்படவேயில்லையோ அவனால் யுத்தத்தில் சத்ரு ஜயிக்கப்பட்டுவிட்டதனால் என்ன? ஏராளமான ஸ்நேஹிதர்களை (அவன்) பூர்த்தியாகப் பெற்று விட்டதனால் என்ன? யோகா நுஷ்டானங்களினால் (அணிமாதி) ஸித்திகளெல்லாம் (அவனுக்குக்) கிடைந்துவிட்டதனால் என்ன (பயன்)?

அப்3தி4: பத்3ப்4யாம் லங்கி4தோ வா தத: கிம்
வாயு: கும்பே4 ஸ்தா2பிதோ வா தத: கிம் ।
மேரு: பாணாவுத்3த்4ருதோ வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் ॥ 9

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்படவேயில்லையோ அவனால் கால்களாலேயே ஸமுத்திரம் தாண்டப்பட்டு விட்டதனால் என்ன? (அவனால்) வாயு கும்பகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுவிட்டதனால் என்ன? மேருபர்வதமே (அவனது) உள்ளங்கையில் தூக்கி வைத்துக்கொள்ளப்பட்டதனால் என்ன?

க்ஷ்வேள: பீதோ து3க்3த4வத்3- வா தத: கிம்
வஹ்நிர் ஜக்3தோ4 லாஜவத்3- வா தத: கிம் ।
ப்ராப்தச்சார: பக்ஷிவத் கே2 தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் ॥ 10

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்படவேயில்லையோ, அவனால் கறந்த பாலைப்போல விஷம் குடிக்கப்பட்டதனால் என்ன? பொறியைப்போல நெருப்பு தின்னப்பட்டதனால் என்ன? பக்ஷியைப்போல ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் சக்தி கிடைத்துவிட்டதனால் என்ன?

ப3த்3தா4: ஸம்யக் பாவகாத்3யாஸ் - தத: கிம்
ஸாக்ஷாத்3 - வித்2தா4 லோஹவர்யாஸ் தத: கிம் ।
லப்3தோ4 நிக்ஷேபோ(அ)ஞ்ஜநாத்3யைஸ் - தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ4த் ॥ 11

எவனொருவனால் தன்னுடைய ஆத்ம ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்படவே

யில்லையோ அவனால் அக்னி முதலானவைகள் நன்கு கட்டப்பட்டு விட்டதனால் (அடக்கி ஆளப்பட்டு விட்டதால்) என்ன? லோஹங்களையும் அப்படியே நன்கு கட்டி (யாண்டு) விட்டதனால் என்ன பயன்? மை முதலான வைகளின் உதவியால் புதையல் எடுக்கப்பட்டு விட்டதனால் என்ன?

பூ⁴பேந்த்³ரத்வம் ப்ராப்தமுர்வ்யாம் தத: கிம்
தே³வேந்த்³ரத்வம் ஸம்ப்⁴ருதம் வா தத: கிம் ।
முண்டீ³ந்த்³ரத்வம் சோபலப்³த⁴ம் தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ⁴த் ॥ 12

எவனொருவனால் தன்னுடைய ஆத்மாவின் ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப்பட வில்லையோ அவனுக்கு பூமியில் உள்ள அரசர்களுக்கெல்லாம் அரசராயிருக்கும் தன்மை கிடைத்துவிட்டதனால் என்ன? தேவர்களுக்கு அரசனாயிருக்கும் தன்மை(யே) ஸம்பாதிக்கப்பட்டதனால் (தான்) என்ன? ஸன்னியாஸிகளுக்குள் சிரேஷ்டராயிருக்கும் தன்மை அடையப்பட்டு விட்டதனால் தான் என்ன பயன்?

மந்த்ரை: ஸர்வ: ஸ்தம்பி⁴தோ வா தத: கிம்
பா³ணைர் லக்ஷ்யோ பே⁴தி³தோ வா தத: கிம் ।
காலஜ்ஞாநம் சாபி லப்³த⁴ம் தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ⁴த் ॥ 13

எவனொருவனால் தன்னுடைய ஆத்மாவின் ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப் படவேயில்லையோ அவனால் மந்திரங்களினால் எல்லோரும் ஸ்தம்பிக்கும்படி செய்தாகி விட்டதனால் என்ன? பாணங்களினால் குறியை அடித்தாகி விட்டதனால் என்ன? (சென்றகாலம், நிகழ்காலம், வருங்) காலம் (எல்லாம்) அறியப்பட்டு விட்டதனால் என்ன?

காமாதங்க: க²ண்டி³தோ வா தத: கிம்
கோபாவேச: குண்டி²தோ வா தத: கிம் ।
லோபா⁴ச்லேஷோ வர்ஜிதோ வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ⁴த் ॥ 14

எவனொருவனால் தன்னுடைய ஆத்மாவின் ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப் படவில்லையோ, அவனால் காமமாகிற ஜுரம் போக்கடிக்கப்பட்டதனால் என்ன கோபத்தின் வேகம் மழுங்கப்பட்டுவிட்டதனால் என்ன? பேராசையின் சேர்க்கை தடுக்கப்பட்டு விட்டதனால் தான் என்ன?

மோஹத்⁴வாந்த: பேஷிதோ வா தத: கிம்
ஜாதோ பூ⁴மௌ நிர்மதோ³ வா தத: கிம் ।
மாத்ஸர்யார்திர் மீளிதா வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ⁴த் ॥ 15

எவனொருவனால் தன்னுடைய ஆத்மாவின் ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப் படவில்லையோ அவனால் மோஹமாகிற இருள் போக்கடிக்கப்பட்டதனால் என்ன? பூமியிலேயே மதமில்லாதவனாக பெயர் பெற்றுவிட்டதனால் என்ன? பொறாமை என்கிற தொந்திரவும் விலக்கப்பட்டு விட்டதனால் என்ன?

தா⁴துர்லோக: ஸாதி⁴தோ வா தத: கிம்
விஷ்ணோர் லோகோ வீக்ஷிதோ வா தத: கிம் ।
சம்போர் லோக: சாஸிதோ வா தத: கிம்
யேந ஸ்வாத்மா நைவ ஸாக்ஷாத்க்ருதோ(அ)பூ⁴த் ॥ 16

எவனொருவனால் தன்னுடைய ஆத்மாவின் ஸ்வரூபம் ஸாக்ஷாத்கரிக்கப் படவில்லையோ அவனால் பிரஹ்மாவின் (ஸத்ய) லோகம் ஸம்பாதிக்கப் பட்டதனால் என்ன? விஷ்ணுவின் (வைகுண்ட) லோகம் நன்கு பார்க்கப்பட்டு விட்டதனால் என்ன? பரமசிவனுடைய (கைலாஸ) லோகம் ஆளப்பட்டுவிட்டதனால் தான் என்ன?

யஸ்யேத³ம் ஹ்ருத³யே ஸம்யக³நாத்ம - ஶ்ரீ விக³ர்ஹணம் ।
ஸதோ³தே³தி ஸ ஏவாத்ம ஸாக்ஷாத்காரஸ்ய பா⁴ஜனம் ॥ 17

எவனுடைய ஹ்ருதயத்தில் ஆத்மாவைத் தவிர வேறு எந்த ஐச்வர்யத்தையும் பற்றிய நிந்தனை நன்றாக எப்பொழுதும் தோன்றிக்கொண்டே யிருக்கிறதோ அவன் தான் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதற்குத் தகுதியுள்ளவன்.

அந்யே து மாயிக ஜக³த்³ - ப்⁴ராந்தி - வ்யாமோஹ - மோஹிதா: ।
ந தேஷாம் ஜாயதே க்வாபி ஸ்வாத்ம ஸாக்ஷாத்க்ருதிர்பு⁴வி ॥ 18

மற்றவர்களோவென்றால் மாயையினால் ஏற்பட்ட இந்த ஜகத்தாகிற பொய்த் தோற்றத்தினால் ஏமாற்றப்பட்டு மயங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு இவ்வுலகத்தில் ஒருபொழுதும் தன்னுடைய ஆத்மாவின் ஸாக்ஷாத்காரம் ஏற்படாது.



நிர்வாணமஞ்ஜரீ

[ஆத்ம ஸம்பந்த மற்ற யாவும் தீபம் அணைவது போல அற்றுப்போன நிர்வாண நிலையின் அனுபவங்களை மஞ்ஜரீ எனும் பூங்கொத்துப் போலத் திரட்டித் தரும் ப்ரகரணம்]

அஹம் நாமரோ நைவ மர்த்யோ ந தை³த்யோ
ந க³ந்த⁴ர்வ ரக்ஷ: பிசாச ப்ரபே⁴த³: ।
புமான் நைவ ந ஸ்த்ரீ ததா² நைவ ஷண்ட³:
ப்ரக்ருஷ்ட ப்ரகாச ஸ்வரூப: சிவோ(அ)ஹம் ॥ 1

நான் தேவன் அல்ல, மனிதனும் அல்ல, அஸுரனும் அல்ல, கந்தர்வன் ராக்ஷஸன் பிசாசம் என்கிற வகுப்பில் சேர்ந்தவனும் அல்ல, ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல, அப்படியே அலியும் அல்ல. உத்தமமான ஞானத்தையே ஸ்வரூபமாயுடைய சிவ (மங்கள) ஸ்வரூபியான பரப்பிரஹ்மமே நான்.

அஹம் நைவ பா²லோ யுவா நைவ வ்ருத்³தோ⁴
ந வர்ணீ ந ச ப்³ரஹ்மசாரீ க்²ருஹஸ்த²: ।
வநஸ்தோ³(அ)பி நாஹம் ந ஸந்யஸ்த த⁴ர்மா
ஜகஜ்ஜந்ம நாசைக ஹேது: சிவோ(அ)ஹம் ॥ 2

நான் பாலனும் அல்ல. யுவாவும் அல்ல. கிழவனும் அல்ல, (பிராஹ்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்கிற நான்கு) வர்ணங்களில் சேர்ந்தவனுமல்ல, (பிரஹ்மசாரீ, கிருஹஸ்தன். வானப்பிரஸ்தன் ஸன்னியாஸி என்கிற நான்கு ஆசிரமங்களில்) பிரஹ்மசாரீ, கிருஹஸ்தனும் அல்ல, வானப்பிரஸ்தனும் அல்ல. எல்லாக் கர்மாக்களையும் விட்ட ஸன்னியாஸியும் அல்ல. பிரபஞ்சத்தின் உற்பத்திக்கும் நாசத்திற்கும் ஒரே காரணமாயிருக்கிற மங்கள ரூபியான பரப் பிரஹ்மமே நான்.

அஹம் நைவ மேயஸ் - தி²ரோபூ⁴த - மாய:
ததை²வேக்ஷிதும் மாம் ப்ருத²ங் - நாஸ்த்யுபாய: ।
ஸமாச்லிஷ்ட - காய - த்ரயோ(அ)ப்யத்³விதீய:
ஸதா³(அ)தீந்த்³ரிய: ஸர்வரூப: சிவோ(அ)ஹம் ॥ 3

நான் பிரமாணங்களினால் அறியக்கூடியவன் அல்ல, மாயையினால் மறைக்கப்பட்டவனும் இல்லை. என்னை அறிவதற்கு வேறு தனியாக உபாயம் கிடையாது. ஸ்தூலம், ஸூக்ஷமம், காரணம் என்கிற மூன்று சரீரங்களால் நன்கு சூழப்பட்டவனாயிருந்தபோதிலும், இரண்டாவதென்பது இல்லாததாய் எப்பொழுதும் இந்திரியங்களுக்கு எட்டாததாய் எல்லா வஸ்து ஸ்வரூபமாக இருக்கும் மங்கள ஸ்வரூபியான பரப்பிரஹ்மமே நான்.

அஹம் நைவ மந்தா ந க3ந்தா ந வக்தா
ந கர்தா ந போ4க்தா ந முக்தாச்ரமஸ்த2: ।
யதா2(அ)ஹம் மநோவ்ருத்தி பே4த2 ஸ்வரூப:
ததா2 ஸர்வவ்ருத்தி ப்ரதீ3ப: சிவோ(அ)ஹம் ॥ 4

நான் (மனஸினால்) ஆலோசிக்கிறவன் அல்ல, (காலால்) நடக்கிறவன் அல்ல, (வாயால்) பேசுகிறவன் அல்ல, (கர்மேந்திரியங்களால்) வேலை செய்கிறவன் அல்ல, (போக ஸாதனங்களால் ஸுகதுக்கங்களை) அனுபவிக்கிறவன் அல்ல. (ஸம்ஸார பந்தத்திலிருந்து) விடுபட்டவனுடைய நிலையில் இருப்பவனும் அல்ல, எப்படி நான் மனஸினுடைய விருத்திகளின் வேற்றுமையைத் தன் ரூபமாக வைத்துக் கொண்டிருக்கிறேனோ, அப்படியே எல்லா விருத்திகளையும் பிரகாசிக்கும் படிச் செய்யும் வெளிச்சமாயுள்ள மங்கள ஸ்வரூபமான பரப்பிரஹ்மமாகவும் இருக்கிறேன்.

ந மே லோக யாத்ரா ப்ரவாஹ ப்ரவ்ருத்தி:
ந மே ப3ந்த4 - பு3த்2த்4யா து3ரீஹா நிவ்ருத்தி: ।
ப்ரவ்ருத்திர் நிவ்ருத்த்யா(அ)ஸ்ய சித்தஸ்ய வ்ருத்திர்
யதஸ்த்வந்வஹம் தத்ஸ்வரூப: சிவோ(அ)ஹம் ॥ 5

எனக்கு உலக யாத்திரை தொடர்ந்து நடப்பதற்கான பிரவிருத்தியும் கிடையாது, கட்டுப்படுத்தி விடுமே என்கிற எண்ணத்தினால் கெட்ட கார்யங்களி லிருந்து நிவிருத்தியும் கிடையாது. நிவிருத்தியோடு பிரவிருத்தியும் இந்த மனத்தினுடைய வேலையாயிருப்பது எதனால் ஏற்படுகிறதோ, அந்த ஸ்வரூப மாயுள்ள மங்கள ரூபியான பரப்பிரஹ்மமாக நான் எப்பொழுதும் இருக்கிறேன்.

நிதா3நம் யத3ஜ்ஞாந - கார்யஸ்ய கார்யம்
விநா யஸ்ய ஸத்த்வம் ஸ்வதோ நைவ பா4தி ।
யதா3த்4யந்த மத்4யாந்தராளாந்தராள
ப்ரகாசாத்மகம் ஸ்யாத் ததே3வாஹமஸ்மி ॥ 6

எது அஜ்ஞானத்தினால் ஏற்பட்ட (பிரபஞ்சம் முதலான) கார்ய பதார்த்தங் களுக்கெல்லாம் மூலகாரணமோ, எதனுடைய இருப்பானது கார்ய பதார்த்தங்க ளன்னியில் தானாகவே தோன்றுகிறதிலலையோ, எது (எல்லாவற்றிலும்) முதலிலும் முடிவிலும் நடுவிலும் மத்தியிலுள்ள இடுக்குகளிலும் பிரகாச ஸ்வரூபமாகவே இருக்கிறதோ, அதுவே நானாக இருக்கிறேன்.

யதோ(அ)ஹம் ந பு2த்2தி4ர் ந மே கார்ய ஸித்3தி4:
யதோ நாஹமங்க3ம் ந மே லிங்க3 ப4ங்க2: ।
ஹ்ருதா3காசவர்தீ க3தாங்க3த்ரயார்தி:
ஸதா3 ஸச்சிதாநந்த மூர்தி: சிவோ(அ)ஹம் ॥ 7

நான் புத்தியல்லவாதலால் எனக்கு செய்து முடிக்க வேண்டியதென்பது கிடையாது. நான் சரீரமல்லவாதலால் ஸூக்ஷ்ம சரீரத்திற்கு ஏற்படும் கெடுதல் எனக்கு இல்லை. ஹ்ருதயாகாசத்தில் எப்பொழுதும் இருப்பதாய் (ஸ்தூலம் ஸூக்ஷ்மம் காரணம் என்ற) மூன்று சரீரங்களினுடைய துன்பத்திலிருந்து விலகினதாய் ஸச்சிதானந்த ஸ்வ ரூபமாக இருக்கும் மங்கள ரூபியான பரப் பிரஹ்மமே நான்.

யதா3ஸீத்3 விலாஸாத்3 - விகாரோ ஜக3த்3- யத்3
விகாராச்ரயோ நாத்3விதீயத்வத: ஸ்யாத் ।
மநோ பு2த்தி4 சித்தாஹமாகார வ்ருத்தி
ப்ரவ்ருத்திர் யத: ஸ்யாத் ததே3வாஹமஸ்மி ॥ 8

எது விலஸிக்கும் போது (மலர்வதினால்) பிரபஞ்சமென்ற மாறுதலாக ஏற்பட்டதோ, (அப்படியிருந்தும்) எது இரண்டாவதற்றதென்ற காரணத்தினால் மாறுதலுக்கு இடமாக ஆகிறதில்லையோ, எதனால் மனஸ் புத்தி சித்தம் அஹங்காரம் என்று பிரிவுபட்டுள்ள அந்தக்கரண விருத்திகளுக்கு பிர விருத்தி ஏற்படுகிறதோ, அதுவே நான்.

யத3ந்தர் - ப3ஹிர் வ்யாபகம் நித்ய சுத்3த4ம்
யதே3கம் ஸதா4 ஸச்சிதாநந்த3 கந்த3ம் ।
யத: ஸ்தூ2ல ஸூக்ஷ்ம ப்ரபஞ்சஸ்ய பா4நம்
யதஸ்தத் ப்ரஸூதிஸ் - ததே3வாஹமஸ்மி ॥ 9

எது உள்ளேயும் வெளியிலும் வியாபகமாயும் எப்பொழுதும் சுத்தமாயும் இருக்கிறதோ, எது எப்பொழுதும் ஒன்றாகவே இருந்துக் கொண்டு, ஸத்தாயும் - சித்தாயும் ஆனந்தமாயுமுளளதோ, எதனால் ஸ்தூல பிரபஞ்சம், ஸூக்ஷ்ம பிரபஞ்சம் - இவைகளுடைய தோற்றம் (ஏற்படுகிறதோ), எதிலிருந்து அந்தப் பிரபஞ்சங்களின் உற்பத்தியோ அதுவே நான்.

யத3ர்கேந்து3 வித்3யுத் ப்ரபா4 ஜால மாலா
விலாஸாஸ்பத3ம் யத் ஸ்வபே4தா3தி3 சூந்யம் ।
ஸமஸ்தம் ஜகத் யஸ்ய பாதா3த்மகம் ஸ்யாத்
யத: சக்திபா4நம் ததே3வாஹமஸ்மி ॥ 10

எது ஸூர்யன் சந்திரன் மின்னல் இவைகளின் பிரகாசக்கூட்ட வரிசைகள் விளங்குவதற்குக் காரணமோ, எது தன்னுள் பேதம் முதலான (தனக்குள்ளேயே கைகால்கள் மாதிரியுள்ள ஸ்வகதபேதம், தனக்கு ஸமாநமான வேறொரு பதார்த்தத்திலிருந்து வேறுபடுதலாகிய ஸஜாதீய பேதம், தனக்கு விலக்ஷணமா யுள்ள பதார்த்தங்களிலிருந்து வேறுபடுதலாகிய விஜாதீய பேதம் ஆகிய மூன்று) பேதங்களும் அற்றதோ, எதனுடைய பாதஸ்வரூபமாகவே ஸகல ஜகத்தும் ஆகுமோ, எதனால் சக்தியினுடைய தோற்றம் ஏற்படுகிறதோ, அதுவே நான்.

யத: கால ம்ருத்யுர் பி³பே⁴தி ப்ரகாமம்
யதச்சித்த பு³த்³தீ⁴ந்த்ரியாணாம் விலாஸ: ।
ஹரி ப்⁴ரஹ்ம ருத்³ரேந்த்ர சந்த்³ராதி³ நாம
ப்ரகாஸோ யத: ஸ்யாத் ததே³வாஹமஸ்மி ॥ 11

எதனிடம் காலமிருத்யுவும் மிகவும் பயப்படுகிறாரோ, எதனால் சித்தம் புத்தி இந்திரியங்கள் இவைகளுக்கு பிரகாசம் ஏற்படுகிறதோ, எதனால் விஷ்ணு பிரஹ்மா, ருத்ரன் இந்திரன் சந்திரன் முதலானவர்களுடைய பெயர்களுக்குப் பிரகாசம் ஏற்படுகிறதோ, அதுவே நான்.

யதா³காசவத் ஸர்வக³ம் சாந்த ரூபம்
பரம் ஜ்யோதிராகார சூந்யம் வரேண்யம் ।
யதா³த்³யந்த சூந்யம் பரம் சங்கராக்³யம்
யத³ந்தர் விபா⁴வ்யம் ததேவாஹமஸ்மி ॥ 12

எது ஆகாசம் போல எல்லாவற்றிலும் வியாபித்துக்கொண்டு, அடங்கின ஸ்வரூபமுள்ளதாய், மேலான ஜ்யோதியாய், உருவமற்றதாய், சிலாகிக்கத் தக்கதாயிருக்கிறதோ, எது ஆதியும் அந்தமும் அற்றதாய், உத்கிருஷ்டமாய், க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய பெயருள்ளதாய் இருக்கிறதோ. எது உள்ளேயே நன்கு அனுபவிக்கத்தக்கதோ, அதுவே நான்.



ப்ரௌடாநுபூதி

[ஆன்ம அநுபவத்தின் பூர்ண முதிர்ச்சி பெற்ற ப்ரௌட நிலையைக் கூறுவது.]

ப்ரௌட4 ப்ரௌட4 நிஜாநுபூ4தி க3ளித த்3வைதேந்த்3ரஜாலோ கு3ரு:
கூ3ட4ம் கூ3ட4 -மகௌ4க4 - து3ஷ்ட - குதி4யாம் ஸ்பஷ்டம் ஸுதீ4சாலிநாம்|
ஸ்வாந்தே ஸம்யகி3ஹாநுபூ4தமபி ஸச்சி2ஷ்யாவபோ3தா4ய தத
ஸத்யம் ஸம்ஸ்ம்ருதவாந் ஸமஸ்தஜக3தாம் நைஜம் நிஜாலோகநாத் || 1

முற்றிலும் முற்றின தன்னுடைய அனுபவத்தினால், இந்திரஜாலம் போலுள்ள வேற்றுமையாகத் தோன்றும் ஜகத் எவருக்கு நழுவி விட்டதோ அந்த குருவானவர், பாபக் கூட்டத்தினால் கெட்டுப்போன புத்தியோடு கூடினவர் களுக்கு மிகவும் மறைந்ததாயும், நல்ல புத்திசாலிகளுக்கு தெளிவாக உள்ளதும், எல்லா உலகங்களுக்கும் உள்தத்வமாக உள்ளதுமான அந்த ஸத்யமான ஆத்ம ஸ்வ ரூபத்தை தனக்குள் நன்றாக அனுபவிக்கப்பட்டிருந்தபோதிலும் தகுந்த சிஷ்யனுக்கு அறிவிப்பதற்காக தனக்குள் பார்த்து ஞாபகப்படுத்திக்கொண்டார்.

த்3வைதம் மய்யகி2லம் ஸமுத்தி2தமித3ம் மித்2யா மந:கல்பிதம்
தோயம் தோயவிவர்ஜிதே மருதலே ப்4ராந்த்யைவ ஸித்3த4ம் நஹி |
யத்3யேவம் க2லு த்3ருச்யமேதத3கி2லம் நாஹம் நவா தந் மம
ப்ரௌடாநந்த சிதேக ஸன்மய வபு: சுத்தோ(அ)ஸ்ம்யகண்டோ (அ)ஸ்ம்யஹம் || 2

என்னிடத்தில் கிளம்பியுள்ள இந்த வேற்றுமைத் தோற்றம் எல்லாம மனஸினால் கல்பிக்கப்பட்டது மித்யையே. (தோற்றத்தில் மெய்போலிருந்து வாஸ்தவத்தால் பொய்யாய்ப் போவதே மித்யை.) ஜலமேயில்லாத பாலைவனத் தரையில் பிராந்தியினால் மட்டுமே ஏற்பட்ட ஜலம் (கானல் நீர்) வாஸ்தவத்தில் இல்லையல்லவா? ஆகையால் இந்த அனுபவிக்கப்படுவதெல்லாம் நான் அல்ல, அது என்னுடையதும் அல்ல. உத்தமமான ஆனந்தத்தையும், சுத்தமான ஞானத்தையும், ஸத்தையையும் மட்டுமே ஸ்வ ரூபமாய் கொண்ட சுத்தமான ஆத்ம ஸ்வரூபமாக நான் இருக்கிறேன். நான் துண்டுபடாத பரிபூர்ணனாக இருக்கிறேன்.

தே3ஹோ நாஹ - மசேதநோ(அ)யமநிசம் குட்3யாதி3வந்நிச்சிதோ
நாஹம் ப்ராணமயோ(அ)பி வா த்3ருதித்4ருதோ வாயுர் யதா2 நிச்சித: |
ஸோ(அ)ஹம் நாபி மநோமய: கபிசல: கார்பண்யது3ஷ்டோ ந வா
பு3த்3தி4ர் பு3த்3த4கு-வ்ருத்திகேவ குஹநா நாஜ்ஞாநமந்த4ம்தம: || 3

நான் சுவர் முதலான வைபோல எப்பொழுதும் அறிவற்ற ஜடம் என்று தீர்மானிக்கப்பட்ட தேஹம் அல்ல. நான் துருத்தியில் அடைத்த காற்றுப் போலவே நிச்சயமாயுள்ள பிராணமய கோசமும் அல்ல. நான் குரங்குமாதிரி சஞ்சலமாயும்,

சிறுமைத்தன மென்ற தோஷத்தோடு கூடியதாயுமுள்ள மனோமய கோசமும் அல்ல. புத்த மதத்தில் சேர்ந்து நிந்தித மான நடத்தையோடு கூடினவளைப்போல ஏமாற்றும் தன்மையுள்ள புத்தியும் அல்ல. மிகவும் இருட்டா யிருக்கும் அஞ்ஞானமும் அல்ல. எதெல்லாம் அனுபவிக்கப்படுகிறதோ அதெல்லாம் ஆத்மா அல்ல.

நாஹம் கா2தி3ரபி ஸ்பு2டம் மருதல ப்4ராஜத் ப4யஸ்-ஸாம்யத:
தேப்4யோ நித்யவிலக்ஷணோ(அ)கி2லத்3ருசி: ஸௌர ப்ரகாசோ யதா2 |
த்3ருச்யை: ஸங்க3-விவர்ஜிதோ க3க3நவத் ஸம்பூர்ணரூபோ(அ)ஸ்ம்யஹம்
வஸ்து-ஸ்தி2த்யநுரோத4தஸ்-த்வஹமித3ம் வீச்யாதி3 ஸிந்து4ர் யதா2 || 4

நான் ஆகாசம் முதலான பூதங்களும் அல்ல என்பது தெளிவு. அவைகள் பாலைவனத் தரையில் தோன்றும் ஜலத்திற்கு (கானல் நீருக்கு) சமானமா யிருப்பதால் அவைகளிலிருந்து எப்பொழுதும் வேறுபட்ட லக்ஷணத்தோடு கூடியவன் நான். எப்படி ஸூர்யனுடைய பிரகாசமானது (பிரகாசிக்கப்படும் பதார்த்தங்களுடன் ஒட்டாமலே) இருக்கிறதோ அப்படியே நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பவனாக இருந்தும் பார்க்கப்படும் பதார்த்தங்களுடன் ஒட்டுதல் இல்லாதவன். நான் ஆகாசம் போல எங்கும் நிறைந்த ஸ்வரூபத்தை யுடையவனாக இருக்கிறேன். ஆனால், எவ்விதம் ஸமுத்திரம் தான் அலை முதலான தாகத் தோன்றுகிறதோ அப்படியே நான் பதார்த்தங்களுடைய நிலைமையை அனுஸரித்து இதுவாக (அந்த பதார்த்தமாக) த் தோன்றுகிறேன்.

நிர்த்3வைதோ(அ)ஸ்ம்யஹமஸ்மி நிர்மல-சிதா3காசோ(அ)ஸ்மி பூர்ணோ(அ)ஸ்ம்யஹம்
நிர்தே3ஹோ(அ)ஸ்மி நிரிந்த்3ரியோ(அ)ஸ்மி நிதராம் நிஷ்ப்ராணவர்கோ3 (அ)ஸ்ம்யஹம் |
நிர்முக்தாசுபமாநஸோ(அ)ஸ்மி விக3லத்-விஜ்ஞான கோசோ(அ)ஸ்ம்யஹம்
நிர்மாயோ(அ)ஸ்மி நிரந்தரோ(அ)ஸ்மி விபுல ப்ரௌட4 ப்ரகாசோ(அ)ஸ்ம்யஹம் || 5

நான் வேற்றுமையற்றவனாக இருக்கிறேன். நிர்மலமான ஞானஸ்வரூபனாக இருக்கிறேன். ஆகாசமாக (நாலா பக்கங்களிலும்) பிரகாசிக்கிறவனாக இருக் கிறேன். பூரணனாக இருக்கிறேன். தேஹமற்றவனாக இருக்கிறேன். இந்திரிய மற்றவனாக இருக்கிறேன். நிச்சயமாக நான் (ஐந்து) பிராணவர்க்க மற்றவனாக அமங்கள மான மனஸிலிருந்து விடுபட்டவனாக இருக்கிறேன். மாயையற்றவனாக இருக்கிறேன். இடைவெளியில்லாதவனாக இருக்கிறேன். நான் விஸ்தாரமான செழித்த (ஞானப்) பிரகாசனாக இருக்கிறேன்.

மத்தோ(அ)ந்யத் நஹி கிஞ்சித³ஸ்தி யதி³ சித்³பா⁴ஸ்யம் ததஸ்தந்-ம்ருஷா
கு³ஞ்ஜா-வஹ்நிவதே³வ ஸர்வகலநாதி⁴ஷ்டா²ன பூ⁴தோ(அ)ஸ்யம்ஹம் ।
ஸர்வஸ்யாபி த்3ருக3ஸ்ம்யஹம் ஸமரஸ: சாந்தோ(அ)ஸ்ம்யபாபோ (அ)ஸ்ம்யஹம்
பூர்ணோ(அ)ஸ்மி த்3வயவர்ஜிதோ(அ)ஸ்மி விபுலாகாசோ(அ)ஸ்மி நித்யோ (அ)ஸ்ம்யஹம் ॥ 6

என்னைத் தவிர வேறாக எதுவும் கிடையவே கிடையாது. ஏதாவது சைதன்யத்தினால் பிரகாசிக்கப்படுகிறதாய் இருந்ததேயானால், அப்பொழுது அது குந்துமணியில் தோன்றும் நெருப்பைப் போலவே (வெளிச்சம்பட்டுக் குந்துமணி தீப்பொறிபோலத் தெரிவது மாதிரி) பொய்யேயாகும். நான் எல்லாத் தோற்றங்களுக்கும் அதிஷ்டானமாக இருக்கிறேன். எல்லாவற்றையும் பார்ப்பவனாக இருக்கிறேன். நான் ஸமர. ஸனாயிருப்பவன். சாந்தனாக இருக்கிறேன். நான் எவ்வித தோஷமும் இல்லாதவனாக இருக்கிறேன். நிறைந்தவனாக இருக்கிறேன். இரண்டற்றவனாக நான் இருக்கிறேன். விஸ்தார ஆகாசமாக இருக்கிறேன். எக்காலமும் உள்ளவனாக இருக்கிறேன்.

மய்யஸ்மின் பரமார்த²கே ச்ருதிசிரோவேத்³யே ஸ்வதோபா⁴ஸனே
கா வா விப்ரதிபத்திரேத³த²கிலம் பா⁴த்யேவ யத்ஸந்நிதே⁴: ।
ஸௌராலோகவசாத் ப்ரதீதமகி³லம் பச்யந் ந தஸ்மிந் ஜந:
ஸந்தி³க்³தோ(அ)ஸ்த்யத ஏவ கேவலசிவ கோ(அ)பி ப்ரகாசோ(அ)ஸ்ம்யஹம் ॥ 7

பரமார்த்த வஸ்துவாயும், வேதாந்த வாக்கியங்களினாலேயே அறிய வேண்டியதாயும், தானாகவே பிரகாசிக்கிறதாயும் உள்ளது என் ஸ்வரூபம். என் ஸ்வரூபத்தின் ஸாந்நித்யம் இருப்பதினாலேயே இது எல்லாம் பிரகாசிக்கிறது. இதில் பலவித அபிப்பிராயம் என்ன இருக்க முடியும்? ஸூர்ய வெளிச்சத்தின் உதவியினால் எல்லாம் தெரிவதாகப் பார்த்துக்கொண்டேயிருக்கிற மனிதன் அது விஷயத்தில் ஸந்தேஹம் கொள்ள மாட்டான். ஆகையினாலேயே நான் சுத்த சிவ (மங்கள) ஸ்வரூபனாய், ஞான ஸ்வரூபனாய் வர்ணிக்க முடியாத வஸ்துவாக இருக்கிறேன்.

(ஸூர்யப் பிரகாசத்தினால் தான் மற்ற ஜடமான பதார்த்தங்கள் பிரகாசிக்கின்றன என்பது யாவரும் அறிந்த விஷயமே. இதை அறிந்துகொண்டே யிருக்கும் போது ஸூர்யன் உண்டா இல்லையா, ஸூர்யன் பிரகாச ஸ்வரூபனா இல்லையா, என்றெல்லாம் யாருக்காவது சந்தேஹம் வருவதுண்டா? அதே மாதிரி தான் இருப்பதினால் தான் ஜகத் தோன்றுகிறதென்று எல்லாருக்கும் தெரிந்த விஷயமாயிருக்கையில், தான் உண்டா இல்லையா, தான் அறிவு ஸ்வரூபனா இல்லையா என்றெல்லாம் சந்தேஹிக்க இடம் ஏது?)

நித்ய-ஸ்பூ2ர்த்திமயோ(அ)ஸ்மி நிர்மல-ஸதா3காசோ(அ)ஸ்மி சாந்தோ(அ)
ஸ்ம்யஹம்
நித்யாநந்த3மயோ(அ)ஸ்மி நிர்க3த-மஹா மோஹாந்தகாரோ(அ)ஸ்ம்யஹம் |
விஜ்ஞாதம் பரமார்த்த2-தத்வமகி2லம் நைஜம் நிர்ஸ்தாசுபம்
முக்த-ப்ராப்ய-பாஸ்த-பே4த3 கலநா கைவல்ய ஸம்ஜ்ஞோ(அ)ஸ்ம்ய ஹம் || 8

எப்பொழுதும் பிரகாசஸ்வரூபனாய் இருக்கிறேன். நிர்மலமாயும் இருக்கும் தன்மையுடையதாயும், எங்கும் ப்ரகாசிக்கும் தன்மையுடையதாயும், இருக்கிறேன். நான் சாந்தமுள்ளவனாக இருக்கிறேன். நான் மஹா மோஹமாகிற இருட்டு நன்கு விலகினவனாக இருக்கிறேன். அமங்கள மெல்லாம் விலகினதான, மோக்ஷ மடைந்தவர்களாலேயே அடையத்தக்கதான, தனக்குச் சொந்தமான, பரமார்த்த தத்வம் முழுதும் என்னால் அறியப்பட்டு விட்டது. நான் வேற்றுமை ஏற்படுவதை யெல்லாம் விலக்கி தனித்திருக்கும் தன்மையையே அடையாள முள்ளவனாக இருக்கிறேன்.

ஸ்வாப்ந-த்3வைதவதே3வ ஜாக்3ரதமபி த்3வைதம் மநோமாத்ரகம்
மித்2யேத்யேவ விஹாய ஸச்சித3மல-ஸ்வாத்மைக-ரூபோ(அ)ஸம்யஹம் |
யத்3வா வேத்3ய-மசேஷமேத-தநிசம் மத்3-ரூபமேவேத்யபி
ஜ்ஞாத்வா த்யக்த மருந் மஹோத3தி3ரிவ ப்ரௌடோ4 கபீ4ரோ(அ)ஸ்ம்யஹம் || 9

ஸ்வப்னத்தில் காணப்படும் வேற்றுமையைப் போலவேதான் ஜாக்கிரத் காலத்தில் காணப்படும் வேற்றுமையும் மனஸினால் கல்பிக்கப்பட்டதுதான். ஆகையால் வாஸ்தவமல்லாதது என்று அதை விட்டே விட்டு விட்டு, ஸத்தாகவும், சித்தாகவும் நிர்மலமாகவுமுள்ள தன் ஆத்மாவாகவே இருக்கும் ஸ்வரூப முள்ளவனாக நான் இருக்கிறேன், அல்லது அறியப்படும் இதுவெல்லாம் எப் பொழுதும் என்னுடைய ரூபம் தான் என்றும் அறிந்து கொண்டு, காற்றில்லாத பெரிய ஸமுத்திரம் போல, பெருமையுடனும் கம்பீரமாகவும் நான் இருக்கிறேன்.

(ஆத்ம ஞானிக்கு உலகம் தோன்றும் போது அது வெறும் தோற்றமே தவிர வாஸ்தவமல்ல என்ற எண்ணத்துடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். அல்லது அந்தத் தோற்றமும் ஆத்மா வில் ஆரோபிதமான படியால் ஆத்மாவைத் தவிர்த்து அதற்கு தனித்து இருப்புக் கிடையாததினால் அவ்விதம் தோன்றுவதும் ஆத்மாதான் என்றும் பார்த்துக்கொண்டிருந்தாலும் இருக்கலாம். தோற்றம் என்கிற முறையில் முதல் பார்வையும், ஆத்மாவில் தோற்றம் என்கிற முறையில் இரண்டாவது பார்வையும் ஆக இரண்டும் உசிதமேயாகும்.)

க3ந்தவ்யம் கிமிஹாஸ்தி ஸர்வ பரிபூர்ணஸ்-யாப்-யகண்டா3க்ருதே:
கர்தவ்யம் கிமிஹாஸ்தி நிஷ்க்ரியதநோர்-மோகைக்ஷக ரூபஸ்ய மே |
நிர்த்3வைதஸ்ய ந ஹேயமந்யத3பி வா நோ வா(அ)ப்யுபேயாந்தரம்
சாந்தோ(அ)த்3யாஸ்மி விமுக்த-தோய-விமலோ கேகோ4 யதா3 நிர்மல: 10

எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவனாகவும், துண்டுபடாத ஸ்வரூபமுள்ளவனாகவும் இருக்கிற எனக்குப் போகவேண்டியதாக இங்கே எது எவ்விடம் இருக்கிறது? செய்கையேயில்லாத ஸ்வரூபத்தை உடையவனாகவும் மோக்ஷத்தையே ஸ்வ ரூபமாயுடையவனாகவும் இருக்கிற எனக்கு செய்ய வேண்டியதாக இங்கே எது இருக்கிறது? இரண்டற்றவனாக இருக்கும் எனக்கு மற்றொன்று என்று ஏதேனும் விலக்கவேண்டியதாகக் கிடையாது. அடைய வேண்டியதாயும் வேறு எதுவும் கிடையாது. இப்பொழுது எப்படி மேகமானது நன்கு ஜலத்தை வர்ஷித்து விட்ட பிறகு நிர்மலமாயிருக்குமோ அப்படியே நிர்மலனாகவும், சாந்தனாகவும் இருக்கிறேன்.

கிம் ந ப்ராப்தமித: புரா கிமது⁴நா லப்³த⁴ம் விசாராதி³நா
யஸ்மாத் தத்-ஸுக²ரூபமேவ ஸததம் ஜாஜ்வல்யமாநோ(அ)ஸ்ம்யஹம் ।
கிம் வா(அ)பேக்ஷ்யமிஹாபி மய்யதிதராம் மித்²யா-விசாராதி³கம்
த்³வைதாத்³வைத-விவர்ஜிதே ஸமரஸே மௌநம் பரம் ஸம்மதம் ॥ 11

இதற்கு முன்னால் (என்னால்) எது அடையப்படாமலிருந்தது? இப்பொழுது வேதாந்த விசாரம் முதலான தினால் (என்னால்) எது அடையப்பட்டிருக்கிறது? (ஒன்றுமில்லை). ஏனென்றால் நான் எப்பொழுதுமே அந்த எதையும் அடைய வேண்டாத ஆனந்த ஸ்வரூபனாகவே இருந்துகொண்டு மிகவும் ஜ்வலித்துக் கொண்டே இருக்கிறேன். இரண்டாயிருக்கும் தன்மை, இரண்டற்ற தனமை என்கிற விவஹாரங்களெல்லாம் இல்லாதவனாய் ஸமரஸமாயிருக்கிற என்னிடத்தில் இந்த நிலையிலும் பொய்யான விசாரம் முதலானது அவசியமாக வேண்டியுள்ளதா? என்ற (இந்நிலையில்) மௌனம்தான் சிலாக்கியமென்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

ச்ரோதவ்யம் ச கிமஸ்தி பூர்ண ஸுத்³ருசோ நித்யாபரோக்ஷஸ்ய மே
மந்தவ்யம் ச ந மே(அ)ஸ்தி கிஞ்சித³பி வா நி:ஸம்சய ஜ்யோதிஷ: ।
த்⁴யாத்ரு-த்⁴யேய-விபே⁴த-ஹாநி-வபுஷோ ந த்⁴யேய-மஸ்த்யேவ மே
ஸர்வாத்மைக மஹாரஸஸ்ய ஸததம் நோ வா ஸமாதி⁴ர்-மம ॥ 12

பூரணமாக நல்ல ஞானஸ்வரூபியாயும் எப்பொழுதும் பிரத்யக்ஷமாகவே தெரிந்து கொண்டிருப்பவனாயும் இருக்கிற எனக்குக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது தான் என்ன இருக்கிறது? ஸந்தேஹத்திற்கு இடமில்லாத ஜ்யோதி ஸ்வரூபனான எனக்கு மனனம் செய்யவேண்டியதும் கொஞ்சம் கூடக் கிடையாது. தியானம் செய்கிறவன்; தியானம் செய்யப்படும் பதார்த்தம் என்கிற பேதத்தைப் போக்கடிக்கும் ஸ்வரூபத்தோடு கூடின எனக்குத் தியானம் செய்ய வேண்டியதாக ஒன்றும் கிடையவே கிடையாது. எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருக்கும் பெரும் தீஞ்சுவை வடிவனான எனக்கு ஸமாதி நிலையும் கிடையாது.

ஆத்மாநாத்ம விவேசநாபி மம நோ வித்³வத்-க்ருதா ரோசதே
(அ)நாத்மா நாஸ்தி யத³ஸ்தி கோ³சரவபு: கோ வா விவேக்தும் க்ஷமீ (ம:) ।
மித்²யாவாத³ விசார சிந்தநமஹோ குர்வந்த்-யத்³ருஷ்டாத்மகா:
ப்⁴ராந்தா ஏவ ந பாரகா³ த்³ருட தி⁴ய ஸ்தூஷ்ணீம் சிலாவத் ஸ்திதா: ॥ 13

வித்வான்களால் செய்யப்படும் ஆத்மா வேறு, அநாத்மா (ஆத்மா அல்லாதது) வேறு என்ற பகுப்பு எனக்கும் பிடிக்கவில்லை. ஏனென்றால் அநாத்மா வென்று தனியாக ஒரு பதார்த்தம் கிடையவே கிடையாது. தனியாகத் தென்படும் ஸ்வபாவத்துடன் அநாத்மா இருந்ததேயானால் அதை ஆராய்ச்சியால் அஸத்யமென்று தீர்மானிக்க யார்தான் ஸாமர்த்தியமுள்ளவன்? பாவம்! ஆத்ம தத்வ ஸாக்ஷாத்காரம் செய்யாதவர்கள் வீணாக வாதம், விசாரம், சிந்தனம் இவைகளைச் செய்கிறார்கள். அவர்கள் பிராந்தியில் அகப்பட்டவர்களே தவிர, கரையேறினவர்கள் அல்ல. திடமான ஞான முள்ளவர்கள் பாறையைப் போலப் பேசாமல் இருப்பார்கள்.

(ஆத்மா, அநாத்மா என்று பிரிக்கிறபோதே ஆத்மாவில் சேராமல் தனியாய் அநாத்மா என்று ஒன்று இருப்பதாக ஆகி விடுகிறது. இவ்வாறு ஒன்று தனியாய் இருப்பதாக எடுத்துக் கொண்டு விட்டு, பிறகு ஆத்மா தவிர அநாத்மா என்று எதுவும் இல்லை என்றும் எப்படிப் பொருந்தும் என்பது கேள்வி.)

வஸ்து-ஸ்தி^{2}த்யநுரோத^{4}தஸ்-த்வஹ-மஹோ கச்சித் பதா^{3}ர்தோ ந சா -
ப்யேவம் கோ(அ)பி விபா^{4}மி ஸந்ததத்^{3}ருசிர் வாங்மாநஸா கோ^{3}சர: |
நிஷ்பாபோ(அ)ஸ்ம்-யப^{4}யோ(அ)ஸ்ம்யஹம் விக^{3}த-து^{3}ச்சங்கா களங்கோ(அ)
ஸ்ம்யஹம்
ஸம்சாந்தாநுபமான-சீதளமஹ: ப்ரௌட^{4} ப்ரகாசே(அ)ஸம்யஹம் || 14

வஸ்துக்களுடைய நிலையை அனுஸரித்து நான் தான் எவ்வித பதார்த்தமாகவும் இருக்கிறேன். என்ன ஆச்சர்யம் ! அப்படியும் (அப்பதார்த்தமாக) நான் இல்லை. எப்பொழுதும் ஞானஸ்வரூபனாய், வாக்குக்காவது, மனஸுக்காவது விஷயமாகாதவனாய், இன்ன வேளை என வொண்ணாதவனாய் நன்கு பிரகாசித்துக்கொண்டிருக்கிறேன். எவ்வித தோஷமும் அற்றவனாக இருக்கிறேன். பயமில்லாதவனாக நான் இருக்கிறேன். துஷ்ட ஸம்சயமாகிற மாசு அற்றவனாக நான் இருக்கிறேன். நன்கு அடங்கின தாய், குளுமையாயுள்ள தேஜஸ்ஸைப் போல மிகவும் பிரகாசமுள்ளவனாக நான் இருக்கிறேன்.

யோ(அ)ஹம் பூர்வமித: ப்ரசாந்தகலந: சுத்^{3}தோ^{4}(அ)ஸ்மி பு^{3}த்^{3}தோ^{4}(அ)ஸ்ம்யஹம்
யஸ்மான் மத்த இத^{3}ம் ஸமுத்தி^{2}தமபூ^{4}தேதன் மயா தா^{4}ர்யதே |
மய்யேவ ப்ரளயம் ப்ரயாதி நிரதி^{4}ஷ்டாநாய தஸ்மை ஸதா^{3}
ஸத்யானந்த^{3}-சிதா^{3}த்மகாய விபுல-ப்ரஜ்ஞாய மஹ்யம் நம: || 15

எந்த நான் இதற்கு (இந்தப் பிரபஞ்சம் உண்டாவதற்கு) முன்னால் எவ்வித வியாபாரமும் அடங்கினவனாய் இருந்தேனோ அந்த நான் சுத்தனாக இருக்கிறேன். அறிந்தவனாக நான் இருக்கிறேன். எந்த என்னிடமிருந்து இது வெளிக்கிளம்பியதாக ஏற்பட்டதோ, இது (எந்த) என்னால் தரிக்கப்படுகிறதோ, என்னிடத்திலேயே லயத்தை அடைகிறதோ, அந்த தனக்கு வேறு அதிஷ்டானமில்லாதவனாய், ஸத்யமாயும், ஆனந்தமாயும், ஞான மாயுமுள்ள ஸ்வருபத்தோடு கூடினவனாய் வியாபகமான அறிவுடையவனாய் இருக்கும் எனக்கு எப்பொழுதும் நமஸ்காரம்.

(பிரஹ்மமே ஆத்மாவாயிருப்பதால் ஆத்மாவாகிய தனக்கு நமஸ்காரம் என்று சொன்னால் பிரஹ்மத்தையே நமஸ்கரித்ததாகும், மேலும் தன்னைத்தவிர பிரஹ்மம் வேறில்லாததினால் தனக்கு நமஸ்காரம் செய்யவும் தன்னை விட வேறு பதார்த்தம் கிடையாதென்பதைக் காட்டுகிறார்.)

ஸத்தாசித்ஸுக²ரூபமஸ்தி ஸததம் நாஹம் ச ந த்வம் ம்ருஷா
நேத³ம் வா(அ)பி ஜக³த் ப்ரத்³ருஷ்டமகி²லம் நாஸ்தீதி ஜாநீஹிபோ⁴: ।
யத் ப்ரோக்தம் கருணாவசாத் த்வயி மயா தத் ஸத்யமேதத் ஸ்பு²டம்
ச்ரத்³த⁴த்ஸ்வாநக⁴ சுத்³த⁴-பு³க்³தி⁴ரஸி சேந்மா(அ)த்ராஸ்து தே ஸம்சய: ॥ 16

ஸத், சித், ஆனந்தம் என்பதை ஸ்வருபமாயுடைய ஒரு வஸ்துதான் எப்பொழுதும் இருக்கிறது. நானும் கிடையாது. நீயும் கிடையாது. இரண்டுமே வாஸ்தவமில்லை. இந்த ஜகத்தும் கிடையாது. நன்கு பார்க்கப்படும் அனைத்தும் இல்லை என்று அறிந்துகொள்ளும். என்னால் கருணையினால் உம்மிடத்தில் எது சொல்லப்பட்டதோ அது வாஸ்தவமே. பாபமற்றவரே! சுத்தமான புக்தி யுள்ளவராக இருப்பீரேயானால், இதை நன்கு நம்பும். இந்த விஷயத்தில் சந்தேஹம் வேண்டாம்.

ஸ்வாரஸ்யைக-ஸுபோ³த⁴-சாரு-மநஸே ப்ரௌடா⁴நுபூ⁴தி-ஸ்த்வியம்
தா³தவ்யா ந து மோஹ-த³க்³த⁴-குதியே து³ஷ்டாந்தரங்கா³ய ச ।
யேயம் ரம்யவித³ர்பிதோத்தமசிர: ப்ராப்தா சகாஸ்தி ஸ்வயம்
ஸா சேந் மர்கட-ஹஸ்த-தேசிபதிதா கிம் ராஜதே கேதகீ ॥ 17

தன் ஆத்மாநந்தத்தையே நன்கு அறிந்துகொள்ள வேண்டுமென்ற அழகான மனஸ் உடையவனுக்கே இந்த " ப்ரௌடானுபூதி'என்பது கொடுக்கப்பட வேண்டியது. மோஹத்தினால் கனன்ற கெட்டபுத்தியோடு கொடுக்கவேகூடாது. எப்படியிருந்தால் நன்றாயிருக்குமென்று அறிந்த ஒருவனால் கொடுக்கப்பட்டு உத்தமமான சிரஸில் தரிக்கப்பட்டு தானாகவே எந்த இந்தத் தாழம்பூ பிரகாசிக்கிறதோ, அது குரங்கின் கையில் அகப்பட்டு விட்டதேயானால் பிரகாசிக்குமா?



ப்ரஹ்ம-ஜ்ஞாநாவளீ மாலா

[ப்ரஹ்ம ஞானாபவமுள்ளவர்கள் தமது அனுபவத்தை ஒருவாறு வெளியிட்டுக் காட்டும் சொற்களின் வரிசை அடங்கியது 'ப்ரஹ்ம ஜ்ஞாநாவளீ' மாலை.]

ஸக்ருத் ச்ரவண மாத்ரேண ப்ரஹ்மஜ்ஞாநம் யதோ ப⁴வேத் |
ப்ரஹ்ம-ஜ்ஞாநாவளீ மாலா ஸர்வேஷாம் மோக்ஷஸித்³த⁴யே ॥ 1

ஒரு தடவை சிரவணம் செய்தமாத்திரத்திலேயே எதனால் ப்ரஹ்ம ஞானம் ஏற்படுமோ (அந்த) " ப்ரஹ்மஞா நாவளீ மாலை'1 என்ற நூல் எல்லோருக்கும் மோக்ஷம் ஏற்படுவதற்கு (உபயோகமாக) ஆகிறது.

அஸங்கோ³(அ)ஹ-மஸங்கோ³(அ)ஹ-மஸங்கோ³(அ)ஹம் புந: புந: |
ஸச்சிதா³நந்த³ ரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 2

நான் பற்று இல்லாதவன். நான் பற்று இல்லாதவன். எவ்விதத்திலும் நான் பற்றில்லாதவன். நான் ஸத்தியம், ஞானம், ஆனந்தம், இவற்றை ஸ்வரூப மாகக் கொண்டவன். நான் அழிவற்ற நான் தான். (சுத்த ஆத்மஸ்வரூபமே.)

நித்யசுத்³த⁴ விமுக்தோ(அ)ஹம் நிராகாரோ(அ)ஹ-மவ்யய: |
பூ⁴மாநந்த³-ஸ்வரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 3

நான் நித்யனாயும், தோஷமற்றவனாயும், (அல்லது எப்பொழுதும் சுத்தனாயும்) விடுபட்டவனாயும் இருக்கிறேன். நான் உருவமற்றவன். குறைவுபடாதவன. நான் மிகப்பெரிய ஆனந்த ஸ்வரூபன். நான் அழிவற்ற நான் தான்.

நித்யோ(அ)ஹம் நிரவத்³யோ(அ)ஹம் நிராகாரோ(அ)ஹ-மச்யுத: |
பரமாநந்த ரூபோ(அ)ஹ-மஹமேவாஹமவ்யய: || 4

நான் நாசமில்லாதவன், நான் எல்லையில்லாதவன், நான் வடிவமற்றவன், நழுவாதவன் (ஸ்திரமானவன்). நான் மேலான ஆனந்தஸ்வரூபன். நான் நாசமற்ற நான் தான்.

சுத்³த⁴சைதந்ய-ரூபோ(அ)ஹ-மாத்மாராமோ(அ)ஹ-மேவ ச |
அக²ண்டா³நந்த³-ரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 5

நான் சுத்தமான (ஒன்றிலும்) ஸம்பந்தப்படாத சைதன்ய ஸ்வரூபன். நான் ஆத்மஸ்வரூபம் ஒன்றிலேயே இன்பமடைகிறவன். நான் பிரிவற்ற (பூர்ணமான) ஆனந்த ஸ்வரூபன். நான் அழிவில்லாத நான் தான்.

ப்ரத்யக்-சைதந்ய-ரூபோ(அ)ஹம் சாந்தோ(அ)ஹம் ப்ரக்ருதே: பர: |
சாச்வதாநந்த[3] ரூபோஹ-மஹமேவாஹ-மவ்யய: || 6

நான் உள்ளே விளங்கும் ஆத்ம சைதன்யஸ்வரூபி. நான் சாந்தன். பிரகிருதிக்கு (ஜகத்காரணமான மாயைக்கு) மேற்பட்டவன். நான் சாச்வதமான (உத்பத்தி விநாசமில்லாமல் எப்பொழுதும் இருக்கிற) ஆநந்த ஸ்வரூபன். நான் அழிவற்ற நான் தான்.

தத்வாதீத: பராத்மா(அ)ஹம் மத்[4]யாதீத: பர: சிவ: |
மாயாதீத: பரம்ஜ்யோதி-ரஹமேவாஹ-மவ்யய: || 7

நான் (ப்ரக்ருதி முதலான) தத்வங்களுக்கு மேற்பட்டவன். மேலான ஆத்மஸ்வரூபம். இடைநிலைக்கு மேம்பட்டவன். மேலான சிவ (மங்கள) ஸ்வரூபம். மாயையைக் கடந்தவன். மேலான ப்ரகாசஸ்வரூபன். நான் அழிவற்ற நான் தான்.

நாநா-ரூப-வ்யதீதோ(அ)ஹம் சிதா3காரோ(அ)ஹ-மச்யுத: |
ஸுகரூப-ஸ்வரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 8

நான் பற்பல உருவங்களைக் கடந்தவன் (அல்லது நாம ரூபங்களற்றவன்), (ஆனாலும்) நான் சைதன்யத்தையே (ஞானத்தையே) வடிவமாகக் கொண்டவன். நழுவாதவன். நான் ஸுகரூபத்தையே ஸ்வரூபமாகக் கொண்டவன். நான் அழிவற்ற நான் தான்.

மாயா-தத்கார்ய-தே[3]ஹாதி[3] மம நாஸ்த்யேவ ஸர்வதா[3] |
ஸ்வப்ரகாசைக ரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 9

எனக்கு எப்பொழுதும் மாயையும், அதன் கார்யமான தேஹம் முதலியவையும் கிடையவே கிடையாது. நான், தானே ப்ரகாசிக்கும் (சைதன்யம்) ஒன்றையே ஸ்வரூபமாகக் கொண்டவன். நான் அழிவற்ற நான் தான்.

கு[3]ணத்ரய வ்யதீதோ(அ)ஹம் ப்[3]ரஹ்மாதீ[3]நாம் ச ஸாக்ஷ்யஹம் |
அநந்தாநந்த[3] ரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 10

நான் (ஸத்வம். ரஜஸ், தமஸ்) என்னும் மூன்று குணங்களையும் தாண்டினவன் (நிர்க்குணன்.) நான் ப்ரஹ்மா முதலானவர்களுக்கும் ஸாக்ஷி. நான் எல்லையற்ற ஆனந்த ஸ்வரூபி. நான் அழிவற்ற நான் தான்.

அந்தர்யாமி-ஸ்வரூபோ(அ)ஹம் கூடஸ்த[2]: ஸர்வகோ[3](அ)ஸ்ம்யஹம் |
பரமாத்மஸ்வரூபோஹ-மஹமேவாஹ-மவ்யய: || 11

நான் அந்தர்யாமி - (உள்ளேயிருந்து நியமம் செய்யும் ஆத்ம) ஸ்வரூபன். நான் (சலனமும், மாறுதலும் அற்ற) கூடஸ்தனாயும், எங்குமுள்ளவனாயும் இருக்கிறேன். நான் பரமாத்மஸ்வரூபன். நான் அழிவற்ற நான் தான்.

நிஷ்கலோ(அ)ஹம் நிஷ்க்ரியோ(அ)ஹம் ஸர்வாத்மா(ஆ)த்[3]ய ஸநாதந: |
அபரோக்ஷ ஸ்வரூபோஹ-மஹமமேவாஹ-மவ்யய: || 12

நான் அவயவமில்லாதவன். நான் செய்கைகளற்றவன். எல்லா ஸ்வரூபமாயிருப்பவன். நான் பிரத்யக்ஷமாக அநுபவிக்கப்படும் ஸ்வரூபமாயிருப்பவன். நான் அழிவற்ற நான் தான்.

த்[3]வந்த்[3]வாதி[3]-ஸாக்ஷி-ரூபோ(அ)ஹ-மசலோ(அ)ஹம் ஸநாதந: |
ஸர்வஸாக்ஷி-ஸ்வரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 13

நான் (ஸுகம், துக்கம் முதலான) த்வந்த்வங்களின் ஸாக்ஷிஸ்வரூபன். (அதாவது த்வந்த்வங்களால் பாதிக்கப்படாமல் விலகியிருந்து காணும் ஆத்மா.) நான் அசைவற்றவன். எப்பொழுதுமிருப்பவன். அனைத்துக்கும் ஸாக்ஷியாம் வடிவினன். நான் அழிவற்ற நான்தான்.

ப்ரஜ்ஞாநக[4]ந ஏவாஹம் விஜ்ஞானக[4]ந ஏவ ச |
அகர்த்தா(அ)ஹ-மபோ[4]க்தா(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 14

நான் அடர்ந்த பரஜ்ஞான ஸ்வரூபனே. அடர்ந்த விஜ்ஞான ஸ்வரூபந்தான். நான் செய்கிறவனல்ல. நான் அனுபவிக்கின்றவனல்ல. நான் அழிவற்றநானதான்.

நிராதா[4]ர-ஸ்வரூபோ(அ)ஹம் ஸர்வதா[4]ரோ(அ)ஹமேவ ச |
ஆப்த-காம-ஸ்வரூபோ(அ)ஹ-மஹமேவாஹ-மவ்யய: || 15

நான் ஆதாரமில்லாத ஸ்வரூபம். நான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பவனுமாவேன். நான் எல்லா விருப்பங்களையும் அடைந்த ஸ்வரூபம். நான் அழிவற்ற நான்தான்.

தாபத்ரய-விநிர்முக்தோ தே[3]ஹ-த்ரய-விலக்ஷண: |
அவஸ்தா[3]த்ரய-ஸாக்ஷ்யஸ்மி சாஹமேவாஹ-மவ்யய: || 16

நான் மூன்று தாபங்களிலிருந்து விடுபட்டவன். ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்ற மூன்று தேஹங்களைக் காட்டிலும் வேறுபட்டவன். (விழிப்பு, கனவு,

உறக்கம் என்ற) மூன்று அவஸ்தைகளுக்கும் ஸாக்ஷியாக இருக்கிறேன். (நான்) அழிவற்ற நான் தான்.

த்[3]ருக்[2]-த்ருச்யௌ த்[3]வௌ பதா[3]ர்தௌ[2] ஸ்த:பரஸ்பர விலக்ஷணௌ ।
த்[3]ருக்[3]-ப்[3]ரஹ்ம த்[3]ருச்யம் மாயேதி ஸர்வ வேதா[3]ந்த டி[3]ண்டி[3]ம: ॥ 17

ஒன்றுக்கொன்று வேறுபட்ட தன்மையுள்ள த்ருக் (பார்ப்பது), த்ருச்யம் (பார்க்கப்படுவது) என்ற இரண்டு பதார்த்தங்கள் உள்ளன. (இவற்றில்) பார்ப்பது ப்ரஹ்மம், பார்க்கப்படுவது மாயை என்பதே எல்லா வேதாந்தங்களின் முரசறைதலாகும். (பார்ப்பது என்பது அறிவையும், பார்க்கப்படுவது என்பது அறியப் படுவதையும் குறிக்கும்.)

அஹம் ஸாக்ஷதி யோ வித்[3]யாத் விவிச்யைவம் புந: புந: ।
ஸ ஏவ முக்த: ஸந் வித்[3]வாநிதி வேதா[3]ந்த டி[3]ண்டி[3]ம: ॥ 18

இவ்வாறு (ஆத்மாவை அநாத்மாவிலிருந்து) அடிக்கடி பிரித்து "நான் ஸாக்ஷியே", என்று எவன் அறிந்துகொள்கிறானோ, அந்த நல்ல ஞானிதான் முக்தன் என்பதே வேதாந்தங்களின் முரசறைதலாகும்.

க[4]ட-குட்[3]யாதி[3]கம் ஸர்வம் ம்ருத்திகா-மாத்ரமேவ ச ।
தத்[3]வத்[3]-ப்[3]ரஹ்ம ஜக[3]த் ஸர்வமிதி வேதாந்த டி[3]ண்டி[3]ம: ॥ 19

குடம் சுவர், முதலியவை எல்லாம் மண்ணாக மட்டும் தான் உள்ளது. அதுபோல் பிரபஞ்சம் எல்லாம் ப்ரஹ்மம் என்பதே வேதாந்தங்களின் முரசறைதலாகும்.

ப்[3]ரஹ்ம ஸத்யம் ஜக[3]ந்-மித்[2]யா ஜீவோ ப்[3]ரஹ்மைவ நாபர: ।
அநேக வேத்[3]யம் ஸச்சா[2] ஸ்த்ரமிதி வேதா[3]ந்த டி[3]ண்டி[3]ம: ॥ 20

ப்ரஹ்மமே ஸத்யமானது. பிரபஞ்சம் பொய்யானது*. ஜீவன் ப்ரஹ்மம்தான்; வேறு அல்ல. இந்த ரீதியாக அறியப்படுவதே சிறந்த சாஸ்திரம் என்பது வேதாந்தங்களின் முரசறைதலாகும்.

* 'மித்யை' என்பதைப் 'பொய்' எனும் போது அப்பட்டப் புளுகான அத்யந்த அஸத் என்று பொருள் கொள்ளக்கூடாது; யதார்த்த மாயையில் மெய் போலிருந்து ஞான நிலையில் பொய்யாக மறைந்துபோகிறது என்றே கொள்ள வேண்டும் என்பார் ஸ்ரீ காமகோடி ஸ்ரீசரணர்கள்.

அந்தர்ஜ்யோதிர்-ப[3]ஹிர்ஜ்யோதி: ப்ரத்[3]யக்[3]ஜ்யோதி: பராத்பர: ।
ஜ்யோதிர்-ஜ்யோதி: ஸ்வயம்-ஜ்யோதிராத்மஜோதி: சிவோஸ்ம்யஹம் ॥ 21

நான் உள்ளே ப்ரகாசரூபன், வெளியிலும் ப்ரகாசரூபன், எல்லாவற்றிற்கும் மேலாக உள் நோக்கில் விளங்கும் ப்ரகாசரூபன். பிரகாசிக்கிற வஸ்துக்களுக்கும் பிரகாசம் கொடுக்கும் ஜ்யோதி. தானே பிரகாசிக்கும் ஜ்யோதி. ஜ்யோதிர் மயமான ஆத்மாவாக (சிவ மங்கள) ரூபனாக நான் இருக்கிறேன்.

ப்ரஹ்மாநுசிந்தனம்

['ப்ரஹ்மத்தையே இடை விடாது சிந்திப்பது' எனும் பொருள் கொண்ட இப்பிரகரணத்தில் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் அடைந்தவன் தன்னை எவ்வாறு எண்ணிக்கொள்வான் என்பதை ஆசார்யாள் காட்டுகிறார்.]

அஹமேவ பரம் ப்^{3}ரஹ்ம வாஸுதே^{3}வாக்^{2}ய-மவ்யயம் ।
இதி ஸ்யாத் நிச்சிதோ முக்தோ ப^{3}த்^{3}த^{4} ஏவாந்யதா^{2} பவேத் ॥ 1

"வாஸுதேவர் என்று பெயருள்ளதும் அழிவற்றதுமான பரப்ரஹ்மமானது நான் தான் என்று உறுதியான ஞானமுள்ளவனே முக்தனாக (ஸம்ஸாரத் தளையி லிருந்து விடுபட்டவனாக), இருப்பான். (இந்த ஞானம்) இல்லாவிடில் பக்தனாகவே (ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டவனாகவே) இருப்பான்.

(வாஸு என்ற பதத்திற்கு எல்லாவற்றையும் வஸிக்கும்படி, (அதாவது இருக்கும்படி செய்பவர் என்பது பொருள். அதாவது எல்லாவற்றிற்கும் 'இருப்பு' என்ற ஸத்தையைக் கொடுக்கும் 'ஸத்' என்னும் ப்ரஹ்மலக்ஷணம் "வாஸு" என்ற இந்த சொல் கூறப்பட்டது. தேவ: என்பதற்கு பிரகாசம் உள்ளவர் என்று அர்த்தம். அதனால் 'சித்' என்னும் லக்ஷணம் ஞான மயமான ப்ரஹ்ம லக்ஷணம் கூறப்படுகிறது.)

அஹமேவ பரம் ப்^{3}ரஹ்ம நிச்சிதம் சித்த சிந்த்யதாம் ।
சித்^{3}-ரூபத்வா-த^{3}ஸங்க^{3}த்வா-தபா^{3}த்^{4}யத்வாத் ப்ரயத்நத: ॥ 2

ஹே மனமே! ஞான வடிவமாயிருப்பதாலும், ஒன்றிலும் ஒட்டாததாலும், பாதிக்கப்படாமலிருப்பதாலும், நான் பரப்பிரஹ்மம் தான் (என்று) உறுதியாக முயற்சியுடன் (உன்னால்) ஆலோசிக்கப்படட்டும்..

அஹமேவ பரம் ப்^{3}ரஹ்ம ந சாஹம் ப்^{3}ரஹ்மண: ப்ருத^{2}க் ।
இத்யேவம் ஸமுபாஸீத ப்^{3}ராஹ்மணோ ப்^{3}ரஹ்மணி-ஸ்தி^{2}த: ॥ 3

"நான் பரப்ரஹ்மம்தான். நான் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறாக இல்லை", என்று இவ்வாறு பிராஹமணன் (பிரம்ம நாட்டமுடையவன்) ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் இருந்து கொண்டு (எப்போதும் மனத்தைச் செலுத்தி) தியானம் செய்யவேண்டும்.

ஸர்வோபாதி^{4}-விநிர்முக்தம் சைதந்யம் ச நிரந்தரம் ।
தத்^{3} ப்^{3}ரஹ்மாஹமிதி-ஜ்ஞாத்வா கத^{2}ம் வர்ணாச்ரமீ ப^{4}வேத் ॥ 4

"எல்லா உபாதிகளிலிருந்தும் விடுபட்டதும், சைதன்ய ஸ்வரூபமானதும், இடைவெளியில்லாததுமான அந்த ப்ரஹ்மம் நான்," என்று அறிந்துவிட்டால், வர்ணமுள்ள வனாகவும், ஆச்ரமமுள்ளவனாகவும் எப்படி இருப்பான்?

(ஒரு வஸ்துவுக்குத் தனி இயல்பைக் கொடுத்துக் கட்டுப்படுத்துபவையாவும் உபாதிகள் எனப்படும்.)

அஹம் ப்3ரஹ்மாஸ்மி யோ வேத3 ஸ ஸர்வம் ப4வதி த்வித3ம் |
நாபூ4த்யா ஈசதே தே3வா-ஸ்தேஷாமாத்மா ப4வேத்3தி4 ஸ: || 5

அந்யோ(அ)ஸாவஹமந்யோ(அ)ஸ்மீத்யுபாஸ்தே யோ(அ)ந்ய-தே3வதாம் |
ந ஸ வேத3 நரோ ப்3ரஹ்ம ஸ தே3வாநாம் யதா பசு || 6

"நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன்" (என்று) எவன் அறிந்துகொள்கிறானோ, அவன் இது எல்லாமாகவும் ஆகிறான். தேவர்கள் (அவன்) ஞான பலனை அடையாமலிருக்கும்படிச் செய்யத் திறமையற்றவர்கள். ஏனெனில், அவன் அந்தத் தேவர்களுக்கும் ஆத்மாவாக ஆய்விடுகிறான்..

"அந்த தேவர் (என்னைக்காட்டிலும்) வேறானவர். நான் (அவரைக் காட்டிலும்) வேறாக இருக்கிறேன்," என்று எவன் தன்னைக்காட்டிலும் வேறாக தேவதையை ஆராதிக்கிறானோ, அந்த மனிதன் பிரஹ்மத்தை அறிய மாட்டான், அவன் தேவர்களுக்குப் பசு போல இருப்பான்.

(பிருஹதாரண்யகம் முதல் அத்யாயம் 4-வது பிராஹ்மணத்திலுள்ள மந்திரத்தின் கருத்து இந்த இரு சுலோகங்களில் காட்டப்படுகிறது. அதாவது: ஒவ்வொரு மனிதனும் தேவர்களுக்குக் கடன்பட்டே பிறக்கிறான். இந்தக்கடனை. தேவர்களைக் குறித்து யாகம் செய்வதாலும், பூஜை செய்வதாலும் தீர்க்க வேண்டும். இவற்றில் தேவர்களுக்கு போகத்தையும், திருப்தியையும் உண்டு பண்ணுகிறான். பிரதியாக அவர்கள் இவனுக்கு போகத்தை அருளுகின்றனர். தேவர்களுக்கு பிரீதி ஏற்படும்படி நடந்து கொள்ளாவிட்டால் கோபம் அடைந்து இடைஞ்சல் செய்வார்கள். காரியத்தின் பலன் கிட்டாமல் செய்வார்கள். ஆகவே, மனிதன் தேவர்கள் விஷயத்தில் பசுவின் நிலையைத்தான் அடைகிறான். எப்படியெனில் பசு தன்னை வளர்க்கும் யஜமானனுக்கு பாலைக்கொடுத்து போகத்தை உண்டுபண்ணுகிறது. அவனும் ஸந்தோஷம் கொண்டு அதற்கு உணவும், மற்றும் சௌகர்யங்களும் செய்து கொடுக்கிறான். ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டு ஞான மார்க்கத்தில் செல்பவன் யாகமும், பூஜையும் செய்யப் போவதில்லை. அவனிடமிருந்து தேவர்களுக்கு போகம் கிடைக்காது. இது தேவர்களுக்குப் பிடித்தமானது அல்ல. எனவே இவன் ஞானம் அடையவொட்டாமல் இடையூறு களைச் செய்வார்கள். ஒரு மனிதன் தன்னை விட்டுப் பசு கூட பிரிந்து செல்வதை விரும்பாதது போலவே, தேவர்களுக்கு ஜீவன் தன்னைவிட்டு ஞான வழி செல்வது.

ஆகையால் ஆரம்பத்தில் சிரத்தையுடனும், பக்தியுடனும் தேவர்களை ஆராதித்து அவர்களுக்கு பிரீதியை உண்டு பண்ணி, அவர்களிடமே ஞானம் கிடைக்க அநுக்ரஹிக்கும்படி பிரார்த்திக்க வேண்டும். வேறு பலனைக் கேட்கக் கூடாது. அவர்களும் பிரீதியுடன், இடையூறு செய்யாமல் ஒத்தாசை புரிவார்கள். சித்த சுத்தி

கிடைக்கும் வரை தேவதைகளின் அனுக்ரஹத்தை பிரார்த்திக்க வேண்டும். பிறகு குருவின் அனுக்ரஹத்தால் ஞான மார்க்கத்தில் தீவிரமாகச் செல்கையில் இவனை தேவர்கள் ஒன்றும் செய்யமுடியாது. இடையூறும் செய்ய முடியாது. தானே ஸகலமுமான ப்ரஹ்மம் என்பதால் தேவதைகளும் தனக்கு வேறல்ல என்ற பாவம் இவனுக்கு இப்போது ஏற்பட்டிருப்பதால், அவற்றுக்கும் இவன் ஆத்மாவாகியிருப்பான். அப்படிப்பட்டவனை அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது.

அஹமாத்மா ந சாந்யோஸ்மி ப்3ரஹ்மைவாஹம் ந சோகபா4க் ।
ஸச்சிதா3நந்த3ரூபோ(அ)ஹம் நித்ய-முக்த-ஸ்வபாவவாங் ॥ 7

"நான் ஆத்மா; வேறாக - இல்லை. நான் பிரஹ் மமே, சோகக் அநுபவிப்பவனல்ல. நான் ஸச்சிதானந்தஸ்வரூபி, எப்பொழுதும் விடுபட்ட இயல்புள்ளவன்."

ஆத்மாநம் ஸததம் ப்3ரஹ்ம ஸம்பா4வ்ய விஹரந்தி யே ।
ந தேஷாம் து3ஷ்க்ருதம் கிஞ்சித்3-து3ஷ்க்ருதோத்தா2 ந சாபத3: ॥ 8

ஆத்மாநம் ஸததம் ப்3ரஹ்ம ஸம்பா4வ்ய விஹரேத் ஸுக2ம் ।

(முன் ச்லோகத்தில் சொன்னவாறு) எப்பொழுதும் தன்னை ப்ரஹ்மமாக எண்ணி எவர்கள் இன்பமாய் வாழ்கின்றனரோ, அவர்களுக்கு பாபம் கொஞ்சமும் கிடையாது, பாபங்களிலிருந்து உண்டாகும் ஆபத்துக்களும் (துன்பமும்) கிடையாது. ஆகையால் தன்னை எப்பெழுதும் ப்ரஹ்ம ஸ்வரூபமாக எண்ணி ஆனந்தமாக வாழவேண்டும்.

க்ஷணம் ப்3ரஹ்மாஹமஸ்மீதி ய: குர்யா-தா3த்மசிந்தநம் ॥ 9
தன் மஹாபாதகம் ஹந்தி தம: ஸூர்யோத3யோ யதா ।

"நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன் என்று கணநேரம் எவனொருவனும் ஆத்மத்யானம் செய்வானேயாகில், ஸூர்யனின் உதயம் இருளை நீக்குவதுபோல் அந்த ப்ரஹ்மத்யானம் (அவனது) மஹா பாபத்தை அழித்துவிடுகிறது.

அஜ்ஞாநாத்3-ப்3ரஹ்மணோ ஜாதமாகாசம் பு3த்3பு3தோ3பமம் ॥ 10

ஆகாசாத்3-வாயுருத்பந்நோ வாயோ-ஸ்தேஜ-ஸ்தத: பய: ।
அத3ப்3யச்ச ப்ருதி2வீ ஜாதா ததோ வ்ரீஹி-யவாதி3கம் ॥ 11

ப்ருதி2வ்யப்ஸு பயோ வஹ்நௌ வஹ்நிர் வாயௌ நப4-ஸ்யஸௌ ।
நபோ4(அ)ப்யவ்யாக்ருதே தச்ச சுத்3தே சுத்3தோ4(அ)ஸ்ம்யஹம் ஹரி: ॥ 12

ப்ரஹ்மத்திலிருந்து மாயையால் நீர்க்குமிழிக்கு ஒப்பான ஆகாசம் உண்டானது; ஆகாசத்திலிருந்து வாயு உண்டானது. வாயுவிலிருந்து அக்னியும், அதிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பூமி (பிருதிவி) யும் உண்டாயின. அதிலிருந்து (பிருதிவியிலிருந்து) நெல், நவதானியம் முதலானவை உண்டாயின.

பூமி ஜலத்திலும், ஜலம் அக்னியிலும், அக்னி வாயுவிலும், அந்த வாயு ஆகாசத்திலும், ஆகாசமும் கூட (அனைத்தையும் அடக்கிக்கொண்டு வெளிப்படாமலிருப்பதான மூலப்பொருளிலும் அதாவது மாயையிலும்) அதுவும் சுத்த (மான ப்ரஹ்ம) த்திலும் (லயம் அடைகின்றன.) ஒடுங்குகின்றன. (கடைசியில் மிஞ்சிய) சுத்தமான ஹரியாக நான் இருக்கிறேன்.

(ஹரி என்பதால் அனைத்தையும் தன்னுள் ஸம்ஹரித்துக் கொண்டு எஞ்சி நிற்கும் ஏகப் பரம்பொருள் குறிக்கப்படுகிறது.)

அஹம் விஷ்ணுரஹம் விஷ்ணுரஹம் விஷ்ணுரஹம் ஹரி: ।
கர்த்ரு-போ4க்த்ராதி3கம் ஸர்வம் தத்3வித்3யோத்த2மேவ ச ॥ 13

"நான் விஷ்ணு (எங்கும் நிறைந்தவன்); நான் விஷ்ணு; நான் விஷ்ணு; நான் ஹரி; செய்கிறவன், அனுபவிக்கிறவன் என்பதெல்லாம் அவனுடைய அவித்யையால் (மாயையால்) ஏற்பட்டதே.

அச்யுதோ(அ)ஹ-மநந்தோ(அஹம் கோவிந்தோ3(அ)ஹ-மஹம் ஹரி: ।
ஆநந்தோ3(அ)ஹ-மசேஷோ(அ)ஹ-மஜோ(அ)ஹ-மம்ருதோ(அ)ஸ்ம்ய ஹம் ॥ 14

நான் அச்யுதன் (தன் நிலையிலிருந்து வழுவாதவன்). நான் அனந்தன் (தேசம், காலம், வஸ்து என்ற மூன்று எல்லைகளும் அற்றவன்). நான் கோவிந்தன் (இந்திரியங்களை ஆள்பவன்). நான் ஹரி. நானே ஆனந்தம். எல்லாமே நான். நான் பிறப்பு அற்றவன். நான் மரணம் இல்லாதவனாக இருக்கிறேன்.

நித்யோ(அ)ஹம் நிர்விகல்போ(அ)ஹம் நிராகாரோ(அ)ஹ-மவ்யய: ।
ஸச்சிதா3நந்த-ரூபோ(அ)ஹம்: பஞ்சகோசாதிகோ3(அ)ஸ்ம்யஹம் ॥ 15

நான் எப்பொழுதும் இருப்பவன். நான் வேற்றுமை அற்றவன். நான் உருவமற்றவன். சிகை அற்றவன். நான் ஸத்தாயும், சித்தாயும், ஆனந்தமாகவும் இருப்பவன். நான் (அன்ன மயம், பிராணமயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்த மயம் என்னும் ஐந்து கோசங்களுக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கிறேன்.)

அகர்தா(அ)ஹ-மபோ4க்தாஹ-மஸங்க3: பரமேச்வர: ।
ஸதா3 மத்-ஸந்நிதாநேந சேஷ்டதே ஸர்வ மிந்த்3ரியம் ॥ 16

நான் (ஒன்றையும்) செய்யாதவன். நான் (எதையும்) அநுபவியாதவன். (நான்) ஒன்றிலும் ஒட்டாதவன். பரமேசுவரன். எப்பொழுதும் என் ஸந்நதியில் இருப்பதாலேயே எல்லா இந்திரியமும் வேலை செய்கின்றன.

ஒரு காரியத்தைச் செய்வதற்கும், அதன் பயனை அனுபவிப்பதற்கும் பிற வஸ்துவுடன் ஸம்பந்தம் இருக்கவேண்டும். ஆத்மா ஒரு வஸ்துவுடனும் ஸம்பந்தப்படாததால் அது கர்த்தாவும் அல்ல, போக்தாவும் அல்ல. ஆனாலும் ஆத்மா இருப்பதால்தான் எல்லாம் அதன தன் வேலையைச் செய்கிறது. காந்தத்தின் அருகில் இரும்பு அசைவது போல் ஆத்ம ஸந்நிதியில் இந்திரியங்கள் வேலை செய்கின்றன. காந்தம் போல ஆத்மா இருக்கிறது என்பதைத் தவிர இந்திரியங்களின் காரியங்களில் அதற்கு ஒரு வித ஸம்பந்தமும் இல்லை.

ஆதி^{3}-மத்^{4}யாந்தமுக்தோ(அ)ஹம் ந ப^{3}த்தோ(அ)ஹம் கதா^{3}சந ।
ஸ்வபா^{4}வ நிர்மல: சுத்^{3}த^{4}: ஸ ஏவாஹம் ந ஸம்சய: ॥ 17

"நான் ஆதி, மத்யம், முடிவு மூன்றும் அற்றவன். நான் ஒரு பொழுதும் கட்டுப்பட்டவனில்லை. நான் இயற்கையிலேயே அழுக்கு அற்றவன். பரிசுத்தன் (நான்) அந்த பரமாத்மாவே. (இதில்) சந்தேஹமில்லை."

ப்^{3}ரஹ்மைவாஹம் ந ஸம்ஸாரீ முக்தோ(அ)ஹமிதி பா^{4}வயேத் ।
அசக்நுவந் பா^{4}வயிதும் வாக்யமேதத் ஸ்தா^{3}ப்^{4}யஸேத் ॥ 18

யத^{3}ப்^{4}யாஸேந தத்^{3}பா^{4}வோ ப^{4}வேத்^{3}-ப்^{4}ரமர-கீடவத் ।
அத்ராபஹாய ஸந்தே^{3}ஹம் அப்^{4}யஸேத் க்ருதநிச்சய: ॥ 19

(ஞானம் பெறாதவரும் மேற்சொன்னவாறு) "நான் ப்ரஹ்மமே, ஸம்ஸாரி அல்ல. நான் (எல்லா பந்தங்களிலிருந்தும்) விடுபட்டவன்." என்று பாவிக்க வேண்டும். பாவிப்பதற்கு சக்தி இல்லாதவன் இந்த வாக்கியத்தை எப்பொழுதும் திருப்பித் திருப்பிச் சொல்லவேண்டும்.

ஏனெனில் அப்யாஸம் செய்வதால், குளவியால் கொட்டப்பட்ட புழுவுக்குக் குளவித்தன்மை உண்டாகி விடுவது போல், அந்த ப்ரஹ்மபாவம் இவனுக்கு ஏற்படும். இவ்விஷயத்தில், ஸம்சயத்தை விட்டு, உறுதி செய்து கொண்டு அப்யாஸம் செய்ய வேண்டும்.

(வாஸ்தவ அநுபவம் ஸித்திக்காவிடினும், பாவனையிலாவது ப்ரஹ்ம நிலையைச் சிந்திப்பதாலும், அதுவும் இயலாதவர், அந் நிலை கூறும் வாசகங்களை யேனும் பயில்வதாலும் காலக்ரமத்தில் பக்குவமடைவர்.)

த்^{4}யாந-யோகே^{3}ந மாஸைகாத்^{3}-ப்^{3}ரஹ்மஹத்யாம் வ்யபோஹதி ।
ஸம்வத்ஸரம் ஸதா^{3}(அ)ப்யாஸாத் ஸித்^{3}த்^{4}யஷ்டக-மவாப்நுயாத் ॥ 20

யாவஜ்ஜீவம் ஸதா[3]ப்[4]யாஸாத் ஜீவந்முக்தோ ப[4]வேத்[3]-யதி: ।

ஒரு மாத காலம் இம்மாதிரி த்யானம் செய்வதால் ப்ரஹ்மஹத்தி பாபத்தை (யும்) போக்கடிக்கிறான். ஒரு வருஷகாலம் எப்பொழுதும் அப்யாஸம் செய்வதால், எட்டு ஸித்திகளையும் (அத்புதமான ஸகல சக்திகளையும்) அடைவான். உயிருள்ள வரை எப்பொழுதும் செய்வதால் யதியானவன் ஜீவன் முக்தனாக (உடலில் வாழும்போதே மோக்ஷம் பெற்றவனாக) ஆவான்.

நாஹம் தே[3]ஹோ ந ச ப்ராணோ நேந்த்[3]ரியாணி ததை[2]வ ச ॥ 21

ந மநோஹம் ந பு[3]த்[3]தி[4]ச்ச நைவ சித்தமஹங்க்ருதி: ।
நாஹம் ப்ருத்[2]வீ ந ஸலிலம் ந ச வஹ்நி-ஸ்ததா[2](அ)நில: ॥ 22

ந சாகாசோ ந சப்தச்ச ந ஸ்பர்சஸ்ததா[2] ரஸ: ।
நாஹம் க[3]ந்தோ ந ரூபம் ச ந மாயா(அ)ஹம் ந ஸம்ஸ்ருதி: ॥ 23

ஸதா[3] ஸாக்ஷி-ஸ்வரூபத்வாத் சிவ ஏவாஸ்மி கேவல: ।

"நான் சரீரமல்ல. ப்ராணனும் அல்ல. அப்படியே இந்திரியங்களும் அல்ல. நான் மனம் அல்ல, புத்தியும் அல்ல; சித்தமும் அல்ல; அஹங்காரமும் அல்ல. நான் ப்ருதிவி அல்ல; ஜலம் அல்ல; அக்னியும் அல்ல; அவ்விதமே வாயு (அல்ல); ஆகாசமும் அல்ல; சப்தமும் அல்ல; ஸ்பர்சமும் அல்ல; அவ்வாறே ரஸமும் (அல்ல), நான் கந்தம் அல்ல; ரூபமும் அல்ல. நான் மாயை அல்ல. ஸம்ஸாரம் அல்ல. எப்பொழுதும் ஸாக்ஷி ஸ்வரூபமாயிருப்பதால், தனிப்பட்ட சிவஸ்வரூபமாகவே இருக்கிறேன். (சிவம் என்பது சாந்தம், மங்களம், அன்பு முதலியவற்றைக் கடந்து எஞ்சி நிற்கும் மூலப்பொருளைக் குறிக்கும்.)

மய்யேவ ஸகலம் ஜாதம் மயி ஸர்வம் ப்ரதிஷ்டி[2]தம் ॥ 24

மயி ஸர்வம் லயம் யாதி தத்[3]-ப்[3]ரஹ்மாஸ்ம்யஹ-மத்[3]வயம் ।

எல்லாம் என்னிடத்திலேயே உண்டானது. எல்லாம் என்னிடமே நிலை பெற்றுள்ளன. என்னிடந்தான் எல்லாம் ஒடுங்குகின்றன. நான் அப்படிப்பட்ட இரண்டற்ற ப்ரஹ்மமாக இருக்கிறேன்.

ஸர்வஜ்ஞோ(அ)ஹ-மநந்தோ(அ)ஹம் ஸர்வேச: ஸர்வசக்திமாந் ॥ 25

ஆநந்த[3]: ஸத்ய-போ[3]தோ[4]ஹம் இதி ப்[3]ரஹ்மாநுசிந்தநம் ।

"நான் எல்லாம் அறிந்தவன்; நான் எல்லை அற்றவன்; எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவன். எல்லாச் சக்திகளுடன் கூடியவன். நான் ஆனந்த ரூபி,

ஸத்தாகவும், சித்தாகவும் இருப்பவன் என்பதே ப்ரஹ்மத்தை இடைவிடாது சிந்திக்கும் முறை.

அயம் ப்ரபஞ்சோ மித்3யைவ ஸத்யம் ப்3ரஹ்மாஹ-மவ்யயம் || 26

அத்ர ப்ரமாணம் வேதா3ந்தா கு3ரவோ(அ)நுப4வஸ் ததா2 |

இந்தப் பிரபஞ்சம் (மெய்போலத் தோற்றம் காட்டும்) பொய்யே. நான் உண்மையானதும் அழிவற்றதுமான ப்ரஹ்மம். இந்த விஷயத்தில் உபநிஷத்துக்களும், ஆசார்யர்களும், அவ்வாறே (ஸ்வ) அநுபவமும் பிரமாணம்.

ப்3ரஹ்மைவாஹம் ந ஸம்ஸாரீ ந சாஹம் ப்3ரஹ்மண: ப்ருத2க் || 27

நாஹம் தே3ஹோ ந மே தே3ஹ: கேவலோ(அ)ஹம் ஸநாதன: |

நான் ப்ரஹ்மமே, ஸம்ஸாரி அல்ல. நான் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு அல்ல. நான் சரீரம் அல்ல. சரீரம் என்னுடையது அல்ல. நான் எப்பொழுதும் இருப்பவன்; தனி ஒன்றாயிருப்பவன்.

ஏகமேவாத்3விதீயம் வை ப்3ரஹ்மணோ நேஹ கிஞ்சந || 28

(ப்ரஹ்மம்) ஒன்றேதான்; இரண்டு அற்றது. இங்கு ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறாக ஒன்றும் இல்லை.

("ஏகமேவாத்விதீயம், நேஹ நாநாஸ்தி கிஞ்சன" என்பன உபநிஷத் வாக்யங்கள்.)

ஹ்ருத3ய-கமல-மத்4யே தீ3பவத்-வேத3ஸாரம்
ப்ரணவமய-மதர்க்யம் யோகி3பி4ர்-த்4யாந-க3ம்யம் |
ஹரி-கு3ரு-சிவயோக3ம் ஸர்வ-பூ4தஸ்த2-மேகம்
ஸக்ருத3பி மநஸா வை சிந்தயேத்3-ய: ஸ முக்த: || 29

எவன் தாமரை போன்ற ஹிருதயத்தில், தீபம் போல் ஒளியுள்ளதும்,. வேதத்தின் ஸாரமானதும், ஓங்கார ஸ்வரூபமான தும், புத்தியால் ஊஹிக்க முடியாததும், மனத்தை அடக்கிய யோகிகளால் தியானத்தால் அறியக்கூடியதும், எல்லாப் பிராணிகளிடமும் இருப்பதும், ஒன்றானதும், விஷ்ணு, ஆசார்யன், சிவன் இம்மூவரும் சேர்ந்ததுமான ப்ரஹ்மதத்வத்தை ஒரு தடவையாவது மனத்தால் தியானம் செய்கிறானோ அவன் முக்தன்.



யோகதாராவலீ

[இந்தப் பிரகரணத்தில் குரு வந்தன மாயும், பீடிகையாயுமுள்ள முதல் இரு ச்லோகங்களை நீக்கினால் இருபத்தேழு ச்லோகங்கள் உள்ளன. தாரகைகள் (நக்ஷத்ரங்கள்) இருபத்தியேழு ஆகும். எனவே, யோக முறை குறித்து இருபத்தியேழு ச்லோக ஆவளீ யைக் கொண்ட இந்நூல் "யோகதாராவலீ" எனப்படுகிறது.]

வந்தே3 கு3ரூணாம் சரணாரவிந்தே3
ஸந்த3ர்சித ஸ்வாத்ம ஸுகா2வபோ3தே4 ।
ஜநஸ்ய யே ஜாங்க3லிகாயமாநே
ஸம்ஸார ஹாலாஹல மோஹசாந்த்யை ॥ 1

பொட்டல் போன்ற உலகத்தின் விஷயமான மோகத்தை அடக்கி ஜனங்களுக்குத் தன்னுடைய ஆத்ம ஆனந்தத்தை அறிந்துகொள்ள வழி காண்பிக்கும் குருவின் பாதகமலங்களில் வணங்குகிறேன்.

ஸதா3சிவோக்தானி ஸபாத3லக்ஷ-
லயாவதா4நாநி வஸந்தி லோகே ।
நாதா3நுஸந்தா4ன ஸமாதி4மேகம்
மந்யாமஹே மாந்யதமம் லயாநாம் ॥ 2

உலகத்தில் சதாசிவனான பரமேச்வரரால் சொல்லப்பட்ட லக்ஷத்திற்கும் மேற்பட்ட வழிகள் லயத்திற்கு (மோகத்தை அடக்கி பரப்பிரம்மத்தில் ஒடுங்குவதற்கு) இருக்கின்றன. அந்த வழிகளில் நாதானுஸந்தானம் (நாதத்தை சிந்தனை செய்வது) என்னும் ஒரு சமாதி நிலை தான் எல்லாவற்றிற்கும் உயர்ந்தது என்று நான் எண்ணுகிறேன்.

ஸ ரேச பூரைரநிலஸ்ய கும்பை4:
ஸர்வாஸு நாடீ3ஷு விசோதி4தாஸு ।
அநாஹதாக்2யோ ப3ஹுபி4: ப்ரகாரை:
அந்த: ப்ரவர்தே ஸதா3 நிநாத3: ॥ 3

பூரகம் (காற்றை உள்ளே இழுப்பது), ரேசகம் (காற்றை வெளியே விடுவது), கும்பகம் (இழுத்த காற்றை உள்ளுக்குள் அடக்கிவைப்பது) என்னும் வழிகளால் எல்லா நாடிகளிலும் சுத்தம் ஆன பின், காற்றை அநேக விதமாக உள்ளுக்குள் செலுத்தும்போது" அனாஹத " என்னும் இடத்தில் ஒரு நாதம் விடாமல் ஒலிக்கிறது. (ஓங்கார நாதம் ஏற்படுகிறது.)

((முதுகெலும்புத் தண்டின் அடியிலிருந்து, சிரஸின் உச்சிவரையிலாக மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞா,

ஸஹஸ்ராரம் என்ற பத்ம வடிவான சக்கரங்கள் உள்ளன. மூலாதாரத்தில் உறக்க நிலையிலுள்ள சக்தியை (குண்டலிநீ என்பதை) யோக ஸாதனையால் எழுப்பி இச்சக்கரங்களில் ஏற்றி, ஸஹஸ்ராரத்தை அடைவிக்கும் போது, ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியம் ஆகிறது. வெளி உலகிலுள்ள ஜாலந்தரம், ஒட்டியாணம் முதலிய சக்தி பீடங்களும், ஜீவகாயத்தில் இச்சங்கமங்களாக உள்ளன.

இதயத்திற்கு நேரே உள்ள அநாஹத சக்கரத்தைக் குண்டலிநீ அடையும் போது, தானாகவே அங்கு ப்ரணவமான ஓங்காரம் எழும்பும். தொண்டையிலாயினும், வாத்தியங்களிலாயினும் இருபொருள்களைச் சேர்த்துத் தட்டப்படுவதாலேயே ஒலி உண்டாவதால் இவை "ஆஹத" சப்தங்கள் எனப்படும்.

முதுகுத்தண்டில் இதயத்திற்கு நேரே உள்ள சக்ரத்திலோ இவ்விதத் தட்டுதலின்றி தானாகவே பிரணவமான நாதம் எழுவதால் அது" அநாஹதம்" எனப்படுகிறது.)

நாதா3நுஸந்தா4ன நமோ(அ)ஸ்து துப்4யம்
த்வாம் ஸாத4னம் தத்வ பத3ஸ்ய ஜாநே ।
ப4வத் ப்ரஸாதா3த் பவநேந ஸாகம்
விலியதே விஷ்ணுபதே3 மநோ மே ॥ 4

நாதானுஸந்தானமான (ஓங்கார நாதத்தைக் கண்டுபிடித்து அதில் ஈடுபட்டு நிற்கும்) உனக்கு நமஸ்காரம். நீதான் தத்வ நிலையை (பரப்பிரம்மத்தை) அடைவதற்கு வழி என்று தெரிந்துகொண்டேன். உன்னுடைய அனுக்கிரஹத் தாலும், காற்றை அடக்குவதாலும் என் மனம் விஷ்ணுபதத்தில் குவிந்து தொய்கிறது. (காற்றை ரேசக, பூரக, கும்பகத்தால் அடக்கினால் மட்டும் போதாது; ப்ரணவ ரூபியான பகவத் பிரஸாதமும் வேண்டும்.)

ஜாலந்த4ரோட்3யாண நமூலப3ந்தா4ன்
ஜல்பந்தி கண்டோ2த3ர பாயு மூலான் ।
ப3ந்த4 த்ரயே(அ)ஸ்மிந் பரிசீயமானே
ப3ந்த4: குதோ தா3ருணகாலபாசாத் ॥ 5

கருத்துரை: - (சக்கரங்களில் உள்ள பந்தங்கள் அல்லது முடிச்சுகளை அவிழ்த்தாலே குண்டலிநீ சக்தி மேலே மேலே செல்லும். யோக சாதனை இந்த கரநதி பேதனத்துக்கு உதவுகிறது). (பீடங்களாக உள்ள) ஜாலந்தரம், ஒட்டி யாணம், மூலம் ஆகியவை கழுத்து (விசுத்தி), எருக்குழி (ஸ்வாதிஷ்டானம்), கருக்குழி (மூலாதாரம்) ஆகியவற்றில் (அவற்றுக்குரிய) பந்தங்களோடு உள்ளன என்று (அறிந்தேன்) சொல்கின்றனர். இம்மூன்று பந்தங்களில் (யோக) அப்பியாஸம் ஸாதித்து விட்டால் (சுவாஸபந்த நாடி பந்தங்களெல்லால் குண்டலிநீ சக்ர பந்தங்களை அவிழ்த்து விட்டால்) அதன் பின் யம பாசத்தின் பந்தம் என்பது எங்கு ஏற்படும்? (ஸாதகன் ம்ருத்யுவைக் கடந்து அம்ருதமாகிவிடுவான்).

ஓட்3யாண ஜாலந்த4ரமூலப3ந்தை4:
உந்நித்3ரிதாயாமுரகா3ங்க3 நாயாம் ।
ப்ரத்யங் முக2த்வாத் ப்ரவிசந் ஸுஷும்நாம்
க3மாக3மௌ முஞ்சதி க3ந்த4வாஹ: ॥ 6

ஒட்டியான ஜாலந்தரம், மூலபந்தங்களால் (யோக ஸாதனைகளால்) பெண் சர்ப்ப உருவில் மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கும் குண்டலிநீயை எழுப்பி மேற்பக்கமாக சக்கரங்களில் செலுத்தி (முதுகெலும்பின் நேரே செல்லும் நடுநாடியான) ஸுஷும்னா மார்க்கத்தில் (மூச்சுக்காற்றுக்களைச் செலுத்தி ஜனன மரணத்திலிருந்து விடுபடுகிறான்.

உத்தா2பி-தாதா4-ர ஹுதாசநோல்கை:
ஆகுஞ்சநை: சச்-வத3பாநவாயோ: ।
ஸந்தாபிதாச்-சந்த்3ரமஸ: பதந்தீம்
பீயூஷதா4ராம் பிப3தீஹ த4ந்ய: ॥ 7

மூலாதார அக்னியை எரிநக்ஷத்திரம் போல் (மேல்நோக்கிப் பாய) எழுப்பியதாலும், அபானவாயுவை நெருக்கியடக்கியதாலும், பெரும் தாபத்தை (உஷ்ணத்தை) அடைந்த இவன் (ஸஹஸ்ராரத்தில் உள்ள) சந்திரனிலிருந்து வர்ஷிக்கும் அம்ருத்தாரையை இங்கேயே குடித்துக் குளிர்ந்த பாக்யசாலியாகிறான்.

ப3ந்த4 த்ரயாப்4யாஸ-விபாகஜாதாம்
விவர்ஜிதாம் ரேசக-பூரகாப்4யாம் ।
விசோஷயந்தீம் விஷயப்ரவாஹம்
வித்3யாம் ப4ஜே கேவல-கும்ப4ரூபாம் ॥ 8

மூன்று விதமான பந்தங்களின் அப்யாஸத்தினால் பக்குவம் உண்டான வனாகி, ரேசக, பூரகங்களை அகற்றிவிட்டு, புல நுகர்ச்சி (சிற்றின் பங்களான) வெள்ளத்தை வற்ற அடித்தவனாக ஸ்வச்சமான கும்பக ரூபத்திலுள்ள வித்யையை பஜிக்கிறேன்.

(மூச்சை இவ்வளவு நேரம் இழுப்பது (பூரகம்), இவ்வளவு நேரம் வெளி விடுவது (ரேசகம்) என்ற விதிகளுக்கு உட்பட்டே ஒரு யோக ஸாதகன் அதை வைப்பது என்ற பயிற்சியைச் செய்கிறார். ஸாதனையில் முன்னேறிவிட்டாலோ. ரேசக, பூரக விதிகளை இவன் மனமறிந்து பயில வேண்டியிராமல் தன்னாலேயே சுவா ஸம் கும்பகம் கட்டுப்பட்டு நிற்கும். சுவாஸம் எந்த அளவுக்கு ஓடாமல் இப்படி நிற்கிறதோ, அந்த அளவுக்கு மனமும் ஓடாமல் கட்டுப்பட்டு நிற்கும்).

அநாஹதே சேதஸி ஸாவதா4னை:
அப்4யாஸசூரை ரநு பூ4யமாநா ।
ஸம்ஸ்தம்பி4 தச்வாஸமன: ப்ரசாரா
ஸா ஜ்ரும்ப4தே கேவல-கும்ப4க ஶ்ரீ: ॥ 9

விடாப்பயிற்சியில் சூரராயிருப்பவர்களால், அனாஹதத்தில் சித்தத்தைக் கூர்ந்த கவனத்துடன் (ஒருமுகப்படுத்தி) அநுபவித்துக்கொண்டே சுவாசத்தையும் மனத்தில் ஏற்படும் அலைச்சல்களையும் (எண்ணங்களையும்) அடக்கப்படுவதால் கும்பகம் என்னும் செல்வம் மட்டுமே பிரகாசிக்கிறது.

ஸஹஸ்ரச: ஸந்து ஹடே2ஷு கும்பா4:
ஸம்பா4வ்யதே கேவலகும்ப4 ஏவ ।
கும்போ4த்தமே யத்ர து ரேசபூரௌ
ப்ராணஸ்ய ந ப்ராக்ருத-வைக்ருதாக்2யௌ ॥ 10

ஹடயோகம் போல ஆயிரம் கும்பங்கள் (மூச்சடக்கு முறைகள்) இருந்தாலும் (ஸ்வபாவமாக ஆகிவிடும்) கலப்பற்ற கும்பகமே மிகவும் போற்றப்படுவது. இவ்வுத்தமமான கும்பகத்தில் ப்ராண வாயுவின் ப்ராக்ருத, வைக்ருத எனப்படும் இயற்கை - செயற்கைகளான ரேசக - பூரகங்கள் (மூச்சுவிடலும், இழுத்தலும்) கிடையாது.

த்ரிகூட - நாம்நி ஸ்திமிதே(அ)ந்தரங்கே3
கே2 ஸ்தம்பி4தே கேவல - கும்ப4கேந ।
ப்ராணாநிலோ பா4னு - சசாங்க - நாட்3யௌ
விஹாய ஸத்3யோ விலயம் ப்ரயாதி ॥ 11

கலப்பற்ற கும்பகத்தால் பிராணவாயு. தரிகூடம் என்பதான மூன்று நாடிகளும் கூடும் புருவமத்தியின் (ஆக்ஞா சக்ரத்தின்) அந்தரங்கத்தில் உள்ள ஆகாசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டதும், பிராணவாயுவான காற்று (இட, வலப்புற நாடியான இடை - பிங்கலை எனும்) சூர்ய நாடியையும், சந்திரநாடியை யும் விட்டு விட்டு உடனே (மத்ய நாடியான ஸுஷும்னையில்) ஒடுங்குகிறது.

ப்ரத்யாஹ்ருத: கேவல - கும்ப4கேன
ப்ரபு3த்3த4 - குண்ட3ல்யுப பு4க்த - சேஷ: ।
ப்ராண: ப்ரதீசீந் பதே2ந மந்த3ம்
விலீயதே விஷ்ணுபதா3ந்தராலே ॥ 12

கலப்புற்ற கும்பகத்தால் குண்டலிநீ சக்தி எழுப்பப்பட்டவுடன் மற்ற எல்லாம் ஒடுங்கிவிடுகிறது. மறுபடி கும்பகத்தால் நிறுத்தப்பட்டதும், பிராண வாயு மேல் நோக்கிச் செல்லும் பாதையில் மெதுவாகச் சென்று விஷ்ணுபாத மெனும் ஆகாயவெளியில் ஒடுங்குகிறது.

நிரங்குசாநாம் ச்வஸநோத்3க3மாநாம்
நிரோத4னை: கேவல - கும்ப4காக்2யை: ।
உதே3தி ஸர்வேந்த்3ரிய - வருத்தி - சூந்யோ
மருல்லய: கோ(அ)பி மஹாமதீநாம் ॥ 13

கலப்பற்ற கும்பகத்தால் சுவாசத்தின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி, அதை சக்தியற்றதாக்கியவுடன், எல்லா இந்திரியங்களும் சலன மற்றுப்போகிறது. இப்படிப்பட்ட (சமாதி) நிலையை அடைந்த யாரோ சில மஹாபுத்திமான்கள் வாயுவை வயமுறச் செய்கிறார்கள். (சுவாஸத்தை ஒடுக்கி விடுகிறார்கள். அதனாலேயே மனத்தையும் ஒடுக்கி விடுகிறார்கள்).

ந த்4ருஷ்டி - லக்ஷ்யாணி - ந - சித்த - ப3ந்தோ4
ந தே3சகாலௌ ந ச வாயுரோத4: ।
ந தா4ரணா - த்யாந பரிச்ரமோ வா
ஸமேத4மாநே ஸதி ராஜயோகே3 ॥ 14

அப்படிப்பட்ட ராஜயோகத்தில் நிலைத்த ஒருவனுக்கு பார்க்கவேண்டியது ஒன்றும் இல்லை. அவன் மனத்தை கட்டும் படுத்தவேண்டியது இல்லை. ஏனெனில் அவன் மனம் தன்னால் கட்டுப்பட்டிருக்கும். தன்னால் தேசத்தாலோ காலத்தாலோ அவனைக் கட்டுப்படுத்த முடியாது. அங்கு வாயுவை அடக்க வேண்டியதும் இல்லை. சித்தத்தை ஒரு முகப்படுத்துவதான் தாரணை, அந்த ஒருமையிலேயே தோய்வதான தியானம் போன்றவற்றுக்காக அவன் சிரமப்பட வேண்டியதும் இல்லை. (லக்ஷ்யமே அவனுக்கு ஸித்தித்துவிட்டதால்).

அசேஷ - த்3ருச்யோஜ்ஜி2த - த்3ருங்மயாநாம்
அவஸ்தி2தாநாமிஹ ராஜயோகே3 ।
ந ஜாக3ரோ நாபி ஸுஷுப்தி - பா4வோ
ந ஜீவிதம் நோ மரணம் விசித்ரம் ॥ 15

இந்த ராஜயோகத்தில் நிலைத்திருந்து பார்க்கவேண்டியது எல்லாம் விலகி விட்ட ஸாக்ஷிமாத்ரனாக ஆகிவிட்டவனுக்கு, விழிப்பு என்பது கிடையாது, தூக்கம் என்ற நிலையும் கிடையாது; உயிர்வாழ்வது என்பதும் கிடையாது; மரணம் என்பதும் கிடையாது. (என்னே) விசித்திரம்!

அஹம் - மமத்வாத்3யபஹாய ஸர்வம்
ஸ்ரீராஜயோகே3 ஸ்தி2ரமாநஸாநாம் ।
ந த்3ரஷ்ட்ருதா நாஸ்தி ச த்3ருச்ய பா4வ:
ஸா ஜ்ரும்ப4தே கேவல - ஸம்விதே3வ ॥ 16

"நான், என்னுடையது" என்ற எல்லா எண்ணங்களையும் விட்டு விட்டு பெருஞ்செல்வமான ராஜயோகத்தில் மனத்தை ஸ்திரமாக வைத்து இருப்பவர்களுக்கு பார்க்கிறவனாக உள்ள நிலையும் இல்லை. பார்க்கும் எண்ணமும் இல்லை. அப்பொழுது அவன் நிலையில் "கேவலஸம்வித்" எனும் கலப்பற்ற பெரு ஞானமே பிரகாசிக்கிறது.

நேத்ரே யயோங் - மேஷ - நிமேஷசூந்யே
வாயுர்யயா வர்ஜித - ரேசபூர: ।
மனச்ச ஸங்கல்ப - விகல்பசூந்யம்
மநோந்மநீ ஸா மயி ஸந்நித4த்தாம் ॥ 17

எங்கு கண்களில் இமைகள் மூடித்திறப்பது இல்லையோ, எங்கு காற்றின் தாகம் விடப்பட்டு விட்டதோ, மனசில் எண்ணங்களும் அதன் சிதறல்களும் இல்லையோ, அந்த மனத்தைக் கடந்த உன்மனீ நிலை என்னிடம் நிலவட்டும்.

சித்தேந்த்3ரியாணாம் சிரநிக்3ரஹேண
ச்வாஸ - ப்ரசாரே சமிதே யமீந்த்3ரா: ।
நிவாத - தீ3பா இவ நிச்சலாங்கா3:
மநோந்மநீமக்3ந - தி4யோ ப4வந்தி ॥ 18

எந்த யோகிகள், நிரந்தரமாக சித்தத்தையும், இந்திரியங்களையும் அடக்கி வைப்பதால் சுவாசத்தின் போக்குவரத்தையும் அடக்கிக் காற்றில்லாதி - இம் விளககைப்போல அசையாமல், அங்கங்கள் ஆடாமல் இருக்கின அவாகள் மனோன்மணி நிலையில் முழுகிய புத்தியை உடையவராகின்றனர்.

உந்மந்யவஸ்தா2தி4க3மாய வித்3வன்
உபாயமேகம் தவ நிர்தி3சாம: ।
பச்யந்நுதா3ஸீந்தயா ப்ரபஞ்சம்
ஸங்கல்பமுந்மூலய ஸாவதா4ன: ॥ 19

ஹே வித்வான்! உன்மத்த நிலையை அடைவதற்கு உனக்கு ஒரு வழியை சொல்கிறேன். இந்தப் பிரபஞ்சத்தை உதாசீனமாக பார். (அலட்சியப்படுத்து). அப்படிசசெய்து கவனமாக உன் மனத்தின் ஸங்கற்பங்களை வேரோடு பிடுங்கி எறி.

ப்ரஸஹ்ய ஸங்கல்ப பரம்பராணாம்
ஸம்பே4த3நே ஸந்ததஸாவதா4னம் ।
ஆலம்ப3நாசாத3பசீயமாநம்
சனை: சனை: சாந்திமுபைதி சேத: ॥ 20

ஸங்கற்பங்களின் பரம்பரையை ஒழித்து, சாவதானமாக விடா முயற எண்ணங்களை கட்டுப்படுத்தி, ஆசை என்னும் பிடிப்பை குறைத்துக்கள் வந்ததும் சித்தம் மெல்லமெல்ல சாந்தி அடைகிறது.

நிச்வாஸ - லேபைர் - நிப்4ருதை: சரீரை:
நேத்ராம்பு3ஜைரர்த4 நிமீலிதைச்ச ।
ஆவிர்ப4 வந்தீமமநஸ்க - முத்3ராம்
ஆலோகயாமோ முநிபுங்க3 வாநாம் ॥ 21

ச்வாஸமடங்கிய நிலையையே சரீரத்துக்கு நிறைந்த (சந்தனம்) பூச்சாகக் கொண்டவர்களும், பாதி மூடிய தாமரை போன்ற கண்களை கொண்டவர்களுமான முனிச்ரேஷ்டர்களுக்கு ஏற்படுகின்ற ஆசையற்ற (மனமற்ற) தன்மையைப் பார்க்கிறேன்.

அமீ யமீந்த்3ரா : ஸஹஜாமநஸ்கா -
த3ஹம் - மமத்வே சிதி2லாயமாநோ ।
மநோதிக3ம் மாருத - வ்ருத்தி - சூன்யம்
க3ச்ச2ந்தி பா4வம் க3க3நாவசேஷம் ॥ 22

அப்படிப்பட்ட முனிபுங்கவர்கள், இயற்கையாக ஏற்பட்ட ஆசையற்ற (மனமற்ற) தன்மையால்,'நான், என்னுடைய'என்கிற எண்ணங்களைச் சிதைத்த பிறகு, மனத்தை விட வேகமான காற்றின் சலனமில்லாது ஆகாசம் மட்டும் மிஞ்சி இருக்கிற நிலையை அடைகிறார்கள்.

நிவர்தயந்தீம் நிகி2லேந்த்3ரியாணி
ப்ரவர்தயந்தீம் பரமாத்மயோக3ம் ।
ஸம்விந்மயீம் தாம் ஸஹஜாமநஸ்காம்
கதா3 க3மிஷ்யாமி க3தாந்யபா4வ: ॥ 23

அனைத்து இந்திரியங்களையும் விஷயங்களிலிருந்து இழுத்துப் பிடித்து வைத்து, பரமாத்மாவுடன் சேரும்பொருட்டு தியானத்தில் செலுத்தும் அந்த இயற்கையான மனமற்ற தன்மையுள்ள" ஸம் வித்'என்னும் பதத்தை எப்பொழுது அடைவேன்? எங்கு இது வேறு, அது வேறு என்ற பாவமே இருக்காதோ, அந்த நிலையை எப்பொழுது அடைவேன்?

ப்ரத்யக்3 - விமர்சாதிசயேன பும்ஸாம்
ப்ராசீனக3ந்தே4ஷு பலாயிதேஷூ ।
ப்ராது3ர்ப4வேத் - காசித3ஜாட்3ய - நித்3ரா
ப்ரபஞ்ச - சிந்தாம் பரிவர்ஜயந்தீ ॥ 24

அந்த நிலையை வெகுவாக சிந்தனை செய்து, பூர்வ ஜன்ம கர்மவாசனையை விரட்டிவிட்ட மனிதர்களுக்கு, ஏதோ ஒரு விதமான" அஜாட்யநித்ரா" (ஜடத் தன்மையில்லாத தூக்க நிலை) ஏற்படுகிறது. அது உணர்வற்ற தூக்கம் இல்லை, (ஏகப்பேருயிர்வேயான சமாதி நிலை.) அந்த நிலை ஏற்பட்டவுடன் இந்த உலகைப்பற்றிய சிந்தையே போய்விடுகிறது.

விச்சி2ந்த ஸங்கல்ப - விகல்பமூலே
நி: சேஷ - நிர்மூலித - கர்மஜாலே ।
நிரந்தராப்4யாஸ நிதாந்தப4த்3ரா
ஸா ஜ்ரும்ப4தே யோகி3னி யோக3நித்3ரா ॥ 25

மனத்தில் ஏற்படும் எண்ணங்களையும், அதன் சிதறல்களையும் துண்டித்து, அதன் மூலகாரணமான கர்மவலையைக் கொஞ்சம் கூட மிச்சமில்லாமல் வேறோடு ஒழித்து, அனவரதம் அப்பியாசம் செய்வதால் செழித்த மங்களமான யோக நித்ரை எனும் யோக தேவதை பிரகாசிக்கிறாள்.

விச்ராந்தி - மாஸாத்[3]ய துரீய - தல்பே
விஸ்வாத்[3]யவஸ்தா[3] - த்ரிதயோபரிஸ்தே[3] ।
ஸம்விந்மயீம் காமபி ஸர்வகாலம்
நித்[3]ராம் ஸகே[2] நிர்விச நிர்விகல்பாம் ॥ 26

நண்பா! விச்வ (ப்ராந்ஞ, தை ஜஸ) எனப்படும் (விழிப்பு, கனவு நித்ரைக்குறிய) மூன்று விதமான நிலைக்கு மேல் இருக்கும் " துரீயம்" என்னும் சயனத்தில் விச்ராந்தியை அடைந்து, "ஸம்வித்" என்ற பரஞான பதத்தில் எல்லாக் காலத்திலும் எந்த சங்கல்பமும் இல்லாத ஒரு "நிர்விகல்ப நித்திரை"யில் புகுவாயாக!

ப்ரகாசமாநே பரமாத்ம - பா[4]நௌ
நச்யத்யவித்[3]யா - திமிரே ஸமஸ்தே ।
அஹோ பு[3]தா[4] நிர்மல - த்[3]ருஷ்டயோ(அ)பி
கிஞ்சிந்த பச்யந்தி ஜக[3]த் - ஸமக்[3]ரம் ॥ 27

பிரகாசிக்கிற பரமாத்மாவின் ஒளியால் எல்லா அவித்யை (அஞ்ஞான) இருட்டும் நாசமாகிவிடுகிறது. (அஞ்ஞானக் கலப்பில்லாத) நிர்மலமான பார்வையை அடைந்த பிறகும் அவர்கள் அகில உலகத்தையும் கொஞ்சம்கூடப் பார்ப்பதில்லை. ஆச்சரியம்!

ஸித்[3]தி[4]ம் ததா[2]வித[4]மநாவிலயாம் ஸமாதௌ[4]
ஸ்ரீசைலச்ருங்க[3]- குஹரேஷு கதோ[3]பலப்ஸ்யே ।
கா[3]த்ரம் யதா[3] மம லதா: பரிவேஷ்டயந்தி
கர்ணே யதா[3] விரசயந்தி க[2]கா[3]ஸ்ச நீடா[3]ன் ॥ 28

அந்தவிதமான மனத்தை ஒடுக்கிய (நிர்விகல்ப), சமாதியில் ஸித்தியை, ஸ்ரீசைலத்தில் உள்ள மலைக்குகையில் எப்பொழுது அடைவேன்? எப்பொழுது என் உடம்பை கொடிகள் சுற்றிக்கொள்ளும்? எப்பொழுது என் காதுகளில் பறவைகள் கூடு கட்டும்? (அதாவது நிர்விகல்ப சமாதியை அடைந்து, சரீரத்தில் கொடிகள் சுற்றிக் கொண்டும், பறவைகள் கூடுகட்டிக்கொண்டும் இருப்பதையும் அறியாத நிலையை வேண்டுகிறார்.)

விசரது மதிரேஷா நிர்விகல்பே ச ஸமாதௌ[4]
குச - கலசயுகே[3] வா க்ருஷ்ணஸாரேக்ஷணாநாம் ।
சரது ஜட[3]மதே வா ஸஜ்ஜநாநாம் மதே வா
மதி - க்ருத - கு[3]ணதோ[3]ஷா மாம் விபு[4]ம் ந ஸ்ப்ருசந்தி ॥ 29

நிர்விகல்ப சமாதியில் புத்தி ஸஞ்சரிக்கட்டும் அல்லது மான் போன்ற விழிகளைக்கொண்ட (பார்வை கொண்ட) பெண்களின் ஸ்தன கும்பங்களில் சஞ்சரிக்கட்டும், மந்த புத்தியில் ஸஞ்சரிக்கட்டும் அல்லது ஸாத்வீகமான நல்ல மனிதர்களின் புத்தியில் ஸஞ்சரிக்கட்டும் : புத்தியால் செய்யப்பட்ட (அறியப்பட்ட) எந்த குணதோஷங்களும் எங்கும் பரந்து விரிந்த விபுவான என்னைத் தொடாது (எனக்கு எல்லாம் ஒன்று தான்).

வாக்ய வ்ருத்தி

[ஜீவ - ப்ரஹ்ம அபேதத்தைக் கூறுவதாக ஒவ்வொரு வேதத்துக்கும் ஒரு மஹாவாக்கியமாக உபநிஷத்துக்களிலுள்ள நான்கு மஹா வாக்கியங்களில் உபதேச வாக்கியமாயுள்ள"தத் த்வம் அஸி" என்ற மஹா வாக்கியத்திற்கு வியாக்யானமாக இப்பிரகரணம் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாரால் அனுக்ர ஹிக்கப்பட்டிருக்கிறது. இது குரு - சிஷ்ய ஸம்வாத ரூபமாய் அமைக்கிப்பட்டிருக்கிறது.]

ஸர்க3 - ஸ்தி3தி - ப்ரளய - ஹேதுமசிந்த்ய - சக்திம்
விச்வேச்வரம் விதி3த - விச்வ - மநந்த - மூர்திம் |
நிர்முக்த - ப3ந்த4ந - மபாரஸுகா2ம்பு3 - ராசிம்
ஸ்ரீவல்லப4ம் விமல - போ3த4க4நம் நமாமி || 1

ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி, பிரளயம் இவைகளுக்குக் காரணமாயும், மனத்தினால் சிந்திக்க முடியாத சக்தி வாய்ந்தவராகவும், ஸகல பிரபஞ்சத்திற்கும் ஈசுவரராயும், ஜகத் முழுவதையும் அறிந்தவராயும், எல்லையில்லாத ஸ்வரூப முள்ளவராயும், எவ்விதக் கட்டுக்களும் இல்லாதவராயும், கரையற்ற ஆனந்தக் கடலாயும், லக்ஷ்மீபதியாகவும் (அதாவது ஸகலவித ஸம்பத்தோடு கூடினவ ராயும்), நிர்மலமான ஞானக்கட்டியாயுமுள்ளவரை நமஸ்கரிக்கிறேன்.

யஸ்ய ப்ரஸாதா3 - த3ஹமேவ விஷ்ணு:
மய்யேவ ஸர்வம் பரிகல் பிதம் ச |
இத்தம் விஜாநாமி ஸதா3த்மரூபம்
தஸ்யாங்க்4ரி பத்3மம் ப்ரணதோ(அ)ஸ்மி நித்யம் || 2

எவருடைய அனுக்ரஹத்தால் நானே விஷ்ணு (அதாவது ஸர்வ வியாபகம்) என்றும், என்னிடத்திலேயே எல்லாம் கல்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் இவ்விதமாக ஸத்தாக இருக்கும் ஆத்மஸ்வரூபத்தை நான் அறிகிறேனோ, அவருடைய பாத கமலத்தை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறவனாக இருக்கிறேன்.

தாப - த்ரயார்க - ஸந்தப்த: கச்சி - து3த்3விக்3ந மாநஸ:
சமாதி3 - ஸாத4நைர் - யுக்த: ஸத்3கு3ரும் பரிப்ருச்ச2தி || 3

மூன்று வித தாபங்களாகிற ஸூர்யனால் நன்கு தபித்தவனாய் (எப்படி இவைகளிலிருந்து விடுபடுவோம் என்று) நடுங்கின மனதுள்ளவனாய் ஒருவன் சமம் (மனவடக்கம்) முதலான ஸாதனங்களுடன் கூடினவனாய் உத்தமமான குருவை (தேடியடைந்து) நன்கு ஆலோசித்துப் பின்வருமாறு கேட்கிறான்.

[தாபம் மூன்றுவிதம்: - தன் சரீரத்திற்குள்ளேயே பூர்வ கர்மாவின் பலனாக ஏற்படக்கூடிய ஜ்வரம் முதலியது. இது ஆத்யாத்மிகம்; தன்னைத் தவிர உள்ள

திருடன், புலி முதலியதால் ஏற்படக்கூடிய தாபம் ஆதிபௌதிகம்; அக்னி, வாயு முதலான தேவதைகளால் ஏற்படக்கூடிய மழை : இடி முதலிய தாபம் ஆதிதைவிகம்.]

அநாயாஸேன யோநாஸ்மாந் முச்யேய ப⁴வ ப³ந்த⁴நாத் ।
தந் மே ஸம்க்ஷிப்ய பகவந் கேவலம் க்ருபயா வத³ ॥ 4

ஹே, பகவான்! இந்த ஸம்ஸாரமாகிற கட்டிலிருந்து சிரமமில்லாமல் எந்த உபாயத்தினால் விடுபடுவேனோ அதைச் சுருக்கமாக எனக்குத் தூய கருணையினால் சொல்லும்.

[குரு ஆத்மஞானியாயிருப்பதால் அவருக்கு சிஷ்யனால் ஆக வேண்டிய கார்யம் ஒன்றுமில்லை. குருவினுடைய மஹிமைக்குத் தக்கபடி ஸேவை செய்யவும் சிஷ்யனுக்குச் சக்தியில்லை. ஆகையால் குரு தனக்கு எதையும் எதிர்பாராக் கருணையினால் மாத்திரம் அனுக்கிரஹிக்க வேண்டுமென்பதையும் வினயத்துடன் தெரிவிக்கிறான்.]

குரு சொல்கிறார்: -

ஸாத்⁴வீ தே வசந - வ்யக்தி: ப்ரதிபா⁴தி வதா³மி தே ।
இத³ம் ததி³தி விஸ்பஷ்டம் ஸாவதா⁴நமநா: ச்ருணு ॥ 5

நீ வாக்கினால் வெளியிட்டது மிகவும் அழகாகப் பிரகாசிக்கிறது. இதுதான் அது (விடுபடும் வழி) என்று வெகு தெளிவாக உனக்குச் சொல்கிறேன். அதிலேயே மனதைச் செலுத்திக் கேள்.

தத் - த்வமஸ்யாதி³ - வாக்யோத்த²ம் யஜ்ஜீவ - பரமாத்மநோ: ।
தாதா³த்ம்ய விஷயம் ஜ்ஞானம் ததி³த³ம் முக்தி - ஸாத⁴னம் ॥ 6

"தத் த்வம் அஸி" முதலான வாக்கியங்களிலிருந்து ஏற்படுவதுதான் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள ஒரே தன்மையை விஷயமாய்க்கொண்ட ஞானம் எதுவோ, அதுவே இந்த (நீ கேட்ட) விடுதலைக்கு ஸாதனம்.

[சிஷ்யன் மோக்ஷ ஸாதனத்தைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டதையனுஸரித்து குரு வெகு சுருக்கமாய் சொல்லி விட்டார். அதாவது ஜீவனும் - பரமாத்மாவும் வாஸ்தவ ஸ்வரூபநிலையில் ஒன்று தான் என்று உணர்ந்துவிட்டால் மோக்ஷம் ஏற்பட்டுவிடும்.]

சிஷ்யன் கேட்கிறான்: -

கோ ஜீவ: க: பரச்சாத்மா தாதா³த்ம்யம் வா கத³ம் தயோ: ।
தத் - த்வமஸ்யாதி³ வாக்யம் வா கத²ம் தத் ப்ரதிபாத³யேத் ॥ 7

ஜீவன் என்பது யார்? பரமாத்மாவும் யார்? அவ்விருவர்களுக்கும் ஒன்றாயிருக்கும் தன்மைதான் எப்படி? அத்தன்மையை 'தத்த்வம் அஸி' முதலான வாக்கியந்தான், எப்படி எடுத்துக்காட்டும்?

குரு பதில் சொல்கிறார்: -

அத்ர ப்[3]ரூம: ஸமாதா[4]னம் கோ(அ)ந்யோ ஜீவஸ் - த்வமேவ ஹி ।
யஸ் - த்வம் ப்ருச்ச[2]ஸி மாம் கோ(அ)ஹம் ப்[3]ரஹ்மைவாஸி ந ஸம்சய: ॥ 8

இந்த விஷயத்தில் ஸமாதானத்தை (ஸந்தேஹ விளக்கத்தை)ச் சொல்கிறோம். ஜீவன் என்பது வேறு யார்? நீயேதான். என்னைப் பார்த்து 'நான் யார்' என்று எந்த நீ கேட்கிறாயோ (அந்த நீ) பிரஹ்மமாகவே இருக்கிறாய். ஸந்தேஹம் இல்லை.

சிஷ்யன் கேட்கிறான்: -

பதா[3]ர்த[2]மேவ ஜாநாமி நாத்[3]யாபி பகவந் ஸ்பு[2]டம் ।
அஹம் ப்[3]ரஹ்மேதி வாக்யார்த[2]ம் ப்ரதிபத்[3]யே கத[2]ம் வத[3] ॥ 9

ஹே பகவன், இன்னமும் பதங்களின் அர்த்தத்தைக் கூடத் தெளிவாக நான் அறியவில்லை (அப்படியிருக்க) நானே பிரஹ்மம் என்றுள்ள வாக்கியத்தின் அர்த்தத்தை எப்படி நான் அனுபவத்தில் பெறுவேன்? சொல்லுங்கள்.

குரு சொல்கிறார்: -

ஸத்யமாஹ ப4வநத்ர விகா[3]நம் தைவ வித்[3]யதே ।
ஹேது: பதா[3]ர்த[2] - போ[3]தோ[4] ஹி வாக்யார்தா[2]வக[3] தேரிஹ ॥ 10

நீ வாஸ்தவமான விஷயத்தை யே சொன்னாய். இந்த விஷயத்தில் அபிப்ராய பேதம் கொஞ்சமேனும் கிடையாது. ஏனென்றால் இங்கு வாக்கியார்த்தத்தை அறிவதற்கு பதங்களின் அர்த்தத்தை அறிவது தான் காரணமாகும்.

[பதங்களின் அர்த்தம் தெரிந்தால் தான், வாக்கியத்தின் அர்த்தம் புலப்படும் என்று சிஷ்யன் சொன்ன விஷயத்தை குருவும் ஆமோதித்து விட்டு தத், த்வம், அஸி என்ற பதங்களை விளக்க ஆரம்பிக்கிறார். அவைகளில் முதலிலுள்ள'தத்'என்ற பிரஹ்மத்தின் ஸ்வ ரூபமும், கடைசியிலுள்ள 'அஸி' என்பதால் சொல்லப்படும் ஜீவ பிரஹ்ம ஐக்கியமும் கிரஹிக்கப்படுதற்கு சிரமமாயிருக்கு மாதலால், நடுவிலுள்ள 'த்வம்' (நீ) என்கிற ஆத்ம தத்வம் எல்லோருக்கும் ப்ரத்யக்ஷமாகவே இருக்கையில் அதை சிரமமில்லாமலே கிரஹிக்கலாமே என்ற எண்ணத்துடன் மஹாவாக்கியத்திலுள்ள பதங்களின் வரிசையை மாற்றி த்வம், தத், அஸி என்ற கிரமமாக அர்த்தம் சொல்கிறார்.]

அந்தகரண தத்3 - வ்ருத்தி ஸாக்ஷ சைதன்ய விக்3ரஹ: ।
ஆநந்த3- ரூப: ஸத்ய: ஸந் கிம் நாத்மாநம் ப்ரபத்3யஸே ॥ 11

அந்தக்கரணத்தையும் அதன் விருத்திகளையும் பார்த்துக்கொண்டு ஆனந்த ஸ்வரூபனாய் - ஸத்ய ஸ்வரூபனாய் - சைதன்ய ஸ்வரூபனாய் இருந்துகொண்டு தன்னை ஏன் அறிந்து கொள்ள வில்லை?

ஸத்யாநந்த3ஸ்வரூபம் தீ4 - ஸாக்ஷிணம் ஞாந விக்3ரஹம் ।
சிந்தயாத்மதயா நித்யம் த்யக்த்வா தே3ஹாதி3கா3ம் தி4யம் ॥ 12

தேஹம் முதலானவைகளில் உள்ள நான் என்கிற எண்ணத்தை விட்டு விட்டு, ஸத்ய ஸ்வரூபமாய் - ஆனந்த ஸ்வரூபமாய் - புத்திக்கும் ஸாக்ஷியாய் ஞான ஸ்வரூபமாயுள்ளதை நான் என்று எப்பொழுதும் சிந்தித்துக் கொள்.

ரூபாதி3மாந் யத: பிண்ட3ஸ் - ததோ நாத்மா க4டாதி3வத் ।
வியதா3தி - மஹாபூ4த - விகாரத்வாச்ச கும்ப4வத் ॥ 13

இந்த சரீரமானது ரூபம் முதலான துகளுடன் கூடியதாக இருக்கும் தன்மையுடையது என்ற இக்தக் காரணத்தினால் குடம் முதலானவைகளைப் போலவே ஆத்மா அல்ல. ஆகாசம் முதலிய பஞ்ச மஹா பூதங்களின் கார்யமாக இருப்பதாலும் (ஆத்மாவல்ல).

[எப்படி குடம் முதலானது உருவம் முதலிய தோடு இருப்பதாலும் ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், பிருதிவீ என்ற ஐந்து மஹா பூதங்களால் செய்யப்பட்டிருப்பதாலும் ரூபாதிகளற்ற கார்யமல்லாத ஆத்மா ஆகாதோ, அப்படியேதான் இந்த சரீரமும் ரூபாதிகளோடு கூடியிருப்பதனாலும் ஆத்மா ஆகாது என்று யுக்தியினாலேயே தெரிந்துகொள்ளலாம் என்று குரு எடுத்துச் சொல்கிறார்.]

சிஷ்யன் கூறுவது:

அநாத்மா யதி3 பிண்டோ3(அ)ய - முக்தஹேது - ப3லாந் - மத: ।
கராமலகவத் - ஸாக்ஷாத் ஆத்மாநம் ப்ரதிபாத3ய ॥ 14

இந்த சரீரம் (தாங்கள்) சொன்ன யுக்தியின் பலத்தினால் ஆத்மாவல்ல என்று எண்ணப்பட்டதாக இருந்த தேயானால், ஆத்மா வை உள்ளங்கை நெல்லிக் கனிபோல நேராக எடுத்துச் சொல்லுங்கள்.

குரு சொல்கிறார்:

க4ட - த்3ரஷ்டா க4டாத்3 - பி4ந்ந ஸர்வதா2 ந க4டோ யதா2 ।
தே3ஹ - த்3ரஷ்டா ததா3 தே3ஹோ நாஹமித் - யவதா4ரய ॥ 15

எப்படி குடத்தைப் பார்க்கிறவன் குடத்திலிருந்து வேறுபட்டவனாயிருப்பவன் (ஆதலால்) எவ்விதத்திலும் குடமாக ஆக மாட்டானோ, அப்படியேதான் தேஹத்தைப் பார்க்கிறவனான நான் தேஹமாக இருக்க முடியாது என்று நிச்சயம் செய்து கொள்.

ஏவ - மிந்த்[3]ரிய - த்[3]ருக் நாஹ - மிந்த்[3]ரியாணீதி நிச்சிநு |
மநோ - புத்திஸ் - ததா ப்ராணோ நாஹ - மித்யவதா[4]ரய || 16

இப்படியே இந்திரியங்களைப் பார்த்துக்கொண்டிருப்பவனான நான் இந்திரியங்கள் அல்லவென்று தீர்மானம் செய்துகொள். அப்படியே மனசும், புத்தியும், பிராணனும் நான் அல்லவென்று நிச்சயித்துக்கொள்.

ஸங்கா[4]தோ(அ)பி ததா[2] நாஹமிதி த்[3]ருச்ய விலக்ஷணம் |
த்[3]ரஷ்டார - மநுமாநேந நிபுணம் ஸம்ப்ரதா[4]ரய || 17

அப்படியே (தேஹம், இந்திரியங்கள் பிராணன், மனஸ், புத்தி இவைகள் சேர்ந்த) கூட்டமும் நான் அல்லவென்று, பார்க்கப்படுபவைகளுக்கு வேறான லக்ஷணத்தோடு கூடிய பார்க்கிறவனை அனுமானத்தினால் நன்றாகத் தீர்மானம் செய்து கொள்.

தே[3]ஹேந்த்[3]ரியாத[3]யோ பா[4]வா ஹாநாதி[3] - வ்யாப்ருதி - க்ஷமா: |
யஸ்ய ஸந்நிதி[4] - மாத்ரேண ஸோ(அ)ஹமித்யவதா[4]ரய || 18

தேஹம், இந்திரியங்கள் முதலான பதார்த்தங்கள் எவருடைய ஸந்நிதி மாத்திரத்தாலேயே தள்ளுவது முதலான வியாபாரங்களில் சக்தியுள்ளவைகளாக இருக்கின்றன வோ, அவர்தான் நான் என்று தீர்மானித்துக் கொள்.

[ஜடமாக இருக்கும் எந்தப் பதார்த்தத்திற்கும் தானாக எவ்வித சேஷ்டையும் கிடையாது. அதில் ஏதேனும் சேஷ்டை காணப்பட்டால் அதற்குக் காரணமாக ஒரு சேதனன் இருந்தாகவேண்டும். தேஹம், இந்திரியங்கள், மனஸ் முதலானவைகள் அனுகூலமான பதார்த்தத்தை எடுக்கவும், பிரதிகூலமான பதார்த்தத்தை தள்ளவும் செய்கின்றன என்றால் அதற்கெல்லாம் காரணம் சேதனனான ஆத்மா அவைகளுடன் கூடவேயிருப்பதுதான். ஆகையால் ஜட பதார்த்தங்களிலுள்ள வியாபாரங்களுக்கு நிமித்தமாயிருக்கும் சேதனனே ஆத்மா என்று அறியவேண்டும். இந்த ஆத்மா, தான் சேஷ்டியாமலே பிறவற்றைச் சேஷ்டிக்கச் செய்வதற்கு உதாரணமாக ஒரு காந்தத் துண்டு தான் அசையாமலே தன் ஸந்நிதி மாத்திரத்தால் இரும்பை அசையச் செய்வதை இனி சொல்கிறார்.]

அநாபந்ந-விகார: ஸங்-நயஸ்காந்தவதே[3]வ ய: |
புத்[3]த்[4]யாதீ[3]ம்-ச்சாலயேத் ப்ரத்யக் ஸோ(அ)ஹமித்யவதா[4]ரய || 19

இரும்பை ஆகர்ஷிக்கும் காந்தம் மாதிரியே, (தான்) எவ்வித மாறுதலையும்

அடையாமல் இருந்துகொண்டே புத்தி முதலானவைகளை எது சலிக்கும்படி செய்கிறதோ அந்த உள்ளே இருக்கும் தத்வம் தான் நான் என்று தீர்மானித்துக் கொள்.

அஜடா3த்மவதா3பா4ந்தி யத்ஸாந்நித்3யாத் ஜடா3அபி ।
தே3ஹேந்த்3ரிய மந: ப்ராணா: ஸோ(அ)ஹமித்யவதா4ரய ॥ 20

தேஹம் இந்திரியங்கள் மனஸ் பிராணன் இவை ஜடமாக இருந்த போதிலும் கூட எவருடைய ஸந்நிதியால் ஜடத்தன்மையில்லாதவை போல தோன்றுகின்றன வோ அவர் நான் என்று தீர்மானம் செய்துகொள். (ஆத்மாவே இங்கு குறிக்கப்படும் அவர்.)

அக3மந் மே மநோ(அ)ந்யத்ர ஸாம்ப்ரதம் ச ஸ்தி2ரீக்ருதம் ।
ஏவம் யோ வேத3 தீ4வ்ருத்திம் ஸோ(அ)ஹமித்யவதா4ரய ॥ 21

"என்னுடைய மன ஸானது வேறு இடத்தில் போயிருந்தது. இப்போது ஸ்திரமாகச் செய்யப்பட்டுவிட்டது" என்று இவ்விதமாக புத்தியினுடைய வியாபாரத்தை எவர் அறிகிறாரோ, அவர்தான் "நான்" என்று தீர்மானித்துக் கொள்.

ஸ்வப்ந ஜாக3ரிதே ஸுப்திம் பா4வாபா4வெள தி4யாம் ததா2 ।
யோவேத்த்யவிக்ரிய: ஸாக்ஷாத் ஸோ(அ)ஹமித்யவதா4ரய ॥ 22

ஸ்வப்னத்தையும், ஜாக்கிரத்தையும் (விழிப்பையும்) ஸுஷுப்தியையும் (தூக்கத்தையும்) அப்படியே புத்தி விருத்திகளுடைய இருக்கும் தன்மையையும் இல்லாத் தன்மையையும் எவர் ஒரு வித மாறுதலு மடையாமல் நேராகவே அறிகிறாரோ அவர்தான் நான் என்று தீர்மானம் செய்து கொள்.

க4டாவபா4ஸகோ தீ3போ க4டாத3ந்யோ யதே2ஷ்யதே ।
தே3ஹாவபா4ஸகோ தே3ஹீ ததா(அ)ஹம் போ3த4-விக்ரஹ: ॥ 23

குடத்தைத் தெரியப்படுத்தும் தீபமானது குடத்தைத் தவிர வேறு என்று எப்படி ஒப்புக்கொள்ளப்படுகிறதோ, அப்படியே தேஹத்தை பிரகாசிக்கச் செய்கிறவனும் ஞான ஸ்வரூபனுமான தேஹத்தினுடைய'நான்" தேஹத்தைக் காட்டிலும் வேறு.

புத்ர வித்தாத3யோ பா4வா யஸ்ய சேஷதயா ப்ரியா: ।
த்3ரஷ்டா ஸர்வ ப்ரியதம: ஸோ(அ)ஹமித்யவதா4ரய ॥ 24

புத்திரன், தனம் முதலிய பதார்த்தங்கள் எவருக்கு அங்கமாயிருப்பத னாலேயே பிரியமாக இருக்கின்றனவோ, (அங்கியாயிருந்து) பார்த்துக் கொண்டிருக்கும் அந்த ஆத்மா எல்லாவற்றையும் காட்டிலும் மிகவும் பிரியமானவர். அவர் தான் நான் என்று தீர்மானம் செய்துகொள்.

பர-ப்ரேமாஸ்பத³தயா மா ந பூ⁴வமஹம் ஸதா³ ।
பூ⁴யாஸமிதி யோ த்³ரஷ்டா ஸோ(அ)ஹமித்யவதா⁴ரய ॥ 25

நான் இல்லாமலிருக்கக் கூடாது, எப்பொழுதும் இருப்பேனாகவும் என்று மேலான பிரீதிக்கு விஷயமாயிருக்கும் தன்மையினால் எவர் பார்க்கிறவராக இருக்கிறாரோ அவர்தான் நான் என்று நிச்சயமாகத் தெரிந்து கொள்.

[தன்னைத் தவிர பிரீதிக்கு விஷயமாயிருக்கும் வேறு பதார்த்தங்கள் எவ்வளவு பிரியமாயிருந்தபோதிலும் அவைகளை அனுபவிக்கும் மையத்தில் தான் அவை தேவைப்படுமே தவிர, எப்பொழுதுமே தன்னுடன் இருந்தாகவேண்டும் என்று யாரும் நினைப்பது கிடையாது. அனுபவிக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்கும் போதுதான் அவைகளை விட்டுவிடத் தோன்றாதே தவிர, அனுபவித்துவிட்ட பிறகும் அலுத்துப்போன பிறகும், அவைகளால் தொந்தரவும், துக்கமும் ஏற்படுகின்றன வென்பதை உணர்ந்த பிறகும், அவைகளை வைத்துக்கொண்டேயிருக்க வேண்டு மென்று நினைப்பது கிடையாது. தன் விஷயத்தில் மாத்திரம் தான் இல்லாமல் போக வேண்டும்" என்கிற எண்ணம் ஒருநாளும் ஒருவருக்கும் ஏற்படுகிறதில்லை யாதலால், தன்னிடத்தில் வைத்திருக்கும் பிரீதிதான் எல்லாவற்றிற்கும் மேலானது. அவ்விதம் உத்தம பிரீதிக்கு விஷயமாயிருக்கிறதான'தான்" என்பதுதான் ஆத்மா. அதைத் தவிர மற்ற பதார்த்தங்களில் வைத்திருக்கும் பிரீதி சில சமயத்திலேயே இருப்பதாலும், அந்தப் பிரீதியும் கூட தன்னிடத்திலுள்ள பிரீதிக்கு அங்கமாக வேயிருப்பதாலும் அப்பதார்த்தங்கள் யாவும் ஆத்மாவல்ல, அனாத்மாவேயாகும். அவைகளை அனுபவிக்கிறவரே ஆத்மா. அவர்தான் நான்.]

ய: ஸாக்ஷி-லக்ஷணோ போ³த⁴ஸ்-த்வம்-பதா³ர்த³: ஸ உச்யதோ ।
ஸாக்ஷித்வமபி போ3த்3த்4ருத்வ - மவிகாரிதயா(ஆ)த்மந: ॥ 26

ஸாக்ஷியாயிருக்கும் லக்ஷணத்துடன் உள்ள அறிவு எதுவோ, அதுதான்'தவம்'(நீ) என்கிற பதத்தின் பொருள் என்று சொல்லப்படுகிறது. ஆத்மாவினுடைய ஸாக்ஷியாயிருக்கும் தன்மை என்பது கூட, தான் எவ்வித மாறுதலையும் அடையாமலே அறியும் தன்மையேயாகும்.

தே³ஹேந்த்³ரிய மந: ப்ராணாஹங்க்ருதிப்⁴யோ விலக்ஷண: ।
ப்ரோஜ்ஜி²தாசேஷ-ஷட்3-பா4வ விகாரஸ் - த்வம் - பதாபித: ॥ 27

தேஹம், இந்திரியங்கள், மனஸ், பிராணன், அஹங்காரம் இவைகளைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், பதார்த்தங்களுக்கு ஏற்பட்ட ஆறுவித விகாரங்கள் யாவும் அற்றதாகவும் உள்ளது தான் "த்வம்" (நீ) என்கிற பதத்தினால் குறிக்கப்படுவது.

[தேஹாதிகள் ஜடமாகவும் மாறுதலுள்ளவையாகவும் இருக்கும். தன்மை யுள்ளவை. ஆத்மா ஞான ஸ்வரூபமாய் எவ்வித மாறுதலும் அற்றது. மாறுதல்

ஆறுவிதம். அவையாவன: பிறவி (உண்டாவது), இருப்பு (வெளிப்படத் தோன்றுவது), வளர்ச்சி, உருமாற்றம், குறைவு, நாசம்.]

த்வமர்த[2]- மேவம் நிச்சித்ய தத[3]ர்த[2]ம் சிந்தயேத் புந: ।
அதத்[3]-வ்யாவ்ருத்தி ரூபேண ஸாக்ஷாத் விதி[4]முகே[2]ந ச ॥ 28

இவ்விதமாக" த்வம்" (நீ) என்கிற பதத்தின் அர்த்தத்தைத் தீர்மானம் செய்து கொண்டு பிறகு "தத்" (அது) என்கிற பதத்தின் அர்த்தத்தை, எது "அது" அல்லவோ அதிலிருந்து விலக்கிக்காட்டும் முறையாகவும், நேராகவே விதித்துக் காட்டும் முறையாகவும் சிந்திக்க வேண்டும்.

[இதுவரை "த்வம்" - “நீ" என்பதால் குறிப்பிடப்படும் ஜீவனுடைய ஸ்வருபத்தை சொல்லிவிட்டு இனி '"தத்"" அது'என்னும் பிரஹ்மத்தின் ஸ்வ ரூபத்தைப்பற்றி சொல்ல ஆரம்பிக்கிறார். ஜீவனைப்பற்றிச் சொல்லும் போது ஜீவனுடைய ஸ்வ ரூபத்தில் தேஹம் முதலான வைகள் சேராததினால் அவைகளை விலக்கி, சுத்தமான சைதன்ய ஸ்வரூபமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று இருவிதமாகவும் வர்ணித்ததுபோலவே, எதெல்லாம் பிரஹ்மமில்லையென்று தெரிந்து கொண்டு, பிரஹ்மத்தின் ஸ்வரூபம் எத்தகையது என்று இரு விதமாகவும் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதைக் காட்டுகிறார். விலக்கிக் காட்டும் முறையை அடுத்துவரும் 29 - வது சுலோகத்திலும், குறிப்பிட்டுக்காட்டும் முறையை அதற்கடுத்த 30 - வது சுலோகத்திலும் கண்டிருக்கிறார்.]

நிரஸ்தாசேஷ-ஸம்ஸார-தோ[3]ஷோ(அ)ஸ்தூ[2]லாதி[3]லக்ஷண: ।
அத்[3]ருச்யத்வாதி[3]-கு[3]ணக: பராக்ருத-தமோமல: ॥ 29

நிரஸ்தாதிசயாநந்த[3] ஸத்ய: ப்ரஜ்ஞாந-விக்[3]ரஹ: ।
ஸத்தா-ஸ்வலக்ஷண: பூர்ண: பரமாத்மேதி கீ[3]யதே ॥ 30

ஸம்ஸார தோஷங்கள் யாவும் இல்லாதவராய், 'ஸ்தூலமாக இருப்பவரில்லை, என்பது முதலியவைகளை லக்ஷணமாக உள்ளவரால், பார்க்கப்படும் தன்மை முதலான குணங்கள் இல்லாதவராய், அஞ்ஞானமாகிற அழுக்கை விலக்கினவராய் (29), எதற்கு மேல் ஆனந்தம் கிடையாதோ அவ்வித ஆனந்த ஸ்வரூபியாய், ஸத்யஸ்வபாவமுடையவராய், ஞான ஸ்வரூபியாய், இருப்பு என்பதையே தன் லக்ஷணமாக உடையவராய், நிறைந்தவராய் இருப்பவர் பரமாத்மா என்று சொல்லப்டுகிறார் (30).

ஸர்வஜ்ஞத்வம் பரேசத்வம் ததா[2] ஸம்பூர்ண-சக்திதா ।
வேதை[3]: ஸமர்த்[2]யதே யஸ்ய தத்[3]-ப்[3]ரஹ்மேத்யவதா[4]ரய ॥ 31

எவருக்கு எல்லாவற்றையும் அறியும் தன்மை, மற்றதையெல்லாம் ஆளும்

தன்மை, அப்படியே பரிபூர்ணமான சக்தியோடு கூடியவராய் இருத்தல் - இவையெல்லாம் வேதவாக்கியங்களினால் பொருத்தப்படுகிறதோ, அதுவே (அவரே) பிரஹ்மம் என்று நன்கு தெரிந்து கொள்.

யஜ்-ஜ்ஞாநாத் ஸர்வவிஜ்ஞாநம் ச்ருதிஷு ப்ரதிபாதி³தம் ।
ம்ருதா³த்³யநேக-த்³ருஷ்டாந்தைஸ்-தத்³-ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ॥ 32

"எதை அறிவதனால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஏற்படுமோ" என்று மண் முதலான பல வித உதாரணங்களால் வேத வாக்கியங்களில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதுவே பிரஹ்மம் என்று தீர்மானித்துக்கொள்.

[காரணமான மண்ணை அறிந்துவிட்டால் அதனால் செய்யப்பட்ட குடம் முதலானவைகளெல்லாம் மண்தான் என்று எப்படி அறியப்பட்டு விடுகிறதோ அதே மாதிரியாக ஜகத்தில் இருப்பதாகத் தோன்றும் ஸகல பதார்த்தங்களும் இருப்பையே ஸ்வ ரூபமாயுடைய பிரஹ்மத்தினாலேயே செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிந்து விடலாமென்று சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.]

யதா³நந்த்யம் ப்ரதிஜ்ஞாய ச்ருதிஸ்-தத்-ஸித்³த⁴யே ஜகெ³ள ।
தத்-கார்யத்வம் ப்ரபஞ்சஸ்ய தத்³ ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ॥ 33

எதனுடைய எல்லையற்ற தன்மையை வேதமானது பிரதிக்ஞை செய்துவிட்டு அந்த எல்லையற்ற தன்மை ஸித்திப்பதற்காக பிரபஞ்சத்திற்கு அதனாலேயே ஏற்பட்டது என்ற தன்மையைச் சொல்லிற்றோ, அதுவே பிரஹ்மம் என்று தீர்மானித்துக்கொள்.

விஜிஜ்ஞாஸ்யதயா யச்ச வேதா³ந்தேஷூ முமுக்ஷபி⁴: ।
ஸமர்த்²யதே(அ)தியத்நேந தத்³-ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ॥ 34

எது மோக்ஷத்தில் இச்சையுள்ளவர்களால் நன்கு அறியப்பட வேண்டியதாக உபநிஷத்துக்களில் வெகு தீவிரமாக வற்புறுத்தப்படுகிறதோ, அதுவே பிரஹ்மம் என்று தீர்மானமாகத் தெரிந்து கொள்.

ஜீவாத்மநா ப்ரவேசச்ச நியந்தருத்வம் ச தாந்-ப்ரதி ।
ச்ரூயதே யஸ்ய வேதே³ஷு த்த்³-ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ॥ 35

எதற்கு ஜீவரூபமாக பிரவேசமும், அந்த ஜீவர்கள் விஷயமாய் நியமனம் செய்யும் தன்மையும் வேதங்களில் காண்கிறதோ அதுவே பிரஹ்மம் என்று தீர்மானித்துக்கொள்.

[சரீரத்தை ஸ்ருஷ்டி செய்த பரமாத்மாவேதான் ஜீவன் என்ற பெயருடன் அதற்குள் நுழைந்தார் என்று உபநிஷத் வாக்கியம் ஸ்பஷ்டமாகச் சொல்லி

யிருப்பதால் ஜீவனுக்கும் பிரஹ்மத்திற்கும் ஸ்வருபத்தில் பேதம் கிடையாது. சுத்த ஸ்வரூபத்தை விட்டு வியாவஹாரிக தசையில் அவ்விரண்டும் வெவ்வேறு என்று வைத்துக்கொண்டால், ஜீவன் நியமிக்கப்படுகிறவனாகவும், பிரஹ்மம் நியமனம் செய்கிறதாகவும் ஆகும். அந்த நியமனம் எவ்விதமென்று அடுத்த சுலோகத்தில் விளக்குகிறார்.]

கர்மணாம் ப²ல-தா³த்ருத்வம் யஸ்யைவ ச்ரூயதே ச்ருதௌ ।
ஜீவாநாம் ஹேது கர்த்ருத்வம் தத்³-ப்³ரஹ்மேத்யவதா⁴ரய ॥ 36

ஜீவர்களுடைய புண்ணிய பாப கர்மாக்களுக்கும் பலனைக் கொடுப்பவரா யிருக்கும் தன்மையும், அவர்களுக்குக் கர்மாக்களைச் செய்யும்படி செய்கிறவரா யிருக்கும் தன்மையும், எவருக்கே உண்டென்று வேதத்தில் காண்கிறதோ அதுவே பிரஹ்மம் என்று தீர்மானித்துக்கொள்.

[ஜீவர்களிடத்தில் கர்த்ருத்வம், போக்த்ருத்வம், அதாவது கர்மாக்களைச் செய்யக் கூடிய தன்மையும், கர்மாக்களின் பலனான ஸுக துக்கங்களை அனுபவிக்கக்கூடிய தன்மையும் இருப்பதாக எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் அந்த இரு விதத் தன்மைகளும் ஜீவர்களுக்குத் தம்மால் ஏற்பட்டதில்லை. அவ்விதம் இருந்தால், தான் நினைத்தபடியெல்லாம் செய்யவேண்டும், வேண்டிய ஸுகத்தை மாத்திரம் அனுபவிக்கவும், வேண்டாத துக்கத்தை அனுபவிக்காம லிருக்கவும் ஸ்வாதந்திரியம் இருக்க வேண்டும். இவை வாஸ்தவத்தில் இல்லை யென்பது ஸகல ஜீவர்களுக்கும் அனுபவ ஸித்தம். ஆகையால் கர்மாவைச் செய்வதிலேயும், பலனை அனுபவிப்பதிலேயும் ஜீவர் பராதீனம் என்று தெரிகிறது. யாருக்குப் பராதீனம் என்ற கேள்வி ஏற்படும். எவருடைய அனுக்ரஹத்தினால் கர்மாக்களைச் செய்யும சக்தியும், பலன்களை அனுபவிக்கும் சக்தியும் ஜீவர்களுக்கு ஏற்படுகிறதோ அதாவது ஜீவர்கள் கர்மாவைச் செய்வதற்கு எவர் உதவுகிறாரோ, எவர் செயலுக்குத் தக்கபடி ஸுக துக்கங்களைக் கொடுக்கிறாரோ அப்படிப் பட்டவரான பிரஹ்மத்துக்குத்தான் பராதீனம் என்று அறிந்து கொள்ள வேண்டும் என்கிறார்.

(இதுவரை சொன்ன ப்ரஹ்மமான "தத்" லக்ஷணத்தில், மாயா ஸம்பந்த மற்ற, காரியமற்ற'நிர்குண ப்ரஹ்மம்'மட்டுமின்றி, அதுவே மாயையோடு கூடி ஈச்வரனாகக் காரியம் செய்யும்'ஸகுண ப்ரஹ்ம'நிலையும் சேர்த்துப் பேசப்பட்டிருக்கிறது.]

தத்-த்வம் பதா³ர்தெ³ள நிர்ணீதௌ வாக்யார்த²ச்சிந்த்யதே(அ)து⁴நா ।
தாதாத்ம்ய-மத்ர வாக்யார்த²ஸ்-தயோரேவ பதா³ர்த²யோ: ॥ 37

["தத்", "தவம்" இரண்டும் விளக்கப்பட்டு விட்டதால் இனி" அஸி" (இருக்கிறார்) என்பது ஜீவ - ப்ரம்ம ஐக்யத்தைக் குறிப்பதை விளக்குகிறார்.)

"தத்" (அது) "த்வம்" (நீ) என்கிற இரண்டு பதங்களுடைய அர்த்தங்கள் நிர்ணயிக்கப்பட்டு விட்டன. இப்பொழுது அப்பதங்கள் சேர்ந்த வாக்கியத்தின் அர்த்தம் சிந்திக்கப்படுகிறது. அந்த இரண்டு பதங்களின் அர்த்தங்களுக்குமே (அவை) ஒரே ஸ்வரூபமாயிருக்கும் தன்மை இங்கு வாக்கியத்தின் அர்த்தம்.

[முன் 10 - ஆவது சுலோகத்தில், பதங்களுடைய அர்த்தம் நன்கு தெரிந்து விட்டதால், அப்பதங்கள் சேர்ந்து உண்டாயிருக்கிற வாக்கியத்தின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்ள முடியுமென்று சொன்னதையனுஸரித்து இதுவரை "தவம்" "தத்": என்கிற பதங்களின் அர்த்தத்தை விளக்கிவிட்டபடியால், இனி வாக்கியத் தின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டுவிடலாமென்று ஏற்படுகிறது. ஆனால் இந்த மஹா வாக்கியத்தில், இரண்டு பதங்களின் அர்த்தங்களான ஜீவனுக்கும் பிரஹ்மத்திற்கும் அபேதம் சொல்வதாக " அஸி" (இருக்கிறாய்) என்ற பதத்தினால் தெரிகிறது. வெவ்வேறான லக்ஷணங்களோடு கூடின இரண்டு பதார்த்தங்கள் வெவ்வேறாக இருப்பது தான் நியாயமே தவிர, இரண்டும் ஒன்று தான் என்பது எப்படி என்று ஸந்தேஹம் ஏற்படுவதால் அதைக் கொஞ்சம் விவரிக்கவேண்டி வருகிறது.]

ஸம்ஸர்கோ[3] வா விசிஷ்டோ வா வாக்யார்தோ[3] நாத்ர ஸம்மத: |
அக[2]ண்டைக ரஸத்வேந வாக்யார்தோ[2] விது[3]ஷாம் மத: || 38

இந்த இடத்தில் ஸம்ஸர்க்கமாவது, விசிஷ்டமாவது வாக்கியத்தின் அர்த்தமாக ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. அகண்டமாய் ஏகரஸமாயிருப்பதே வாக்கியத்தின் அர்த்தமென்பது தான் வித்வான்களுக்கு ஸம்மதமாகும்.

[ஒரு பதார்த்தத்தைப்பற்றிச் சொல்லவேண்டுமானால் ஐந்து விதமாகத்தான் சொல்ல முடியுமென்று வித்வான்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

1. **ஜாதி** - அது இந்த இனத்தைச் சேர்ந்தது: ராமர் க்ஷத்திரியர்.
2. **குணம்** - அதற்குள்ள ஏதேனும் குணத்தைக் குறிப்பிடுவது: ராமர் உதாரமாயிருப்பவர்.
3. **கிரியை** - அதற்குள்ள ஏதேனும் கிரியையைக் குறிப்பிடுவது: ராமர் ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பவர்.
4. **ஸம்பந்தம்** - அதற்கும் வேறு பதார்த்தத்திற்கும் உள்ள ஸம்பந்தத்தைக் கூறுதல்: ராமர் தசரத புத்திரன்.
5. **ஸம்ஜ்ஞை** - அதற்கு வைக்கப்படும் பெயர்: இவர் ராமர் என்ற பெயருடையவர்.

இவ்வைந்தில் ஸம்ஜ்ஞை என்பது வியவகாரத்திற்காகக் கல்பிக்கப்பட்டிருப்பதால் அதற்கு அர்த்தத்தில் தாத்பர்யமில்லை - ஜாதி, குணம், கிரியை இவைகளைச் சொல்லும் சப்தங்களின் அர்த்தம் அந்தப்

பதார்த்தத்தினிடத்தில் அன்வயித்துக்கொண்டு, அதை மற்ற பதார்த்தங்களிலிருந்து விலக்கிக் காட்டுவதால் அவைகளை விசேஷணம் என்று சொல்வார்கள். விசேஷ முள்ளதே விசிஷ்டம். அப்பதார்த்தத்தில் ஒட்டாமல் வேறு பதார்த்தத்திற்கும் அதற்குமுள்ள ஸம்பந்தத்தைச் சொல்லி விளக்குகிற ஸம்பந்தம் என்கிற நான்காவது முறையை ஸம்ஸர்க்கம் என்பார்கள். பிரஹ்மமென்பது ஏகமாகவேயிருப்பதால் அதில் ஜாதியைச் சொல்லும் சப்தத்திற்கு இடமில்லை; நிர்குணமாயிருப்பதால், நிஷ்கிரியமாயிருப்பதால் கிரியா வாசக சப்தத்திற்கும் இடமில்லை; ஆகையால் இவை யாவும் பிரஹ்மத்திற்கு விசேஷணமாகாததினால் பிரஹ்மத்தைத் விசிஷ்டமென்று சொல்வதற்கில்லை. பிரஹ்மத்தைத் தவிர வேறு பதார்த்தமே கிடையாததினால் இன்னொரு பதார்த்தத்தின் ஸம்பந்தத்திற்கும் இடமில்லை; ஆகையால் ஸம் ஸர்கத் திற்கும் வழியில்லை. ஸம்ஜ்ஞை என்பது வெறும் கல்பிதமான பெயரானதினால் அதை மாத்திரம் சொல்லி பதார்த்தத்தை விளக்க முடியாது. இவ்விதமாக சாதாரணமாகச் சொல்லக் கூடிய ரீதியில் எவ்வகையிலும் பிரஹ்மத்தைச் சொல்ல முடியாமலிருக்கிறது. ஆனால் உபநிஷத்திலோ"நீ" என்கிற சப்தத்தையும் "அது" என்கிற சப்தத்தையும் சேர்த்து ஒன்றுபடுத்தி வாக்கியம் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு என்ன தாத்பர்யம் என்றால், 'நீ', என்ற சப்தத்தால் குறிக்கப்படும் அர்த்தத்தில்'நீ" என்கிற அம்சத்தை விட்டு விட்டும் இரண்டு பதார்த்தங்களிலும் மிஞ்சுகிறதான, இரண்டிற்கும் பொதுவான, வேற்றுமையற்ற ஒரே விதமாயுள்ள, சைதன்யத்தையே கிரஹித்தால், அப்பொழுது தான் வாக்கியம் சரியான அர்த்தத்தைக் கொடுக்கும். அவ்விதம் அர்த்தம் செய்வதின் பிரகாரத்தை மேல் சுலோகங்களில் காட்டுகிறார்.]

ப்ரத்யக்3-போ3தோ4ய ஆபா4தி ஸோ(அ)த்3வயாநந்த2-லக்ஷண: |
அத்3வயாநந்த3- ரூபச்ச ப்ரத்யக்3-போ3தை4க-லக்ஷண: || 39

உள்ளிருக்கும் ஞான ஸ்வ ரூபியாக எவர் பிரகாசிக்கிறரோ, அவரே இரண் டற்று ஆனந்தமாயிருக்கும் தன்மை உள்ளவர். இரண்டற்று ஆனந்தமா யிருக்கும் தன்மை உள்ளவர்தான், உள்ளிருக்கும் ஞானமே ஸ்வரூபமாயுள்ளவர்.

[உள்ளேயிருப்பதாகத் தோன்றும் ஜீவசைதன்யமும், இரண்டற்று வியாபகமாயுள்ள பிரஹ்ம சைதன்யமும் ஒன்று தான். மோதிரம் தங்கம் என்று சொல்லலாம்; ஆனால் தங்கம் மோதிரம் என்று சொல்லமுடியாது. அதுமாதிரி இங்கே யில்லையென்று காட்டுவதற்காக, இரண்டற்று வியாபகமாயுள்ள பிரஹ்மசைதன்யமேதான் உள்ளேயிருப்பதாகத் தோன்றும் ஜீவசைதன்யமும் என்று மாற்றியும் உபதேசிக்கிறார்.]

இத்2த-மந்யோந்ய-தாதா3த்ம்ய-ப்ரதிபத்திர்-யதா3 ப4வேத்
அப்3ரஹ்மத்வம் த்வமர்த2ஸ்ய வ்யாவர்தேத ததை3வ ஹி || 40

தத3ர்த2ஸ்ய ச பாரோக்ஷ்யம் யத்3யேவம் கிம் தத: ச்ருணு |
பூர்ணாநந்தை3 கரூபேண ப்ரத்யக்3-போ3தோ4(அ)வதிஷ்ட2தே || 41

இவ்விதமாக ஜீவனுக்கும், பிரஹ்மத்திற்கும் ஒருவருக்கொருவர் உள்ள ஒரே தன்மையின் ஞானம் எப்பொழுது ஏற்படுமோ, அப்பொழுதே த்வம்'(நீ) என்பதன் அர்த்தமான ஜீவனுக்கு ப்ரஹ்மமாயிருக்கும் தன்மை இல்லை என்பது விலகிவிடும். அப்படியே'தத்'(அது) என்பதன் அர்த்தமான பிரஹ்மத்திற்கு நேரில் தெரியாத தன்மை உள்ளது என்பதும் விலகிவிடும். இவ்விதம் விலகினதே பாஜல் அதிலிருந்து என்ன கிடைக்கிறது? சொல்கிறேன்; கேள்! உள்ளிருக்கும் ஞான ஸ்வரூபம் பரிபூர்ணமான ஆனந்த ஸ்வரூபமாகவே இருந்துவிடும். (தெரிந்துவிடும்.)

தத்-த்வமஸ்யாதி³-வாக்யம் ச தாதா³த்ம்ய ப்ரதிபாத³னே
லக்ஷ்யௌ தத்-த்வம் பதா³ர்தௌ²ள த்³வாவுபாதா³ய ப்ரவர்ததே ॥ 42

"தத் த்வம் அஸி" முதலான வாக்கியங்கள் ஜீவனுக்கும் - பிரஹ்மத்திற்கும் ஒற்றுமையை எடுத்துச்சொல்லும் விஷயத்தில்'தத்'த்வம் (அது, தி) என்ற பதங்களின் அர்த்தமாக இரண்டு லக்ஷ்யார்த்தங்களையும் தான் எடுத்துக் கொண்டு பிர விருத்திக்கின்றன.

[ஒரு பதத்திற்கு அர்த்தம். இருவகைப்படும் வாச்யார்த்தம், லக்ஷ்யார்த்தம் என்று. அந்தப் பதத்திற்கு சாதாரணமாக ஏற்பட்ட அர்த்தம் வாச்யார்த்தம் எனப்படும். மாட்டைப் பார்த்து மாடு என்று சொல்வதுபோல், சாதாரணமாக ஏற்பட்ட அர்த்தம் பொருந்தாத போது, அந்தப் பதத்தினால் குறிக்கப்படும் அர்த்தம் லக்ஷ்யார்த்தம் எனப்படும். மனுஷ்யனைப்பார்த்து மாடு என்று சொன்னால் அவன் மாடாக இல்லை என்பது நன்கு தெரிகிறபடியால், அவனிடம் மாட்டின் தன்மையான புத்தியின்மையோ, முரட்டுத்தன மோ இருக்கிறதென்று அர்த்தம் செய்து கொள்வது போல். இவ்விடத்தில் "அது", "நீ" என்கிற பதங்களுக்கு தாதராணமாயுள்ள வாச்யார்த்தத்தை எடுத்துக்கொண்டால் அவ்விரு பதங்களின் அர்த்தங்களுக்கும் அபேதம் இருக்க முடியாததனால் சைதன்யமென்ற லக்ஷ்யார்த்தையே எடுத்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது. இப்படியே மற்ற வாக்கியங் நிலம் வாச்யார்த்தத்தை விட்டு லக்ஷ்யார்த்தத்தையே கிரஹிக்க வேண்டும். பார்த்தத்தையே கிரஹிக்க வேண்டுமென்ற விஷயத்தை இந்த சுலோகத்தில் சொல்லிவிட்டு வாச்யார்த்தத்தை விட வேண்டுமென்பதை அடுத்த சுலோகத்தில் சொல்லுகிறார்.]

ஹித்வா த்³வௌ சப³ளௌ வாச்யௌ வாக்யம் வாக்யார்த²-போ³த⁴நே ।
யதா² ப்ரவர்ததே(அ)ஸ்மாபி⁴ஸ்-ததா² வ்யாக்²யாத-மாத³ராத் ॥ 43

மஹா வாக்கியமானது, வாக்கியத்தின் அர்த்தத்தை போதிப்பதில் எந்தப் பிரகாரமாக வாச்யார்த்தங்களான கலந்துள்ள தத்வங்கள் இரண்டையும் விட்டு வர்த்திக்கிறதோ, அந்தப் பிரகாரமாக எங்களால் கவனத்துடன் வியாக்யானம் செய்யப்பட்டது.

[வாச்யார்த்தம் சித்தமான தத்வமல்லவாதலால் கலப்பு என்று அதைக் குறிப்பிட்டு, சுத்த தத்வததைக கலப்புள்ளதாகச் செய்த அம்சங்களை விலக்க

வேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்த அம்சங்கள் "த்வம்" (நீ) என்கிற பதத்தின் அர்த்தத்தில் எவையென்பதை அடுத்த சுலோகத்திலும், “தத்” (அது) என்கிற பதத்தின் அர்த்தத்தில் எவையென்பதை அதற்கடுத்த சுலோகத்திலும் விவரித்துச் சொல்லுகிறார்.]

ஆலம்ப[3]நதயா பா[4]தி யோ(அ)ஸ்மத் ப்ரத்யய சப்த[4]யோ: |
அந்த: கரண ஸம்பிந்த போத[4]: ஸ த்வம்பதா[3]பி[4]த[4]: || 44

எது “நான்" என்கிற எண்ணத்திற்கும், 'நான்' என்கிற சப்தத்திற்கும் ஆதாரமாக விளங்குகிறதோ, அந்த அந்தக்கரணத்துடன் கலந்துள்ள அறிவே "த்வம்" (நீ) என்கிற பதத்தினால் சொல்லப்படுவது.

[உலகத்தில் சாமான்யமாக எல்லோரும் இங்கு “நீ" எனப்படும் ஜீவனை "நான், நான்” என்று சொல்கிறார்கள். அவ்விதம் உபயோகிக்கும் போது "நான் பார்க்கிறேன். கேட்கிறேன்" என்று சொல்லும் போது இந்திரியங்களையும், "நான் பருமனாக இருக்கிறேன், இளைத்திருக்கிறேன்" என்று சொல்லும் போது தேஹத்தையும், "நான் இன்புறுகிறேன், துன்புறுகிறேன்” என்னும் போது மநோ புத்திகளையும் நான் என்பதின் அர்த்தத்தில் சேர்த்துவிடுகிறார்கள். ஆனால் இப்படிக் குறிப்பிடுகையில் அந்தக்கரணம், இந்திரியங்கள், தேஹம் இவையெல்லாம் ஜடமாயிருப்பதால் இவைகளுக்கு அறிவு கிடையாது. சைதன்ய ஸ்வரூபமான ஆத்மாவின் சம்பந்தத்தினாலேயே இவை சேஷ்டிக்கின்றன. ஆகையால் நாம் சாதாரணமாய் "நீ" என்கிற பதத்தினால் சுத்தமான சைதன்ய ஸ்வரூபமான ஆத்மாவையும், ஜட ஸ்வரூபமான தேஹாதிகளாகிற அனாத்மாக்களையும் சேர்த்தே கலந்து விவரிக்கிறோம். இவ்விதம் நீ என்ற சப்தத்தினால் சாமான்யமாய்ச் சொல்லப்படுவது சுத்த ஆத்மாவல்ல. கலப்பு ஆத்மாதான்.]

மாயோபாதி[4]ர்-ஜக[3]த்[3]யோநி: ஸர்வஜ்ஞத்வாதி[3]-லக்ஷண: |
பாரோக்ஷ்ய-சப[3]ள: ஸத்யாத்[3]மக-ஸ்தத்-பதா[3]பி[4]த[4]: || 45

மாயையே உபாதியாய் உடையதாயும், ஜகத்திற்குக் காரணமாயும், ஸர்வக்ஞத்வம் முதலான துகளை லக்ஷணமாக உள்ளதாயும், பிரத்யக்ஷமல்லாதது என்று தோன்றக்கூடிய கல்ப்புள்ள தாயும், ஸத்யமாயிருக்கும் தன்மை முதலானவைகளை ஸ்வ ரூபமாய்க் கொண்டதாயும் இருப்பது 'தத்' (அது) என்கிற பதத்தினால் சொல்லப்படுவது.

[முந்தின சுலோகத்தில் கலப்புள்ள "நீ” யை வர்ணித்துவிட்டு இந்த சுலோகத்தில் கலப்புள்ள "அது” வை வர்ணிக்கிறார். 'தத்' (அது) என்கிற பதத்தின் அர்த்தம் ஸத்யமாயும்; ஞானமாயும், அனந்தமாயும் ஆனந்தமாயும் உள்ள சுத்த சைதன்யமேயாகும். ஞான ஸ்வரூபமாய் ஸ்வயம் பிரகாசமாயிருக்கும் இவ்வஸ்து உண்டா இல்லையா என்று இல்லையா என்று கூட சந்தேகமேற்படும்படி மறைந்து பிரத்யக்ஷமாய் அறியக்கூடாததுபோல் ஆகிவிட்டது. இதுவே அதிலுள்ள கலப்பு.

இவ்விதம் ஏற்பட்டதற்குக் காரணம் என்னவென்றால் மாயை என்பது இவ்வஸ்துவிற்கு உபாதியாக ஏற்பட்டது. பிரஹ்மத்தினிடமிருப்பதாகத் தோன்றும் மாயா சக்தியினாலேயே பிரஹமம் மறைபட்டுவிடுகிறது. பிரஹ்மம் மறைபட்டதுடன் நிற்காமல் மாயையான ஜகத்தையும் தோன்றும்படிச் செய்கிறது. ஒருவித மாறுதலையும் அடையாமல் ஏகரூபமாயிருக்கும் கயிறு எப்படி அதில் தோன்றும் பாம்புக்குக் காரணம் என்று விவரிக்கப்படுகிறதோ, அப்படியே தான் பிரஹ்மத்தை ஜகத்திற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும். பாம்பு கயிற்றிலிருந்து உண்டானது மாத்திரம் அல்ல, அது இருப்பதும் கயிற்றின் இருப்பினால் தான். அது மறைவதும் கயிற்றிற்குள் தான். இவ்விதமாக பாம்பின் உத்பத்தி, ஸ்திதி, லயம் எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பது கயிறே. அப்படியேதான் ஜகத்தின் உத்பத்தி, ஸ்திதி, லயம் இவைகளுக்குக் காரணமா யிருப்பது பிரஹ்மமே. ஜகத்தில் உள்ள அனந்த வைசித்திரியங்களுக்கும் காரண மாயிருக்கும் பிரஹ்மம் ஸர்வக்ஞனாயிருந்தே தீரவேண்டும். எல்லாவற்றையும் அறிந்திருந்தால் மாத்திரம் போதாது. தோன்றினதையெல்லாம் கார்யத்தில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய சாமர்த்தியமுள்ளவராக இருக்கவேண்டும். ஆகையால் அவர் ஸத்ய ஸங்கல்பராயும், ஸர்வசக்தராயும் இருந்தாக வேண்டும். அப்பதார்த்தங்களை விட்டு விலகியிராமல் அவைகள் இருக்குமிடத்திலேயே இருக்க வேண்டியதால் ஸர்வ வியாபகமாகவும் இருந்தாக வேண்டும். இவ்விதமாக பிரஹ்மத்தை ஜகத் காரணமென்று வைத்துக்கொண்டால், அப்பிரஹ்மத்திற்கு ஸர்வக்ஞத்வம் ஸத்ய ஸங்கல்பத்வம், ஸர்வசக்தத்வம், ஸர்வ வியாபகத்வம் முதலானவைகளெல்லாம் உண்டென்றே சொல்லவேண்டும். ஆனால் இவை யாவும் ஜகத்காரணமாக பிரஹ்மத்தை நினைக்கும் போதுதான் உண்டு. ஜகத் காரணமாக பிரஹ்மம் தோன்றுவது மாயையை உபாதியாக அடைந்ததினால் தான். மாயையினாலேயே பிரத்யக்ஷமில்லாத வஸ்துவாகத் தோன்றுகிறது. இவ்விதமாகப் பலவிதக் கலப்போடு கூடியதும், ஆனால் வாஸ்தவத்தில் ஸத்ய ஞானானந்த ஸ்வரூபமாயுமுள்ள வஸ்து எதுவோ அதுவே "தத்" (அது) என்கிற பதத்தினால் சாதார்ணமாகச் சொல்லப்படுகிறது. முன் சுலோகத்தில் 'த்வம்" பதத்தின் வாச்யார்த்தத்தையும், இந்த சுலோகத்தில் "தத்" பதத்தின் வாச்யார்த்தத்தையும் வர்ணித்து விட்டு அவ்வர்த்தங்களை அப்படியே வைத்துக்கொண்டால், இரண்டிற்கும் அபேதம் சொல்வது சாத்தியமில்லை என்பதை அடுத்த சுலோகத்தில் விளக்குகிறார்.]

ப்ரத்யக்-பரோக்ஷதைகஸ்ய ஸத்[3]விதீயத்வ-பூர்ணதா |
விருத்[4]யதே யதஸ்-தஸ்மாத் லக்ஷணா ஸம்ப்ரவர்ததே || 46

ஒரே பதார்த்தத்திற்கு உள்ளே இருந்து பிரத்யக்ஷ மாயிருப்பதும், வெளியில் இருந்து பிரத்யக்ஷமில்லாமலிருப்பதும் (அப்படியே) இரண்டாவதுள்ள தாயும் பரிபூர்ணமாயும் இருப்பதும், பரஸ்பரம் விரோதமாயிருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் லக்ஷணையானது ஏற்படுகிறது.

[44வது ஸ்லோகத்தில் ஜீவனுடைய ஸ்வபாவத்தைச் சொல்லும் போது அந்தக்கரணத்துடன் கலந்தவனென்று சொன்ன படியால் தேஹாதிகளுக் கெல்லாம்

உள்ளேயிருப்பவன் என்றும், பிரதிப் பிராணிக்கும் தனித்தனியே அந்தக்கரணமிருப்பதால் ஜீவர்கள் அநேகர் என்றும், நான் நான் என்று பிரகாசிக்கிறவன் என்றிருப்பதால் அவனையறிவதற்கு வேறு பிரமாணம் தேவை யன்னியில் ஸ்வயம் பிரகாசமாயிருப்பவன் என்றும், அத்தக்கரணமென்ற வரம்புக் குட்பட்டுவிட்டபடியால், ஜீவனுடைய ஞான மோ - சக்தியோ - ஆனந்தமோ எல்லாம் சுருங்கி விட்டனவென்றும். சொல்லப்பட்டதாக ஆகிறது. அடுத்த சுலோகத்தில் பிரஹ்மம் ஜகத் காரணமென்றும், வியாபக மாயும் - ஏகமாயுமுள்ள மாயையையே உபாதியாக உடையதென்றும், ஸத்ய ஞானானந்த ஸ்வரூபமாயும். ஸர்வக்ஞனாயும், ஸர்வசக்தனாயும், ஸர்வ வ்யாபகனாயும் இருக்கும் தன்மை யுடையது என்று ஜீவல க்ஷணங்களுக்கு நேர் விருத்தமான லக்ஷணங்களையுடைய தென்று சொல்லப்பட்டது. இவ்விதம் நேர் விருத்தப்பட்ட இரண்டு பதார்த்தங்களும் வாஸ்தவத்தில் ஒன்று தான் என்று எப்படிச் சொல்லமுடியுமென்கிற ஸந்தேஹம் வருவது ஸஹஜம் தான். வேற்றுமைப்படுத்தக்கூடிய லக்ஷணங்களுக்கே பிர தான்யம் கொடுத்துக் கொண்டு, இரண்டிற்கும் ஐக்கியத்தை ஸாதிப்பது ஸாத்தியமேயில்லை என்பதை ஒப்புக்கொண்டு அந்த வேறுபட்ட லக்ஷணங்களுக்குப் பிரதான்யம் கொடுக்காமல் அவ்விரண்டு பதார்த்தங்களிலும் பொதுவாயுள்ள சைதன்யாம் சத்தை மட்டும் எடுத்துக்கொண்டால்தான் ஐக்கியம் ஸித்திக்கும். ஆதலால் வாச்யார்த்தத்தை விட்டு விட்டு லக்ஷ்யார்த்தத்தைத்தான் இங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை இத்த சுலோகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.]

மாநாந்தர விரோதே[4] து முக்[2]யார்த[2]ஸ்யாபரிக்[3]ரஹே ।
முக்[2]யார்தே[2]நாவிநாபூ[4]தே ப்ரதீதிர் லக்ஷணோச்யதே ॥ 47

வேறு பிரமாணங்களுக்கு விரோதம் ஏற்படும் போது, முக்கியமான அதாவது வாச்சியமான அர்த்தத்தை எடுத்துக்கொள்ள முடியாத நிலைமையில், வாச்சி யார்த்தத்திலிருந்து விலகாமலிருக்கிற அர்த்தத்தில், தோன்றுவது லக்ஷணை என்று சொல்லப்படுகிறது.

[லக்ஷ்யார்த்தத்தில் லக்ஷணை மூன்றுவிதமாக இருக்கும். வாச்யார்த்தத்தில் ஒரு அம்சத்தை மாத்திரம் விடுகிறதில்லாமல் முழுவதையும் விட்டு விட்டு அவ்வர்த்தத்தோடு ஸம்பந்தப்பட்ட வேறு அர்த்தத்தைக் குறிப்பது: "கங்கையில் காசீ நகரம் இருக்கிறது" என்பதில் கங்கை என்ற சப்தத்தின் வாச்சியார்த்தமான கங்கா பிரவாஹத்தை விட்டு "கங்கைக்கரை" என்று அதன் ஸம்பந்தமுடைய ஒன்றை அர்த்தமாகச் சொல்வது; இது ஒரு விதம். வாச்சியார்த்தத்தில் இல்லாத ஒரு அம்சத்தைச் சேர்த்துக்கொண்டு அர்த்தமாகச் சொல்வது: "சிவப்பு ஓடுகிறது" என்பதில் சிவப்பு என்ற சப்தம் வர்ணத்தைக் குறிக்குமே தவிர, ஒரு பதார்த்தத்தைக் குறிக்காது; வர்ணமோ தனியாக ஓடாது. ஆகையால் "சிவப்புக் குதிரை" என்ற மாதிரி 'குதிரை' என்ற ஒன்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டி வருகிறது; இது இன்னொரு விதம். மூன்றாவது விதத்தில் வாச்சியார்த்தத்தை முழுவதும் விட்டு விடுவதும் கிடையாது. முழுவதையும் அப்படியே வைத்துக்கொள்வதும் கிடையாது: "அவன்

தான் இவன்” என்பதில் "அவன்" என்ற சப்தம் வேறு இடத்திலோ, காலத்திலோ இருந்தவனைக் குறிக்கும்; "இவன்" என்ற சப்தம் தற்போது உள்ள இடத்திலும் காலத்திலும் இருப்பவனைக் குறிக்கும்; இங்கு தேசமும், காலமும் விரோதப் படுகிறபடியால் அவைகளை விலக்கி இரண்டு பதங்களிலும் பொதுவாய்த் தெரிகிற மனிதனை மாத்திரம் எடுத்துக்கொண்டால் தான் வாக்கியம் சரியானபடி அர்த்தம் செய்ய முடியும். இம்மூன்றுவித லக்ஷணைகளில் மூன்றாவதானதே "தத் த்வம் அஸி" முதலான வாக்கியங்களில் பொருந்து மென்று அடுத்த சுலோகத்தில் விளக்குகிறார்.]

தத்-த்வமஸ்யாதி[3] வாக்யேஷு லக்ஷணா பா[4]க[3]லக்ஷணா ।
ஸோ(அ)யமித்யாதி[3] வாக்யஸ்த[2] பத[3]யோரிவ நாபரா ॥ 48

"தத் த்வம் அஸி" முதலான வாக்கியங்களில் "அவன் - இவன்" முதலான வாக்கியங்களிலுள்ள இரண்டு பதங்களுக்கும் எப்படியோ அப்படியே லக்ஷணையானது பாகலக்ஷணை (வாச்சியார்த்தத்தில் ஒரு அம்சத்தை விட்டும் மற்ற அம்சத்தை விடாமலும் இருக்கும் லக்ஷணை) யோகும். வேறுவித லக்ஷணை பொருந்தாது.

[“தத் த்வம் அஸி" (நீ அதாக இருக்கிறாய்), "அஹம் பிரஹ்ம அஸ்மி” (நான் பிரஹ்மமாக இருக்கிறேன்), "அயம் ஆத்மா பிரஹ்ம” (இந்த ஆத்மா பிரஹ்மம்), "ப்ரக்ஞானம் பிரஹ்ம" (இந்த ஆத்மா பிரஹ்மம்), "ப்ரக்ஞானம் பிரஹ்ம" (அறிவே பிரஹ்மம்), என்கிற மஹாவாக்கியங்களில் அது என்றும் பிரஹ்மம் என்றும் சொல்லப்படுகிற பதார்த்தம் ஜகத் காரணமாய் வியாபகமாய் ஸர்வக்ஞமாய் என்பதெல்லாம் சொல்லக்கூடிய வஸ்து. "நீ" என்றும் "நான்" என்றும் ஆத்மா என்றும் அறிவு என்றும் சொல்லப்படுகிற பதார்த்தம் தேஹாதி அந்தக்கரணம் உள்பட உள்ள உபாதிகளினால் கட்டுப்பட்டு வெகு சிறியவனாய் அல்பக்ஞனாய் என்றெல்லாம் சொல்லக்கூடிய வஸ்து. இவ்விரண்டும் ஒன்று என்று சொல்லும் இவ்வாக்கியங்களுக்கு சரியானபடி அர்த்தம் சொல்லவேண்டுமானால் இந்த முரணான அம்சங்களை யெல்லாம் விட்டுவிட்டு இவ்விரண்டிலும் பொதுவாயுள்ள சைதன்யஸ்வரூபத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் இங்கு பாகலக்ஷணையே கொள்ள வேண்டியதாகும்.]

அஹம் ப்[3]ரஹ்மேதி வாக்யார்த[2] போ[3]தோ[4] யாவத்[3]-த்[3]ருடீப[4]வேத் ।
சமாதி[3]-ஸஹிதஸ்-தாவத[3]ப்[4]யஸ்யேத் ச்ரவணாதி[3]கம் ॥ 4 49

நான் பிரஹ்மம் என்ற வாக்கியத்தினுடைய அர்த்தத்தின் ஞானம் எதுவரை திடமாக ஏற்படுமோ, அதுவரை சமம் முதலான ஸாதனங்களுடன் கூடினவனாக சிரவணம் முதலானவைகளை அப்யாஸம் செய்ய வேண்டும்.

[சமம் முதலானவை: ‘சமாதி ஷட்க ஸம்பத்’ எனப்படும். இவ்வாறு, சமம் (புலனடக்கம்), தமம் (மனவடக்கம்), உபாதி (தேட்டங்களை நிறுத்துதல்), திதிக்ஷை

(எதிரெதிர் அநுபவங்களை ஸமமாக ஸஹித்தல்), ச்ரத்தை (வேதத் திலும் குருவிடமும் நம்பிக்கை), ஸமாதானம் (ஒருமைப்பாடு) என்பன. ச்ரவணம் முதலானவை; ச்ரவணம் (குரு உபதேசம் கேட்டல்), மனனம் (கேட்டதை இடைவிடாது சிந்தித்தல்), நிதித்யாஸனம் (சிந்தித்ததை அநுபவமாக்கிக் கொள்ளல்.]

ச்ருத்யாசார்ய-ப்ரஸாதே³ன த்³ருடோ⁴போ³தோ⁴யதா³ ப⁴வேத் ।
நிரஸ்தாசேஷ-ஸம்ஸார-நிதா³ந: புருஷஸ்ததா³ ॥ 50

விசீர்ண கார்யகரணோ பூ⁴த-ஸூக்ஷ்மைரநாவ்ருத: ।
விமுக்த-கர்ம-நிக³ள: ஸத்³ய ஏவ விமுச்யதே ॥ 51

வேதத்தினுடையவும், ஆசார்யருடையவும் அருளினால் ஞரனமானது எப்பொழுது திடமாக ஏற்படுமோ, அப்பொழுது புருஷன் ஸம்ஸாரம் முழுவதற்கும் காரணமான அவித்யை (அஞ்ஞானம்) நீங்கினவனாக, சரீரம் இந்திரியங்கள் எல்லாம் உலைந்து போனவனாக, பூத ஸூஷ்மங்களால் சூழப்படாதவனாக, கர்மாவாகிற விலங்கிலிருந்து விடுபட்டவனாக உடனேயே முக்தி அடைகிறான்.

ப்ராப்³த⁴-கர்ம-வேகே³ந ஜீவந்முக்தோ யதா³ ப⁴வேத் ।
கஞ்சித்-காலமநாரப்³த-கர்ம-ப³ந்த⁴ஸ்ய ஸம்க்ஷயே ॥ 52

நிரஸ்தாதிசயாநந்த³ம் வைஷ்ணவம் பரமம் பத³ம் ।
புநராவ்ருத்தி ரஹிதம் கைவல்யம் ப்ரதிபத்³யதே ॥ 53

பிராரப்த கர்மத்தின் வேகத்தினால் சிலகாலம் ஜீவன் முக்தனாக இருந்து (பிராரப்தம் தீர்ந்த பின்) பிராரப்தமல்லாத (ஸஞ்சிதம் ஆகாமி என்கிற கர்மாக்களின் கட்டு (ஏற்கெனவே) நசித்து விட்டபடியால் (கர்மாவினால் ஏற்படும் ஸம்ஸாரம் முற்றிலும் நசித்து) எதற்கு மேலாக ஆனந்தம் கிடையாதோ அப்பேர்ப்பட்ட ஆனந்த ஸ்வரூபமாயும், திரும்பவும் சம்ஸாரத்திற்கு வருவதே யில்லாததாயும், வைஷ்ணவமாயும் (அதாவது ஸர்வவியாபகமான பிரஹ்மத்திற் குரியதாயும்) ஒன்றாகவே தனித்திருக்கும் தன்மையுடையதாயும் உள்ள உத்தமமான நிலையை அடைகிறான்.

[கர்மாவில் பிராப்தம், ஸஞ்சிதம். ஆகாமி என மூன்று. முன்வினையில் இப்பிறவியில் அநுபவிக்கப்பட்ட வேண்டியதென நிர்ணயமானது பிராரப்தம். மீதமுள்ளது (இனிவரும் பிறவிகளுக்காக வைக்கப்பட்டது) ஸஞ்சிதம். இப் பிறவியில் செய்து, பிற்பிறவிகளில் பயன் தருவது ஆகாமி. புலியென்று நினைத்து எய்யப்பட்ட அம்பு, புலியல்ல பசுவென்று தெரிந்து விட்டதற்காக நின்று விடாது. அத்த பிராணியை அடித்தே தீரும். அதே மாதிரியாக இந்த சரீரத்தைக் கொடுத்த பிராப்த கர்மா ஆத்மஞானம் ஏற்பட்டு விட்டதால் நசித்துவிடாது. அக் கர்மாவின் வேகமிருக்கும்வரை இருந்தே தீரும் எனவே, இப்பிராரப்தத்தை அனுபவித்துத் தீரும்வரை ஞானியும் சரீரத்தில் வாழ்வான் இந்நிலையில் சரீரம், ஆத்மஞானம்

இரண்டும் சேர்ந்தேயிருக்கிறபடியால் அந்த ஞானியை ஜீவன் முக்தன் என்பார்கள் பலனைக்கொடுக்க ஆரம்பிக்காத முன் செய்த ஸமஸ்த தர்மாக்கள் முழுதும் ஞானத்தினால் நாசமடைந்துவிடுகின்றன. ஞான மேற்பட்ட பின் செய்யும் சேஷ்டைகளில் "நான் செய்கிறேன்" என்கிற எண்ணமேயில்லாததினால் அவை ஆகாமி கர்மாவாகாது. ஆகையால் பிராரப்த கர்மாவின் முடிவில் வேறு ஜன்மத்தையோ, வேறு லோகத்தையோ கொடுக்கக்கூடிய எவ்வித கர்மாவும் இல்லாததினால் ஞானி ஸர்வ வியாபகமான பிரஹ்மத்தோடு ஒன்றாக ஆகி விடு கிறான். இதே விதேஹ முக்தி.]

லகு - வாக்ய வ்ருத்தி

[வேறொரு நூலைச் சுருக்கி, எளிதாக்கித் தரும் போது மூல நூலின் பெயரோடு "லகு" என்ற அடைமொழி சேர்க்கப்படும். ஆசார்யாள் அனுக்ரஹித்திருக்கிற "வாக்ய வ்ருத்தி" என்ற பிரகரணத்தின் அப்படிப்பட்ட ஸங்கிரஹமே இப் பிரகரணம் எனலாம். "தத்-த்வம்-அஸி" வாக்கியத்தை எடுத்துக்கொண்டு அதிலுள்ள பதங்களுடைய தாத்பர்யத்தைத் தெளிவாக "வாக்ய வ்ருத்தி" யில் விளக்கியுள்ள ஆசார்யாள் ஆத்மாவிற்கும் பிரஹ்மத்திற்கும் உள்ள ஐக்கியத்தை எப்படி அநுபவத்துக்கு வருமாறு அப்யாஸம் செய்வது என்பதை மாத்திரம் இதில் சுருக்கமாகக் கண்டிருக்கிறார்.]

ஸ்தூ2லோ மாம்ஸமயோ தே3ஹ: ஸூக்ஷ்ம: ஸ்யாத்3-வாஸநாமய: |
ஞாந கர்மேந்த்3ரியை: ஸார்த4ம் தீ4 - ப்ராணௌ தச் - சரீரகெ3ள || 1

மாம்ஸ மயமாயிருக்கிறது தான் ஸ்தூலமான சரீரம்; (பூர்வ கர்மாவினால் ஏற்பட்ட) வாஸனாமயமாயிருக்கிறதுதான் ஸூக்ஷ்ம சரீரம் ஆகும். ஞானேந்திரி யங்கள், கர்மேந்திரியங்கள் இவைகளுடன் சேர்ந்து அந்தக்கரணமும், பிராணனும் அந்த ஸூக்ஷ்ம சரீரத்தில் இருப்பவைகள்.

அஜ்ஞாநம் காரணம் ஸாக்ஷி போ3த4ஸ் - தேக்ஷாம் விபா4ஸக: |
போ3தா4பா4ஸோ பு3த்3தி4க3த: கர்தா ஸ்யாத் புண்யபாபயோ: || 2

காரண சரீரம் என்பது அஜ்ஞானமேயாகும். இந்த மூன்றுவித சரீரங்களையும் பிரகாசப்படுத்துகிற அறிவு ஸாக்ஷியெனப்படும். புத்தியில் ஏற்பட்ட அந்த அறிவின் ஆபாஸம் (பிரதிபிம்பம்) தான் புண்ணியத்தையும் - பாபத்தையும் செய்கிறவனாக ஆவது.

ஸ ஏவ ஸம்ஸரேத் கர்மவசாத் லோகத்3வயே ஸதா3 |
போ3தா4பா4ஸாத் சுத்3த4 போ3த4ம் விவிச்யா - த்3தியத்நத: || 3

அவன் தான் (அதாவது ஏக அறிவின் பிரதிபிம்பமான சிதாபாஸன் தான்) கர்மாவிற்கு வசப்பட்டு எப்பொழுதும் இஹலோகம் - பரலோகம் இரண்டிலும் சுழலுகிறான். ஆகையால் அறிவின் ஆபாஸமான ஜீவனிடமிருந்து சுத்தமான அறிவான ஆத்மாவை விசேஷமாக பிரயத்தினம் செய்து பிரித்து அறியவேண்டும்.

[சுத்தமான அறிவு ஸ்வரூபமான ஆத்மா கேவலம் ஸாக்ஷியேயாகும். புத்தியில் பிரதிபலிக்கும் அறிவின் ஆபாஸமான ஜீவனே ஸம்ஸாரத்தில் சுழலுகிறான். எனவே, ஸம்ஸாரத்திலுள்ள ஸுகதுக்கங்களிலிருந்து விடுபட நினைப்பவன் தன்னை சுத்தமான ஆத்மாவெண்றே உணர வேண்டும்.]

ஜாக³ர - ஸ்வப்நயோரேவ போ³தா⁴பா⁴ஸ - விட³ம்ப³நா |
ஸுப்தௌ து தல்லயே போ³த⁴: சுத்³தோ⁴ ஜாட்³யம் ப்ரகாசயேத் || 4

ஜாக்ரத் (விழிப்பு), ஸ்வப்னம் என்ற இரண்டு நிலைகளில் தான் சிதாபாஸனான ஜீவனின் சேஷ்டை. ஸுஷுப்தி (தூக்கம்) யிலோ சிதாபாஸன் ஒடுங்கி யிருக்கும் போது, சுத்தமான அறிவே அக்ஞானத்தைப் (ஜடத்தன்மையைப்) பிரகாசப்படுத்தும்.

தூங்கும் போது நாம் அதன் ஸுகத்தை அறிய முடியாவிடினும், விழித்தபின் "'ஸுகமாய்த் தூங்கினேன்" என்பதால் அப்போதும் ஸுகஸ்வரூபமான ஆத்மா பிரகாசித்ததாகத் தெரிகிறது. "நான் ஸுகமாகத் தூங்கினேன்" என்று சொல்வதுடன் "நான் எதையும் அப்போது அறியவில்லை" என்றும் சொல்கிறோம். "நான் எதையும் அறியவில்லை" என்று சொல்வதனாலேயே" அறியப்படும் விஷயங்கள் எதுவும் என் அறிவிற்கு விஷயமாகவில்லை" என்று மாத்திரம் ஏற்படுமே தவிர "அந்த ஸமயம் எனக்கு அறிவும் இல்லை" என்று ஏற்படாது. ஆகையால் விஷயத்தை எதிர்பாராததாயும், எதையும் அறியாத நிலையான அக்ஞானத்தை மாத்திரம் விளக்குவதாயும் ஓர் அறிவு இருக்கிறதென்பது ஸித்தம்.

ஜாக³ரே(அ)பி தி⁴யஸ் - தூஷ்ணீம் - பா⁴வ: சுத்³தே³ பா⁴ஸ்யதே |
தீ⁴ - வ்யாபாராச்ச சித்பா⁴ஸ்யாச் - சிதா³பா⁴ஸேந ஸம்யுதா: || 5

ஜாக்ரத் காலத்திலும் கூட புத்தியானது எவ்வித வியாபாரமுமின்றி இருப்பது சுத்த (ஞான) ஸ்வரூபனான ஆத்மாவினால் தான் விளக்கப்படுகிறது. அறிவின் ஆபாஸத்துடன் கூடிய புத்தியின் எல்லா வியாபாரங்களும் கூட சுத்த அறிவி னாலேயே விளக்கப்படுகின்றன.

[காமக் குரோதாதிகளோ, ஸங்கல்ப விகல்பாதிகளோ எவ்வித வியாபாரமுமின்றி ஜாக்ரத் காலத்திலேயே சிலசமயம் புத்தி நின்று விடும். அந்த ஸமயம் "இப்பொழுது என் புத்தி எவ்வித வியாபாரமுமின்றி நிச்சலமாக இருக்கிறது" என்று உணர்வது ஆத்மாவேயாகும். ஏனென்றால் இவ்வறிவிற்கு புத்தி விஷயமாக (Object) ஆகி விட்டது; ஆகவே இவ்வறிவிற்கு புத்தி அறிபவதாகவாவது (Subject) ஸாதனமாகவாவது (Means) இருக்க முடியாது. இவ்விதம் புத்தி நிச்சலமாயிருக்கும் போது சுத்தமான ஆத்மா பிரகாசிக்கிறது என்று சொன்னதால் புத்தி நிச்சலமில்லாமல் வியவஹரிக்கும் போது, சுத்த ஆத்மாவை அறிய முடியாதோவென்ற சந்தேஹம் ஏற்படக்கூடியது. அதற்கிடமின்றி புத்தி சேஷ்டிக்கும் போதும் அவ்வாத்மாவை அறியலா மென்கிறார். புத்தியோ அதன் சேஷ்டைகளோ யாவும் ஜடமே, அவைகளுக்கு தன்னால் பிரகாசிக்கும் தன்மை கிடையாது. அவைகள் பிரகாசிக்க வேண்டுமானால் பிரகாசத்தன்மையுள்ள வேறொன்றுடன் கலந்தேயாக வேண்டும். அவ்விதம் கலப்பது ஆபா ஸ அறிவு. அந்த ஆபாஸ அறிவிற்குப் பிரகாசிக்கும் தன்மையைக் கொடுப்பதும் அந்த சுத்த அறிவேயாகும்.

ஆகையால் புத்தியின் சேஷ்டைகளையோ, சேஷ்டையின்மையையோ இரண்டையும் பிர்காசப்படுத்துவது சுத்தமான ஆத்மாவேதான்.]

வஹ்நி - தப்த - ஜலம் தாப - யுக்தம் தே3ஹஸ்ய தாபகம் |
சித்3பா4ஸ்யா தீ4ஸ் - தத்தா3பா4ஸ யுக்தா(அ)ந்யம் பா4ஸயேத் த3தா || 6

நெருப்பில் சூடு ஏறிய ஜலம் சூடோடு கூடின தாய் தேஹத்திற்கு சூட்டைக் கொடுக்கிறது. அதே மாதிரி, புத்தியானது சுத்த அறிவினால் பிரகாசிக்கப்பட்டு அவ்வறிவின் ஆபாஸத்துடன் (பிரதிபலிப்புடன்) கூடியதாக இருந்துகொண்டு வேறு பதார்த்தத்தங்களைப் பிரகாசப்படுத்தும்.

ரூபாதெ3ள கு3ணதோ3ஷாதி3 - விகல்பா பு3த்3தி4கா3: க்ரியா: |
தா: க்ரியா விஷயை: ஸார்த4ம் பா4ஸயந்தீ சிதிர் - மதா || 7

ரூபம் முதலானவைகளில் குணம், தோஷம் முதலான விகல்பங்கள் (வேற்றுமைகள்) புத்தியிலுள்ள வியாபாரங்களால் தோன்றுவதாகும். விஷயங்களை சேர்த்து அந்த வியாபாரங்களைப் பிரகாசப்படுத்துவது அறிவு எனப்படும்.

ரூபாச்ச கு3ண - தோ3ஷாப்யாம் விவிக்தா கேவலா சிதி: |
ஸைவாநுவர்ததே ரூப - ரஸாதீ3நாம் விகல்பநே || 8

ரூபத்திலிருந்தும் குணதோஷங்களிலிருந்தும் தனித்து வேறுபட்டதாக இருப்பது சுத்தமான அறிவு. அதுவேதான் ரூபம், ரஸம் முதலானவை விஷயமாக விகல்பம் செய்யும் போது தொடர்ந்து இருந்துவருகிறது.

க்ஷணே க்ஷணே(அ)யதா - பூ4தா தீ4 - விகல்பாச்சிதிர்-ந து |
முக்தாஸு ஸூத்ரவத் புத்தி விகல்பேஷு சிதிஸ்ததா || 9

புத்தியின் விகல்பங்கள் ஒவ்வொரு க்ஷணத்திலும் வெவ்வேறாக இருப் பவைகள். அறிவு மாத்திரம் அப்படியல்ல. முத்துக்களுக்குள் கயிறு (இருப்பது) போல புத்தியின் விகல்பங்களில் அறிவு (இருக்கிறது).

[முத்துமாலையில் முத்துக்கள் பலவாக இருந்த போதிலும் எல்லா முத்துக் களிலும் கோர்க்கப்பட்டுள்ள நூல் ஒன்று தான். இதுபோல புத்தியின் விகல்பங்கள் நிமிஷத்துக்கு நிமிஷம் வெவ்வேறாக வந்து கொண்டிருந்த போதிலும் எல்லா விகல்பங்களும் ஊடுருவியுள்ள அறிவு ஒன்று தான்].

முக்தாபி4 - ராவ்ருதம் ஸூத்ரம் முக்தயோர் மத்4ய - ஈக்ஷ்யதே |
ததா2 வ்ருத்தி விகல்பை - ச்சித் ஸ்பஷ்டா மத்4யே விகல்பயோ: || 10

கயிறு முத்துக்களினால் மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு முத்துக்கும் அடுத்த முத்துக்கும் இடையில் காணப்படுகிறது. அப்படியே வெவ்வேறான புத்தி விருத்திகளினால் அறிவு (மறைக்கப்பட்டபோதிலும்) ஒரு விருத்திக்கும் அடுத்த விருத்திக்கும் இடையில் ஸ்பஷ்டமாகக் காணப்படும்.

நஷ்டே பூர்வ விகல்பே து யாவத³ந்யஸ்ய நோத³ய: |
நிர்விகல்பக சைதந்யம் ஸ்பஷ்டம் தாவத்³ - விபா⁴ஸதே || 11

முந்தின விகல்பம் மறைந்து அடுத்த விகல்பம் உண்டாவற்கு முன் நடுவில் எவ்வித விகல்பமுமற்ற சுத்த சைதன்யம் தெளிவாக பிரகாசிக்கும். -

ஏக - த்³வி - த்ரி - க்ஷணேஷ் - வேவம் விகல்பஸ்ய நிரோத⁴நம் |
க்ரமேணாப்⁴யஸ்யதாம் யத்நாத் ப்³ரஹ்மாநுப⁴வகாங்க்ஷிபி⁴: || 12

இவ்விதமாக பிரஹ்மத்தை அனுபவிக்க ஆசைப்படுகிறவர்கள் ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம், மூன்று க்ஷணம் என்று கிரமமாக மிகப் பிரயத்தனத்துடன் விகல்பத்தைத் தடுத்தல் (நிறுத்தல்) அப்யஸிக்கப்பட வேண்டும்.

ஸவிகல்பக - ஜீவோ(அ)யம் ப்³ரஹ்ம தந் - நிர்விகல்பகம் |
அஹம் ப்³ரஹ்மேதி வாக்யேந ஸோ(அ)யமர்தோ²(அ)பி⁴தீ⁴யதே || 13

இது விகல்பத்தோடு கூடின ஜீவன். அது விகல்பமே இல்லாத ப்ரஹ்மம். அந்த இவ்விஷயமானது நான் பிரஹ்மம் என்ற வாக்கியத்தினால் சொல்லப்படுகிறது.

[ஒரே பதார்த்தத்தை விகல்பத்துடன் (ஸாதாரணமாக புத்தி விருத்தியுடன்) ஸம்பந்தித்து வியவஹரிக்கும் போது பிரஹ்மம் என்றும் தனித்தனி பெயர்கள் ஏற்படுகின்றன. இதனால் குறிக்கப்படும் வஸ்துவினிடத்தில வேற்றுமை ஏற்பட்டு விடாது. ஒருவன் தன் தகப்பனாரால் புத்திரன் என்று வியவஹரிக்கப்பட்டும், அவன் குழந்தையால் பிதா என்று வியவஹரிக்கப்பட்டும் இருப்பதால் அவன் வெவ்வேறு மனிதனாக ஆகி விடமாட்டான். அவனுடைய ஸ்யவ ரூபம் இவ்விரண்டு வியவஹாரங்களினாலும் பாதிக்கப்படாமல் எப்பொழுதும் ஒரே ரீதியாகத்தான் இருந்து வருகிறது. அப்படியே ஜீவன் என்று அழைக்கப்படுவதும், பிரஹ்மம் என்று அழைக்கப்படுவதும் ஸ்வ ரூபத்தில் வேற்றுமையற்று சுத்த சைதன்ய ரூபமாகவே இருந்து வருகிறது. இந்தத் தத்வத்தைத் தான் உபநிஷத்துக்கள் "நான் பிரஹ்மம்" “அதுவே நீ" முதலான மஹாவாக்கியங்களினால் உபதேசிக்கின்றன.]

ஸவிகல்பகசித்³-யோ(அ)ஹம் ப்³ரஹ்மைகம் நிர்விகல்பகம் |
ஸ்வதஸ்-ஸி³த்தா⁴ விகல்பாஸ்தே நிரோத்³த⁴வ்யா: ப்ரயத்நத: || 14

எந்த நான் விகல்பத்தோடு கூடிய சைதன்யமோ அந்த நானே ஒன்றாய் விகல்பமற்றதாயுள்ள பிரஹ்மம். தானாகவே ஏற்படுகிற அந்த விகல்பங்கள் பிரயத்தனத்தின் பேரில் தடுக்கப்பட வேண்டியவைகள்.

சக்ய: ஸர்வ - நிரோதே[4]ந ஸமாதி[4]ர் - யோகி[3]நாம் ப்ரிய: |
தத[3] சக்தௌ க்ஷணம் ருத்[3]த்[4]வா ச்ரத்[3]தா[4]ளோர் - ப்[3]ரஹ்மதா(ஆ)த்மந: || 15

எல்லா விகல்பங்களையும் நிரோதம் (தடை) செய்வதால் யோகிகளுக்குப் பிரியமான ஸமாதி நிலையானது ஸாதிக்கக்கூடியது. அதற்கு (எல்லா விகல்பங்களையும் முற்றிலும் தடுக்க) சக்தியில்லாத பக்ஷத்தில் ஒரு க்ஷணமாவது தடுத்து விட்டால், சிரத்தையுடன் பிரயத்தினம் செய்கிறவருடைய ஆத்மாவிற்கு பிரஹ்மமாயிருக்கும் தன்மை ஸித்திக்கும்.

[புத்தி விருத்தி ஏற்படாமல் முதலில் ஒரு க்ஷணமாவது இருக்கப் பிரயத்தினம் செய்தால் அந்த க்ஷணத்திலேயே ஆத்மாநந்தம் நன்கு ஸ்புரிக்கும் கிரமமாக அப்யாஸம் செய்து புத்தி நிச்சலமாயிருக்கும் காலத்தை வரவர நீடிக்கச்செய்யலாம்.]

ச்ரத்[3]தா[4]ளுர் - ப்[3]ரஹ்மதாம் ஸ்வஸ்ய சிந்தயேத்[3] - பு[3]த்[3]தி[4] வ்ருத்திபி: |
வாக்ய - வ்ருத்த்யா யதா[2]சக்தி ஜ்ஞாத்வா(அ)த்[3]தா[4]ப்[4]யஸ்யதாம் ஸதா[3] || 16

சிரத்தையுடன் கூடியவர் தனது ப்ரஹ்ம நிலையை புத்தி விருத்திகளின் உதவியினாலும், மஹாவாக்கியங்களின் தாத்பர்யத்தை அனுஸரித்தும் ["வாக்ய விருத்தி" என்ற பிரகரணத்தில் கண்டவழியாக) சக்திக்குத் தகுந்தபடி சிந்திக்க வேண்டும். (சிந்தித்து ஸந்தேகமின்றி அறிந்துகொண்டு நன்றாக எப்பொழுதும் அப்யாஸம் செய்யவேண்டும்.)

தச் - சிந்தனம் தத் - கத[2]நம் அந்யோந்யம் தத் - ப்ரபோ[3]த நம் |
ஏத - தேக - பரத்வம் ச ப்[3]ரஹ்மாப்[4]யாஸம் விது[3]ர் பு[3]தா[4]: || 17

அதையே நினைப்பது, அதையே சொல்வது, ஒருவருக்கொருவர் அதையே நன்கு அறிவிப்பது, அதொன்றிலேயே ஈடுபட்டிருப்பது ஆக இவையெல்லாம் பிரஹ்மவிஷயமான அப்யாஸம் என்று அறிவாளிகள் அறிந்திருக்கிறார்கள்.

தே[3]ஹாத்மதீவ[4]த் ப்[3]ரஹ்மாத்மதீ[4] - த்[3]ராட்[4]யே க்ருதக்ருத்யதா |
யதா[3] ததா[3](அ)யம் மரியதாம் முக்தோ(அ)ஸௌ நாத்ர ஸம்சய: || 18

தேஹத்தில் "நான்" என்கிற எண்ணம் அஜ்ஞானிகளுக்கு எவ்வளவு திடமாயிருக்கிறதோ அதுபோல் பிரஹ்மம் "நான்" என்ற திடபுத்தி உண்டாகி விட்டால் ஸாதிக்க வேண்டியதெல்லாம் ஸாதித்தானதாகிவிடும். (இதன்பின்)

(இப்படிப்பட்டவர் எப்பொழுது வேண்டுமாயினும் மரணமடையட்டும் (மரண ஸம்பந்தமின்றி) இவர் (உயிர் வாழ்கையிலேயே) முக்தர். இதில் ஐயமே கிடையாது.

ஸதாசாராநு ஸந்தானம்

[தர்ம சாஸ்திரங்களில் ஆஸ்திகனான மனிதன் ஒருவன் பிரதி தினம் செய்ய வேண்டிய கடமைகளும் காரியங்களும் அவற்றின் முறைகளும் என்ன வென்று மிகவும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே ஸதாசாரம் எனப்படும். ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடைய பிரயத்தினம் செய்பவருக்கும் ஸதாசாரம் உண்டு; ஆனால் அது வேறு விதம் என்று இந்தப் பிரகரணத்தில் ஸ்ரீமத் ஆசார்யர் எடுத்துக் காட்டுகிறார். மா நஸிக பூஜை போல, இதுவும் கர்மேந்திரியாதிகளையும் வெளிப் பதார்த் தங்களையும் வைத்துக்கொண்டு அனுஷ்டிக்கப்படாமல் மனஸிலேயே அனுஸந்தானம் செய்யப்படவேண்டியது, என்று காட்டுகிறார். ஆராய்ந்து ஈடுபட்டுப் பின்பற்றுவதே அநுஸந்தானம்.]

ஸச்சிதா^{3}நந்த^3 - கந்தா^{3}ய ஜக^{3}த^{3}ங்குர - ஹேதவே |
ஸதோ^{3}தி^{3}தோய பூர்ணாய நமோ (அ)நந்தாய விஷ்ணவே || 1

ஸத்தாகவும் (மெய்ப்பொருளாகவும்) சித்தாகவும் (அறிவாகவும்) ஆனந்தமாகவும் உள்ள கிழங்காய், பிரபஞ்சம் எனும் இவ்வுலகம் முளைவிடக்காரணமாய், எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருப்பதாய், நிரம்பினதாய், எல்லையற்றதாய் உள்ள விஷ்ணுவுக்கு (ஸர்வ வியாபக வஸ்துவான ப்ரஹமத்துக்கு) நமஸ்காரம்.

ஸர்வ - வேதா^{3}ந்த ஸித்^{3}தா^{4}ந்தைர் க்^{3}ரதி^{2}தம் நிர்மலம் சிவம் |
ஸதா^{3}சாரம் ப்ரவக்ஷ்யாமி யோகி^{3}நாம் ஞாநஸித்^{3}த^{4}யே || 2

(ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குரிய) யோக ஸாதனங்களை அனுஷ்டிக்கிறவர்களுக்கு ஞானம் ஸித்திக்கும் பொருட்டு எல்லா உபநிஷத்துக்களினாலும் தீர்மானிக்கப்பட்டிருக்கும் முடிவுகளைக்கொண்டு தொகுக்கப்பட்டதாயும், நிர்மலமாயும், சிவமாயுமுள்ள (மங்களமாயுள்ள) ஸதாசாரத்தைப்பற்றி நன்கு எடுத்துச்சொல்கிறேன். ((முதல் ச்லோகத்தில் விஷ்ணு என்ற சொல்லும். இரண்டாவதில் சிவ என்ற சொல்லும் ஆத்ம ஸாதகனுக்கு இருக்கவேண்டிய ஸமரஸ மனப்பான்மையைக் குறிப்பால் உணர்த்துகின்றன.)

ப்ராத: ஸ்மராமி தே^{3}வஸ்ய ஸவிதுர் - ப^{4}ர்க^3: ஆத்மந: |
வரேண்யம் தத்^{3} தி^{4}யோ யோ நச்சிதா^{3}நந்தே^{2} ப்ரசோத^{3}யாத் || 3

எவர் நம்முடைய புத்திகளை, சித்தாகவும் ஆனந்தமாகவுமுள்ள (பிரஹ்மத்)தில் தூண்டிச்செலுத்துவாரோ, அந்த ஸ்வயம்பிரகாசமாயும் எல்லாவற்றையும் உண்டு பண்ணுகிறவராயுமுள்ள ஆத்மஸ்வரூபியின் அப்பேர்ப்பட்ட சிலாக்கியமான பேரொளியைக் காலையில் ஸ்மரிக்கிறேன். (காயத்ரி மந்திரத்தையே பெரும்பாலும் அனுஸரிக்கும் ச்லோகம்)

அந்வய - வ்யதிரேகாப்யாம் ஜாக்3ரத் - ஸ்வப்ந ஸுஷுப்திஷு ।
யதே3கம் கேவலம் ஞாநம் ததே3வாஸ்மி பரம் ப்3ருஹத் ॥ 4

விழிப்பு, கனவு, தூக்கம் இவைகளில் அன்வயத்தினாலும் வியதிரேகத்தினாலும் எது ஒன்றாய் தனித்து ஞானஸ்வரூபமாக இருக்கிறதோ, மேலான மிகப் பெரியதான அந்தப் பதார்த்தமாகவே நான் இருக்கிறேன்.

(ஒரு பதார்த்தம் இன்னொரு பதார்த்தத்துடன் பொருந்தி இருப்பதை அன்வயம் என்றும், ஒரு பதார்த்தம் இன்னொன்றுடன் பொருந்தமுடியாதிருப்பதை வ்யதிரேகம் என்றும் சொல்வார்கள். விழிப்பு இருக்கும் போது கனவும், தூக்கமும் கிடையாது, கனவு இருக்கும்போது விழிப்பும் நல்ல தூக்கமும் கிடையாது. நல்ல தூக்கம் இருக்கும் போது விழிப்பும் கனவும் கிடையாது. இவை ஒன்றுக்கொன்று வ்யதிரேகமாயிருந்தும் ஒரே ஜீவனில் இவை அன்வயிப்பதற்குக் காரணம் இம்மூன்று நிலைகளிலும் மாறாமலே உள்ள ஆத்மாதான் என்று புலப்படுகிறது.

ஜ்ஞாநாஜ்ஞாந விலாஸோ (அ)யம் ஜ்ஞாநாத் ஜ்ஞாநே ச சாம்யதி ।
ஜ்ஞாநாஜ்ஞாநே பரித்யஜ்ய ஜ்ஞாநமேவாவசிஷ்யதே ॥ 5

அறிவு, அறியாமை என்ற இந்த இருவிதத் தோற்றமும் ஞானம் ஏற்பட்டவுடன் ஞானத்திலேயே அடங்கி விடுகிறது. அறிவு, அறியாமை இவ்விரண்டையும் விட்டு விட்டால் (ஸ்வரூபமான) ஞானம் மாத்திரம் மிஞ்சும்.

அத்யந்த - மலிநோ தே3ஹோ தே3ஹீ சாத்யந்த - நிர்மலா: ।
அஸங்கோ3 (அ)ஹமிதி ஜ்ஞாத்வா சௌசமேதத் ப்ரசக்ஷதே ॥ 6

சரீரமானது மிகவும் அழுக்கடைந்தது. ஆத்மாவோ மிகவும் நிர்மலமானது. நான் சரீரத்துடன் எவ்வித ஸம்பந்தமும் அற்றவன் என்று அறிந்துகொள்வதுதான் ஞானிக்கு சௌசமென்பது.

(இங்கு ஆத்ம ஞானிக்கு சரீர சுத்தி என்ற சௌச ஆசாரத்தைக் கூறுகிறார்.)

மந் - மநோ மீநவந் - நித்யம் க்ரீட3த்யாநந்த3 வாரிதௌ4 ।
ஸுஸ்நாதஸ் - தேந் பூதாத்மா ஸம்யக்3 - விஜ்ஞாந - வாரிணா ॥ 7

ஆனந்தமாகிற ஸமுத்திரத்தில், என்னுடைய மனஸ் மீனைப்போல எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருக்கிறது. அந்த (அதிலுள்ள) தெளிவான அறிவு என்கிற ஜலத்தினால் நன்கு ஸ்நாநம் செய்தவனாக சுத்தம் செய்யப்பட்ட மனஸுடையவனாக இருக்கிறேன்.

அதா3க4மர்ஷணம் குர்யாத் ப்ராணாபாந - நிரோத4த: ।
மந: பூர்ணே ஸமாதா4ய மக்3ந - கும்போ4 யதா2ர்ணவே ॥ 8

பிறகு ஸமுத்திரத்தில் மூழ்கின குடம் எப்படியோ (அது போல) பிராணன் அபானன் என்ற வாயு ஸஞ்சாரத்தையும் நிறுத்தி, மனஸை எங்கும் நிறைந்த ஆத்மா விடத்தில் நன்கு நிலை நிறுத்தி (முழுகப்பண்ணி), "அகமர்ஷணம்" என்ற ஆசாரத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

(ஸ்நாநம் செய்யும் பொழுது பாபத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டு ஜபிக்கும் மந்திரமே அகமர்ஷணம்.)

லய - விக்ஷேபயோ: ஸந்தெ[4]ள மநஸ்தத்ர நிராமிஷம் ।
ஸ ஸந்தி[4]: ஸாதி[4]தோ யேந ஸ முக்தோ நாத்ர ஸம்சய: ॥ 9

லயமாகிற தூக்கத்திற்கும் விக்ஷேபமாகிற விழிப்புநிலையின் வெளிப்பார்வைக்கும் மத்தியில் மனஸ் இருந்தால் அந்த நிலையில் விஷய ஸுக அநுபோகமின்றி இருக்கும். அந்த (இரண்டும் அல்லாமல், இரண்டும் சேருமிடமான) ஸந்தியில் நிறுத்துவது எவனால் சாதிக்கப்பட்டிருக்கிறதோ, அவன் (ஸம்ஸார பந்தத்திலிருந்து) விடுதலை யடைந்த முக்தன். இந்த விஷயத்தில், ஸந்தேஹம் இல்லை.

(தூக்கத்தில் அமைதி இருந்தாலும் அறிவு இல்லை. விழிப்பில் அறிவு இருந்தாலும் அமைதி இல்லை. அமைதி, அறிவு இரண்டும் ஸந்திக்கப் பழகுவதே ஆத்ம ஸாதகனின் ஸந்தியாவந்தனம்.)

ஸர்வத்ர ப்ராணினாம் தே[3]ஹே ஜபோ ப[4]வதி ஸர்வதா[3] ।
ஹம்ஸ: ஸோ(அ)ஹமிதி ஜ்ஞாத்வா ஸர்வ - ப[3]ந்தை[4]ர் விமுச்யதே ॥ 10

எல்லாப்பிராணிகளுடைய தேஹத்திலும், எப்பொழுதும் "ஹம்ஸ: ஸோஹம்" (ஸர்வ வியாபகமான பிரஹ்மமே நான்) என்ற ஜபமானது இருந்து வருகிறது; இதை அறிந்து கொண்டுவிட்டால் எல்லாக் க்ட்டுகளிலிருந்தும் நன்கு விடுபடுகிறான்.

பிராண ஸஞ்சாரமுள்ளவைகள் பிராணிகள். பிராண ஸஞ்சாரத்தில் காற்றை உள்ளேயிழுக்கும்போது "ஹம்" என்றும் வெளிவிடும் பொழுது “ஸ:" என்றும் தானாகவே சப்தம் ஏற்படுவதை கவனித்துப்பார்த்தால் நன்கு தெரியவரும். இது "ஹம்ஸ ரூபியான பிரம்மந்தான் நான்" என்று அர்த்தம் மேற்படக்கூடிய "ஹம்ஸ: ஸோऽஹம்" என்கிற சப்தமாக பரிணமிக்கிறது. நம்முடைய பிரயத்னம் இல்லாமல் நாம் மூச்சு விடுவதிலேயே ஆத்ம தத்த்வத்தை விளக்கக்கூடியதாக ஏற்பட்டுள்ள இந்த மந்திரத்தை நாம் முயன்று ஜபம் செய்யவேண்டிய அவசியமில்லாததால் இதற்கு "அஜபா" என்று பெயர். ஆத்ம ஞானிக்கு இதுவே ஜபமாகும். வேறு மந்திரங்களை அவன் ஜபிக்க வேண்டுவதில்லை.

தர்பணம் ஸ்வஸுகே[2]நைவ ஸ்வேந்த்[3]ரியாணாம் ப்ரதர்பணம் ।
மநஸா மந ஆலோக்ய ஸ்வயமாத்மா ப்ரகாசதே ॥ 11

தன்னுடைய இந்திரியங்களுக்கு தன்னுடைய ஆத்மாநந்தத்தினாலேயே நன்கு திருப்தி செய்விப்பதுதான் ஆத்ம ஞானி செய்யவேண்டிய தர்ப்பணம். மனஸினால் மனஸை நன்கு பார்க்கையில் ஆத்மா தானாகவே பிரகாசிக்கும்.

தர்ப்பணம் என்றால் திருப்தி செய்வது. ஆத்ம ஞானிக்கு, தேவ ரிஷி பித்ரு தர்ப்பணமெல்லாம் வேண்டாமா என்றால், இந்திரியங்களைத் திருப்தி அடையும்படி செய்வதே அவன் செய்யும் தர்ப்பணமாகும். ஆனால் அந்தந்த இந்திரியங்கள் கேட்கும் வெளிப் பிரபஞ்சத்திலுள்ள விஷய இன்பங்களைக் கொடுத்து திருப்தி செய்யும் விதத்தில் அல்ல. ஆத்மானந்தத்தின் அனுபவத்திலேயே அவைகளை ஈடுபடும்படி செய்வதே சிறந்த தர்ப்பணமாகும்.

ஆத்மநி ஸ்வப்ரகாசாக்3நௌ சித்தமேகாஹுதிம் க்ஷிபேத் |
அக்3நிஹோத்ரீ ஸ விஜ்ஞேயச் சேதரே நாமதா4ரகா: || 12

ஆத்மாவாகிற ஸ்வயம் பிரகாசமாயிருக்கும் அக்னியில் சித்தமாகிற ஒரே ஆஹுதியைப் போடவேண்டும். அவ்விதம் போடுகிறவனே மெய்யாலும் அக்னி ஹோத்திரம் செய்கிறவன் என்று அறிய வேண்டியது. (சடங்காகச் செய்யும்) மற்றவர் களோ (அக்னி ஹோத்ரீ என்ற பெயரைமாத்திரம் தரிக்கிறவர்கள்.

(இங்கு ஞானஸாதகன் செய்யும் அக்னிஹோத்ர ஆசரணை கூறப்படுகிறது).

தே3ஹோ தே3வாலய: ப்ரோக்தோ தே3ஹீ தே3வோ நிரஞ்ஜந: |
அர்சித: ஸர்வபா4வேந ஸ்வா(அ)நுபூ4த்யா விராஜதே || 13

தேஹமானது பகவானுடைய ஆலயம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேஹத் துக்குரியவன் (ஆத்மா) எவ்வித அழுக்குமில்லாத பகவான். (தேஹமான கோயிலில் உள்ள தெய்வமூர்த்தி ஆத்மாவே). எல்லாமாக யிருப்பது தானே என்ற அநுபவத்தாலே (இந்த மூர்த்தி) பூஜிக்கப்பட்டு நன்கு விளங்குகிறார்.

(இதுவே ஞானஸாதகனின் பூஜை).

மௌநம் ஸ்வாத்4யயநம் த்4யாநம் த்4யேய ப்3ரஹ்மாநுசிந்தநம் |
ஜ்ஞாநே நேதி தயோ: ஸம்யஞ் - நிஷேதா4த் தத்த்வ த3ர்சநம் || 14

(ஆத்மஸாதகனுக்கு) ஸ்வயமாக ஏற்பட்ட (வேத) அத்யயனமென்பது மௌனமே. (அவனுக்கான) தியானம் (மற்றவர்கள் தமக்கு வேறாக ஒரு தெய்வத்தை தியானிப்பது போலின்றி) எல்லா தியானத்திற்கும் விஷயமான பிரஹ்மத்தைத் தொடர்ந்து சிந்தனம் செய்வதுதான். ஞானம் ஏற்பட்டுவிட்டால் இவ்விரண்டும் கூடக் கிடையாது என்று நன்கு தடுக்கப்பட்டிருப்பதால் (அந்நிலையில்) மெய்ப்பொருளின் அநுபவம் (மட்டுமே) உண்டு.

அதீதாநாக³தம் கிஞ்சித் ந ஸ்மராமி ந சிந்தயே ।
ராக³ த்³வேஷௌ விநா ப்ராப்தம் பு⁴ஞ்ஜாம் - யத்ர சுபா⁴சுப⁴ம் ॥ 15

சென்றுபோனதையோ, இன்னும் வராமலிருப்பதையோ எதையும் நான் ஞாபகப் படுத்திக்கொள்வதில்லை, ஆலோசித்துப் பார்ப்பதுமில்லை. இப்பொழுது (நிகழ்காலத்தில்) (பிராரப்த கர்ம வசத்தினால்) கிடைக்கும் நல்லதையும் கெட்டதையும், ஆசையோ வெறுப்போ இல்லாமல் அனுபவிக்கிறேன்.

தே³ஹாப்⁴யாஸோ ஹி ஸந்-ந்யாஸோ நைவ காஷாய வாஸஸா ।
நாஹம் தே³ஹோ (அஹமாத்மேதி நிச்சயோ ந்யாஸ லக்ஷணம் ॥ 16

தேஹ (சரீரம் நான் இல்லை. நான் இல்லை என்று அப்யாஸம் செய்வதல்லவா ஸந்யாஸம்? காஷாய வஸ்திரம் உடுப்பதினால் மாத்திரம் (ஸந்யாஸம்) ஆக மாட்டாது. "நான் தேஹம் அல்ல, நான் ஆத்மாவே" என்ற தீர்மானம்தான் ஸந்யாஸத்தின் லக்ஷணம்.

அப⁴யம் ஸர்வ - பூ⁴தாநாம் தா³நமாஹுர் - மநீஷிண: ।
நிஜாநந்தே³ ஸ்ப்ருஹா நாந்யே வைராக்³யேஸ்யாவதி⁴ர் - மதா ॥ 17

ஸகல பிராணிகளுக்கும் அபயம் கொடுப்பதே ஸந்நியாஸி செய்யும் தானம் என்று, அறிவாளிகள் சொல்கிறார்கள். ஸ்வயமான ஆத்மானந்தத்தில் ஆசை, ஆத்மாவைத் தவிர்த்து வேறு பதார்த்தத்தில் ஆசையில்லாமலிருப்பது என்பது எதுவோ அதுவே, (அவனுக்குரிய) வைராக்கியத்தின் எல்லை என்று கருதப்பட்டிருக்கிறது.

இவ்விதம் வைராக்யாதி ஸாதனங்களை ஸம்பாதித்துக்கொண்டு ஸந்யாஸி யானவர் தகுந்த குருவைத் தேடி தத்த்வோபதேசம் பெறவேண்டும் என்று மேலே சொல்லுகிறார்.

வேதா³ந்த ச்ரவணம் குர்யாத் மநநம் சோப்பத்திபி⁴ ।
யோகே³நாப்⁴யஸநம் நித்யம் ததோ த³ர்சநமாத்மந: ॥ 18

உபநிஷத்துக்களின் சிரவணத்தை (தாத்பர்யத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்வதை) செய்யவேண்டும். (சிரவணம் செய்ததை) நியாயமான யுக்திகளால் மனனம் (நன்கு ஆலோசிப்பது) செய்யவேண்டும். எப்பொழுதும், யோகம் எனும் ஒருமைப்பாட்டால் (சிரவண, மனனம் செய்ததை) திரும்பத்திரும்ப (உள் மனசில்) பயின்று கொண்டிருக்கவேண்டும். அதன் பிறகு (அதிலிருந்து) ஆத்மாவினுடைய ஸாக்ஷாத் காரம் (ஏற்படும்).

சப்த சக்தோசிந்த்யத்வாத் சப்தா³தே³வாபரோக்ஷதீ⁴: ।
ப்ரஸுப்த: புருஷோ யத்³வத் சப்தே³நைவாவபு³த்³த்⁴யதே ॥ 19

சப்தத்தின் சக்தியானது மனஸினால் கூட நினைக்கமுடியாத பெருமையுள்ளதால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் சப்தத்தினால்தான் (ஏற்படுகிறது). எதுபோலவெனில் நன்கு தூங்குகிற மனிதன் சப்தத்தினாலேயே விழித்துக்கொள்வது போல.

ஆத்மாநாத்ம விவேகேந ஜ்ஞாநம் ப4வதி நிச்சலம் ।
கு3ருணா போ3தி4த: சிஷ்ய: சப்த3 ப்3ரஹ்மாதிவர்ததே ॥ 20

ஆத்மா எது, அநாத்மா எது, என்ற பகுத்தறிவினால் அசைக்கமுடியாத ஞான மானது ஏற்படுகிறது. குருவினால் உபதேசிக்கப்பட்ட சிஷ்யன் சப்தரூபமான பிரஹ் மத்தைத் தாண்டிவிடுகிறான்.

(இதன்பின் குரு செய்யும் உபதேசம் கூறப்படுகிறது).

ந த்வம் தே3ஹோ நேந்த்3ரியாணி ந ப்ராணோ ந மநோ ந தீ4: ।
விகாரித்வாத்3 - விநாசித்வாத்3-த்3ருக்யத்வாச்ச க4டோ யதா2 ॥ 21

நீ தேஹம் அல்ல, இந்திரியங்கள் அல்ல, பிராணன் அல்ல, மனஸ் அல்ல, புத்தி அல்ல. இவையெல்லாம் மாறுதலடையும் தன்மையுள்ளதாலும், நாசத்தையடையும் தன்மையுள்ளதாலும், பார்க்கப்படும் (ஞானத்திற்கு விஷயமாயிருக்கும்) தன்மையுள்ள தாலும் குடம் எப்படியோ அப்படியேதான். (நீ இவை அல்ல).

தேஹம் முதல் புத்தி வரையுள்ளவைகளை நாம் ஆத்மாவென்று நினைக்கிறோம்; அது தவறு. அவை யாவும் மாறிக்கொண்டும், நசித்துக்கொண்டும், அறியும் பொரு ளாகவும் இருப்பதால், எவ்வித மாறுதலுமற்று ஏகரூபமாய், நாசமற்று, சாசுவதமாய், அறியப்படாமல் சுத்த அறிவு ஸ்வரூபமாயுள்ள ஆத்மாவாக இருக்கமுடியாது. மண்ணிலிருந்து குடம் போல, இவை ஆத்மாவிலிருந்து உண்டானவையே. குடமானது மாறுகிறது, அறியப்படுகிறது, அழிகிறது. இவற்றின் போதும் ஆதாரமான மண்ணோ உள்ளபடியே உள்ளது. ஆத்மா இது போன்றதே.

விசுத்3த4ம் கேவலம் ஜ்ஞாநம் நிர்விசேஷம் நிரஞ்ஜநம் ।
யதே3கம் பரமாநந்த3ம் தத் த்வமஸ்யத்3வயம் பரம் ॥ 22

நன்கு சுத்தமாய், தனித்து ஞானஸ்வரூபமாய், எவ்வித விசேஷமும் அற்றதாய், எந்தவித தோஷமும் அற்றதாய், ஒன்றாய், மேலான ஆனந்த ஸ்வரூபமாய், இரண்டற்று
உள்ள உத்கிருஷ்டமான வஸ்து எதுவோ அதுவே நீ.

சப்3த3ஸ்யாத்3யேந்தயோ: ஸித்3த4ம் மநஸோ(அ)பி ததை2வ ச ।
மத்4யே ஸாக்ஷிதயா நித்யம் ததே3வ த்வம் ப்4ரமம் ஜஹி ॥ 23

சப்தத்தினுடைய ஆதியிலும் முடிவிலும், அப்படியே மனஸினுடைய ஆதியிலும் முடிவிலும் ஸித்தமாயும் நடுவில் (சப்தத்தையும் மனஸையும்) பார்த்துக்கொண்டிருக்கும் தன்மையோடும் எப்பொழுதும் எது இருக்கிறதோ அதுவேதான் நீ. (தேஹ, மனங்களையே 'நான்' என்றெண்ணும்) பிரமையை விட்டுவிடு.

ஸ்தூ²ல-வைராஜயோரைக்யம் ஸூக்ஷ்ம-ஹைரண்ய க³ர்ப⁴யோ: |
அஜ்ஞான-மாயயோரைக்யம் ப்ரத்யக்³-விஜ்ஞான பூர்ணயோ: || 24

ஸ்தூலத்திற்கும் (ஸ்தூல சரீராபிமானியான விசுவனுக்கும்) விராட்டுக்கும் அபேதம். ஸூக்ஷ்மத்திற்கும் (ஸூக்ஷ்ம சரீராபிமானியான தைஜஸனுக்கும்) ஹிரண்ய கர்ப்பருக்கும் அபேதம். (பிராஜ்ஞனுக்கு உபாதியான) அஞ்ஞானத்திற்கும் (ஈசுவரனுக்கு உபாதியான) மாயைக்கும் அபேதம். (நான்காவதாய் உபாதியற்றதாயுள்ள) பிரத்யகாத்மாவுக்கும் பரிபூர்ணமான பிரஹ்மத்திற்கும் அபேதம்.

(விழிப்பு நிலையிலுள்ள ஸ்தூல பிரபஞ்சத்தை உபாதியாகக்கொண்ட விராட் என்பவரும் அதிலடங்கிய ஸ்தூல சரீரத்தை மட்டும் நான் என்று நினைக்கிற விசுவன் என்பவனும் ஒன்று. கனவு நிலையிலுள்ள ஸூக்ஷ்ம பிரபஞ்சத்தை உபாதியாகக்கொண்ட ஹிரண்ய கர்ப்பர் என்பவரும் அதிலடங்கிய ஸூக்ஷ்ம சரீரத்தை மட்டும் நான் என்று பாவிக்கிற மாயிருக்கிற வியாபகமான மாயையை உபாதியாகக் கொண்ட ஈசுவரன் என்பவரும் அதில் அடங்கிய சிறியதான அவித்யையை மட்டும் உபாதியாகக்கொண்ட (கனவற்ற தூக்கநிலையிலுள்ள) பிராக்ஞன் என்பவனும் ஒன்று. விராட், ஹிரண்யகர்பர், ஈசுவரன் என்ற உபாதிகளோடு கூடிய மூன்று தத்துவங்களையும் வியாபித்துக்கொண்டு அவ்வுபாதிகளால் பாதிக்கப்படாமல் இருந்துவரும் சுத்த சைதன்ய ஸ்வரூபமான பரப்பிரஹ்மமும், விசுவன், தைஜஸன், பிராஜ்ஞன் என்ற உபாதிகளோடு கூடிய மூன்று ஜீவகலைகளையும் வியாபித்துக்கொண்டு அவ்வுபாதிகளால் பாதிக்கப்படாமல் இருந்துவரும் சுத்தசைதன்ய ஸ்வரூபியுமான (ஜீவாத்மா என்று பொதுவிலே சொல்லப்படும்) பிரத்யகாத்மாவும் ஒன்றே.

சிந்மாத்ரைக ரஸே விஷ்ணௌ ப்³ரஹ்மாத்மைக்ய ஸ்வரூபகே |
ப்⁴ரமேணைவ ஜகஜ்ஜாதம் ரஜ்ஜ்வாம் ஸர்ப்ப ப்⁴ரமோ யதா² || 25

கயிற்றில், பாம்பு என்கிற பிரமம் எப்படி (ஏற்படுகிறதோ அப்படியேதான்), பிரமத்தினாலேயே, சுத்த ஞானஸ்வரூபமாய் ஒரேவிதமாய், வியாபகமாய், பிரஹ்மமும் ஆத்மாவும் ஒன்று என்பதையே ஸ்வரூபமாயுள்ள பரமாத்மாவினிடத்தில், பிரமையினாலேயே ஜகத்தானது உண்டாயிருக்கிறது.

[ஒன்றாக இருக்கிற பதார்த்தத்தில் அதைவிட வேறாக இன்னொன்று இருப்பதாகத் தோன்ற முடியுமா என்கிற ஸந்தேஹத்தை நிவர்த்திப்பதற்காக, கயிறு

பாம்பு திருஷ்டாந் தம். கயிறு மாத்திரம் இருக்கும்போது கயிற்றையே பாம்பாக பிரமையில் நினைப்பதால் கயிறில்லாத பாம்பு தோன்றவில்லையா? அதேபோல் வாஸ்தவத்தில் ஆத்மா ஒன்றே இருக்கையில் ஜகத் இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் அந்தத் தோற்றம் பிரமமேயாகும், வாஸ்தவமல்ல].

தார்கிகாணாம் து ஜீவேசௌ வாச்யாவேதௌ விது[3]ர்பு[3]தா[4]: |
லக்ஷ்யௌ ச ஸாங்க்[2]ய யோகா[3]ப்[4]யாம் வேதா[3]ந்தைரேகதா தயோ: || 26

தார்க்கிகர்களின் மத (தர்க்கசாஸ்திர)த்தில், ஜீவர்களும் ஈச்வரனும் வாசயர்கள்தான் (என்று) அறிவாளிகள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். ஸாங்க்யர் களுக்கும் யோகிகளுக்கும் (ஜீவ, ஈச்வரர்) லக்ஷயர்களே. வேதாந்தமெனும் உபநிஷத் ரீதியில் அவ்விருவர்களுக்கும் ஐக்கியமே.

[பரமாத்மா ஒன்றேதான், அதுதான் நீ, என்று சொன்னால், "ஜகத்தை ஸ்ருஷ்டி செய்யும் ஈச்வரன் வேறு, அவரால் ஆளப்படும் நான் வேறு, என்று நன்கு தெரிகிறதே; அதற்கு என்ன ஸமாதானம்?" என்று கேட்கத் தோன்றும். இந்த ஸந்தேஹம் ஏற்படுவதற்கே காரணம் ஜீவன், ஈசுவரன் இவர்களுடைய தத்துவத்தை நன்கு அறியாததுதான். இவ்விருவர்களுடைய தத்துவத்தைப்பற்றி நியாயம் (தர்க்கம்) ஸாங்க்யம், யோகம் முதலான எல்லா தர்சனகாரர்களும் விசாரித்திருக்கிறார்கள். ஸாதாரணமாக உலகத்தில் சரீராதிகளோடு இருந்துகொண்டு பாவ புண்யங்களைச் செய்துகொண்டு அவைகளின் பலன்களை அனுபவித்துக்கொண்டு ஈசுவரனுடைய ஆளுகைக்குக் கட்டுப்பட்டு சிறியவனாய் அல்ப ஞானத்தோடு, அல்ப சக்தியோடு இருப்பவனே ஜீவன். ஜகத்தை ஸ்ருஷ்டி செய்து பரிபாலித்து ஸம்ஹரித்து வருபவராய் ஜீவர்களை நியமனம் செய்து அவரவர்கள் புண்ணிய பாபங்களுக்குத் தக்கபடி சுகதுக்க அனுபவங்களைக் கொடுத்துக் கொண்டு ஸர்வக்ஞனாய், ஸர்வ சக்தனாய், ஸர்வ வியாபகனாய் இருப்பவனே ஈசுவரன். இப்படித்தான் நியாய சித்தாந்திகளான தார்க்கிகர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன்படி ஜீவனும், ஈசுவரனும் என்றும் வேறுபட்டவர்களே, ஒரு நாளும் ஒன்றாக ஆகமாட்டார்கள். ஸாங்க்யர்கள் ஜீவ தத்வத்தைப்பற்றி விசாரிக்கும் போது அதன் நிஜஸ்வரூபத்தில் சரீராதிகளோ, ஸுகதுக்கங்களோ சேர்ந்தவையல்ல என்றும், அநாத்மாவான பிரகிருதியின் ஸம்பந்தத்தினால்தான் இவை ஆத்மாவில் இருப்பதாகத் தோன்றுகின்றன என்றும் வாஸ்தவத்தில் ஆத்மா சுத்தமான சைதன்ய ஸ்வரூபம் தான் என்றும், ஆனால் இந்த சுத்த சைதன்ய ஸ்வரூபம் ஒவ்வொரு ஜீவனுக்கும் தனித்தனியென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். யோகதர்சனத்திலும் இவ் விதமே ஜீவனுடைய தன்மையைச் சொல்லிவிட்டு அந்த ஜீவர்களுக்குள் ஸர்வக்ஞனாய் இதர ஜீவர்களால் உபாஸிக்கத் தகுந்தவனாய் இருப்பவன் ஈசுவரன் என்று சொல்கிறார்கள். இவ்விரு மதங்களிலும் ஜீவர்களுக்குள்ளேயோ ஈசுவரனுக்கோ தனித்தனி சைதன்யம் ஒப்புக்கொள்ளப்படுகிறபடியால் ஜீவனும் ஈச்வரனும் என்றைக்கும் வெவ்வேறுதான். வேற்றுமையை உண்டாக்கக்கூடிய அம்சங்கள் எல்லாம் அனாத்மாவை சேர்ந்தபடியால் அவ்வம்சங்களை எல்லாம் விலக்கிப்பார்க்கும்போது ஜீவன், ஈசுவரன் இருவருமே சுத்த சைதன்யமென்று

ஏற்படும். அந்த நிலையில் வித்யாஸத்திற்கு இடமில்லாததினால் இருவரும் வாஸ்தவத்தில் ஒன்றேதான் என்பது உபநிஷத்துக்களைப் பிரமாணமாகக் கொண்ட (அத்வைத) வேதாந்திகளின் தீர்மானம்.

உபாதிகளுடன் சேர்த்துப்பார்க்கும் போது வாச்யார்த்தம் என்றும், உபாதிகளை விலக்கிப்பார்க்கும் போது லக்ஷ்யார்த்தம் என்றும், வாச்யார்த்தத்தில் தோன்றும் வேற்றுமையையும் விலக்கிவிட்டால் ஐக்கியமே என்றும், இந்தச் சுலோகத்தில் சொல்லப்பட்டது.

மேற்கொண்டு உபநிஷத்துக்கள் காட்டும் ஜீவ-ஈசுவர ஐக்கியத்தை நிரூபணம் செய்கிறார்: -

கார்ய காரண வாச்யாம்சௌ ஜீவேசோர் யௌ ஜஹச்ச தௌ ।
அஜஹச்ச தயோர் - லக்ஷயௌ சிதꣲம்சாவேகரூபிணௌ ॥ 27

ஜீவனிடத்திலும் ஈசுவரனிடத்திலும் உள்ள அந்தக்கரணம், மாயை என்னும் வாச்யார்த்தத்தின் அம்சங்களை விட்டும், அவ்விரண்டுகளின் லக்ஷ்யங்களான சைதன் யாம்சங்களை விடாமலும் இருந்தால் (ஜீவனும் ஈச்வரனும்) ஒரே ஸ்வரூபமாக ஆகின்றனர்.

ஜீவ ஸ்வரூபத்திலுள்ள கார்ய ரூபமான அந்தக்கரணம் என்னும் வாச்யார்த்தத்தின் அம்சத்தையும் ஈசுவர ஸ்வரூபத்திலுள்ள காரண ரூபமான மாயை என்னும் வாச் யார்த்தத்தின் அம்சத்தையும் விட்டு விட்டு இரண்டிலும் லக்ஷ்யாம்சமான சைதன்யத்தை விடாமல் இருந்தால் இரண்டிலும் உள்ள சைதன்யம் ஒரே ரூபமாயிருப்பதால் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் ஐக்யம் ஸித்திக்கிறது.

கார்யம் என்பது அந்தக்கரணம்; அத்துடன் கூடியவன் ஜீவன். காரணம் என்பது மாயை; அத்துடன் கூடியவன் ஈசுவரன்.

கர்ம சாஸ்த்ரே குதோ ஜ்ஞானம் தர்கே நைவாஸ்தி நிச்சய: ।
ஸாங்க்²ய - யோகெ³ள பி⁴தா³பந்நௌ சாப்³தி³கா: சப்த-தத்பரா: ॥ 28

கர்மாவை போதிக்கும் (மீமாம்ஸா) சாஸ்திரத்தில் எப்படி ஞானம் (ஏற்படும்)? (அதோடு சேர்ந்த) தர்க்க சாஸ்திரத்தில் (ஞான விஷயத்தில்) தீர்மானமானது கிடையவே கிடையாது. ஸாங்க்ய சாஸ்திரமும் யோக சாஸ்திரமும் வேற்றுமையை ஒப்புக்கொண்டவை. சப்த விஷயமான (வியாகரண) சாஸ்திரத்தை அனுஸரிப்பவர்கள், சப்தத்திலேயே - ஈடுப்ட்டவர்கள். (எனவே இந்த தரிசனங்களில் எதுவும் ஆத்ம ஞானத்துக்கு உதவாது.)

[ஆத்மாவை கர்த்தா என்றும் போக்தா என்றும் ஒப்புக்கொண்டால்தான் அவனைப்பார்த்து "இதைச் செய், இந்த பலனை அடைவாய்" என்று சொல்லமுடியும். அவ்விதம் கட்டளையிடும் சாஸ்திரம் மூலம் கர்த்தாவும் போக்தாவுமல்லாத சுத்த சைதன்ய ரூபமான ஆத்மாவின் ஞானம் ஏற்படுவதற்கு இடமேயில்லை. தர்க்கத்தை எடுத்துக் கொண்டால் ஒருவன் தன் யுக்தியினால் ஒருவிதமாகத் தீர்மானம் செய்தாலும் அவனுக்கு மேல் புத்திசாலியாயுள்ள மற்றொருவன் அந்தத் தீர்மானம் யுக்திக்குப் பொருந்தாது என்று காட்டிவிட முடியும். ஆகையால் தர்க்க சாஸ்திரத்தின் உதவியைக்கொண்டு மாற்றமுடியாத ஒரு முடிவிற்கு வருவது ஸாத்தியமாகாது. ஸாங்க்யமும் யோகமும் முன் சொன்னபடி ஜீவனும் ஈசுவானும் வெவ்வேறு என்றே வைத்துக்கொண்டிருப்பதால் இவ்விருவர்களும் அபேதத்தை போதிக்கமுடியாது. சப்தசாஸ்திரத்தில் ஈடுபட்டவர்கள் வார்த்தைகளுடைய வ்யுத்பத்தியுடன் நின்றுவிடுவார்களே தவிர, அர்த்த விசாரத்தில் இறங்குவதில்லை. ஆகவே இந்த சாஸ்திரங்கள் மூலம் அபேத ஞானத்தை அடைய முடியாது].

அந்யே பாஷண்டி[3]ந: ஸர்வே ஜ்ஞாநவார்தா ஸுது[3]ர்லபா[4]: |
ஏகம் வேதா[3]ந்த விஜ்ஞாநம் ஸ்வாநுபூ[4]த்யா விராஜதே || 29

மற்ற எல்லாரும் பாஷண்டிகள். அவர்களுக்கு ஞானம் என்ற பேச்சே வெகு துர்லபம். வேதாந்தத்தினால் அறியப்படும் ஞானம் ஒன்றுதான் தனக்கு ஸ்வயமாய் ஏற்படும் அனுபவத்திற்கு விஷயமாகிப் பிரகாசிக்கிறது.

[இதுவரை சொன்ன ஸித்தாந்திகள் வேதம் பிரமாணம் என்று ஒப்புக்கொள்ளும் ஆஸ்திகர்களே. இவர்களே ஜீவேசுவர ஐக்கிய ஞானத்தை அடைய முடியாதென்றால், வேத மதத்திற்குப் புறம்பான மார்க்கங்களில் இருந்து வருகிறவர்களுக்கு இந்த ஞானம் வெகு துர்லபமேயாகும். ஆகவே வேதாந்தம் மூலம்தான் ஐக்ய ஞானம் உண்டாகும். அதுதான் ஸ்வாநுபவத்துடன் விளங்குவது].

இவ்விதம் வேதாந்தத்தினால் போதிக்கப்பட்டு ஸ்வானுபவத்தினால் ஸாக்ஷாத்கரிக்கப்படும் ஞானத்தின் ஸ்வரூபம் மேல் சுலோகங்களில் விவரிக்கப்படுகிறது.

அஹம் மமேத்யயம் ப[3]ந்தோ[4] மமாஹம் நேதி முக்ததா |
ப[3]ந்த[4]மோக்ஷௌ கு[3]ணைர்-பா[4]தோ கு[3]ணா: ப்ரக்ருதி-ஸம்ப[4]வா: || 30

நான், என்னுடையது என்ற எண்ணமே (அதாவது, அநாத்மாவான தேஹாதிகளை நான் என எண்ணும் அஞ்ஞானமே) பந்தமாகும். என்னுடையது, நான் ஆகிய இரண்டும் இல்லை என்றால், அதுவே விடுபட்ட முக்தநிலையாகும். பந்தமும் மோக்ஷமும் குணங்களினால்தான் தோன்றுகின்றன. அந்த குணங்கள் பிரகிருதியினால் ஏற்பட்டவை.

ஜ்ஞாநமேகம் ஸதா³ பா⁴தி ஸர்வாவஸ்தா³ஸ நிர்மலம் ।
மந்த³பா⁴க்³யோ ந ஜாநந்தி ஸ்வரூபம் கேவலம் ப்³ருஹத் ॥ 31

ஞானமானது ஒரே விதமாய் நிர்மலமாய் எல்லா நிலைகளிலும் எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. (இவ்விதம் பிரகாசிக்கிற) மஹத்தான தன்னுடைய ஸ்வரூபத்தை மட்டும் பாக்யமில்லாதவர்கள் அறிகிறதில்லை.

ஸங்கல்ப ஸாக்ஷி யத் ஜ்ஞாநம் ஸர்வலோகைக ஜீவநம் ।
ததே³வாஸ்மீதி யோ வேத3 ஸ முக்தோ நாத்ர ஸம்சய: ॥ 32

மனசில் தோன்றும் எண்ணங்களையெல்லாம் ஸாக்ஷியாயிருந்து அறிந்து கொண்டு எல்லா பிராணிகளும் ஜீவிப்பதற்கு ஒரே காரணமாக இருக்கின்ற ஞான ஸ்வரூபமான ஆத்மாவாகவே நான் இருக்கிறேன் என்று அறிகிறவனே விடுபட்ட முக்தன். இந்த விஷயத்தில் சந்தேஹமே கிடையாது.

ப்ரமாதா ச ப்ரமாணம் ச ப்ரமேயம் ப்ரமிதிஸ்-ததா² ।
யஸ்ய பா⁴ஸா (அ)வபா⁴ஸந்தே மாநம் ஜ்ஞாநாய தஸ்ய கிம் ॥ 33

அறிகிறவனும், அறிவின் ஸாதனமும், அறியப்படும் விஷயமும், அப்படியே, அறிகிறதென்ற புத்தியின் விருத்தியும் எவருடைய பிரகாசத்தினால் பிரகாசிக்கின்றனவோ, அவருடைய ஞானத்தை உத்தேசித்து (அதாவது அவரை அறியக்கூடிய) அறிவின் சாதனம் என்ன இருக்கமுடியும்? (எதுவும் இருக்க முடியாது).

அர்தா²காரா ப⁴வேத்-வ்ருத்தி: ப²லேநார்த²: ப்ரகாசதே ।
அர்த²ஜ்ஞாநம் விஜாநாதி ஸ ஏவார்த²: ப்ரகாசதே ॥ 34

புத்தியினுடைய விருத்தியானது (விஷயத்தை நோக்கிச்சென்று) விஷயத்தின் ஆகாரத்தை (டிவத்தையே எடுத்துக்கொண்டதாக ஆகும். சைதன்யத்தால் விஷயமானது தெரிகிறது. விஷய ஞானமானது தனக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதை நன்கு அறிகிறான். விஷயம் பிரகாசிக்கிறது என்பது அதுவே தான்.

நாம் எத்தனையோ பொருள்களைப் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம். உதாரண மாக குடம் என்ற அறிவு நமக்கு எப்படி ஏற்படுகிறது என்று பார்ப்போம். நாம் கண்ணால் ஒரு குடத்தைப் பார்த்ததும் நம்முள் இருக்கிற மனமானது கண்வழியாக வெளியில் சூரிய கிரணம் போல் நீண்டு சென்று குடத்தை வியாபித்து குடத்தின் உருவத்தை அடைந்து விடுகிறது. நதியிலுள்ள நீர் வாய்க்கால் வழியாகச் சென்று வயலை அடைந்து வயல் முழுவதும் பரவி வயலின் வடிவத்தை அடைந்து விடுகிறதல்லவா! இப்படி விஷயாகாரத்தை அந்தக்கரணம் அடைவதைத்தான் அந்தக்கரண விருத்தி என்று சொல்கிறார் கள். இந்த விருத்தியினால் ஆவரணம் அதாவது மறைவு (குடம் முதலியவை நமக்குத் தெரியாமலிருந்த நிலை)

நீங்குகிறது. அதன் பிறகு ப்ரகாசரூபமான சைதன்யத்தால் குடம் நமக்குத் தெரியவருகிறது.'இது குடம்'என்று சொல்கிறோம். குடத்தை நான் அறிகிறேன் என்று சொல்கிறோம். இதுவே " பல வியாப்தி'அல்லது "சைதன்ய வியாப்தி'". இது போலவேதான் எல்லா விஷயங்களிலும். இதுதான் விஷயத்தை அறிந்து கொள்வது என்பது.

வருத்தி-வ்யாப்யத்வ-மேவாஸ்து ப^{2}ல-வ்யாப்தி: கத^{2}ம் ப^{4}வேத் |
ஸ்வப்ரகாச ஸ்வரூபத்வாத் ஸித்^{3}த^{4}த்வாச்ச சிதா^{3}த்மந: || 35

(ஆத்ம ஜ்ஞான விஷயத்தில்) விருத்தியினால் வியாபிக்கப்படும் தன்மை மாத்திரம் இருக்கட்டும். ஞானரூபனான ஆத்மா ஸ்வயம் ப்ரகாசஸ்வரூபனாயும், ப்ரஸித்தனாயும் இருப்பதால் சைதன்யத்தால் வியாபிக்கிறது என்பது எப்படி இருக்கமுடியும்?

[உலகிலுள்ள எந்த ஜடப்பொருளையும் நாம் தெரிந்துகொள்வதற்கு விருத்தி வ்யாப்தி, பல வ்யாப்தி இரண்டும் வேண்டும். அந்தக்கரணம் விஷயமிருக்குமிடம் சென்று விஷயம் முழுவதும் பரவி விஷயாகாரத்தை அடைவது விருத்தி வ்யாப்தி என்பது. சைதன்ய சம்பந்தம் பல வ்யாப்தியாகும். இவற்றில் விருத்தி வ்யாப்தியால் ஆவரணம் (மறைப்பு) நீங்குகிறது. பல வ்யாப்தியால் ஜடமான பொருள் நமக்குத் தெரியவருகிறது. ஆத்மாவை நாம் தெரிந்துகொள்வதற்கு விருத்தி வியாப்திமட்டும் போதும். பல வ்யாப்தி தேவையில்லை. ஏனெனில் ஆத்மாவை நமக்குத் தெரியவொட்டாமல் மறைந்துக்கொண்டிருக்கும் ஆவரணம் நீங்க அந்தக்கரண விருத்தி வ்யாப்தி அவசியம் வேண்டியதுதான். மறைவு நீங்காதவரை ஆத்மா நமக்குத் தெரியாதல்லவா? ஆனாலும் ஆத்மா சைதன்ய ரூபமாய் ஸ்வயம் ப்ரகாசமாய் ப்ரஸித்தமாய் இருப்பதால் வேறொரு சைதன்ய வ்யாப்தி வேண்டியதில்லை. சைதன்யமல்லாத ஜடவஸ்துவைத் தெரிந்துகொள்ளத்தான் சைதன்ய வியாப்தி வேணுமே தவிர, சைதன்யத்தைத் தெரிந்துகொள்ள அது வேண்டாம்.]

சித்தம் சைதந்ய மாத்ரேண ஸம்யோகா^{3}த் சேதநம் ப^{4}வேத் |
அர்தா^{2}த^{3}ர்தாந்தரே வ்ருத்திர் க^{3}ந்தும் சலதி சாந்தரே |
நிராதா^{4}ரா நிர்விகாரா யா தசா ஸோந்மநீ ஸ்ம்ருதா || 36

புத்தியானது சுத்த சைதன்யத்யோடு சேருவதினால்தான் அறிவுள்ளதாக ஆகும். புதிய விருத்தியானது ஒரு விஷயத்திலிருந்து வேறு விஷயத்திற்குப் போவதற்காக சலித்துக்கொண்டேயிருக்கிறது. (ஒரு விருத்திக்கும் வேறு விருத்திக்கும்) மத்தியில் எவ்வித விஷயத்தாலும் ஆச்ரயிக்காமல், தான் மாறுதலுமடையாமல் இருக்கும் நிலை எதுவோ அது “உன்மனீ'' (மனஸிற்கு மேலானது) என்று எண்ணப்படுகிறது.

சித்தம் சிதி³தி ஜாநீயாத் தகார ரஹிதம் யதா³ ।
தகாரோ விஷயாத்⁴யாஸோ ஜபாராகோ³ யதா² மணௌ ॥ 37

சித்தம், எப்பொழுது. "த" என்ற அக்ஷரம் இல்லாமல் போகிறதோ, அப்பொழுது அதை, "சித்" என்று அறியவும் (சித்தை சித்தமாக ஆக்குகிற) "த" என்ற அக்ஷரம் விஷயத்தோடு ஒன்றாய்த்தோன்றும்படி கலப்பது என்பதைக் குறிக்கும். எப்படி சுத்தமான ஸ்படிக மணியில், ஜபா புஷ்பத்தின் (செம்பருத்திப் பூவின்) வர்ணம் தோன்றுகிறதோ அதே மாதிரி.

[விஷயங்களைப்பற்றிய பல எண்ணங்களாகிய செவ்வண்ணத்தை நீக்கினால் சித்தம் எண்ணமற்ற வண்ணமற்ற சுத்தமான சித்தாக நிற்கும்.]

ஜ்ஞேய வஸ்து பரித்யாகா³த் ஜ்ஞாநம் திஷ்ட³தி கேவலம் ।
த்ரிபுடீ க்ஷீணதாமேதி ப்³ரஹ்ம நிர்வாணம் ருச்ச²தி ॥ 38

அறியப்படும் பதார்த்தத்தை விட்டுவிட்டால் ஞானம், தனித்து நிற்கும். அறிகிற ஞாதா, அறியப்படும் ஞேயம், அறிகிற கிரியையான ஞானம் இம்மூன்றும் நாசமடைந்த நிலையை அடைந்துவிடும். அப்பொழுது, பிரஹ்மானந்தந்தை அடைகிறான்.

மநோமாத்ரமித³ம் ஸர்வம் தன்மநோ ஜ்ஞாநமாத்ரகம் ।
அஜ்ஞானம் ப்⁴ரம இத்யாஹுர் விஜ்ஞாநம் பரமம் பத³ம் ॥ 39

இந்த (ஜகத்) எல்லாம் மனஸ்தான் (மனத்தில் உண்டானதுதான்). அந்த மனஸ் அறிவேதான் (அறிவிலிருந்து உண்டானதேதான்). அறியாமை பிராந்தி; ஸாக்ஷாத் காரமே மேலான நிலை என்று சொல்கிறார்கள்.

[அறியாமை எனும் அஞ்ஞானத்தில் மனஸையும் ஆத்மாவையும் ஒன்றுபடுத்து வதனால் தான் ஜகத் தோன்றுகிறது. அந்த அறியாமை நீங்கி சுத்தமான ஆத்ம ஸ்வரூப அனுபவமாகிற ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டால் அதற்குமேல் உத்தமமான நிலை கிடையாது.]

அஜ்ஞானம் சாந்யதா²ஜ்ஞானம் மாயாமேதாம் வ³தந்தி தே ।
ஈச்வரம் மாயிநம் வித்யாத் மாயாதீதம் நிரஞ்ஜநம் ॥ 40

விபரீதமாகத் தெரிந்துகொள்வதுதான் அஞ்ஞானம் என்பது. இதையே மாயை என்றும் பெரியோர்கள் சொல்கிறார்கள். இந்த மாயையை உடையவரே ஈசுவரன் என்றும், மாயைக்கு அதீதமாயுள்ளது எவ்வித தோஷமுமற்ற சுத்த ப்ரஹ்மம் என்றும் அறியவேண்டும்.

மாயைக்கு உட்பட்டவன் ஜீவன். மாயையோடு கூடி அதைத் தன்வசப்படுத்திக்

கொண்டிருப்பவன், ஜீவ - ஜகத்துக்களை நடத்தும் ஸகுண ப்ரஹ்மமான ஈசுவரன். ஜீவ பேதம் நீங்கி ஜகத் அழிவுபட்டு, மாயையின் ஸம்பந்தமில்லாமலிருப்பது நிர்க்குண ப்ரஹ்மமான சுத்த சைதன்யம்.

ஸதா[3]நந்தே[3] சிதா[3]காசே மாயா மேக[4]ஸ்-தடின் மந: |
அஹந்தா க[3]ர்ஜநம் தத்ர தா[4]ராஸாரா ஹி வ்ருத்தய: || 41

மஹா மோஹாந்த[4]காரே (அ)ஸ்மின் தே[3]வோ வர்ஷதி லீலயா |
தஸ்யா வ்ருஷ்டேர்-விராமாய ப்ரபோ[3]தை[4]க ஸமீரண: || 42

ஸத்தாகவும் ஆனந்தமாகவும் சித்தாகவுமுள்ள ஆகாசத்தில், மாயை என்பது மேகம். மனஸானது மின்னல். அதில் (மேகத்தில்) அஹங்காரம் என்பது கர்ஜனம் (இடி), (புத்தி) விருத்திகள் தான் தாரையாகப் பெய்யும் மழை. இந்த மஹா மோஹமாகிற இருட்டில் தேவன் (ஸ்வயம் ப்ரகாசமான பரமாத்மா) விளையாட்டாகப் பெய்கிறார். அந்த மழை பெய்தல் நிற்பதற்கான ஒரே காற்று ஞானம் தான்.

ஜ்ஞாநம் த்[3]ருக்[3]-த்[3]ருச்யயோர்-பா[4]நம் விஜ்ஞாநம் த்[3]ருச்ய சூந்யதா |
ஏகமேவாத்[3]வயம் ப்ரஹ்ம நேஹ நாநா(அ)ஸ்தி கிஞ்சந: || 43

பார்க்கிற சேதனனான ஆத்மாவும் பார்க்கப்படுகிற ஜடமான பிரபஞ்சமும் தனித் தனியே தோன்றுவதே ஞானம். பார்க்கப்படும் ஜடமான பிரபஞ்சம் மறைந்துவிடுவது விஞ்ஞானம். அந்த நிலையில் பார்க்கிறவன் என்ற வியவஹாரமும் இல்லாததினால் பிரஹ்மம் ஒன்றுதான் உண்டு. இந்த பிரஹ்மத்தில் வேற்றுமையானது கொஞ்சமேனும் கிடையாது.

[ஞானம் என்பது ஸாதாரண ஞானம் என்றும் விஞ்ஞானம் என்பது விசேஷ ஆத்ம ஞானம் என்றும் காட்டுகிறார்]

க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞயோர்-ஜ்ஞானம் தஜ்-ஜ்ஞாநம் ஞாநமுச்யதே |
விஜ்ஞாநம் சோப[4]யோரைக்யம் க்ஷேத்ரஜ்ஞ பரமாத்மநோ: || 44

தேஹாதிகளான க்ஷேத்திரத்தையும் அதையறிகிற க்ஷேத்திரக்ஞனையும் அறிவது எதுவோ அந்த அறிவு ஞானம் என்று சொல்லப்படுகிறது. விஞ்ஞானமோ க்ஷேத்தில் ஞன் பரமாத்மா இவ்விருவருக்குமுள்ள ஐக்கியம்.

[முன் சுலோகத்தில் திருக் (பார்க்கிறவன்) என்று சொல்லியதையே இங்க க்ஷேத்திரக்ஞன் என்றும், திருச்யம் (பார்க்கப்படும் வஸ்து) என்று சொன்னதையே இங்கே க்ஷேத்ரம் என்றும் சொல்லியிருக்கிறார்.]

பரோக்ஷம் சாஸ்த்ரஜம் ஜ்ஞாநம் விஜ்ஞாநம் சாத்ம-த[3]ர்சநம் ।
ஆத்மநோ ப்[3]ரஹ்மண: ஸம்யகு[3]பாதி[4]-த்[3]வய வர்ஜிதம் ॥ 45

சாஸ்திராப்யாஸத்தினால் ஏற்பட்டு, பரோக்ஷமாய் (வெளியிலுள்ளதாய்) அறிவது ஞானம். ஆத்மாவினுடையவும், பிரஹ்மத்தினுடையவும் ஆகிய (ஆத்மாவின் உபாதியான அவித்யை, பிரஹ்மத்தின் உபாதியான மாயை ஆகிய) இரண்டு உபாதிகளையும் விலக்கி, (சுத்த சைதன்யஸ்வரூபமான) ஆத்மாவை ஸாக்ஷாத்தாக பார்ப்பது, விஞ்ஞானம்.

தவமர்த[2] விஷயம் ஜ்ஞாநம் விஜ்ஞாநம் தத்பதா[3]ரச்ரயம் ।
பத[3]யோரைக்ய-போ[3]த[4]ஸ்து ஜ்ஞான விஜ்ஞான ஸம்ஜ்ஞிதம் ॥ 46

நீ என்கிற பதத்தின் அர்த்தமான ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்வது ஞானம். அது என்கிற பதத்தின் அர்த்தமான ஈசுவரஸ்வருபத்தைத்தெரிந்து கொள்வது விஞ்ஞானம். (நீ என்கிற பதம். அது என்கிற பதம்) இவ்விரண்டிலும் குறிக்கப்படும் வஸ்து ஒன்றுதான் என்று உணருவதே ஞான விஞ்ஞானம் எனப்படும்.

ஆத்மாநாத்மவிவேகம் ச ஜ்ஞாநமாஹுர் மநீஷிண: ।
அஜ்ஞானம் சாந்யதா[2] லோகே விஜ்ஞாநம் தந்மயம் ஜக[3]த் ॥ 47

ஆத்மாவையும் அனாத்மாவையும் பிரித்து அறிவதே ஞானம் என்று அறிவாளிகள் சொல்வார்கள். உலகத்தில் அஞ்ஞானம் என்பது மாற்றி அறிவது (அதாவது ஆத்மா வையும் அனாத்மாவையும் பிரிக்காமல் ஒன்றாகவே கலந்து அறிவது) ஆகும். பிரபஞ்ச. மானது அதனாலேயே (அஞ்ஞானத்தினாலேயே) நிறைந்தது என்று அறிவது விஞ்ஞானம் எனப்படும்.

அந்வய வ்யதிரேகாப்4யாம் ஸர்வத்ரைகம் ப்ரபச்யதி ।
யத் தத் து வ்ருத்திஜம் ஜ்ஞாநம் விஜ்ஞாநம் ஞாநமாத்ரகம் ॥ 48

எல்லாவிடத்திலும் அன்வயம் மூலமாயும் (உடன்பாட்டாலும்) வியதிரேகம் மூலமாயும் (எதிர்மறையாலும்) ஒன்றாகவே இருப்பதை எது நன்கு அறிகிறதோ, அதுவே விருத்தியினால் உண்டான ஞானம். சுத்தமான அறிவாகவே இருப்பது விஞ்ஞானம்.

அஜ்ஞாந த்வம்ஸகம் ஜ்ஞாநம் விஜ்ஞாநம் சோப[4]யாத்மகம் ।
ஜ்ஞாநவிஜ்ஞாந நிஷ்டேயம் தத்ஸத் ப்[3]ரஹ்மணி சார்ப்பணம் ॥ 49

அஞ்ஜானத்தைப் போக்கடிப்பது ஞானம். விஞ்ஞானமோ அஜ்ஞானம், ஞானம் ஆக இரண்டாகவும் இருக்கும் தன்மையுள்ளது. அதுவாகவும் ஸத்தாகவுமுள்ள

பிரஹ்மத்தினிடத்தில் அஜ்ஞானம், ஞானம், இரண்டையும் லயப்படுத்திவிடுவதுதான் ஞான விஜ்ஞானத்தில் நிலைத்தல் ஆகும்.

போ⁴க்தா ஸத்த்வகு³ண: சுத்³தோ⁴ போ⁴கா³நாம் ஸாத⁴நம் ரஜ: ।
போக்³யம் தமோகுண: ப்ராஹுராத்மா சைஷாம் ப்ரகாசக: ॥ 50

அனுபவிக்கிறவன் சுத்தமான ஸத்வகுண ஸுகதுக்கங்களை அனுபவிக்க ஸாதனம்தான், ரஜோகுணம். தமோ குணமானது அனுபவிக்கப்படும் பதார்த்தம். இவைகளையெல்லாம் பிரகாசிக்கும்படி செய்கிறது ஆத்மா என்று சொல்கிறார்கள்.

இனி மற்ற மூன்று ஆச்ரமங்களையும் ஸந்நியாஸியான ஞானமார்க்கத் தினனின் ஆசாரமாகக்காட்டுகிறார்.

ப்³ரஹ்மாத்⁴யயந ஸம்யுக்தோ ப்ரஹ்மசர்யாரத: ஸதா³ ।
ஸர்வம் ப்³ரஹ்மேதி யோ வேத³ ப்³ரஹ்மசாரீஸ உச்யதே ॥ 51

எப்பொழுதும் ப்ரஹ்மசர்ய நியமத்துடன் வேதத்தை அத்யயனம் செய்பவன் ப்ரஹ்மசாரி எனப்படுவான். எல்லாம் ப்ரஹ்மம் என்று அறிந்த ஞானியும் ப்ரஹ்மத்தை உபதேசிக்கும் உபநிஷத்தை ஜபித்துக்கொண்டு ப்ரஹ்மசர்ய நியமத்துடனிருப்பதால் ப்ரஹ்மசாரி எனப்படுகிறான்.

க்³ருஹஸ்தோ³ கு³ணமத்⁴யஸ்த²: சரீரம் க்³ருஹமுச்யதே ।
கு³ணா: குர்வந்தி கர்மாணி நாஹம் கர்தேதி பு³த்³தி⁴மான் ॥ 52

ஞானிக்கு சரீரமே வீடு என்று சொல்லப்படுகிறது. குணங்களின் நடுவிலிருந்து ண்டு, (ஆனால்) "கர்மாக்களை, குணங்கள் தான் செய்கின்றன, நான் செய்கிறவன் அல்ல", என்று அறிந்தவன் கிருஹஸ்தன் ஆகிறான்.

கிமுக்³ரைச்ச தபோபி⁴: ஸ்யாத் யஸ்ய ஜ்ஞாநமயம் தப: ।
ஹர்ஷாமர்ஷ-விநிர்முக்தோ வாநப்ரஸ்த²: ஸ உச்யதே ॥ 53

எவனுக்கு ஞானமயமான தபஸ் இருக்கிறதோ, அவனுக்கு உக்கிரமான தபஸ்களினால் என்ன பிரயோஜனம்? ஸந்தோஷம், வெறுப்பு இவைகளிலிருந்த நன்கு விடுபட்டவனே வானப்ரஸ்தன் என்று சொல்லப்படுகிறான்.

ஸ க்ருஹீ யோ க்ருஹாதீத: சரீரம் க்ருஹமுச்யதே । 54

எவன் கிருஹத்திற்கு மேல்பட்டவனோ அவன்தான் கிருஹத்திற்கு யஜமானன். சரீரமே கிருஹம் என்று சொல்லப்படுகிறது.

[வீட்டு யஜமானன் வீட்டை "தான்" என்று நினைப்பது கிடையாது. வீடு வேறு, தான் வேறு, என்றே நினைப்பான். அப்படியே ஆத்ம ஞானி சரீரத்தில் ஆத்மா வென்ற எண்ணம் வைக்காமல், தான் அதைவிட வேறு அதற்கு அதீதமானவன் என்றே உணர்ந்தவன். ஆகையால் சரீரத்திற்குரிய வர்ணாசிரமங்கள் தனக்குச் சேர்ந்தவை யலல என்ற உணர்ச்சி இருக்கும். அவனே நான்கு ஆச்ரமங்களுக்கும் மேம்பட்ட அதிவர்ணாசிரமியும் ஆவான்].

ஸதா³சாரமிமம் நித்யம் யோ(அ)நுஸந்த³த⁴தே பு³த⁴: |
ஸம்ஸார ஸாக³ராத் சீக்ர⁴ம் ஸ முக்தோ நாத்ர ஸம்சய: || 55

இந்த ஸதாசாரத்தை எந்த அறிவாளி எப்பொழுதும் அனுஸந்தானம் செய்கிறானோ (ஈடுபாட்டுடன் பின்பற்றுகிறானோ) அவன் சீக்கிரமாக ஸம்ஸார சமுத்திரத்தி லருந்து விடுபடுகிறான். இவ்விஷயத்தில் சந்தேஹமில்லை.



ஸ்வரூபாநுஸந்தாநாஷ்டகம்

[தன்னுடைய வாஸ்தவ ஸ்வரூபமான ஸச்சிதா நந்த லக்ஷணத்தோடு கூடிய பரப்ரஹ்மத்தின் நிலையை தீர்க்கமாக அப்யஸிப்பதான அனுஸந்தானத்தைச் செய்யும் ரீதியானது இந்த "ஸ்வரூப அநுஸந்தான அஷ்டகம்" எனும் எட்டு சுலோகங்களில் சுருக்கமாக ஸ்ரீமத் ஆசார்யாரால் விளக்கப்படுகிறது.]

தபோ யஜ்ஞ தா³நாதி³பி⁴: சுத்³த⁴ பு³த்³தி⁴ர் -
விரக்தோ ந்ருபாதே³: பதே³ துச்ச² பு³த்³த்⁴யா ।
பரித்யஜ்ய ஸர்வம் யதாப்நோதி தத்வம்
பரம் ப்³ரஹ்ம நித்யம் ததே³வாஹமஸ்மிய ॥ 1

தபஸ், யக்ஞம், தானம் முதலானவைகளை அனுஷ்டானம் செய்வதினால் பரிசுத்தமான புத்தியோடு கூடியவனாகி, அரச பதவி முதலியவற்றை பிரயோஜனமற்றதாக எண்ணி வைராக்கியத்தை அடைந்து, எல்லா போகங்களையும் தியாகம் செய்துவிட்டு, உண்மைப்பொருளாய் உத்கிருஷ்டமாய் சாசுவதமாயுள்ள பிரஹ்மத்தை அடைபவன் நான் அதுவாகவே பிரம்மஸ்வரூபமாகவே இருக்கிறேன். என்ற அநுபவத்தை அடைகிறான்.

த³யாளும் கு³ரும் ப்³ரஹ்ம - நிஷ்ட²ம் ப்ரசாந்தம்
ஸமாராத்⁴ய மத்யா விசார்ய ஸ்வரூபம் ।
யதா³ரப்நோதி தத்வம் நிதி³த்⁴யாஸ்ய வித்³வான்
பரம் ப்³ரஹ்ம நித்யம் ததே³வாஹமஸ்மி ॥ 2

தயை நிறைந்தவராய், மிகுந்த சாந்தராய், பிரஹ்மத்தில் நிலைத்தவராயுள்ள குருவை நன்கு ஆராதித்து, அவரது உபதேசப்படி தன் ஆத்ம ஸ்வரூபத்தை புத்தியினால் விசாரம் செய்து, நன்கு தியானம் செய்து, அறிந்து கொண்ட ஒரு வித்வான், உண்மைப் பொருளாய், உத்திருஷ்டமாய், சாசுவதமாயுள்ள எந்த பிரஹ்மத்தை அடைகிறாரோ அந்த ப்ரஹ்மமே நானாகயிருக்கிறேன்.

யதா³நந்த³ரூபம் ப்ரகாச ஸ்வரூபம்
நிரஸ்த ப்ரபஞ்சம் பரிச்சே²த³-ஹீநம் ।
அஹம்-ப்³ரஹ்ம வருத்த்யேக க³ம்யம் துரீயம்
பரம் ப்³ரஹ்ம நித்யம் ததே³வாஹமஸ்மி ॥ 3

எது ஆனந்த (உணர்வு) ரூபமாயும், பிரகாச (அறிவு) ஸ்வரூபமாயும் பிரபஞ்சத்திற்கு அதீதமாயும் எவ்வித பிரிவுமற்றதாயும், 'நான் ப்ரஹ்மம்' என்கிற விருத்தியினால் மாத்திரம் அறியக்கூடியதாயும், நான்காவதாயும், உத்திருஷ்டமாயும், சாசுவதமாயு முள்ள பிரஹ்மமோ அதுவாகவே நான் இருக்கிறேன்.

ஸ்வரூபாநுஸந்தாநாஷ்டகம்

ஆத்மஸ்வரூபம் ஜாக்கிரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளுக்கு மேம்பட்டதாதலாலும், ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்களுக்கும், மேலுள்ளதாலும், அதை “துரீயம்" அதாவது "நான்காவது" என்ற சாஸ்திரத்தில் வியவஹரிக்கிறார்கள்.

யத3ஜ்ஞாநதோ பா4தி விச்வம் ஸமஸ்தம்
விநஷ்டம் ச ஸத3யோ யதா3த்ம - ப்ரபோ3தே4 |
மநோவாக3தீதம் விசுத3த4ம் விமுகதம்
பரம் ப்3ரஹ்ம நிதயம் ததே3வாஹமஸ்மி || 4

எதை அறியாததினால் எல்லாப் பிரபஞ்சமும் உண்மைபோலத் தோன்றுகிறதோ எதனுடைய ஸ்வரூபம் அறியப்படும் போது உடனேயே (அந்தப் பிரபஞ்சம) மறைந்தும் விடுகிறதோ, (எது) மனசுக்கும் வாக்குக்கும் எட்டாததாய், பரமசுத்தமாய், (எல்லாக் கட்டுப்பாடுகளிலிருந்தும்) விடுபட்டதாய் உள்ள அந்த உத்கிருஷ்டமான சாசுவதமான பிரஹ்மமாகவே நான இருக்கிறேன்.

நிஷேதே4 க்ருதே நேதி நேதீதி வாக்யை:
ஸமாதி4 ஸ்தி2தாநாம் யதா3பா4தி பூர்ணம் |
அவஸ்தா2 - த்ரயாதீத - மத்3வைத - மேகம்
பரம் ப்3ரஹ்ம நித்யம் ததே3வாஹமஸ்மி || 5

(உபநிஷத்துகளிலுள்ள) வாக்கியங்களினால் "இவ்விதம் இல்லை, இவ்விதம் இல்லை" என்று விலகக படும் போது ஸமாதி நிலையிலுள்ளவர்களுக்கு எது பரிபூர்ணமாக எங்கும் பிரகாசிக்கிறதோ. (ஜாக்ரத், ஸ்வானம், ஸுஷுப்தி எனற) மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாற்பட்டதாய் இரண்டற்றதாய், ஒன்றாகவே (எது இருக்கிறதோ) அந்த உதகிருஷ்டமான சாசுவதமான பிரஹ்மமாகவே நான் இருக்கிறேன்.

[பிரபஞ்சத்தில் எது அனுபவத்திற்கு விஷயமானாலும் அது இவ்விதம், அது இவ்விதம் என்று எடுத்துச் சொல்ல முடியும். அவ்விதம எடுத்துச் சொல்லக் கூடியதெல்லாம் பிரஹ்மம் அல்ல என்று உபநிஷத் வாக்கியங்கள் சொல்கிறபடியால. பிரபஞ்சத்தில் திருஷ்டியைச் செலுத்தாமல் அதிலிருந்து இழுத்து அந்த திஷ்டியைத் தனக்குள்ளேயே செலுத்திப் பார்ககுமபோது எல்லாவித விருத்திகளும் நின்று பிரஹ்மாகார விருத்தி ஒன்று மாத்திரம் நிலைக்கும். அதுவே ஸமாதி எனப்படும்.

யதா3நந்த3 லேசை: ஸமாநந்தி3 விச்வம்
யதா3பா4ந ஸத்தவே ஸதா3பா4தி ஸர்வம் |
யதா3லோகநே ரூமபந்யத் ஸமஸ்தம்
பரம் ப்3ரஹ்ம நித்யம் ததே3வாஹமஸ்மி || 6

எதனுடைய பெரிய ஆனந்தத்தின் சிறிய திவலைகளாலேயே உலகம் நன்கு ஆனந்தத்தோடு கூடினதாக இருக்கிறதோ, எதனுடைய பிரகாசம் இருக்கும் போது எல்லாம் ஸத்தாக (உண்மையாகத்) தோன்றுகிறதோ, எத்னுடைய வெளிச்சம் இருக்கும் போது வேறு எல்லா ரூபமும் பிரகாசிக்கிறதோ, அந்த உதகிருஷ்டமான சாசுவதமான பிரஹ்மமாகவே நான் உள்ளேன்.

அநந்தம் விபு4ம் நிர்விகல்பம் நிரீஹம்
சிவம் ஸங்க3 ஹீனம் யதோ3ங்கார - க3ம்யம் ।
நிராகார - மத்யுஜ்ஜ்வலம் ம்ருத்யு ஹீநம்
பரம் ப்3ரஹ்ம நித்யம் ததே3வாஹமஸ்மி ॥ 7

முடிவற்றதாயும், வியாபகமாயும், ஸந்தேகஹத்திற்கு இடமற்றதாயும், ஆசையற்றதாயும், மங்களமாயும், எவ்வித பற்றுமில்லாததாயும், பிரணவத்தினால் அறியதக்கதாயும், உருவமற்றதாயும், நன்கு பிரகாசிக்கிறதாயும், நாசமற்றதாயும், எது (இருக்கிறதோ) அந்த உத்கிருஷ்டமான சாசுவதமான பிரஹ்மமாகவே நான் உள்ளேன்.

யதா3(அ)நந்த3 ஸிந்தெ4ள நிமக்3ந: புமான் ஸ்யாத்
அவித3யா விலாஸ: ஸமஸ்த ப்ரபஞ்ச: ।
ததா3 ந ஸ்பு2ரத - யத்3பு4தம் யந்நிமித்தம்
பரம் ப்3ரஹ்ம நித்யம் ததே3வாஹமஸ்மி ॥ 8

மனிதன் எப்பொழுது ஆனந்தமாகிற ஸமுத்திரத்தில் நன்கு மூழ்கினவனாக இருப்பானோ, அப்பொழுது எதன் காரணமாக அஞ்ஞானத்தின் விலாஸமான எல்லாப் பிரபஞ்சமும் பிரகாசிககிறதில்லை என்ற ஆச்சர்யமான விஷயம் ஏற்படுகிறதோ அந்த உத்திருஷ்டமான சாசுவதமான பிரஹ்மமே நான்.

ஸ்வரூபானுஸந்தா4ந ரூபாம் ஸ்துதிம் ய:
படே2தா3த3ராத் - ப3க்தி - பா4வோ மநுஷ்ய: ।
ச்ருணோதீஹ வா நித்யமுத்3யுக்த சித்தோ
ப4வேத்3 விஷ்ணுரத்ரைவ வேத3 ப்ரமாணாத் ॥ 9

எந்த மனிதன் பக்தியுள்ள எண்ணத்துடனும், ஆதரவுடன், ஆத்ம ஸ்வரூபத்தை அனுஸந்தானம் செய்யும் முறையான (இந்த) ஸ்தோத்திரத்தைப் படிக்கிறானோ, அல்லது இதில் எப்பொழுதும், அக்கறையோடு மனஸை செலுத்திக் கேடகிறானோ, (அவன்) வேதம் (ஸதயமான) பிரகாஸமாயிருப்பதால் இங்கேயே விஷ்ணுவாக (ஸர்வ வியாபகமான பிரஹ்மமாக) ஆவான்.

ஸ்வாத்ம ப்ரகாசிகா

[ஸ்வய அநுபவத்துக்கு வருமாறு ஆத்ம ஸ்வரூபத்தை விளக்கிக் காட்டும் பிரகரணம்.]

ஜக³த் - காரண மஜ்ஞாந மேகமேவ சித³ந்விதம் |
ஏக ஏவ மனஸ்ஸாக்ஷி ஜாநாத்யேவம் ஜகத் - த்ரயம் || 1

ஜகத்திற்கு காரணமாயிருப்பது சைதன்யத்தோடு சம்பந்தப்பட்ட அஞ்ஞானம் ஒன்றுதான். மூவுலகமும் இவ்விதம்தான் என்று மனத்திற்கும் ஸாக்ஷியாயிக்கிற ஒருவரே அறிகிறார்.

விவேக யுக்த பு³த்³த்⁴பா(அ)ஹம் ஜாநாம் - யாத்மாந - மத்³வயம் |
ததா(அ)பி ப³ந்த⁴மோக்ஷாதி³ வ்யவஹார: ப்ரதீயதே || 2

விவேகத்தோடு கூடின புத்தியினால் நான் இரண்டற்றதாக ஆத்மாவை அறிகிறேன். அப்படியிருந்தும் (ஸம்சாரத்தால் கட்டுப்பட்ட) பந்தம் (அதிலிருந்து விடு விக்கப்பட்ட) முதலான வியவஹாரம் தோன்றிக்கொண்டேயிருக்கிறது.

விவர்த்தோ(அ)பி ப்ரபஞ்சோ மே ஸத்யவத்³ பா⁴தி ஸர்வதா³ |
இதி ஸம்சய - பாசேந ப³த்³தோ⁴(அ)ஹம் சி²ந்த்³தி⁴ ஸம்சயம் || 3

பிரபஞ்சமானது வெறும் தோற்றமாக இருந்தபோதிலும் எனக்கு எப்பொழுதும் உண்மைப்பொருளாகவே விளங்குகிறது, என்னும் (இந்த) ஐயமாகிற கயிற்றால் நான் கட்டப்பட்டவனாக இருக்கிறேன். அந்த ஐயத்தை அறுத்துவிடும்.

ஏவம் சிஷ்ய வச : ச்ருத்வா குருராஹோத்தரம் ஸ்புடம் |

இவ்விதமாக சிஷ்யனுடைய வார்த்தையைக்கேட்டு குருவானவர் தெளிவாக பதில் கூறுகிறார்.

நாஜ்ஞாநம் ந ச பு³த்²தி⁴ச்ச ந ஜக³த் ந ச ஸாக்ஷிதா || 4

ப³ந்த⁴ - மோக்ஷாத³ய: ஸர்வே க்ருதா: ஸத்யே(அ)த்³வயே த்வயி |

அஞ்ஞானம் என்பதும் கிடையாது, புத்தியும் கிடையாது. ஜகத்தும் கிடையாது. மரணியாயிருக்கும் தன்மையும் கிடையாது. பந்தம், மோஹம் முதலான எல்லா வியவஹாரங்களும் ஸத்யமான இரண்டற்ற உன்னிடத்தில் கல்பிக்கப்பட்டவை களேயாகும்.

பா3தீத் - யுக்தே ஜக3த் ஸர்வம் ஸத்3ரூபம் ப்3ரஹ்ம த3த் - ப3வேத் ॥ 5

ஸர்பாதெ3ள ரஜ்ஜு ஸத்தேவ ப்3ரஹ்ம ஸத்தைவ கேவலம் ।
ப்ரபஞ்சாதா4ர - ரூபேண வர்ததே தஜ் ஜக3த் ந ஹி: ॥ 6

எல்லா ஜகத்தும் பிரகாசிக்கிறதென்று சொன்னால் அது "இருக்கும்" ஸ்வருபத்தையுடைய பிரஹ்மமாகத்தான் இருக்கவேண்டும். பாம்பு முதலானவைகளில் (தோன்றும் இருப்பானது) கயிற்றின் இருப்புதான். தனித்து (மாறுதல் அடையாமல்) பிரபஞ்சத்திற்கு ஆதாரமாயிருக்கும் தன்மையோடு இருந்து வருகிறது. ஆகையால் ஜகத் என்பது (தனித்து இருப்பு உடையது) அல்ல.

யதே2க்ஷு-மபி4ஸம்வ்யாப்ய சர்கரா வர்ததே ததா2 ।
ஆச்சர்ய ப்3ரஹ்ம - ரூபேண த்வம் வ்யாப்தோஸி ஜ3கத் - த்ரயம் ॥ 7

எவ்விதம் சர்க்கரையானது கரும்பை எல்லாவிடத்திலும் நன்கு வியாபித்துக் கொண்டு இருக்கிறதோ, அவ்விதமே ஆச்சர்யமான பிரஹ்மம் என்ற ரூபத்துடன் நீ மூவுலகத்தையும் வியாபித்தவனாக இருக்கிறாய்.

மரு - பூ4மெள ஜலம் ஸர்வம் மரு பூ மாத்ரமேவ தத் ।
ஜ3கத் த்ரயமித3ம் ஸர்வம் சிந்மாத்ரம் ஸுவிசாரத: ॥ 8

கானல் தரையில் (தோன்றும்) அந்த ஜலமெல்லாம் கானல் தரையேதான். (அவ்விதமே) நன்கு விசாரம் செய்து பார்த்தால் இந்த மூவுலகம் எல்லாம சைதன்யமே தான். (பிரஹ்ம மாகிய ஏகஞான, ஏக உணர்வுதான்).

ப்3ரஹ்மாதி3 - ஸ்தம்ப3 - பர்யந்தா: ப்ராணிநஸ்த்வயி கல்பிதா: ।
பு3த்3பு3தா3தி - தரங்கா3ந்தா விகாரா: ஸாக3ரே யதா3 ॥ 9

எப்படி ஸமுத்திரத்தில் நீர்குமிழி முதல் அலை வரையில் உள்ள மாறுதல்கள் கல்பிக்கப்பட்டிருக்கிறதோ (அப்படி) பிரஹ்மா முதல் சிறுபுல் வரையிலுள்ள பிராணிகள் உன்னிடத்தில் கல்பிககப்பட்டவர்கள்.

தரங்க3த்வம் த்4ருவம் ஸிந்து3ர் - ந வாஞ்ச2தி யதா2 ததா2 ।
விஷயாநந்த3 வாஞ்சா2 தே ந ஸதா3நந்த - ரூபத: ॥ 10

எப்படி ஸமுத்திரமானது அலையாக இருக்கும் தன்மையை நிச்சயமாக ஆசைப் படாதோ, அப்படியே எப்பொழுதும் நீ ஆனந்த ஸ்வருபமுள்ளவனாதலால் உனக்கு விஷயங்களிலிருந்து கிடைக்கக்கூடிய ஆனந்தத்தில் ஆசை இருக்காது.

பிஷ்டம் வ்யாப்ய கு3டோ3 யத்3வந் மாது3ர்யம் ந ஹி வாஞ்சதி ।
பூர்ணாநந்தோ3 ஜகத்3-வ்யாப்ய ததா3நந்த3ம் ந வாஞ்சதி: ॥ 11

மாவை வியாபித்துக்கொண்டு இருக்கும் வெல்லமானது தித்திப்பை எப்படி ஆசைப்படுகிறதில்லையோ, அப்படியே ஜகத்தை வியாபித்துக்கொண்டு இருக்கும் பரிபூரண ஆனந்த ஸ்வருபம், (ஆத்மா) அதனுடைய (ஜகத்தினுடைய) ஆனந்தத்தை ஆசைப்படுகிறதில்லை.

(மாவில் தித்திப்புக்கிடையாது. அதைத் தித்திக்கும்படிச் செய்வது அதில் கலந்துள்ள வெல்லம். அப்படியிருக்கையில் மாவிற்குள்ள தித்திப்பு தனக்குத்தேவை என்று வெல்லம் நினைக்குமா? அதே போல ஜகத்தில் ஆனந்தம் கிடையாது. ஆனந்த ஸ்வரூபமான ஆத்மா ஜகத்தில் வியாபித்திருப்பதால் ஜகத்தில் ஆனந்தம் தோன்றுகிறது. இப்படியிருக்க, ஜகத்தின் ஆனந்தம் தனக்கு வேண்டுமென்று ஆத்மா அபேக்ஷிகுமா?)

தா³ரித்ர்யாசா யதா³ நாஸ்தி ஸம்பந்நஸ்ய ததா² தவ |
ப்ரஹ்மாநந்த³ நிமக்நஸ்ய விஷயாசா ந ஸம்பவேத் || 12

எப்படி அதிகப் பணக்காரனுக்கு ஏழையாய் இருக்கும் தன்மையில் ஆசை கிடையாதோ, அப்படியே பிரஹ்மத்தின் ஆனந்தத்தில் மூழ்கிக்கிடக்கிற உனக்கு விஷயங்களில் ஆசை சம்பவிக்காது.

விஷம் த்³ருஷ்ட்வா(அ)ம்ருதம் த்³ருஷ்ட்வா விஷம் த்யஜதி பு³த்³தி⁴மாந் |
ஆத்மாநமபி த்³ருஷ்ட்வா த்வம் த்யஜாநாத்மாநமாத³ராத் || 13

புத்தியுள்ளவன் விஷயத்தையும் பார்த்து, அமிருதத்தையும் பார்த்துவிட்டால் விஷத்தை விட்டு விடுவான் (அப்படியே) நீ ஆத்மாவையும் பார்த்து, அநாத்மாவையும் பார்த்துவிட்டு ஆத்மாவல்லாததை வெகு ஞாபகமாய் விட்டுவிடு.

க⁴டாவபா⁴ஸகோ பா⁴நுர் க³ட - நாசே ந நச்யதி |
தே³ஹாவபா⁴ஸக ஸாக்ஷீ தே³ஹநாசே ந நச்யதி || 14

குடத்தைப் பிரகாசிக்கும்படிச் செய்கிற சூர்யன் குடத்திற்கு நாசம் வரும்போது தான் நாசம் அடைவதில்லை. (அப்படியே) தேகத்தைப் பிரகாசிக்கும்படிச் செய்கிற சாக்ஷியாய் இருக்கிற ஆத்மா தேஹம் இல்லாமல் போகும் போது இல்லாமல் போவதில்லை.

நிராகாரம் ஜக³த் ஸர்வம் நிர்மலம் ஸச்சிதா³த்மகம் |
த்³வைதாபா⁴வாத் க²தம் கஸ்மாத் - ப⁴யம் பூர்ணஸ்ய தே வதம் || 15

ஜகத்துக்கு எல்லாம் (வாஸ்தவத்தில்) ரூபமற்ற நிர்மலமாயுள்ள ஸத்தாகவும், ஞான ஸ்வருபமாகவுமிருக்கிற பிஹ்மமேயாகும். இரண்டாவது பதார்த்தம் இல்லாத தினால் பரிபூர்ணமாயிருக்கிற உனக்கு எவ்விதம் எந்தக்காரணத்தைக்கொண்டு பயம்

ஏற்படும்? சொல்.

ப்3ரஹ்மாதி3கம் ஜக3த் ஸர்வம் த்வய்யாநந்தே3 ப்ரகல்பிதம் |
த்வய்யேவ லீனம் ஹி ஜக3த் த்வம் க2தம் லீயஸே வத3 || 16

பிரஹ்மா முதலான ஜகத்து எல்லாம் ஆனந்த ஸ்வரூபமாயுள்ள உன்னிடத்தில் நன்கு கல்பிக்கப்பட்டு இருக்கிறது. ஜகத்தான்து உன்னிடத்திலேயே லயத்தையும் (அழிவையும்) அடைந்து விடுகிறது. (அப்படியிருக்க) நீ எப்படி லயம் (அழிவு) அடைய முடியும்? சொல்.

ந ஹி ப்ரபஞ்சோ நஹி பூத4 - ஜாதம்
ந சேந்த்3ரியம் ப்ராண க3ணோ ந தே3ஹ: |
ந பு3த்3தி4 சித்தம் ந மநோ ந கர்தா
ப்3ரஹ்மைவ ஸத்யம் பரமாத்மரூபம் || 17

பிரஹ்மம் தான் ஸத்யமாகவும், உத்கிருஷ்டமான ஆத்ம ஸ்வரூபமாகவும், இருக்கிறது ஜகத்து அப்படியல்ல; (பஞ்ச) பூதங்களின் கூட்டமும், அப்படியல்ல. இந்திரய மும் இல்லை. (ஐந்துவித) பிராணக கூட்டமும் இல்லை, தேஹமும் இல்லை; புத்தியும் இல்லை, சித்தமும இலலை, மனசும் இல்லை, செய்கிறவன் (அஹங்காரமும்) இல்லை.

ஸர்வம் ஸுக2ம் வித்3தி4 ஸுது:க2 நாசாத்
ஸர்வம் ச ஸத3 - ரூபமஸத்ய நாசாத் |
சித்3ரூப - மேவம் ப்ரதிபா4ந யுகதம்
தஸ்மாதக2ண்ட3ம் பரமாத்ம ரூபம் || 18

துக்கமெல்லாம் நன்கு போய்விடுகிறபடியால் எல்லாம் ஆனந்த ஸ்வருபம் என்று அறி, அஸதயமெல்லாம் போய்விடுகிறபடியால் எல்லாவற்றையும் ஸத் ஸ்வரூபம் (என்று அறி) அப்படியே பிரதிபலிக்கும் தன்மையோடு கூடியதால் சித் ஸ்வரூபம் (என்று அறி) ஆகையால் பரமாதம ஸ்வரூபமானது பிரிவற்றது.

[ஒரு பதார்த்தம் சில சமயம் இருந்து சில சமயம் இல்லாமல் போனால் அது ஸத் பதார்த்தம் ஆகாது அப்படியே, சில சமயம் பிரகாசமாயிருந்து சில சமயம் பிரகாசமிலலாமல் போனால் அது சித் பதார்த்தம் ஆகாது. அப்படியே, சில சமயம் சுகமாயிருந்து சில சமயம் துக்கமாயிருந்தால் அது ஆனந்த பதார்த்தமாகாது. அவைகளுக்கெல்லாம் காலத்தினாலும், தேசத்தினாலும் வஸ்துவினாலும் வரையரை உண்டு. எப்பொழுதும் ஸத்தாகவும், சித்ததாகவும் ஆனந்தமாகவும் இருக்கிற பரமாத்ம ஸ்வரூபத்திற்கு வரையரையே கிடையாது.]

சிதே³வ தே³ஹஸ்து சிதே³வ லோகா:
சிதே³வ பூ⁴தானி சிதி³ந்த்³ரியாணி ।
கர்தா சி³தந்தக: கரணம் சிதே³வ
சிதே³வ ஸத்யம் பரமார்த² ரூபம் ॥ 19

தேகமும் சைதன்யமே, உலகங்களும் சைதன்யமே, பூதங்களும் சைதன்யமே, இந்திரியங்களும் சைதன்யமே, செய்கிறவன (அஹங்காரம்) சைதன்யமே, உன் கருவியான அந்தக்கரணமும் சைதன்யம் தான்.

ந மே ப³ந்தோ⁴ ந மே முக்திர் ந மே சாஸ்த்ரம் நமே கு³ரு: ।
மாயா - மாத்ர விலாஸோ ஹி மாயாதீதோ(அ)ஹ - மத்³வய: ॥ 20

எனக்கு ஸம்ஸாரபந்தம் கிடையாது. எனக்கு மோக்ஷமும் கிடையாது. எனக்கு சாஸ்திரமும் கிடையாது, எனக்கு குருவும் கிடையாது (இவையெல்லாம்) மாயையினாலேயே பிரகாசிப்பவைகள். நான் மாயைக்கு அப்பாற்பட்டவனாய், இரண்டற்றவனாய் இருப்பவன்

.

ராஜ்யம் கரோது விஜ்ஞாநீ பி⁴க்ஷாமடது நிர்ப⁴ய: ।
தோ³ஷைர் ந லிப்யதே சுத்த⁴: பத்³ம - பத்ர - மிவாம்பஸா ॥ 21

உயர் ஞானமடைந்தவர் (ஆத்ம ஸாக்ஷாத்கார மடைந்தவர்) ராஜ்யத்தை ஆளட்டும். அல்லது பிக்ஷைக்காக அலையட்டும். ராஜ்ஜியம் போய் விடுமோ பிக்ஷை கிடைக்குமா என்பது போன்ற பயமே இல்லாதவராக இருப்பார். தாமரை இலை ஜலத்தினால் (எப்படி அழுக்காக ஆகிறதில்லையோ அதைப்போலவே) சுத்தராயிருக்கிற ஞானி (எந்த காரியம் செய்தபோதிலும்) தோஷங்களினால் அழுக்கடைவதில்லை.

புண்யாநி பாப கர்மாணி ஸ்வப்நகா³னி ந ஜாக்³ரதி ।
ஏவம் ஜாக்³ரத் புண்ய - பாப - கர்மாணி நஹிமே ப்ரபோ: ॥ 22

ஸ்வப்னாவஸ்தையில் செய்யும் புண்ய கர்மாக்களோ பாப கர்மாக்களோ விழிப்பு தசையில் கிடையாது. இவ்விதமாகவே விழிப்பு தரையில் செய்யப்படும் புண்ணிய பாப கர்மாக்களும் (எல்லாவற்றிற்கும் மேலாக) பிரபுவாக இருக்கிற எனக்குக்கிடையாது.

காய: கரோது கர்மாணி வ்ருதா² வாகு³ச்யதா - மிஹ ।
ராஜ்யம் த்⁴யாயது வா பு³த்³தி⁴: பூர்ணஸ்ய மம கா க்ஷதி: ॥ 23

சரீரம் கர்மாக்களை செய்யட்டும், இங்கே வாக்கானது வீணாக சொல்லப்பட்டுக் கொண்டிருக்கட்டும், அல்லது புத்திராஜ்ஜியத்தைப்பற்றி தியானம்

செய்து கொண்டிருக் கட்டும். (அதனால்) பரிபூர்ண ஸ்வரூபனான எனக்கு என்ன கெடுதல்?

ப்ராணாச் - சரந்து தத்[3] - த[4]ர்மை: காமைர் வா ஹந்யதாம் மந: |
ஆநந்தா[3]ம்ருத பூர்ணஸ்ய மம து[3]: க[3]ம் கத[2]ம் ப[4]வேத் || 24

பிராணன்கள் (இந்திரியங்கள்) அதன் ஸ்வபாவத்திற்குத் தக்கபடி ஸஞ்சரிக்கட்டும்; அல்லது மனஸ் ஆசைகளினால் பீடிக்கப்படட்டும். (அதனால்) ஆனந்தமாகிற அமிருதம் நிரம்பிய எனக்கு துக்கமானது எப்படி ஏற்படும்?

ஆநந்தா[3]ம்பு[3]தி[4] மக்[3]நோ(அ)ஸௌ தே[3]ஹீ தத்ர ந த்[3]ருச்யதே |
லவணம் ஜலமத்[4]யஸ்தம் யதா[2] தத்ர லயம் க[3]தம் || 25

எப்படி ஜலத்தின் நடுவில் இருக்கிற உப்பு அங்கே லயம் அடைந்து விடுமோ, அப்படியே ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் இந்த தேஹத்தை உடையவன் (ஜீவாத்மா) அங்கே காணப்படுவதில்லை.

இந்த்[3]ரியாணி மந: ப்ராணா அஹங்காரா: பரஸ்பரம் |
ஜாட்[3]யே ஸங்க[3]தி - முத்ஸ்ருஜ்ய மக்[3]நா மயி சித[3]ர்ணவே || 26

இந்திரியங்கள், மனஸ், பிராணங்கள், அஹங்காரம் (இவையெல்லாம்) ஒன்றுக் கொன்று ஜடத்தன்மையினால் ஏற்பட்ட சேர்க்கையை விட்டுவிட்டு, சைதன்ய ஸமுத்திரமாகிய என்னிடத்திலே அமிழ்ந்து விடுகின்றன.

ஆத்மாந - மஞ்ஜஸா வேத்[3]மி த்வஜ்ஞாநம் ப்ரபலாயிதம் |
கர்த்ருத்வ - மத[3]ய மே நஷ்டம் கர்தவ்யம் வா(அ)பி ந க்வசித் || 27

ஆத்மாவை முறைப்படி அறிந்துவிட்டேன். அஞ்ஞானமும் எங்கோ ஓடிவிட்டது. இப்பொழுது என் கர்த்ருத்வம் (செய்கிறவன் என்ற தன்மை) நீங்கிவிட்டது. செய்ய வேண்டியது ஒரு போதும் இலலை.

சித3ம்ருத - ஸுக[2] ராசௌ சித்தபே[2]நம் விலீநம்
க்ஷயமதி[4]க[3]த ஏவம் வருத்தி சஞ்சத் - தரங்க[3]: |
ஸ்திமித - ஸுக[2]- ஸமுத்[3]ரோ நிர்விசேஷ்ட: ஸுபூர்ண:
கத[3]மிஹ மம து[3]:க[2]ம் ஸர்வதை[3]கோ(அ)ஹமஸ்மி || 28

சைதன்யமாகிற அமிருதம் நிரம்பிய ஆனந்தம் சமுத்திரத்தில் மனசாகிற நுரை நன்கு கரைந்துவிட்டது. அப்படியே எப்பொழுதும் சலித்துக்கொண்டிருக்கும் மனோ விருத்தியாகிற அலை நாசத்தை அடைந்துவிட்டது. அசைவற்றிருக்கும் ஆனந்த ஸாகரம் ஒருவித வேலையும் இன்றி நன்கு நிரம்பியிருக்கிறது.

எப்பொழுதும் நான் ஒருவனாகவே இருக்கிறேன். அப்படி இருக்கையில் இங்கே எனக்கு துக்கம் எப்படி வரும்?

ஆநந்த3 ரூபோ(அ)ஹமக2ண்ட3 போ3த4:
பராத்பரோ(அ)ஹம் க4நசித் - ப்ரகாச: |
மேகா4 யதா2 வ்யோம ந ச ஸ்ப்ருசந்தி
ஸம்ஸார - து3:கா2நி ந மாம் ஸ்ப்ருசந்தி || 29

நான் ஆனந்த ஸ்வரூபன், துண்டுபடாத ஞான ஸ்வரூபன். நான் மேலானதிற்கும் மேலானவன், கனமான ஞான ஒளி வடிவினன். எப்படி மேகங்கள் ஆகாசத்தைத் தொடுவதில்லையோ, (அப்படியே) ஸம் சாரத்தில் உள்ள துக்கங்கள் என்னைத் தொடாது.

அஸ்தி2 - மாம்ஸ - புரீஷாந்த்ர - சர்ம - லோம - ஸமந்வித: |
அந்நாத3: ஸ்தூ2ல தே3ஹ: ஸ்யாத3தோ(அ)ஹம் சுத்3த4 - சித்3க4ந: || 30

ஸ்தூ2ல தே3ஹாச்ரிதா ஏதே ஸ்தூ2லாத்3 பி4ந்நஸ்ய மே ந ஹி |

எலும்பு, மாமிசம், மலம், குடல், தோல், ரோமம் இவைகளோடு சேர்ந்ததாயும் அன்னத்தை சாப்பிடுகிறதாயும் ஸ்தூலதேகம் இருக்கும். அதிலிருந்து வேறான நான் நிர்மல ஞானத்தின் அடர்ந்த ஸ்வரூபன். ஸ்தூல தேகத்தை ஆச்ரயித்திருக்கும் இவை ஸ்தூலத்திலிருந்து வேறுபட்ட எனக்குக் கிடையாது.

லிங்க3ம் ஜடா3த்மகம் நாஹம் சித் - ஸ்வரூபோ(அ)ஹ - மத்3வய: | 31

க்ஷுத்பிபாஸாந்த்4ய - பா3தி4ர்ய - காம - க்ரோதா4த3யோ(அ)கி2லா: |
லிங்க3 - தே3ஹாச்ரிதா ஹ்யேதே நைவாலிங்க3ஸ்ய மே விபோ4: || 32

ஜட ஸ்வரூபமாயிருக்கும் லிங்கம் என்கிற ஸூக்ஷ்ம சரீரம் நான் அல்ல. நான் ஞான ஸ்வரூபன்; இரண்டற்றவன். பசி, தாகம், குருட்டுத்தனம், செவிட்டுத்தனம் ஆசை, கோபம் முதலானவை எல்லாம் ஸூக்ஷ்ம சரீரத்தை ஆசிரயித்திருப்பவை. ஸூக்ஷ்ம சரீரமில்லாத ஸர்வ வியாபகனான எனக்கு இவை கிடையவே கிடையாது.

அநாத்3யஜ்ஞான - மேவாத்ர காரணம் தே3ஹ உச்யதே |
நாஹம் காரண தே3ஹோ(அ)பி ஸ்வப்ரகாசோ நிரஞ்ஜன: || 33

ஜட3த்வ - ப்ரிய - மோத3தவ - த4ர்மா: காரண - தே3ஹகா3: |
ந ஸந்தி மம நித்யஸ்ய நிர்விகார ஸ்வரூபிண: || 34

இங்கே ஆதியில்லாத அஞ்ஞானம்தான் காரணசரீரம் என்று சொல்லப்படுகிறது. ஸ்வயம் பிரகாசமாய் எவ்வித தோஷமுமில்லாத நான் அந்தக் காரண சரீரமும் இல்லை. காரண தேஹத்திலுள்ள ஜடமாயிருக்கும் தன்மை, பிரியமாயிருக்கும் தன்மை, சந்தோஷ மாயிருக்கும் தன்மை என்ற தர்மங்கள் நித்யனாய் எவ்வித மாறுதலுமடையாததன்மை உடையவனுமாய் இருக்கும் எனக்குக் கிடையாது.

ஜீவாத்3 - பி4ந்ந: பரேசோ(அ)ஸ்தி பரேசத்வம் குதஸ் தவ |
இத்யஜ்ஞ - ஜந ஸம்வாத3 விசார: க்ரியதே(அ)து4 நா || 35

ஜீவனிடமிருந்து வேறுபட்டவராக பரமேசுவரர் இருக்கிறார். உனக்குப் பரமேசு வரராயிருக்கும் தன்மை எப்படி (வரும்)? என்று, அறிவில்லாத ஜனங்களுடைய பேச்சு விஷயமாய் விசாரமானது இப்பொழுது செய்யப்படுகிறது.

அதி4ஷ்டா2நம் சிதா3பா4ஸோ பு3த்3தி4ரேதத் த்ரயம் யதா3 |
அஜ்ஞாநாதே கவத்3 பா4தி ஜீவ இத்யுச்யதே ததா3 || 36

எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமாயுள்ள சுத்த சைதன்யம், சைதன்யத்தின் தோற்றம், புத்தி ஆகிய இந்த மூன்றும், எப்பொழுது அறியாமையினால் ஒன்றாயிருப்பது போலவே தோன்றுகிறதோ, அப்பொழுது ஜீவன் என்று சொல்லப்படுகிறது.

[ஸூர்ய கிரணத்திற்கு நேரே கண்ணாடியைக் காட்டினால் அதில் ஸூர்யனுடைய பிரதிபிம்பம் விழும். அதுவும் பிரகாசமாயிருக்கும். அந்தப் பிரகாசத்தை வீட்டிற்குள் விழச்செய்தால் வீட்டிலுள்ள பதார்த்தங்களைப் பிரகாசிக்கும்படி செய்யும். இவ்விதமாக வீட்டிலுள்ள பதார்த்தங்களை எடுத்துக்காட்டுவது ஸூர்யன், ஸூர்யனுடைய பிரதிபிம்பம், கண்ணாடி ஆகிய மூன்றும் சேர்ந்ததேயாகும். இதே மாதிரி சுத்த சைதன்யம், புத்தி, புத்தியில் பிரதிபலிக்கும் சைதன்யத்தோற்றம் இம்மூன்றும் சேர்ந்து உலகத்தை அறிகிறது. இந்த மூன்றும் சேர்ந்ததுதான் ஜீவன்.]

அதி4ஷ்டா2நம் ந ஜீவ: ஸ்யாத் ப்ரத்யேகம் நிர்விகாரத: |
அவஸ்து ஸ்யாத் சிதா3பா4ஸோ நாஸ்தி தஸ்ய ச ஜீவதா || 37

ப்ரத்யேகம் ஜீவதா நாஸ்தி பு3த்3தே4ரபி ஜட3 தவத: |
ஜீவ ஆபா4ஸ் - கூடஸ்த2 - பு3த்3தி4 த்ரயமதோ ப4வேத் || 38

அதிஷ்டானமான சுத்தசைதன்யம் மாறும் தன்மையற்றதால் தனித்து ஜீவனாக இருக்கமுடியாது. (புத்தியில் பிரதிபிம்பிக்கும்) சைதன்யத்தின் தோற்றம் வாஸ்தவமாக இல்லாத பதார்த்தமேயாகும். அதற்கும் ஜீவனாயிருக்கும் தன்மை கிடையாது. புத்தியும் ஜடமாயிருக்கும் தன்மையுடையதால், தனித்து

ஜீவனாயிருக்கும் தன்மை இல் லாதது. ஆகையினால் (புத்தியில் தோன்றும்) சைதன்ய ஆபாஸம் (பிரதி பலிப்பு) மாறாத அடிப்படையான சுத்த சைதன்யம், புத்தி ஆகிய மூன்றும் சேர்ந்துதான் ஜீவனாக இருக்க முடியும்.

மாயா(ஆ)பா[4]ஸோ விசுத்[3]தா[4]த்மா த்ரயமேதந் மஹேச்வர: |
மாயா(ஆ)பா[4]ஸோ(அ)ப்-யவஸ்துத்வாத் ப்ரத்யேகம் நேச்வரோ ப[4]வேத் || 39

பூர்ணத்வாந் நிர்விகாரத்வாத்[3] விசுத்[3]தா[4]த்மா ந சேச்வர: |
ஜட[3]த்வ ஹேதோர் - மாயாயா - மீச்வரத்வம் நு து[3]ர்க[4]டம் || 40

தஸ்மாதே[3]தத் த்ரயம் மித்[3]யா தத[3]ர்தோ[2] நேச்வரோ ப[4]வேத் |

மாயை, (மாயையில் பிரதிபலிக்கும்) சைதன்யத்தின் தோற்றம், சுத்த சைதன்யம் ஆகிய இந்த மூன்றும் சேர்ந்து பரமேசுவரர். (அவைகளின்) மாயையில் பிரதிபலிக்கும் தோற்றம் வாஸ்தவத்தில் ஒரு பதார்த்தமேயில்லாததினால் தனித்து ஈசுவரனாக இருக்க முடியாது. சுத்தசைதன்யமும் எங்கும் நிரம்பியிருப்பதினாலும் மாறுதலற்ற தன்மையுடன் கூடியிருப்பதினாலும் ஈசுவரன் இல்லை. மாயையிலோ ஜடத்தன்மை இருக்கும் காரணத் - தினால் ஈசுவரத்தன்மை பொருந்தாது. ஆகையினால் இந்த மூன்றும் மித்யையே (உண்மைபோலத் தோன்றினாலும் பொய்யே). அவைகளின் பொருள் ஈசுவரனாக இருக்கமுடியாது.

[ஜீவனிடத்தில் எப்படி மூன்று அம்சங்களோ, அப்படியே ஈசுவரனிடத்திலும் மாயை, சுத்தசைதன்யம், மாயையில் சுத்தசைதன்யத்தின் பிரதிபிம்பம் ஆகிய மூன்று அம்சங்கள் இருக்கின்றன. அவை தனித்தனியே ஈசுவரனாகமாட்டா. அஞ்ஞானத்தினால் மூன்றையும் சேர்த்து ஒன்றாகப் பார்க்கும்போதுதான் ஈசுவரன்.]

இதி ஜீவேச்வரௌ பா[4]த: ஸ்வாஜ்ஞாநாந் ந ஹி வஸ்துத: || 41

க[4]டாகாச மடா[2]காசௌ மஹாகாசே ப்ரகல்பிதௌ |
ஏவம் மயி சிதா[3]காசே ஜீவேசௌ பரிகல்பிதௌ || 42

இவ்விதமாக ஆத்ம தத்துவத்தை அறியாததனால் ஜீவனும் ஈசுவரனும் தோன்றுகிறார்கள். வாஸ்தவமாக (இருவரும்) கிடையாது. வியாபகமாயிருக்கிற பெரிய ஆகாசத்தில் குடத்திலுள்ள ஆகாசம், மடத்திலுள்ள ஆகாசம் என்ற இரண்டும் கல்பிக்கப்பட்டவைகளே ஆகும். அப்படியே சைதன்ய ஆகாசமாயிருக்கிற என்னிடத்தில் ஜீவனும் ஈச்வரனும் கல்பிக்கப்பட்டவர்கள்.

[ஸர்வ வியாபகமாயிருக்கிற ஆகாசத்தின் மத்தியில் ஒரு மடத்தைக் கட்டினால் மடத்திலுள்ள ஆகாசம் என்றும், குடத்தை வைத்தால் குடத்திலுள்ள ஆகாசம் என்றும் வியவஹாரம் ஏற்பட்டு விடுகிறது. அப்படியே மாயை எனகிற

உபாதியை வைத்து ஈச்வரன் என்றும் அந்தக்கரணம் என்ற உபாதியை வைத்து ஜீவன் என்றும் வியவஹாரம் ஏற்படுகிறது. இவ்விரு உபாதிகளையும் விலக்கிப் பார்த்தால் இரண்டும் சுத்த சைதன்யமேயாகும்.]

மாயா தத்கார்ய விலயே நேச்வரத்வம் ந ஜீவதா ।
தத: சுத்³த⁴ சிதே³ வாஹம் சித்³ - வ்யோம நிருபாதி⁴த: ॥ 43

மாயையும் அதிலிருந்து உண்டானவைகளும் மறைந்துவிடும் போது ஈசுவரனா யிருக்கும் தன்மை கிடையாது, ஜீவனாக இருக்கும் தன்மையும் கிடையாது. ஆகையினால், நான் உபாதியற்றவனாயிருப்பதால் சைதன்ய ஆகாசமான சுத்தமான சைதன்யமே.

ஸத்ய சித்³க⁴ந மநந்த - மத்³வயம்
ஸர்வ த்³ருச்ய ரஹிதம் நிராமயம் ।
யத்-பத³ம் விமல - மத்³வயம் சிவம்
தத் ஸதா³(அ)ஹமிதி மௌநமாச்ரயே ॥ 44

ஸத்யமாகவும் சைன்யக்கட்டியாகவும், முடிவற்றதாகவும், இரண்டற்றதாகவும், பார்க்கப்படும் (தனக்கு வேறாக அனுபவிக்கப்படும்) தன்மையுள்ள எல்லா விஷயங்களி லிருந்தும் விடுபட்டதாகவும், எவ்வித தோஷமுமற்றதாகவும், நிர்மலமாகவும், ஒன்றாகவும், மங்களமாகவும் எந்தநிலை இருக்கிறதோ, அதுவாகவே எப்பொழுதும் நான் இருக்கிறேன் என்பதனால் மௌனத்தை ஆசிரயிக்கிறேன். (மனமடங்கிய நிலையில் தோய்ந்திருக்கிறேன்.)

பூர்ண மத்³வய - மக²ண்ட³ சேதநம்
விச்வ - பே⁴த³ - கலநாதி³ வர்ஜிதம் ।
அத்³விதீய பரஸம்வித³ம்சகம்
தத் ஸதா³(அ)ஹமிதி மௌநமாச்ரயே ॥ 45

எங்கும் நிரம்பியதும், இரண்டற்றதும், துண்டுபடாத சைதன்யமும், ஜகத்திலுள்ள வேற்றுமைத் தோற்றம் முதலியவற்றதும் இரண்டற்ற மேலான ஞானஸ்வரூபத்தின் அம்சமும் எதுவோ, அதுவே எப்பொழுதும் நான் என்ற காரணத்தினால் மௌனத்தை ஆசிரயிருக்கிறேன்.

ஜந்ம - ம்ருத்யு - ஸுக² - து³:க² வர்ஜிதம்
ஜாதி - நீதி குலகோ³த்ர - தூ³ரக³ம் ।
சித்³-விவர்த்த ஜக³தோ(அ)ஸ்ய காரணம்
தத் ஸதா³(அ)ஹமிதி மௌநமாச்ரயே ॥ 46

பிறவி, சாவு, ஸுகம், துக்கம், இவையற்றதும் ஜாதி, நீதி, குலம், கோத்திரம் இவைகளுக்கு வெகு தூரத்தில் இருப்பதும், சைதன்யத்தின் வெறும் தோற்றமாயுள்ள ஜகத்திற்குக் காரணமும் எதுவோ, அதுவே எப்பொழுதும் நான் என்ற காரணத்தினால் மௌனத்தை ஆசிரயிக்கிறேன்.

உலூகஸ்ய யதா^{2} பா^{4}நாவந்த^{4}கார: ப்ரதீயதே ।
ஸ்வப்ரகாசே பராநந்தே^{3} தமோ மூட^{4}ஸ்ய பா^{4}ஸதே ॥ 47

எப்படிச் சூரியனிடம் (சூரியன் பிரகாசிக்கிற ஸமயத்தில்) கோட்டானுக்கு இருட்டே தெரிகிறதோ, அப்படியே மேலான ஆனந்த ஸ்வரூபமாய் ஸ்வயம் பிரகாசமாயிருக்கிற ஆத்மாவிடம் (சைதன்யம் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும் போது) மூடனுக்கு இருட் டுத்தான் (அஞ்ஞானத்தால் ஏற்பட்ட மாயா உலகமும் அஹங்கார ஜீவனும்) தெரிகிறது.

யதா^{2} த்^{3}ருஷ்டி நிரோதா^{4}ர்த: ஸூர்யோ நாஸ்தீதி மந்யதே ।
ததா^{3}(அ)ஜ்ஞாநாவ்ருதோ தே^{3}ஹீ ப்ரஹ்ம நாஸ்தீதி மந்யதே ॥ 48

எப்படிக் கண்பார்வை தடைப்பட்டுச் சிரமப்படுகிறவன் ஸூர்யன் இல்லையென்று நினைக்கிறானோ, அப்படியே அஞ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கும் ஜீவன் பிரஹ்மமானது இல்லை யென்று எண்ணுகிறான்.

யதா^{3}(அ)ம்ருதம் விஷாத்^{3} - பி^{4}ந்நம் விஷ தோ^{3}ஷைர் ந லிப்யதே ।
ந ஸ்ப்ருசாமி ஜடா^{3}த்^{3} - பி^{4}ந்நோ ஜட^{3}தோ^{3}ஷாந் ப்ரகாசயந் ॥ 49

எப்படி விஷத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கும் அமிருதமானது விஷத்தி னுடைய தோஷங்களினால் தூஷிக்கப்படுகிறதில்லையோ, (அப்படியே) ஜடமான பதார்த்தத்திலிருந்து வேறுபட்டு ஜட பதார்த்தங்களின் தோஷங்களை விளக்கிக் காட்டிக் கொண்டு இருக்கும் நான் அவைகளைத் தொடுவதில்லை.

ஸ்வல்பா(அ)பி தீ^{3}பகணிகா ப^{3}ஹுளம் நாசயேத் தம: ।
ஸ்வல்போ(அ)பி போ^{3}தோ^{4} மஹதீ - மவித்^{3}யாம் சமயேத் ததா^{2} ॥ 50

தீபத்தின் ஒளி அணு வெகு சிறியதாயிருந்தாலும் மிகவும் அதிகமான இருட்டைப் போக்கடித்துவிடும். அப்படியே ஞானமானது வெகு சிறியதாயிருந்தாலும் பெரியதான அஞ்ஞானத்தைப் போக்கடித்து விடும்.

சித்^{3} - ரூபத்வாந் ந மே ஜாட்^{3}யம் ஸத்யத்வாந் நாந்ருதம் மம ।
ஆனந்த^{3}த்வாந் ந மே து^{3}: க^2 - மஜ்ஞாநாத்^{3} பா^{4}தி தத் த்ரயம் ॥ 51

ஞானஸ்வரூபனாயிருப்பதனால் எனக்கு ஜடத்தன்மை கிடையாது. ஸத்ய ஸ்வரூப னாயிருப்பதினால் என்னிடத்தில் பொய் கிடையாது. ஆனந்த ஸ்வரூபி

யானதினால் எனக்கு துக்கம் கிடையாது. அந்த மூன்றும் அஞ்ஞானத்தினால் தான் தோன்றுகிறது.

கால த்ரயே யதா² ஸர்போ ரஜ்ஜௌ நாஸ்தி ததா² மயி |
அஹங்காராதி³ தே³ஹாந்தம் ஜக³ந்நாஸ்த்யஹ - மத்³வய: || 52

எப்படி (சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்ற) மூன்று காலங்களிலும் கயிற்றில் பாம்பு கிடையவே கிடையாதோ, அப்படியே என்னிடத்தில் அஹங்காரம் முதல் சரீரம் வரையுள்ள ஜகத்தானது கிடையாது. நான் இரண்டற்றவன்.

பா⁴நௌ தம:ப்ரகாசத்வம் நாங்கீ²குர்வந்தி ஸஜ்ஜநா: |
தமஸ் தத்கார்ய ஸாக்ஷீதி ப்ரா⁴ந்த - பு³த்³தி⁴ரஹோ மயி || 53

சூர்யனிடத்தில் இருட்டைப் பிரகாசிக்கும் தன்மை இருப்பதாக அறிவாளிகள் ஒப்புக்கொள்வதில்லை. (ஆகையால்) அஞ்ஞானத்தையும் அதன் கார்யங்களையும் பார்த்துக்கொண்டிருப்பவன் என்பதாக என்னிடத்தில் எண்ணம் கொள்வது பிராந்தியே யாகும். இது வெகு ஆச்சர்யம்.

[ஞானஸ்வரூபனான ஆத்மாவும் அஞ்ஞானகார்யமான ஜடப்பிரபஞ்சமும் பரஸ்பரம் விரோதமாயிருப்பதால் அவை இரண்டிற்கும் எவ்வித ஸம்பந்தமும் இருக்கமுடியாது என்பதுதான் வாஸ்தவம். சூர்யன் இருட்டை அழிப்பவனேயன்று இருட்டைப் பிரகாசப் படுத்துபவனல்ல. அதேபோல, சாக்ஷியாகக்கூட மாயா லோகத்தையும் பிரகாசிப்பவ னல்ல ஆத்ம ஸ்வரூபன்.]

யதா² சீதம் ஜலம் வஹ்நி ஸம்ப³ந்தா⁴ து³ஷ்ணவத் ப⁴வேத் |
பு³த்³தி⁴ தாதா³த்ம்ய ஸம்ப³ந்தா⁴த் கர்த்ருத்வம் வஸ்துதோ நஹி || 54

எப்படி குளிர்ந்த ஜலமானது நெருப்பின் ஸம்பந்தத்தினால் சூடு உள்ளதாக ஆகிறதோ, அப்படியே புத்தியோடு ஒன்றாகத்தோன்றும் ஸம்பந்தம் என்ற காரணத் தினால் ஆத்மாவிற்கு செய்கிறவன் என்ற தன்மை'ஏற்படுகிறது'. வாஸ்தவத்தில் கிடையாது.

ஜல பி³ந்து³பி⁴ராகாசம் ந ஸிக்தம் ந ச சுத்⁴யதி |
ததா² க³ங்கா³ஜலேநாஹம் ந சுத்³தோ⁴ நித்யசுத்³த⁴த: || 55

ஆகாசமானது நீர்த்திவிலைகளால் நனைக்கப்படுகிறதில்லை, சுத்தமாவதும் இல்லை. அப்படியே நான் எப்பொழுதும் சுத்தமாகவே இருப்பதால் கங்கா நதியின் ஜலத்தினால் சுத்தமாவதில்லை.

வ்ருக்ஷோத்பந்த ப2லைர் வ்ருக்ஷோ யதா2 த்ருப்திம் ந க3ச்ச2தி ।
மய்யத்4யஸ்தாந்நபாநாத்3யைஸ் - ததா2 த்ருப்திர் ந வித்3யதே ॥ 56

ஒரு மரத்திலிருந்து உண்டான பழங்களினால் அந்த மரமானது எப்படி திருப்தியை அடைகிறதில்லையோ, அப்படியே என்னிடத்தில் கல்பிக்கப்பட்ட அன்னம், பானம் முதலியவைகளால் எனக்கு திருப்தியானது ஏற்படுகிறதில்லை.

ஸ்தா2ணௌ ப்ரகல்பிதச்சோர: ஸ ஸ்தா2ணுத்வம் ந பா3த4தே ।
ஸ்வஸ்மின் கல்பித ஜீவச்ச பா3தி4தும் ஸ்வம் ந சக்யதே ॥ 57

மரக்கட்டையில் ப்ராந்தியால் திருடன் கல்பிக்கப்பட்டவன் அதிலுள்ள கட்டையாயிருக்கும் தன்மையை அந்தத் திருடனால் போக்கடிக்கமுடியாது. அது போலவே தன்னிடத்தில் (அஞ்ஞானத்தால்) கல்பிக்கப்பட்ட ஜீவனும் தன் உண்மை ஸ்வரூபத்தைப் பாதிக்கமுடியாது.

அஜ்ஞானே பு3த்3தி4 விலயே நித்3ரா ஸா ப4ண்யதே பு3தை4: ।
விலீநாஜ்ஞான தத் - கார்யே மயி நித்3ரா கத2ம் ப4வேத் ॥ 58

அஞ்ஞானத்தினிடத்தில் புத்தி நன்கு லயம் அடைந்திருக்கும் போது அந்த நிலை தூக்கம் என்று அறிவாளிகளால் சொல்லப்படுகிறது. அஞ்ஞானமும் அதிலிருந்து ஏற்படுகிறவைகளும் நசித்துப்போயிருக்கிற என்னிடத்தில் தூக்கம் எப்படி இருக்கும்?

பு3த்3தே4: பூர்ண விகாஸோ(அ)யம் ஜாக3ர: பரிகீர்த்யதே ।
விகாராதி3: விஹீநத்வாத் ஜாக3ரோ மே ந வித்3யதே ॥ 59

புத்தியினுடைய நன்கு பிரகாசமாயுள்ள நிலையே ஜாக்ரத் (விழிப்பு) என்று சொல்லப்படுகிறது. ஒருபோதில் பிரகாசிப்பது, ஒருபோதில் பிரகாசிக்காமலிருப்பது என்ற மாறுதல் முதலானவையெல்லாம் இல்லாமலிருக்கும் தன்மையுடைய வனாதலால் எனக்கு ஜாக்ரத் என்கிற நிலை கிடையாது.

ஸூக்ஷ்ம - நாடீ3ஷு ஸஞ்சாரோ பு3த்3தே4: ஸ்வப்ந: ப்ரஜாயதே ।
ஸஞ்சார - த4ர்ம - ரஹிதே ஸ்வப்நோ நாஸ்தி ததா2 மயி ॥ 60

ஸூக்ஷ்ம நாடிகளில் புத்தி ஸஞ்சரிப்பதானது ஸ்வப்னமாக ஆகிவிடுகிறது. அவ் விதம் ஸஞ்சாரமில்லாத என்னிடத்தில் ஸ்வப்னம் கிடையாது.

பரிபூர்ணஸ்ய நித்யஸ்ய சுத்3த4ஸ்ய ஜ்யோதிஷோ மம ।
ஆக3ந்துக - மலாபா4வாத் கிம் ஸ்நாநேந ப்ரயோஜநம் ॥ 61

எங்கும் நிறைந்தவனாகவும் நித்தியனாகவும் சுத்தனாகவும் பிரகாச ஸ்வரூபமாயுமுள்ள எனக்கு வந்து சேரக்கூடிய அழுக்கு கிடையாததனால் ஸ்நாநத்தினால் என் பிரயோஜனம்?,

தே3சாபா4வாத் க்வ க3ந்தவ்யம் ஸ்தா2நாபா4வாத் க்வ வாஸ்தி2தி: |
பூர்ணே மயி ஸ்தா2ந - தே3சௌ கல்பிதாவஹ - மத்3வய: || 62

இடம் என்பதே கிடையாத படியால் (நான்) எங்கே போகவேண்டும்? இருப்பிடம் என்றே கிடையாதபடியால் (எனக்கு) எங்கேதான் தங்கவேண்டும்? எங்கும் நிறை என்னிடத்தில் இடம், இருப்பிடம் என்ற இரண்டும் கல்பிக்கப்பட்டவை. இரண்டற்றவன்.

ப்ராண - ஸஞ்சார ஸம்சோஷாத் பிபாஸா ஜாயதே க2லு |
சோஷணாநர்ஹ - சித்3ரூபே மய்யேஷா ஜாயதே கத2ம் || 63

பிராணவாயு ஸஞ்சரிப்பதினால் ஏற்படும் வறட்சியினலேயே காஹம் ஏற்படுகிற தன்றோ? - வறண்டுபோவதற்கு இடமில்லாத ஞான ஸ்வரூபனான என்னிடத்தில் இது (தாஹம்) எப்படி ஏற்படும்?

நாடீ3ஷு பீட்3யேமாநாஸு வாய்வக்3நிப்யாம் ப4வேத் க்ஷுதா4 |
தயோ: பீட3ந ஹேதுத்வம் ஸம்வித்3ரூபே கத2ம் மயி || 64

வாயுவினாலும் அக்னியினாலும் நாடிகள் பீடிக்கப்படும்போது பசி ஏற்படும். ஞான ஸ்வரூபியான என்னிடத்தில் அவைகளுக்கு (வாயுவுக்கும் அக்னிக்கும்) பீடிப்பதற்குக் காரணமாயிருக்கும் தன்மை எப்படியிருக்கும்?

சரீர - ஸ்தி2தி - சைதி2ல்யம் ச்வேத - லோம ஸமந்விதம் |
ஜரா ப4வதி ஸா நாஸ்தி நிரம்சே மயி ஸர்வகே3 || 65

வெளுப்பாய்ப்போன ரோமத்துடன் கூடிய சரீரத்தின் கட்டுக்குத் தளர்ச்சி என்பது ஜரை (மூப்பு) ஆகிறது. அந்த ஜரை, அம்சங்களேயில்லாமல் எங்கும் இருக்கிற என்னிடத்தில் கிடையாது.

யோஷித் - க்ரீடா3 ஸுக2ஸ்யாந்தர் - க3ர்வாட்4யம் யௌவநம் கில |
ஆத்மாநந்தே3 பரே பூர்ணே மயி நாஸ்தி ஹி யௌவநம் || 66

பெண்களுடன் கிரீடை செய்வதில் ஸுகமுள்ளவனுக்கு அல்லவா மனத்திற்குள் கர்வம் நிரம்பியதான யௌவனம் என்பது? எல்லாவற்றிற்கும் மேலாகவும் நிறைந்தவனாகவும் தன்னிடத்திலேயே ஆனந்தத்தை உடையவனுமான என்னிடத்தில் யௌவனம் கிடையாது.

மூட^{4} - பு^{3}த்^{3}தி^{4} பரிவ்யாப்தம் து^{3}:கா^{2}நாமாலயம் ஸதா^{3} |
பால்யம் கோபன சீலாந்தம் ந மே ஸுக^{2} - ஜலாம்பு^{3}தே^{4}: || 67

மூட அறிவினால் வியாபிக்கப்பட்டதாயும், எப்பொழுதும் துக்கங்களுக்கு இருப்பிட மாயும், கோபித்துக்கொள்வதிலேயே முடிவுள்ளதாயும் உள்ள பால்யம், சுகமாகிய ஜலம் நிரம்பிய ஸமுத்திரமாகிய எனக்குக் கிடையாது.

ஏவம் தத் - த்வ - விசாராப்^{3}தெ^{4}ள நிமக்^{3}நாநாம் ஸதா^{3} ந்ருணாம் |
பரமாத்^{3}வைத - விஜ்ஞாந மபரோக்ஷம் ந ஸம்சய: || 68

இவ்விதமாக எப்பொழுதும் தத்வ விசாரக்கடலில் நன்கு மூழ்கியுள்ள மக்களுக்கு மேலான இரண்டற்ற அனுபவஞானம் பிரத்யக்ஷமாக ஏற்படுகிறது. இதில் சற்றும் ஐயமில்லை.



அத்வைத உணர்வு



காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள்

உத்தம கவியான் ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதர் ஆக்கிய பதஞ்சலி விஜயத்தில் ஸ்ரீ சங்கரரின் வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. அதன் முடிவில், பரமாசாரியர்கள் தமது குருவாக கோவிந்த பகவத்பாதர்களை வழிபட்டு, பின்னர் பிரம்ம ஸூத்ரங்களுக்குப் பாஷ்யம் எழுதி, திக் விஜயம் செய்து, ஆம்னாய ஸ்ரீமடங்கள் ஸ்தாபித்து காஞ்சி காமகோடி பீடாதிபதியாகத் தாமே அமர்ந்து, அங்கேயே ஸித்தி அடைந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சதாசிவமான பரம்பொருளே ஸ்ரீ சங்கரராக வந்து பிறந்தது. மற்ற யுகங்களில் ஞானோபதேசம் என்பது முழு நேர வேலையாக இல்லை. கிருஷ்ணாவதாரத்தில் அரசுரிமை பற்றிய பல செயல்களில் கிருஷ்ணன் ஈடுபட்டிருந்ததோடு, தானே ஒரு நாட்டுக்கு அரசனாகவும் இருந்து ஆண்டான். போர்க் களத்தில் கீதையைச் சொன்னது போன்று ஒவ்வொரு நேரத்தில் அறவுரைகளையும், அருளுரைகளையும் வழங்கினான். ஆனால் கலியுகத்தில் இப்படிச் செய்தால் போதாது. தருமம் நலிந்து அதருமம் மலிந்த இந்த யுகத்தில் முழு நேரமும் தருமத்தை நிலை நாட்டுவதில் செலவிட வேண்டிய தேவையிருப்பதனால், இதற்கென்றே காலத்தை ஒதுக்கி ஏற்பட்டது ஸ்ரீ சங்கராவதாரம்.

வேறுபட்ட பல மதக்கொள்கைகள் அப்பொழுது நமது தேசத்தில் நிறைந்திருந்து, மக்களின் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன. தமது வேற்றுமைகளினால் நாட்டையே பல துண்டுகளாக்கி வைத்திருந்தன. பாரதம் முழுதும் ஒரு நாடு, ஒரு பண்பு, ஓர் உயிர் என்ற எண்ணமே இல்லாமல் தனித்தனியாக மக்கள் பிரிந்து கலைந்து வாழ்வதற்கே இம்மதங்கள் வழி செய்தன. வேதங்கள் சொன்ன ஒற்றுமை வழி, ஒருமை வழி மறந்து போய்விட்டது.

"ஒன்றே சத்தியம்; எல்லாத் தெய்வங்களும் அதன் பெயர்களே; எல்லாச் சமயங்களும் அதையே முடிவாகக் கொண்டவை" என்ற வேதத்தின் குரல் வெறும்

ஆடம்பரச் சண்டைகளில் அமுங்கிப்போய் விட்டிருந்தது. அரசியல் முறையில் பாரத தேசம் பல துண்டுகளாகச் சிதறிக் கிடந்து, பின்னர் ஒரே தேசமாக, ஒரு கொடியின்கீழ் வந்தது எவ்வளவு முக்கியமோ, அதே போல, பல சமயக் கொடிகளின் கீழ் சிதறிக்கிடந்த
பாரததேசத்தை சத்தியம் என்கிற கொடியின் கீழ் ஸ்ரீ சங்கரர் ஒன்றுபடுத்தினார்.

உலகத்தில் எவ்வளவு மக்கள் இருக்கிறார்களோ, அவர்கள். எல்லோருக்கும் அவரவருக்குத் தக்கபடி மத உணர்வை வளர்க்கும் வேத மதமான அத்வைதத்தை ஸ்ரீ சங்கரர் எடுத்துச் சொன்னார். இரண்டில்லை என்பது அத்வைதம். எங்கும் எதிலும் இதுதான் உண்மை. மனிதர்கள் சண்டையிட்டுக்கொள்ளாமல், அடுத்தவனைக் கண்டு பயமில்லாமல், வாழ்கின்ற நிலை எப்போழுது கிட்டும்? அடுத்தவன் என்பவனும் நம்மைப் போன்றவனே; அவனும் தெய்வமே என்ற பார்வை பிறக்கும்பொழுதுதான் உண்மையான அமைதி உண்டாகும். எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வு வந்துவிட்டால் அப்புறம் கலகம் ஏது? அத்வைதமாக வாழ்வது என்பது, பிறரை ஏதோ வேற்றாளாக, எதிரியாக எண்ணாமல், ஒரே நெருப்பில் தெறித்த பொறிகள் நாம் என்று சகோதரனாக எண்ணி அன்பு செலுத்துவதுதான்.

மா க்ருத: கஸ்யஸ்வித் தனம் என்பது ஈசாவாஸ்யம்.

பிறர் பொருளுக்கு ஆசைப்படாதே என்பது இதன் பொருள். இதற்கு ஸ்ரீ சங்கரர் என்ன உரை செய்திருக்கிறார் தெரியுமா? இன்னொருவன் என்று அடுத்தவனைப் பிரித்து எண்ணுவதனால் தானே அவன் பணத்தைக் கண்டு பொறாமைப்படுவதும், பிடுங்கிக் கொள்வதும் ஏற்படுகிறது? அவனை நம்முடன் ஒன்றாக எண்ணிவிட்டால், அவன் சுகமும், துக்கமும் நம்முடைய சுகதுக்கமாகி விட்டால், பின் போட்டி பொறாமை ஏது? நமக்கு என்று தனியாக ஒன்றை ஒதுக்கி வைக்கவேண்டிய தேவையென்ன? அடுத்
தவன் ஒன்றாக இருந்தால், அது நாம் ஒன்றாக இருக்கிறோம் என்பதற்குச் சமம். இந்தச் சம உணர்வு, சமுதாய உணர்வு, எல்லோருக்கும் வந்துவிட்டால், வேண்டியது வேறொன்றும் இல்லை. சாதாரண அன்றாட வாழ்க்கையில் கூட நாம் பின்பற்றவேண்டிய அத்வைத உண்மையை ஸ்ரீ சங்கரர் உபநிஷத்துக்களின் மூலம் எடுத்துக்காட்டினார். ஒற்றுமையான சர்வதேச உறவு, அரசியல், பொருளாதாரம், சமுதாய வாழ்வு, எல்லாவற்றுக்குமே இந்த அத்வைதமே அடிப்படையாகும். இதைத்தான் வேதம் சொல்லுகிறது என்று நமது பரமாசார்யர்கள் எடுத்காட்டினார்கள்.

சரி; இத்தகைய அத்வைத பாவனை எல்லோருக்கும் சாத்தியமா? இது ஒரு கேள்வி. எல்லோருக்கும் சாத்தியமே என்பது ஆசார்யாளுடைய பதிலாகும். வேதமே இதற்கு வழி செய்திருக்கிறது. அவரவர்க்கு என்னென்ன முதலில் சாத்தியமோ அதைச் செய்வதற்கு அது ஏற்பாடு செய்திருக்கிறது. தன்னலம் குறைந்து பொதுநலம் பெருக வாழும் முறை சட்ட பூர்வமான சமுதாயத்தில் இன்றும் காணக் கிடக்கிறது. பணம் படைத்தவர்கள் ஏழைகளுக்குத் தாமாக உதவினால் உத்தமம்.

இல்லையானால், பொது அரசாங்கம் அவர்களிட ருந்து பணத்தை வரியாகப் பெற்று ஏழைகளுக்குத் தருவதும் பொது நலத்துக்காகத்தான். சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம் என்பதற்கு அத்வைதம்தான் பொருள். இதுதான் சமுதாய அத்வைதம் (Social non - duality). சாதாரண தருமங்களான பொய் சொல்லாதிருத்தல், உயிர்க்கொலை செய்யாதிருத்தல் போன்றவற்றால் உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக்கொண்டால், அதில் அன்பைத் தவிர வேறொன்றிற்கும் இடமிருக்காது. வெறுப்பதையே கொள்கையாகக் கொள்பவர்கள் யாரும் இல்லை. மிகக் கொடிய அரக்கரும் தம் மனைவி மக்களிடத்திலாவது அன்பு செலுத்தத்தான் செய்கிறார்கள்.

அன்பு என்பது அத்வைத உணர்வு. எவ்வுயிரும் தம்முயிர்; யாதும் ஊர்; யாவரும்
கேளீர். அன்புடையார் என்பும் உரிய பிறாக்கு.

ஆத்ம ஔபம்யேன ஸர்வத்ர ஸமம் பச்யதி.

என்பது கீதா வாக்கியம். தன்னைப்போல பிறறையும் எண்ணுகிறான் என்பது பொருள்.

"நான்" "எனது" என்னும் குறுகிய எண்ணம் வேண்டாம். இந்த எண்ணத்தை விலக்க முடியவில்லையென்றால், என்ன செய்ய வேண்டும்? அதை இன்னும் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் "நான்" என்று எண்ணிவிட வேண்டும். அப்படி எண்ணினால் வேற்றுமையும் வெறுப்பும் போய், ஒற்றுமையும் அன்பும் உதிக்கும். இதுதான் அத்வைதத்தின் கண்கண்ட பலன்.

எங்கோ, எப்பொழுதோ கிடைப்பது அல்ல அத்வைத ஆனந்தம். இந்த வாழ்க்கையிலேயே அமைதியாகவும், சந்தோஷமாகவும், திறமையாகவும் வாழ்ந்து மனைவி மக்களும், உற்றாரும் ஊராரும் மெச்ச, ஈசுவர சிந்தனையோடு, வேற்றுமை வெறுப்புகள் இல்லாமல், அன்பு செய்து வாழ்வதற்கும் இந்த அத்வைத உணர்வே ஆதாரமாகும். உலகம் ஒரு குடும்பம்; அதற்குத் தாயார் அம்பாள்; தந்தை ஈசுவரன். இந்த உண்மையை மறக்காமல் வாழ்ந்து எல்லோரும் சிரேயஸ்ஸை அடைய வேண்டும். இதுவே எனது ஆசிகள்.

மனிதப் பிறவியும் வேண்டுவதே



காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள்

ஆசார்ய: சங்கராசார்ய:
ஸந்து மே ஜன்ம ஜன்மனி

'எல்லாப் பிறவிகளிலும் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களே என் ஆசாரியராக இருக்க வேண்டும்' - என்று இதற்கு அர்த்தம். சுலோகம் முழுவதையும் சொல்கிறேன்.

சாஸ்த்ரம் சாரீர மீமாம்ஸா
தேவஸ்து பரமேச்வர:
ஆசார்ய: சங்கராச்சார்ய:
ஸந்து மே ஜன்ம ஜன்மனி.

'சாரீர மீமாம்ஸா' என்றால் சரீரத்துக்குள் இருக்கப்பட்ட உயிரைப் பற்றிச் சொல்கிற வேதாந்த சாஸ்திரம் என்று அர்த்தம். 'இந்த வேதாந்தமே எந்நாளும் எனக்கு சமய சாஸ்திரமாக இருக்கட்டும்! அதாவது 'நான் வேத மதத்திலேயே பிறக்க வேண்டும்' என்று சுலோகத்தின் முதல் வரி சொல்லுகிறது. அடுத்த வரி, 'பரமேச்வரனே! எனக்கு எந்நாளும் தெய்வமாக இருக்கட்டும்' என்கிறது. பிறகு 'ஜன்ம ஜன்மத்திலும் எனக்கு சங்கரரே ஆசாரியராக இருக்கட்டும்' என்று சுலோகம் முடிகிறது.

புனர்ஜன்மம் இல்லாமல் பரமாத்மாவில் கலந்துவிடவேண்டும் என்பதே பொதுவாகப் பிரார்த்திக்கப்படுவது. ஆனால் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் ஒவ்வொரு ஜன்மாவிலும் ஆசாரியராக அமைவார் என்றால் எத்தனை பிறவியும் எடுக்கலாம் என்று இந்த சுலோகம் சொல்வது போல் இருக்கிறது. நடராஜாவைப் பார்த்துக் கொண்டேயிருப்பதற்காக 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே' என்று அப்பர் சுவாமிகள் சொன்னது போலிருக்கிறது.

ஸ்ரீ சங்கரரும் இதே ரீதியில் சிவானந்த லஹரி' யில் ஒரு சுலோகத்தில் பிரார்த்திக்கிறார்.

மனிதப் பிறவியும் வேண்டுவதே

நரத்வம் தேவத்வம் நகவன ம்ருகத்வம் மசகதா
பசுத்வம் கீடத்வம் பவது விஹகத்வாதி ஜனனம் |
ஸதா த்வத் பாதாப்ஜ ஸ்மரண பரமாநந்த லஹரீ
விஹாராஸக்தம் சேத் ஹ்ருதயமிஹ கிம்தேன வபுஷா ||

'பரமேசுவரரின் பாதாரவிந்தத்தை ஸ்மரித்து அந்த ஆனந்த வெள்ளத்தில் முழுகியிருப்பதற்குத் தடையில்லை எனில் நான் எந்தப் பிறவியும் எடுக்கத் தயார். மனிதனாகவோ தேவனாகவோ, கல்லாகவோ, மரமாகவோ, விலங்காகவோ, கொசுவாகவோ, மாடாகவோ, கிருமியாகவோ, பட்சியாகவோ எந்தப் பிறவி வாய்த்தாலும் சரி, இருதயத்தில் ஈசுவர ஸ்மரணானந்தம் வெள்ளமாகப் பாய்ந்தால் சரீரம் எதுவாக இருந்தால் என்ன?'என்கிறார் இந்த சுலோகத்தில் ஸ்ரீ ஆசார்யாள்.

'ஆசார்யாள்' என்று சொன்னாலே இந்தத் தேசத்தில் ஸ்ரீ சங்கராச்சாரியர்களைத் தான் குறிப்பிடுகிறது. இதிலிருந்தே அவரது மஹிமை தெரிகிறது. பீஷ்மாசாரியார், துரோணாச்சாரியார், வியாஸாசாரியார், ஸாயணாசாரியார் இன்னும் எத்தனையோ ஆசாரியர்கள் இருந்தாலும் ஒரு பெயரையும் சேர்க்காமல் 'ஆசாரியாள்' என்று மட்டும் சொன்னால் அது நம் பகவத் பாதாள் என்றே அனைவரும் புரிந்துகொள்கிறார்கள். சாஸ்திர அர்த்தங்களை எடுத்துச் சொல்லி, பிறரை ஆசாரத்தில் நிலை நிறுத்துவதோடு எவன் ஒருவன் தானே அந்த ஆசாரங்களை அனுஷ்டித்துக் காட்டுகிறானோ அவனே 'ஆசாரியன்' என்பது தான் ஆசார்ய பதத்துக்கு லட்சணம் (definition).

ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் அத்வைதத்தைப் பரம தத்துவமாக ஸ்தாபித்தார். நாமும் 'எல்லாம் ஒன்று, பேதமேயில்லை.' என்று பிரமாதமாக வேதாத்தம் பேசுகிறோம். ஆனால் யதார்த்தத்தில் இந்த ஏகமான ஸத் வஸ்துவின் ஞானம் நமக்கு கொஞ்சங்கூட வரவில்லை. ஆசாரியாளோ அதுவாகவே இருந்தவர். எத்தனை காரியங்கள் செய்தாலும் காரியமற்ற பரப்ரம்மத்திலேயே இருந்துகொண்டிருந்தார். அதன் நிறைந்த ஆனந்தத்தாலே தான் வெற்றி தோல்விகளால் துளிக் கூடப் பாதிக்கப்படாமல் ஒயாமல் காரியம் பண்ணி லோக க்ஷேமத்தைச் செய்துவிட்டார். ஞானத்தை நிலை நாட்டினார் பக்தி மார்க்கத்தையும் நிலை நிறுத்தினார். க்ஷேத்திரம் க்ஷேத்திரமாகச் சென்று ஸ்தோத்திரம் செய்தார். நாமும் பக்தி பண்ணுகிறோம். ஆனால் எப்படி? கஷ்டம் வந்தால் மட்டும் அது நிவிருத்தியாகப் பெரிய பூஜை, சாந்தி எல்லாம் செய்கிறோம். நிவிரித்தியானால் அநேகமாகப் பூஜையையும் அதோடு விட்டு விட்டு விடுவோம். ஆகாவிட்டாலோ சுவாமியையே திட்டுவோம். நமக்கு உண்மையான ஞானம் வருவதற்கு வழி என்ன?

இதற்கெல்லாம் அடிப்படையாக ஆசாரியாள் கர்மானுஷ்டானத்தையே விதித்தார். அதை விட்டுவிட்டு நாம் செய்கிற பக்தி, ஞானம் எதுவுமே நிலைத்து நிற்கக் காணாம். அவரவரும் உரிய கர்மத்தை ஆசாரங்களோடு பின்பற்றினால் தான் மனசில் ஒழுக்கம், கட்டுப்பாடு, சித்தசுத்தி எல்லாம் உண்டாகி, அப்புறம்தான் உண்மையான பக்தியும் ஞானமும் சித்திக்கும். பகவத் பாதர்கள் அத்வைத ஞானம்,

ஸகுண உபாசனை இவற்றைச் சொன்னதோடு வைதிக கர்மானுஷ்டானத்தை விதித்து தானும் யதிதர்மங்களைப் பூரணமாகப் பின் பற்றிக் காட்டியதால் தான் 'ஆசாரியாள்' என்பதன் பூரண லட்சணத்தையும் பெற்றிருக்கிறார்.

ஆசாரியாள் என்ற மாத்திரத்தில் ஸ்ரீ சங்கராச்சாரியர்கள் என்று நாம் அர்த்தம் செய்து கொள்வது போலவே, வெளிநாடுகளில் எல்லாம் 'வேதாந்தம்' என்ற மாத்திரத்திலேயே ஆசாரியாளின் அத்வைத மார்க்கம் என்றே அர்த்தம் செய்துகொள்கிறார்கள். வேதாந்தமாகிய உபநிஷதங்களை அடிப்படையாகக்கொண்டு த்வைதம், விஸிஷ்டாத்வைதம், சைவ சித்தாந்தம் ஆகிய பல சித்தாந்தங்கள் இருந்த போதிலும், ஆசாரியர்கள் அவலம்பித்த அத்வைதத்திற்கே இந்தப் பெருமை "வேதாந்த சிம்மம் கர்ஜனை செய்யட்டும்" (Let the Lion of Vedanta roar) என்று சொல்லிக்கொண்டு விவேகாநந்தர் அமெரிக்காவிலும் ஐரோப்பாவில அத்வைதத்தைப் பிரசாரம் செய்ததிலிருந்து நம் ஆசாரியர்களின் மதம் சர்வ சம்மதமாகி விட்டது! ஆனால் இது தாம் புதிதாகச் செய்த மதமல்ல. உபநிஷட்க தாத்பரியமே என்று ஆசாரியாள் விளக்கியிருக்கிறார்.

அத்வைத மதத்தோடு, ஷண்மதங்களையும் ஸ்தாபித்தது ஆசாரியாளின் இன்னெரு பெருமை. தெய்வ பேதமே இல்லாமல் ஈசுவரன், அம்பாள், மஹாவிஷ்ணு, விக்நேசுவரர், சுப்பிரமணிய ஆகிய ஆறு தெய்வங்களின் உபாசனையையும் ஒழுங்குபடுத்தித் தந்து ஷண்மதாசாரியார் ஆனார்.

ஆசாரியாளின் தனிப்பெருமை இன்னொன்றும் உண்டு. இன்று நம் தேசத்தில் இருக்கிற விஸிஷ்டாத்வைதம், த்வைதம், சைவ சித்தாந்தம் முதலிய சித்தாந்தங்களை ஸ்திரப்படுத்திய ஸ்ரீ ராமாநுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ மெய்கண்டார் முதலியவர்கள் நம் ஆசாரியாளுக்குப் பிற்பாடு தோன்றியவர்களே. ஆனால் நம் ஆசாரியாளுக்கு முன்னால் தோன்றிய கபிலர், ஜைமினி, கணாதர், கௌதமர் ஆகியோர் ஸ்தாபித்த ஸாங்கியம், மீமாம்சை, வைசேஷிகம், நியாயம் முதலிய மதங்கள் ஸ்ரீ சங்கரபகவத் பாதாளுக்குப் பின் இருந்த இடம் தெரியாமலே போய்விட்டன. ஆசாரியாள் அவற்றை அடியோடு நிராகரணம் செய்து விட்டார்.. அவருக்கு முன் தோன்றியிருந்த புத்த, ஜைன மதங்களையும் வென்று வைதிக தர்மத்தை நிலைநாட்டினார், முப்பத்திரண்டு வயசுக்குள் இத்தனை காரியங்களைச் செய்த ஆசார்யாள் பரமேசுவர, அவதாரமே என்பதில் சந்தேகமில்லை.

பகவத்பாதர் தரும் பக்தி லட்சணம்

பக்தனாகி இருப்பவனும் பகவான் தான் என்ற உணர்வோடு, சாராம்சத்தில் அவன் வேறு, தான் வேறு அல்ல என்ற அனுபவ ஞானத்தோடு ஈசுவரனை பக்தியோடு அனுபவித்த அத்வைத ஞானிகள் பலர் இருந்திருக்கிறார்கள். மதுசூதன சரஸ்வதி, அப்பைய தீக்ஷிதர், சதாசிவ பிரம்மேந்திராள், பகவந்நாம போதேந்திராள் ஆகிய பரம ஞானிகள் இவ்விதத்திலேயே பக்தி செய்திருக்கிறார்கள். நிர்குணமாக இருக்கின்ற பிரம்மத்துக்கும் அனந்த கல்யாண குணம் கொண்ட ஈசுவரனுக்கும்

இடையே இவர்கள் எந்த பேதமும் காணவில்லை. "நிர்க்குணமாக, நிஷ்களமாக எந்த வஸ்துவை யோகிகள் தியானத்தில் அநுபவிக்கிறார்களோ, அதையே யமுனா தீரத்தின் மணல் வெளியில் நீலஜோதி வெள்ளமாக ஓடிவிளையாடும் கண்ணனாக நான் கண்டு மகிழ்கிறேன்" என்கிறார் மதுசூதன சரஸ்வதி. ஞானிகள் எல்லாத் தெய்வ வடிவங்களும் ஒன்றேயான பிரம்மம்தான் என்று கண்டுகொண்டவர்கள். என்றாலும், அவற்றில் பூர்வகாலத்தில் தங்கள் மனத்தைக் கவர்ந்த ஒரு ரூபத்தில் ஞானம் வந்த பின்னும் விசேஷ பக்தி செலுத்தினார்கள்.

அத்வைத ஞான சமுத்திரமான சங்கர பகவத் பாதர்கள் அத்தனை தெய்வங்களையும் பிரம்ம ஸ்வரூபமாகவே வைத்து ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்.

பக்தியின் லட்சணத்தையும் பகவத் பாதர்கள் 'சிவானந்த லஹரீ' யில் வெகு அழகாக வர்ணித்திருக்கிறார். ஐந்து உதாரணங்களைக் கொடுத்து வர்ணித்திருக்கிறார். 'அழிஞ்சில் விதை எப்படித் தாய் மரத்துடனேயே ஒட்டிக்கொள்கிறதோ, ஊசி எப்படி காந்தத்தால் கவரப்படுகிறதோ, பதிவிரதை எப்படித் தன் பதியின் நினைவிலேயே ஆழ்ந்திருக்கிறாளோ, கொடி எப்படி மரத்தைத் தழுவி வளர்கிறதோ, நதி எப்படிச் சமுத்திரத்தில் கலக்கிறதோ, அப்படியே பசுபதியின் பாதார விந்தங்களில் ஸதாஸர்வகாலமும் மனத்தை அமிழ்த்தியிருப்பதுதான் பக்தி என்பது' என்கிறார் ஸ்ரீ ஆசார்யாள்.

ஏறு அழிஞ்சில் என்று ஒரு மரம் உண்டாம். அதன் காய் முற்றியவுடன் பூமியில் விழுந்து உடையும். உடனே உள்ளே இருக்கிற விதைகள் ஏதோ ஓர் ஆகர்ஷண சக்தியால் நகர்ந்து நகர்ந்து வந்து மறுபடியும் தாய் மரத்தோடேயே ஒட்டிக்கொள்ளும். ஒட்டிக் கொண்ட பின் மூலமான மரத்துக்குள்ளேயே மறைந்துவிடும் என்கிறார்கள். பகவானிடமிருந்து பிரிந்துவந்திருக்கிற நாம் இப்படியே எப்போதும் அவன் பக்கமாக நகர்ந்து நகர்ந்து போய் முடிவில் அவனிடம் ஒட்டிக் கொண்டு ஒன்றாகி விடவேண்டும். ஊசி காந்தத்தை நோக்கிப் பாய்ந்து ஒட்டிக் கொள்வது அடுத்த உதாரணம். காந்தத்தில் சேர்ந்த ஊசிக்கும் காந்த சக்தி உண்டாகி அது மற்ற இரும்புப் பொருள்களை இழுப்பது போல், பக்தனுக்கும் பகவானின் குணங்களும், சக்திகளும் உண்டாகும் என்று இந்த உதாரணத்தால் காட்டுகிறார். அடுத்து பதி விரதையின் உதாரணம்; பதிவிரதையின் நினைவு பேச்சு, காரியம் அனைத்தும் பதியைச் சுற்றியே இருப்பது போல் நம் மனோவாக்கு காரியங்கள் பகவானையே பற்றி இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெரிகிறது. பதியை மூல சுலோகத்தில் 'விபு' என்கிறார். சர்வ வியாபகன் என்பது இதன் பொருள். இதனால் பகவானை ஏதோ ஓரிடத்தில் மட்டுமின்றி எங்குமாக, எல்லாமாக இருப்பதாகப் பாவிக்க வேண்டும் என்று உணர்த்துகிறார். அடுத்தபடியாக கொடியின் உதாரணம். கொழு கொம்பைச் சுற்றிக்கொள்கிற கொடியை நாம் சிறிது விலக்கிப் பிரித்து விட்டால் கூட அது படாத பாடுபட்டுக் கொஞ்சநேரத்திலேயே மறுபடியும் கொம்பை வளைத்துச் சுற்றிக்கொண்டுவிடும். நம் மனத்தை ஈசுவர ஸ்மரணையிலிருந்து அலைக் கழிக்கிற இடைஞ்சல்கள் எத்தனை வந்தாலும் நம் லட்சியத்தைப் பிடிவாதமாகப் பிடித்திருக்க வேண்டும் என்பதை இந்தந்

திருஷ்டாந்தம் உணர்த்துகிறது. கடைசியில் நதி - சமுத்திர உபமானம். இதுவே பரம அத்வைதம். கடல்தான் மழையாக விழுந்து பிறகு ஆறாகியிருக்கிறது. இரண்டும் வேறு வேறு அல்ல. ஒரு நதியானது எந்த மலையுச்சியில் பிறந்தாலும் அலுக்காமல் சளைக்காமல் ஓடி ஓடிவந்து கடைசியில் கடலில் கலந்து தன்னுடைய தனிப்பெயரையும் உருவத்தையும் இழந்து கடலாகவே ஆகிவிடுகிறது. கடல் அதை எதிர்கொண்டு அழைத்துக்கொள்கிறது. இதனால் தான் நதி சங்கமங்களுக்குச் சிறிது தூரம் இப்பாலே அந்த ஆற்றின் ஜலம் உப்புக் கரிக்கிறது. இப்படியே நாமும் நிஜமான பக்தி செலுத்தினால் கருணாசமுத்திரமான பகவான் முன்னே வந்து நம்மை ஆட்கொண்டு தானாக்கிக் கொள்வான்.

முதலில் பொருள் வேண்டும், பவிஷு வேண்டும் என்று வியாபார ரீதியில் பக்தி செய்ய ஆரம்பித்தாலும், பகவானின் குண விசேஷம் காரணமாக அவனுக்காகவே அவனிடம் அன்பு செலுத்துகிற பக்குவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறுவோம். கடைசியில் குணவிசேஷம் எதுவுமே இல்லாத பரமாத்ம ஸ்வரூபமாகவே நாமும் அவனில் கரைந்து அவனாகவே ஆவோம்.

லோக ரீதியில் நன்றாக வாழ்க்கை நடத்துவதற்கும் சரி, துவைதம். விசிஷ்டாத் வைதம், அத்வைதம் முதலிய சித்தாந்தங்களின் அனுபவத்துக்கும் சரி, பக்தி என்பது இன்றியமையாததாகிறது. மோட்சம் அடையப் பின்பற்றும் உபாயங்களில் தலை சிறந்தது பக்தியே என்கிறார் ஸ்ரீ பகவத் பாதர் - ஆத்ம ஸ்வரூபத்தை உணர்வது தான் பக்தி என்றும் அதையடுத்துச் சொல்கிறார்.

மோக்ஷஸாதன ஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ ।
ஸ்வஷ்வரூபானுஸந்தானம் பக்திரித்ய பிதீயதே ॥

நமது கலாசாரத்திற்கு நெருக்கடி

காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

உலகத்தில் முன்னேற்றமடைந்துள்ள தாகச் சொல்லப்படும் நாடுகளில் வசிக்கும் ஜனங்களுடைய வாழ்க்கைத் தரத்துக்குச் சமதையாக நமது நாட்டு ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். அதாவது அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் சுக சௌகரியங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் இப்பொழுது நமது நாட்டில் தீவிரமான முயற்சிகள் செய்யப்பெற்று வருகின்றன. இந்த நோக்கத்தையும், முயற்சிகளையும் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் ஓரளவுக்குட்பட்டுத்தான் பாராட்ட வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற முறையில் முயற்சிகள் செய்கிறபோது, வாழ்க்கையின் லட்சியத்தையும், வாழ்க்கையின் பிரயோஜனங்களையும் நாம் புறக்கணித்து விடக்கூடாது. அவைகளை அறிந்து செயல் படுத்துவது தான் உண்மையான வாழ்க்கை.

ஆனால் சமீப காலமாக, இந்த உண்மையான வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதிலும், இந்த உண்மையான வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டுமென்பதிலும் நியாயமாக இருக்க வேண்டிய ஆவல் மிகவும் குறைந்து காணப்படுகிறது. சிறப்பாக நமக்கு சுயராஜ்யம் கிடைத்தப்பிறகு, அதிலும் சென்ற பதினைந்து வருஷங்களாக இந்த ஆவல் வேகமாகக் குறைந்து வருகிறது. இது மிகவும் வருத்தப் படவேண்டிய விஷயம். இந்த நிலைமை நாம் அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது ஏற்படவில்லை.

முஸ்லிம்கள் நமது நாட்டின் மீது படை யெடுத்துவந்து வெற்றி கொண்ட காலத்தில் நமது கலாசாரத்திற்கும் மதத்திற்கும் ஏற்பட்ட அதிர்ச்சி, அதிலும் கூட வடநாட்டில் ஏற்பட்ட அதிர்ச்சி மிகக் கடுமையானது தான். ஆனால் அந்த அதிர்ச்சியை நாம் தாங்கிக் கொண்டோம். அதனால் நமது மத நம்பிக்கைகளுக்கோ, ஆசார அனுஷ்டானங்களுக்கோ, நமது கலாசார மரபுக்கோ அதிகமான ஊனம் ஏற்படவில்லை. முஸ்லிம்களின் படையெடுப்பினால், நமது கிராமங்களுக்கு எவ்வித பாதகமும் உண்டாகவில்லை. அது போலவே சுமார் முந்நூறு வருஷ பிரிட்டிஷ் ஆட்சியிலும், நமது மதக் கோட்பாடுகளும் வாழ்க்கை முறைகளும் பாதிக்கப் படவில்லை. ஜனங்களுடைய மத சம்பந்தமான விவகாரங்களில் தலையிடாமல் அவர்கள் - பிரிட்டிஷார் - நடுநிலைமை வகித்து, நமது கொள்கைகளுக்கும் ஆசார அனுஷ்டானங்களுக்கும் மதிப்புக் கொடுத்துக் காப்பாற்றி வந்தார்கள்.

நாம் சுயராஜ்யம் பெற்ற பிறகு, நம்முடைய வாழ்க்கை முறைகள் பெரிதும் மாறுதலடைந்து விட்டன. நமது சன்மார்க்க வாழ்க்கையில் இதற்கு முந்தி இல்லாத அளவுக்குக் கறைபடிந்து வருகிறது. நம்முடைய பாரமார்த்திக வாழ்க்கையைப்பற்றி

முந்தியெல்லாம் நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது அது பழைய கதையாகிவிட்டது. நம்முடைய கலாசார பரம்பரைக்கும், வாழ்க்கையின் லட்சியங்களுக்கும் விடை கொடுத்து விட்டோம். லௌகிக பரமான அனுகூலங்களையுடைய அதாவது பணம், பதவி, அதிகாரம் ஆகியவைகளை அடையவேண்டும் என்ற மோகத்தில், பாரமார்த்திக சம்பந்தமான விஷயங்களில் அலட்சிய மனப்பான்மை காட்டுகிறோம். சீலந்தான் பெரிதெனக் கருதவேண்டியதற்குப் பதில் இன்ப நுகர்ச்சியில் ஈடுபடுகிறோம். மத சம்பந்தமான விஷயங்களில், சிலர் அசிரத்தை உடையவர்களாயிருக்கிறார்கள்; அல்லது கடவுளை ஏற்கவோ மறுக்கவோ முடியாதென்ற கொள்கையுடையவர்களாயிருக்கிறார்கள். நம்மிலே அனேகர் ஏதோ ஒரு பிரதிப் பிரயோ ஜனத்தைக் கருதி மத சம்பந்தமான சடங்குகளைச் செய்கிறார்கள்.

நமது முன்னோர்களைக் காட்டிலும் நாம் மிகவும் நாகரிக முடையவர்களென்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். நமது வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதென்று சொல்லிச் சந்தோஷப்படுகிறோம். இந்தத் தரத்தை எப்படிக் கணிக்கிறோமென்றால், ஆகாய விமானங்கள். மோட்டார். வாகனங்கள், டெரிலின், நைலான் துணிகள், டிரான்சிஸ்டர்கள், டெலிவிஷன் இப்படி நவீனமானவற்றைக் கொண்டு கணிக்கிறோம். எளிய வாழ்க்கையினால் ஏற்படக்கூடிய நன்மைகளை நாம் மறந்தே விட்டோம். யந்திரம் போல் நடத்துகிற வாழ்க்கையின் விளைவாக. உண்மையான வாழ்க்கையினால் ஏற்படக் கூடிய சந்தோஷத்தைத் துறந்து விட்டோம். நம்மிலே ஏழைகள் கூட பணக்காரர்களைப் பார்த்துப் பொறாமை கொள்கிறார்கள். அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பின் பற்றப் பார்க்கிறார்கள். நமது வாழ்க்கையில் எளிமைக்குப் பதில் பகட்டே முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பணக்காரர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதன் மூலமாகவும், தங்கள் செல்வச் செழுமையை வெளிப்படையாகக் காட்டிக்கொள்வதன் மூலமாகவும் ஏழைகளுக்குக் கெட்ட வழியைக் காட்டுகிறவர்களா யிருக்கிறார்கள்.

எளிய வாழ்க்கையைத் துறந்து விட்டோமென்றால்; உயர்ந்த சிந்தனையையும் துறந்து விட்டோம். இப்பொழுது வெளியாகும் பெரும்பாலான நூல்கள், இளைஞர்களை துன்மார்க்கத்தில் இழுத்துச் செல்லக் கூடியனவாகவும், இந்திரிய சுகங்களில் ஈடுபடச் செய்யக் கூடியனவாகவும் இருக்கின்றன. தற்கால இளைஞர்களுக்கு, உயர்ந்த சிந்தனைகளைத் தூண்டி விடக்கூடிய இலக்கியங்கள் பயனற்றவை என்று தோன்றுகின்றன. வியாசர், வால்மீகி, காளிதாஸன் போன்ற மகா கவிகளின் படைப்புக்களில் அவர்களுக்கு ருசி இல்லை. பொழுது போக்குவதற்காக நடைபெறுகின்ற சினிமா போன்றவை அவர்களுடைய மனத்தைக் கறைபடுத்தி விடுகின்றன. அதிலும் கல்லூரிகளில் படிக்கும் மாணவிகளும், மற்ற இளம் பெண்களும் கீழ்த்தரமான சினிமாக்களைக் கண்டு களிப்படைவதன் மூலம் இளைஞர்களின் மனம் இன்னும அதிகமாகக் கறைபட்டுப் போகிறது.

தவிர, கிராமங்களிலுள்ளவர்கள், நகரங்களுக்கு வந்து குடியேறுவது அதிகமாகிக் கொண்டு வருகிறது. இதனால் கிராம வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய

அமைதி போய் நகர வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய சிக்கல்களும் போட்டா போட்டி மனப்பான்மையும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. அமைதியான கிராம வாழ்க்கையில் அனுபவிக்கக் கூடிய சநதோஷத்தை ஜனங்கள் இழந்துவிட்டார்கள்.

அரசியல் விவகாரங்களில் அறிவுக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டுப் போல இருந்த மந்திரிமார்களின் துணை கொண்டு, பிரஜைகளின் நலனில் எப்பொழுதும் விருப்புடனிருந்து வந்ததும், நெடுங்காலமாக நடை பெற்று வந்ததுமான மன்னராட்சி முறை மறைந்து விட்டது. வால்மீகி முனிவர், ராம ராஜ்யத்தைப்பற்றி அழகாக வருணித்திருக்கிறார். அத்தகைய ராமராஜ்யம், நமது நாட்டில் ஏற்பட வேண்டுமென்று மகாத்மா காந்தி வெகுவாக ஆசைப்பட்டார். ஆனால் அந்த ஆசை அவருடைய மரணத்தோடு முற்றுப்பெற்றுவிட்டது. இப்பொழுது ஜன நாயக ஆட்சி நடைபெற்று வருகிறது. இது செயல்படுகிற வகையில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு தேர்தலின் போது, மிகவும் விபரீதமான முறையில் ஒழுக்கம். நேர்மை முதலியவை சீர்குலைந்து வருகின்றன. திருதராஷ்டிரன் சபையில் துரோபதை "வான் சபையில் கேள்வி பலவுடையோர், கேடிலா நல்லிசையோர், மேலோர் இருக்கின்றார். அவர்கள் தர்ம நியாயத்தை எடுத்துச் சொல்லாமலிருக்கின்றரே" என்று கதறியழுத குரல் நம்மில்
யாருடைய காதிலும் விழவில்லை போலும்.

நமது கலாசாரத்தையும், சீலத்தையும் பேணிப் பாதுகாத்து வருகின்றவை இரண்டு. ஒன்று. வீடு; மற்றொன்று, கல்விக்கூடம். இவ்விரண்டும் இப்பொழுது சீர்திருத்த முடியாத அளவுக்கு சீர்குலைந்து போயிருக்கின்றன. நமது நாட்டில் எப்பொழுதுமே, சமுதாயத்தின் ஓர் அங்கமாகக் குடும்பம் இருந்து வந்திருக்கிறது. வயதிற்கும் அனுபவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து நடைபெற்றுவந்த அவிபக்த குடும்பம் இப்போது அடியோடு இல்லாமற் போய் விட்டது. வயதானவர்களுக்கும், வறுமை நிலையிலள்ளவர்களுக்கும், பலவீனர்களுக்கும் பாதுகாப்பளித்து வந்த ஸ்தாபனமாக அவி பக்த குடும்பம் இருந்து வந்தது. வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் தொலை தூரம் சென்று வேலை வாய்ப்புக்களை பெறவேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவாக, இந்த அவிபக்த குடும்பமுறை சின்னாபின்னப்பட்டுப் போய் விட்டது. இதனால் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் நமக்கு நாமே என்ற உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. குலாசாரத்தை அனுஷ்டிப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை அறியாதவர்களாகவும் அல்லது அதனை அலட்சியம் செய்கிறவர்களாகவும் பலர் இருக்கின்றனர்.

கல்வித் துறையில் குரு - சிஷ்ய உறவு என்பது போய்விட்டது. சிஷ்யன் என்று சொன்னால். ஒழுங்குக்கு உட்படுத்தப்பட வேண்டியவன் என்று பொருள். சிஷ்யன் பணிவோடு இருக்கிறவன் என்ற பொருளில் விதேயன் என்று அழைக்கப்படுகிறான். இந்த இரண்டு சொற்களும் அதாவது சிஷ்யன், விதேயன் என்ற இரண்டு சொற்களும் தற்காலக் கல்வி முறையில் அர்த்தமில்லாமற் போய்விட்டன. குரு பக்தி செலுத்துவாருமில்லை; அதனை ஏற்றுக் கொள்ளத் தகுதி படைத்தவருமில்லை.

இந்த மாதிரியான விஷயங்களில், நமது முன்னோர்கள் கடைப்பிடித்துவந்த நியதிகள் பலவும் இப்பொழுது சீரழிந்து போயிருக்கின்றன. நம்மில் பலருக்கும் மன அமைதியும், அதனால் ஏற்படக்கூடிய சந்தோஷமும் இல்லாமற் போய்விட்டன. இந்த ஜட உலகத்தைச் சேர்ந்த பொருள்கள் எதுவும் மனிதனுக்கு மன அமைதியையோ சந்தோஷத்தையோ கொடுக்காது என்ற வாசகத்தின் பொருளை நாம் மறந்து விட்டோம்.

நமது முன்னோர்கள் லௌகிக சம்பந்தமான விஷயங்களைப் புறக்கணித்து வந்தார்கள் என்று நாம் கருதிவிடக்கூடாது. உண்மையில் இந்த மாதிரியான விஷயங்களின் அவசியத்தைப்பற்றி அதிகம் சொல்லி இருக்கிறார்கள். தர்மம் அர்த்தம், காமம், மோட்சம் என்ற சதுர்வித புருஷார்த்தங்களை அடைய வேண்டியதே மனிதர்களுடைய லட்சியமாயிருக்க வேண்டுமென்பது குறித்துப்பல விதமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நம்மிலே ஒரு சிலரைக் தவிர. பெரும்பாலோர் இல்லறம் நடத்துகிறவர்கள். ஒரு சமுதாயம் ஒழுங்காக இயங்கிவர வேண்டுமானால், இல்லற வாழ்க்கையிலுள்ளவர்கள் பொருளையும் இன்பத்தையும் நாட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த இரண்டையும் - பொருளையும் இன்பத்தையும் தர்மத்திற்குட்மட்டும். மோட்தைக் குறிக்கோளாகக் கொண்டு அடைய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்கால சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற தீமைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம், நாம் தர்மத்தைப் புறக்கணித்து விட்டு, பொருளையும் இன்பத்தையும் நாடுவதுதான்.

தர்மம் எது? அதர்மம் எது? என்பதை மனிதர்கள் வகுக்கும் சட்ட திட்டங்களைக் கொண்டு நாம் நிர்ணயிக்கக்கூடாது. இது பற்றி சாஸ்திரங்கள் என்ன சொல்லியிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படி அனுசரிக்க வேண்டும். செய்யத் தகுத்தது எது? செய்யத்தகாதது எது? என்பதை நிச்சயிக்க, சாஸ்திரம் நமக்குப் பிரமாணமாகிறது. "சாஸ்திரம் ஆக்ஞாபித்திருப்பதை அறிந்து தர்மத்தை செய்யக் கடவாய்" என்பது கீதாவாசகம். ஆனால் தற்காலத்தில் சாஸ்திரங்களை நிராகரித்து விட்டு, சமயோ சிதப்படியும், அவரவர் விருப்பங்களுக்கேற்றாற் போலவும் நடப்பது சர்வசாதாரணமாகி விட்டது.

தர்மத்தின் அடிப்படைத் தத்துவம் உலகனைத்திற்கும் பொதுவானது. ஆனால் அதனை அனுஷ்டிப்பது ஒரே மாதிரியாயிருக்க முடியாது. எல்லா தர்மங்களும் ஒவ்வொருவருக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. அவரவருடைய தகுதிக்கும், நிலைமைக்கும் ஏற்றாற்போல் தர்மம் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று நமது முன்னோர்கள் நிர்ணயித்து விட்டிருக்கிறார்கள். யதது விட்டிருக்கிறார்கள். உதாரணமாக ஆசிரியனுடைய தர்மம் வேறு; மாணாக்கனுடைய தர்மம் வேறு. கணவனுடைய தர்மம் வேறு; மனைவியினுடைய தர்மம் வேறு. எஜமானனுடைய தர்மம் வேறு; வேலைக்காரனுடைய தர்மம் வேறு என்றிப்படி. இவர்களெல்லோரும் சமம் என்று சொல்லிக் கொண்டு ஒருவர் தர்மத்தை மற்றொருவர் அனுஷ்டிக்கக்

கூடாது. உதாரணமாக ஒரு ஸ்திரீ, ஒரு புருஷன் செய்கிற காரியத்தை நானும் செய்யக் கூடும் என்று சொல்லலாம். ஆனால் அப்படிச் செய்வது அவள் தர்மமன்று. அப்படிச் செய்வதால் அவளுக்கு இயற்கையாகவுள்ள அழகு, மகத்துவம் ஆகியவை குன்றிப் போகும். யார் யார் எந்தெந்த தர்மத்திற்கு அதிகாரிகள் என்பதைத் தெரிந்துகொள்கிற விஷயத்தில் நமக்கு ஏற்பட்டிருக்கிற குழப்பம், எந்த தர்மத்தை அனுஷ்டிக்க நமக்கு உரிமையும் தகுதியும் இல்லையோ அந்த தர்மத்தை அனுஷ்டிப்பது, இப்படிப் பட்டவைதான் இப்பொழுதேற்பட்டிருக்கிற சண்டை சச்சரவுகளுக்கெல்லாம் காரணம். "ஸ்வதர்மத்தில் இறப்பது மேல். பிறர் தர்மம் பயன் தருவதாகும்" என்பது கீதா வாசகம்.

ஒருவன் கட்டாயம் செய்தாக வேண்டிய தர்மங்களைப்போல், மற்றொருவன் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கமாட்டா. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை. ஸ்வதர்மத்தைச் செய்ய வேண்டியது தான் ஒருவனுக்கு முக்கியமே தவிர, மற்றொருவன் செய்யவேண்டிய தர்மத்தைப் பொறுத்ததாக இருக்கக்கூடாது. அதுபோல ஒருவன், மற்றொருவனுடைய கடமைகளைச் செய்வதாகச் சொல்லிக்கொண்டு, தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் விட்டு விடக் கூடாது. பிறர் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிக் கருதாமல், தன் கடமையை ஒவ்வொருவனும் செய்து கொண்டு போக வேண்டும். ஒரு கணவன் தன் மனைவி விஷயத்தில் தன் மனைவி விஷயத்தில் செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் விட்டு விட்டிருக்கலாம். அதற்காக மனைவி தன் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் தவறக் கூடாது. இப்பொழுதெல்லாம், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல், பெற வேண்டிய உரிமைகளைப் பற்றி மட்டும் அதிகம் பேசப்படுகிறது. இப்படிப் பேசாமல் அவரவரும் அவரவர் கடமைகளைச் கொண்டு போனால் சமுதாயத்தில் ஏற்பட்டு வருகிற பூசல்கள் தாமாகவே மறைந்து போகும்.

பெதுவாகச் சொல்லப்போனால், இப்பொழுது நாம் நல்வாழ்கை நடத்த வேண்டுமென்று ஆசைப்படுகிற பழக்கத்தை இழந்து விட்டோம். கட்டுப்பாடு என்பது போய் விட்டது. அதற்குப் பதில், எதற்கும் இணங்கிக் கொடுத்துக்கொண்டு போகிற சுபாவம் நமக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறது.

நமது அன்றாட வாழ்க்கையில் ஆடம்பரம் புகுந்துகொண்டு எளிமையை அப்புறப் படுத்திவிட்டது. அழிவில்லாத ஆத்மா நமக்கு இருக்கிறது. அதன் வளர்ச்சிக்கு நாம் பாடுபட வேண்டும் என்ற எண்ணம் நம்மிடமிருந்து அகன்று விட்டது. அதற்குப் பதில், அழிந்து போகக்கூடிய உடம்பைக் திருப்தி செய்வதைப்பற்றி எப்பொழுதும் எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறோம்.

மனத்தையும் சன்மார்க்க வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்துவதே தபஸ். ஆனால் இந்த தபஸ் என்பது, இப்பொழுது பொருளில்லாத சொல்லாகி விட்டது. ஆத்ம சக்திக்கு வேர்கள் போன்றவை, ஒழுங்குக்குட்பட்ட மனமும் சன்மார்க்க

வாழ்க்கையும். அந்த வேர்கள் இப்பொழுது உலர்ந்து வருகின்றன. நமக்கு ஆத்ம சக்தி எப்படி ஏற்படும்?

பிருஹதாரண்ய உபநிஷத்தில் ஒரு கதை சொல்லப்படுகிறது. ஒரு சமயம் தேவர்கள், அசுரர்கள், மனுஷ்யர்கள் ஆகிய மூவகையினரும் பிரம்மாவிடம் சென்று, தாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி உபதேசிக்குமாறு கேட்டார்கள். அப்பொழுது தா - தா - தா என்று இடி இடித்தது. பிரும்மாவின் உபதேசம் இந்தச் சப்தத்தில் அடங்கியிருப்பதாக மூவகையினரும் தெரிந்து கொண்டார்கள். எப்படியென்றால், தேவர்கள் தா என்ற அக்ஷரத்திற்கு தாம்யத, அதாவது தாங்கள் நிதானமாக - அளவோடு - இருக்க வேண்டுமென்று பொருள் கொண்டார்கள். அப்படியே அசுரர்கள், தாங்கள் எல்லோரிடத்திலும் தயை காட்ட வேண்டுமென்று பொருள் கொண்டார்கள். மனுஷ்யர்கள் தத்தம் என்ற அட்சரத்திற்கு தாங்கள் தானம் செய்யவேண்டுமென்று பொருள் கொண்டார்கள்.

பொதுவாகவே பிரதியொரு மஷ்னுயனிடத்திலும், மனுஷத் தன்மையோடு தெய்வத் தன்மையும், அசுரத் தன்மையும் கலந்திருக்கின்றது. அதாவது, அவன் இன்ப நுகர்ச்சி, பிறருக்குத் தீங்கிழைத்தல், பேராசை கொள்ளுதல் ஆகிய இந்த மூன்று குறைபாடுகளையும் களைந்தெறிய வேண்டுமானால், அவன். நிதான முடையவனாகவும், தானம் செய்கிறவனாகவும் முறையே இருக்க வேண்டும். இது தான் இந்தக் கதையின் தாத்பர்யம். எந்த ஒரு நாகரிக பரம்பரையும், நிதானம், தயை, தானம் ஆகியவற்றோடு, சத்தியம், பிறர் பொருள் வெளவாமை, அஹிம்சை ஆகியவற்றைப் பிரதானமாகக் கொண்டிருந்தால் தான் மதிப்புப் பெற்றிருக்கும். சிறப்பாக பாரத நாட்டின் கலாசாரத்திற்கும், நாகரிக பரம்பரைக்கும், இந்தச் சேர்க்கை அவசியம். இந்தச் சேர்க்கை, நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் இடம் பெறுவதற்கு நாம் எந்த அளவுக்கு முயற்சி செய்கிறோமோ, அந்த அளவுக்கு நம்முடைய பாரத சமுதாயத்தை அதற்கேற்பட்டிருக்கிற கலாசார நெருக்கடியிலிருந்து மீட்டவர்களாவோம். ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் ஷட்பதி ஸ்தோத்திரத்தில், அருளியிருக்கிறபடி பகவானை நோக்கி நாம் அனைவரும் பின் வரும் பிரார்த்தனையைச் செய்வோமாக: -

"பகவானே, என்னிடமுள்ள தன்னடக்கமின்மையை நீக்கு; என்னுடைய மனம் கட்டுப்பட்டிருக்கும்படி செய். இந்திரிய சுகங்களிலிருந்து என்னை விடுதலை செய். எல்லா ஜீவராசிகளிடத்திலும், அன்பு செலுத்துகிற மாதிரி என் இதயத்தை விலாலப் படுத்து; சம்சார சாகரத்தைக் கடக்க எனக்குத் துணை செய்".

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்

ரா. கணபதி

பூவுலகில் ஒரே பரம்பொருளே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று காரியங்களுக்காக பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று மூன்று மூர்த்திகளாக இருக்கின்றன.

ஒவ்வொரு யுகத்திலும் உலக நலனைக் குறித்து விஷ்ணு பகவான் பூலோகத்தில் அவதாரம் செய்கிறார். அதுபோல் பிரம்மாவிற்கு அவதாரம் இல்லை. சிவனுக்கும் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் கிடையாது. கலியுகத்தில் அவருடைய அம்சமாக, ஞானோபதேசம் செய்வதற்காக ஸ்ரீ சங்கரர் என்னும் திருநாமம் பூண்டு ஓர் அவதாரம் நிகழ்ந்தது.

சிவபெருமான் ஞானோபதேசம் செய்யும் பொழுது தக்ஷிணாமூர்த்தி என்னும் திருநாமத்துடன் விளங்குகிறார். அவருடைய உபதேசம் வாய்மொழியாக இல்லாது கையில் சின் முத்திரையின் மூலமாகவே உபதேசம் செய்கிறார். முதிர்ந்த மகரிஷிகள் உட்பட பலரும் தங்கள் சந்தேகங்களை சின்முத்திரையின் மூலமாகமே தெளிவுபடுத்திக் கொள்கிறார்கள்.

சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் ஞான மார்க்கம் குறைந்து நிரீசுரவாதம் தலை தூக்கி நின்றது. அந்தச் சமயத்தில் சகல தேவர்களும், மகரிஷிகளும் கைலாயம்பதியில் வசிக்கும் தக்ஷிணாமூர்த்தியின் சன்னதியை அடைந்து, பூலோகத்தின் நிலையை எடுத்துக் கூறி மானிடர்களுக்கு நல்ல அறிவையும், ஞானத்தையும் அருள்பாலிக்க வேண்டினர்.

கருணைக்கடலான தக்ஷிணாமூர்த்தி அவர்களும் பூவுலகில் அவதாரம் செய்வதற்கு இசைந்தார். அவருடைய அவதார காரியத்திற்கு உதவியாக பிரம்மா, இந்திரன் முதலிய தேவர்களும் பூலோகத்தில் பிறவி எடுக்கச் சம்மதித்தார்கள்.

தேவரும் முனிவரும் உள்ளம் குளிர்ந்தனர்.

இதே சமயத்தில், பாரத தேசத்தில் எழிலார்ந்த கேரளத்தில் உள்ள காலடி என்கிற கிராமத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

காலடியில் சிவகுரு என்கிற ஓர் அந்தணப் பெரியார் வாழ்ந்து வந்தார். ஆர்யாம்பாள் என்பவர் அவரது மனைவி. இவ்விருவரும் எப்பொழுதும் பூஜை செய்வதிலும், ஏழை எளியவருக்குத் தானதருமம் செய்வதிலும் ஈடுபட்டிருப்பார்கள். மிகவும்

நல்லவர்களான இந்தத் தம்பதியருக்கு ஒரு பெரிய மனக்குறை இருந்தது. தங்களுக்குக் குழந்தையே இல்லை என்பது தான் அந்தக் குறை.

விருஷாசலம் எனவும் சிவபுரம் எனவும் கூறப்படும் திருச்சூர் என்கிற பெரிய சிவ க்ஷேத்திரம் ஒன்று கேரளத்தில் உள்ளது. அங்குள்ள சிவபெருமானை மனமார ஒரு மண்டலம் (48 நாட்கள்) வழிபாடு செய்து வந்தால் மகப்பேறு கிடைக்கும் என்று சிவகுரு தம்பதிகள் கேள்விப்பட்டனர்.

உடனே திருச்சூருக்குப் புறப்பட்டனர். 'வடக்குநாதன்'என்கிற பெயரில் திருச்சூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானை நாள்தோறும் ஆறுகாலமும் நெஞ்சுருகி வழிபட்டு வந்தனர். வடக்குநாதனுக்கு நெய்யாலேயே அபிஷேகம் செய்வது வழக்கம். எப்போதும் வடக்குநாத சிவலிங்கம் நெய் விழுதுகளில் தான் புதைந்திருக்கும். அதைப் பார்த்தால் பனிமலையின் நடுவே பரமசிவன் விளங்குவது நினைவு வரும். இந்த நெய்யைப் பிரசாதமாகப் பெற்று உட்கொண்டால் தீராத வியாதிகளும் தீரும்.

சிவகுரு தம்பதியரின் உண்மையான பக்தியைக் கண்டு, வடக்குநாதனின் நெஞ்சம் நெய். போலவே உருகியது. அவர்களைக் கொஞ்சம் சோதனை செய்துவிட்டு வரம் தர எண்ணினார்.

இருவரது கனவிலும் தோன்றினார் சுவாமி "உங்கள் பக்தியை மெச்சினேன், நீங்கள் விரும்பியபடி புத்திர வரம் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை.. உங்களுக்கு நீண்ட ஆயுள் கொண்ட, ஆனால் புத்தியில்லாத பல குழந்தைகள் வேண்டுமா? அல்லது அற்ப ஆயுள் கொண்ட, ஆனால் புத்தியில் மிகச் சிறந்த ஒரே பிள்ளை வேண்டுமா? இரண்டில் ஒன்றைத்தான் தருவேன். நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் சிவ பெருமான்.

பக்தியில் சிறந்த அத்தம்பதியரோ, "தேர்ந்தெடுக்க நாங்கள் யார்? எங்களுக்கு எது நல்லதோ, நாட்டுக்கு எது நல்லதோ அதை இறைவனான நீயே அறிவாய். எனவே உன் விருப்பப்படியே செய்தருள்வாய்" என்றனர்.

பரமன் மகிழ்ந்து “ஆஹா! சோதனையில் வென்றுவிட்டீர்கள். உலகம் முழுவதற்கும் நன்மை செய்வதற்காக நானே உங்களுக்கு மகாபுத்திமானான ஒரு புத்திரனாகப் பிறப்பேன்" என்று கூறி மறைந்தார்.

தம்பதியர் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தனர்.

வட விருட்சம் எனப்படும் ஆலமரத்தினடியில் அமர்ந்திருக்கும் தக்ஷிணாமூர்த்தி, வடக்குநாதனாக ஆகி, ஆர்யாம்பாளின் வயிற்றுக்குள் ஜோதி வடிவில் புகுந்தார்.

உடனே சிவகுரு தம்பதியர் காலடிக்குக் திரும்பினர்.

சரியாகப் பத்து மாதங்கள் சென்றன. வைகாசி மாதம், வளர்பிறை ஐந்தாம் நாளன்று, சிவபெருமானுக்கு உரிய திருவாதிரை நட்சத்திரத்தில் அந்தச் சிவபெருமானே ஆர்யாம்பாளுக்கு அருமைப் பிள்ளையாக அவதாரம் செய்தார்.

"உலகுக்கெல்லாம் நன்மை செய்வதற்காகவே அவதரிப்பேன்" என்று பெருமான் கூறியிருந்ததால் குழந்தைக்கு சங்கரன் என்று பெயரிட்டனர். வடமொழியில் 'சம்' என்றால் 'சுகம்', 'கரோதி' என்றால் 'கொடுப்பவன்' 'சங்கரன்' என்றால் சுகத்தையும், ஆனந்தத்தையும் அளிக்கக் கூடியவன் என்று பொருள்.

சங்கரக் குழந்தையின் அழகு தெய்விக ஒளியுடன் விளங்கியது. அக்குழந்தையைக் கண்ட அனைவரும் "இது சாதாரண மனிதக் குழந்தை அல்ல" என்று பாராட்டிப் பணிந்தனர். சிவபெருமானிடம் காணப்படும் மான்; பசு, சூலம், கபாலம் முதலியன குழந்தையின் கை, கால்களில் ரேகைகளாக இருப்பது கண்டு அனைவரும் வியந்தனர்.

இக்குழந்தை பிறந்தவுடனேயே யாகம் நடந்துகொண்டிருந்த ஒரு சில அபூர்வமான இடங்களில் வேள்வித் தீ வலப்புறமாகச் சுழித்துக்கொண்டு. ஓங்கி வளர்ந்தது. பிற மதஸ்தர்களும், கடவுள் இல்லை எனக்கூறும் நாஸ்திகர்களும் தங்கள் கொள்கைகளுக்கு ஆதாரமாகக் கையில் வைத்திருந்த சுவடிகள் தாமாகவே நழுவி விழுந்தன. இந்த அறிகுறிகளைக் கண்டு 'எங்கோ ஓர் மகான் அவதரித்திருக்கிறார்' என்று பெரியவர்கள் புரிந்துகொண்டார்கள்.

குழந்தை சங்கரன் அறிவிலும், குணத்திலும் மிக உயர்ந்தவனாக விளங்கினான். அன்பால் அனைவரையும் கவர்ந்தான். மூன்றாவது வயதிலேயே அவனுக்கு 'அட்சாரப்பியாசம்' செய்தார்கள். அதாவது படிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுத்தார்கள். உடனே அவன் பெரிய பெரிய சாஸ்திரங்களையும் தானாகப் படித்து ஒரே முறையில் மனப்பாடம் செய்து கொண்டு விட்டான். அவற்றின் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டான்.

சங்கரனுக்கு நான்கு வயதான போது ஓரு துயர சம்பவம் திகழ்ந்தது, சிவகுரு காலமாகிவிட்டார்!

சிவ குருவின் மரணத்தால் ஏற்பட்ட துக்கத்தைச் சிறிது சிறிதாக ஆர்யாம்பாளும் சங்கரனும் ஆற்றிக்கொண்டனர்.

சங்கரனுக்கு ஐந்து வயதாயிற்று. ஆர்யாம்பாள் அவனுக்கு உபநயனம் செய்வித்தாள் - அதாவது பூணூல் கல்யாணம் நடத்தினாள்.

பூணூல் போட்டுக்கொண்டபின் ஒரு சிறுவன் வீட்டைவிட்டு, ஆசிரியரிடம் சென்று அவருடனேயே வசிக்கவேண்டும். இதற்குக் 'குருகுல வாசம்' எனப் பெயர். குருவானவர் சீடனுக்கு வேதங்கள், அதன் அங்கங்கள், மற்ற சாஸ்திரங்கள், காரியங்கள் யாவும் போதிப்பார். மாணவன் அவருக்குப் பணிவிடை செய்து இவற்றைக் கற்க வேண்டும். படிப்பு முடிந்த பின் வீடு திரும்புவான். பூணூல் போட்ட பின் குருகுல வாசம் செய்து வேதம் கற்பவன் பிரம்மசாரி எனப்படுவான்.

சங்கரன் அற்புத பிரம்மசாரியாக விளங்கினான். பிரம்மசாரிக்குக் கொஞ்சம்கூட அகம்பாவத் திமிர் இருக்கக்கூடாது என்பது விதி. பணிவு இருந்தால் தான் படிப்பு பயன் தரும். அகம்பாவம் இல்லாமல் இருப்பதற்கென்றே பிரம்மசாரியைப் தினமும் வீடு வீடாகச் சென்று பிட்சை வாங்கி வரச் சொல்வார் குரு.

நமது சங்சரனும் இவ்வாறு பிட்சை வாங்கி வந்தான். ஒரு துவாதசி தினத்தன்று பரம ஏழையான ஒருவரின் வீட்டு முன் நின்று பிட்சை கேட்டான். அந்த வீட்டில் உணவுப் பண்டம் எதுவுமே கிடையாது. சாஸ்திரக் கட்டளைப்படி துவாதசி தினத்தில் கடவுளுக்கு நிவேதனம் செய்வதற்காக ஒரே ஒரு நெல்லிக் கனி மட்டுமே தேடி எடுத்து வந்திருந்தாள் அவ்வீட்டுப் பெண்மணி.

பாலமுருகனைப்போல் வாசலில் வந்து நிற்கும் சங்கரனைக் கண்டதும் அப்பெண் மணிக்குக் கண்ணீர் வந்து விட்டது. "அடடா! பரம ஏழையான என்னிடம் இந்த தெய்வக் குழந்தைக்குப் பிட்சையிடுவதற்கு எதுவுமே இல்லையே' என்று மனம் குமுறினாள்.

அவ்வீட்டிலிருந்த ஒரே ஒரு நெல்லிக் கனியைக் கொண்டுவந்து சங்கரனின் பிட்சா பாத்திரத்தில் இட்டாள். அவளது நல்ல உள்ளத்தை அன்பு வெள்ளத்தைக் கண்டு சங்கரன்' உருகிவிட்டான், உடனே செல்வத்திற்கு தெய்வமான லக்ஷ்மியைக் குறித்து ஓர் அற்புதத் துதி செய்தான்.

ஓர் அதிசயம் நிகழ்ந்தது! அந்த வீட்டு முற்றத்தில் தங்கத்தினாலான 'நெல்லிக் கனிகள் மழையாகப் பொழிந்தன. அன்பு கொண்டு பிச்சையிட்ட ஒரு நெல்லிக்கனிக்கு ஈடாக, அவர்களது வறுமை முழுதும் மறையுமளவுக்குப் பொன் நெல்லிக் கனிகளை பொழிந்துவிட்டாள் செல்வத் தேவதை. சங்கரனின் மணிவாக்கே அதற்குக் காரணம் பொன்மழை பொழிவித்த இத்துதி "கனகதாரஸ்தவம்" என்றே வழங்குகிறது. அறிவில் இணையற்ற சங்கரன், மூன்றே ஆண்டுகளில் சகல நூல்களையும் கற்றுத் தேர்ந்து விட்டான். வேதங்கள், சாஸ்திரங்கள், காவியங்கள் யாவற்றிலும் பெரிய நிபுணனாகிவிட்டான் எட்டே வயதுப் பாலன் சங்கரன்.

குருகுல வாசம் முடிந்து, வீடு திரும்பினான் சங்கரன். கணவனை இழந்திருந்த அன்னைக்கு எந்தக் குறையும் தெரியாதவாறு மிகுந்த அன்போடு பணிவிடை செய்து வந்தான்.'

ஒருமுறை ஆர்யாம்பாளுக்கு நோய் உண்டாயிற்று. அதிகமாக நடக்க முடியாமல் அவளுக்கு சக்திக் குறைவு ஏற்பட்டது. காலடியில் இருக்கும்போதெல்லாம் அவள் ஒருநாள் - கூடத் தவறாமல் அவவூரில் ஓடும் புண்ணிய நதியான 'பூர்ணா' வில் தான் ஸ்நானம் செய்வாள். இந்த ஆற்றைச் 'சூர்ணா' என்றும் 'ஆல்வாய் புழை' எனவும் சொல்வார்கள். அப்போது ஆர்யாம்பாளால் நடமாடமுடியாததால் நதியில் ஸ்நானம் செய்யமுடியாமற் போயிற்று; இது அவளுக்கு மிகவும் குறையாக இருந்தது.

அன்னையின் துயர் தீர்க்க எண்ணினான் சங்கரன். பூர்ணா நதியைப் பிரார்த்தித்து, "வா, வா" என்று அழைத்தான். பரமேஸ்வரனின் அவதாரமான அவனது வார்த்தைக்கு நதியும் கட்டுப்பட்டது. பூர்ணா நதி தனது போக்கையே மாற்றிக் கொண்டு, சங்கரன் வீட்டுத் தோட்டத்திற்கே வந்து விட்டது. அன்னை பேரானந்தம் அடைந்தாள்.

ஒரு நாள் சப்த ரிஷிகள் எனப்படும் மாமுனிவர் எழுவர் சங்கரன் தனித்திருந்த போது அவனிடம் வந்தனர். 'பெருமானே! நாளுக்குநாள் நாட்டில் நாஸ்திகம் வலுத்து வருகிறது. தாங்கள் ஆஸ்திகத்தை நிலை நிறுத்தவே அவதாரம் செய்து எட்டாண்டு முடிய இருக்கிறது. தங்களது அவதாரப் பணியை நினைவூட்டவே வந்தோம்" என்றனர்.

"நல்லது. பணியைத் தொடங்குவேன். துறவியாகி, வீட்டைவிட்டு. நாட்டைச் சுற்றிச்சுற்றி வந்து உபதேசித்தால் தான் இப்பணி நடைபெறும். இவ்விதம் நான் துறவியாவதற்கு வாய்ப்பாக இனி நிகழ்ச்சிகளை உருவாக்குவேன்." என்றான் சங்கரன்.

சப்தரிஷிகள் திருப்தியுடன் விடை பெற்றனர்.

சங்கரன் திட்டமிட்டபடியே சம்பவம் நடந்தது. ஒருநாள் அவன் பூர்ணா நதியில்
நீராடுகையில் முதலை ஒன்று அவனுடைய காலைக் கவ்வி விட்டது.

"அம்மா! அம்மா!" என்று அலறினான் கங்கரன்.

ஆர்யாம்பாள் கதிகலங்கிவிட்டாள். தன் உயிருக்குயிரான உத்தமக் குழந்தையை முதலை பற்றியிருப்பதைக் கண்டு துடி துடித்தாள். ஆனால் அவளால் எப்படி முதலையின் இறுக்கமான பிடிப்பிலிருந்து குழந்தையை விடுவிக்க முடியும்?

"ஐயோ! உன்னைக் காப்பாற்றுவது என் கையில் இல்லையே! கையாலாகாத பாவியாக நிற்கிறேனே!" என்று கூறிக் கையைப் பிசைந்தாள் ஆர்யாம்பாள்.

"இல்லையம்மா, என்னைக் காப்பது உன் கையில் தான் இருக்கிறது" என்றான் சங்கரன்.

அதன் பொருள் விளங்காமல் அவள் தவிக்க, சங்கரனே தொடர்ந்து கூறினான் "அம்மா, இந்தப் பிறவியில் நான் முதலையினால் கொல்லப்பட வேண்டும் என்பது விதி ஆனால் இப்போதே நான் சந்நியாசம் செய்து கொண்டு. துறவியாகி, வீட்டையும் உறவினரையும் உடமைகளையும் விட்டு விட்டு வெளியேறினேனாகில் இந்தப் பிறவியே முடிந்து, எனக்கு வேறு பிறவி உண்டானதாகும். சாஸ்திரப்படி சந்நியாசம் என்பது மறுபிறவியாகும். அடுத்த பிறவியில் முதலை என்னை எதுவும் செய்ய முடியாது. எனவே இப்போது துறவியாவதற்கு நீ அனுமதி கொடுத்தால் முதலை என்னை விட்டுவிடும். என்னை பிழைக்க வைப்பது உன் கையில் தான் இருக்கிறது." என்றான் சங்கரன்.

செல்வப் புதல்வன் தன்னை விட்டுப் பிரிந்து சந்நியாசியாக ஆவதை அன்னை அனுமதிக்க மாட்டாள் என்பதாலேயே, இந்த அசாதாரணமான நிகழ்ச்சியை சங்கரனே உண்டாக்கிவிட்டான்!

சங்கரனின் எண்ணத்தை அறியாத ஆர்யாம்பாள் என்ன செய்வாள், பாவம் தன்னை விட்டுச் சென்றேனும் பிள்ளை உயிரோடு இருந்தால் போதும் என்று கருதினாள். "சரியப்பா! நீ துறவியாவதற்கு அனுமதிக்கிறேன்" என்று கதறிக்கொண்டே கூறினாள்.

அன்பே உருவான சங்கரன், "அம்மா நான் எல்லா உறவுகளையும் விட்டுத் துறவியானாலுங்கூட, உன் உயிர் பிரிகிற சமயத்தில் உன்னிடம் வந்து சேருவேன்! நானே உனக்கு அந்திமக்கிரியை செய்து பிள்ளை என்கிற கடமையை நிறைவேற்றுவேன்" என்று உணர்ச்சியுடன் கூறினான்.

முதலையிடமிருந்து விடுபட்ட சங்கரனை வீட்டுக்கு வருமாறு அழைத்தாள் அன்னை. ஆனால் சங்கரனோ, "உலகில் உள்ள அன்னையர் அனைவரும் எனது அன்னையரே! ஆண்கள் அனைவரும் எனது சகோதரர்களே! பெண்கள் அனைவரும் எனது சகோதரிகளே! இந்த உலகில் உள்ள இல்லங்கள் அனைத்தும் எனது இல்லங்களே!" என்று கூறிவிட்டு புதிய துறவி உருவம் பெறுவதற்காகக் காலடியை விட்டுப் புறப்பட்டான்.

காலடியை விட்டு, பெற்றெடுத்து வளர்த்த அன்புத் தாயை விட்டு, இவ்வுலகத்தையும் விட்டுக் காலடி நோக நடந்து கொண்டேயிருந்தான் சங்கரன். "ஆபத்சந்நியாசம்" என்கிற முறையில் பூர்ணா நதிக்குள் அவன் தனக்குத்தானே துறவற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு சந்நியாசியாகி விட்டான். ஆனாலும் இப்போது ஆபத்து நீங்கிவிட்டதால் உத்தம சந்நியாசியான் ஒரு குருவினிடமிருந்து.. துறவறம் வாங்கிக் வாங்கிக்கொள்வதே வேத மதம் கூறும் முறையெனக் கருதினான். இவ்வாறு தனக்கு சந்நியாச உப்தேசம் தரவேண்டிய குரு யார், அவர்

எங்கே - இருக்கிறார் என்பதெல்லாம் சிவ அவதாரமான சங்கரனுக்குத் தெரியும். குருவைத்தேடி சாதாரண பாலன் போல் காதம் காதமாகக் கால்தேய நடந்து செல்கிறான். நர்மதைக் கரையை இறுதியில் அடைகிறான்."

சங்கரன் அங்கே சென்றபொழுது நர்மதை பிரவாகமாகப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. சங்கரன் தன் சக்தியால் அப்பிரவாகத்தைக் கமண்டலத்தில் அடக்கினான். பெருவெள்ளமாக இருந்த அந்த நதியை மக்ககளுக்கு உதவும் முறையில் கரைக்கு அடங்கி ஓடுகிற ஆறாக மீண்டும் பாயவிட்டான்.

அங்கே நர்மதையின் கரையில் காத்திருந்த கோவிந்த பகவத்பாதர் இந்த அற்புதத்தைக் கண்டு, அன்பு பொங்கும் உள்ளத்தோடு சங்கரனை வரவேற்றார்.

தலையிலிருந்த முடியைக் களைந்து, காஷாய ஆடை உடுத்துப் புதியதொரு தூய்மைப் பொலிவினைப் பெற்றான் சங்கரன். இதுவே துறவறத்தின் அடையாளமாகும். அவனுக்குத் துறவு மந்திரம் புகட்டினார் கோவிந்த பகவத்பாதர். "அனைத்தும் கடவுளின் தோற்றமே; மனித ஜீவனாகத் தன்னை எண்ணிக்கொண்டிருப்பவனும் உண்மையில் கடவுள் என்கிற ஒரே தத்துவம் தான்" என்கிற உண்மையைக் கூறும் வேத மந்திரங்களுக்கு 'மகா வாக்கியங்கள்' எனப்பெயர். இந்த மகா வாக்கியங்களையும் சங்கரனுக்கு உபதேசித்தார். கோவிந்தர்.

சந்நியாசியாகிவிட்ட சங்கரனை இனி நாம் மரியாதையுடன் சங்கரர் என்றே அழைக்கலாம். மகா வாக்கியங்கள் எல்லாம் சங்கரனுக்குத் தானாகவே அனுபவத்தில் தெரியும். மூல குருவான தக்ஷிணா மூர்த்தியே அவர்தாமே? என்றாலும் உலகத்தில் குரு-சிஷ்ய முறையின் பெருமை விளங்க வேண்டும் என்பதால் அடக்கத்துடன் கோவிந்தரிடம் சீடரானார்.

தெய்வமாக இருந்து பெரிய சக்தியினால் மக்களை நல்வழிப்படுத்துவதைவிட, மனிதர் போல இருந்து அன்பால் அவர்களை உயாதது வது தான் சிறப்பானது; அப்போதுதான் மற்ற மானுடர்களுக்கும் தாங்கள் கூடத் தெய்வமாக உயரலாம் என்கிற நமபிககை பிறக்கும் என்று கருதினார்.

எனவே கோவிந்தர் கட்டளையிட்டபடி அத்வைத விதியை, உலகினருக்குப் பிரச்சாரம் செய்யக் கிளம்பினார். கோவிந்தரும் இமாலயத்திற்குக் கிளம்பினார்..

பாரதநாட்டில் உள்ள எண்ணில் அடங்காத புண்ணிய க்ஷேத்திரங்களில் முதலிடம் பெறுவது காசி. எல்லா மதங்களையும் சேர்ந்த பண்டிதர்களும் வாழ்ந்த இடம் காசி தான். அத்வைதத்தை எதிர்ப்பவர்களுடன் வாதம் செய்து வெல்வதற்குக் காசியே ஏற்ற இடம் என்பதால் அங்கு சென்றார் சங்கரர்.

வண்டுகள் மலரை நாடிவந்து மொய்ப்பது போல் நம் சங்கரரைப் பாமரரும் பண்டிதரும் வந்து சூழ்ந்து அடிபணிந்து சீடராயின்ர். இறைவனது திருவடிகளிலேயே அவர் ஆழ்ந்திருந்ததால் "சங்கர பகவத் பாதர்" என்றும் பெயர் பெற்றார்.

காசியம்பதியில் கங்கைக் கரையில் இவரது உபதேசமும் கங்கையைப் போலக் கொந்தளித்து வந்தது. அத்வைதத்தை எதிர்த்து மாற்று மதக்காரர்களும் அவரது உபதேசத்தினால் அழுக்கு அகன்று தெளிவு பெற்றனர்.

அற்ப ஆயுளே இம்மானுட உலகில் வாழப்போவதாக அல்லவா முன்பு வடக்கு நாதன் கூறியிருந்தார்? தன் உடல் அழிந்தாலும் உபதேசங்கள் அழியலாகாது என்பதால் அவற்றை எழுதி வைக்கலானார் ஸ்ரீ சங்கராச்சாரியார்.

வியாசர் அருளிய பிரம்ம சூத்திரம், வேத ரிஷிகள் அருளிய பத்து உபநிஷதங்கள், கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதை ஆகிய மூன்று நூல்களுக்கும் ஸ்ரீ சங்கரர் உரை இயற்றினார். இவைகள் 'பாஷ்யம்' எனப்படும். இந்நூலின் மூலக் கருத்துக்களையே மையமாகக் கொண்டு அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் அநேக வேதாந்த நூல்களை இயற்றியுள்ளார். அவைகளே 'பிரகரண கிரந்தங்கள்' எனப்படும். இவை தவிர குழந்தைகளுக்கு இதே கருத்தும், பக்தியும் கொண்ட 'கணேச பஞ்ச ரத்னம்' போன்ற ஸ்தோத்திரங்களையும் இயற்றியுள்ளார்.

இன்று உலகெங்கும் உள்ள அறிஞர் பெருமக்களும், ஆன்மீக அனுபவசாலிகளும் சங்கரர் தந்துள்ள இந்த நூல்களைப் போற்றிப் புகழ்கின்றார்கள்.

பாரத நாட்டின் எல்லாப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் காசிக்கு வருவார்கள். அங்கு கங்கா ஸ்நானம் விசேஷமானது. அதோடு காசியில் கோயில் கொண்டுள்ள விசுவநாத சிவபெருமான், விசாலாட்சி அம்பிகை, அன்ன பூரணியம்பிகை இவர்களைத் தரிசிப்பது பெரும் புண்ணியமாகும். முற்காலத்தில் உத்தமமான குருவைத் தேடியவர்களும் காசிக்கே சென்றனர்.

இவ்விதம் காசிக்குச் சென்ற ஓர் இளைஞரே சநந்தனர். இவர் சோழ நாட்டைச் சேர்ந்தவர். ஆசாரியரை காணக் காசி சென்ற இவர் ஒப்பில்லாத ஆசாரிய மணியான சங்கரரைக் கண்டு அவரிடம் நிகரற்ற பக்திகொண்டு சீடரானார். இவர் நரசிம்ம மூர்த்தியிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

சநந்தனரின் பக்தி எவ்வளவு உயர்ந்தது என்று உலகு உணரச் செய்யவேண்டும் என உளம் கொண்டார் ஸ்ரீசங்கரர்.

ஒரு நாள் சங்கரர் கங்கையின் இக்கரையில் அமர்ந்து உபதேசம் செய்து கொண்டிருக்க, அக்கரையில் அவரது வஸ்திரங்களை உலர்த்தி எடுத்து மடித்துக்கொண்டிருந்தார் சநந்தனர்.

திடுமென சங்கரர், "சநந்தனா வா! நான் கட்டியிருக்கும் வஸ்திரம் - ஈரமாகி விட்டது. உலர்ந்த வஸ்திரத்தை விரைவில் கொண்டுவா" என்று உரக்கக் கூவினார்.

குருநாதனின் கட்டளை வந்ததும் தம்மை மறந்தார் சநந்தனர். படகு அமர்த்திக் கொண்டு கங்கையைக் கடக்க வேண்டும் என்பதையும் குருபக்தியின் வேகத்தில் மறந்தார். "குரு ஈரத் துணியுடன் நிற்கிறார்! 'வா' என்று தன்னை அழைக்கிறார்" என்று மட்டுமே அவருக்குப் புரிந்தது. உடனே தாமே கங்கை வெள்ளத்தின்மீது நேராக நடக்கத் தொடங்கிவிட்டார்!

விந்தை விளைந்தது! அந்த பக்தி மயமான சீடர் கங்கையில் முழுக ஆசாரியர் பார்த்துக் கொண்டிருப்பாரா? எனவே அக்கரைக்கும் இக்கரைக்குமாக குபுகுபுவென பெரியப் பெரிய தாமரை மலர்கள் முளைத்து ஒரு மலர்ப்பாலமே உருவாகிவிட்டது. அந்தந் தாமரை மலர்களின் மீது அடியெடுத்துவைத்தே சநந்தனரும் இக்கரைக்கு வந்து சேர்ந்தார். ஆனால் அவரது நினைவு முழுவதும் குருவிடமே இருந்ததால் மலர்ப் பாலம் உண்டானதே அவருக்குத் தெரியாது! எனவே சங்கரர் அவரிடம் நதியை எப்படிக் கடந்தாய்?" என்று கேட்ட போது அவர், "குருவே! தங்களை நினைத்தால் பிறப்பு-இறப்புத் தொடரான சம்சாரக் கடலே மறைந்து போகுமே! அவ்விதமிருக்க கங்கை மறைந்ததில் அதிசயம் என்ன?" என்றார்.

பத்மங்களின் மீது பாதத்தை வைத்து வந்த இவருக்கு **"பத்ம பாதர்"** என்று புதுப்பெயர் சூட்டினார் நம் பகவத்பாதர்.

ஒருநாள் சங்கரர் கங்கையில் நீராடி விட்டுச் சீடர் புடைசூழ விசுவநாதர் ஆலயத்திற்குச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது ஒரு புலையனும், புலைச்சியும் நம்முடைய ஆசாரியர் போகின்ற வழியில் குறுக்கே வந்துவிட்டார்கள். போதாத குறைக்கு கையில் நான்கு நாய்களை வேறு பிடித்திருந்தார்கள்!

"போ, போ! விலகிப் போ! எட்டிப் போ" என்று சங்கரரின் சீடர்கள் கூவினர்.

அவன் சிரித்தான்! "அத்வைதம், அத்வைதம் என்று சொல்லிவிட்டு என்னை விலகிப்போகச் சொல்கிறீர்களே, இது பெரிய முரண்பாடு அல்லவா? எல்லாமே ஒரே சத்தியமான கடவுளின் தோற்றந்தான் என்கிறது உங்கள் அத்வைதம். அவவாறெனில் உங்களைப்போலவே நாங்களும் அதே சத்தியத்தின் தோற்றந்தான். உடல் நமக்கு வேறுவேறானாலும், உடலுக்குள்ளே இருக்கிற பரமாத்மா ஒருவர்தான். இந்த உடம்பைப்பற்றிய எண்ணத்தையே விலக்கி விட்டுப் பரமாத்மாவாக இருக்கவேண்டும் என்றுதான் இந்த ஆசாரியர் உபதேசிக்கிறார். அப்படியிருக்க, உங்கள் உடம்பின் அருகிலிருந்து எங்கள் உடம்பு விலகிப்போக வேண்டும் என்று சொல்வதில் பொருள் இல்லை. உங்கள் உடம்புக்குள் உள்ள ஞான ஒளியிலிருந்து எங்கள் உடம்பிலுள்ள ஞான ஒளி விலக வேண்டும் என்று நீங்கள்

கருதினால் அதுவும் அர்த்தமற்றதாகும். ஏனெனில் இந்த ஞான ஒளிகள் அனைத்தும் ஒன்றே தான். தன்னை விட்டே தான் எப்படி விலக முடியும்?" என்று இப்படி ஆணித்தரமாகக் கேட்டுவிட்டான் அந்தப் புலையன்.

உடனே சத்தியத்தையே தலையால் வணங்கும் ஸ்ரீ சங்கரர் இப்படிப்பட்ட ஞான நிலையை அடைந்து பேசுபவர் புலையனாக இருக்க முடியாது. காசிவிஸ்வநாதரும், விசாலாட்சியுமே நம்மைச் சோதிக்க வந்துள்ளனர் என்பதை ஞான திருஷ்டியினால் உணர்ந்து **'மனீஷா பஞ்சகம்'** என்கிற ஐந்து சுலோகங்களைப் பாடினார்.

உடனே புலையன் நின்றிருந்த இடத்திலே விஸ்வநாதப் பெருமானே நின்றார்; புலைச்சி விசாலாட்சியானாள். நான்கு நாய்களும் நான்கு வேதங்களாயின.

"என் மறு உருவமான சங்கரா! வாய்ப்பேச்சில் மட்டும் வேதாந்தம் கூறாமல் வாழ்விலேயே அதை நீ நடத்திக் காட்டுபவன் என்று உலகறியச் செய்யவே இந்த நாடகம் நடித்தேன்" என்று கூறி ஆசி வழங்கி மறைந்தார் விஸ்வநாதப் பெருமான்.

சங்கரருக்குப் பதினாறு வயது நிறைகிற சமயம். தொண்டு கிழவரான ஒரு பிராமணர் அவரிடம் வாதம் செய்யவந்தார். சங்கரர் செய்துள்ள பிரம்ம சூத்ர பாஷ்யத்தை ஆட்சேபித்து அந்தக் குடுகுடு கிழவர் எதிர் வாதம் ஆரம்பித்தார்.

சங்கரர் தமது கூர்மையான அறிவுத் திறனால் அந்த எதிர்வாதங்களை முறியடித்தார்.

ஆனால் கிழவனாரும் மதிநுட்பத்திலே சங்கரருக்குச் சளைத்தவராக இல்லை. சங்கரர் ஓர் உண்மையை நிலைநாட்டினால், அடுத்தபடி கிழவனார் மேலும் பல ஆட்சேபங்களைக் கிளப்பினார்.

இப்படியே வாதம் போய்க்கொண்டிருந்தது. மணிக்கணக்கில் மட்டும் அல்லாது நாட்கணக்கிலும் வாதம் முடியாமல் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

மாமேதையான நமது ஆசாரியாருக்குச் சமமாக இப்படி வாதம் செய்யக்கூடியவர் எவராயிருக்கக்கூடும் என்று அதிசயித்தார் பத்மபாதராகிவிட்ட சநந்தனர். "இந்தச் கிழவர் நிச்சயமாகச் சாமானிய மானுடராக இருக்க முடியாது; நம்முடைய குருநாதரைப் போன்றே இவரும் ஓர் அவதார புருஷராகத் தான் இருக்க வேண்டும்" எனக் கருதி மிக பயபக்தியுடன் அவ்விருவரையும் நோக்கினார்.

அவரது பக்தியின் சக்தியால் வந்திருக்கும் உண்மையை மூடியிருந்த திரை விலகியது. வந்திருக்கும் கிழவர் யாரென்று பத்மபாதர் கண்டுகொண்டார்.

அவர் வேறுயாருமில்லை! பிரம்ம சூத்திரத்தை இயற்றிய சாட்சாத் வியாச மகாமுனிவரே தான் அவர்! அந்த வியாசர் யாரெனில் நாராயணனின் அவதாரமே தான் அவரை அடையாளம் கண்டுகொண்ட பத்மபாதரும் திருமாலின் அம்சம்தான்.

பத்மபாதர் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கும்போதே - சங்கரரும் வந்திருக்கும் கிழவரின் வேஷத்தைப் புரிந்துகொண்டார். "மகரிஷியே! தங்களிடம் அடியேன் வாதிக்குமாறு செய்யலாமா? - அபசாரம் செய்து விட்டேனே!" என வியாசரை வணங்கினார்.

வியாசமா முனிவர் அருளுடன் நகைத்து, "ஐயனே! என் சுய உருவைக் காட்டினால் நீ உன் வாதத் திறனைக் காட்டமாட்டாய் என்றே மாறுவேஷம் போட்டேன். நீ எனது பிரம்ம சூத்திரத்துக்குத் தந்துள்ள விளக்கமே நான் மனதார விரும்புவதாகும். அதுவே உண்மை. இந்த உண்மையை நீ. நாடு முழுவதும் பிரசாரம் செய்யவேண்டும். இன்றோடு உனக்குப் பதினாறாண்டு நிறைந்தது. இதோடு ஆயுளை முடித்துவிடாதே! உனக்கு இன்னும் பதினாறாண்டு வாழ்வினைப் பிரம்மாவிடமிருந்து பெற்று வந்துள்ளேள். உனது வாக்கியங்களை நாடு முழுவதும் பரப்புவாயாக!" எனக்கூறி மறைந்தார் வியாச மாமுனிவர்.

நாடு முழுவதும் அத்வைத உண்மையை சங்கரர் பரப்பவேண்டும் என்று வியாசர் விரும்பியபடியால், அவர் காசியிலிருந்து புறப்பட்டார்.

இன்று அலகாபாத் என்று சொல்லப்படுகிற பிரயாகைக்கு விரைந்தார் சங்கரர். காரணம், அங்குதான் குமாரில பட்டர் என்ற பெரும் பண்டிதர் மரணத் தருவாயில் இருந்தார். அத்வைதத்தை அவர் ஏற்குமாறு செய்துவிட்டால், அவரைச் சேர்ந்த ஏராளமான சிஷ்யகோடிகளும் அத்வைதத்தைத் தழுவிவிடுவர். அவரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் '**கர்ம மீமாம்சகர்கள்**' என்பார்கள்.

புத்த மதத்தவருக்கு வேதகர்மங்கள் கிடையாது. ஆதியில் அவர்களது கருத்துக்களை வெல்ல எண்ணிய இந்தக் குமாரிலபட்டர், பௌத்தனாக மாறுவேஷம் பூண்டு பௌத்தர்களுடனேயே வசித்தால் தான் அவர்களது கருத்துக்களை கற்கலாம்; பிறகு அவற்றை எதிர்வாதத்தால் முறிக்கலாம் என்றெண்ணிணார். அவ்விதமே பௌத்தராக வேஷம் போட்டு அம்மதக் கொள்கைகள் முழுவதையும் கற்றுக்கொண்டார்.

பின்பு வேதகர்மங்கள் அவசியம் என்பதை நிலைாட்டும் போது, இக்கர்மங்களை விலக்கும் புத்த மதத்தை ஆணித்தரமாகக் கண்டித்தார்.

கடைசியில் ஒருநாள் அவருக்கு வருத்தம் உண்டாயிற்று. "அடடா! என்னைத் தங்களில் ஒருவனாக எண்ணி அந்தப் பௌத்தர்கள் பேணிக் காத்தனரே! தங்களது மர்மக் கருத்துக்களை போதித்தனரே! இவர்களிடம் வேஷம் போட்டு வஞ்சனை செய்துவிட்டேனே" என்று பச்சாத்தாபம் கொண்டார்," இதற்கு சாஸ்திரம் கூறும் ஒரே

பிராயச்சித்தம் '**துஷாக்னிப் பிரவேசம்**' தான். அதாவது தன்னைச்சுற்றி உமியை மலையாகக் குவித்துக்கொள்ள வேண்டும். பிறகு அந்த உமிக்குத் தீ மூட்ட வேண்டும். அந்த வெம்மையிலேயே நான் அணுவணுவாகச் சாகவேண்டும்."

சத்தியசந்தரான குமாரிலர் இவ்விதம் உயிர் விடுவதை அறிந்த சங்கரர் அவரிடம் விரைந்தார். "மதிப்புக்குரிய குமாரிலரே! புத்த மதத்தைக் கண்டித்துத் தாங்கள் வேத கர்மாக்களை நிலைநாட்டியது சரியே! ஆனால் உயிரற்ற கர்மம் தானாகப் பலனளிக்காது என்பதையும், எல்லாக் கர்மாக்களையும் ஒழுங்குபடுத்தும் பேரறிவான கடவுளே பலன் தரு பலன் தருகிறான் என்பதையும் புரிந்துக் கொள்ளும். அத்வைதம் மறையாத பெரும் ஆனந்தம் என்பதை உய்த்து உணருங்கள்" என்றார் சங்கரர். அவரது வாதத்தால் குமாரிலரும் அத்வைத உண்மையை ஏற்றார். உமிக்காந்தலில் உடலைக்கருக்கி உயிரை அத்வைதமாகக் கரைத்தார்.

மண்டன மிச்ரர் என்கிற ஒரு புகழ்பெற்ற பண்டிதரை வென்றாலே தமது வெற்றி நிலைக்கும் என முடிவுசெய்தார் ஸ்ரீசங்கரர். எனவே மண்டன மிச்ரர் வசித்துவந்த மாஹிஷ்மதி என்கிற அந்த நகரத்திற்குச் சென்றார். பண்டித திலகமான மண்டனர் வாழ்ந்த அவ்வூரின் பாமர பெண்டிரும், கூட்டுக் கிளிகளும் கூட கர்ம மீமாம்சை வாசகங்களைக் கோஷித்துக்கொண்டிருப்பது கேட்டு ஆச்சரியப்பட்டார்.

சங்கரர் அவரது வீட்டை அடைந்த போது. உள்ளே மண்டனர் திதி கொடுத்துக் கொண்டிருந்தார். எனவே வாயிற்கதவு சாத்தியிருந்தது. சங்கரர் தமது விசேஷ சக்தியைப் பிரயோகித்து அவரது வீட்டினுள் சென்றுவிட்டார்.

திதி கொடுக்கும் போது சங்கரர் வந்ததைக் கண்டு மண்டன மிச்ரர் கோபமாகப் பேசப்பேச, சங்கரரோ சற்றும் கோபமின்றி ஹாஸ்யமாகப் பதில் சொல்லிக்கொண்டு இருந்தார்.

அந்த ஹாஸ்யத்தின் உள்ளே தொனிக்கின்ற அறிவுத் திறனை வியந்தார் மண்டனர். அவரும் அறிஞராதலால், இத்தகைய அறிவாளியை அடித்து விரட்டாமல் வாதம் செய்ய எண்ணினார். சங்கரர் விரும்பியதும் இதுதான்;

திதி முடிந்த பின் இருவரும் வாதத்திற்கு அமர்ந்தார்கள். தீர்ப்புச் சொல்ல மத்தியஸ்தர் ஒருவரை வைத்துக்கொள்ள வேண்டும் என்றார் மண்டன மிச்ரர்.

"தங்கள் மனைவி சரஸவாணியே மத்தியஸ்தராக இருக்கலாமே", என்றார் சங்கரர். மண்டனர் இணங்கினார்.

சரஸவாணி மட்டும் தயங்கினாள். அவள் அறிவுத் தெய்வமாதலால் சங்கரரை சிவபெருமானே என்று புரிந்துக்கொண்டாள். "அவர் எப்படியும் என் கணவரை வென்று விடுவார். என் கணவர் தோற்றார் என்று நானே எப்படிச் சொல்லமுடியும்?" என்று தயங்கினாள். எனவே இருவரும் இரு மலர் மாலைகளை அணிந்து

கொள்ளச்செய்து," எந்த மாலை முதலில் வாடுகிறதோ அவரே தோற்றதாகக் கருதவேண்டும்" என்றாள்.

காரசாரமான வாதப்பிரதிவாதம் நடந்தது. முடிவில் மண்டனரின் மாலை வாடிற்று; சரஸவாணியின் முகமும் வாடிற்று.

சரஸவாணியின் முகம் வாடியதற்குக் காரணம், தனது கணவர் தோற்றுவிட்டார் என்பது மட்டுமல்ல. இந்த வாதத்துக்கு முன் விதிக்கப்பட்ட நிபந்தனை தான் காரணமாகும். அந்த நிபந்தனை என்னவெனில், சங்கரர் தோற்றுவிட்டால் அவர் துறவறத்திலிருந்து நீங்கித் திருமணம் புரிந்து இல்லறம் ஏற்று மண்டனரின் சீடராகிவிட வேண்டும்; மாறாக, மண்டனர் தோற்று விட்டால் அவர் இல்லறத்தை விட்டுத் துறவியாகி சங்கரரின் சீடராக வேண்டும்.

இப்போது சங்கரர் வென்றதால் மண்டனர் இல்லறத்தை விட்டு அவருடன் புறப்பட்டுவிட்டார்.

கணவனின் பிரிவைத் தாளாத சரஸவாணி கலங்கினாள். ஆயினும், அவள் அறிவுத் தேவதையின் அவதாரமல்லவா? தன் கணவருடன் கிளம்பிய ஆசாரியாரின் முன்சென்று, "சுவாமீ! கணவன் மனைவி இருவரும் ஈருடல் ஆயினும் ஒரே உயிர் என்கிற சாஸ்திரத்தைத் தாங்கள் அறிந்திருப்பீர்களே! இப்போது உயிரில் ஒரு பாதியை மட்டும் தானே தாங்கள் வாதத்தில் வென்றீர்கள்? மற்ற பாதியான என்னுடனும் வாதம் நடத்தி ஜயித்தாலே இவரைத் தாங்கள் வென்றதாக ஆகும்" என்றாள்.

அவள் கூறியதில் இருந்த உண்மையை மதித்த ஆசாரியர் அவளுடனும் வாதம் புரிய இணங்கினார்.

மகா புத்திசாலியான சரஸவாணி மிகச் சிக்கலான வினாக்களை கணை மழைபோல விடுத்தாள். சங்கரரோ அதியற்புதமான விளக்கங்களைத் தந்துவிட்டார்.

அதன்பின் சரஸவாணியால் ஏதும் செய்ய இயலவில்லை. கணவர் சென்றபின் இம் மண்ணுலகில் தான் இருக்கவேண்டாம் எனக்கருதி, சரஸ்வதிக்கு உரிய பிரம்ம லோகத்துக்குக் கிளம்பினாள்.

ஆனால் சங்கரரோ, வனதுர்கா மந்திரத்தை ஜபித்து, அதனால் அவளைக் கட்டிக் கிளம்பவொட்டாமல் நிறுத்திவைத்தார். "அம்மா! உனக்கு இந்த உலகத்திலேயே ஓர் உத்தமமான காரியம் வைத்திருக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

'மண்டன மிச்ரர் துறவியாகிவிட்டார்; சுரேசுவரர் என்கிற சந்நியாசப் பெயருடன் சங்கரரின் சீடராகச் செல்கிறார்' என்று வெளியுலகம் அறிந்ததும்

ஏராளமான கர்ம மார்க்கக்காரர்கள் சங்கரரின் ஞான மார்க்கத்தைத் தழுவலாயினர். ஒரு நிலையில் கர்மம் அவசியம் என்றும் பிறகு கர்மமற்ற ஞான அனுபவம் மட்டுமே நிற்கும் என்றும் கூறும் அத்வைதம் வெற்றிபெற்று வந்தது.

கடவுளிடம் உண்மையான அன்பு செலுத்துவதே பக்தி. உண்மையான அன்பு யாதெனில், 'அந்தக் கடவுளேதான் எல்லாமும்; எனவே அவனை வழிபடுகின்ற நானும்கூட அவனேதான்' என்பதை உணர்ந்து, அன்பினால் அவனன்றித் தானில்லாமல் கரைந்து ஒன்றாகிவிடுவதுதான்.

ஆனால் சங்கரரின் காலத்திலிருந்த பக்தி இவ்வாறு அத்வைத ஞானத்தோடு இணைந்ததாக இருக்கவில்லை. பல வேறு தெய்வங்களும் ஒரே கடவுள் எடுத்துக் கொள்ளும் பல வடிவங்கள் தான் என்பதை மறந்து அவரவரும் தான் வழிபடுகின்ற தெய்வமே மற்ற தெய்வங்களை விட உயர்ந்தது என்று வாதப்போர் செய்து வந்தனர். இது போதாது என்று அன்பே வடிவான கடவுளின் உக்கிர ரூபங்களைப் பலர் வழிபட்டு, அதற்காகத் தாங்களும் மிகப் பயங்கரமான வழிபாட்டு முறைகளை மேற்கொண்டனர். கர்ம, ஞான வழிகளைச் செம்மை செய்த சங்கரர். அன்பு மயமான ஆண்டவன் வழிபாட்டில் புகுந்துவிட்ட அச்சமூட்டுகிற, அருவருப்பூட்டுகிற அம்சங்களை விலக்கிக்கொண்டு நாட்டில் அருள் மாரியாகச் சஞ்சரித்துவந்தார்.

சுரேசுவரருடனும் சரஸவாணியுடனும் கர்நாடகத்தில் துங்கபத்ரா கரையில் உள்ள சிருங்ககிரியை அடைந்தார் சங்கரர். அங்கே உடன் வந்த சரஸவாணி மணலில் ஒரு வினாடி தயங்கி நின்றுவிடவே, சங்கரர் பின்னோக்கித் திரும்பினார். பின்னர் அங்கே பீடம் அமைத்து சரஸவாணியை அங்கு பிரதிஷ்டை செய்தார். இவ்வாறு சிருங்ககிரி சாரதா பீடம் உதித்தது.

"எதிர்காலத்துக்குத் தமது எழுத்துக்கள் இருந்தால் மட்டும் போதாது. அந்த எழுத்துக்களின் உண்மையை வழிகாட்டிகளாக இருந்து நடத்திக்காட்டும் ஞான பரம்பரைகள் என்றென்றும் இருக்க வேண்டும்' என்று திருவுளம் கொண்டார் ஸ்ரீ சங்கர பகவத்பாதர். தமக்குப் பின்பு எங்கெங்கோ என்றென்றோ பிறக்கப்போகிறவர்களிடம் கூட அவருக்கு இத்தனை கருணை! அவர்களை முன்னிட்டே நாட்டின் பல இடங்களில் மடங்களை நிறுவினார்; இம்மடங்கள் ஒவ்வொன்றிலும் "சங்கராசாரியர்" என்றே பெயர்கொண்ட ஆசார்யர்களை அமர்த்தினார். இந்த சங்கராசார்யர்களும் இவ்விதமே சீடப் பரம்பரையை உண்டாக்கிவருகின்றனர். அதனால் தான் இன்றும் சங்கர மடங்களைச் சார்ந்த சங்கராசார்யர்களை நாம் தரிசித்து வருகிறோம்.

சிருங்ககிரியில் ஸ்ரீ சங்கர பகவத் பாதர் இருந்தபோது, காலடியில் தனது அன்னையின் உயிர் ஊசலாடுவதை உணர்ந்தார். மரண காலத்தில் அவளருகே தாமே இருந்து அவளுக்கு அந்திமக்கிரியையைச் செய்வதாக முன்பு வாக்குத் தந்திருந்தார் அன்றோ? உலகம் போற்றும் ஆசாரியர் அன்பு மகனாக மாறி அன்னையிடம் ஓடினார்.

அந்திமக் காலத்தில் அருமை மைந்தனைக் கண்டு அகமகிழ்ந்தாள் ஆர்யாம்பாள். சங்கரர் திருமாலைக் குறித்துப் பாமாலை பாடினார். பெருமாளைப் போலவே நீலமேக சியாமளராக, சங்கு சக்கரம் தாங்கிய வைகுண்டலோகத் தூதர்கள் விமானத்துடன் வந்துவிட்டனர். ஆர்யாம்பாளை அவ்விமானத்தில் ஏற்றிக்கொண்டு அவர்கள் விண்ணுலகு சென்றுவிட்டனர்!

முன்பு வாக்களித்தவண்ணம் அவளது உடலைத் தாமே தகனம் செய்ய முன்வந்தார் சங்கரர். இது துறவி செய்யத்தகாத செயல் என்று ஊராரும், உற்றாரும் பழித்து, இடித்துரைத்து விட்டுச் சென்று விட்டனர். ஆயினும் சத்தியமும், அன்புமே எல்லா ஆசாரங்களுக்கும் மேம்பட்டது எனக் கருதிய சங்கரர் - தன்னந்தனியாக தாம் ஒருவரே அன்னையின் உடலத்தைத் தோட்டத்திற்குச் சுமந்து சென்று சிதையில் இட்டார். ஆசாரியப் பெருமான் ஆசாரசீலர் மட்டும் அல்ல. அவர் அன்பின் வடிவம்; உண்மையின் உருவம்.

அன்னையின் இறுதிக்கடனை முடித்த பின்னர் தன் அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு தேசம் முழுவதையும் காலால் நடந்து திக்விஜயம் செய்தார். சென்ற இடமெல்லாம் மற்ற கொள்கைக்காரர்களை வென்று வேத வழியான வைதீக மதத்திற்கு திருப்பினார். பல ஆலயங்களில் தமது மந்திர சக்தியால் யந்திரங்களை ஸ்தாபித்து அவற்றின் மூலம் பராசக்தியின் அருள் உலகில் மேலும் வலுவாகப் பாய வகை செய்தார். சங்கரரைப்போல் உலக நலனுக்காகப் பல காரியம் சாதித்த இன்னொரு வரை எண்ணிப்பார்க்கவும் இயலாது. நான்கு முறை அவர் பாரதத்தைச் சுற்றிவந்தாராம். இத்தனைக்கும் அவர் வாழ்ந்தது முப்பத்திரண்டே ஆண்டுகள் தாம்! மக்கள் உயர்வு பெறவேண்டும் என்கிற மகத்தான கருணை ஒன்றே அவரை இப்படி செயலில் ஈடுபடுத்தி அச்செயலுக்கு ஜெயமும் பெற்றுத்தந்தது.

இந்த திக்விஜயத்தில் அவர் ஒருமுறை கர்நாடக நாட்டில் உள்ள மூகாம்பி என்கிற க்ஷேத்திரத்தை அடைந்தார். அங்கு வெகு உக்கிரமாகக் கோயில் கொண்டிருந்த அம்பிகையை சங்கரர் சாந்தப்படுத்தி அவளது உக்கிரத்தை ஒரு ஸ்ரீ சக்கரத்துக்குள் அடக்கினார்.

இல்லூரில் ஓர் அந்தணர் தமது ஊமைந் பிள்ளையுடன் சங்கரரை தரிசிக்க வந்தார். சங்கரர் அந்த ஊமைக் குழந்தையிடம் "நீ யார்?" என்று கேட்க அக்குழந்தை கணீரென்று பதில் கூறிற்று. "நான் இந்த உடல் அல்ல; எங்கும் பரவியுள்ள ஆத்மா வான ஒரே சத்யம் தான் நான்" என்று கூறியது குழந்தை. உள்ளங்கை நெல்லிக் கனியாக இவ்வுண்மையை அக்குழந்தை தெரிந்துக் கொண்டிருந்ததால் அக்குழந் தைக்கு **"ஹஸ்தாமலகர்"** என்று பெயர் சூட்டினார் ஸ்ரீசங்கரர்.

'ஹஸ்தம்' என்றால் 'கை'. 'ஆமலகம்' என்றால் 'நெல்லிக்கனி!' 'ஹஸ்தாமலகரை தமது முக்கியமான சீடர்களுள் ஒருவராக ஏற்றுக் கொண்டார் சங்கர பகவத் பாதர்.

பத்மபாதர், சுரேசுவரர், ஹஸ்தாமலகர் ஆகிய முக்கியமான மூன்று சீடர்களுடன் வேறு பல பேரறிஞர்களும் அவரிடம் வேதாந்த பாடம் பயின்றனர்.

இந்தச் சீடர்கள் யாவரும் 'கிரி' என்ற ஒரு சீடனைக் குறித்து மிகவும் ஏளனமாகப் பேசி எள்ளிநகையாடி வந்தனர். அடக்கத்தின் உருவமான கிரி, குருநாதர் பாடம் நடத்தும்போது வாயே திறக்க மாட்டார். எந்த சந்தேகமும் கேட்க மாட்டார். ஆகையால் அவரை எதுவுமே புரிந்து கொள்ளாத மூடம் என்று எண்ணி மற்றவர்கள் அலட்சியம் செய்தனர். உடல் வணங்கி வேலை செய்து குருவுக்குக் கைங்கரியம் செய்ய மட்டுமே கிரிக்குத் தகுதியுண்டு, புத்தியில் அவரது போதனைகளை ஏற்கும் திறன் அவருக்கு இல்லை என்பது இவர்களின் எண்ணம்.

எல்லாமறிந்த சர்வயக்ஞரான சங்கரர் இந்த எண்ணத்தை அறியாமலிருப்பாரா? இவர்களுக்கு நல்லறிவு தர எண்ணினார்.

ஒருநாள் கிரி தவிர ஏனைய சீடர்கள் பாஷ்ய பாடம் கேட்கக் குழுமிவிட்டனர். இருந்தாலும் ஆசாரியர் தொடங்கவில்லை. “கிரி வரட்டும்" என்று சொல்லியபடி காத்திருந்தார்.

"அவனுக்காக இப்படி ஆசாரியர் கால தாமதம் செய்கிறாரே?" எனச் சீடர்கள் முணுமுணுத்துக்கொண்டனர்.

கடைசியில் கிரியும் வந்தார். வழக்கமாக மலை போல் மலைத்து மலைத்து நிற்பவர் இன்று ஆனந்தத்தில் நடனமாடிப் பாடிக் கொண்டு வந்தார். அவர் - பாடிய எட்டு சுலோகங்களைக் கேட்டு மற்ற சீடர்கள் அனைவரும் அதிசயத்தில் ஆழ்ந்தனர். அவர்கள் அதுவரை கேட்டிராத அந்தச் செய்யுட்களை கிரியே இயற்றியிருக்கிறார்! ஸ்ரீ சங்கர பகவத்பாதரைப் போற்றும் அரிய துதி அது!

மற்ற சீடர்களுக்கு இப்போதுதான் கிரியின் அருமை பெருமைகள் தெரிந்தன. தோடக விருத்தத்தில் துதி செய்த அவர் 'தோடகர்' என்கிற விருதைப் பெற்றார். அவர் இயற்றிய **'தோடகாஷ்டகம்'** இன்றும் ஆசாரியருக்கு நமஸ்கரிக்கும் போது பாடப் பெறுகிறது.

தமிழகத்தின் க்ஷேத்திரங்கள்தோறும் சங்கர பகவத்பாதர் விஜயம் செய்தார் என்றறிய நமக்குப் பூரிப்பாக இருக்கிறது. இந்த யாத்திரையில் அவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர் என்கிற மகாக்ஷேத்திரத்தை வந்தடைந்தார்.

அங்கிருந்த சைவப்பெரும் பண்டிதர்கள் "சிவன் தான் உலகை ஆக்கிப்படைத்து அழிக்கும் கடவுள். அவனால் படைக்கப்பட்ட நாம் அற்பமான ஜீவன்கள். அப்படியிருக்க நானும், அவனும் ஒன்றே என்று கூறுகின்ற உமது அத்வைதத்தை நாங்கள் ஏற்க முடியாது" என சங்கரரிடம் கூறினர்.

"சரி, அப்படியானால் என்னுடன் ஸ்வாமி சந்நிதிக்கு வாருங்கள்" என்று அவர்கனை அழைத்தார் ஆசாரியர்.

அவரது உறுதியைக் கண்டு அவர்களுக்கு ஆச்சரியமாயிற்று. அனைவரும் திருவிடைமருதூரில் கோயில் கொண்டுள்ள மகாலிங்கமான சிவபெருமானின் முன் நின்றனர்.

அப்போது லிங்கத்தினின்று அமுதம் போன்ற ஓர் கம்பீரமான குரல் எழுந்தது. "'சத்தியம் அத்வைதம்" என மும்முறை அது கோஷித்தது. கை தூக்கிச் சத்தியம் செய்வதே வழக்கமல்லவா? இதற்கேற்ப, மகாலிங்கனார் குரல் எழுப்பியது மட்டுமின்றி அந்த லிங்கத்துக்குள்ளிருந்து ஒரு கரம் வெளிவந்து ஓங்கி நின்றது.

கூடியிருந்த அனைவருக்கும் புலலறித்தது. ஆசாரியரோ ஐயனுக்கு உள்ளுருகி நன்றி கூறினார். சைவப் பெருமக்கள் அனைவரும் சங்கரரை குருவாகக் கொண்டனர்.

திருவிடைமருதூரில் இன்றளவும் ஒரு சங்கர மடம் உள்ளது. சமீபத்தில் அம் மடத்து முகப்பில், லிங்கத்தினின்று கை வெளிப்படுவது போன்ற சிற்பத்தை வடிக்கச் செய்துள்ளார். இன்று நம் கண்முன் ஆதி சங்கரரின் அவதாரமாக வாழ்பவர் காஞ்சி காமகோடிப் பெரியவர்கள்.

நடராஜப் பெருமான் ஆனந்த நடனம் செய்யும் சிதம்பரத்துக்குச் சென்றார் ஸ்ரீ சங்கரர். அவரது குருவுக்குக்குருவான கௌடபாதர் சிதம்பரத்தில் தான் பதஞ்சலி யிடமிருந்து வடமொழி இலக்கணம் பயின்றார். பரமகுரு பாடங்கேட்ட இடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார் நம் ஆசாரிய சங்கரர். நடராஜர் ஆலயத்தில் பஞ்சாக்ஷர யந்திரமும், அன்னா கர்ஷண யந்திரமும் ஸ்தாபித்தார். பஞ்சாட்சரம் என்பது சிவ பெருமானின் அருளை வருவித்துத் தரும் ஐந்தெழுத்து மந்திரமாகும். அன்னாகர்ஷண யந்திரம் என்பது உணவுவகைகளை சுபீட்சமாகக் கிடைக்கச் செய்வதாகும்.

திருச்சியை அடுத்த திருஆனைக்காவுக்கு ஆசாரியர் சென்ற பொழுது அங்குள்ள அகிலாண்டேசுவரி மிகவும் உக்கிர சக்தி படைத்திருந்தாள், அந்த உக்கிரத்தைத் தாடங்கம் என்கிற இரு காதணிகளுக்குள் இழுத்து அடக்கினார். ஸ்ரீ சக்கரவடிவில் அமைந்த இத் தாடங்கங்களை அகிலாண்டேசுவரிக்கே அணிவித்தார்.

ஆசாரியர் அணிவித்க ஸ்ரீ சக்கர தாடங்கத்தை அவ்வப்போது புதுப்பிப்பது உண்டு. இவ்விதம் காஞ்சி மடத்திலுள்ள சங்கராசாரிய சுவாமிகள் பரம்பரையாக புதுப்பித்து அகிலாண்டேசுவரிக்கு அணிவித்திருக்கிறார்கள்.

பரந்த பாரதத்தில் ஸ்ரீ சங்கரர் பவனி வந்த நகரங்களில் ஒன்று ஜகந்நாதபுரி. கிழக்குக் கடற்கரையிலுள்ள இந்தப் பெரும் புண்ணியம்பதியில் ஒரு மடம் நிறுவி அதில் பத்மபாதரை ஆசாரியராக அமர்த்தினார். இது கோவர்த்தன பீடம் எனப்படும்.

இதைப்போல் மேற்குக் கடற்கரையில் உள்ள மற்றொரு கிருஷ்ண ஸ்தலமான துவாரகையிலும் ஒரு மடம் நிறுவி அதில் ஹஸ்தாமலகரை ஆசாரியராக நியமித்தார். திருச்செந்தூர் முருகனின் அருட் பெருமையை வெளிப்படுத்த செந்தூர் அடைந்து **"சுப்ரமண்ய புஜங்க"** த்தால் ஆண்டவனைத் துதித்தார். இன்றும் பன்னீர் இலையில் விபூதிப் பிரசாதத்தை வைத்துக்கொண்டு இத்துதியை ஓதி நீறணிந்த பலர் நோய் நீங்கப் பெறுகிறார்கள்!

திருமாலின் திவ்வியத் தலங்களில் தலைசிறந்து விளங்குபவை ஸ்ரீரங்கமும் திருப்பதியுமாகும். ஆனைக்கா விஜயத்தின் போதே ஆசாரியர்கள் அரங்கநாதனையும் தரிசித்து அவ்வாலயத்தில் யந்திர ஸ்தாபிதம் செய்தார்.

திருப்பதியில் வேங்கடரமணப் பெருமாளைக் கண்டு மனம் உருகினார் ஆசாரியர்.
அவனை அடியிலிருந்து முடிவரை அங்கம் அங்கமாக வர்ணிக்கும் "விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திர" த்தை இயற்றிப் பரடினார்.

ஏழுமலை கடந்து விளங்கும் இப்பெருமானை எங்கே நானில மக்கள் காணாதிருந்து விடுவாரோ எனக் கருதினார் போலும்! திருமலை திருப்பதியில் ஒரு யந்திரத்தை ஸதாபித்து விட்டார். ஜனங்களை ஆகர்ஷிக்கும் இந்த யந்திரந்தை ஸ்தாபித்தாலும் ஸ்தாபித்தார். அன்றிலிருந்து திருப்பதியில் நித்திய உற்சவமாக இருக்கிறது.

புனித பாரத நாட்டை மேலும் புனிதமாக்கும் பன்னிரண்டு ஜோதி லிங்கங்கள் உள்ளன. ஸோமநாதபுரி, ஓம்காரமாந்தாதா, பரலி, வைத்யநாத், பீமசங்கரம், ராமேசுவரம், தாருகாவனம், காசி, நாஸிக். கௌதமீதடம், கேதாரிநாத், குஸ்ருணேச்வரம் என்பனவே பன்னிரண்டு "ஜ்யோதிர்லிங்க க்ஷேத்திர" ங்கள் ஆகும். தேசம் நெடுகிலும் பரவியுள்ள இத்தலங்கள் யாவற்றிற்கும் ஆசாரிய சங்கரர் சென்று வணங்கியிருக்கிறார். இவை எல்லாவற்றையும் இணைத்து "த்வாதச ஜ்யோதிர்லிங்க ஸ்தோத்திரம்" என்கிற ஒரு துதியும் செய்திருக்கிறார்.

ஆயினும் இவை யாவற்றுள்ளும் அவரது மனத்தை மிகவும் கொள்ளை கொண்டது ஆந்திர தேசத்தில் உள்ள ஸ்ரீ சைலமேயாகும்! முன்பு நாம் கண்ட திருவிடைமருதூரை மத்யார்ஜுனம் என்றும் சொல்வார்கள். அர்ஜுனம் என்றால் மருதமரம். மருதமரத்தின்கீழ் இறைவன் எழுந்தருளும் இடம் அர்ஜுன க்ஷேத்திரமாகிறது. ஸ்ரீசைலத்தில் மல்லிகைக்கொடி தழுவிய ஒரு மருதமரத்தின் கீழ் சிவலிங்கம் எழுந்தருளியிருந்கிறது. எனவே இங்கு இறைவன் மல்லிகார்ஜுனர் எனப்படுகிறார். வனத்தின் நடுவே மல்லிகார்ஜுனப் பெருமாளைக்கண்டதும்

ஆசாரியரின் உள்ளத்தில் சிவாநந்த வெள்ளமே அலைமோதிக்கொண்டு பெருக்கெடுத்தது. உடனே "சிவாநந்த லஹரி" என்கிற நூறு ஸ்லோகங்கள் அவரது நாவிலிருந்து குபுகுபுவெனப் பொங்கி வெளி வந்தன.

ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜுனர் கோவில் கொண்ட இடத்திற்குச் சற்று தூரத்தில் உள்ள ஹாடகேசுவரம் என்னும் மனித சஞ்சாரமற்ற பகுதியில் ஆசாரியர் பல நாட்கள் தன்னந்தனியாக தவம் இருந்து வந்தார்.

இச்சமயத்தில் தன்னுடைய கொடூர எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முற் பட்டான் கிரகசன் என்கின்ற பயங்கரமான கபாலிகன்!

கபாலம் எனப்படும் மண்டை ஓட்டை ஏந்தும் சிவனே கபாலி. உக்கிரமான முறையில் சுடுகாட்டில் வசித்து, கபால மாலைகளைப் பூண்டு, நரபலியும், மிருகபலியும் தந்து கபாலியை வழிபடுவோரோ **'கபாலிகர்'** எனப்படுவர்.

அக்காலத்தில் கபாலிகர்களின் தலைவன் கிரகசன். இவர்களுக்கு சங்கரரே பெரிய விரோதி. இறைவனை அன்பு வழியிலேயே பூஜிக்க வேண்டும். உக்கிரம் கூடாது என்று போதித்து வந்ததால், அவரை இவர்கள் எதிரியாகக் கருதினர்.

நமது ஆசாரியர் "தமது எலும்பும் பிறர்க்குறிய" தியாக சிகாமணி என்று அறிந்தான். எனவே அவனுக்கோர் எண்ணம் எழுந்தது. "சங்கரரிடமே சென்று உங்களைக் கபாலிக்கு பலி கொடுக்க சம்மதம் தாருங்கள்" என்று கேட்டுவிடுவோமே! தியாகமே உருவான அவர் இணங்கி விடுவார். உடனே அவர் தலையை வெட்டிப் பறித்து விடலாம். இதனால் விரோதி தொலைவது மட்டுமில்லை. உத்தமத் துறவியைப் பலிபெற்றதால் மகிழ்ந்து கபாலியே நேரில் வந்து விரும்பிய வரம் அளிப்பார். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்று குதூகலித்தது பாவியின் உள்ளம்.

வெட்கமில்லாமல் ஆசாரியரிடம் சென்று தன் வேண்டுதலை வெளியிட்டான் கபாலிகத் தலைவன்.

தியாகியான சங்கரரும் மகிழ்ச்சி நிறைந்து சம்மதம் தந்தார். "என் தலை தானே வேண்டும்? வெட்டி எடுத்துக் கொள்! இந்த உடலால் எந்தப் பயனும் இல்லை என்று எண்ணினேன். இதைக் கொண்டு ஏதோ பயன் பெறுவதாக நீ சொல்வதில் மிகவும் நன்றி" என்று அன்பொழுகக் கூறினார் ஆசாரியர், தம் உயிரைப் பறிக்க வந்த பாதகனிடம்!

சங்கரரின் தலையை வெட்டுவதற்காக கபாலிகன் வாளை ஓங்கிவிட்டான். அதே சமயத்தில் எங்கோ இருந்த பத்மபாதரின் மீது உக்கிர நரசிம்மரின் ஆவேசம் உண்டாயிற்று. அவர் தம்மையும் மீறிய அச் சக்தியின் தூண்டுதலில் ஹாடகேசுவரத்துக்கு ஒரே நொடியில் வந்துவிட்டார். சங்கரரின் தலையை

வெட்டவிருந்த கிரகசனை நரசிம்மர் போலவே நகத்தால் கிழித்துப் போட்டுவிட்டார். கொல்ல வந்தவன் கொலையுண்டான்! பத்மபாதரிடம் இருந்து நரசிம்மரின் ஆவேசமும் அகன்றது!

ஸ்ரீசங்கரர் நரசிம்மரைத் துதித்துவிட்டு நரசிம்ம க்ஷேத்திரமான அஹோபிலத்துக்குச் சென்று வழிபட்டார்.

தலம் தலமாகச் சென்று பரத கண்டத்தின் வடக்கேயுள்ள இமாலயப் பகுதிகளிலே சஞ்சாரம் செய்து பதரீவனம், பதரிகாசிரமம் என்றெல்லாம் அழைக்கப்படும் பதரிநாதத்தை அடைந்தார்.

அங்கு ஒருநாள் மகாவிஷ்ணு அவருக்கு தரிசனம் தந்து, “இங்கே அலகநந்தா நதிப்படுகையில் என் பூரண சாந்நித்தியம் கொண்ட விக்கிரகம் ஒன்று புதைந்துள்ளது. அதை எடுத்து பிரதிஷ்டை செய்வாயாக” என்று உத்தரவிட்டார்.

அவ்விதமே சங்கரர் அலகநந்தா படுகையில் தோண்டியவுடன் திவ்வியமான் விக்ரஹம் கிடைத்தது.

அதை சங்கரர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தார். பத்ரிநாராயணன் என்று இன்றளவும் உலகமல்லாம் கொண்டாடும் மூர்த்தி இதுவேயாகும்.

இவ்விதமாக புனித யாத்திரையை மேற் கொண்டு கேதார்நாத்திற்கு வந்து சேர்த்தார் சங்கரர். அங்கு தமது பூத உடலைக் கிடத்தி விட்டு, யோகசக்தியின் மூலம் சூட்சும சரீரத்தோடு கைலாயம் சென்றார். ஸ்ரீ சங்கரர் தமது பூத உடலைவிட்டு பஞ்ச லிங்கங்களைப் பெறவேண்டியே கைலாயம் சென்றார் என்பதை ஆதார பூர்வமாக அறியாத சிலர் ஆசாரியர் தமது பூதவுடலையே கேதாரிநாத்தில் நீத்து முக்தி அடைந்தார் என்று தவறாகக் கருதித் கொண்டுள்ளனர்.

கயிலையில் உமையன்னையுடன் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கண்டு களிகொண்டு வணங்கினார் ஸ்ரீசங்கரர். சிவபெருமானின் அடியிலிருந்து முடிவரை வர்ணித்துப் பாடினார். அதில் திருப்தி உண்டாகாமல் மீண்டும் முடியிலிருந்து அடிவரை வர்ணணை செய்து இன்னொரு துதி செய்தார். இவை "சிவ பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம்" எனவும் "சிவ கேசாதி பாதாந்த ஸ்தோத்திரம்” எனவும் வழங்குகின்றன.

சிவபெருமான் தனது அவதாரமான சங்கார் செய்துவரும் அரும்பணியைப் பாராட்டினார். "பஞ்ச லிங்கங்களாகிய ஐந்து ஸ்படிக லிங்கங்களை சங்கரருக்குத் தந்தார். அவருக்கு அருகேயிருந்த சக்தியைத் துதிப்பதற்கு முடியாமல் பிரமித்து நின்றார் உடனே பரமசிவன் தாமே அம்பிகையைத் துதித்துச் செய்திருந்த “‘ஸௌந்தர்யலஹரீ” என்கிற நூல் சுவடியையும் சங்கரருக்கு வழங்கினார்.

இவற்றைப் பெற்று மிகுந்த பூரிப்போடு சங்கரர் கயிலையிலிருந்து வெளிவந்தார். காவலில் இருந்த நந்திதேவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி பாதி ஸ்லோகங்களை அவருக்குக் கொடுத்துவிட்டார். ஸௌந்தர்யலஹரி" யின் முதல் நாற்பத்தியொரு சுலோகங்கள் மட்டும் சங்கரரின் கையில் தங்கின. மீதமுள்ள ஐம்பத்தொன்பது சுலோகச் சுவடிகளை நந்திதேவர் பெற்றுக்கொண்டார்.

கயிலை யை விட்டு வெளிவந்த நம் ஆசாரியருக்கு இப்போது அம்பிகையைக் குறித்த பிரமிப்பு நீங்கிவிட்டது. அவளது அருளால் அவரே புதிதாக ஐம்பத்தொன்பது அற்புதமான சுலோகங்களை இயற்றி, நூலைப் பூர்த்தி செய்துவிட்டார். ஆசாரியரின் பல துதிகளுக்குள் இலக்கியச் சுவையில் சிகரமாக விளங்குவது "ஸௌந்தர்யலஹரி" யே யாகும். அதைப் பாராயணம் செய்வதால் பலவிதமான இகபர நலன்களும் கைகூடும்.

கைலாசத்திலிருந்து கிளம்பிய ஸ்ரீசங்கரர் நேபாள ராஜ்யத்தைச் சென்றடைந்தார். அங்கு சிறப்பான ராஜ மரியாதையைப் பெற்றார்.

பசுபதிநாதர் என்கிற ஐந்து முகங்கொண்ட லிங்கம் நேபாளத்தின் சிறப்பு களுக்கெல்லாம் சிறப்பாக உள்ளது. லிங்கத்தின் நான்கு புறங்களில் திசைக்கு ஒன்றாக ஒவ்வொரு முகம்; லிங்கத்தின் உச்சியில் அம்பிகையின் வடிவான ஸ்ரீசக்ரம் எழுதிப் பூஜிப்பது இன்னொரு முகத்துக்குச் சமமாகும்.

மகாவிஷ்ணு பூஜைக்குரிய சாளக்ராமம் நேபாளத்தில் உள்ள கண்டகி நதிக்கரையிலேயே கிடைப்பது. சிவபெருமான் உவந்து அணியும் ருத்ராக்ஷமும் அங்குதான் நிறைய காய்க்கிறது. பசுபதிநாதர் கோவில் முழுவதையும் சிவராத்திரியன்று ருத்ராட்சங்களால் அலங்கரித்து, விசேஷ பூஜை புரிவார்கள்.

இத்தனை சிறப்புகள் பொருந்திய பசுபதி நாதத்திற்கு ஸ்ரீசங்கரர் விஜயம் செய்து ஸ்வாமி தரிசனம் செய்து பேரின்பம் எய்தினார். அங்கு ஆலய வழிபாட்டு முறைகளை ஒழுங்குபடுத்தித் தந்தார்.

அம்பிகைக்கு விசேஷமான ஐம்பத்தி யொரு சக்தி பீடங்களில் குஹ்யேச்வரி என்பது பசுபதிநாதத்தில் இருக்கிறது. அங்கும் சங்கரர் தரிசனம் செய்து மகிழ்ந்தார்.

நேபாளத்தில் நீலகண்ட க்ஷேத்திரத்தில், தாம் சிவபெருமானிடமிருந்து பெற்ற ஐந்து லிங்கங்களுள் ஒன்றான வரலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார் ஸ்ரீசங்கரர். பசுபதிநாத்திலிருந்து புறப்பட்ட சங்கரர் கேதாரிநாதம் என்கிற மகாக்ஷேத்திரத்தை அடைந்கார். இமாலயத்திலே உள்ள இந்த சிவஸ்தலம், திருமாலுக்குரிய பதரிநாதத்தோடு எப்போதும் சேர்த்தே பேசப்படும் பெருமை வாய்ந்தது.

பரமசிவனிடமிருந்து பெற்ற - ஐந்து பளிங்கு லிங்கங்களுள் மற்றொன்றான முக்தி லிங்கத்தை கேதாரிநாதத்தில் ஸ்ரீசங்கரர் பிரதிஷ்டை செய்தார்.

பாரத தேசத்தின் நான்கு திசைகளிலும் மொத்தம் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் உண்டு. இவற்றில் ஒன்று கேதார்நாதத்தில் உள்ளது. ஸ்ரீசங்கரர் இயற்றிய "துவாதச ஜோதிர்லிங்க ஸ்தோத்திரத்" தில் கேதாரிநாதனைக் குறிப்பிட்டு வந்தனம் தெரிவிக்கிறார்.

இவ்விதமாக பல ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்து, பின்னர் கங்காநதி பாயும் சமவெளியை அடைந்தார். அங்கே தம் சிஷ்யர்களுக்குப் பாடம் நடத்தினார். அவர்களுக்கு உபதேசத்தின் மூலம் பல அரிய தத்துவங்களை விளக்கினார். பிற மதவாதிகளுடன் வாதம் செய்து அவர்களை வென்று வேதாந்தக் கருத்துக்களை வேரூன்றச் செய்தார் நம் ஆசாரியர்.

பாரத தேசமெங்கும் சுற்றி அத்வைதத்தைப் பரப்பிய ஸ்ரீசங்கரர், வடகோடியிலிருந்து தெற்கே வந்து சிதம்பரத்தை அடைந்தார். அங்கே பஞ்சலிங்கங்களில் ஒன்றான மோட்ச லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார்.

மீண்டும் சிருங்க கிரிக்கு எழுந்தருளினார் நம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர். பரமசிவன் அளித்த பஞ்சலிங்கங்களில் போகலிங்கத்தை அங்கே பிரதிஷ்டை செய்தார்.

பிறகு தமது உலக வாழ்வை நிறைவு செய்யத் திரு உள்ளங்கொண்டு, ஏழு மோட்ச ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கும் காஞ்சி யம்பதிக்கு விரைந்தார்.

காஞ்சி எல்லையிலேயே மன்னன் ராஜ - சேனன் ஆசாரியரைப் பணிந்து வரவேற்றான். விசுவேசுவரர் ஆலயத்தில் தங்கினார் நம் ஆசாரியர்.

பராசக்தியான காமாட்சியின் அருள் பொங்கும் நகரம் அது எனக்கண்டார் ஸ்ரீ சங்கரர். அவளது இருப்பிடமான ஸ்ரீ சக்ரத்தைப் போலவே. அந்நகரை மாற்றியமைத்தால் அங்கு அம்பிகையின் அருட்பொலிவு முன்னிலும் அதிகமாகும் எனக்கண்டார். ஆசாரியரின் கட்டளைப்படி மன்னன் நகர சாலைகளை ஸ்ரீசக்ர வடிவில் மாற்றியமைத்தான். அதன் மத்தியில் அம்பிகை எழுந்தருளும் இடமாக அமைந்தது, ஸ்ரீ காமாட்சியின் ஆலயமான காமகோட்டம்.

அக்காலத்தில் கலிகால மக்களால் தாங்கமுடியாத அளவுக்குக் காமாட்சியின் சக்தி உக்கிரமாக வெளிப்பட்டுவந்தது. அவளை அணுகவே அனைவரும் அஞ்சினர். ஆனால் ஆசாரியரோ அன்புத் தாயிடம் செல்லும் அருமை மகனாக ஆனந்தத்துடன் காமாட்சியை அடைந்தார். அவளுக்கு முன் ஸ்ரீ சக்ரம் வரைந்து அதில் அவளது அதிகப்படியான சக்தியை எல்லாம் இழுத்து அடைத்து விட்டார். இதன்பின் காமாட்சியின் உக்கிரம் நீங்கி, அவள் கருணையின் எல்லையில் உள்ள பேரழகு மூர்த்தியாக ஆகி விட்டாள். இன்றும் காஞ்சி காமாட்சியின் இந்த அருள் பொலிவை பக்தர்கள் அனுபவித்து மகிழலாம்.

காமாட்சியிடம் எல்லையற்ற பக்தி கொண்டார் ஆசாரியர். அவள் வாழும் ஆலயத்தில் '**காமகோடி பீடம்**' என்கிற மகத்தான சக்திபீடம் உண்டு. காஞ்சீபுரத்தில் தமக்கென மையமான மடத்தை ஏற்படுத்திக்கொண்ட சங்கரர், அந்த இடத்திற்கு காமாட்சி அம்மையின் பீடத்தின் பெயரான '**காமகோடி பீடம்**' என்பதையே தமது மடத்துக்கும் வைத்துக்கொண்டார்.

பஞ்சலிங்கங்களில் எஞ்சிய யோக லிங்கத்தை தனது பீடத்தின் பூஜைக்கென வைத்துக்கொண்டார். இன்று ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பூஜை செய்யும் சந்திர மௌலீசுவர ஸ்படிகலிங்கமே இந்த யோக லிங்கமாகும்.

காஞ்சி மடத்தில் ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் ஞான ஆட்சி நடத்தி, காமாட்சியை வழிபட்டு வாழ்ந்துவந்தார்.

வேத மதத்தில் பல தெய்வங்களை வழிபடுகிறோம். ஆனால் இவை முற்றிலும் வேறு வேறானவை அல்ல. ஒரே பரமாத்மாதான் இப்படிப் பல தெய்வங்களாகி இருக்கிறார். என்வே தெய்வங்களுக்குள் ஒன்று உயர்ந்தது, இன்னொன்று தாழ்ந்தது என்று ஏற்றத் தாழ்வு பேசுவது அறிவின்மையாகும்.

ஸ்ரீ சங்கரர் இவ்விதம் தம்தம் தெய்வத்தையே உயர்த்திப் பேசுபவர்களை எல்லாம் வாதத்தில் வென்று, எல்லாத் தெய்வங்களும் ஒன்றே என்பதை நிலை நாட்டினார்.

இருந்தாலும் ஒவ்வொருவரும் தங்கள் மனப்பான்மைக்கு ஏற்றபடி ஒரு தெய்வத்திடம் விசேஷமாக பக்தி செலுத்துவதை அவர் ஒப்புக்கொண்டார். இவை இஷ்ட தெய்வ வழிபாடு எனப்படும். இவ்வாறு இஷ்ட தெய்வத்தை வழிபடுவதால் மற்ற தெய்வங்களைத் தாழ்வாக எண்ணிவிடக் கூடாது என்பதற்காகவே "பஞ்சாயதன பூஜை" என்பதற்குப் புத்துயிர் தந்தார் நம் ஆசாரியர். இதன்படி ஒவ்வொருவரும் சிவன் அம்பிகை, திருமால், விநாயகர், சூரியன் ஆகிய ஐவரையும் ஒரே பரம்பொருளின் வடிவங்களாகக் கொண்டு பூஜிக்க வேண்டும். இந்த ஐந்தில் ஒன்றை இஷ்ட தெய்வமாக
மத்தியில் வைத்து, மற்ற நான்கை அதைச் சுற்றி வைத்துப் பூஜிக்கவேண்டும்.

மேற்படி ஐந்து தெய்வங்களோடு முருகனையும் சேர்த்தால் ஆறாகிறது. இத் தெய்வம் ஒவ்வொன்றையும் முக்கியமாகக் கருதி ஆறு வழிபாட்டு முறைகள் உண்டு. இவை '**ஷண்மதம்**' எனப்படும். அவரவரும் பிறதெய்வ நிந்தனை இல்லாமலே தம் இஷ்ட தெய்வத்தை வழிபட உதவி புரிய வேண்டும் எனக் கருணைகொண்டார் சங்கரர். எனவே தாம் காஞ்சியில் இருந்த போது ஆறு சீடர்களை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பிவைத்து, ஷண்மதங்களில் ஒவ்வொன்றையும் வேதவழிப்படி நிலைநிறுத்தி வரச் செய்தார். அவர்களும் தமது பணியை வெற்றிகரமாகச் சாதித்து விட்டு ஆசாரியரிடம் திரும்பினார்கள்.

இதனால் ஸ்ரீ சங்கரர் "ஷண்மதா சாரியர்" என்கிற புகழைப்பெற்றார்.

இறுதியாக ஒருமுறை பண்டிதர் அனைவரையும் வென்று அத்வைதத்தை நிலைநாட்டி விட்டு, உடலை நீத்து விடவேண்டும் என முடிவு செய்தார். சங்கரர் இதன் பொருட்டு காஞ்சியிலேயே ஸர்வக்ஞபீடம் அமைத்தார்.

காஞ்சியில் பிறமதத்தினர்களும் இருந்தனர். மற்றும் பாரதத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல மகாபண்டிதர்கள் நம் ஆசாரியருடன் வாதிட வந்தனர். அவ்வாறு வந்திருந்த பலரில் ஏழு வயதுச் சிறுவன் ஒருவனும் இருந்தான். அவன் தொடர்ந்து மூன்று நாட்கள் ஆசாரியருடன் வாதிட்டான். அவனது கேள்விகளுக்கு விடை அளித்து இறுதியில் ஆசாரியரே வெற்றி பெற்றார். அந்தச் சிறுவனின் அறிவுத்
திறமையை வியந்து பாராட்டிய சங்கரர், அவனுக்கு சர்வக்ஞஆத்ம முனி என்று திரு நாமம் சூட்டித் துறவியாக்கினார். தனது பீடத்தின் முதல் சிஷ்யனாக நியமித்துக் கொண்டார்.

அனைவரையும் அத்வைதத்தால் வென்று அப்பீடத்தில் அறிவுச் சக்ரவர்த்தியாக ஆரோகணித்தார் சங்கரர். அப்போது நாடாளும் சக்ரவர்த்திகளும் அவருக்குச் சாமரம் வீசினர். பண்டித ரத்தினங்கள், துறவி, வேந்தர்கள் அனைவரும் அப்போது அவரது அடிபணிந்தனர்.

“ஜய ஜய சங்கரா" என்று போற்றிப் புகழ்ந்து பணிந்தனர்.

வேத வாழ்வை மீண்டும் ஆழ வேரூன்றச் செய்து விட்டார் நமது சங்கரபகவத்பாதர்.

அத்வைத ஞான வழியே பரம சத்தியமான தத்துவம் என்பதை உலகம் ஒப்பச் செய்துவிட்டார். பிற மதங்கள் எழுபத்திரண்டையும் இருந்த இடம் தெரியாமல் விரட்டிவிட்டார்.

எதற்காக அவதரித்தாரோ அந்தப் பணி முடிந்தது. இப்போது அவருக்கு வயது முப்பத்திரண்டேதான். முப்பத்திரண்டு கோடி மக்கள் ஒன்று சேர்ந்து முப்பத்திரண்டு யுகத்தில் செய்யமுடியாத சாதனையை அவர் தனியொருவராகவே இருந்து முப்பத்திரண்டு ஆண்டுகளில் சாதித்துவிட்டார்,

ஆனால் "நான் சாதித்தேன்" என்கிற அகங்காரம் அவருக்கு எள்ளளவும் இல்லை. பராசக்தியான காமாட்சியின் அருள் சக்தி எள்ளளவு தம்மீது தெளித்ததாலேயே இவ்வளவும் செய்யமுடிந்தது என்று கருதினார்.

காரியம் முடிந்துவிட்டது; காரியமற்ற பிரம்மத்தில் இரண்டறக்கலந்து அத்வைத

மாகிவிட ஆர்வம் கொண்டார். பிரம்மத்தின் சக்தியான காமாட்சியிடம் சென்றார். **“திரிபுரசுந்தரி வேதபாதஸ்வம்"** என்கிற பாடலால் அவளைத் துதித்தார். துதியானது மடியும் போது அவரது துதிக்கத்தக்க வாழ்வம் முடிந்தது. பராசக்தியோடு இரண்டறக் கலந்துவிட்டார் நம் பரமாசாரியர் சங்கரர்.

இன்றும் காமாட்சி ஆலயத்தில் விக்கிரக வடிவில் வாழ்கிறார் நமது ஆசாரிய சங்கரர். அவருடைய சமாதியானது காஞ்சி காமாட்சியம்மன் கோவிலில் அம்மன் சன்னதிக்குப் பின்புறத்தில் விளங்கிக் கொண்டு இருக்கிறது. அதோடு அவர் பூஜித்த அதே திருபுரசுந்தரி - சந்திர மௌலீச்வரரை இன்றும் பூஜிக்கும் காஞ்சிப் பெரியவர்களாகவும், புதுப்பெரியவர்களாகவும் தம் அருளை வெளியிடுகிறார்.